லெனின்: மனிதரும் அவரது செயலும்

*

ருஷ்யப் புரட்சியின் ஊடே

10 APR 1976
MADRAS

ஆ. ரைஸ் வில்லியம்ஸ்

நேரில் கண்ட ருஷ்யப் புரட்சி

CONNEMARA PUBLIC LIBRARY
MADRAS

முன்னேற்றப் பதிப்பகம் · மாஸ்கோ

மொழிபெயர்ப்பாளர்: பூ. சோமசுந்தரம்

Альберт Рис Вильямс

О ЛЕНИНЕ И ОКТЯБРЬСКОЙ РЕВОЛЮЦИИ

На тамильском языке

10 APR 1976

பொருளடக்கம்

அக்டோபர்ப் புரட்சி பற்றிய சிந்தனைகள் . . 9

லெனின்: மனிதரும் அவரது செயலும்

தோற்றுவாய் 27
லெனினுடன் கழித்த பத்து மாதங்கள் . . 33

உலகிலேயே பெரிய வரவேற்பு அறை 96

ருஷ்யப் புரட்சியின் ஊடே

முன்னுரை 115

முதல் பாகம்

புரட்சியை நிகழ்த்தியவர்கள்

குடியானவர்கள், தொழிலாளர்கள், போர்வீரர்கள் ஆகியோருடன்
அத்தியாயம் ஒன்று. போல்ஷெவிக்குகளும் நகரமும் 122
அத்தியாயம் இரண்டு. பெத்ரோகிராத் ஆர்ப்பாட்டம் செய்கிறது 139
அத்தியாயம் மூன்று. நாட்டுப்புறத்தில் . . . 158
அத்தியாயம் நான்கு. வெற்றி வீரன் . . . 183
அத்தியாயம் ஐந்து. கடல் தோழர்கள் . . . 193

இரண்டாம் பாகம்

புரட்சியும் அதையடுத்த நாட்களும்

வெண்படையினருக்கும் செம்படையினருக்கும் இடையே

அத்தியாயம் ஆறு. "எல்லா அதிகாரமும் சோவியத்துக்களுக்கே" 207

அத்தியாயம் ஏழு. நவம்பர் 7ந் தேதி—வரலாற்றில் புதிய நாள் 216

அத்தியாயம் எட்டு. பனிக்கால அரண்மனை சூறையாடப்படுதல் 225

அத்தியாயம் ஒன்பது. செங்காவற்படையினரும் வெண்படையினரும் காவாலிப் படையினரும் . 240

அத்தியாயம் பத்து. வெண்படையினருக்குக் கருணை காட்டுவதா, மரணதண்டனை விதிப்பதா? 256

அத்தியாயம் பதினொன்று. வர்க்கங்களின் போர் 280

அத்தியாயம் பன்னிரண்டு. புது அமைப்பு நிறுவப்படுதல் 302

மூன்றாம் பாகம்

புரட்சியின் வீச்சு எல்லை

சைபீரியாவின் குறுக்காக ரெயில் பயணம்

அத்தியாயம் பதின்மூன்று. ஸ்தெப்பி வெளிகள் கிளர்ந்து எழுகின்றன 317

அத்தியாயம் பதினான்கு. ச்செர்ம் நகரின் சிவப்பு தண்டனைக் கைதிகள் 333

அத்தியாயம் பதினைந்து. விளாதிவஸ்தோக் சோவியத்தும் அதன் தலைவர்களும் 345

அத்தியாயம் பதினாறு. ஸ்தல சோவியத்தின் வேலை முறை 355

நான்காம் பாகம்

புரட்சியின் வெற்றி

முதலாளித்துவ உலகுக்கு எதிராக சோவியத்துக்கள்

அத்தியாயம் பதினேழு. நேச நாட்டினர் சோவியத்தைத் தாக்கி நொறுக்குகின்றனர் . 370

அத்தியாயம் பதினெட்டு. செஞ்சவ ஊர்வலம் . 386

அத்தியாயம் பத்தொன்பது. வெளியேற்றம் . 398

அத்தியாயம் இருபது. பின் நோக்கு . . . 405

அக்டோபர்ப் புரட்சி பற்றிய சிந்தனைகள்

A PUBLIC LIBRARY
10 APR 1976

''அக்டோபர்ப் புரட்சி இஸ்லாம் மார்க்கத்தின் உதயத்துக்குப் பிறகு நடந்த யாவற்றிலும் முக்கியமான நிகழ்ச்சி ஆகும்'' என்று எழுதினர் எச். ஜி. வெல்ஸ். வரலாற்றில் இந்தப் புரட்சியின் இடத்தைக் காட்டுவதற்கு மேற்கு நாடுகளின் வரலாற்று ஆசிரியர்கள் இவ்வாறு முயன்றிருக்கிருர்கள். வாஷிங்டன் நகரைச் சேர்ந்த ரோமன் கத்தோலிக்கப் பேராசிரியர் வால்ஷ் என்பவரின் கருத்துப்படி அக்டோபர்ப் புரட்சி ரோமானியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் யாவற்றிலும் மகத்தான சம்பவம் ஆகும். பிரபல பிரிட்டிஷ் கட்டுரை ஆசிரியர் ஹாரோல்டு லாஸ்க்கி ''கிறிஸ்துவின் பிறப்புக்குப் பின் யாவற்றிலும் மகத்தானது'' அது என்று அபிப்பிராயப்பட்டார்.

சோவியத் யூனியனின் மொழிகளில் மட்டுமே அல்ல, ஒரு நூறு பிற மொழிகளிலும் இப்புரட்சி பற்றிய நூல்களின் மிகப் பெருத்த எண்ணிக்கை அதன் மாண்புக்குப் பொருத்தமாகவே இருக்கிறது. இத்தகைய நூல்களின் இடையருத வெள்ளம் மேற்கு நாடுகளின் அச்சகங்களிலிருந்து பெருகி வந்த வண்ணமாக இருக்கிறது. தொடக்கங்களில்—குழந்தையின் பிறப்பில்—மக்களுக்கு எப்போதுமே ஆவல் உண்டு.

ஆதலால் பெருந்தொகையான நூல்கள் அக்டோபர்ப் புரட்சியின் ஆரம்ப நாட்கள் பற்றி—உலகை ஆட்டி அசைத்த, பெரு வீரம் கொண்ட, ஆவேசக் கிளர்ச்சியூட்டும் தொடக்க நாட்களையும் வாரங்களையும் பற்றி—விவரிக்கின்றன.

புரட்சி தோன்றுவதற்கான காரணங்கள், புரட்சியின் வெவ்வேறு கட்சிகள், புரட்சியின் செயல் திட்டங்கள், புரட்சியின் பொருளாதாரம், புரட்சியின் தலைவர்கள் முதலிய விஷயங்கள் குறித்த நீண்ட, புலமைமிக்க விளக்கவுரைகள் இந்த நூல்களில் காணக் கிடைக்கும். ஆனால் ஒரு நோக்கில் பார்க்கையில் புரட்சியின் பிரதானக் காரணி இந்த நூல்களில் பெரும்பாலும் இருக்காது என்பது விந்தையான சேதி. அக்டோபர்ப் புரட்சி பற்றிய மிகப் பல விஷயங்களை அவற்றில் காணலாம்—அதாவது புரட்சியைத் தவிர அனேகமாக எல்லா விஷயங்களையும். ஏனென்றால் இந்தப் புத்தகங்களில் மக்களைப் பற்றிய விவரம் மிக அற்பம் அல்லது இருப்பதே இல்லை. உண்மையிலோ மக்கள்தாம்—தொழிலாளர்களும் குடியானவர்களும்தாம்—புரட்சியாக விளங்கினார்கள்.

மக்களைக் குறிப்பிடாமல் விட்டுவிட்டுப் புரட்சியை வருணிக்க முயல்வது (ஆங்கிலேயர்கள் சொல்வதுபோல) ஹாம்லெட்டையேவிட்டுவிட்டுஷேக்ஸ்பியரின் "ஹாம்லெட்" நாடகம் போட முயல்வது போலத்தான்.

1917ல் மக்கள்—அவர்கள் இப்போது செயலற்றவர்களாக இல்லை—அரங்கின் மையத்துக்கு வந்துவிட்டார்கள். பால்டிக்கிலிருந்து பசிபிக் மாகடல் வரை பரந்துள்ள விசாலமான யூரேஷியச் சமவெளியில் வாழ்ந்த மக்கள், ஒரு காலத்தில் தங்களை ஆண்டவர்களையும் அவர்களுடைய சேவகர்களையும் ஒருபுறம் ஒதுக்கித் தள்ளிவிட்டு, நெடுங்காலமாக உள்ளடங்கியிருந்த தங்கள் திறமைகளையும் ஆற்றல்களையும் செயலில் ஈடுபடுத்தினார்கள்.

அவர்களை, வரலாறு தங்கள்மீது சுமத்திய வரலாற்று முக்கியத்துவம் உள்ள மாபெரும் கடமையை நிறைவேற்றுவதற்கு அவர்கள் கொண்டிருந்த போதிய திறமையை

நம்பியே லெனின் ருஷ்யாவினதும் புரட்சியினதும் வருங் காலத்தைப் பணயம் வைத்தார். அவர் மக்களை நேர்முக மாக அறிந்திருந்தார், அவர்கள் மீது விசுவாசம் கொண் டிருந்தார். இதுவே அவரது அபார நம்பிக்கைக்குக் கார ணம்.

1917ம் ஆண்டு வசந்த காலத்தில் நான் ருஷ்யாவுக்கு வந்தேன். மக்களது ஆற்றலின்பால் இந்தப் பெருத்த மரி யாதையும் நம்பிக்கையும் இதற்குப் பின் விரைவிலேயே எனக்கும் ஏற்பட்டுவிட்டன. இது எனது நல்லதிர்ஷ்டமே. சோவியத் யூனியனுக்கு நான் பின்னர் செய்த பயணங் களின்போது இந்த மரியாதையும் நம்பிக்கையும் மேலும் அதிகரித்தன. மக்களுடன் நான் நேரடியான தொடர்பு கொண்டேன். பெத்ரோகிராத், நீஷ்னிய் நோவ்கராத்* ஆகிய நகரத் தொழிற்சாலைத் தொழிலாளர்களுடனும் பாளையங்களில் இருந்த படைவீரர்களுடனும் கலந்து பழ கினேன். விளாதீமிர் என்னும் கிராமத்தில் விவேகமும் உளத் தூய்மையும் வாய்ந்த போல்ஷெவிக்** யானிஷேவ் என்பவ ருடன் நீண்ட காலம் வசித்தேன். இவற்றிலிருந்தே எனக்கு

---

* தற்போது இது கோர்க்கிய் நகரம் என அழைக்கப் படுகிறது. இதுவும் பிறவும் வேறுவகையில் தனிப்படக் குறிக்கப்பட்டாலன்றி, பதிப்பாசிரியரின் குறிப்புக்களே ஆகும்.

** போல்ஷெவிக்குகள் என்ற பெயர் ''போல்ஷின்ஸ்த் வோ'' (பெரும்பான்மை) என்னும் ருஷ்யச் சொல்லிலிருந்து தோன்றியது. 1903ல் ருஷ்யாவின் சோஷல்-டெமாக்ரடிக் தொழிலாளர் கட்சிக் காங்கிரஸில் கட்சியின் மைய உறுப்புக் களுக்கான தேர்தல்களில் லெனினை ஆதரித்த புரட்சிகர மார்க்ஸீயவாதிகளுக்குப் பெரும்பான்மை வாக்குக்கள் கிடைத்தன. சந்தர்ப்பவாதிகள் சிறுபான்மை வாக்குக்களே பெற்றனர்கள், எனவே அதுமுதல் (சிறுபான்மை எனப் பொ ருள்படும் ''மென்ஷின்ஸ்த்வோ'' என்ற சொல்லிலிருந்து) மென்ஷெவிக்குகள் என அழைக்கப்பட்டார்கள். ருஷ்யாவின் சோஷல்-டெமாக்ரடிக் தொழிலாளர் கட்சியின் ஆறுவது (பிராக்) காங்கிரஸில் (1912) சந்தர்ப்பவாதிகள் கட்சியி லிருந்து அகற்றப்பட்டார்கள்.

வாய்த்தது மக்கள் பற்றிய உள்ளார்ந்த அறிவு. மக்களது தாங்குதிறன், உறுதி, திறமைகள், புதிய கருத்துக்களையும் தொழில் திறன்களையும் கிரகித்துக்கொள்வதில் அவர்களுக்கு உள்ள ஆர்வம், புதிது புனையும் ஆற்றல் ஆகியவற்றின்பால் எனக்கு மிகுந்த மதிப்பு உண்டாயிற்று. அவர்களுடைய வருங்கால வெற்றி குறித்த நம்பிக்கை இவற்றால் எனக்கு ஏற்பட்டது.

இவ்வாறு, ருஷ்யா பற்றிய நிபுணர்கள் எனப்படும் பத்திரிகையாளர்கள், கட்டுரையாளர்கள், வரலாற்று ஆசிரியர்கள் ஆகியோரில் பெரும்பாலரைவிட அதிகச் சாதகமான வாய்ப்பு புரட்சியின் தொடக்கத்திலிருந்தே எனக்குக் கிடைத்திருந்தது. அவர்கள் ருஷ்யாவின் வரலாற்றை அறிந்திருக்கலாம், பல கட்சிகள், தலைவர்களின் செயல்திட்டங்களை அறிந்திருக்கலாம், ராஜதந்திரிகளையும், வெளிநாட்டு இரகசியத் தூதர்களையும் அறிந்திருக்கலாம். ஆனால் பெரும்பாலும் அவர்கள் உண்மையிலேயே மக்களை அறிந்திருக்கவில்லை. மறுபடியும் சொல்கிறேன், எதார்த்தத்தில் மக்களே புரட்சியாகத் திகழ்ந்தார்கள்.

இந்தக் காரணத்தினால்தான் நிபுணர்கள் எனப்பட்ட இவர்கள் புரட்சி பற்றிய தங்கள் மதிப்பீடுகளில் தொடர்ச்சியாக, மறுபடியும் மறுபடியும் பிழை செய்தார்கள். புரட்சி தோல்வியும் அழிவும் வீழ்ச்சியும் அடையும் என்று இடைவிடாது முன்மொழிந்து வந்தார்கள்.

அக்டோபர்* மாதம் சோவியத்துக்கள் தங்கள் அரசை நிலைநிறுத்தியதும், "அது ஒரு வாரம், அதிகமாய்ப் போனால்

---

* 1918ம் ஆண்டுக்கு முன்பு ருஷ்யாவில் ஜூலியன் காலண்டர் அமலில் இருந்தது. பெரும்பாலான நாடுகளில் தற்போது வழக்கில் உள்ள கிரிகரியன் காலண்டருக்கும் இதற்கும் 13 நாட்கள் வித்தியாசம் உண்டு. உதாரணமாக 1917, அக்டோபர் 25ல் நிகழ்ந்த மாபெரும் சோஷலிஸப் புரட்சி கிரிகரியன் காலண்டரின்படி நவம்பர் 7ந் தேதி நடந்தது. இவ்வாறே பிறவும்.

ஓரிரு மாதங்கள்தான் நிலைக்கும்'' என்று இந்த நிபுணர்கள் அறிவித்தார்கள். ஆனால் சோவியத் மக்களை அறிந்திருந்த நான் சோவியத்துக்கள் திரளான பொதுமக்களைத் தங்கள் அரசாங்கத்துக்கு ஆதரவாகத் திரட்டும் என்று நம்பிக்கையுடன் தெரிவித்தேன். ஆட்சி அதிகாரத்தை அவை வென்று பெற்றுவிட்டபடியால், அவை அதிகாரத்தில் நிலைத்திருக்கும்—என்றென்றும் சாசுவதமாக இருக்கும் என நான் கூறினேன்.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கப்பட்டதும், அது ''புள்ளி இயல் அறிஞனின் கனவு'' என்றும் ''பிரமாண்டமான எண்கள் நிறைந்த திட்ட வரைவு'' என்றும் அயல் நாடுகளில் பரிகசிக்கப்பட்டது. ஆனால் சோவியத் மக்கள் பற்றிய எதார்த்த அறிவு பெற்றிருந்தவர்கள், இந்தத் திட்டங்கள் எவ்வளவுதான் பிரமாண்டமானவை ஆயினும், சோவியத் மக்கள் இந்தச் சவாலை ஏற்று இந்தக் கனவை நனவு ஆக்கிவிடுவார்கள் என்று உறுதியாக உரைத்தார்கள்.

மேற்கு நாடுகளில் தங்கள் வெற்றியால் உவகை மீதூர, தங்கள் ஆற்றலின் சிகரத்தில் இருந்த 200 நாஜி டிவிஷன்கள் 1941 ஜூன் மாதத்தின் அந்த விதியை நிர்ணயிக்கும் நாளில் சோவியத் எல்லையைக் கடந்தபோது, வெண்ணெயைக் கத்தி ஊடறுப்பது போலச் செஞ்சேனையை நாஜிகள் ஊடறுத்து விடுவார்கள் என்றும், மூன்று அல்லது நான்கு வாரங்களில் ஸ்வஸ்திகக் கொடி கிரெம்ளின் கோபுரங்கள் மீது பறக்கும் என்றும் அந்த 'நிபுணர்கள்' துணிவுடன் பிரகடனம் செய்தார்கள். ஆனால் சோவியத் மக்களை அறிந்திருந்த எங்களுக்கு இது தவறு என்பது தெரிந்திருந்தது. ஜூன் மாதம் 24ந் தேதி ''தாஸ்'' செய்தி ஸ்தாபனத்தின் வேண்டுகோளுக்கு இணங்க நான் ஒரு நீண்ட தந்திச் செய்தி அனுப்பினேன். சோவியத் மக்களின் விறல் வெற்றி பெற்றுத் தீரும் என்றும், சம்மட்டியும் அரிவாளும் பொறித்த செங்கொடி உரிய காலத்தில் பெர்லின் நகரில் ரைஹ்ஸ்டாக் கட்டிடத்தின் மீது வீசிப் பறக்கும்

என்றும் எனது நம்பிக்கையை இந்தச் செய்தியில் நான் வெளியிட்டிருந்தேன்.

ஒவ்வொரு நெருக்கடியிலும் சோவியத் மக்கள் அற்புதமாக நடந்துகொண்டிருக்கிருர்கள். தங்களிடம் கோரப்பட்ட கடமைகளை முழுமையாக நிறைவேற்றியிருக்கிருர்கள்.

எல்லோருமே புரட்சியின் பக்தர்களாக, அதன் பொருட்டு உயிர் துறக்கச் சித்தமாக இருந்தார்கள் என்று நான் சொல்ல மாட்டேன். கழப்புணிகளும் அதிருப்தி கொண்டவர்களும் பதவி வேட்டையாடுபவர்களும் துரோகிகளுங்கூட சோவியத் மக்களில் குறித்த விகிதத்தில் இருக்கத் தான் செய்தார்கள். ஆயினும் மிகப் பெரும்பான்மையானவர்கள் — நிச்சயமாக, வலிமையுள்ள, ஜீவாதாரமான, போர்த்தன்மை கொண்ட பகுதியினரில் அனேகமாக எல்லோருமே—புரட்சியின் வீரமும் விசுவாசமும் உள்ள படைப்பாளிகளாகவும் காவலர்களாகவும் திகழ்ந்தார்கள்.

இல்வாழ்வுக்கு உரிய எல்லாப் பண்புகளும் அவர்களிடம் இல்லாதிருக்கலாம். எனினும் புரட்சியை நிகழ்த்துவதற்குத் தேவையான எல்லா இயல்புகளும் அவர்களிடம் இருந்தன. உறுதி, பிடிவாதம், தாங்குதிறன், ஒரு குறிக்கோள்பால் ஆழ்ந்த ஈடுபாடும் அதற்காகத் தியாகம் செய்யச் சித்தமாக இருத்தலும், புதிய கருத்துக்களையும் தொழில் திறன்களையும் கிரகித்துக்கொள்ள ஆயத்தமாயிருத்தல்— இவையே அந்த இயல்புகள். இவற்றுடன் நாம் இன்னொரு பண்பையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். வழக்கமாக அது புரட்சிகரமானது என்றோ விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு உரியது என்றோ கருதப்படுவதில்லை. அதுதான் பொறுமை.

ஆனல் துர்ப்பாக்கியவசமாக, புரட்சியின் உணர்விஞல், நாடகத்தன்மை வாய்ந்த, புயல் வேகங்கொண்ட, ஆவேசக் கிளர்ச்சியூட்டும் நிகழ்ச்சிகளிஞல் நாம் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டு, அதன் அமைதியான, நாடகத்தன்மை அற்ற, சலிப்பூட்டும் அம்சங்களை மறந்துவிடுகிறோம். ஸ்மோல்

ணியில்* நடந்த மாபெரும் நாடகத்தன்மை வாய்ந்த நிகழ்ச்சிகளும் காட்சிகளும், பனிக்கால அரண்மனை தாக்கிக் கைப்பற்றப்பட்டதும் பிற காட்சிகளை நம் கவனத்தில் படாதவாறு மறைத்து விடுகின்றன; வெளியே இருண்ட, நீண்ட, உற்சாகமற்ற, அலுப்பும் சோர்வும் ஊட்டும் பல மணி நேரப் பாராவின் பொழுது, வறிய உடைகள் அணிந்த தொழிலாளர்கள் பெத்ரோகிராத் நகர வீதிகளை இரவுக்குப் பின் இரவாகக் காவல் காத்தது; ஜூலை நிகழ்ச்சிகளுக்குப்**

---

* ஸ்மோல்னிய் என்பது லெனின்கிராதில் (முன்னர் பீட்டர்ஸ்பர்க் என்றும் பெத்ரோகிராத் என்றும் அழைக்கப் பட்ட நகரில்) உள்ள கட்டிடம். 1917ம் ஆண்டுவரை பிரபு வம்ச மகளிர் கல்லூரி ஒன்று இதில் இருந்தது. 1917, ஆகஸ்டில் பெத்ரோகிராத் சோவியத்தும் தொழிலாளர்கள், படைவீரர்கள் பிரதிநிதிகளின் சோவியத்தினது அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியும் இதிலே இடம் பிடித்துக் கொண்டன. அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் போல்ஷெவிக் குழுவும் இதிலேயே இருந்தது. பெத்ரோகிராத் சோவியத்தின் இராணுவ-புரட்சிக் கமிட்டியின் தலைமைக் காரியாலயமாகவும் திகழ்ந்தது ஸ்மோல்னிய். லெனினின் கட்டளைகளின் படி பெத்ரோகிராதில் அக்டோபர் ஆயுதப் புரட்சியை இந்தக் கமிட்டியே இயக்கி நடத்தியது.

**ஜூலை நிகழ்ச்சிகள் என்பது, 1917, ஜூலை 3-4 தேதிகளில் பெத்ரோகிராதில் நடந்த நிகழ்ச்சிகள். ருஷ்யாவில் நிலவிய ஆழ்ந்த அரசியல் நெருக்கடியை இவை வெளிக்காட்டின. சோவியத்துக்கள் நாட்டில் முழு ஆட்சி அதிகாரத்தையும் ஏற்க வேண்டும் என்றும் நியாயமான சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளப்பட வேண்டும் என்றும் கோரிய உழைப்பாளி மக்களின் பிரம்மாண்டமான, அமைதி நிறைந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின்மீது அந்த நாட்களில் தாற்காலிக அரசாங்கத்தின் உத்தரவுப்படி துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. நாட்டில் பிற்போக்கு தலைவிரித்து ஆடியது. புரட்சி எதிர்ப்புத் தாற்காலிக அரசாங்கம் ஆட்சி அதிகாரம் முழுவதையும் கைப்பற்றிக் கொண்டது. குட்டி பூர்ஷ்வாக் கட்சிகளான சோஷலிஸ்ட்-புரட்சிவாதிக் கட்சியும் மென்ஷெவிக் கட்சியும் தாற்காலிக

பின் லெனின் ஒரு வைக்கோல் குடிசையில் ஒளிந்திருந்தது அல்லது ருஷ்யாவுக்கு வெளியே பின்லாந்தில் காத்திருந்தது; போல்ஷெவிக் தலைவர்கள் சிறையில் இருந்தது முதலியன இவை.

அக்டோபர் நாட்களுக்குப் பிறகு, எரிபொருள், ரொட்டி ரேஷன்கள் வரவரக் குறைவதையும் புரட்சியால் ஏற்படும் என வாக்களிக்கப்பட்ட நல்வாழ்வு மாதத்துக்கு மாதம் தள்ளிப்போடப்படுவதையும் மக்கள் பார்த்துக்கொண்டிருந்தார்கள். குளிர், பசி, இரத்தம், வியர்வை, கண்ணீர், இவற்றைப் பொறுத்துக்கொண்டிருக்கும் கடிய சோதனைகளே 1917ல் புரட்சிக்காரர்களுக்கு லபித்தன. எனினும் இந்த அல்லல்கள் எல்லாம் பட்ட போதிலும் அவர்களுக்கு நாம் இரங்க வேண்டியதில்லை. அவர்கள் நிச்சயமாகத் தங்கள் நிலைக்கு வருந்தவில்லை. புரட்சியில் ஆழ்ந்த திருப்தியும் பெருமையும் களிப்பும் அனுபவித்தவர்கள் வொலதார்ஸ்கிய்* போன்று எத்தனையோ பெயர். "புரட்சியை நேரில் கண்டு அனுபவித்தவன்தான் அதன் மாட்சியை அறிவான்" என்றார் க்ருப்ஸ்க்காயா.**

அரசாங்கத்தின் கொள்கையை ஏற்றுக் கொள்வதற்கு அடிமைத்தனமாக இசைந்ததன் மூலம் புரட்சியின் அமைதி நிறைந்த வளர்ச்சியை இயலாதது ஆக்கிவிட்டன.

தாற்காலிக அரசாங்கத்தை ஆட்சியிலிருந்து அகற்றி, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவதன் பொருட்டு, அதாவது அரசு அதிகாரத்தை மேற்கொள்வதன் பொருட்டு, ஆயுதந்தாங்கிய எழுச்சிக்கு ஆயத்தங்கள் செய்ய போல்ஷெவிக் கட்சி தொடங்கியது.

*வொலதார்ஸ்க்கிய் (1891-1918)—1917ம் ஆண்டிலிருந்து கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர். அக்டோபர்ப் புரட்சியில் ஊக்கத்துடன் பங்கெடுத்துக் கொண்டவர். மக்களால் விரும்பப்பட்ட கிளர்ச்சிக்காரர். புரட்சிக்குப் பிறகு பெத்ரோகிராதில் அச்சுவெளியீடுகள், பிரசாரம், கிளர்ச்சி ஆகியவற்றிற்கு உரிய கமிஸாராக இருந்தார். 1918, ஜுன் மாதம் புரட்சி எதிரி ஒருவனால் கொல்லப்பட்டார்.

**க்ருப்ஸ்க்காயா, ந. கா. (1869-1939)—லெனினுடைய மனைவி, தோழர். கம்யூனிஸ்ட் கட்சியின் பிரபல உறுப்பினர், சோவியத் அரசாங்க அலுவலர்.

ருஷ்ய மக்களைப் பற்றி மேற்கண்டவாறு எழுதுகையில் நான் எப்போதும் லெனினைப் பற்றியே எழுதி வந்திருக்கிறேன். மனத்திலும் சுபாவத்திலும் அவர்கள் இருவரும் அனேகமாக ஒரே மாதிரியானவர்கள்; ஏனென்றால் லெனின் ருஷ்யர்களுக்கு உரிய அசாதாரண மனிதப் பண்புகளும் தன்மைகளுமே உருவாக விளங்கினார். ஒடுக்கப்பட்டோர்பால் அனுதாபம், ஒடுக்குவோர்பால் வெறுப்பும் சினமும், ஆர்வம் நிறைந்த உண்மைத் தேட்டம் ஆகிய இந்தப் பண்புகள் லெனினிடம் ஆக உயர்ந்த அளவுக்கு, அதிகத்திலும் அதிகமான மடங்கு வளர்ச்சி அடைந்திருந்தன, அவரை மேதைகளின் வரிசைக்கு உயர்த்தின. லெனினுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட, அவரது ஆளுமையின் பாதிப்பை உணர்ந்த அனேகமாக எல்லா வெளிநாட்டினராலும் ''மேதை'' என்ற இந்தச் சொல் அவரைக் குறித்து உபயோகிக்கப்படுகிறது.

இந்த விஷயத்தில் அமெரிக்கர்களில் முதன்மை வாய்ந்தவர் ரேய்மண்ட் ராபின்ஸ். இவர் படிப்பாளி, அலாஸ்க்காவில் தங்கம் வெட்டி எடுத்ததனால் செல்வர் ஆனவர்.

லெனினுடன் நிகழ்த்திய நீண்ட உரையாடல்கள், அவருடன் கொண்ட செயல் தொடர்புகள் ஆகியவற்றின் விளைவாக ராபின்ஸ் அவர் மீது பெரு மதிப்பு கொண்டார். அமெரிக்கா திரும்பியதும் அவர் பிளாரிடாவில் உள்ள தமது பெரிய எஸ்டேட்டில் ஓர் ஓக் கன்றை நட்டு அதற்கு ''லெனின் மரம்'' எனப் பெயரிட்டார். இந்த மரம் ஆண்டுக்கு ஆண்டு வளர வளர லெனின்பால் ராபின்ஸின் மரியாதையும் பாராட்டும் இடைவிடாது வளர்ந்தன. ராபின்ஸ் மத நம்பிக்கை கொண்டவர். ஞாயிறு தோறும் அவர் தமது எஸ்டேட்டில் நண்பர்களுக்காகவும் தொழிலாளர்களுக்காகவும்—வெள்ளையர், கறுப்பர், இரு சாராருக்காகவும்—வழிபாடு நடத்துவார். அவரது வழிபாடு எப்படித் தொடங்கினாலும் சரியே, அனேகமாக எப்போதுமே அது லெனினுடைய விவேகத்துக்கும் மேதைக்கும் நாவன்மைமிக்க புகழ்மாலையுடனேயே முடியும். இந்த உபதேச உரைகள் அல்லது

போதனை உரைகள் ஒலிப்பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்பது மகிழ்ச்சிக்கு உரிய விஷயம்.

எனது புத்தகங்களின் முதல் பக்கங்கள் விளாதிவஸ் தோக்கில் ''தங்கக் கொம்பு'' விரிகுடாவில் உள்ள ஒரு தீவில் எழுதப்பட்டன. சொந்த நாடான அமெரிக்கா திரும் பும் வழியில் ஜப்பான் வழியாகச் செல்வதற்கு எனக்கு அனுமதிப் பத்திரம் வழங்க ஜப்பானியர் மறுத்துவிட்டபடி யால் நான் இந்தத் தீவில் தனியாகத் தங்க நேர்ந்தது. பின்பு திடீரெனத் தலையீட்டாளர்கள் விளாதிவஸ்தோக்கைக் கைப் பற்றிக் கொண்டார்கள். புரட்சி எதிரிகள் என் அறைக்குள் பாய்ந்து வந்தார்கள். என்னுடைய கைப்பிரதிகள் தொலைந்து போயின. ஆயினும், இரவில் எனக்குப் புகலிடம் அளித்த நண்பர்களின் உதவியால் இந்தச் சச்சரவில் நான் உயிர் இழக்காது தப்பினேன்.

விளாதிவஸ்தோக்கிலிருந்து நான் புறப்படுவதை அமெ ரிக்கக் கான்ஸல் விரைவுபடுத்தினார்.

ஓர் ஆண்டுக்குப் பிறகு (சொந்த நாடான அமெரிக்கா வில்) இந்தப் புத்தகங்களை ஜான் ரீடின்* சிறு பங்களாவில் மறுபடி எழுதத் தொடங்கினேன். ஹட்ஸன் ஆற்றுக்குமேலே மரங்கள் அடர்ந்த மலைகளில் இருந்தது இந்த பங்களா. அப்போது நான் கடுமையான கீல் வாயுவினால் துன்புற்றேன். ஜான் ரீட் மருத்துவர் என்ற பாவனையில் சூடான இஸ்திரிப் பெட்டியால் எனது நோயுற்ற முதுகிலும் காலிலும் ஒத்தடம் கொடுப்பார். தமக்கு எப்போதும் இயல்பான கூர்ந்த நகைச்சுவையுடன் அவர், ''லெனின் மட்டும் இப்போது நம்மைப் பார்த்தாரானால்!'' என்பார்.

---

* ஜான் ரீட் (1887-1920)—அமெரிக்கக் கட்டுரையா ளர். 1917ம் ஆண்டு போர் நிருபர் என்ற முறையில் அவர் ருஷ்யாவுக்கு வந்தார். அக்டோபர்ப் புரட்சியை அவர் வரவேற்றார். பிற்பாடு அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சியை நிறுவியவர்களில் ஒருவர் ஆனார்.

அமெரிக்காவின் முக்கிய நகரங்களில் புரட்சி பற்றி உரைகள் நிகழ்த்துவதும் விவாதங்களில் கலந்து கொள்வதும் இடையிடையே எழுதுவதுமாக எனது நூல்களைப் பூர்த்தி செய்தேன். அவை பல மொழிகளில் பெயர்க்கப்பட்டன. ஏதோ விந்தையான காரணத்தினால் அவற்றின் மிக அதிகப் பிரதிகள் ஜப்பானில் விற்பனை ஆயின என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லி விடுகிறேன். புரட்சி என் நினைவில் பசுமையாகவும் துலக்கமாகவும் இருந்த காலத்தில் எழுதப் பட்ட இந்த நூல்கள் வெளிப்படையான சில தவறுகள் திருத்தப்பட்டு அப்படியே மீண்டும் இங்கே பதிப்பிக்கப்படு கின்றன.

1922ல் ருஷ்யா திரும்பியபோது இந்தப் புத்தகங்களை உடன் எடுத்துவந்தேன். விளாதீமிர் இல்யீச் லெனின் அப் போது கோர்க்கி என்னும் இடத்தில் இளைப்பாறிக் கொண்டிருந்தார். புத்தகப் பிரதிகளை அவரிடம் கொண்டு கொடுப்பது எளிதாக இருந்திருக்கும். ஆனால் விசித்திர மான கூச்சமும் அவர் நோயுற்றிருக்கையில் அவரைத் தொந் தரவு செய்வதற்குத் தயக்கமும் என்னைத் தடுத்தன. எனி னும் நான் அவற்றை எனக்கு அறிமுகமான க்ரூப்ஸ்க்காயா விடம் கொடுத்திருக்கலாம். அவர் அவற்றை லெனினுக்கு உரக்கப் படித்துக் காட்டி, ''ருஷ்யப் புரட்சியில் மக்களின் பங்கு'' பற்றிய வர்ணனைக்கு லெனினது ஆமோதிப்பு பெற்றிருப்பார். எனவே எனது புத்தகங்களை லெனின் கைகளில் சேர்ப்பிக்காதது குறித்து அடிக்கடி வருந்து கிறேன்.

1959, ஜூலை மாதம் நான் கோர்க்கி சென்றிருந்தேன். திறமைசாலியான எங்கள் வழிகாட்டி வி. பூரொவா, லெனின் வாழ்ந்த கிராம வீட்டின் அறைகளை எங்களுக்குக் காட்டிக்கொண்டிருந்தார். மாடியில் லெனினது அலுவல் மேஜைக்கு வந்தோம்: காகித அட்டைகள் போட்ட ஏராள மான பிரசுரங்களும் நூல்களும் கண்ணாடிப் பெட்டியில் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ''லெனின்: மனிதரும் அவரது செயலும்'' என்னும் எனது ஆங்கில நூலின் காலிக்கோ பைண்டிங் செய்த பிரதி ஒன்று அவற்றுக்கு இடையே இருந்ததைக் கண்டேன். எனக்குப்

பெரு வியப்பும் மிக்க மனநிறைவும் உண்டாயின— விளாதிமிர் இல்யீச் தமது அகால மரணத்துக்கு முன் எனது நூலை ஒரு தரமாவது புரட்டிப் பார்த்திருப்பாரே, அதனுல்.

சுற்றுத் தோட்டத்தின் வழியே செல்கையில் நாங்கள் லெனினுக்கு மிக உவப்பான ஓர் இடத்துக்கு வந்து சேர்ந்தோம். அது வெள்ளைத் தூண்கள் கொண்ட லதாமண்டபம். அங்கிருந்து மரங்கள் அடர்ந்த பள்ளத்தாக்கிற்கு அப்பால் கோர்க்கி கிராமம் தென்பட்டது. லதாமண்டபத்தில் லெனினது பெஞ்சியில் உட்கார்ந்ததும் நவம்பர் 8ந் தேதி இரவில் ஸ்மோல்னியில் லெனினுடைய வாயிலிருந்து வெளிப்பட்ட வாக்கியம்—இந்த நூற்றுண்டின் மிக முக்கியமான, புது யுகத்தைத் தோற்றுவிக்கும் வாக்கியம்—என் மனதில் பளிச்சிட்டது. ஸ்மோல்னியில் உரையாளர் மேடைமீது லெனின் ஏறியதும் இடியதிர்ச்சி போன்ற கைதட்டல் முழங்கியது. ஒரு கைவீச்சால் அவர் அதை அடக்கிவிட்டு, ''தோழர்களே! இப்போது நாம் சோஷலிஸக் கட்டுமானத்தை மேற்கொள்வோம்!'' என்முர்.

இந்தச் சொற்கள் எளிய, விவகாரரீதியான முறையில் கூறப்பட்டன. எனவே இறுக்கம் நிறைந்த அந்தக் கூட்டத்தில் அந்தச் சொற்களின் முழு அர்த்தத்தை உடனே கிரகித்துக் கொண்டவர்கள் சிலரே. ஆனுல் நிர்ணயகரமானவற்றையும் நாடகப்பாங்குள்ளவற்றையும் எப்போதும் விழிப்புடன் கவனிப்பவரான ஜான் ரீட் என் அருகே உட்கார்ந்து, இந்தச் சொற்களைத் தம் நோட் புத்தகத்தில் அவசர அவசரமாகக் குறித்துக்கொண்டு அவற்றின் அடியில் அழுத்தமாகக் கோடுகள் இட்டார். உலகை ஆட்டி அசைக்க (இன்றுவரை தொடர்ந்து ஆட்டி அசைக்க என்று நாம் சேர்த்துக் கொள்ளலாம்) போதுமான வெடிமருந்து அந்த வாக்கியத்தில் இருந்ததை அவர் சரியாக உய்த்துணர்ந்து கொண்டார்.

எத்தனையோ தலைமுறைகளாக மக்கள் எதன் பொருட்டு உழைத்து, போராடி, உயிர் வழங்கிவந்தார்களோ அந்த

சோஷலிஸம் இப்போது உலகின் ஆறில் ஒரு பகுதி மக்களது குறிக்கோள் ஆகிவிட்டது என்று அந்த வாக்கியம் அறிவித்தது.

எந்தக் காலத்திலும் எந்த நாட்டிலும் இது பிரமாண்டமான பொறுப்பு. பின்தங்கிய, சீரழிவுக்குள்ளான ருஷ்யாவிலோ அது முரட்டுத் துணிச்சலின் சிகரமாக விளங்கியது. எங்கும் பட்டினியும் குளிரும். டைபஸ் காய்ச்சலும் மறைமுக அழிவு வேலையும். இராணுவம் சிதறிக்கொண்டிருந்தது. ஜெர்மானியர் முன்னேறிக் கொண்டிருந்தார்கள். போக்குவரத்து ஸ்தம்பித்துப் போயிருந்தது. தொழிற்சாலைகள் செயலின்றி நின்றிருந்தன. இவை எல்லாவற்றுக்கும் மேல், புதிதாக நிறுவப்பட்ட அரசாங்கத்துக்கு எதிர்ப்பட்டிருந்த ஒரு நூறு வேறு பிரச்சினைகளுக்கும் மேல், இன்னும் அதிக நிர்ணயகரமான, மிகக் கடினமான பிரச்சினையும் இருந்தது. முற்றிலும் புதிய அடித்தளத்தில் ஒரு புதிய சமூகத்தை நிறுவுவதே அந்தப் பிரச்சினை.

அமைதியும் எல்லோருக்கும் நியாயமும் செழிப்பும் நிறைந்த மாண்புசால் சமூகத்தைப் படைப்பதற்கு லெனினும் சோவியத்துக்களும் இந்தக் குழப்பத்துக்கு இடையே இவ்வளவு முழுமையாக, வெளிப்படையாகப் பொறுப்பு ஏற்றுக்கொண்டது எவ்வளவு வியக்கத்தக்கது!

இத்தனை வருஷங்களாக சோவியத்துக்கள் அந்தப் பொறுப்பை இவ்வளவு உறுதியாகப் பற்றிக்கொண்டிருப்பது இவ்வளவே வியக்கத்தக்கது. பெரும்பாலான புரட்சிகளும் மாபெரும் இயக்கங்களும் நாளடைவில் களைத்துப்போய் தங்கள் விசையை இழந்துவிடுகின்றன. அவற்றின் குறிக்கோள் சொற்கள் அவற்றின் பதாகைகளில் மங்கிவிடுகின்றன. புதிய தலைமுறையின் மனங்களிலும் இதயங்களிலும் அவை அவ்வாறே மங்கிவிடுகின்றன.

ஆனால் அக்டோபர்ப் புரட்சியோ, எத்தனையோ கடும் சோதனைகளும் தியாகங்களும் நேரினும், சமரசம் செய்து கொள்வதற்கான மயக்கம் ஊட்டும் ஆசைகள் எத்தனையோ எதிர்ப்படினும், எத்தனையோ கழப்புணிகளும் மறைமுக

நாசவேலைக்காரர்களும் துரோகிகளும் இருப்பினும், தான் அறிவித்த குறிக்கோளை—கம்யூனிஸக் கட்டுமானத்தை—நோக்கிய முற்போக்கு இயக்கத்தில் ஒருபோதும் தளரவே இல்லை.

எவ்வளவோ செல்வச் செழிப்பும் வசதிகளும் இருந்த போதிலும் இன்றைய சோவியத் யூனியன் முதலாவது அக்டோபர் மாதத்திய அந்த வீரம் நிறைந்த, கிளர்ச்சியூட்டும் நாட்களிலிருந்து பெரிதும் வேறுபடவில்லை. இன்னமும் அது அக்டோபரேதான். புதிய சாதனங்களையும் கருவிகளையும் போர்த்தந்திரத்தையும் கொண்டு, ஆனால் 1917ல் இருந்த அநேகமாக அதே உற்சாகத்துடனும் உணர்ச்சியுடனும் அது செயலாற்றி வருகிறது. புரட்சியின் தொடக்க நாட்களில் முதலமைச்சர் லெனின் செய்ததுபோன்றே இன்று சோவியத் மக்கள் உலகின் எல்லா மக்களுக்கும் சமாதானத்தைத் தங்கள் செயல் திட்டத்தின் முதல் விஷயம் ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்போது வெண்படைத் தளகர்த்தர்களான தெனீக்கினுக்கும் கோல்ச்சாக்குக்கும் எதிரான போர்முனைகளிலிருந்து வந்துகொண்டிருந்தவையே போன்ற மெய்சிலிர்க்கச் செய்யும் வெற்றிச் செய்திகள் எஃகு, மின்னுற்றல், கால்நடை வளர்ப்பு, கல்வி முதலிய பல்வேறு முனைகளிலிருந்து இப்போது வந்துகொண்டிருக்கின்றன. விரிந்து பரந்த நாட்டின் எல்லா வளங்களும், அந்த முதல் அக்டோபர் மாதத்தில் அது பொறுப்பேற்றுக்கொண்ட அதே குறிக்கோளை அடைவதற்காக விறல்மிக்க கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் ஒன்றுதிரட்டப்பட்டு ஈடுபடுத்தப் பட்டு வருகின்றன. சமாதானமும் நியாயமும் செழிப்பும் கொண்ட நல்ல சமூகத்தைப் படைத்தல்—கம்யூனிஸத்தைக் கட்டி அமைத்தல்—என்பதே அந்தக் குறிக்கோள்.

ஆனால் அந்தக் காலத்துக்கும் இந்தக் காலத்துக்கும் ஒரு வித்தியாசம் உள்ளது. அது மிகப் பெரிய வித்தியாசமுங்கூட.

அப்போது வரப்போகிற கம்யூனிஸச் சமூகம் பற்றிய திட்டவரைவுகூட இருக்கவில்லை. அது வெறும் நம்பிக்கை

யும் விழைவுமாக, தொலைவிலுள்ள வருங்காலத்தில் இருக்கும் ஒன்றாக மட்டுமே இருந்தது.

இன்றோ அது மிக நடைபெறக்கூடிய, திண்ணமான எதார்த்தம். அதன் அஸ்திவாரம் சோஷலிஸ அமைப்பில் ஏற்கனவே வலிவாகவும் ஆழமாகவும் போடப்பட்டுவிட்டது. அதன் வரையுரு தெளிவாகக் கண்ணுக்குப் புலப்படுகின்றது.

1959 **ஆல்பர்ட் ரைஸ் வில்லியம்ஸ்**



வி. இ. லெனின், 1917

லெனின்:
மனிதரும்
அவரது
செயலும்

தோற்றுவாய்

PUBLIC L
10 APR 1976

1. லெனினைப் பற்றிய வரைமுறையற்ற கட்டுக்கதைகள்

இரண்டு ஆண்டுகளாக ருஷ்யாவின் முதலமைச்சராக இருந்து வரும் மனிதரைப் பற்றி உலகம் வெகு சொற்பமே அறிந்திருக்கிறது. லெனினுக்கு இயல்பான கலகலப்பின்மையும் தனிமையுமே இதன் காரணம் என்கிறது லண்டன் டைம்ஸ் செய்தித்தாள். ''சாதாரண ஆங்கிலேயனின் கண்களுக்கு லெனின் செஞ்சட்டையும் நீள்ஜோடுகளும் அணிந்த கடற்கொள்ளைக்கூட்டத் தலைவராகத் தோற்றம் அளிக்கிறார் என்றால், தவறு முதன்மையாக அவரே புரிந்தது தான்'' என்று எழுதுகிறது இந்தச் செய்தித்தாள்.

சரியல்ல. லெனின் இதற்கு முழுப் பொறுப்பாளி அல்ல. முற்றுகையும் பிரிட்டிஷ் தணிக்கையும் இந்தப் பொறுப்பில் பெரும் பங்கு கொண்டிருக்கின்றன. உலகின் பிற பகுதிகளிலிருந்து ருஷ்யாவை அவை அறவே துணித்து விட்டன. ''அசோஷியேட்டட் பிரெஸ்'' செய்தி ஸ்தாபனம் கூட அந்தத் தணிக்கையை ஊடுருவ முடியவில்லை. இந்தச் செய்தி ஸ்தாபனம் புரட்சியின் பக்கம் சாய்வு உள்ளது என்று ஒருபோதும் குற்றம் சாட்டப்பட்டதில்லை. எனினும் அதன் அடக்கமான தந்திச் செய்திகளில் பெரும் பகுதி அமெரிக்க மக்களுக்கு அபாயகரமானது என்று பிரிட்டிஷாரால் கருதப்பட்டது. சோவியத் அரசாங்கத்தையோ அதன் முதலமைச்சரையோ சாதகமான ஒளியில் காட்டிய எந்த

உண்மை விவரங்களையும் பிரிட்டிஷார் அபாயகரமானவை யாகக் கருதினார்கள்.

விளைவாக, லெனினைப் பற்றிய உண்மை விவரங்களுக் குப் பதிலாக, பாரிஸிலும் லண்டனிலும் ஸ்டாக்ஹோமிலும் கோப்பன்ஹேகனிலும் இருந்த ''விசேஷ நிருபர்களால்'' கற்பனைகளும் கட்டுக்கதைகளும் பொதுமக்களுக்கு வழங்கப் பட்டன.

சைபீரியாவில் ஒரு கவச ரெயில் வண்டியிலிருந்து தாவிக் குதித்ததன்மூலம் லெனின்பகைவர்களது பிடியிலிருந்து மயிரிழை தப்பினார் என்று காலையில் ஒரு தந்திச் செய்தி கூறும். பயங்கர மனிதன் த்ரோத்ஸ்கிய் லெனினை மாஸ்கோச் சிறையில் தள்ளிச் சங்கிலியால் பிணைத்து விட்டதாக வும், அவர் சிறையின் அழிக்கம்பிகள் வழியே வெளியே நோக்கிக்கொண்டிருப்பதாகவும் அன்றே பிற்பகல் செய்தி ஒன்று உரைக்கும். திடுக்கிடச் செய்யும் இந்தச் செய்திக்குத் தான் தாழ்ந்துபோய்விடக் கூடாது என்பதற்காக மூன்று வது நிருபரின் தந்தி லெனின் தோல் பையைக் கக்கத்தில் இடுக்கியவாறு ஒரு ஸ்பானியக் கப்பலின் இறங்கு பலகை மீது மிடுக்காக நடந்து பார்ஸிலோனா துறைமுகத்தில் இறங் கியதாக வருணிக்கும். தனித்தனியே இந்த நிருபர்கள் பெருத்த புனைவு ஆற்றலைக் காட்டினார்கள். ஆனால், ஒன்றி ணைந்துவேலை செய்யாமையால் அவர்கள் மொத்தத்தில் தோல் வியே அடைந்தார்கள். அவர்கள் மட்டுமீறிய கற்பனைக்கு இடங்கொடுத்துவிட்டார்கள். ஒரு சில மணி நேரத்திற்குள் சைபீரியாவிலிருந்து மாஸ்கோவுக்கும் அங்கிருந்து ஸ்பெயி னுக்கும் பாய்ச்சல் மனித ஆற்றலுக்கு மிஞ்சிய செய்கை. லெனினது இகழ்ச்சியாளர்கள் அவருக்குச் சர்வவியாபக சக்தியை அளித்து விட்டார்கள்.

இதற்கு முன்பு அவர்கள் கடவுளின் இன்னொரு பண்பை — சர்வவல்லமையை — லெனினுக்கு அளித்திருந்தார்கள். ஏனெனில், லெனின் தமது கூட்டாளிகளின் வாயிலாக சோவியத்துக்களை ஒழுங்கமைத்ததாகவும் அவற்றைக் கொண்டு அவர் 1,50,00,000 படைவீரர்களின் மனங்களை நச்சுப்படுத்திச் சேனையைச் சிதறச் செய்துவிட்டதாகவும்

இந்த நிருபர்கள் சொன்னார்கள். பிறகு லெனினுடைய சிறு குழு தாற்காலிக அரசாங்கத்தைக்* கவிழ்த்துவிட்டு 18 கோடி மக்கள் கொண்ட நாட்டைத் தன் விருப்பப்படி இழுத்து பிரேஸ்த்-லித்தோவ்ஸ்க் உடன்படிக்கை வரை இட்டுச் சென்று அதில் கையெழுத்திடும்படிச் செய்ததாம். இத்தகைய திறமை மனிதனுக்கு உரியதல்ல, அதிமானுடமானது.

பகைவர்களின் கூற்றுப்படி லெனின் சர்வக்ஞருங்கூட. ''பிரின்கிப்போ''** செல்வதற்கு எதிராக வாதாடிய ஒரு பிரிவினரின் பரிதாபகரமான முறையீட்டில் இதைப் பற்றிய தெளிவான குறிப்பு இருக்கிறது: ''எங்களால் லெனினைச் சந்திக்க முடியாது. இந்த போல்ஷெவிக்குகள் கெட்டிக்காரப் போக்கிரிகள். அரசியலிலும் பொருளாதாரத்திலும் அவர்கள் எல்லாவற்றையும் அறிவார்கள். அவர்கள் எங்களைப் பேச்சிலே வென்றுவிடுவார்கள்.'' முடிவாக லெனின் இறவாமையும் பெற்றவராக வருணிக்கப்பட்டார். எத்தனை எத்தனையோ தடவைகள் லெனின் துப்பாக்கியால் சுடப்பட்டதாகக் கூறப்பட்டது. எனினும் அவர் இன்னும் வாழ்கிறார். வருங்காலத்தில் பக்தர்கள் லெனினைக் கடவுள்

---

*ருஷ்யாவில் தாற்காலிக அரசாங்கம் 1917, மார்ச் 2 (பிப்ரவரி 18) முதல் அக்டோபர் 25 (நவம்பர் 7)ந் தேதி வரை நிலவியது. அது புரட்சிக்கு எதிரான ஏகாதிபத்திய வாதக் கொள்கையைக் கடைப்பிடித்தது. பெத்ரோகிராதில் நடந்த வெற்றிகரமான ஆயுத எழுச்சியால் அது கவிழ்த்தப்பட்டது.

**1919ம் ஆண்டு பிரிட்டிஷ், அமெரிக்கத் தலைவர்கள் தங்கள் சொந்த நோக்கங்களின் பொருட்டு ஒரு யோசனையை முன்வைத்தார்கள். சோவியத் அரசாங்கத்தினுடையவும் முன்னாள் ருஷ்ய சாம்ராஜ்யத்தின் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டிருந்த எல்லா வெண்படை அரசாங்கங்களினுடையவும் பிரதிநிதிகளின் மகாநாடு ஒன்றை மார்மராக் கடலில் உள்ள பிரின்ஸஸ் தீவுகளில் கூட்டுவது என்பது அந்த யோசனை. சோவியத் அரசாங்கம் முன்னதாகத் தனது நிலையைத் தெரிவித்தபின் இதில் கலந்துகொள்ள இசைந்தது. ஏகாதிபத்திய வல்லரசுகளும் வெண்படை அரசாங்கங்களும் அப்புறம் பின்வாங்கிவிட்டபடியால் இந்த மகாநாடு கூட்டப்படவில்லை.

என்று நிரூபிக்க முற்படும்போது சென்ற இரண்டு ஆண்டுகளின்* செய்தித்தாள்களில் அவர்களுக்கு ஏராளமான விஷயாதாரங்கள் கிடைக்கும்.

அலுவலக அறிவீனத்துக்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்கும் ஸிஸ்ஸன் தஸ்தாவேஜுகள்** எனப்படுபவற்றை வெளியிட்டதன் மூலம் நமது அரசாங்கமும் லெனினைச் சூழ்ந்துள்ள மூடுபனியை இன்னும் அடர்த்தியாக்க உதவியது. ஜன்கரிஸத்துக்கு*** உலகில் யாவரிலும் வன்மைமிக்க எதிரியும் ஏகாதிபத்தியத்தின்மீது ஒருபோதும் தளராது தாக்கு நடத்திவரும் ஒரே மனிதரும் ஆன லெனின் ஜன்கரிஸத்துக்கும் ஏகாதிபத்திய வாதத்துக்கும் உண்மையில் பிரதான ஆதரவாளர் என்றும் கெய்ஸரின் சொந்தக் கையாள் என்றும் நிரூபிப்பதற்கான பைத்தியக்கார முயற்சி அது.

பூர்ஷ்வாக்களின் இரத்தத்தைப் பருக்க வேட்கை கொண்ட, மனிதர்களது துன்பத்துக்கு இரங்காத கல்நெஞ்சம் உள்ள குரூரமான பேயர் என்று லெனினை வருணித்து மனிதகுலத்தின் பழிப்புக்கு ஆளாக்கும் நோக்கத்துடன் புனையப்பட்ட கதைகள் இதன்பின் பரப்பப்பட்டன. கடும் பசியால் உழலும் ருஷ்யர்கள் வீதிகளில் செத்து விழுந்த நாய் அல்லது குதிரைமீது கத்திகளும் கைகளுமாகப் பாய்ந்து, சூடு ஆறுத இறைச்சியை வெட்டி எடுத்துச் செல்வதாக

---

* 1917, 1918 ஆண்டுகள்.

** ஸிஸ்ஸன் தஸ்தாவேஜுகள் என்பவை சோவியத் விரோதக் கள்ளப் பத்திரங்கள். ஐக்கிய அமெரிக்க நாடுகளின் பொதுத் தகவல்துறைக் கமிட்டியின் வெளிநாட்டு இலாக்காவின் உதவித் தலைவர் எட்கார் ஸிஸ்ஸன் என்பவரால் அவை வெளியிடப்பட்டன. அக்டோபர்ப் புரட்சிக்குப் பிறகு அவர் பெத்ரோகிராதுக்கு வந்து சோவியத் அரசாங்கத்துக்கு எதிரான பிரசார, உளவறிதல் வேலைகளில் ஈடுபட்டார். பொதுத் தகவல் கமிட்டியின் (பக்கம் 291ல் உள்ள அடிக்குறிப்பைப் பார்க்க) ருஷ்யக் கிளைக்கு அவர் தலைவராயிருந்தார்.

***ஜன்கரிஸம்—ஜெர்மானியப் பிரபுவம்ச ஆதிக்கவாதம். —(மொ-ர்)

ஒரு புறம் வருணிக்கப்பட்டார்கள். மறு புறம் லெனின் தமது சீனக் கூலிப்படையினரால் சூழப்பட்டு மங்கோலிய மன்னர் போன்று ஆசிய ஆடம்பரத்துடன் கிரெம்ளினில் வாழ்வதாகவும் பழவகைகளுக்கு மட்டுமே நாள்தோறும் அவர் இரண்டாயிரம் ரூபிள்களுக்கு மேல் செலவிடுவதாக வும் வருணிக்கப்பட்டார்.

ஆனால் உண்மையின் ஒரு பகுதி முற்றுகையின் ஊடாகக் கசிந்து வெளிப்படத் தொடங்கியதும் எதையும் எளிதில் நம்பிவிடும் பொதுமக்களுக்குக்கூட மேற்குறித்த கதைகள் அபாண்டக் கற்பனையாகப் பட்டன. எனவே அவற்றைக் கட்டிவைக்க வேண்டியதாயிற்று.

லெனினைப் பற்றிய இந்தக் கற்பனைக் கதைகளிலிருந்து இந்த நூலின் குறைகள்பால் கவனத்தைத் திருப்புவோம். எனது இந்த நூல் அரைகுறையானது. லெனினையும் அவரது செயலையும் பற்றிய முழுமையான பார்வையீடு என அது தன்னைப் பாவித்துக்கொள்ளவில்லை. அத்தகைய பார்வை யீடு வரலாற்றின் தொலைக் காட்சியிலேயே இயலும். லெனி னோ, இன்னும் வரலாற்றைப் படைத்துக்கொண்டிருக்கிறார். எனினும் இந்த மனிதரையும் அவரது செயலையும் பற்றி இந் நூல் ஒரு கோடி காண்பிக்கிறது. அது அக்கறைக்குரியது, முக்கியத்துவம் உள்ளது என நம்புகிறேன்.

செயலாற்றும், புரட்சிச் சூறுவளியில் முனைந்து வேலை செய்யும் லெனினை இந்நூல் காட்டுகிறது. லெனினுடன் நெருங்கி உறவாடிய மூன்று வெளிநாட்டினரின் கருத்துக் களை இது பதிவு செய்கிறது. லெனினைப் பற்றி எழுதியுள்ள மற்ற அனைவரையும்விட மிகத் துலக்கமான சாதக நிலைமை இம்மூவருக்கும் உள்ளது. மேற்குறித்த வகுப்பைச் சேர்ந்த அனேகமாக எல்லா எழுத்தாளர்களுமே லெனினுடன் ஒரு போதும் பேசியதில்லை, ஒருபோதும் அவர் பேசிக் கேட்ட தில்லை, ஒருபோதும் அவரைக் கண்டதில்லை, அவருக்கு ஆயிரம் மைல் அருகில் கூட வந்ததே இல்லை. வதந்திகளை யும், அதிசயக் கற்பனைகளையும், வெறும் புனைசுருட்டுக் களையும் கொண்டே அவர்கள் தங்கள் கதைகளைப் பின்னி யிருக்கிறார்கள்.

என்னைப் பொறுத்தவரையில், அமெரிக்காவிலிருந்து சோஷலிஸ்ட் என்ற முறையில் நான் லெனினிடம் வந்தேன். ஒரே ரெயிலில் அவருடன் பயணம் செய்தேன், ஒரே மேடையிலிருந்து பேசினேன், மாஸ்கோ ''நேஷனல்'' ஹோட்டலில் இரண்டு மாதங்கள் அவருடன் சேர்ந்து வசித்தேன். புரட்சியின் போது நான் அவருடன் கொண்ட வரிசையான தொடர்புகளை இப்புத்தகத்தில் விவரித்துள்ளேன்.

லெனினுடன் கழித்த பத்து மாதங்கள்

1. லெனினின் இளம் சீடர்கள்

முதன்முறை நான் லெனினை அவரது பூதவுடலில் அல்ல, ஐந்து இளம் ருஷ்யத் தொழிலாளர்களின் உளங்களிலும் உணர்ச்சிகளிலுமே கண்டேன். 1917ம் ஆண்டுக் கோடை காலத்தில் பெத்ரோகிராதுக்குத் திரும்பிப் பெருகிய நாடுகடந்த ருஷ்யர்களின் பெருவெள்ளத்தின் ஒரு பகுதியாக இருந்தார்கள் இந்த ஐவரும்.

இவர்களுடைய ஊக்கம், அறிவுக்கூர்மை, ஆங்கில ஞானம் ஆகியவற்றால் அமெரிக்கர்கள் இவர்கள்பால் ஈர்க்கப் பட்டார்கள். தாங்கள் போல்ஷெவிக்குகள் என்று அவர்கள் எங்களுக்கு விரைவிலேயே அறிவித்தார்கள். ''பார்

வைக்கு இவர்கள் அப்படித் தோன்றவே இல்லை'' என்ருன் ஒரு அமெரிக்கன். சிறிது காலம்வரை அவன் அவர்களது கூற்றை நம்பவே இல்லை. நீண்ட தாடிகளும் அறியாமையும் சோம்பலும் கொண்ட முரட்டுப் போக்கிரிகளின் வடிவில் போல்ஷெவிக்குகளின் படங்களை அவன் செய்தித்தாள்களில் பார்த்திருந்தான். இந்த இளைஞர்களோ, மழித்த முகங்களும் மரியாதையும் நகைச்சுவையும் இனிய சுபாவமும் அறிவுவிழிப்பும் வாய்ந்திருந்தார்கள். இவர்கள் பொறுப்பை ஏற்க அஞ்சவில்லை, உயிர் வழங்க அஞ்சவில்லை, எல்லாவற்றையும் விட ருஷ்யாவில் வியப்பூட்டிய விஷயம் என்னவென்ருல், வேலை செய்வதற்கும் இவர்கள் அஞ்சவில்லை என்பதுதான். எனினும் இவர்கள் போல்ஷெவிக்குகள்.

வோஸ்கோவ் நியூயார்க்கிலிருந்து வந்திருந்தான். அங்கே அவன் தச்சர்கள், சிறு தச்சு வேலைக்காரர்கள் சங்கம் நம்பர் 1008ன் ஒழுங்கமைப்பாளனுக இருந்தான். யானிஷேவ் மெக்கானிக். கிராமப் பாதிரியின் மகனை இவன் உலகின் பல பகுதிகளில் சுரங்கங்களிலும் ஆலைகளிலும் வேலை செய்ததற்குரிய அடையாளங்கள் அவன் உடலில் தென்பட்டன. நேய்பூத் கம்மியன். இவன் எப்போதும் ஒரு கட்டுப் புத்தகங்களை வைத்திருப்பான். புதிதாகக் கிடைத்த புத்தகத்தைப் பற்றி எப்போதும் ஒரே உற்சாகமாகப் பேசுவான். வொலதார்ஸ்க்கிய் இரவும் பகலும் இடைவிடாது அடிமைபோல உழைப்பான். பகைவரால் அவன் கொல்லப்படுவதற்குச் சில வாரங்களுக்கு முன் என்னிடம் சொன்ஞன்: ''அட என்ன வந்துவிடும்! பகைவர்கள் என்னைக் கொன்றுவிடுகிருர்கள் என்று வைத்துகொள்வோமே! ஐந்து மனிதர்கள் வாழ்நாள் முழுவதிலும் அடைய வேண்டியதைக் காட்டிலும் அதிக இன்பத்தை இந்த ஆறு மாதங்களில் வேலை செய்ததனுல் நான் அடைந்துவிட்டேனே.'' பீட்டர்ஸ் ஒரு மேஸ்திரி. விரல்கள் பேனுவைப் பிடிக்க வலுவற்றுப் போகும்வரை கொலைத் தண்டனை உத்தரவுகளில் கையெழுத்திடும் இரத்தவெறி கொண்ட கொடுங்கோலன் என்று பத்திரிகைச் செய்திகளில் பிற்காலத்தில் வருணிக்கப்பட்ட இவன், தனது ஆங்கில ரோஜாத்

தோட்டத்தையும் நெக்ராஸவின்* கவிதைகளையும் நினைத்து அடிக்கடி பெருமூச்செறிவான்.

அறிவிலும் உளவுறுதியிலும் லெனின் எல்லா போல்ஷெவிக்குகளுக்கும் மட்டுமே அல்ல, ருஷ்யாவிலும் ஐரோப்பாவிலும் உலகம் அனைத்திலும் உள்ள மற்ற எல்லாருக்கும் முன்னணியில் நிற்கிறார் என்று இந்த மனிதர்கள் நிதானமாக எங்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

ஜெர்மன் உளவாளி என்று வருணிக்கப்பட்ட லெனினைப் பற்றி நாள்தோறும் பத்திரிகைகளில் படித்துவந்த எங்களுக்கு, போக்கிரி, துரோகி, அறிவு மழுங்கியவர் என்று பூர்ஷ்வாக்கள் லெனினைப் பகிஷ்கரிப்பதைத் தினந்தோறும் கேட்டுவந்த எங்களுக்கு இந்த இளைஞர்களின் கூற்று விந்தையான போதனையாகப் பட்டது. இது நம்பமுடியாததாகவும் வெறிபிடித்ததாகவும் தொனித்தது. ஆனால் அந்த இளைஞர்கள் முட்டாள்களோ, உணர்ச்சி வசப்படுபவர்களோ அல்ல. உலகில் அடிபட்டுத் தேறி இத்தகைய பலவீனங்களிலிருந்து முற்றிலும் விடுபட்டிருந்தார்கள் அவர்கள். இந்த இளைஞர்கள் வீரவழிபாட்டினரும் அல்ல. போல்ஷெவிக் இயக்கம் மூலதத்துவ ஆற்றலும் ஆவேசமும் கொண்டது எனினும் விஞ்ஞானரீதியானது, எதார்த்தவாதப் போக்கு உள்ளது, வீரவழிபாட்டுக்கு ஏற்காதது. இவ்வாறிருக்க, இந்த ஐந்து போல்ஷெவிக்குகளுமோ, நேர்மையிலும் அறிவுக்கூர்மையிலும் மாண்பு மிக்க ஒரு ருஷ்யர் இருக்கிறார், அவர் பெயர் நிக்கொலாய் லெனின்** என்று பிரகடனம் செய்தார்கள். அந்தக் காலத்தில் அவர் தாற்காலிக அரசாங்கத்தால் வேட்டையாடப்பட்ட சட்டப்புறம்பாளர்.

இந்த இளம் உற்சாகிகளைப் பார்க்கப் பார்க்க, அவர்கள் தங்கள் ஆசான் என ஏற்றுக்கொண்ட மனிதரைக்

---

*நெக்ராஸவ், நி. அ. (1821-1877)—ருஷ்ய மகாகவி. புரட்சிகர ஜனநாயகவாதி.

** நிக்கொலாய் லெனின்— ஆசிரியர் குறிப்பிடுவது வி. இ. லெனினின் பல புனைபெயர்களில் ஒன்று.

காண எங்கள் விருப்பம் மிகுந்துகொண்டு போயிற்று. அவருடைய மறைவிடத்துக்கு அவர்கள் எங்களை அழைத்துப் போவார்களா?

''சற்று பொறுங்கள், அப்புறம் அவரைக் காண்பீர்கள்'' என்று சிரித்துக் கொண்டே பதில் அளிப்பார்கள் இளைஞர் கள்.

1917ம் ஆண்டுக் கோடை காலம் முழுவதும் இலையுதிர் காலத்திலும் நாங்கள் பொறுமையின்றிக் காத்துக் கொண்டிருந்தோம். கேரென்ஸ்கிய்* அரசாங்கம் மேலும் மேலும் வலுவிழந்துகொண்டு போவதைக் கண்டோம். நவம்பர் மாதம் 7ந் தேதி அது இறந்துவிட்டது என்று போல்ஷெவிக்குகள் தீர்ப்பளித்தார்கள். அதே சமயம் ருஷ்யா சோவியத்துக்களின் குடியரசு என்றும் லெனின் அதன் முதலமைச்சர் என்றும் அவர்கள் பிரகடனம் செய்தார்கள்.

2. லெனினைப் பற்றிய முதல் உளப்பதிவு

தங்கள் புரட்சியின் வெற்றியால் பூரிப்படைந்த தொழிலாளர்களும் படைவீரர்களும் ஸ்மோல்னியின் பிரமாண்டமான ஹாலில் பாடிக்கொண்டு செம்மச் செம்ம நிறைந்தார்கள். போர்க் கப்பல் ''அரோராவின்'' பீரங்கிகள் பழைய அமைப்பின் இறப்பையும் புதிய அமைப்பின் பிறப்பையும் கட்டியங்கூறி முழங்கிக் கொண்டிருந்தன. அந்த வேளையில் லெனின் அமைதியாகப் பேச்சாளர் மன்றப் படிகள் மீது அடிவைத்தார். ''தோழர் லெனின் இப்போது காங்கிரஸ் முன் பேசுவார்'' என்று அறிவித்தார் தலைவர்.

எங்கள் மனத்தில் இருந்த உருவத்துக்கு அவர் பொருத்தமாக இருப்பாரா என்று காண்பதற்காக நாங்கள் எம்பிப் பார்த்தோம். ஆனால் நிருபர்கள் மேஜைக்கு அருகிலிருந்த எங்கள் இருக்கைகளிலிருந்து அவரை முதலில்

---

*அ. பி. கேரென்ஸ்கிய், 1917ல் ருஷ்யாவில் பல்வேறு கூட்டுக்களால் அமைந்த தாற்காலிக அரசாங்கத்தின் தலைமை அமைச்சர்.

காண முடியவில்லை. உரத்த ஆரவாரத்திற்கும் வெற்றி முழக்கங்களுக்கும் சீழ்க்கைகளுக்கும் கால்களைத் தரையில் அடிக்கும் சத்தங்களுக்கும் இடையே அவர் மன்றத்தைக் கடந்து, எங்களுக்கு முப்பது அடி தூரத்துக்குள் இருந்த பிரசங்க மேடைமேல் ஏறினர். இப்போது நாங்கள் அவரைத் தெளிவாகக் கண்டோம். எங்கள் நெஞ்சு விழுந்து போயிற்று.

நாங்கள் உருவகப்படுத்தி வைத்திருந்ததற்கு அநேகமாக எதிரிடையாக இருந்தார் அவர். வாட்டசாட்டமாகவும் மிடுக்குடனும் தோற்றம் அளிப்பதற்குப் பதில் அவர் குட்டையாக, கட்டுக்குட்டென்று இருந்தார். அவருடைய தாடியும் தலைமயிரும் முரடாக, கலைந்து கிடந்தன.

கைதட்டல் புயலை அடக்கிய பின் அவர், ''தோழர்களே, இப்போது நாம் சோஷலிஸ அரசை நிறுவும் வேலையை மேற்கொள்வோம்'' என்று கூறினர். பிறகு அவர் கிளர்ச்சி அற்ற, விவகாரரீதியான விவாதத்தில் இறங்கினர். அவருடைய குரலில் சொல்வன்மை அல்ல, ஒரு வகைக் கடுமையும் வறட்சியும் கொண்ட தொனி இருந்தது. தமது அரைக் கோட்டின் தோள் துளைகளுக்குள் கட்டைவிரல்களை நுழைத்துக்கொண்டு, குதிகால்களில் முன்னும் பின்னும் சாய்ந்தாடினர். கட்டற்ற, இளமையும் வலிமையும் வாய்ந்த இந்த மனிதர்களின் உள்ளங்கள் மீது அவருடைய ஆதிக்கத்துக்குக் காரணமான மறைந்த காந்தக் கவர்ச்சிப் பண்புகளைக் கண்டறியும் நம்பிக்கையுடன் நாங்கள் சுமார் ஒரு மணி நேரம் அவரது பேச்சைக் கேட்டோம். ஆனல் பயனில்லை.

எங்களுக்கு ஏமாற்றமாக இருந்தது. போல்ஷெவிக்குகள் தங்கள் வீச்சினுலும் துணிவினுலும் எங்களைக் கவர்ந்துவிட்டார்கள். அவர்களுடைய தலைவரும் அவ்வாறே செய்ய வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். இந்தக் கட்சியின் தலைவர் இந்தக் குணங்களின் பருவடிவாக, இயக்கம் அனைத்தின் பொழிப்பாக, ஒருவகை அதிபோல்ஷெவிக்காக எங்கள் முன் வர வேண்டும் என நாங்கள் எதிர்பார்த்தோம். மாருக, அவரோ மென்ஷெவிக் போல, அதிலும் மிகச் சிறு மென்ஷெவிக் போலத் தோற்றம் அளித்தார்.

''இவருக்குக் கொஞ்சம் நல்லுடை அணிவித்துவிட்டால் சிறு பிரெஞ்சு நகர் ஒன்றின் பூர்ஷ்வா மேயராகவோ பாங்கராகவோ இவரைக் கருத முடியும்'' என்று கிசுகிசுத்தான் ஆங்கிலேய நிருபன் ஜூலியஸ் வெஸ்ட்.

''ஆம், மிகவும் பெரிய வேலைக்கு மிகவும் சிறிய மனிதர்'' என்று நீட்டி முழக்கினுன் அவனுடைய கூட்டாளி.

போல்ஷெவிக்குகள் மேற்கொண்டுள்ள சுமை எவ்வளவு கனமானது என்பதை நாங்கள் அறிந்திருந்தோம். இதைச் சுமக்க அவர்களால் முடியுமா? அவர்களுடைய தலைவர் வலியவராக எங்களுக்கு முதல் பார்வைக்குத் தோன்றவில்லை.

இவ்வளவு தூரம் முதல் உளப்பதிவை விவரித்தேன் ஆனுல், சாதகமற்ற முதல் மதிப்பீட்டிலிருந்து தொடங்கிய நான் ஆறு மாதங்களுக்கெல்லாம் வோஸ்கோவ், நேய்பூத், பீட்டர்ஸ், வொலதார்ஸ்க்கிய், யானிஷேவ் ஆகியோரின் முகாமில் சேர்ந்துவிட்டேன்; அவர்கள் கருத்துப்படி ஐரோப்பாவின் முதல் மனிதரும் ராஜதந்திரியும் நிக்கொலாய் லெனினே ஆவார்.

3. அரசு வாழ்க்கையில் கண்டிப்பான ஒழுங்குமுறையை லெனின் புகுத்துகிருர்

கஸாக்கியர்களையும் புரட்சிவிரோதிகளையும் எதிர்த்துப் போரிடுவதற்காக அப்போது எல்லாச் சாலைகள் வழியாகவும் வெள்ளமாகப் பெருகிக்கொண்டிருந்த செங்காவற்படையினருடன்* செல்வதற்கு அனுமதிச் சீட்டு பெற வேண்டும்

---

*தொழிலாளர்களால் ஆன செங்காவற்படைப் பிரிவுகள் 1905-07ல் நடந்த முதல் ருஷ்யப் புரட்சியின் போது முதன்முதலாக உருவாயின. 1917ன் முடிவிலும் 1918ன் தொடக்கத்திலும் போல்ஷெவிக்குகளால் தலைமைதாங்கி நடத்தப்பெற்ற இந்தப் பிரிவுகள் புரட்சி எதிர்ப்பை முறியடிக்கும் போராட்டத்தில் மிகப் பெரிய பங்கு ஆற்றின. 1918, ஆகஸ்ட் இறுதியில் செங்காவற்படைப் பிரிவுகள் செஞ்சேனையாக ஒன்ருக்கப்பட்டன.

என்று நவம்பர் 9ந் தேதி நான் விரும்பினேன். எனது சான்றிதழ்களைக் காட்டினேன். அவற்றில் ஹில்க்விட்* ஹுய்ஸ்மன்ஸ்** இருவரதும் கையெழுத்துக்கள் இருந்தன. இவை பிரமாதமான சான்றிதழ்கள் என நான் நினைத்தேன். லெனினோ, அப்படி எண்ணவில்லை. அவை யூனியன் லீக் கிளப் போன்ற ஏதோ பூர்ஷ்வாச் சமூகநலக் கழகத்திலிருந்து வந்தவை போன்று, சுருக்கமாக ''இல்லை'' என்ற ஒரே சொல்லுடன் என்னிடம் திருப்பிக் கொடுத்துவிட்டார்.

இது அற்ப நிகழ்ச்சியே. எனினும் பாட்டாளிகளின் நிறுவனங்களில் இப்போது தோன்றியிருந்த புதிய, கண்டிப்பான போக்கை இது புலப்படுத்தியது. இதற்கு முன்பு வரை பொதுமக்கள் தங்களுடைய மட்டுமீறிய இனிய பண்பையும் நல்லியல்பையும் வாரி வழங்கித் தங்களுக்கே தீங்கு செய்துகொண்டார்கள். லெனின் ஒழுங்குமுறையை நிலைநாட்ட முற்பட்டார். பட்டினி, படையெடுப்பு, பிற்போக்கு என்ற அபாயங்கள் சூழ்ந்த புரட்சியைப் பலமான, கண்டிப்புள்ள நடவடிக்கையே காப்பாற்ற முடியும் என்று அவர் அறிந்திருந்தார். எனவே போல்ஷெவிக்குகள் தாட்சிண்ணியமோ தயக்கமோ இன்றித் தங்கள் நடவடிக்கைகளை அமல்படுத்தினார்கள். அவர்களுடைய பகைவர்களோ, அவர்களைத் தாக்குவதற்கு உரிய அடைமொழிகளைத் தங்கள் வசை ஆயுதசாலைகளில் துருவித் தேடினார்கள். பூர்ஷ்வாக்களின் கண்களுக்கு லெனின் எதேச்சாதிகாரியாகவும் கொடிய வன்முறைகளைக் கையாள்பவராகவும் தோற்றம் அளித்தார். அந்தக் காலத்தில் அவர்கள் அவரை முதல் அமைச்சர் லெனின் என்று குறிப்பிடுவதில்லை, ''கொடுங்கோலர் லெனின்,'' ''சர்வாதிகாரி லெனின்'' என்றே குறிப்பிட்டு வந்தார்கள். வலதுசாரி சோஷலிஸ்டுகளோ, பழைய ரொமானவ் வம்ச ஜார் இரண்டாம் நிக்கொலாயின் இடத்துக்குப்

---

* ஹில்க்விட்—அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சோஷலிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவர்; இரண்டாவது இன்டர்நேஷனலில் ஊக்கத்துடன் செயலாற்றிய சீர்திருத்தவாதி.

**ஹுய்ஸ்மன்ஸ்—பெல்ஜிய சோஷலிஸ்ட், இரண்டாவது இன்டர்நேஷனலில் துடியாகச் செயலாற்றியவர்.

புதிய ஜார் நிக்கொலாய் லெனின் வந்திருப்பதாகக் கூறினார்கள், ''நமது புதிய ஜார் மூன்றும் நிக்கொலாய் நீடூழி வாழ்க!'' என்று ஏளனத்துடன் முழக்கம் இட்டார்கள்.

ஒரு குடியானவன் சம்பந்தப்பட்ட வேடிக்கை நிகழ்ச்சியை அவர்கள் களிப்புடன் பயன்படுத்திக் கொண்டார்கள். குடியானவர்கள் பிரதிநிகளின் சோவியத், தனது ஆதரவைப் புதிய சோவியத் அரசாங்கத்துக்கு அளித்து ஸ்மோல்னிய் மாளிகையின் ஹால்களில் பிரமாதமான கொண்டாட்டம் நிகழ்த்தி அன்பு மழை பொழிந்த இரவில் நடந்தது இது. அறிவுஜீவிகள் நாட்டுப்புறத்தின் சார்பில் பேசினார்கள். பின்பு நாட்டுப் புறத்தினர் தம் சார்பில் தாமே பேச வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. குடியானவனுக்குரிய மேலங்கி அணிந்த ஒரு கிழவன் மேடைக்கு வந்தான். நரைத்த தாடியினூடாகச் சிவுசிவென்று ரோஜா நிறத்தில் காட்சி தந்தது அவன் முகம். கண்கள் பளிச்சிட்டன. நாட்டுப்புற வழக்கு மொழியில் அவன் பேசினான்.

'''தவாரிஷ்ஷி',* பதாகைகள் பறக்க, இசை முழங்க நாம் இன்று இரவு இங்கு வந்த போது நான் பெருத்த மகிழ்ச்சி அடைந்தேன். என் கால்கள் தரையில் பாவவில்லை. நான் காற்றிலே பறந்து வந்தேன். அறியாமை இருட்டு சூழ்ந்த கிராமத்தில் வசிக்கும் இருண்ட அறிவு கொண்ட மக்களில் நானும் ஒருவன். நீங்கள் எங்களுக்கு ஒளி தந்தீர்கள். ஆனால் எங்களுக்கு அது புரியவே இல்லை. அதனால் தான் கிராமத்தார் என்னை இங்கே அனுப்பியிருக்கிறார்கள், விஷயத்தைத் தெரிந்துகொண்டுவரும்படி. முன்பெல்லாம் 'சினோவ்னிக்கி'** ரொம்பக் கடுமையாக இருப்பார்கள் எங்களை அடிப்பார்கள். இப்போதோ அவர்கள் மிகவும் மரியாதையாக இருக்கிறார்கள். முன்பெல்லாம் நாங்கள் அரண்மனை

---

*தோழர்களே என்று பொருள்படும் ருஷ்யச் சொல்.—(மொ-ர்)

**அதிகாரிகள் என்று பொருள்படும் ருஷ்யச் சொல்.—(மொ-ர்)

களின் வெளிப்புறத்தை மட்டுமே பார்க்க முடிந்தது. இப்போதோ நாங்கள் நேரே அவற்றுக்குள் போகலாம். முன்பெல்லாம் நாங்கள் ஜாரைப் பற்றிப் பேச மட்டுமே செய்தோம். இப்போதோ, 'தவாரிஷ்ஷி', நான் ஜார் லெனினுடன் நாளைக்கே கைகுலுக்கலாம் என்று எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. ஆண்டவன் அவருக்கு நீண்டாயுள் அளிப்பாராக!''

கூட்டத்தில் வெடிச் சிரிப்பு பீறிட்டது, கரகோஷம் சடபடத்தது. சிரிப்பு, கைதட்டல் முழக்கங்களால் ஆச்சரியம் அடைந்து கிழக் குடியானவன் உட்கார்ந்துவிட்டான். மறு நாள் அவன் லெனினிடம் அழைத்துச் செல்லப்பட்டான். பின்பு பிரேஸ்த்-லித்தோவ்ஸ்க்கில்* அவன் குடியானவர்களின் பிரதிநிதியாக இருந்தான்.

குழப்பம் நிறைந்த அந்த வாரங்களில் எஃகு போன்ற சித்தவுறுதியும் எஃகு நரம்புகளுமே நிலைமையைச் சமாளித்திருக்க முடியும். கண்டிப்பான ஒழுங்கும் கட்டுப்பாடும் எல்லா இலாக்காக்களிலும் தென்பட்டன. தொழிலாளர்களின் மனப்பாங்கு கடுமையாகிவிட்டதையும் சோவியத் இயந்திரத்தின் தளர்வான பகுதிகள் இறுக்கப்பட்டுவிட்டதையும் காண முடிந்தது. இப்போது சோவியத் செயலில் இறங்கியபோது, உதாரணமாக பாங்கு அமைப்பைக் கைப்பற்றியபோது அது கடுமையாகவும் திறம்படவும் தாக்கியது. எங்கே சட்டெனச் செயலாற்ற வேண்டும் என்பதை லெனின் அறிந்திருந்தார். அதே சமயம் எங்கே மெதுவாகச் செல்ல வேண்டும் என்பதும் அவருக்குத் தெரிந்திருந்தது. தொழிலாளர்களின் பிரதிநிதிக் குழு ஒன்று லெனினிடம்

---

* 1918, மார்ச் 3ம் தேதி பிரேஸ்த்-லித்தோவ்ஸ்க்கில் சமாதான உடன்பாடு கையெழுத்தாகியது. ஒரு புறம் சோவியத் ருஷ்யாவுக்கும் மறுபுறம் ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, பல்கேரியா, துருக்கி ஆகிய நாடுகளுக்கும் இடையே இந்த உடன்பாடு செய்யப்பட்டது. இதன் நிபந்தனைகள் கடுமையாக இருந்தபோதிலும், சோவியத் ஆட்சியை வலுப்படுத்தவும் நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் சமாதானம் இன்றியமையாதிருந்ததால் சோவியத் அரசு இந்த உடன்பாட்டைச் செய்துகொண்டது.

வந்து தங்கள் தொழிற்சாலையைத் தேசீய உடைமையாக்கும் ஆணையை அவர் பிறப்பிக்க முடியுமா என்று கேட்டது.

''முடியுமே'' என்று ஒரு வெற்று நமூனாவை எடுத்தார் லெனின். ''இதில் என் பங்கு மிக எளியது. நான் செய்ய வேண்டியதெல்லாம் இந்த நமூனாக்களை எடுத்து இதோ இந்த இடத்தில் உங்கள் தொழிற்சாலையின் பெயரை எழுதி, இதோ இங்கே என் பெயரை ஒப்பமிட்டு, கமிஸாரின் பெயரை இந்த இடத்தில் எழுதுவதுதான்'' என்று கூறினார். தொழிலாளர்கள் மிக்க மகிழ்ச்சி அடைந்து அது ''மிக நல்லது'' என்றார்கள்.

''ஆனால் இந்த நமூனாவில் நான் கையெழுத்திடுவதற்கு முன் உங்களைச் சில கேள்விகள் கேட்க வேண்டும். முதலாவதாக, உங்கள் தொழிற்சாலைக்கு வேண்டிய கச்சாப் பொருள்களை எங்கிருந்து பெறுவது என்பதை அறிவீர்களா?'' என வினவினார் லெனின். தங்களுக்கு அது தெரியாது என்று வேறு வழியின்றி ஒப்புக்கொண்டார்கள் அவர்கள்.

''கணக்கு வைத்துக் கொள்வது உங்களுக்குப் புரியுமா? உற்பத்தியைத் தொடர்ந்து நடத்துவதற்கான முறையைத் தயாரித்து, வைத்திருக்கிறீர்களா?'' என்று தொடர்ந்து கேட்டார் லெனின். இந்த அற்ப விஷயங்கள் பற்றித் தங்களுக்கு அதிகமாகத் தெரியாது என்று தொழிலாளிகள் கூறினார்கள்.

''கடைசியாக, தோழர்களே, உங்கள் உற்பத்திப் பொருள்களை விற்பதற்கான சந்தையைக் கண்டுபிடித்து விட்டீர்களா?'' என்று விடாது வினவினார் லெனின்.

''இல்லை'' என்று அவர்கள் மீண்டும் பதில் அளித்தார்கள்.

முதலமைச்சர் சொன்னார்: ''நல்லது தோழர்களே, உங்கள் தொழிற்சாலையை எடுத்துக்கொள்வதற்கு நீங்கள் இன்னும் ஆயத்தமாகவில்லை என்று உங்களுக்குப் படவில்லையா? வீடு சென்று இந்த விஷயங்களைப் பற்றித் திட்டம் வகுங்கள். அது கடினமாயிருக்கும். நீங்கள் பல தவறுகள் செய்வீர்கள், ஆனால் கற்றுக்கொள்வீர்கள். பிறகு சில மாதங்கள் சென்றதும் வாருங்கள். உங்கள் தொழிற்சாலையைத் தேசீய உடைமை ஆக்குவோம்.''

4. லெனினது சொந்த வாழ்வில் எஃகு ஒழுங்குமுறை

சமூக வாழ்வில் எத்தகைய கண்டிப்பையும் கறுரையும் லெனின் புகுத்திஞரோ அதையே சொந்த வாழ்விலும் அவர் காட்டிஞர். ஷ்சீயும்* போர்ஷ்சும்,** ரை ரொட்டித் துண்டுகளும் தேநீரும் பொங்கலுமே ஸ்மோல்னிய் கூட்டத்தினரின் தினப்படிச் சாப்பாட்டின் அம்சங்களாக விளங்கின. லெனினும் அவருடைய மனேவியும் சகோதரியும் இவற்றையே உணவாகக் கொண்டார்கள். புரட்சி வீரர்கள் தங்கள் இடங்களில் நாள்தோறும் பன்னிரண்டு முதல் பதினேந்து மணி நேரம் வரை உழைத்தார்கள். லெனிஞே, தினந்தோறும் பதினெட்டு முதல் இருபது மணி வரை வேலே செய்தார். நூற்றுக் கணக்கான கடிதங்களைத் தம் கைப்பட எழுதிஞர். வேலேயில் ஒரேயடியாக ஆழ்ந்து, மற்ற எல்லாவற்றையும், சொந்த ஆகாரத்தைக்கூட அவர் மறந்து விடுவார். லெனின் உரையாடலில் ஈடுபட்டிருக்கையில் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவருடைய மனேவி ஒரு கிளாஸ் தேநீருடன் வந்து ''இந்தாருங்கள், 'தவாரிஷ்,' இதைப் பருக மறந்துவிடாதீர்கள்'' என்பாள். பெரும்பாலும் தேநீர் சர்க்கரை அற்றதாகவே இருக்கும். ஏனெனில் மற்ற மக்களுக்குக் கிடைத்த அளவே ரேஷன் லெனினும் பெற்றுவந்தார். படைவீரர்களும் அஞ்சல்காரர்களும் பெரிய, வெற்றுன, பாரக்குகள் போன்ற அறைகளில் இரும்புக் கட்டில்களில் படுத்து உறங்கிஞர்கள். லெனினும் அவருடைய மனேவியும் அவ்வாறே செய்தார்கள். களைத்துச் சோர்ந்து போய், கரடு முரடான கட்டில்களில் விழுந்து உடைகளைக்கூட மாற்றுமல் அவர்கள் உறங்கிப் போவார்கள்—எந்த அவசர நிலேமையிலும் எழுந்திருப்பதற்கு ஆயத்தமாக. இந்தத் தியாகங்களை லெனின் மேற்கொண்டது துறவு

---

*முட்டைக் கோசு சூப்.—(மொ-ர்)
**காரட் சூப்—(மொ-ர்)

மனப்பான்மை காரணமாக அல்ல. கம்யூனிஸத்தின் முதல் கோட்பாட்டை அவர் நடப்பில் அனுசரித்தார், அவ்வளவுதான்.

எந்தக் கம்யூனிஸ்ட் அதிகாரியின் சம்பளமும் சராசரித் தொழிலாளியின் சம்பளத்தைவிட அதிகமாக இருக்கக் கூடாது என்பது இந்தக் கோட்பாடுகளில் ஒன்று. அதிகபட்சம் மாதத்துக்கு 600 ரூபிள்கள் என அது நிச்சயிக்கப் பட்டது. பிற்பாடு இது உயர்த்தப்பட்டது. தற்போது ருஷ்யாவின் முதலமைச்சர் 200 டாலர்களுக்கும் குறைவான தொகையே மாதச் சம்பளமாகப் பெறுகிறார்.

''நேஷனல்'' ஹோட்டலில் இரண்டாவது மாடியில் லெனின் ஓர் அறை எடுத்துக் கொண்ட போது நான் அந்த ஹோட்டலில் இருந்தேன். சோவியத் அரசாங்கம் செய்த முதல் வேலை ஆடம்பரமான, மிகுந்த விலையுள்ள வெஞ்சன வகைகளை ரத்து செய்ததுதான். ஒரு வேளைச் சாப்பாட்டில் அடங்கியிருந்த பற்பல வெஞ்சனங்கள் இரண்டாகக் குறுக்கப்பட்டன. சூப்பும் இறைச்சியும் அல்லது சூப்பும் பொங்கலும் ஒருவர் சாப்பிடலாம். முதன்மைக் கமிஸாரிலிருந்து சமையலறை வேலைக்காரப் பையன்வரை எந்த நபருக்கும் ஒரு வேளையில் கிடைக்கக் கூடியவை இவை தாம். ஏனென்றால், ''எல்லோருக்கும் ரொட்டி கிடைக்கும்வரை ஒருவருக்கும் கேக் கிடையாது'' என்று கம்யூனிஸ்டின் கொள்கையில் எழுதப்பட்டிருக்கிறது. சில நாட்களில் ரொட்டிகூட மக்களுக்கு மிகக் கொஞ்சமே கிடைத்தது. எனினும் ஒவ்வொரு மனிதனும் லெனின் பெற்ற அளவு ரொட்டி பெற்றான். சிற்சில நாட்களில் ரொட்டியே இருக்காது. அந்த நாட்களில் லெனினும் ரொட்டி இல்லாமல் இருந்துவிடுவார்.

லெனினைக் கொல்ல முயற்சி செய்யப்பட்டதை அடுத்த நாட்களில் அவர் சாவுக்கு அருகே இருந்த போது முறையான ரேஷன் கார்டு மூலம் பெற முடியாததும் மார்க்கெட்டில் யாரேனும் கள்ள வியாபாரியிடமிருந்து மட்டுமே வாங்கக் கூடியதுமான ஒரு உணவுப் பண்டத்தை அவர் சாப்பிட வேண்டும் என்று மருத்துவர்கள் கூறினார்கள். நண்பர்கள் எவ்வளவோ மன்றாடியும் முறையான ரேஷனின்

பகுதி அல்லாத எதையும் தொடுவதற்கு லெனின் மறுத்து விட்டார்.

பிற்பாடு லெனின் உடல் தேறிக்கொண்டிருந்த காலத்தில் அவரது ஊட்டத்தை அதிகரிப்பதற்கு அவருடைய மனைவியும் சகோதரியும் ஒரு யுக்தி கண்டுபிடித்தார்கள். லெனின் தமது ரொட்டியை மேஜையின் செருகறையில் வைப்பதைக் கண்ட அவர்கள் அவர் இல்லாத வேளைகளில் அவருடைய அறைக்குள் ஓசைப்படாமல் வந்து அவருடைய சேமிப்பில் ஒரு துண்டு ரொட்டியைச் சேர்த்துவிடுவார்கள். வேலையில் ஆழ்ந்திருக்கும் லெனின் செருகறைக்குள் கையை விட்டு ஒரு துண்டு ரொட்டியை விண்டு அது அதிகப்படியானது என்ற உணர்வே இன்றித் தின்பார்.

ஐரோப்பிய, அமெரிக்கத் தொழிலாளர்களுக்கு ஒரு கடிதத்தில் லெனின் பின்வருமாறு எழுதினர்: ''ஆந்தாந்த்* இராணுவத் தலையீடு காரணமாகத் தற்போது ருஷ்ய மக்களுக்கு விதிக்கப்பட்டிருப்பது போன்ற இவ்வளவு ஆழ்ந்த துன்பம், பட்டினியின் இத்தகைய வேதனை அவர்கள் முன் ஒருபோதும் அனுபவித்ததில்லை!'' ஆனால் எந்த மக்களைப் பற்றி அவர் எழுதுகிருரோ அவர்களுடன் சேர்ந்து அதே துன்ப துயரங்களை லெனினும் அனுபவித்துவந்தார்.

லெனின் ஒரு மாபெரும் நாட்டின் வாழ்க்கையைச் சூதாட்டத்தில் போலப் பணயம் வைப்பதாகவும் ருஷ்யாவின் நோயுற்ற உடல் மீது தமது கம்யூனிஸச் சூத்திரங்களைச் சோதனை செய்து பார்க்கும் சோதனையாளர் அவர் என்றும் குற்றம் சாட்டப்படுகிறது. ஆனால் இந்தச் சூத்திரங்கள் பால் நம்பிக்கை குறைந்தவர் என்று அவரை யாரும் குறை

---

*''ஆந்தாந்த்'' என்பது ஒரு ஏகாதிபத்தியக் கூட்டணி. அக்டோபர்ப் புரட்சிக்கு முன் ருஷ்யா இதில் ஒரு உறுப்பினராக இருந்தது. அக்டோபர்ப் புரட்சிக்குப்பின் இந்தக் கூட்டணியின் பிரதான உறுப்பினர்களாகிய பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஜப்பான் ஆகியவை சோவியத் ருஷ்யாவை எதிர்த்து இராணுவத் தலையீட்டை ஒழுங்கமைத்தன; பிற நாடுகளில் புரட்சி இயக்கத்தைத் தோற்கடிப்பதையும் ஊக்குவித்தன.

கூற முடியாது. இவற்றை அவர் ருஷ்யாவின் மீது மட்டுமே அல்ல, தம் மீதும் சோதனை செய்து பார்க்கிறார். மற்றவர்களுக்குக் கொடுக்கும் தமது மருந்தைத் தாமும் சாப்பிட அவர் தயாராயிருக்கிறார். கம்யூனிஸக் கோட்பாடுகளுக்குத் தொலைவிலிருந்து அஞ்சலி செலுத்துவது ஒரு விஷயம். கம்யூனிஸம் புகுத்தப்படுவதனால் இன்றியமையாது ஏற்படும் கஷ்ட நஷ்டங்களை நிகழ்ச்சிக் களத்தில் லெனின் போன்று பொறுமையுடன் அனுபவிப்பது பெரிதும் வேறு விஷயம்.

ஆனால் கம்யூனிஸ அரசைத் தொடங்கி வைப்பது முற்ற முழுக்கத் துயர் நிறைந்ததாகச் சித்திரிக்கப்படக் கூடாது. மிக மிகக் கஷ்டம் நிரம்பிய காலத்தில்கூட ருஷ்யாவில் கலையும் இசை நாடகமும் செழித்து வளர்ந்தன. காதலும் தன் பங்கை ஆற்றத்தான் செய்தது. புரட்சி மன்றத்தின் பிரதானப் பாத்திரங்களைக்கூட அது பற்றிவிட்டது. பலதுறைகளில் திறமை சான்ற கொலன்தாய்* கடற்படை வீரர் தீபேன்கோவை மணந்து கொண்டார் என்று திடீரென ஒரு நாள் செய்தி கிடைத்ததும் நாங்கள் வியப்பில் ஆழ்ந்தோம். பின்னர் நார்வா என்னும் இடத்தில் ஜெர்மானியருக்கு எதிரே பின்வாங்கத் தன் படைப்பிரிவுக்கு உத்தரவிட்டதன் பொருட்டு தீபேன்கோ கண்டனத்துக்கு ஆளானார். பதவியிலிருந்தும் கட்சியிலிருந்தும் அவர் அவமதிப்புடன் அகற்றப்பட்டார். இந்த நடவடிக்கைக்கு லெனின் ஏற்பு அளித்தார். கொலன்தாய் இயல்பாகவே மனத்தாங்கல் அடைந்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் கொலன்தாயுடன் பேசுகையில் அதிகார நஞ்சு லெனினுடைய இரத்த நாளங்களில் புகுந்து அவருடைய ஆணவத்தை ஒரேயடியாக உப்பச் செய்துவிட்டது போலும், எல்லா மனிதர்களையும் போன்றே அவர்

---

*கொலன்தாய் அ. மி. (1872-1952)—அக்டோபர்ப் புரட்சியில் தீவிரப் பங்கு ஆற்றியவர். புரட்சிக்குப் பின் சில ஆண்டுகள் கமிஸாராக இருந்தார். சர்வதேச மாதர் இயக்கத்தில் ஊக்கத்துடன் பங்காற்றினார். நார்வே, மெக்ஸிக்கோ, ஸ்வீடன் ஆகிய நாடுகளில் சோவியத் அரசாங்க தூதராகப் பணியாற்றினார்.

அதிகார வெறிக்கு ஆளாகிவிட்டார் போலும் என்று நான் குறிப்பிட்டேன். ''இப்போது எனக்கு மனக்கசப்பு ஏற்பட்டிருக்கிறது எனினும் எந்தக் காரியத்தையும் லெனின் சொந்த நோக்கங்களால் தூண்டப்பட்டுச் செய்திருப்பார் என்று என்னால் நினைக்கவே முடியவில்லை. தோழர் லெனினுடன் பத்து ஆண்டுகள் வேலை செய்துள்ள தோழர்களில் எவரும் அவரிடம் சுயநலம் துளிக்கூட இருப்பதாக நம்ப முடியாது'' என்று பதிலளித்தார் கொலன்தாய்.

5. கம்யூனிஸ நடைமுறை மக்களை சோவியத்துக்கள் தரப்பில் ஒன்றுதிரட்டுகிறது

பூர்ஷ்வா வெளியீடுகளில் லெனின் இதற்கு நேர் எதிராகவே சித்திரிக்கப்பட்டார். கொடும் பேயின் அவதாரம், தன்னலம் படைத்த, எல்லாவற்றையும் பறித்துக் கொள்ளும் அரக்கர் என்றே அவர் வருணிக்கப்பட்டார். எனினும் பொய்களின் இந்தப் போர்வைக்கு உள்ளிருந்து உண்மை லெனின் கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்பட்டார். லெனினும் அவரது கூட்டாளிகளும் மக்களுடன் அற்ப உணவைப் பகிர்ந்துகொள்கிறார்கள் என்ற செய்தி ருஷ்யாவில் பரவியதும் வெகுஜனங்கள் அவர்கள் தரப்பில் ஒன்று திரண்டுவிட்டார்கள்.

தனது அற்ப ரேஷனைப் பற்றி முணுமுணுக்க விரும்பும் உரால் பிரதேசச் சுரங்கத் தொழிலாளி, உணவு, துணிமணி, இருப்பிடம் ஆகியவற்றின் பொதுச் சேமிப்பிலிருந்து ஒவ்வொருவரும் சமபங்கே பெறுகிறார் என்பதை நினைவுபடுத்திக்கொள்கிறான். அப்படியிருக்கையில் தனது கறுப்பு ரொட்டித் துண்டைக் குறித்து அவன் முணுமுணுப்பானேன்? என்ன ஆனாலும் இந்த ரொட்டித் துண்டு அளவில் லெனினுக்குக் கிடைப்பது போன்றதே தான். பட்டினி வேதனையுடன் அநீதியால் உண்டாகும் எரிச்சலூட்டும் வேதனையும் சேர்ந்துகொள்வதில்லை.

வோல்கா ஆற்றிலிருந்து வீசும் கடுங்குளிர் காற்றில் விறைத்து நடுங்கும் குடியானவப் பெண்ணுக்கு ஜாரின்

இடத்திற்கு வந்துள்ள மனிதர் பற்றி அனேகமாக ஒன்றும் தெரியாது. ஆனல் அடிக்கடி அவர் வெப்பமூட்டப் பெருத அறையிலேயே வேலை செய்கிருர் என்று அவள் கேள்விப்படுகிருள். இப்போது அவள் குளிரால் வருந்திஞலும் வாழ்க்கையின் ஏற்றத்தாழ்வுகளால் துன்புறுவதில்லை.

நீஷ்னிய் நகரத்து எஞ்சினீயர் அறுநூறு ரூபிள் மாதச் சம்பளம் தன் குடும்பத்தின் தேவைகளைப் பூர்த்திசெய்ய அறவே போதாது என்பதைக் கண்டு மனக் கசப்பு அடையத் தொடங்குகிருன். கிரெம்ளினில் உள்ள மனிதர் இதைவிட அதிகச் சம்பளம் பெறுவதில்லை என்பது அப்புறம் அவன் நினைவுக்கு வருகிறது. இந்த எண்ணத்தால் அவனது குரோதம் அகன்றுவிடுகிறது.

நேசநாட்டினரின் பீரங்கிக் குண்டுகளுக்கு எதிர் நிற்கும் சோவியத் படைவீரன், பின்னணியில் இருந்தபோதிலும் லெனினும் குண்டுத் தாக்குக்கு எதிர்நிற்கிருர் என்பதை அறிவான். ஏனெனில் ருஷ்யாவில் மற்ற எல்லாவற்றையும் போலவே அபாயமும் சமூக உடைமை ஆக்கப்பட்டுவிட்டது. அதனல் பாதிக்கப்படாதவர் ஒருவரும் இல்லை. பின்னணியில் கொல்லவும் காயப்படுத்தவும் பட்ட சோவியத் தலைவர்களின் சதவிகிதம் முனைமுகத்தில் கொல்லவும் காயப்படுத்தவும் பட்ட சோவியத் படைவீரர்களின் சதவிகிதத்தை விஞ்சிவிட்டது. லெனினது உடலில் கொலைகாரர்களின் குண்டுகள் இரு முறை பாய்ந்திருக்கின்றன. உரீத்ஸ்கியும்* வொலதார்ஸ்க்கியும் டஜன் கணக்கான மற்றவர்களும் கொலை செய்யப்பட்டார்கள். எனவே செம்படை வீரனின் கண்களுக்கு லெனின் போரிலிருந்து ஒதுங்கித்

---

*உரீத்ஸ்கிய், மி. ஸெ. (1873-1918)—அக்டோபர்ப் புரட்சியில் ஊக்கத்துடன் பங்காற்றியவர். பெத்ரோகிராத் ச்செக்காவின் (புரட்சி எதிர்ப்பு, மறைமுக நாசவேலை, கள்ள வியாபாரம் ஆகியவற்றை ஒடுக்குவதற்கான அகில ருஷ்யக் கமிஷன்) தலைவர் என்ற முறையில் பிற்போக்கை எதிர்த்துத் தீர்மானமான போராட்டம் நடத்திஞர். 1918, ஆகஸ்ட் 30ந் தேதி புரட்சி எதிர்ப்பாளர்களால் கொல்லப்பட்டார்.

தனிமையில் வாழ்பவர் அல்ல, போராட்ட நடவடிக்கையின் ஆபத்துக்களையும் கஷ்டங்களையும் பகிர்ந்துகொள்ளும் முன்னணித் தோழர் எனவே படுகிறார்.

புல்லிட் என்பவரால் தயாரிக்கப்பட்ட, ருஷ்யாவுக்குச் சென்ற அமெரிக்க தூதுகோஷ்டியின் அறிக்கை பின்வருமாறு கூறுகிறது:

''இன்று லெனின் அநேகமாகத் தீர்க்கதரிசியாகவே மதிக்கப்படுகிறார். வழக்கமாகக் கார்ல் மார்க்ஸின் படத்தோடுகூட அவருடைய படம் எங்கும் தொங்குகிறது. நான் லெனினைக் காணச் சென்ற போது, குடியானவர்களின் பிரதிநிதிக் குழு ஒன்று அவருடைய அறையிலிருந்து வெளியேறும் வரை நான் சில நிமிடங்கள் காத்திருக்க நேர்ந்தது. தோழர் லெனின் பட்டினி கிடப்பதாக அவர்கள் தங்கள் கிராமத்தில் கேள்விப்பட்டார்களாம். லெனினுக்கு கிராமத்தின் பரிசாக எண்ணூறு 'பூட்'* தானியத்தை எடுத்துக்கொண்டு நூற்றுக்கணக்கான மைல்கள் பயணம் செய்து அவர்கள் வந்திருந்தார்கள். அவர்களுக்குச் சற்று முன்னர் குடியானவர்களின் இன்னொரு பிரதிநிதிக் குழு லெனினிடம் வந்திருந்ததாம். தோழர் லெனின் வெப்பமூட்டப் பெறாத அறையில் வேலை செய்வதாக அவர்கள் கேள்விப்பட்டார்களாம். ஒரு கணப்பையும் அதை மூன்று மாதங்கள் சூடுபடுத்தப் போதுமான விறகையும் எடுத்துக்கொண்டு வந்தார்களாம் அவர்கள். இம்மாதிரிப் பரிசுகள் பெறும் ஒரே தலைவர் லெனின் மட்டுமே. அவர் அவற்றைப் பொதுச் சேமிப்பில் சேர்த்துவிடுகிறார்.''

பொதுச் செல்வத்தையும் பொது வறுமையையும் ஒரே மாதிரிப் பகிர்ந்துகொண்டது முதலமைச்சரிலிருந்து பரம ஏழைக் குடியானவன் வரையில் அனுதாபம் என்ற பொது உறவை ஏற்படுத்திவிட்டது. இதனால் சோவியத் தலைவர்களுக்கு மக்களின் ஆதரவு மேலும் மேலும் அதிகமாகக் கிடைத்தது.

---

*பூட் என்பது 16.38 கிலோகிராம் கொண்ட ருஷ்ய எடை.—(மொ-ர்)

6. கம்யூனிஸ நடைமுறை மக்களின் நாடித்துடிப்பை அறிய லெனினுக்கு உதவுகிறது

மக்களுக்கு அவ்வளவு அருகில் வாழ்ந்தமையால் கம்யூனிஸ்ட் தலைவர்கள் பொதுஜன உணர்ச்சியின் ஏற்றத்தையும் வற்றத்தையும் அறிந்திருந்தார்கள்.

மக்களின் உணர்ச்சிகளையும் மனப்பாங்கையும் அறிவதற்காக ஒரு விசாரணைக் குழுவை அனுப்புவது லெனினுக்குத் தேவைப்படவில்லை. உணவில்லாமல் சமாளிக்கும் மனிதன் பசித்த மனிதனின் மனநிலையை வெறுமே ஊகிக்க வேண்டியது இல்லையே. அவன் இதை அறிவான். மக்களுடன் சேர்ந்து பட்டினி கிடந்து, மக்களுடன் சேர்ந்து குளிரால் விறைத்த லெனின் அவர்களுடைய உணர்ச்சிகளை உணர்ந்தார், அவர்களுடைய எண்ணங்களை எண்ணினார், அவர்களுடைய விருப்பங்களை வெளியிட்டார்.

இந்த முறையிலேயே, அதாவது, பொது மக்களின் எண்ணங்களை நேரடியாகப் பிரதிபலிக்கும் சாதனமாகவும் அவற்றை வெளியிடும் ஒலிக்கருவியாகவுமே, தான் செயல்படுவதாகக் கம்யூனிஸ்ட் கட்சி உரிமை கொண்டாடுகிறது.

கம்யூனிஸ்டுகள் சொல்கிறார்கள்: ''சோவியத்துக்களை நாங்கள் உண்டாக்கவில்லை. மக்களின் வாழ்க்கையிலிருந்து அவை தாமே உதித்தன. நாங்கள் ஒரு செயல்திட்டத்தை எங்கள் மூளையில் உருவாக்கி, பிறகு அதை வெளியில் எடுத்து மக்கள் மேல் ஒட்டிவைக்கவில்லை. மாறாக நேரே மகக்ளிடமிருந்தே நாங்கள் எங்கள் செயல்திட்டத்தை எடுத்துக் கொண்டோம். 'நிலம் குடியானவர்களுக்கு', 'தொழிற்சாலைகள் தொழிலாளர்களுக்கு', 'சமாதானம் உலகம் முழுவதற்கும்' என்று மக்கள் கோரிவந்தார்கள். இந்தக் கோஷங்களை எங்கள் பதாகைகள் மீது பொறித்துக்கொண்டு மக்களுடன் சேர்ந்து அணிநடை நடந்து அதிகாரப்பீடத்தில் அமர்ந்தோம். மக்களைப் புரிந்துகொள்வதில்தான் எங்கள் வலிமை அடங்கியுள்ளது. உண்மையில் நாங்கள் மக்களைப் புரிந்து கொள்ள வேண்டியதில்லை. நாங்களேதாம் மக்கள்''. இது சாதாரணத் தலைவர்களின் விஷயத்தில் நிச்சயமாக உண்

மை. பெத்ரோகிராதில் நாங்கள் முதன் முதல் சந்தித்த ஐந்து கம்யூனிஸ்டுகள் போலவே இவர்கள் மக்களின் உடலும் உயிருமாகத் திகழ்ந்தார்கள்.

ஆனல் லெனின் போன்ற அறிவாளிகளோ? அவர்கள் எப்படி மக்களின் பெயரால் பேச முடியும்? வெகுஜனங்களின் உணர்ச்சிகளையும் சிந்தனைகளையும் அவர்கள் எப்படிப் புரிந்துகொள்ள முடியும்? அவர்களால் முடியவே முடியாது என்பதுதான் இதன் பதில். இதில் சந்தேகமே இல்லை. ஆனல் இன்னெரு விஷயமும் இவ்வளவே நிச்சயமானது. தல்ஸ்த்தோய்* காட்டியதுபோல, மக்களின் வாழ்க்கையை வாழ்பவன் மக்களுடைய போராட்டங்களிலிருந்து தனித்து ஒதுங்கியிருப்பவனைவிட அவர்களை நெருங்கி அறிகிருன் என்பதே அது. ஆகவே தமது எதிரிகளுக்கு இல்லாத ஒரு பெரிய நல்வாய்ப்பு லெனினுக்குக் கிடைத்திருந்தது. உரால் பிரதேசச் சுரங்கத் தொழிலாளி, வோல்கா பிரதேசக் குடியானவன், அல்லது சோவியத் படைவீரனுடைய உணர்ச்சிகளை அவர் வெறுமே அனுமானிக்க வேண்டியிருக்கவில்லை. அவர் அவற்றை அறிந்திருந்தார்—ஓரளவு ஏறத்தாழவாவது, நிச்சயமாக. ஏனெனில் அவர்களுடைய அனுபவங்கள் அவருடைய அனுபவங்களும் ஆகும். எனவே, எதிரிகள் இருட்டில் தட்டித் தடவிக்கொண்டிருந்தபோது, லெனின் விஷயத்தை நன்கு அறிந்தவருக்கு உரிய நிச்சயத்துடன் விரைவாக முன்னேறினர்.

சோவியத் தலைவர்களால் கம்யூனிஸம் நடைமுறையில் மேற்கொள்ளப்பட்டது சோவியத் அரசாங்கத்துக்கு ஆதரவாக வலிமையைத் திரட்டுவதற்கான விறல்மிக்க காரணிகளில் ஒன்ருகும். ருஷ்யாவுக்கு வெளியே இந்த உண்மை ஒன்று கவனிக்காமல் விடப்பட்டது, அல்லது குறைத்து மதிப்பிடப்பட்டது. ஆனல் லெனின் இதைக் குறைத்து மதிப்பிடவில்லை. கம்யூனிஸத்தை நடைமுறையில் மேற்கொள்வதே பாட்டாளி வர்க்க ராஜதந்திரிகள் கடைப்

---

*தல்ஸ்தோய், லே. நி. (1828-1910)—மாபெரும் ருஷ்ய எழுத்தாளர்.

பிடிக்க வேண்டிய ஒரே உண்மையான வழி என்பதை அவர் அரசும் புரட்சியும் என்ற நூலில் விளக்கியிருக்கிறார். இது கடினமான வழி. இதைப் பின்பற்றுவோர் அரிதாகச் சிலரே.

7. பொதுக்கூட்டச் சொற்பொழிவில் லெனின்

இரவு பகல் இடைவிடாத இந்தக் கடும் சோதனையின் கஷ்ட நஷ்டங்கள் இருப்பினும் லெனின் ஓயாமல் பொதுக் கூட்ட மேடைகளில் தோன்றிப் பேசிவந்தார். அவரது பேச்சுக்கள் இரத்தினச் சுருக்கமானவை, அறிவு விழிப்பு சுடர்பவை, நிலைமைகளைக் காரணங்காட்டி விளக்குபவை, பரிகாரங்களைக் குறிப்பவை, அவற்றைக் கையாளும் பொருட்டுக் கேட்போரைச் செயலுக்குத் தூண்டி அனுப்புபவை. கல்வியறிவற்ற வர்க்கத்தினரிடையே லெனினது சொற்பொழிவுகள் ஏற்படுத்திய உற்சாகத்தைக் கண்டு பார்வையாளர்கள் வியப்படைந்தார்கள். லெனினது உரைகள் விரைவாக, தடையின்றிப் பெருகும். புள்ளி விவ்ரங்கள் அவற்றில் ஏராளமாக நிறைந்திருக்கும். ஆனால் அவரது மேடைத் தோற்றம் போலவே அவரது உரைகள் பொதுவாக வண்ணக் கவர்ச்சியோ காவிய வனப்போ அற்றவையாக இருந்தன. அவற்றை மனத்தில் வாங்கிக் கொள்வதற்கு இடையரு‌த சிந்தனை தேவைப்பட்டது. கேரென்ஸ்கியின் உரைகளுக்கு நேர் மாருக இருந்தன அவை. கேரென்ஸ்கிய் தோற்றக் கவர்ச்சி உள்ளவர், சொல்வன்மை மிக்க பேச்சாளர், மேடைப் பிரசங்கிக்கு உரிய கலை நுட்பங்களும் ஆவேசங்களும் அவருக்குக் கைவந்தவை. ''அஞ்ஞானிகளும் எழுத்தறியாதவர்களுமான ருஷ்யர்களை'' இந்தப் பண்புகள் யாவும் ஒரேயடியாக ஆட்கொண்டிருக்க வேண்டும் என்று நினைக்கத் தோன்றும். உண்மையிலோ, ருஷ்ய மக்கள் கேரென்ஸ்கியால் வசீகரிக்கப்படவில்லை. ருஷ்ய இயல்பில் உள்ள இன்னொரு முரண்பாடு இது. இந்தத் தேர்ந்த மேடைப் பிரசங்கியின் பகட்டான வாக்கியங்களையும் இரத்தினக் கச்சிதமான இடைநிறுத்தங்களையும் பொது மக்கள் கேட்

டார்கள். அப்புறம் எதிர்த் திசையில் திரும்பி லெனினுக்கு, நூலறிவும் தர்க்கமுறையும் அளவார்ந்த சிந்தனையும் கோட்பாட்டுக்கு இயைந்த பேச்சும் வாய்ந்த லெனினுக்குத் தங்கள் விசுவாசத்தை அளித்தார்கள்.

தர்க்க இயலிலும் வாக்குவாதத்திலும் லெனின் தேர்ந்த நிபுணர். விவாதத்தில் அவரது பதற்றமின்மை எதிர்க் கட்சியினருக்கு எரிச்சலூட்டுவது. விவாதத்தில் அவரது திறமை உச்ச கட்டத்தை எட்டிவிடும். ஓல்கின்* சொல்லுகிறார்: ''லெனின் எதிரிக்குப் பதில் அளிப்பதில்லை. எதிரியின் வாதங்களைக் கூறுபோடுகிறார். மழிப்புக் கத்தி முனைபோலக் கூர்மையானவர் அவர். அவருடைய அறிவு வியப்பூட்டும் நுண்மையுடன் செயல்படுகிறது. வாதப் போக்கில் உள்ள எல்லாப் பிழைகளும் அவருக்குப் 'புலனாகி விடுகின்றன. தமக்கு ஏற்பில்லாத முதனிலைகளை அவர் நிராகரிக்கிறார், அவற்றிலிருந்து மிக மிக அபத்தமான முடிவுகளைப் பெறுகிறார். அதே சமயம் அவர் கிண்டலும் செய்கிறார். தமது எதிரியை அவர் எள்ளி நகையாடுகிறார். விளாசுகிறார். தமது தாக்குதலுக்கு உள்ளானவன் அறிவிலி, மடையன், அகந்தை மிக்க அநாமதேயம் என்று கேட்பவர்களுக்குப் படும்படி செய்துவிடுகிறார். அவருடைய தர்க்கத்தின் ஆற்றல் கேட்பவர்களை ஆட்கொண்டுவிடுகிறது. அவருடைய அறிவு ஆவேசம் கேட்பவர்களை வசப்படுத்தி விடுகிறது.''

வாதத்தின் விரைந்த போக்கில் ஓரளவு இடையீடு அளிப்பதற்காக அவர் சிற்சில சமயங்களில் சிறிது நகைச் சுவையைக் கையாள்கிறார், அல்லது பின்வருவது போன்ற சுருக்கென்று தைக்கும் பதிற் சொற்களைப் பாய்ச்சுகிறார்: ''தோழர் காம்கோவின் கேள்விகள், 'பத்து அறிவாளிகள் விடை அளிக்க முடிவதைவிட அதிகமான கேள்விகளை

---

*ஓல்கின் என்பது மி. நி. நொவொமேய்ஸ்க்கியின் புனைபெயர். அவர் கட்டுரையாளர். 1914ல் அவர் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் சென்று சோவியத் யூனியனைப் பற்றிப் பல கட்டுரைகளும் நூல்களும் எழுதினார்.

ஒரு மடையனல் கேட்க முடியும்' என்ற மூதுரையை எனக்கு நினைவுபடுத்துகின்றன.'' போல்ஷெவிக் பத்திரிகை எழுத்தாளர் ராதேக் என்பவர் ஒரு முறை லெனினைப் பார்த்து,'' பெத்ரோகிராதில் ஐந்நூறு தைரியசாலிகள் இருப்பார்களேயானல் நாங்கள் உங்களைச் சிறைக்கு அனுப்பி விடுவோம்'' என்று கூறிய போது லெனின் அமைதியாகப் பின்வருமாறு விடையிறுத்தார்: ''சில தோழர்கள் சிறை செல்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனல் வாய்ப்புக் கூறுகளை நீங்கள் கணக்கிட்டால் நீங்கள் என்னைச் சிறையில் இடுவதைவிட நான் உங்களைச் சிறையில் இடுவதே அதிகச் சாத்தியமானது என்பதைக் காண்பீர்கள்.'' சில வேளைகளில் அவர் புதிய அமைப்புக்கு விளக்கம் தரும் சாதாரண நிகழ்ச்சி ஒன்றை விவரிப்பார்: குடியானவக் கிழவி நிலச்சுவான்தாரின் காட்டில் விறகு சேகரித்துக் கொண்டிருக்கிருள். புதிய காலப் படைவீரனே அவளைக் கொடுமைப் படுத்துபவனுக இன்றி அவளது காவலனுகப் பணியாற்று கிருன்.

துன்ப அனுபவம், நிகழ்ச்சிகளின் அழுத்தம் ஆகியவை காரணமாக இந்த மனிதருக்குள் மறைந்திருக்கும் ஆவேசக் கனலும் உணர்ச்சிப் பெருக்கும் வழக்கமான கட்டுப்பாட்டை உடைத்துக்கொண்டு வெளிப்பட்டுவிட்டன போலத் தோன்றியது. ஒரு பெரிய பொதுக்கூட்டத்தில் லெனின் ஓரளவு தயக்கமும் சிக்கலும் நிறைந்த வாக்கியங்களுடன் உரையைத் தொடங்கியதாகவும், உரை ஓரளவு தொடர்ந்த பிறகு அதிகத் தெளிவாக விளங்கும் வகையில் பேசினுர் என்றும் அண்மையில் அவரது பேச்சைக் கேட்ட ஒருவர் கூறினுர். லெனின் மேலும் மேலும் ஆற்றெழுக்காகவும் துடிதுடிப்புடனும் பேசத் தொடங்கினுராம். வெளிப்படையான பிரயாசை மிகுதியாக இன்றி, மேலும் மேலும் அதிகரிக்கும் உள்கிளர்ச்சியுடன் அவர் உரையாற்றினுராம், அது வர வர அதிகப் பாதிப்பு விளைத்ததாம். ''கட்டுக்கு அடங்கிய ஒரு வகை உணர்ச்சிக் கனிவு அவரது ஆன்மாவில் ஊடுருவிப் பரவிற்று. அவர் பல சைகைகள் செய்தார், சில அடிகள் பின்னும் முன்னுமாக நடந்த வண்ணமாக

இருந்தார். மிகுந்த ஆழமான, ஒழுங்கற்ற சுருக்கங்கள் அவரது நெற்றியில் ஏற்பட்டன. மிகத் தீவிரமான ஆழ்ந்த சிந்தனையை, அனேகமாகத் துன்புறுத்தும் மூளை உழைப்பைக் காட்டின இவை'' என்று விவரித்தார் மேற்குறித்த அன்பர். லெனின் முதன்மையாக அறிவையே தமது இலக்காகக் கொண்டார், உணர்ச்சிகளை அல்ல. எனினும் கேட்டவர்கள்மீது அவரது சொற்கள் ஏற்படுத்திய பாதிப்பிலிருந்து வெறும் அறிவுத்தன்மையின் உணர்ச்சி ஆற்றலை நாம் காண முடிந்தது.

ஒரே ஒரு தடவைதான் அவரது சொற்பொழிவு கேட்போருக்கு உற்சாகமூட்டாததை நான் கண்டேன். இது நடந்தது டிசம்பரில், மிஹாய்லவ்ஸ்க்கிய் குதிரையேற்றப் பயிற்சி மண்டபத்தில், புதிய செஞ்சேனையின் முதல் பிரிவு போர்முனைக்குப் புறப்பட்ட தறுவாயில். கொழுந்து விட்டெரியும் தீவத்திகள் மண்டபத்தின் அகன்று பரந்த உள்புறத்தில் ஒளி பரப்பின. நீண்ட வரிசைகளாக நின்ற கவச மோட்டார்கள் அவற்றின் பிரகாசத்தில் ஏதோ விந்தையான தொடக்ககால விகிருதிகள் போன்று தோற்றம் அளித்தன. புதிய படைவீரர்கள் விசாலமான அரங்கில் நெடுகிலும் மொய்த்திருந்தார்கள், மோட்டார்கள்மேல் தொற்றிக் கொண்டிருந்தார்கள். அவர்களிடம் ஆயுத சாதனங்கள் குறைவாகவே இருந்தன. ஆனால் புரட்சி ஆவேசத்தில் அவர்கள் வலிமை மிக்கிருந்தார்கள். உடம்பில் சூடேற்றிக் கொள்வதற்காக அவர்கள் நடனமாடினார்கள், தரையில் கால்களை அடித்துக் கொண்டார்கள். உற்சாகம் பெறுவதற்காகப் புரட்சி கீதங்களையும் நாடோடிப் பாடல்களையும் பாடினார்கள்.

பெருத்த ஆரவாரம் லெனினது வருகையை அறிவித்தது. பெரிய கார்களில் ஒன்றில் ஏறி நின்றுகொண்டு அவர் பேசத் தொடங்கினார். அரை இருளில் கூட்டத்தினர் ஏறிட்டு நோக்கிக் கவனமாகக் கேட்கலாயினர். ஆனால் அவருடைய சொற்கள் அவர்களைத் தூண்டி ஊக்கவில்லை. கரகோஷத்துக்கிடையே அவர் பேச்சை முடித்தார். எனினும் வழக்கமான உற்சாக ஆரவாரத்துக்கும் இந்தக் கரகோஷத்துக்கும்

வெகு தூரம். அன்று அவரது பேச்சு உப்புசப்பற்றதாக இருந்தது. உயிர் வழங்குவதற்காகச் செல்லவிருந்த மனிதர்களின் மனநிலைக்கு அது ஏற்றதாக இல்லை. கருத்துக்கள் சாதாரணமாக இருந்தன, சொற்கள் வீரியமற்றிருந்தன. அவருடைய உணர்ச்சியின்மைக்குக் காரணங்கள் இருந்தன. மட்டுமீறிய உழைப்பும் வேறு விஷயங்களில் அவர் மனம் ஈடுபட்டிருந்ததுமே இவை. எனினும் முக்கியமான ஒரு சந்தர்ப்பத்தில் லெனின் பொருளாழம் அற்ற உரை ஆற்றினார் என்ற உண்மை இந்தக் காரணங்களால் மாறிவிடவில்லை. இந்த உழைப்பாளிகள் இதை உணர்ந்தார்கள். ருஷ்யப் பாட்டாளிகள் கண்மூடித்தனமான வீரவழிபாட்டினர் அல்ல. புரட்சியின் பாட்டனாரும் பாட்டியாரும் கண்டறிந்ததுபோல, பழைய அருஞ்செயல்களையும் மதிப்பையும் கொண்டே ஒருவர் காலந்தள்ள முடியாது. ஒருவர் இப்போது தாம் வீரர் என்று செயலில் நிரூபிக்காவிட்டால் வீரருக்கு உரிய புகழ்ச்சியை அவர் பெற முடியாது.

லெனின் காரிலிருந்து இறங்கியதும், ''ஒரு அமெரிக்கத் தோழர் உங்கள்முன் பேசுவார்'' என்று பொத்வோய்ஸ்க்கிய் அறிவித்தார். கூட்டம் உன்னிப்பாகக் கவனிக்கலாயிற்று. நான் அந்தப் பெரிய காரில் ஏறிக்கொண்டேன்.

''அப்படியா, நல்லது. நீங்கள் ஆங்கிலத்தில் பேசுங்கள். என்னை மொழி பெயர்க்கவிடுங்கள்'' என்றார் லெனின்.

''வேண்டாம், நான் ருஷ்ய மொழியில் பேசுகிறேன்'' என்று ஏதோ யோசனையற்ற உந்தலால் தூண்டப்பட்டு நான் பதில் அளித்தேன்.

ஏதோ வேடிக்கையை எதிர்பார்ப்பவர் போலப் பளிச்சிடும் கண்களுடன் லெனின் என்னை நோக்கினார். விரைவிலேயே வேடிக்கை தொடங்கிவிட்டது. முன்கூட்டித் தயாரித்துக்கொண்ட தொடக்க வாக்கியங்களைப் பேசித் தீர்த்தபின் நான் தயங்கினேன், பேச்சை நிறுத்தினேன். மறுபடி ருஷ்ய மொழியில் பேச்சைத் தொடர்வதில் எனக்குச் சிரமம் ஏற்பட்டது. வெளிநாட்டினர் தங்கள் மொழியை என்னதான் சித்திரவதை செய்தாலும் ருஷ்யர்கள் மரியாதையைக் கடைப்பிடித்தவாறு சகித்துக்கொள்வது



வி. இ. லெனின் 'வ்ஸேவோபுச்' (அனைத்து மக்கள் இராணுவப் பயிற்சி) அணிவகுப்பைப் பார்வையிடுகிறார். 1917, மே

வழக்கம். கற்றுக்குட்டியின் முறையைப் பாராட்டாவிடினும் அவனது முயற்சியை அவர்கள் மதிப்பார்கள். எனவே எனது பேச்சுக்கு நடு நடுவே கைதட்டல்கள் நீண்ட அவகாசங்கள் ஏற்படுத்தின. இன்னும் சிறிது தூரம் முன்னேறுவதற்குத் தேவையான சொற்களைக் கோவைப்படுத்திக் கொள் வதற்கு ஒவ்வொரு கைதட்டலின் போதும் எனக்கு நேரம் கிடைத்தது. பெருத்த நெருக்கடி எதிர்ப்பட்டால் நானே செஞ்சேனையில் படைவீரனுகச் சேர உவப்புடன் முன்வரு வேன் என்று சொல்ல நான் விரும்பினேன். நான் ஒரு சொல் லுக்காகத் தட்டித் தடவியவாறு தயங்கினேன். லெனின் என்னைப் பார்த்து, ''என்ன வார்த்தை உங்களுக்கு வேண் டும்?'' என்று கேட்டார். ''படைவீரனுகச் சேர'' என் றேன். ''வ்ஸ்துப்பீத்'' என்று அவர் சொல்லிக் கொடுத் தார்.

அதன் பிறகு எனக்குத் தடங்கல் ஏற்பட்ட போதெல் லாம் லெனின் தேவையான சொல்லை என்னிடம் வீசு வார், நான் அதைப் பிடித்து, எனது அமெரிக்க ஒலியழுத்தத் திஞல் சிதைத்துத்தான் என்ருலும், கூட்டத்தினர் மீது எறிவேன். இந்த விஷயமும், தாங்கள் வெகுவாகக் கேள்விப் பட்டிருந்த சர்வதேசீயத்தின் பருமைபெற்ற சின்னமாக நான் அங்கே நின்றதும் சிரிப்புப் புயல்களையும் கைதட்டல் இடி முழக்கங்களையும் கூட்டத்தினரிடையே ஏற்படுத் தியது. இவற்றில் லெனினும் மனப்பூர்வமாகக் கலந்து கொண்டார்.

''நல்லது, ருஷ்ய மொழியில் இது தொடக்கம், வேறென் றும் இல்லாவிட்டாலும். ஆனல் நீங்கள் இதில் முனைந்து பாடுபடவேண்டும்'' என்ருர் அவர். பின்பு பெஸ்ஸி பீட்டி யை* நோக்கி, ''நீங்களும் ருஷ்ய மொழி கற்க வேண்டும்.

---

*பெஸ்ஸி பீட்டி—அமெரிக்கப் பத்திரிகை எழுத்தாளி மாது. 1917ம் ஆண்டுப் புரட்சியின்போது அவள் ருஷ்யா வில் இருந்தாள். ருஷ்யாவின் செவ்விதயம் என்ற நூலையும் அக்டோபர்ப் புரட்சி பற்றிய பல கட்டுரைகளையும் எழு திஞள்.

பரிமாற்றுப் பாடங்கள் கோரிச் செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யுங்கள். அப்புறம் ருஷ்ய மொழியில் மட்டுமே படியுங்கள், எழுதுங்கள், பேசுங்கள். அமெரிக்கர்களுடன் பேசாதீர்கள். அதனுல் எவ்வகையிலும் எந்த நன்மையும் உங்களுக்கு உண்டாகாது'' என்று வேடிக்கையாகச் சொல்லிவிட்டு, ''அடுத்த தடவை உங்களைப்பார்க்கும் போது பரீட்சை நடத்துவேன்'' என்ருர்.

8. லெனினை இடைவிடாது சூழ்ந்திருந்த ஆபத்து

அவர் குறிப்பிட்ட அடுத்த தடவை வராமலே போய் விடும் போன்ற நிலைமை அநேகமாக ஏற்பட்டது. லெனின் ஏறியிருந்த கார் மண்டபத்திலிருந்து வெளியே வந்ததும் மூன்று தெளிவான வெடியோசைகள் ஒலித்தன. மூன்று குண்டுகள் அவருடைய காரை உடைத்து உள்புகுந்தன. லெனினுடன் அதே ஆசனத்தில் உட்கார்ந்திருந்த சுவிட்ஸர்லாந்துப் பிரதிநிதி பிளாட்டனை* ஒரு குண்டு காயப் படுத்தியது. எவனே கொலைகாரன் பக்கத்துத் தெருவிலிருந்து குறிவைத்தான், தவறிவிட்டான்.

போல்ஷெவிக் தலைவர்கள் உயிரை இழக்கும் அபாயத்தால் எப்போதும் சூழப்பட்டிருந்தார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. பூர்ஷ்வாச் சூழ்ச்சியாளர்களின் கவனத்துக்கு முதன்மையாக உரியவராக இருந்தவர் இயல்பாகவே லெனின் தாம். அவரது ஊக்கமுள்ள மூளையிலேயே தங்கள் அழிவுக்கான திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன என்று

---

*பிளாட்டன், பி. — சுவிட்ஸர்லாந்தின் இடதுசாரி சோஷலிஸ்ட், பின்னர் கம்யூனிஸ்ட். 1905ல் ரீகாவில் புரட்சி வேலை செய்தார், ருஷ்யப் புரட்சி இயக்கத்தில் பொதுவாகவே ஊக்கத்துடன் பங்காற்றினுர். 1912-18ல் அவர் சுவிஸ் சோஷலிஸ்ட் கட்சிச் செயலாளராக இருந்தார். 1917, வசந்த காலத்தில் சுவிட்ஸர்லாந்திலிருந்து ருஷ்யாவுக்கு லெனினது பயணத்துக்கு ஏற்பாடு செய்தார். சுவிஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவராக இருந்தார்.

அவர்கள் சொன்னார்கள். அந்த மூளையை ஓயச் செய்வதற்கு ஒரு குண்டு கிடைக்காதா! இதுவே புரட்சி விரோதிகளின் வீடுகளிலிருந்த பலிபீடங்களிலிருந்து நாள்தோறும் உள மாரச் செய்யப்பட்ட பிரார்த்தனை.

மாஸ்கோவில் இத்தகைய ஒரு வீட்டில் நாங்கள் அளவு மீறிய விருந்தோம்பலுடன் எப்போதும் வரவேற்கப்பட்டோம். பெரிய சாப்பாட்டு மேஜைமீது ஆவி உமிழும் ஸமோவார் வைக்கப்பட்டிருக்கும். பழங்களும் கொட்டைப் பருப்புக்களும், மதிமயங்கச் செய்யும் பணியார வகைகளும் ஆர்தர் ரான்ஸம்* ''மிட்டாய்கள்'' என அழைத்த, அவருக்கு மிக விருப்பமான தின்பண்டங்களும் மேஜை மேல் குவிந்திருக்கும். யுத்தத்தால் இந்தவீட்டாருக்கு மிகுந்த நலம் விளைந்தது. கள்ள வியாபாரத்தின் எல்லாக் கிளைகளும், இரகசிய வழியாக ஜெர்மனிக்குச் சரக்குகளை அனுப்புவதும், பிரமாண்டமான அளவில் நேர்த்தியாகக் கொள்ளைலாபம் அடிப்பதும் இந்தக் குடும்பத்தினரைச் செல்வச் சீமான்கள் ஆக்கியிருந்தன. திடீரென எங்கிருந்தோ வந்து குதித்தார்கள் போல்ஷெவிக்குகள், இந்தக் குடும்பத்தினரின் செல்வச் செழிப்பினது அஸ்திவாரத்தையே இடித்துப் பெயர்த்தவாறு. அவர்கள் போருக்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்பினார்கள். அவர்களோடு வாதாடிப் பயனே இல்லை. காட்டுத்தனமான பைத்தியக்காரப் பயல்கள்! எல்லாவற்றுக்கும், கள்ள வியாபாரம், கொள்ளை லாபம், எல்லாவற்றுக்குமே முற்றுப்புள்ளி வைக்க விரும்பினார்கள் அவர்கள்! இதைத் தவிர்க்கும் ஒரே வழி அவர்களுக்கே முற்றுப்புள்ளி வைப்பதுதான். கழுவிலேற்று அவர்களை! சுட்டுத் தள்ளு! உச்சியில் லெனினிலிருந்து தொடங்கு.

முன்னேறிக் கொண்டிருந்த இந்த மாஸ்கோக் கள்ள வியாபாரி இளைஞன் ஆழ்ந்த முறையில் எனக்கு அறிவித்தான்: 'லெனினைக் கொல்லும் மனிதனுக்குக் கொடுப்பதற்

---

*ஆர்தர் ரான்ஸம்—பிரிட்டிஷ் லிபரல் பத்திரிகை ஒன்றின் நிருபர். சோவியத் ருஷ்யாவில் ஆறு வாரங்கள் என்ற நூலை எழுதியவர்.

காகப் பத்து லட்சம் ரூபிள்கள் இந்த நிமிடத்தில் என்னிடம் இருக்கின்றன. இந்தக் காரியத்துக்காகத் தலைக்குப் பத்து லட்சம் ரூபிள்கள் ஒதுக்கி வைத்திருக்கும் இன்னும் பத்தொன்பது பெயரை நாளைக்கே நான் பிடிக்க முடியும்.''

தாம் எத்தகைய அபாயத்தில் இருக்கிறார் என்பது லெனினுக்குத் தெரியுமா என்று எங்கள் போல்ஷெவிக் நண்பர்கள் ஐவரைக் கேட்டோம். ''ஆமாம், அவருக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அவர் கவலைப்படுவதில்லை. சொல்லப்போனால் எதற்குமே அவர் உண்மையில் கவலைப்படுவதில்லை'' என்றார்கள் அவர்கள். எதற்கும் லெனின் கவலைப் படவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது.

சுரங்கவெடிகளும் வீழ்கிடங்குகளும் நிறைந்த பாதையில் அவர் கிராமாந்தர கனவான் போன்ற மன அமைதியுடன் நடந்தார். மனிதர்களின் நரம்புகளை ஆட்டித் தளர்த்தி அவர்களுடைய முகங்களை வெளிறச் செய்த நெருக்கடிகளில் அவர் நிதானத்துடனும் பதற்றமின்றியும் திகழ்ந்தார். லெனினைக் கொல்லும்பொருட்டு வெளிநாட்டு ஏகாதிபத்தியவாதிகளும் புரட்சி விரோதிகளும் செய்த சூழ்ச்சிகள் ஒன்றன் பின் ஒன்றாகத் தோல்வி அடைந்தன. ஆனால் 1918, ஆகஸ்ட் கடைசியில் சூழ்ச்சியாளர்கள் அநேகமாக வெற்றி பெற்றுவிட்டார்கள்.

மிஹெல்ஸோன் தொழிற்சாலையின் 15,000 தொழிலாளர்கள் முன் லெனின் சொற்பொழிவாற்றினார். பின்பு அவர் தமது காருக்குத் திரும்பி வந்து கொண்டிருக்கையில் ஒரு பெண் முதலமைச்சருக்கு ஏதோ விண்ணப்பம் சமர்ப்பிக்கும் பாவனையில் கையில் ஒரு காகிதத்துடன் ஓடி வந்தாள். காகிதத்தை வாங்குவதற்காக அவர் கையை நீட்டினார். அப்போது இன்னொரு பெண், கப்லான் என்ற குலப்பெயர் உடையவள், மூன்று குண்டுகளை அவர் மேல் சுட்டாள். அவற்றில் இரண்டு குண்டுகள் அவர் உடலில் பாய்ந்து நடைபாதையில் அவரை வீழ்த்திவிட்டன. அவரைத் தூக்கிக் காரில் ஏற்றிக் கிரெம்ளினுக்குக் கொண்டு போனார்கள். காயங்களிலிருந்து குருதி வெள்ளமாய்ப் பெருகிக்கொண்

டிருந்த போதிலும் அவர் மாடிப்படிகளில் தாமே நடந்து ஏறுவதாகப் பிடிவாதம் செய்தார். அவர் எண்ணியதை விட அதிக அபாயகரமான காயங்கள் அவருக்குப் பட்டிருந்தன. பல வாரங்கள் அவர் சாவுக்கு வெகு அருகே இருந்தார். தமது இரத்த நாளங்களில் இருந்த காய்ச்சலுடன் போராடி வென்ற பிறகு எஞ்சிய பலத்தை நாடு முழுவதும் பரவியிருந்த பழிவாங்கும் காய்ச்சலைப் போராடித் தீர்ப்பதற்கு அவர் செலவிட்டார்.

ஏனெனில், தங்களது எல்லாச் சுதந்திரங்களுக்கும் அபிலாஷைகளுக்கும் சின்னமாக விளங்கிய மனிதரைக் கொடிய பிற்போக்குச் சக்திகள் தாக்கி வீழ்த்திவிட்டதால் சீறியெழுந்த மக்கள் பூர்ஷ்வாக்கள்மீதும் முடியரசுவாதிகள் மீதும் ''செம் பயங்கர'' முறைகளின் வடிவில் எதிர்த்தாக்கு நடத்தினார்கள்.

கமிஸார்கள் கொலை செய்யப்பட்டதற்கும் லெனினைக் கொல்ல முயற்சி செய்யப்பட்டதற்கும் பல பூர்ஷ்வாக்கள் தங்கள் உயிர்களை விலையாகச் செலுத்த நேர்ந்தது. மக்களின் சீற்றம் மிக ரௌத்திராகாரமாகப் பொங்கியபடியால் லெனின் மட்டும் ஆத்திரத்தை அடக்கிக்கொள்ளும்படி மக்களை வேண்டிக் கொண்டிராவிட்டால் நூற்றுக்கணக்கானவர்கள் மடிந்திருப்பார்கள். இந்த அமளி குமளி முழுவதிலும் ருஷ்யாவில் யாவரினும் அமைதியாக இருந்தவர் லெனின்தான் என்று தயங்காமல் சொல்லலாம்.

9. லெனினது அசாதாரண நிதானம்

எல்லாச் சந்தர்ப்பங்களிலும் லெனின் மிகுந்த தன்னடக்கத்தை மேற்கொண்டிருந்தார். மற்றவர்களை வெறி கொள்ளச் செய்த நிகழ்ச்சிகள் அவரிடம் அமைதியையும் கம்பீரத்தையுமே தோற்றுவித்தன.

அரசியல் நிர்ணய சபையின்* வரலாற்று முக்கியத்துவம்

---

*அரசியல் நிர்ணய சபை பற்றி அதிக விவரங்களுக்கு 297-300ம் பக்கங்கள் பார்க்க.

வாய்ந்த ஒரே கூட்டத்தில் இரண்டு கட்சிப்பிரிவுகளும் ஒன்றுடன் ஒன்று கொலை வெறியுடன் மோதிக்கொண்டன. ஒரே கொந்தளிப்பும் குழப்பமுமான காட்சியாக விளங்கியது அது. பிரதிநிதிகள் போர்க் கோஷங்களை முழக்கினார்கள், சாய்வுமேஜைகளைத் தடதடவென்று தட்டினார்கள். பேச்சாளர்கள் அச்சுறுத்தல்களையும் சவால்களையும் கூறி ஆர்ப்பரித்தார்கள். இரண்டாயிரம் குரல்கள் இன்டர்நேஷனலையும் புரட்சி அணிநடைப் பாட்டையும் ஆவேசத்துடன் பாடின. இவை எல்லாம் சூழ்நிலையை மின்னேற்றம் கொண்டது ஆக்கின. இரவு முதிர முதிர சபையின் மின்னோட்டம் மேலும் மேலும் அதிகரிப்பதாகத் தோன்றியது. பார்வையாளர் வரிசைகளில் இருந்த நாங்கள் அழிக் கம்பிகளைப் பற்றிக் கொண்டோம். எங்கள் பற்கள் நெறுநெறுத்தன, நரம்புகள் முறுக்கேறின. லெனினோ முன் வரிசை இடம் ஒன்றில் சலிப்படைந்தவர் போன்று உட்கார்ந்திருந்தார்.

கடைசியில் அவர் எழுந்து மேடையின் பின்புறத்துக்கு நடந்து போய் சிவப்புக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்த படிகள் மீது கால்களை நீட்டி அமர்ந்தார். விசாலமான கூட்டத்தினர் மீது தற்செயலாகப் பார்வை செலுத்தினார். பிறகு, ''இத்தனை மனிதர்கள் நரம்புச் சக்தியை வீணாக்குகிறார்கள். நல்லது, ஒரு மனிதன் அதைக் கொஞ்சம் சேமிக்கப் போகிறான்'' என்று சொல்பவர் போலக் கைமீது தலையைச் சாய்த்து உறங்கிவிட்டார். பேச்சாளர்களின் சொல்வன்மையும் கூட்டத்தினரின் ஆரவாரமும் அவர் தலைக்கு மேலே அலையடித்துப் பெருகின. அவரோ, அமைதியாகத் தூங்கினார். ஓரிரு தடவைகள் கண்களைத் திறந்து, இமைகளைக் கொட்டியவாறு இங்கும் அங்கும் பார்த்தார், பின்பு மறுபடி உறங்கலானார்.

முடிவில் எழுந்து சோம்பல் முறித்துவிட்டு முன் வரிசையில் தமது இடத்திற்குச் சாவகாசமாக நடந்தார். தருணம் வாய்த்ததென்று கண்டு ரீடும் நானும் கீழே நழுவி, அரசியல் நிர்ணய சபை நடவடிக்கைகளைப் பற்றி அவரிடம் கேள்விகள் கேட்டோம். அவர் அலட்சியமாகப்

பதில் அளித்தார். பிரசார இலாக்காவின்* வேலைகள் பற்றி அவர் விசாரித்தார். பிரசுரங்கள் டன் கணக்கில் அச்சிடப்படுவதாகவும் அவை உண்மையாகவே காப்பகழ் களைக் கடந்து ஜெர்மானியச் சைனியத்திற்குள் வினியோக மாகி வருகின்றன என்றும் நாங்கள் சொன்னதும் அவர் முகம் பளிச்சிட்டது. ஜெர்மானிய மொழியில் வேலை செய்வது எங்களுக்குக் கடினமாய் இருப்பதாகச் சொன்னோம்.

திடீரென்று உற்சாகத்துடன் ''ஆ!'' என்றார் அவர். கவச மோட்டாரில் எனது சொற்பொழிவு முயற்சியை நினைவு படுத்தி, ''ருஷ்ய மொழிப் பயிற்சி எந்த அளவில் இருக்கி றது? இந்தப் பேச்சுக்களை எல்லாம் இப்போது நீங்கள் புரிந்துகொள்ள முடிகிறதா?'' என்று கேட்டார்.

''ருஷ்ய மொழியில் ஏராளமான சொற்கள் உள்ளன வே'' என்று பட்டும் படாமலும் பதில் அளித்தேன். ''அது தான் விஷயம். நீங்கள் முறையாக அதைப் பயில வேண்டும். மொழியின் முதுகெலும்பை எடுத்த எடுப்பிலேயே முறித்து விட வேண்டும். அதைப் பயில்வதற்கான எனது முறையை உங்களுக்குச் சொல்கிறேன்'' என்றார் லெனின்.

சாராம்சத்தில் லெனினது முறை இதுதான்: முதலில் எல்லாப் பெயர்ச் சொற்களையும் கற்றுக்கொள்ள வேண்டும். பிறகு முறையே எல்லா வினைச் சொற்களையும் எல்லா வினையுரிச் சொற்களையும் பெயருரிச் சொற்களையும் எல்லாப் பிற சொற்களையும் கற்கவேண்டும். அப்புறம் இலக்கணம் முழுவதையும் வாக்கிய அமைப்பு விதிகள் யாவற்றையும் கற்றுக்கொள்ளவேண்டும். பின்னர் எங்கும் எல்லோருடனும்

---

*1918ம் ஆண்டுத் தொடக்கத்தில் ருஷ்யக் கம்யூனிஸ்ட் (போல்ஷெவிக்) கட்சியில் நிறுவப்பட்ட அயல்நாட்டுக் குழுக்களின் சம்மேளனத்துடன் இணைக்கப்பட்டிருந்தது பிரசார இலாக்கா. வெளிநாட்டு எழுத்தாளர்களும் பிரசாரகர்களும் கொண்டது இது. பல்வேறு பிரசுரங்களை இது வெளியிட்டு வினியோகித்தது, ஏகாதிபத்திய வல்லரசுகளின் துருப்புக்களுக்கு இடையே பிரசாரம் நடத்தி வந்தது.

மொழியைப் பேசிப் பழக வேண்டும். லெனினுடைய முறை முழுமையானது எனினும் அவ்வளவு நுட்பமானதல்ல என்பதை இதிலிருந்து காணலாம். சுருங்கக் கூறின் பூர்ஷ்வாக்களை வெல்வதற்கான அவரது முறை மொழியை வெல்வதற்காகக் கையாளப்படுவதே, எடுத்த காரியத்தில் தயாதாட்சிண்ணியமின்றி ஈடுபடுவதே இது. ஆனால் அவர் இதில் மிகுந்த உற்சாகம் காட்டினார்.

தமது இருக்கையிலிருந்து குனிந்து விழிகள் சுடர, அங்க ஜாடைகளால் தமது சொற்களை எங்கள் மனதில் பதிய வைத்தார். எங்கள் சக நிருபர்கள் பொறுமை ததும்பப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். லெனின் எதிர்த்தரப்பினரின் குற்றங்களை வன்மையாகத் தொலித்தெடுக்கிறார், அல்லது சோவியத்தின் இரகசியங்களை வெளியிடுகிறார், அல்லது புரட்சிபால் இன்னும் அதிக உற்சாகம் காட்டும்படி எங்களைத் தூண்டி ஊக்குகிறார் என்று அவர்கள் நினைத்தார்கள். இத்தகைய நெருக்கடியின்போது, மாபெரும் ருஷ்ய அரசின் தலைவர் இவ்வளவு ஆற்றலை வெளியிடுவது இத்தகைய விஷயங்கள் குறித்தே இருக்க முடியும் என அவர்கள் எண்ணினார்கள். ஆனால் அவர்கள் நினைத்தது தவறு. ருஷ்ய முதலமைச்சர் அயல்மொழி ஒன்றைக் கற்பது எப்படி என்பது பற்றி வெறுமே விளக்கிக் கொண்டிருந்தார், நட்பார்ந்த சிறு உரையாடலால் கிடைத்த பொழுதுபோக்கை ரசித்துக்கொண்டிருந்தார், அவ்வளவுதான்.

பெருத்த விவாதங்களின் இறுக்கத்தில், எதிர்த்தரப்பினர் தம்மை இரக்கமின்றி விளாசிக் கொண்டிருக்கையில் லெனின் கம்பீரமான அமைதியுடன் வீற்றிருப்பார். இந்த நிலைமையில் நகைச்சுவையைக்கூடக் காண்பார். நான்காவது காங்கிரஸில் பேசியபின், மேடையில் தமது இடத்தில் அமர்ந்து தமது ஐந்து எதிர்த்தரப்பினரின் தாக்குதல்களைச் செவிமடுத்தார் லெனின். தமக்கு எதிரான வாதம் நல்லதாகப் பட்டால் அவர் முகம் மலர்ந்து முறுவலிப்பார், கைதட்டலில் கலந்துகொள்வார். எதிர்த்தரப்பு வாதம் கேலிக்கிடமானதாகத் தோன்றினால் கிண்டலாகப் புன்னகை செய்து கட்டைவிரல் நகங்களை ஒன்றோடொன்று அடித்து நையாண்டிக் கரகோஷம் செய்வார்.

10. அந்தரங்கப் பேச்சில் லெனினது நடத்தை

ஒரே ஒரு தடவைதான் அலுப்பின் குறியை நான் அவரிடம் கண்டேன். சோவியத்தின் நள்ளிரவுக் கூட்டம் ஒன்றின் பின் தமது மனைவியுடனும் சகோதரியுடனும் ''நேஷனல் ஹோட்டல்'' லிப்டில் புகுந்தார் லெனின். ''மாலை வணக்கம்'' என்று ஓரளவு அலுப்புடன் சொல்லிவிட்டு, ''இல்லை, காலை வணக்கம் என்பதே சரி. பகலும் இரவும் முழுவதும் நான் பேசிக்கொண்டிருந்தேன். களைத்துப் போய்விட்டேன். ஒரு மாடிதான் ஏறவேண்டும் என்றாலும் லிப்டில் போகிறேன்'' என்றார்.

ஒரே ஒரு தரம்தான் அவரிடம் பரபரப்பையும் அவசரத்தையும் கண்டேன். அது பிப்ரவரி மாதம் நேர்ந்தது. அப்போது ''தவ்ரீதா அரண்மனை'' மறுபடியும் காரசாரமான பூசலுக்கு அரங்கு ஆயிற்று. ஜெர்மனியுடன் போரைத் தொடர்வதா அல்லது சமாதானம் செய்துகொள்வதா என்பது பற்றி விவாதம் நடந்துகொண்டிருந்தது. திடீரென்று லெனின் தென்பட்டார். நீண்ட ஹாலைக் கடந்து பிரசங்க மேடையின் புகு வாயிலை நோக்கி விரைவாக, சுறுசுறுப்பாக அடி வைத்து அநேகமாகப் பாய்ந்தார் அவர். பேராசிரியர் சார்ல்ஸ் குந்த்ஸும் நானும் அவருக்காகப் பதிபோட்டுக் காத்திருந்தோம். ''ஒரு நிமிடம், 'தவாரிஷ்' லெனின்'' என்று அவரைக் கூவி அழைத்தோம்.

அவர் தமது விரைந்த பாய்ச்சலை நிறுத்தி அனேகமாக இராணுவப் பாங்கில் கால்களைச் சேர்த்து நின்று, ஆழ்ந்த தோற்றத்துடன் தலை வணங்கிவிட்டு, ''தயை செய்து இப்போது என்னைப் போக விடுங்கள், தோழர்களே. எனக்கு ஒரு விநாடி நேரம் கூட இல்லை. ஹாலுக்கு உள்ளே அவர்கள் எனக்காகக் காத்திருக்கிறார்கள். தயை செய்து இந்தத் தடவை என்னை மன்னித்து விடும்படி வேண்டிக் கொள்கிறேன்'' என்றார். இன்னொரு முறை தலை வணங்கி, கைகுலுக்கிவிட்டு அவர் மறுபடியும் பாய்ச்சலாக விரைந்துவிட்டார்.

போல்ஷெவிக் எதிர்ப்பாளரான வில்காக்ஸ் என்பவர் அந்தரங்க உறவுகளில் லெனினுடைய வசீகரத்தன்மையைப்

பற்றிக் கூறுகையில் பின்வரும் நிகழ்ச்சியை விவரிக்கிறார்: ஒரு ஆங்கிலேய வியாபாரி தமது குடும்பத்தினரை நெருக்கடியான நிலைமையிலிருந்து தப்புவிக்கும்பொருட்டு லெனினது சொந்த உதவியைக் கோரச் சென்றார். ''இரத்தவெறி கொண்ட கொடுங்கோலர்'' என்று வருணிக்கப் பட்ட லெனின் சாந்தமான நடத்தையும் மரியாதையும் பரிவும் உள்ள தோற்றமும் கொண்ட மனிதர் என்பதையும் தம் சக்திக்கு உட்பட்ட எல்லா உதவியையும் செய்ய அவர் ஆர்வமாக முன்வந்ததையும் கண்டு பெருவியப்பு அடைந்தார் அந்த வர்த்தகர்.

உண்மையில் லெனின் அபரிமித மரியாதை காட்டுவதாகவும் மிகையான முறையில் காட்டுவதாகவும் சில வேளைகளில் தோன்றியது. இதன் காரணம் அவரது ஆங்கிலப் பிரயோகமாக இருக்கலாம்: மரியாதையான உரையாடலுக்குரிய விரிவான வடிவங்களைப் புத்தகங்களிலிருந்து அப்படியே எடுத்து வழங்குவார் அவர். அல்லது மக்களுடன் பழகுவதற்கான அவரது முறையின் ஓர் அம்சமாக இது இருக்கலாம். ஏனெனில் மற்றத் துறைகளில் போலவே. இந்தத் துறையிலும் லெனின் மிகுந்த திறமைசாலி. அவசிய மற்ற மனிதர்களுக்காக நேரத்தை வீணுக்க அவர் மறுத்தார். அவரைச் சந்திப்பது எளிதல்ல. அவரது வரவேற்பறையில் பின்வரும் குறிப்பு காணப்பட்டது: ''மிக ஏராளமான அலுவல்கள் உள்ள ஒரு மனிதருடன் தாங்கள் பேசப்போகிறீர்கள் என்பதைக் கருத்தில் கொள்ளுமாறு பார்வையாளர்கள் வேண்டப்படுகிறார்கள். தாங்கள் சொல்ல வந்த விஷயத்தைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் விவரிக்கும்படி அவர்களை அவர் கேட்டுக்கொள்கிறார்.''

லெனினைச் சந்திப்பது மிகக் கடினம். ஆனால் ஒரு முறை அவரைச் சந்தித்துவிட்டால் அவரது முழுமையான கவனத்தை நாம் பெற்றுவிடுவோம். அவரது திறமைகள் அனைத்தும் நமக்குக் கூச்சம் உண்டாக்கும் அளவுக்குத் தீவிரமான முறையில் நம்மீது ஒருமுனைப்படுத்தப்படும். மரியாதையாக, அநேகமாக உணர்ச்சி வெளிப்பாட்டுடன், முகமன் தெரிவித்த பிறகு அவர் நம்மை நெருங்குவார். அவருடைய

முகம் நமக்கு ஓர் அடி தூரத்துக்கு மேல் இராத அளவுக்கு அவர் கிட்டத்தில் வந்துவிடுவார். உரையாடல் நடந்து கொண்டிருக்கையில் அடிக்கடி அவர் இன்னும் அருகே வந்து நமது விழிகளுக்குள் பார்வையைச் செலுத்துவார். நமது மூளையின் மிக ஆழத்திலுள்ள இடுக்குக்களை அவர் துருவி ஆராய்வது போலவும் நமது ஆன்மாவுக்குள் கூர்ந்து நோக்குவது போலவும் தோன்றும். மலினேவ்ஸ்க்கிய் போன்ற சற்றும் நாணமற்ற பச்சைப் புளுகன் மட்டுமே அந்தப் பார்வையின் நிலைத்த தாக்குக்கு எதிர்நிற்க முடியும்.

ஒரு சோஷலிஸ்டை நாங்கள் அடிக்கடி சந்திப்பதுண்டு. 1905ம் ஆண்டு மாஸ்கோ எழுச்சியில் கலந்துகொண்டு தடையரண்களில் நன்ருகப் போரிடக்கூடச் செய்தவர் அவர். தொழிலும் வாழ்க்கையின் வசதிகளும் அவருடைய ஆரம்பகால உளமார்ந்த ஈடுபாட்டிலிருந்து அவரை விலகச் செய்துவிட்டன. ஒரு ஆங்கிலச் செய்தித்தாள் சிண்டிகேட்டுக்கும் பிளெகானவின்* யெதீன்ஸ்த்வோ** பத்திரிகைக்கும் நிருபராக வேலை செய்துவந்த அவரது தோற்றம் செல்வச் செழிப்பைக் காட்டியது. பூர்ஷ்வா எழுத்தாளர்களை நேரத்தை வீணுக்குபவர்கள் என்று லெனின் கருதினுர். ஆனுல் தமது சென்றகாலப் புரட்சிச் செயல்களைப் பிரமாதப் படுத்தியதன்மூலம் இந்த மனிதர் லெனினுடன் சந்திப்புக்கு ஏற்பாடு செய்வதில் வெற்றி பெற்றுவிட்டார். லெனினைச் சந்திக்கப் போகும் போது அவர் ஒரே உற்சாகமாக

---

*பிளெகானவ் கி. வ. (1856-1918)—ருஷ்யாவில் மார்க்ஸீயத்தை முதன்முதலாகப் பரப்பியவர். பொருள்முதல் வாத உலகக் கண்ணேட்டத்தின் உறுதியான பிரசாரகர். ருஷ்ய, சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் பிரதானச் செயலர்களில் ஒருவர். அதே சமயம், தமது தத்துவ, அரசியல் நோக்குக்களிலும் நடைமுறைச் செயல்களிலும் அவர் ஆழ்ந்த தவறுகள் செய்தார். மென்ஷெவிக் தலைவர்களில் அவர் ஒருவராக இருந்தார். முதலாவது உலக யுத்தத்தின் போது சோஷலிஸ நாட்டுவெறிப் போக்கை மேற்கொண்டார்.

**—''ஒற்றுமை''.

இருந்தார். சில மணி நேரத்துக்குப் பிறகு அவர் கலக்கமுற்றிருக்கக் கண்டேன். இதன் காரணத்தை அவர் விளக்கினர்:

''அலுவலகத்துக்குள் போனதும் 1905 புரட்சியில் எனது பங்கைக் குறிப்பிட்டேன். லெனின் என் பக்கத்தில் வந்து, 'சரி, தோழரே, ஆனல் இந்தப் புரட்சிக்காக நீங்கள் என்ன செய்கிறீர்கள்?' என்று கேட்டார். அவருடைய முகம் எனக்கு ஆறு அங்குல தூரத்துக்கு மேல் இல்லை. அவருடைய விழிகளோ, நேராக என் விழிகளுக்கு உள்ளே நோக்கிக் கொண்டிருந்தன. மாஸ்கோ தடையரண்களில் எனது பழைய நாட்களைப் பற்றிப் பேசியவாறு நான் ஓர் அடி பின் வாங்கினேன். ஆனல் லெனின் ஓர் அடி முன்னே வைத்து, என் விழிகளிலிருந்து பார்வையை அகற்ருமலே, 'சரி, தோழரே, ஆனல் இந்தப் புரட்சிக்காக நீங்கள் என்ன செய் கிறீர்கள்?' என மீண்டும் கேட்டார். எக்ஸ்-ரே போலிருந்தது அது. கடந்த பத்து ஆண்டுகளில் நான் செய்தவற்றை எல்லாம் அவர் கண்டுகொண்டது போன்று தோன்றியது. என்னல் அதைத் தாங்க முடியவில்லை. குற்றம் புரிந்த குழந் தை போல நான் தரையை நோக்க நேர்ந்தது. பேச முயன் றேன், ஆனல் பயனில்லை. நான் வெளியே வர வேண்டிய தாயிற்று.'' சில நாட்களுக்குப் பிறகு இம்மனிதர் இந்தப் புரட்சிக்குத் தொண்டு செய்யத் தொடங்கி, சோவியத்துக் காக உழைப்பவர் ஆகிவிட்டார்.

11. லெனினின் நேர்மையும் எதார்த்தமின்மைபால் வெறுப்பும்

லெனினது சக்தியின் மர்மங்களில் ஒன்று அவருடைய உளமார்ந்த நேர்மை ஆகும். நமது நண்பர்களிடம் அவர் நேர்மையைக் கடைப்பிடித்தார். அணிகளில் ஒவ்வொரு புது நபர் சேரும்பொழுதும் அவர் மகிழ்ச்சி அடையத்தான் செய்தார். ஆயினும் வேலை நிலைமைகளையோ வருங்கால வாய்ப்புக்களையோ கவர்ச்சியாகச் சித்திரிப்பதன்மூலம் ஒரு ஆளைக்கூட அவர் திரட்ட மாட்டார். மாருக விஷயங்களை உள்ளதைவிட மோசமாக வருணிப்பதையே அவர் மேற்

கொண்டார். லெனினுடைய பல பேச்சுக்களின் பல்லவி இதுதான்: ''போல்ஷெவிக்குகள் அடைய முயலும் குறிக் கோள் தொலைவில் இருக்கிறது—உங்களில் பெரும்பாலோர் கனவு காண்பதைவிடத் தொலைவில் இருக்கிறது. நாம் ருஷ்யாவைக் கரடு முரடான பாதையில் நடத்தி வந்திருக்கிறோம். ஆனால் நாம் கடைப்பிடிக்கும் போக்கு நமக்கு மேலும் அதிகப் பகைவர்களையும் மேலும் பட்டினியையும் உண்டாக்கும். சென்றகாலம் கடினமாகவே இருந்தது. வருங் காலமோ இன்னும் கடினமான — நீங்கள் நினைப்பதை விட அதிகக் கடினமான—நிலைமைகள் கொண்டிருக்கும்.'' கவர்ச்சியூட்டும் ஆசை காட்டல் அல்ல இது. வழக்கமாகப் படை திரட்டுவதற்குரிய அழைப்பு அல்ல இது! எனினும் காயங்களும் சிறைவாசமும் மரணமுமே எதிர்ப்படும் என்று கூறிய காரிபால்டியை இத்தாலியர்கள் திரண்டுவந்து பின் பற்றியது போல ருஷ்யர்கள் திரண்டு வந்து லெனினைப் பின்பற்றினார்கள். தலைவர் தமது இயக்கத்தைப் பெருமைப் படுத்த வேண்டும், கேட்போர் மனம் மாறி அதில் சேர்ந்து கொள்ளுமாறு வற்புறுத்தித் தூண்ட வேண்டும் என்று எதிர் பார்ப்பவனுக்கு இது ஓரளவு சங்கடமாயிருந்தது. ஆனால் லெனின் இந்தத் தூண்டுதல் உள்ளத்திலிருந்து வரும்படி விட்டுவிட்டார்.

தமது வெளிப்படையான பகைவர்களிடமுங் கூட லெனின் நேர்மையைக் கடைப்பிடிக்கிறார். அவரது அசாதாரணமான கபடின்மையைப் பற்றிக் குறிப்பிடுகையில் ஓர் ஆங்கிலேயர் அவருடைய போக்கு பின்வருமாறு இருந்தது எனச் சொல்லுகிறார்: ''சொந்த முறையில் உங்கள்மீது எனக்குப் பகைமை எதுவும் இல்லை. ஆனால் அரசியல் நோக்கில் நீங்கள் என் பகைவர், உங்களை அழிப்பதற்கு எனக் குத் தோன்றும் எல்லா ஆயுதங்களையும் நான் பிரயோகித் தாக வேண்டும். உங்கள் அரசாங்கம் எனக்கு எதிராக இதையே செய்கிறது. இப்போது எவ்வளவு தூரம் நாம் சேர்ந்து செல்ல முடியும் என்பதைப் பார்ப்போம்.''

நேர்மையின் இந்த முத்திரை லெனினுடைய எல்லா வெளிப்படைக் கூற்றுக்களிலும் பதிந்திருக்கிறது. ராஜ

தந்திரி-அரசியல்வாதிக்குரிய வழக்கமான சாதனங்கள்—வெற்று வேட்டு, படாடோபமான சொற்கள், வெற்றி மனப்பான்மை ஆகியவை—லெனினிடம் கிடையா. அவர் விரும்பினுலுங்கூட மற்றவர்களை ஏய்க்க அவரால் முடியாது என்று தோன்றுகிறது. அதே காரணத்தினுல் தம்மையே ஏமாற்றிக் கொள்ளவும் அவரால் முடியாது. அவரது விஞ்ஞான மனப்போக்கும் மெய் விவரங்கள்பால் அவருக்குள்ள தீவிர ஆர்வமுமே இதன் காரணம்.

அவருடைய தகவல் மார்க்கங்கள் எல்லாத் திசைகளிலும் சென்று கணக்கற்ற மெய் விவரங்களை அவருக்குக் கொண்டு தருகின்றன. இந்த விவரங்களை அவர் சீர்தூக்கிப் பார்த்து, சலித்தெடுத்து, சுத்தப்படுத்துகிருர். பிறகு அவர் போர்த்தந்திர நிபுணர், சமூகத் தனிமங்களைக் கொண்டு செயல்புரியும் தேர்ந்த இரசாயனி, கணித அறிஞர் என்ற முறையில் இவற்றைப் பயன்படுத்துகிருர். உதாரணமாக ஒரு விஷயத்தை அவர் பின்வரும் வழியில் அணுகுகிருர்:

''இப்போது நமக்குச் சாதகமான விவரங்கள் இவை: ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு....'' அவற்றை அவர் சுருக்கமாக எடுத்துரைப்பார். ''நமக்கு எதிரான விவரங்கள் இவை.''

அதே மாதிரி இவற்றையும் அவர் எண்ணிக் கணக்கிடுவார், ''ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு—வேறு எவையேனும் உள்ளனவா?'' என்று கேட்பார். வேறு எதையேனும் கண்டு சொல்வதற்காக நாங்கள் மூளையைக் குடைந்து கொள்வோம், பொதுவாகப் பயனின்றி. சாதகமானவை, பாதகமானவை, இரு தரப்பு விஷயங்களையும் விவரித்துவிட்டு, கணிதப் பிரச்சினையை மதிப்பிடுவது போலத் தமது மதிப்பீட்டைச் செய்வார் லெனின்.

மெய் விவரங்களைப் பெருமைப்படுத்துவதில் அவர் வுட்ரோ வில்ஸனுக்கு நேர் எதிரானவர். வில்ஸன் ஒரு சொற்கலைஞர். எல்லா விஷயங்களுக்கும் நயமான சொற்களால் முலாம் பூசி, மக்களைப் பிரமிக்கவும் மதிமயங்கவும் புரிந்து, விஷயத்தில் அடங்கிய விகாரமான எதார்த்தங்களையும் திண்

ணமான பொருளாதார விவரங்களையும் அவர்கள் காண விடாதவாறு செய்துவிடுவார் அவர். லெனினே அறுவைக் கத்தியுடன் சத்திர மருத்துவன் போல வருகிறார். ஏகாதிபத் தியவாதிகளின் ஆடம்பரமான பாஷைக்குப் பின் மறைந் துள்ள எளிய பொருளாதார நோக்கங்களை அவர் திறந்து காட்டுகிறார். ருஷ்ய மக்களுக்கு அவர்கள் விடுக்கும் பிரகட னங்களின் வெளிப்போர்வையை நீக்கி, அம்மணம் ஆக்கி, அவர்களுடைய நேர்த்தியான உறுதிமொழிகளின் பின்னே மறைந்திருக்கும் சுறண்டுவோரின் கரிய, சூறையாடும் கையை அவர் வெளிக்காட்டுகிறார்.

வார்த்தைப் பந்தல் போடும் வலதுசாரியினர்பால் அவர் சற்றும் இரக்கம் காட்டுவதில்லை. அதே சமயம், எதார்த் தத்திலிருந்து தப்புவதற்குப் புரட்சிக் கோஷங்களில் புக லிடம் தேடும் இடதுசாரியினரை அவர் இவ்வளவே கடுமை யுடன் விளாசுகிறார். ''புரட்சிகர-ஜனநாயகச் சொல்வன் மை என்னும் இனிப்பூட்டப்பெற்ற நீரில் காடியையும் பித்த நீரையும் ஊற்றுவது'' தமது கடமை என அவர் கருது கிறார். உணர்ச்சிப் பெருக்கில் உருகுபவனையும் வறட்டுக் கோட்பாடுகளை உரக்க முழங்குபவனையும் அவர் சுரீரெனத் தைக்கும் ஏளனத்துக்கு உள்ளாக்குகிறார்.

ஜெர்மானியர்கள் சோவியத் தலைநகரை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தபோது ருஷ்யாவின் எல்லாப் பகு திகளிலுமிருந்து தந்திகள் ஸ்மோல்னியுக்கு வெள்ளமாகப் பெருகி வந்தன. வியப்பும் திகிலும் ஆத்திரமும் அவற்றில் வெளியிடப்பட்டிருந்தன. ''வெல்லரும் ருஷ்யப் பாட்டாளி வர்க்கம் நீடுழி வாழ்க!'' ''ஏகாதிபத்தியக் கொள்ளைக் காரர்கள் ஒழிக!'' ''கடைசித் துளிவரை இரத்தம் சிந்திப் புரட்சியின் தலைநகரைக் காப்போம்!'' என்பன போன்ற கோஷங்களுடன் இந்தத் தந்திகள் முடிந்திருந்தன.

லெனின் அவற்றைப் படித்துவிட்டு எல்லா சோவியத் துக்களுக்கும் ஒரு தந்தி அனுப்புவித்தார். பெத்ரோகிரா துக்குப் புரட்சிக் கோஷங்களைத் தயைசெய்து அனுப்பாம லிருக்கும்படியும் துருப்புக்களை அனுப்பும்படியும் அதோடு எத்தனை தொண்டர்கள் படைவீரர்களாகத் திரட்டப்பட் டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்கும்படியும், ஆயுதங்

கள், போர்த் தளவாடங்கள் ஆகியவற்றின் இருப்பு பற்றியும் உணவு நிலைமை பற்றியும் அறிக்கை செய்துகொள்ளும்படியும் அதில் சோவியத்துக்கள் கேட்டுக்கொள்ளப் பட்டிருந்தன.

12. நெருக்கடியில் செயலாற்றும் லெனின்

ஜெர்மானியர்களின் முன்னேற்றத்தோடுகூடவே அயல் நாட்டினரின் வெளியேற்றம் நிகழ்ந்தது. ''ஹூணர்களைக் கொல்லுங்கள்!'' என்று காட்டுக்கூச்சல் போட்டவர்கள் எல்லோரும் இப்போது ஹூணன் கொல்லப்படும் தொலைக்குள் வந்ததும் கண்தலை தெரியாமல் விழுந்தடித்து ஓடியதைக் குறித்து ருஷ்யர்கள் அமிழ்ந்த வியப்பைத் தெரிவித்தார்கள். இந்தக் கும்பலோடு சேர்ந்து கம்பிநீட்டுவது எனக்கும் நன்ருய்த்தான் இருந்திருக்கும், ஆனல் கவச மோட்டார் மீது நின்று நான் அளித்த வாக்குறுதி என்னைத் தடுத்தது. எனவே நான் செஞ்சேனையில் சேர முன்வந்தேன். இடதுசாரிக் கம்யூனிஸ்ட் புகாரின் நான் லெனினைக் காண வேண்டும் என்று வற்புறுத்தினர்.

''எனது வாழ்த்துக்கள்! எனது மகிழ்வுரைகள்!'' என்ருர் லெனின். ''எங்களது நிலைமை இப்போது மிக மோசமானதாகத் தோன்றுகிறது. பழைய சைனியம் போரிடாது. புதிய சைனியமோ பெரும்பாலும் காகிதத்தில் தான் இருக்கிறது. ப்ஸ்கோவ் நகரம் எதிர்ப்பு இன்றி இப்போதுதான் சரணடைந்துவிட்டது. இது கடுங் குற்றம். அந்த வட்டார சோவியத் தலைவன் சுடப்பட வேண்டும். நமது தொழிலாளர்களிடம் பெருத்த தன்னலத்தியாகமும் வீரமும் இருக்கிறது. ஆனல் இராணுவப் பயிற்சி இல்லை, கட்டுப்பாடு இல்லை.''

இவ்வாறு சுமார் இருபது சின்ன வாக்கியங்களில் நிலைமையைத் தொகுத்துரைத்துவிட்டு முடிவில் லெனின் கூறினர்: ''நான் காண்பது எல்லாம் சமாதானந்தான். எனினும் சோவியத் போருக்கு ஆதரவாக இருக்கலாம். என்னவாயினும், புரட்சிச் சேனையில் சேர்ந்ததற்கு என்

வாழ்த்துக்கள். ருஷ்ய பாஷையுடன் உங்கள் போராட்டத்துக்குப் பிறகு ஜெர்மானியர்களுடன் போர் புரிய நீங்கள் நல்ல பயிற்சி பெற்றிருக்க வேண்டுமே.'' சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தபின் அவர் மேலும் கூறினார்:

''ஒரு வெளிநாட்டான் நிரம்பச் சண்டை போட்டு விட முடியாது. ஒருவேளை மற்றவர்களும் உங்களுடன் சேர்ந்துகொள்ளலாம்.''

ஒரு படைப் பிரிவு அமைக்க நான் முயலக்கூடும் என்று நான் அவரிடம் சொன்னேன்.

லெனின் நேரடியாகச் செயலாற்றுபவர். திட்டம் யோசனையில் உதித்ததுமே அதைச் செயல்படுத்துவதில் முனைந்தார் அவர். சோவியத் கமாண்டர் க்ரிலேன்கோவுக்குப் போன் செய்ய முயன்றார். அது முடியாமல் போகவே பேனவை எடுத்து அவருக்கு ஒரு குறிப்பு எழுதினார்.

இரவு ஆவதற்குள் நாங்கள் சர்வதேச லீஜியன் அமைத்துவிட்டோம். அயல் மொழிகள் பேசும் ஆடவர் அனைவருக்கும் இந்தப் புதிய படைப்பிரிவில் சேருமாறு அழைப்பு விடுத்தோம். ஆனால் லெனின் விஷயத்தை இத்துடன் விட்டு விடவில்லை. காரியத்தை ஆடம்பரமான முறையில் தொடங்கி வைத்ததுடன் அவர் திருப்தி அடையவில்லை. அவர் அதை விடாது, விவரமாகத் தொடர்ந்தார். அழைப்பு அறிக்கையை ருஷ்ய மொழியிலும் ஆங்கிலத்திலும் அச்சிடுமாறு பிராவ்தா அலுவலகத்துக்கு இரண்டு முறை போன் செய்து உத்தரவிட்டார். பின்பு அதைத் தந்திமூலம் நாடெங்கும் பரப்பினார். இவ்வாறு யுத்தத்தையும் சிறப்பாக அதைப் பற்றிய புரட்சிக் கோஷங்களால் தங்களுக்கு வெறி ஏற்றிக் கொண்டிருந்தவர்களையும் ஒருபுறம் எதிர்த்த அதே சமயத்தில் போருக்கு ஆயத்தமாவதற்காக எல்லாச் சக்திகளையும் திரட்டிக் கொண்டிருந்தார் லெனின்.

பெத்ரோப்பாவ்லவ்ஸ்க்காயா கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்த புரட்சி எதிர்ப்பு இராணுவ அதிகாரிகளில் சிலரை அழைத்து வருமாறு செங்காவற்படையினருடன் ஒரு காரை அனுப்பிவைத்தார்.

ஜெனரல்கள் லெனினது அலுவலகத்துக்குள் வரிசையாக வந்து சேர்ந்ததும் அவர், ''கனவான்களே, நிபுணர்கள் என்ற முறையில் உங்களிடம் ஆலோசனை கேட்பதற்காகவே உங்களை இங்கே அழைத்திருக்கிறேன். பெத்ரோகிராத் அபாயத்தில் இருக்கிறது. அதன் தற்காப்புக்கான இராணுவச் செயல்தந்திரத்தை உங்களால் வகுத்துத் தர முடியுமா?'' என்றார். அவர்கள் சம்மதித்தார்கள்.

வரைப்படத்தில் செம்படையினரின் அணிகளும் போர்த் தளவாடங்களும் சேமிப்புப் படையினரும் இருக்கும் இடங்களைக் காட்டிவிட்டு லெனின் தொடர்ந்தார்:

''எங்கள் படைகள் இதோ இருக்கின்றன. எதிரித் துருப்புக்களின் எண்ணிக்கையையும் இட அமைப்புக்களையும் பற்றி எங்களுக்குக் கிடைத்துள்ள கடைசியான தகவல்கள் இவை. ஜெனரல்களுக்கு வேறு ஏதேனும் தேவையானால் அவர்கள் கேட்கலாம்.''

ஜெனரல்கள் வேலையில் முனைந்தார்கள். மாலையாகும் போது தங்கள் யோசனைகளின் முடிவுகளை லெனினிடம் அளித்தார்கள். பின்பு அவர்கள் நைச்சியமாக, ''இப்போது, எங்களுக்கு அதிக வசதியான இருப்பிடங்கள் அளிப்பதற்கு முதலமைச்சர் அன்புகூர்ந்து இணங்குவாரா?'' என்றார்கள்.

''மிக மிக வருந்துகிறேன். வேறு ஒரு சமயம் பார்ப்போம், ஆனால் இப்போது அல்ல. கனவான்களே, உங்கள் இருப்பிடங்கள் சௌகரியம் இல்லாதவையாக இருக்கலாம், ஆனால் பாதுகாப்பானவை என்ற அனுகூலம் அவற்றில் உண்டு'' எனப் பதிலளித்தார் லெனின். அதிகாரிகள் பெத்ரோப்பாவ்லவ்ஸ்க்காயா கோட்டைக்குத் திருப்பி அனுப்பப்பட்டார்கள்.

13. லெனின் தீர்க்கதரிசி என்ற முறையிலும் ராஜதந்திரி என்ற முறையிலும்

ராஜதந்திரி என்ற முறையிலும் வருங்காலம் உணர்வோர் என்ற முறையிலும் லெனினது ஆற்றல் ஏதேனும்

மாயாவாத உள்ளுணர்விலிருந்தோ வருவதை அனுமானிக்கும் சக்தியிலிருந்தோ அல்ல, ஒரு விஷயம் பற்றிய எல்லா மெய் விவரங்களையும் ஒருங்கு திரட்டவும் பின்பு அவற்றைப் பயன்படுத்தவும் அவருக்கு உள்ள திறமையிலிருந்தே தோன்றுகிறது என்பது தெளிவு. **ருஷ்யாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி** என்னும் நூலில் இந்தத் திறமையை அவர் காட்டினார். ருஷ்யக் குடியானவர்களில் பாதிப் பெயர் பாட்டாளிகள் ஆக்கப்பட்டுவிட்டார்கள் என்றும், ஒரு சிறிது நிலம் அவர்களிடம் இருந்த போதிலும் இந்தக் குடியானவர்கள் எதார்த்தத்தில் ''ஒரு துண்டு நிலம் வைத்திருக்கும் கூலி உழைப்பாளிகளே'' என்றும் அந்த நூலில் லெனின் வலியுறுத்தித் தம் காலத்துப் பொருளாதாரச் சிந்தனைக்குச் சவால் விடுத்தார். இந்த வலியுறுத்தல் துணிகரம் மிக்கதாக இருந்தது எனினும் பிந்திய வருஷங்களில் செய்யப்பட்ட ஆராய்ச்சிகள் இதைச் சரி என்று காட்டின. லெனின் இந்த விஷயத்தை வெறுமே ஊகிக்கவில்லை. ஜெம்ஸ்த்வோக்களிலும்* பிற துறைகளிலும் புள்ளிவிவரங்களை விரிவாகத் திரட்டித் தொகுத்த பின்னர் அவர் அளித்த தீர்ப்பு ஆகும் அது.

லெனின் பெற்றுள்ள பெருமதிப்புக்கு மூல காரணங்கள் யாவை என்பது பற்றி ஒரு நாள் பீட்டர்ஸுடன் பேசிக்கொண்டிருந்தேன். அவன் சொன்னான்: ''அடிக்கடி எங்கள் கட்சியின் பிரத்தியேகக் கூட்டங்களில் நிலைமைபற்றிய தமது பகுத்தாராய்வின் அடிப்படையில் லெனின் குறித்த யோசனைகளை முன்வைப்பார். நாங்கள் அவற்றைப் பெரும்பான்மை வாக்குக்களால் நிராகரித்து விடுவோம். லெனின் சொன்னது சரி, எங்கள் கருத்து தவறு என்பது பிற்பாடு நிரூபணமாகிவிடும்.'' லெனினுக்கும் கட்சியின் மற்ற உறுப்பினர்களுக்கும் இடையே செயல்தந்திரம்குறித்துக் கடும் போராட்டங்கள் நடந்துள்ளன. அப்புறம் வந்த நிகழ்ச்சிகள்

---

*ஜெம்ஸ்த்வோக்கள்—மாபெரும் அக்டோபர்ப் புரட்சிக்கு முன் மத்திய ருஷ்யப் பிரதேசங்களில் ஸ்தல அதிகாரத்தைச் செலுத்திய நிறுவனங்கள்.

இவற்றில் பொதுவாக லெனினது மதிப்பீட்டைச் சரி என்று காட்டியிருக்கின்றன.

திட்டமிடப்பட்ட நவம்பர்ப் புரட்சியில் வெற்றி பெறுவது இயலாது என்று பிரபல போல்ஷெவிக்குகளாகிய காமினெவும் ஸிநோவியேவும் அபிப்பிராயப்பட்டார்கள். ''அது தோல்வி அடைவது இயலாது'' என்றுர் லெனின். அவர் சொன்னதே சரி ஆயிற்று. போல்ஷெவிக்குகள் ஒரு பாய்ச்சல் காட்டியதுமே அரசாங்க அதிகாரம் அவர்கள் கைகளுக்கு வந்துவிட்டது. அரசாங்க அதிகார மாற்றம் இவ்வளவு சுளுவாக நடந்தேறியது குறித்து மற்றவர்களைவிட அதிக வியப்பு அடைந்தவர்கள் இந்த போல்ஷெவிக்குகளே.

அதிகாரத்தைக் கையில் எடுத்துக் கொள்வது முடியலாம் எனினும் அதை நிலையாக வைத்திருப்பது இயலாது என்று மற்ற போல்ஷெவிக் தலைவர்கள் சொன்னுர்கள். லெனின் சொன்னுர், ''ஒவ்வொரு நாளும் நமக்குப் புதிய பலத்தைக் கொண்டு வரும்'' என்று. லெனின் கூறியதே சரி ஆயிற்று. எல்லாப் புறங்களிலுமிருந்து நெருக்கும் பகைவர்களுக்கு எதிராக இரண்டு ஆண்டுகள் போரிட்டபின்னர் சோவியத் எல்லா முனைகளிலும் முன்னேறிக்கொண்டிருக்கிறது.

ஜெர்மானியர்களை ஆசைகாட்டி மயக்குவதும் ஆனுல் சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட மறுப்பதுமாகத் தமது ஜாலவித்தைத் தந்திரத்தைக் காட்டிக்கொண்டிருந்தார் த்ரோத்ஸ்கிய். அப்போது லெனின் சொன்னுர்: ''அவர்களுடன் விளையாடாதீர்கள். முன்வைக்கப்படும் முதல் உடன்படிக்கையில், அது எவ்வளவு மோசமாயிருந்தாலும் சரி, கையெழுத்து இடுங்கள். இல்லாவிட்டால் நாம் இன்னும் படுமோசமான உடன்படிக்கையில் கையொப்பம் இட நேரும்'' என்று. இம்முறையும் லெனின் சொன்னதே சரி ஆயிற்று. ''வழிப்பறிகாரர்களின்'', ''கொள்ளைக்கூட்டத்தாரின்'' சமாதான உடன்படிக்கையில் ருஷ்யர்கள் பிரேஸ்த்-லித்தோவ்ஸ்க்கில் கையெழுத்திட வேண்டியதாயிற்று.

1918ம் ஆண்டு வசந்தகாலத்தில், ஜெர்மானியப் புரட்சி பற்றிய கருத்தை உலகம் முழுவதும் எள்ளி நகையா

டிக்கொண்டிருந்தபோது, பிரான்சில் நேசநாட்டினரின் படையணியைக் கெய்ஸரின் சேனை நொறுக்கிக்கொண்டிருக்கையில், என்னுடன் ஒரு உரையாடலின்போது லெனின் கூறினர்: ''கெய்ஸரின் வீழ்ச்சி ஓர் ஆண்டுக்குள் வந்துவிடும்'' என்று. இதற்கு ஒன்பது மாதங்கள் பின்னர் கெய்ஸர் தமது சொந்த நாட்டு மக்களிடமிருந்து தப்பி ஓட நேர்ந்தது.

''நீங்கள் அமெரிக்கா திரும்புவதாயிருந்தால் வெகு சீக்கிரம் புறப்பட வேண்டும். இல்லாவிட்டால் அமெரிக்கச் சைனியம் சைபீரியாவில் உங்களுக்கு எதிர்ப்படும்'' என்று 1918 ஏப்ரலில் லெனின் என்னிடம் சொன்னர். இது வியப்பூட்டும் கூற்று. ஏனெனில் அந்தக் காலத்தில் மாஸ்கோவிலிருந்த நாங்கள் புதிய ருஷ்யாவின்பால் அமெரிக்கா மிக மிக நல்லெண்ணமே கொண்டிருப்பதாக நம்பத் தொடங்கியிருந்தோம். ''அது நடவாத காரியம். சோவியத்துக்கள் அரசு அங்கீகாரம் பெறுவதற்குக்கூட வாய்ப்பு இருப்பதாக ரேய்மண்ட் ராபின்ஸ் நினைக்கிறரே'' என்று நான் மறுத்துரைத்தேன்.

''மெய்தான். ஆனல் ராபின்ஸ் அமெரிக்காவின் மிதவாத பூர்ஷ்வாக்களின் பிரதிநிதி. அமெரிக்காவின் கொள்கையை நிர்ணயிப்பவர்கள் அவர்கள் அல்ல. நிதிமூலதனமே அதை நிர்ணயிக்கிறது. நிதிமூலதனமோ சைபீரியாவைத் தன்வசம் வைத்திருக்க விரும்புகிறது. சைபீரியாவைக் கைப்பற்றுவதற்காக அது அமெரிக்கப் படைவீரர்களை அனுப்பும்'' என்றர் லெனின். இந்த நோக்கு எனக்கு அபாண்டமாகப் பட்டது. ஆயினும், பிற்பாடு, 1918, ஜூன் 29ந் தேதி, விளாதிவஸ்தோக்கில் அமெரிக்கக் கடற்படைவீரர்கள் இறங்குவதை நான் கண்கூடாகப் பார்த்தேன். அதே சமயம் ஜாரின் ஆதரவாளர்களும் செக்குகளும் பிரிட்டிஷாரும் ஜப்பானியரும் பிற நேச நாட்டினரும் சோவியத் குடியரசின் கொடியை இறக்கி அகற்றிவிட்டுப் பழைய எதேச்சாதிகார அரசின் கொடியை ஏற்றினர்கள்.

லெனினுடைய முன்மொழிவுகள் நிகழ்ச்சிகளால் மிக அடிக்கடி மெய்ப்பிக்கப்பட்டுள்ளன ஆதலால் வருங்காலம் பற்றிய அவருடைய அபிப்பிராயம் குறைந்த பட்சம், அக்

கறைக்காவது உரியது. 1919, ஏப்ரலில் பாரிஸ் "தான்" பத்திரிகையில் லெனினுடன் நோதோவின் புகழ்பெற்ற பேட்டி விவரம் வெளியாயிற்று. அதன் சுருக்கம் வருமாறு:

லெனின் கூறினர்: "உலகின் வருங்காலமா? நான் தீர்க்கதரிசி அல்ல. ஆனுல் இது மட்டும் நிச்சயம். முதலாளித்துவ அரசு—இங்கிலாந்து இதற்கு ஒரு எடுத்துக்காட்டு—மடிந்துகொண்டிருக்கிறது. பழைய அமைப்பின் தலைவிதி தீர்க்கப்பட்டுவிட்டது. யுத்தத்தின் விளைவாக ஏற்பட்ட பொருளாதார நிலைமைகள் புதிய அமைப்புக்கு வலிய இட்டுச்செல்லுகின்றன. மனிதகுலத்தின் வளர்ச்சி தவிர்க்க இயலாதவாறு சோஷலிஸத்துக்குக் கொண்டுசெல்லுகிறது.

"அமெரிக்காவில் ரெயில் பாதைகள் தேசீய உடைமை ஆக்கப்படும் என்று சில ஆண்டுகளுக்கு முன்பு யார்தாம் நம்பியிருப்பார்கள்? அந்தக் குடியரசு எல்லாத் தானியத்தையும் அரசின் முழு நலத்துக்கு ஏற்பப் பயன்படுத்தும் பொருட்டு விலைக்கு வாங்குவதை நாம் பார்த்துவிட்டோம். அரசுக்கு எதிராகச் சொல்லப்பட்டது எல்லாம் இந்தப் பரிணுமத்தைத் தடைப்படுத்தவில்லை. குறைபாடுகளை நீக்கும் பொருட்டுப் புதிய கட்டுப்பாட்டுச் சாதனங்களை உண்டாக்குவதும் அமைப்பதும் அவசியம் என்பது உண்மையே. ஆனுல் அரசு சர்வாதிகாரம் உள்ளது ஆவதைத் தடுக்கும் எந்த முயற்சிகளும் வீணே ஆகும். ஏனெனில் தவிர்க்க இயலாதது வருகிறது, தனது சொந்த விசையாலேயே வருகிறது. 'பணியாரம் நன்ருயிருப்பதற்குச் சான்று அது உண்ணப் படுவதில் இருக்கிறது' என்று ஆங்கிலேயர்கள் கூறுவதுண்டு. சோஷலிஸப் பணியாரத்தைப் பற்றி நீங்கள் என்ன வேண்டுமானுலும் சொல்லிக்கொள்ளுங்கள். எல்லா நாடுகளும் அதை உண்கின்றன, மேலும் மேலும் அதிகமாக உண்ணும்.

"தொகுத்துரைக்கிறேன். ஒவ்வொரு மனிதக் குழுவும் சோஷலிஸத்தை நோக்கித் தனக்கே உரிய தனி வழியில் செல்கிறது என்பதை அனுபவம் நிரூபிப்பதாகத் தோன்றுகிறது. லாட்வியர்கள்கூட அதை நோக்கி ருஷ்யர்களிலிருந்து

வேறான முறையில் செல்கிறார்கள். பற்பல தாற்காலிக வடிவங்களும் விதங்களும் இருக்கும், ஆனால் அவை எல்லாம் ஒரே குறிக்கோளை நோக்கி இயங்கும் புரட்சியின் வெவ்வேறு கட்டங்களே ஆகும். பிரான்சிலோ ஜெர்மனியிலோ சோஷலிஸ அரசு அமைப்பு நிறுவப்பட்டால் அதை நிரந்தரம் ஆக்குவது இங்கே ருஷ்யாவில் ஆக்குவதைக் காட்டிலும் மிக எளிதாயிருக்கும். ஏனென்றால் ருஷ்யவில் காணப் படாத அமைப்புச் சட்டகங்கள், ஸ்தாபனங்கள், எல்லா வகையான அறிவுத் துணைக்கருவிகள், பொருள்கள் ஆகியன மேற்கே சோஷலிஸத்துக்குக் கிடைக்கும்.''

14. அறிவாளிகள்பால் லெனினது போக்கு

''நேர்மையுள்ள ஒவ்வொரு போல்ஷெவிக்குக்கும் முப்பத்தொன்பது கயவர்கள், அறுபது முட்டாள்கள் வீதம் இருக்கிறார்கள்.'' விரிவாக மேற்கோள் காட்டப்படும் இந்த வாக்கியம் லெனினால்கூறப்பட்டதாகச்சொல்லப்பட்டுள்ளது. பொது மக்கள் மீது இகழ்ச்சியும் அவநம்பிக்கையும் கொண்ட, பெருமிதம் மிக்க உயர்குலத்தவராக லெனினைச் சித்திரிக்கும் நோக்கத்துடன் இது புனையப்பட்டுள்ளது. விந்தையான இக்குற்றச்சாட்டுக்கு ஆதரவாகப் பதினைந்து ஆண்டுகளுக்கு முந்திய ஓர் அறிக்கை கெல்லி எடுக்கப்பட்டிருக்கிறது. உழைக்கும் வர்க்கங்கள் ஒழுங்கமைப்பு பற்றிய அறிவு, முதலாளிக்கு எதிராக வேலை நிறுத்தம் செய்தல், எட்டுமணி நேர வேலை நாள் கோருதல் முதலியன போன்ற தொழிற்சங்க உணர்வை மட்டுமே வளர்த்துக்கொண்டிருக்கின்றன என்றும் சோஷலிஸக் கருத்துக்கள் பெருமளவு வெளியிலிருந்தே, அறிவுஜீவிகளிடமிருந்தே தொழிலாளர்களுக்குக் கிடைத்துள்ளன என்றும் கூறுகிறது இந்த அறிக்கை.

லெனினும் சோவியத் அரசாங்கமும் தங்கள் எல்லாச் செயல்களிலும் ஆணைகளிலும் அறிவுக்குத் தாங்கள் அளிக்கும் பெரு மதிப்பைக் காட்டுகிறார்கள் என்பது உண்மையே. ஒவ்வொரு துறையிலும் லெனின் நிபுணருக்குப் பணிந்து

போகிறார். ஜார் ஆட்சிக் காலத்திய ஜெனரல்களைக்கூட இராணுவ விவகாரங்களில் நிபுணர்கள் என்ற வகையில் லெனின் மதிக்கிறார். புரட்சிச் செயல்தந்திரத்தில் லெனின் பிரமாணமாகக் கருதுவது ஜெர்மானியரான மார்க்ஸை என்றால் அமெரிக்கரான டெய்லர் உற்பத்திச் செயல்திற மைக்கு லெனினால் பிரமாணமாகக் கருதப்படுகிறார். தேர்ந்த கணக்கர், பெரிய பொறி இயலறிஞர், ஒவ்வொரு செயல் துறையிலும் தனித்தேர்ச்சியாளர் மிக மதிப்புள்ளவர்கள் என்பதை லெனின் எப்போதுமே வலியுறுத்தி வந்திருக்கிறார். உலகம் முழுவதிலிருந்தும் இத்தகைய நிபுணர்களை ஈர்க் கும் காந்தமாக சோவியத் விளங்கும் என்று அவர் நம்பினார். தங்கள் படைப்பு ஆற்றல்களுக்கு வேறு எந்த அமைப்பிலும் விட சோவியத் அமைப்பில் அதிக விரிவான செயல் வாய்ப் புக்கள் இருப்பதை அவர்கள் காண்பார்கள் என லெனின் எண்ணினார்.

ஹாரிமன் தமது பெரிய ரெயில்வேயை இயக்கி நடத் தும் வேலையைவிட அதற்கு நிதி வசதி செய்யும் பிரச்சினை காரணமாகவே பெரிதும் களைத்துச் சோர்ந்துபோனார் என்று சொல்லப்படுகிறது. சோவியத் அமைப்பில் அவர் தமது ஆற்றலை நிர்வாக வேலையிலிருந்து நிதிவசதி செய்யும் வேலையில் ஈடுபடுத்த வேண்டியிராது. ஏனெனில் நாம் காங் கிரஸில் உள்ள நமது பிரதிநிதியிடம் அரசியல் அதிகாரத் தை ஒப்படைப்பது போலவே சோவியத் அமைப்பில் பொ ருளாதார அதிகாரம் தலைமை நிர்வாகியிடம் ஒப்படைக்கப் படுகிறது. ருஷ்யாவின் பெருத்த வளங்கள் பண்படுத்தும் பொருட்டு அவர் பொறுப்பில் விடப்படுகின்றன. சோவியத் ஆட்சியில் ருஷ்யா பொறி இயலருக்கோ நிர்வாக நிபுணருக் கோ செவ்வைப்படுத்துவதற்குத் தனது விசாலமான வளங் களை மட்டும் அல்ல, அவ்வாறு செவ்வைப்படுத்துவதற்கான கருவியாகப் பயன்படும் உற்சாகமும் உயிரோட்டமும் உள்ள உழைப்பாளிகளையும் நல்குகிறது.

கடைசியில் குறித்த இந்த நிலைமை முதலாளித்துவ அமைப்பில் கிடையாது. அங்கே தொழிலாளியின் மிகப் பெரிய அக்கறை தனது வேலையைவிடச் சம்பளத்தில்தான் இருக்கிறது. நிர்வாக அதிகாரிகளுக்கும் தொழிலாளர்களுக்

கும் இடையே அங்கே இடைவிடாத பிணக்கு விளைந்து கொண்டிருக்கிறது. சோவியத் அமைப்பில் மனிதர்களின் ஆற்றல்கள் உற்பத்திப் பொருளின் பங்கீடு குறித்துச் சச்சர விடுவதில் செலவிடப்படுவதற்குப் பதிலாக, அதிக விரிவான உற்பத்தியின் பொருட்டு விடுவிக்கப்படுகின்றன. வெகுஜனங் களின் உற்சாகம் மிக்க படைப்பு ஆற்றல்களை வெளிக் கொணரும் அதே சமயத்தில் அறிவாளிகளுக்கும் மேதாவி களுக்கும் செயலாற்றச் சுதந்திரம் அளிக்கும் சோவியத் முறையிலிருந்து பெருத்த பயன்கள் விளையும் என லெனின் நம்பினர்.

தமது பார்வையீட்டில் சமூகச் சக்திகளின் வெவ் வேறு வகையான எல்லாப் பகுதிகளதும் மதிப்பை லெனின் அனுமானித்தார். புரட்சிக்கு முன்பும் பின்பும் அறிவாளி கள் தங்களுக்கு உரிய இடம் பெற்றனர்கள். பிரசாரக் கிளர்ச்சியாளர்கள் என்ற முறையில் புரட்சி சாத்தியமாக அவர்கள் உதவ முடிந்தது. திறமையும் தொழில் நுட்பமும் வாய்ந்த நிபுணர்கள் என்ற வகையில் புரட்சியைச் சாசுவத மும் நிலைப்பும் கொண்டது ஆக்குவதற்கு அவர்கள் உதவ முடிந்தது.

15. அமெரிக்கர்களையும் முதலாளிகளையும் சலுகைகளையும் பற்றிய லெனினது போக்கு

அமெரிக்கத் தொழில்நுட்ப நிபுணர்களையும் பொறி இயலாரையும் நிர்வாகிகளையும் லெனின் சிறப்பாகப் பெரி தும் மதித்தார். அவர்கள் ஐயாயிரம் பெயர் வேண்டும் என அவர் விரும்பினர், அவர்கள் உடனே வேண்டும் என விரும்பினர், அவர்களுக்கு மிக உயர்ந்த சம்பளங்கள் கொடுக்கத் தயாராயிருந்தார். அமெரிக்காவின்பால் தனிப் பட்ட மனச்சாய்வு கொண்டிருந்ததற்காக அவர் இடை விடாது தாக்கப்பட்டுவந்தார். அவருடைய எதிரிகள் அவரை ''அமெரிக்க பாங்கு முதலாளிகளின் ஏஜெண்டு'' என்று இகழ்ச்சியாகக் குறிப்பிட்டார்கள். விவாதமும் முரத்தில் இடதுசாரியினர் இந்தக் குற்றச்சாட்டை நேரிலேயே பயன்படுத்தினர்கள்.

உண்மையில் அமெரிக்க முதலாளித்துவம் எந்தப் பிற நாட்டின் முதலாளித்துவத்தையும்விடத் தீமையில் குறைந்தது என அவர் எண்ணவில்லை. ஆனால் அமெரிக்கா வெகு தொலேவில் இருந்தது. சோவியத் ருஷ்யாவின் வாழ்க்கைக்கு அது நேரடி அபாயம் விளைக்கவில்லை. சோவியத் ருஷ்யாவுக்குத் தேவையாயிருந்த சரக்குகளையும் நிபுணர்களையும் அளிக்கும் நிலையில் அது இருந்தது. ''எனவே, விசேஷ ஒப்பந்தம் செய்துகொள்வது இரு நாடுகளின் பரஸ்பர நலன்களுக்கும் ஏன் ஏற்றதாகாது?'' என்று கேட்டார் லெனின்.

ஆனால் ஒரு கம்யூனிஸ்ட் அரசு முதலாளித்துவ அரசுடன் உறவுகள் வைத்துக்கொள்ள முடியுமா? இந்த இரு வடிவங்களும் அருகருகே வாழ முடியுமா? இந்தக் கேள்விகள் லெனினிடம் நேரதோவால் கேட்கப்பட்டன.

''ஏன் முடியாது?'' என்றார் லெனின். ''எங்களுக்குத் தொழில்நுட்ப நிபுணர்களும் விஞ்ஞானிகளும் பல்வகை இயந்திரத் தொழில் செய்பொருள்களும் தேவை. இந்த நாட்டின் பிரமாண்டமான வளங்களை அபிவிருத்திச் செய்ய நாங்கள் தனியே திறனற்றவர்கள் என்பது தெளிவு. இந்த நிலைமைகளில், ருஷ்யாவில் நாங்கள் கடைப்பிடிக்கும் கோட்பாடுகள் எங்கள் எல்லைகளுக்கு வெளியே அரசியல் ஒப்பந்தங்களுக்கு இடம் கொடுத்து விலகிக்கொள்ள வேண்டும் என்பதை, இது எங்களுக்கு உவப்பாக இல்லாவிடினும், நாங்கள் ஒப்புக்கொண்டாக வேண்டும். எங்கள் வெளிநாட்டுக் கடன்களுக்கு வட்டி கொடுப்பதாக நாங்கள் மிக நேர்மையுடன் சொல்லுகிறோம். ரொக்கமாகக் கொடுக்க இயலாவிடில் நாங்கள் அவற்றைத் தானியமாகவும் எண்ணெயாகவும் எங்களிடம் வளமாக உள்ள எல்லா வகைக் கச்சாப் பொருள்களின் வடிவிலும் செலுத்துவோம்.

''ஆந்தாந்த் வல்லரசுகளின் குடிகளுக்குக் காடுகள், சுரங்கங்கள் பற்றிய சலுகைகள் வழங்க நாங்கள் நிச்சயித்துள்ளோம். எப்போதும் இதற்கான நிபந்தனை, ருஷ்ய சோவியத்துக்களின் முக்கியக் கோட்பாடுகள் மதிக்கப்பட வேண்டும் என்பதாகும். தவிரவும் பழைய ருஷ்ய சாம்ராஜ்யத்தின் ஏதேனும் பிரதேசத்தைச் சில நேச வல்லரசு

களுக்கு ஒப்படைக்க—மகிழ்வுடன் அல்ல, போனால் போகட்டும் என்ற உணர்வுடன்தான் என்றாலும்—நாங்கள் சம்மதிக்கக்கூடச் செய்வோம். ஆங்கில, ஜப்பானிய, அமெரிக்க முதலாளிகள் இத்தகைய சலுகைகளை மிகப் பெரிதும் விரும்புகிறார்கள் என்பதை நாங்கள் அறிவோம்.

'' 'வெலீக்கிய் ஸேவெர்னிய் பூத்', அதாவது மாபெரும் வடக்கு ரெயில்பாதை கட்டுவதை ஒரு சர்வதேசக் கழகத்திற்கு நாங்கள் ஒப்படைத்துள்ளோம். நீங்கள் அதைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இது சுமார் 3,000 கிலோமீட்டர்கள் நீளமான ரெயில்பாதை. ஓனேகா வளைகுடாவின் அருகே தொடங்கி கோட்லாஸின் வழியாக உரால் மலைத் தொடரைக் கடந்து ஓப் ஆறு வரை செல்லும் இது. 80 லட்சம் ஹெக்டேர் நிலமும் பயன்படுத்தப்படாத எல்லாவகைச் சுரங்கங்களும் கொண்ட பிரமாண்டமான கன்னிக் காடுகள் இருப்புப்பாதை நிறுவும் கம்பெனியின் அதிகார எல்லைக்குள் வரும்.

''இந்த அரசு உடைமை ஒரு குறித்த காலத்துக்கு, ஒருவேளை எண்பது ஆண்டுகளுக்கு, விட்டுக்கொடுக்கப்படுகிறது, மீட்டுப் பெறும் உரிமையுடன். எட்டு மணி வேலை நாள், தொழிலாளர் ஸ்தாபனங்களின் கட்டுப்பாடு ஆகியவை போன்ற,சோவியத்தால் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டங்கள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று மட்டுமே நாங்கள் கோருகிறோம். இதற்கும் கம்யூனிஸத்துக்கும் வெகு தூரம் என்பது உண்மையே. எங்களது ஆதர்சத்துக்கு இது சற்றும் பொருந்தவில்லை. சோவியத் சஞ்சிகைகளில் இந்தப் பிரச்சினை மிகக் கடுமையான விவாதங்களைக் கிளப்பியிருக்கிறது என்பதை நான் சொல்லிவிட வேண்டும். ஆனால் பரிணமிப்புக் காலக்கட்டத்தில் தேவையாயிருப்பதை ஒப்புக்கொள்ள நாங்கள் நிச்சயித்திருக்கிறோம்.''

நோதோ சொன்னார்: ''அப்படியானால், வெளிநாட்டு முதலாளிகளுக்கு இங்கே எதிர்ப்படும் அபாயங்களை—இந்த அபாயங்கள் அகற்றப்பட்டு விட்டதாகத் தெரியவில்லை, எந்த நேரத்திலும் இவை இன்னும் கடுமையாகலாம் என்ற அச்சம் இருக்கிறது—கருத்தில் கொண்டால், ருஷ்

யாவுக்கு வரவும் அது புதிய செல்வ வளங்களை விழுங்க அனுமதிக்கவும் நிதியதிபர்கள் துணிவார்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களா? தங்கள் நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட சைனியத்தின் பாதுகாப்பு இல்லாமல் இம்மாதிரிக் காரியத்தை அவர்கள் தொடங்க மாட்டார்கள். வெளி நாட்டுப் படைகள் உங்கள் பிரதேசத்தை இவ்வாறு கைப்பற்றிக் கொள்வதற்கு நீங்கள் இசைவீர்களா?''

''இதற்குத் தேவையே இருக்காது. ஏனெனில் தான் விதித்துக்கொண்ட நிபந்தனையை சோவியத் அரசாங்கம் உண்மையுடன் கடைப்பிடிக்கும். ஆனால் எல்லா நோக்கு நிலைகளும் பரிசீலிக்கப்படலாம்.''

மாபெரும் மாஸ்கோ பொருளாதார ஆலோசனை சபையின் 1919, ஜூன் மாதக் கூட்டத்தில், ஜெர்மனியுடன் பொருளாதாரக் கூட்டுறவை ஆதரித்துப் போராடியவர்களுக்கு எஞ்சினீயர் க்ராஸின்* தலைமை தாங்கியதாகவும் அவருக்கு எதிராக, அமெரிக்காவுடன் பொருளாதாரக் கூட்டுறவுக் கொள்கையைக் கடைப்பிடிப்பதை ஆதரித்து லெனினும் சிச்சேரினும்** போராட்டம் நிகழ்த்தியதாகவும் மேற்படிக் கூட்ட விவரங்கள் தெரிவிக்கின்றன.

16. பாட்டாளிகள் மீது லெனின் கொண்டிருக்கும் பெருத்த நம்பிக்கை

பாட்டாளி வர்க்கமே புரட்சியின் இயக்கு சக்தி, அதன் ஆன்மாவும் தசை நாணும் என்று லெனின் திண்ணமாகக் கருதினார். புதிய சமூகம் நிறுவப்படுவதற்கான நம்பிக்கைக்கு ஒரே ஆதாரம் பொது மக்களே என அவர் எண்ணினார். ஆனால் பொதுவாகப் பரவியிருந்த கருத்து இது அல்ல. ருஷ்ய மக்களைப் பற்றிப் பொதுவாக நிலவும் கருத்து, அவர்

---

*க்ராஸின் லி. பொ. (1870-1926)—முக்கியமான சோவியத் ராஜதந்திரி, ஆட்சியாளர்.

**சிச்சேரின் கி. வ. (1872-1936) — முக்கியமான சோவியத் ராஜதந்திரி, ஆட்சியாளர்.

கள் மண்ணை நம்பி வாழும் பாங்கற்ற பிராணிகள், திறமையற்றவர்கள், சோம்பேறிகள், எழுத்தறிவில்லாதவர்கள், வோத்காவையே குறியாகக் கொண்ட இருள்மதியினர், ஆதர்சவாதம் அற்றவர்கள், விடாப்பிடியாக முயலத் திறன் இல்லாதவர்கள் என்பதே ஆகும்.

இதற்கு எதிராக மேலெழுந்து நிற்கிறது ''அறிவீனர்களான'' வெகுஜனங்கள் பற்றிய லெனினது மதிப்பீடு. அவர்களுடைய அசைவற்ற உளத் திண்மையையும், பற்றுறுதியையும், தியாகங்கள் செய்யவும் துன்பங்களைத் தாங்கவும் அவர்களுக்குள்ள திறனையும், பெரிய அரசியல் கருத்துக்களைப் புரிந்துகொள்ளும் அவர்களது சக்தியையும், அவர்களுக்குள் மறைந்திருக்கும் பெருத்த படைப்பு, ஆக்க ஆற்றல்களையும் லெனின் பல நீண்ட ஆண்டுகளாக விடாது வலியுறுத்தினர். வெகுஜனங்களின் சுபாவத்தின்மீது அநேகமாகத் துணிச்சலான நம்பிக்கைபோலத் தோன்றுகிறது இது. ருஷ்யத் தொழிலாளிமீது நம்பிக்கை வைக்கும் லெனினது துணிவை விளைவுகள் எவ்வளவு தூரத்துக்குச் சரி என்று காட்டியுள்ளன?

ருஷ்யாவில் மேற்பரப்புக்கு அடியில் பார்வை செலுத்தியுள்ள எல்லா அவதானிக்கையாளர்களும் பெரிய அரசியல் கருத்துக்களைப் புரிந்துகொள்ளும் ருஷ்யத் தொழிலாளிகளின் திறனைக் கண்டு பெரு வியப்பு அடைந்திருக்கிறார்கள். ரூட் தூதுக் கோஷ்டியின்* ஓர் உறுப்பினர் இதனால் ஆச்சரியம் அடைந்து பின்வருமாறு கேட்டார்: ''மெய்யாகவே கற்றறிந்தவர்கள் எல்லோராலும் அறிவீனர்கள், மந்த புத்தி உள்ளவர்கள் என்று கருதப்பட்ட ருஷ்ய மக்களின் பெருந்திரளின் இவ்வளவு பெரிய பகுதியினர் ஏனைய உலகிற்கு இவ்வளவு புதியதும், அதற்கு இவ்வளவு தூரம்

---

*ரூட் தூதுக் கோஷ்டி—எ. ரூட் (1845-1937) என்பவரின் தலைமையில் 1917ம் ஆண்டு ருஷ்யாவுக்கு அனுப்பப்பட்ட விசேஷ அமெரிக்கத் தூதுக் கோஷ்டி. ருஷ்யா போரிலிருந்து விலகுவதைத் தடுப்பதும் புரட்சி இயக்கத்தை எதிர்த்துப் போராடத் தாற்காலிக அரசாங்கத்துக்கு உதவுவதும் இதன் நோக்கம்.

முன்னே உள்ளதுமான சமூகத் தத்துவத்தை ஆர்வத்துடன் ஏற்றுக்கொண்டது எவ்வாறு நிகழ்ந்தது?'' ''இளைஞர் கிறிஸ்துவ சங்கத்தாலும்''* பிற ஸ்தாபனங்களாலும் அனுப் பப்பட்ட நூற்றுக்கணக்கான இளைஞர்கள் ருஷ்யத் தொழிலாளிகளுக்குப் புதிராக இருந்தார்கள். இந்தப் ''பயிற்சி நிபுணர்கள்'' அமெரிக்கப் பல்கலைக்கழகங்களின் பட்டதாரிகள். எனினும் சோஷலிஸத்துக்கும் சிண்டிக்கலிஸத்துக்கும் அராஜகவாதத்துக்கும் உள்ள வித்தியாசத்தை இவர்கள் அறிந்திருக்கவில்லை. லட்சோபலட்சம் ருஷ்யத் தொழிலாளிகளின் கல்வியிலோ இது அரிச்சுவடிக்கு ஒப்பாயிருந்தது.

அமெரிக்கப் பிரசார ஏஜென்டுகள் ஜனாதிபதி வில்ஸனின் பதினான்கு அம்சங்கள் பற்றிய உரையின் பிரதிகளை லட்சக்கணக்கில் ருஷ்யாவில் வினியோகித்தார்கள்.

தொழிலாளர்கள் அல்லது குடியானவர்களுக்கு இந்தப் பிரதிகளைக் கொடுத்துவிட்டு, ''இந்த உரையைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?'' என்று அவர்கள் கேட்பார்கள்.

''படிப்பதற்கு நன்றாய்த்தான் இருக்கிறது'' என்று ருஷ்யர்கள் பொதுவாகப் பதில் அளிப்பார்கள். ''ஆனால் இதன் பின்னே ஒன்றும் இல்லை. ஜனாதிபதி வில்ஸனின் மூளையில் இந்த ஆதர்சங்கள் இருக்கலாம். ஆயினும் தொழிலாளிகள் அரசாங்கத்தை நிர்வகிக்காவிட்டால் சமாதான உடன்படிக்கையில் இந்த ஆதர்சங்களில் எதுவும் இராது.''

ருஷ்யர்கள் இவ்வாறு கூறியதைக் கேட்ட பிரபல அமெரிக்கப் பேராசிரியர் அவர்களுடைய சந்தேகப் போக்கு குறித்து நகைத்தார். இப்போதோ, தமது வெகுளித்தனமான நம்பிக்கையை எண்ணி அவர் நகைக்கிறார். பின்தங்கிய ருஷ்யாவின் தொலைதூரப் பகுதிகளைச் சேர்ந்த சிறு சோவியத்துக்களில் உள்ள இந்த ''அறிவுமங்கிய மக்கள்'' சர்வதேச அரசியலைத் தம்மைவிட நன்றாகப் புரிந்துகொண்டது எப்படி என்று அவர் அதிசயிக்கிறார்.

---

*இளைஞர் கிறிஸ்துவ சங்கம்—இளைஞர்களின் பூர்ஷ்வா ஸ்தாபனம். ருஷ்யாவில் இதன் பிரதிநிதிகள் மதப் பிரசாரமும் சோவியத் எதிர்ப்புப் பிரசாரமும் செய்துவந்தார்கள்.

பொதுமக்களின் உடனடியான தன்னலத்தைத் தூண்டி விடுவது ஒன்றுதான் அவசியமானது என்ற திட்டத்தின் பேரில் பிரிட்டிஷார் செயல் புரிந்தனர். மக்களை ஏமாற்றித் தம்பால் ஈர்ப்பதற்காகப் பழக்கூழ், விஸ்கி, கோதுமை மாவு ஆகியவற்றுடன் அவர்கள் அர்காங்கேல்ஸ்க் நகருக்கு வந்து சேர்ந்தார்கள். பட்டினியால் நலிந்த மக்கள் இந்தப் பரிசுகளைப் பெற்று மகிழ்ந்தார்கள். ஆனால் இவை தங்களைக் குருடாக்குவதற்கான கைக்கூலிகள் என்பதையும் இந்தப் பொருள்களின் விலை ருஷ்யாவின் பிரதேச முழுமையும் விடுதலையுமே என்பதையும் கண்டதும் அவர்கள் பண்டையெடுப்பாளர்களுக்கு எதிராகக் கிளம்பி அவர்களை நாட்டைவிட்டுத் துரத்தியடித்தார்கள்.

ருஷ்யப் பொதுமக்களின் விடாப்பிடியையும் அசையா உறுதியையும் பற்றிய லெனினது நம்பிக்கையைக் காலமும் சரி என மெய்ப்பித்துவிட்டது. 1917ம் ஆண்டு கூறப்பட்ட பயங்கரமான வருங்கால உரைகளை இன்றைய உண்மை விவரங்களுடன் ஒப்பு நோக்குங்கள். ''மூன்றே நாட்களில் அவர்கள் ஆட்சி ஒழிந்து விடும்'' என்று அப்போது கொக்கரித்தார்கள் சோவியத்துக்களின் பகைவர்கள். மூன்று நாட்களும் மேலும் அத்தனையே நாட்களும் கழிந்தபின், ''அதிகமாய்ப் போனால் மூன்றே வாரங்கள் மட்டுமே சோவியத் நிலைத்திருக்க முடியும்'' என்ற கூச்சல் கிளப்பப்பட்டது. மீண்டும் அவர்கள் கூச்சலை மாற்ற நேர்ந்தது. இந்தத் தடவை அது ''மூன்று மாதங்கள்'' ஆயிற்று. இப்போது, எண் மடங்கு மூன்று மாதங்கள் கழிந்துவிட்டபின், சோவியத்துக்களின் விரோதிகள் தங்கள் ஆதரவாளர்களுக்குக் கூறக் கூடியதெல்லாம் ''மூன்று வருஷங்கள்'' என்பதே.

17. தொழிலாளர்கள், குடியானவர்களின் சாதனைகள் லெனின் எதிர்பார்த்ததற்கும் மேலானவை

சோவியத் அரசாங்கத்தின் வலிமையும் நீடித்த நிலைப்பும் சிலர் அனுமானிப்பது போல எல்லா நியதிகளும் மீறப்படுவதிலோ, அறிவுக்கு எட்டாத விதியின் விந்தை

விளையாட்டிலோ அடங்கியிருக்கவில்லை. அது எதை அடிப்படையாகக் கொண்டிருக்கும் என்று லெனின் சொன்ஞரோ அதையே—தொழிலாளர்கள், குடியானவர்களின் திண்ணமான சாதனைகளையே—அது ஆதாரமாகக் கொண்டிருக்கிறது.

பொருளாதாரத் துறையில் லினன், நெருப்புக்குச்சிகள் ஆகியவை தயாரிப்பதற்கும் ருஷ்யாவின் பேரளவான முற்று நிலக்கரியைப் பயன்படுத்துவதற்கும் புதிய செயல் முறைகளை அவர்கள் தொடங்கியுள்ளனர். இயந்திரத் தொழிற்சாலைகளையும் மின்ஞக்க நிலையங்களையும் நிறுவுவது முதல் பால்டிக் கடலுக்கும் வோல்கா ஆற்றுக்கும் இடையே பெரிய கால்வாயை ஆழப்படுத்துவது, நூற்றுக்கணக்கான கிலோமீட்டர்கள் தூரத்துக்கு இருப்புப்பாதைகள் அமைப்பதுவரை விரிவான பொறிஇயல் நிறுவனச் செயல்களை அவர்கள் நிறைவேற்றியிருக்கிருர்கள்.

இராணுவத் துறையில் தொழிலாளர்களும் குடியானவர்களும் கண்டிப்பான இராணுவக் கட்டுப்பாட்டுக்குத் தங்களை உட்படுத்திக் கொண்டார்கள். இந்தக் கட்டுப்பாடு செஞ்சேனையை உலகிலேயே விறல்மிக்க போர் இயந்திரங்களில் ஒன்ருக மாற்றிவிட்டது. இந்தப் பாட்டாளிகள் தனிவகை உளத்திண்மையும் உற்சாக உணர்ச்சியும் கொண்டிருக்கிருர்கள். இதற்குமுன் அவர்கள் எப்போதும் ஏதேனும் மேல் வகுப்பினரின் நலன்களுக்காகவே போரிட்டுவந்திருக்கிருர்கள். தங்கள் நலன்களுக்காகவும் உலகின் உழைப்பாளிகள், சுறண்டப்படும் மக்களுடைய நலன்களுக்காகவும் இப்போதுதான் முதல் தடவையாக—உணர்வுபூர்வமாக—அவர்கள் போர்கள் புரிந்துவருகிருர்கள்.

ஆயினும் பண்பாட்டுத் துறையில்தான் இந்த ''அறிவுமங்கிய மக்களின்'' வெற்றிகள் மிகக் குறிப்பிடத்தக்கவை ஆகும். மனிதனைக் கட்டற்றவன் ஆக்கிவிட்டால் அவன் படைக்கிருன். புத்துணர்ச்சியின் ஊக்கமூட்டும் ஸ்பரிசத்தின் விளைவாகப் பத்து புதுப் பல்கலைக்கழகங்களும் டஜன்கணக்கான நாடக மன்றங்களும் ஆயிரக்கணக்கான நூலகங்க

ளும் பதினுயிரக்கணக்கான பொதுப் பள்ளிகளும் தோன்றி யுள்ளன.

இந்த எதார்த்தங்கள்தாம் மக்ஸீம் கோர்க்கியை* சோவியத்துக்களின் ஆதரவாளராக மாற்றின. அவர் எழுது கிருர்: ''ருஷ்ய அரசாங்கத்தின் பண்பாட்டுப் படைப்புச் செயல் மனிதகுல வரலாற்றில் இதற்குமுன் அறியப்படாத பரப்பு எல்லையையும் வடிவத்தையும் விரைவில் மேற் கொண்டுவிடும். பண்பாட்டுத் துறையில் ருஷ்யத் தொழி லாளர்களின் சென்ற ஆண்டுச் சாதனையின் பெருமாண்பை வியந்து பாராட்டாமல் இருக்க வருங்கால வரலாற்று ஆசிரி யனுல் முடியாது.''

பொது மக்கள் எத்தகைய இடையூறுகளுக்கு நடுவே உழைத்தார்கள் என்பதைக் கருத்தில் கொள்ளும்போது இந்தச் சாதனைகள் இன்னும் பிரமாண்டமானவையும் முக் கியத்துவம் உள்ளவையும் ஆகிவிடுகின்றன. அவர்கள் அரசாங்கத்தைக் கையில் எடுத்துக்கொண்ட போது நூற் ருண்டுக்கணக்காகக் கொடுமைப்படுத்தவும் வறுமைக்குள் ளாக்கவும் நசுக்கவும் பட்டுவந்த மக்களே மரபுரிமையாக அவர்களுக்குக் கிடைத்திருந்தார்கள். உலக மகாயுத்தம் அவர்களுடைய உழைப்புத்திறன் கொண்ட இருபது லட்சம் ஆண்களைப் பலிவாங்கியிருந்தது. இன்னும் முப்பது லட்சம் ஆண்களை அது அங்கவீனர்கள் ஆக்கியிருந்தது. லட்சக் கணக் கான அனுதைகளையும் குருடர்கள், செவிடர்கள், ஊமைகள் ஆகியோரையும் பராமரிக்கும் பொறுப்பு அவர்கள்மீது சார்ந்திருந்தது. இருப்புப்பாதைகள் தகர்க்கப்பட்டிருந்தன, சுரங்கங்கள் நீரில் மூழ்கடிக்கப்பட்டிருந்தன, உணவு, எரி பொருள் சேமிப்புக்கள் அனேகமாகத் தீர்ந்து போயிருந்தன. யுத்தத்தினுல் சிதறுண்டு போய், புரட்சியினுல் மேலும் தகர்க்கப்பட்டிருந்த பொருளாதார இயந்திரத்தின்மீது ஒரு கோடிப் படைவீரர்களைப் படைக்கலைப்புச் செய்யும் பொ றுப்பு திடீரென்று சுமத்தப்பட்டது. அவர்கள் அமோகமான தானியப்பயிர் விளைத்திருந்தார்கள். ஆனுல் ஜப்பானியர்கள்,

---

*மக்ஸீம் கோர்க்கிய் [பேஷ்கவ் அ. ம.] (1868-1936) —மாபெரும் பாட்டாளி வர்க்க எழுத்தாளர்.

பிரெஞ்சுக்காரர்கள், பிரிட்டிஷ்காரர்கள், அமெரிக்கர்கள் ஆகியோரின் உதவியுடன் செக்கோஸ்லோவாக்கியர்கள்* சைபீரியத் தானிய வயல்களிலிருந்து அவர்களுடைய தொடர்பைத் துணித்துவிட்டார்கள். உக்ரேனியத் தானிய வயல்களிலிருந்து பிற புரட்சி எதிர்ப்பாளர்கள் இவ்வாறே அவர்களைத் துணித்து அகற்றிவிட்டார்கள். ''இப்போது பட்டினியின் எலும்புக்கை மக்களின் குரல்வளையை நெரித்து அவர்களுக்குப் புத்தி புகட்டும்'' என்ருர்கள் அவர்கள். சோவியத் தொழிலாளர்கள் சர்ச்சை அரசிலிருந்து தனிப் பிரித்தமையால் சமயவிலக்குச் செய்யப்பட்டார்கள். பழைய அதிகாரிகள் அவர்களுக்கு எதிராக மறைமுக நாச வேலைகள் செய்தார்கள், அறிவுஜீவிகள் அவர்களைக் கைவிட்டார்கள், நேசநாட்டினர் அவர்களை முற்றுகையிட்டார்கள். நேசநாட்டினர் எல்லா வகையான அச்சுறுத்தல்களாலும் கைக்கூலிகளாலும் கொலைகளாலும் சோவியத் தொழிலாளர்களின் அரசாங்கத்தைக் கவிழ்க்க முயன்ருர்கள். பிரிட்டிஷ் ஏஜென்டுகள் பெரிய நகரங்களுக்குத் தேவைப் பொருள்கள் செல்லவிடாது தடுக்கும் பொருட்டு ரெயில்வே பாலங்களை வெடிவைத்துத் தகர்த்தார்கள். தங்கள் தூதுவ நிலையங்களிலிருந்து காப்புரிமை பெற்றிருந்த பிரெஞ்சு ஏஜென்டுகள் ரெயில் எஞ்சின்களின் உராய்வுதாங்கிகளில் குருந்தக்கல்லை வைத்து அவற்றைச் சிதைத்தார்கள்.

இந்த எதார்த்த நிகழ்ச்சிகளுக்கு எதிர்நின்று லெனின் பின்வருமாறு கூறிஞர்:

''ஆம், நமக்கு விறல்மிக்க பகைவர்கள் இருக்கிருர்கள். ஆனுல் அவர்களை எதிர்ப்பதற்குப் பாட்டாளிகளின்

---

*ருஷ்யாவில் செக்கோஸ்லோவாக்கியப் படைப்பிரிவுகள் முதலாவது உலக யுத்தத்தின்போது செக், ஸ்லோவாக் போர்க்கைதிகளைக் கொண்டு அமைக்கப்பட்டன. 1918, மே மாதத்தில் பிரெஞ்சு, பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் சோஷலிஸ்ட் புரட்சிவாதிகள், மென்ஷெவிக்குகள் ஆகியோரின் செயலூக்கமுள்ள உதவியுடன் வோல்காப் பிரதேசத்திலும் சைபீரியாவிலும் செக் படைப்பிரிவுகளில் புரட்சி எதிர்ப்புக் கலகத்தை மூட்டிவிட்டார்கள்.

இரும்புப் பட்டாளம் நம்மிடம் உள்ளது. விரிவான பெரும்பான்மையினர் இன்னும் உண்மையாக உணர்வு பெறவில்லை, அவர்கள் இன்னும் ஊக்கத்துடன் செயல்படவில்லை. இதன் காரணம் தெளிவு. அவர்கள் போரினால் களைத்து, பசியால் வாடிச் சோர்ந்திருக்கிறார்கள். புரட்சி இப்போது மேற்போக்காகத்தான் இருக்கிறது. ஆனால் ஓய்வு கிடைத்ததும் மக்களிடையே பெருத்த உள மாற்றம் ஏற்படும். அது உரிய நேரத்துக்குள் மட்டும் ஏற்பட்டுவிட்டால் சோவியத் குடியரசு காப்பாற்றப்பட்டுவிடும்.''

லெனினது கருத்துப்படி 1917, நவம்பர் மாத நிகழ்ச்சி—திரளான பொதுமக்கள் காட்சிப் பகட்டான முறையில் பாய்ந்து தாக்கி ஆட்சியைக் கைப் பற்றியது—புரட்சி அல்ல. இந்தத் திரளான மக்கள் தங்கள் குறிக்கோளை உணர்ந்து, கட்டுப்பாட்டையும் ஒழுங்கான உழைப்பையும் மேற்கொண்டு, தங்களது பெருத்த படைப்பாற்றல்களையும் ஆக்கத் திறன்களையும் செயலில் ஈடுபடுத்துவதுதான் புரட்சி ஆகும்.

அந்தத் தொடக்க நாட்களில் சோவியத் குடியரசு காக்கப்பட்டுவிட்டது என்ற உறுதியான நம்பிக்கை லெனினுக்கு ஒருபோதும் ஏற்படவில்லை. ''இன்னும் பத்து நாட்கள்! அப்புறம் நாம் பாரிஸ் கம்யூன் அளவு காலம் நீடித்து நிலைத்திருந்தவர்கள் ஆகிவிடுவோம்'' என்றார் அவர். பெத்ரோகிராதில் நடந்த சோவியத்துக்களின் மூன்றாவது அகில ருஷ்யக் காங்கிரஸின் முன் தமது உரையை அவர் பின்வரும் சொற்களில் தொடங்கினார்: ''தோழர்களே, பாரிஸ் கம்யூன் எழுபது நாட்களே நிலைத்திருந்தது என்பதை எண்ணிப் பாருங்கள். நாம் ஏற்கனவே அதைவிட இரண்டு நாட்கள் அதிகமாக நீடித்திருந்து விட்டோம்.''

பதின் மடங்கு எழுபது நாட்களுக்கும் மேல் மாபெரும் ருஷ்யக் கம்யூன் பகைவர்களின் உலகத்தை எதிர்த்துத் தாக்குப்பிடித்துவிட்டது. பாட்டாளி மக்களின் விடாப்பிடி, இடையறா முயற்சி, அசையா உறுதி, வீரம் ஆகியவற்றின் மீதும், பொருளாதார, இராணுவ பண்பாட்டுத் துறைகளில் அவர்களுடைய வருங்கால வாய்ப்புக்கள் மீதும்

லெனின் கொண்டிருந்த நம்பிக்கை மிகப் பெரிது. அவர்களுடைய சாதனைகள் அவரது பற்றூர்ந்த நம்பிக்கையின் மெய்ப்பிப்பு மட்டுமே அல்ல. அவருக்கே அவை பெருவியப்பின் ஊற்றுக்கண்ணுக விளங்குகின்றன.

18. ருஷ்யப் புரட்சி லெனினைச் சாராது தனித்த வெற்றி ஆகும்

லெனின் ருஷ்ய வானில் எழுந்து உலக அரங்கின் மையப் பிரமுகர் ஆகிவருகையில் அவரைச் சுற்றி ஒரு விவாதப் புயல் உக்கிரமாக வீசிக்கொண்டிருக்கிறது.

திகிலடைந்த பூர்ஷ்வா வர்க்கத்துக்கு அவர் எதிர்பாராப் பேரிடியாக, இயற்கையின் பயங்கர உற்பாதமாக, உலகையே அழிக்கும் கொள்ளை நோயாகத் தோற்றம் அளிக்கிறூர்.

இரகசியவாதப் போக்கு உள்ளவர்களுக்கு, விந்தையான முறையில் நிறைவேறிய போருக்கு முந்திய தீர்க்கதரிசன உரையில் குறிப்பிடப்பட்ட மாபெரும் ''மங்கோலிய ஸ்லாவியர்'' வடிவில் அவர் காட்சி தருகிறூர். இந்தத் தீர்க்கதரிசன உரை தல்ஸ்த்தோயால் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. உலக மகாயுத்தம் நிகழும் என்று முன்னுரைத்தபின் இந்த உரை கூறுவதாவது: ''ஐரோப்பா முழுவதும் தீப்பட்டெரிவதையும் குருதி பெருக்குவதையும் நான் காண்கிறேன். பெரிய போர்க்களங்களின் புலம்பல்களை நான் கேட்கிறேன். 1915ம் ஆண்டு வாக்கில் வடக்கிலிருந்து ஒரு விந்தை மனிதர் இந்த உதிரப்பெருக்கு நாடகத்தில் பிரவேசிக்கிறூர். அவர் இராணுவப் பயிற்சி அற்றவர், எழுத்தாளர் அல்லது பத்திரிகையாளர். ஆயினும் ஐரோப்பாவின் பெரும் பாகம் 1925 வரை அவருடைய பிடிக்குள் இருக்கும்.''

பிற்போக்குச் சர்ச்சின் கண்களுக்கு லெனின் கிறிஸ்து-விரோதி. புனிதக் கொடிகளையும் தேவ உருவங்களையும் சுற்றிக் குடியானவர்களை அணிதிரட்டி அவர்களைச் செஞ்சேனைக்கு எதிராக நடத்திச் செல்லப் பாதிரிகள் முயல்கிறூர்கள். ஆனுல் குடியானவர்களோ, ''அவர் கிறிஸ்து-

விரோதியாக இருக்கலாம், ஆனால் எங்களுக்கு நிலமும் விடுதலையும் கொண்டு தருகிறார். அப்படியிருக்கும்போது அவருக்கு எதிராக நாங்கள் எதற்காகச் சண்டை செய்ய வேண்டும்?'' என்று சொல்லுகிறார்கள்.

சாதாரண மனிதர்களுக்கோ லெனின் அனேகமாக அதிமனித மகத்துவம் உள்ளவராகத் தோன்றுகிறார். அவர் ருஷ்யப் புரட்சியை ஆக்கியவர், சோவியத்தை நிறுவியவர், ருஷ்யாவின் இன்றையச் சிறப்புக்கள் எல்லாவற்றுக்கும் காரண புருஷர். ''லெனினையும் த்ரோத்ஸ்கியையும் கொன்று விட்டால் புரட்சியையும் சோவியத்துக்களையும் கொன்று விடுவீர்கள்.''

இவ்வாறு நினைப்பது வரலாற்றை மாபெரும் மனிதர்களின் படைப்பு என்று கருதுவது ஆகும். பெரிய நிகழ்ச்சிகளும் சகாப்தங்களும் மாபெரும் தலைவர்களாலே நிச்சயிக்கப்படுவதுபோல அர்த்தப்படும் இது. ஒரு சகாப்தம் முழுவதும் ஒரு தனி நபரில் வெளியீடு பெறலாம் என்பதும் ஒரு பெரிய பொதுஜன இயக்கம் ஒரு தனி மனிதரைக் குவிமுனையாகக் கொண்டிருக்கலாம் என்பதும் உண்மையே. ஆனால் வரலாற்றில் தனிநபரின் பங்கு பற்றிய கார்லைலின் கருத்துக்கு நாம் இந்த அளவுக்கு மட்டுமே விட்டுக்கொடுக்க முடியும்.

ருஷ்யப் புரட்சி ஒரு தனி மனிதரையோ அல்லது மனிதர்களின் ஒரு குழுவையோ ஆதாரமாகக் கொண்டு இயங்குவதாகக் காட்டும் வரலாற்று விளக்கம் எதுவும் தவறான வழியில் இட்டுச்செல்வது ஆகும். ருஷ்யப் புரட்சியின் நற்பேறு தமது கைகளிலோ தமது கூட்டாளிகளின் கைகளிலோ இருக்கிறது என்ற கருத்தை எல்லோருக்கும் முன்னர் லெனினே எள்ளி நகையாடுவார்.

ருஷ்யப் புரட்சியின் தலைவிதி அது எந்த ஊற்றுக்கண்ணிலிருந்து உற்பத்தி ஆயிற்றோ அதிலேயே—வெகுஜனங்களின் உள்ளங்களிலும் கரங்களிலுமேயே—இருக்கிறது. எந்தப் பொருளாதாரச் சக்திகளின் அழுத்தம் இந்த வெகுஜனங்களைச் செயலில் ஈடுபடுத்தியதோ, அவற்றைச் சார்ந்திருக்கிறது அது. பல நூற்றாண்டுகளாக இந்த மக்கள் அசைவின்றி, பொறுமையாக, நீண்ட துன்பம் உழன்று

வந்தார்கள். ருஷ்யாவின் விரிந்த பெருவெளிகள் எங்கணும், மாஸ்கோச் சமவெளிகளிலும் உக்ரேனிய ஸ்தெப்பிகளிலும் சைபீரியாவின் பேராறுகளை ஒட்டிய பகுதிகள் யாவற்றிலும் இந்த மக்கள் வறுமையின் சாட்டையடியால் உந்தப்பட்டு, மூடநம்பிக்கைகளால் பிணிப்புண்டு உழைத்து வந்தார்கள். அவர்களது நிலைமை கால்நடைகளின் நிலைமையைவிட மேம்பட்டதாக இல்லை. ஆனால் எல்லா விஷயங்களுக்கும்—ஏழைகளின் பொறுமைக்குக்கூட—முடிவு உண்டு.

1917, மார்ச் மாதம் நகர மக்கள் தங்கள் விலங்குகளை உலகம் எங்கும் கேட்ட மடார் ஒலியுடன் உடைத்து எறிந்தார்கள். படைவீரர்களின் சைனியத்தின் பின் சைனியமாக அவர்களது உதாரணத்தைப் பின்பற்றிக் கிளர்ச்சி செய்தது. பின்பு புரட்சி கிராமங்களுக்குள் புகுந்து பரவியது, மேலும் மேலும் ஆழச் சென்று, மிகப் பின்தங்கிய பகுதியினரின் உள்ளங்களிலும் புரட்சி உணர்ச்சியை மூட்டிவிட்டது. முடிவில் பதினாறு கோடி மக்கள்—பிரெஞ்சுப் புரட்சியில் இருந்ததுபோல் ஏழு மடங்கு மக்கள்தொகை—கொண்ட நாடு அனைத்தும் தீவிர எழுச்சிக் கொந்தளிப்பு உற்றது.

மாண்புசால் காட்சி ஒன்றால் வசீகரிக்கப்பட்டு ஒரு மக்களினம் முழுவதும் கச்சையை வரிந்து கட்டிக் கொண்டு புது அமைப்பை நிறுவ முற்பட்டுள்ளது. பல நூற்றாண்டுகளில் மனித உணர்ச்சியின் மிகப் பெருத்த இயக்கம் ஆகும் இது. வெகுஜனங்களின் பொருளாதார நலன் என்ற மூலக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு நியாயத்தின் பொருட்டு நடத்தப்பெறும் யாவற்றிலும் அசையா உறுதிமிக்க தாக்குதல் இதுவே ஆகும். ஒரு நாடு முழுவதும் அறப் போர் வீரனாக மாறி, புது உலகம் பற்றிய காட்சிக்கு உரிய விசுவாசத்தைக் கடைப்பிடித்தவாறு, பட்டினியையும் யுத்தத்தையும் முற்றுகையையும் சாவையும் மதியாமல் வீறுநடை நடந்து முன்னே செல்கிறது. மக்களது நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்துகொள்ளாத தலைவர்களை ஒரு புறம் பெருக்கித் தள்ளிவிட்டு, அவர்களுடைய தேவைகளுக்கும் அபிலாஷைகளுக்கும் ஏற்பச் செயலாற்றுபவர்களைப் பின்பற்றியவாறு அது விரைந்து முன்னே ஏகுகிறது.

ருஷ்யப் புரட்சியின் விதி வெகுஜனங்களையே, அவர்களது கட்டுப்பாட்டையும் ஆழ்ந்த பற்றையுமே சார்ந்திருக்கிறது. அதிர்ஷ்டம் அவர்களிடம் மிகவும் அன்பு காட்டியிருக்கிறது என்பதில் ஐயமில்லை. பேரறிவும் எஃகுச் சித்தவுறுதியும் வாய்ந்த ஒருவரை, விரிந்த நூற்பயிற்சியும் அச்சமற்ற செயல்வன்மையும் கொண்ட ஒருவரை, மிக உயர்ந்த ஆதர்சவாதமும் மிகக் கண்டிப்பான நடைமுறை மதிநுட்பமும் உடைய ஒருவரை அவர்களுக்கு வழிகாட்டியாகவும் விளக்குபவராகவும் அது நல்கியிருக்கிறது.

உலகிலேயே பெரிய வரவேற்பு அறை

பதினைன்கு ஆண்டுகளுக்கு முன், நான் அமெரிக்கா புறப்படுவதற்குத் தலைக்குநாள் லெனினைக் கிரெம்ளினில் உள்ள அவரது அலுவலகத்தில் சென்று கண்டேன். நான் அங்கே போனது அது முதல் தடவை அல்ல. அவரைச் சந்திக்கவும் அவரிடமிருந்து அன்புகனிந்த உதவிகள் பெறவும் பல முறை எனக்கு வாய்ப்பு கிடைத்திருந்தது. ஏனெனில் புரட்சியின் மிக மிக நெருக்கடி நிறைந்த புயல்வீசிய நாட்களில்கூட லெனின் எதையும் அற்பமானது என்றோ சாரமற்றது என்றோ தள்ளிவிடவில்லை.

ருஷ்ய மொழியை எவ்வாறு கற்க வேண்டும் என்பது பற்றி அவர் எனக்கு ஆலோசனை கூறினார். பெத்ரோகிரா

தில் ஒரு கவச மோட்டாரின் மேலிருந்து நான் செய்த பிரசங்கத்துக்கு மொழிபெயர்ப்பாளராகக்கூட அவர் பணியாற்றினூர். ஒரு பெட்டி நிறையப் பிரசுரங்களையும் புத்தகங்களையும் சேகரிப்பதற்கு அவர் எனக்கு உதவினூர். சைபீரிய ரெயில்வே ஊழியர்களுக்குத் தம் கைப்படக் கடிதம் எழுதி அந்தப் பெட்டியை மிக மிக ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள்ளும்படியும் அது தவறிவிடாமல் பார்த்துக்கொள்ளும் படியும் அவர்களைக் கேட்டுக்கொண்டார். நான் செஞ்சேனையில் சேர்ந்ததும் அவர் மகிழ்ச்சிபொங்க எனக்கு வாழ்த்து உரைத்தார், ஒரு சர்வதேச லீஜியன் அமைக்கும்படி எனக்கு யோசனை கூறினூர்.

எனவே லெனினது முகப்பு அறையில் நான் பல முறை இருந்திருக்கிறேன். எப்போதும் போலவே வெவ்வேறு வகையான பிரமுகர்கள்—அரசாங்க தூதர்கள், இராணுவ அதிகாரிகள், பழைய பூர்ஷ்வாக்கள், நிருபர்கள் முதலியோர்—இங்கே பேட்டிக்காகக் காத்திருப்பார்கள்.... இவர்கள் எல்லோரையும், கம்யூனிஸத்தின் அப்பட்டமான பகைவர்களைக்கூட, லெனின் ஒளிவுமறைவற்ற முறையில்—மரியாதையுடனும் கபடின்றியும்—வரவேற்பார். அந்தச் சமயத்தில் லெனினுடன் பேச்சுவார்த்தை நடத்திய ஓர் ஆங்கிலேயர், அவருடைய போக்கு பின்வருமாறு இருந்தது என்று சொல்லுகிறூர்: ''சொந்த முறையில் உங்கள் மீது எனக்குப் பகைமை எதுவும் இல்லை. ஆனூல் அரசியல் நோக்கில் நீங்கள் என் பகைவர், உங்களை அழிப்பதற்கு எனக்குத் தோன்றும் எல்லா ஆயுதங்களையும் நான் பிரயோகித்தாக வேண்டும். உங்கள் அரசாங்கம் எனக்கு எதிராக இதையே செய்கிறது. இப்போது எவ்வளவு தூரம் நாம் சேர்ந்து செல்ல முடியும் என்பதைப் பார்ப்போம்.''

இம்மாதிரித் தொடர்புகளில் லெனினுக்குச் சொந்த வகை மகிழ்ச்சி எதுவும் கிட்டியிருக்க முடியாது. ஆனூல் இவ்வாறு செய்வது அவருடைய பதவிக்கு உரிய கடமையாக இருந்தது, எனவே அவர் அதைச் செய்தார். ஆனூல் இதைக் கூடியவரை விரைவாகவே அவர் முடித்துவிடுவார். அவருடைய இயற்கையான உறவுகள் அவரது கட்சிக் கூட்

டாளிகளுடன்தான், தொழிலாளர்கள், குடியானவர்களுடன் தான் இருந்தன. அவர்களுடன் தமது நேரத்தைச் செல விடுவதையே அவர் மேலாக மதித்தார். நேரத்தை அள விட்டுப் பங்கிட நேர்கையில் முதல் வகைப்பிரிவில் அவர் களே இருந்தார்கள். கடைசிப் பேட்டியின்போது இந்த உண்மை என் நெஞ்சில் வலிவாகப் பதிந்தது.

எதிர்பார்ப்பு அறையில் எங்கள் முறைக்காக நாங்கள் பலர் காத்திருந்தோம். நாங்கள் சற்று நேரம் காக்க வைக்கப் பட்டோம். இது வழக்கத்துக்கு மிகவும் மாருக இருந்தது: ஏனெனில் தமது சந்திப்புத் திட்டங்களைக் குறித்த நேரத்தில் நிறைவேற்றுவதில் லெனின் எப்போதும் கருராக இருந்தார். ஆகவே, ஏதோ அசாதாரண முக்கியத்துவம் உள்ள அர சாங்கக் காரியம் வந்துவிட்டதுபோலும், யாரோ அசாதார ணப் பிரமுகர் லெனினை இவ்வாறு தவக்கப்படுத்துகிருர் போலும் என நாங்கள் முடிவு செய்தோம். அரை மணி, ஒரு மணி, ஒன்றரை மணி ஆயிற்று. நாங்கள் பொறுமையின்றி வீணே காத்திருந்தோம். உள் அலுவலகத்திலிருந்து லெனி னைக் காணவந்தவரின் அமுங்கிய குரல் இடைவிடாது ஒலித் துக் கொண்டிருந்தது. லெனினுடன் இவ்வளவு நீண்ட பேட் டிக்கு அனுமதிக்கப்பட்டிருக்கும் இந்த முழு அதிகாரம் பெற்ற தூதர் யாரோ? கடைசியில் கதவு திறந்தது. அறைக்குள் ளிருந்து வெளிவந்த ஆளைக் கண்டதும் எதிர்பார்ப்பு அறை யில் இருந்தவர்கள் எல்லோருக்கும் ஒரே வியப்பாய்ப் போய்விட்டது: அந்த ஆள் இராணுவ அதிகாரியோ, அரச தூதரோ அல்லது உயர் பதவி வகிக்கும் பிரமுகரோ அல்ல, ஆட்டுத்தோல் கோட்டும் மரவுரிச் சோடுகளும் அணிந்த பம்பைத்தலை ''முழிக்''—அதாவது, சோவியத் நாடு எங் கும் லட்சக் கணக்கில் எதிர்ப்படும் சாதாரண மாதிரியான ஏழைக் குடியானவன்.

நான் அவரது அறைக்குள் புகுந்ததும் லெனின் சொன் ஞர்: ''உங்களிடம் மன்னிப்பு கோருகிறேன். இந்த ஆள் தம்போவ் பிரதேசத்தைச் சேர்ந்த குடியானவர். மின்சார மயமாக்கல், கூட்டுப்பண்ணை அமைப்பு, புதிய பொருளா தாரக் கொள்கை ஆகியவை பற்றி அவருடைய கருத்துக்

களைக் கேட்க விரும்பினேன். உரையாடல் மிகச் சுவையாக இருந்தமையால் நேரத்தை மறந்தே விட்டேன்.''

தமது பல்கலைக்கழகக் கல்வி, தமது பிரயாணங்கள், தாம் எழுதிய முப்பது தொகுதி நூல்கள் ஆகியவற்றிலிருந்து லெனின் இந்தத் தம்போவ் ''முழிக்'' வாழ்நாள் முழுவதிலும் அறியக்கூடியதைக் காட்டிலும் எல்லையின்றி அதிகமாகச் சித்தாந்த ரீதியிலும் கல்வியறிவு வகையிலும் கட்டாயமாக அறிந்திருந்தார். மறு புறம், கைப்பான வாழ்க்கை, கடும் உழைப்பு என்னும் கடினமான பள்ளியிலிருந்து அந்த ''முழிக்'' விவகார ரீதியில் பற்பல விஷயங்களைத் தெரிந்து வைத்திருந்தான். மண்ணிலிருந்து பெற்ற மூதறிவு அவனிடம் இருந்தது. அவன் தெரிந்துகொண்டிருந்ததை அறிய லெனின் ஆவல் கொண்டார். முற்றிலும் எழுத்தறிவற்றவன்கூடத் தமக்கு ஏதேனும் ஞானம் புகட்டக்கூடும் என்று புரிந்துகொள்ளும் பணிவு எல்லா உண்மைச் சான்றோரையும் போலவே லெனினிடம் இருந்தது. இவ்வாறு அவருடைய தகவல் பாதைகள் மிக மிக வெவ்வேறான இடங்களையும் மனிதர்களையும் எட்டின. சேகரிக்கப்படும் ஆயிரக்கணக்கான மெய்விவரங்களை அவர் கவனமாகச் சீர்தூக்கி, தெள்ளி எடுத்து, பகுத்தாராய்ந்தார். இவ்வாறு செய்தது அவருக்குப் பகைவர்களைவிட அனுகூலமான வாய்ப்பை அளித்தது. இந்த வாய்ப்பு, அடிக்கடி எதிரிகளின் குயுக்திகளை வீணாக்கவும் சூழ்ச்சிகளை முறியடிக்கவும் அவருக்கு வல்லமை தந்தது. சைபீரியக் குடியானவன், செஞ்சேனை வீரன் அல்லது தோன் பிரதேசக் கஸாக்கியனின் போக்கையும் கருத்துக்களையும் அவர் ஊகிக்க வேண்டியிருக்கவில்லை. லெனின்கிராத் வார்ப்புத் தொழிலாளியோ, வோல்காப் படகோட்டியோ, மாஸ்கோ பணிப்பெண்ணோ என்ன நினைக்கிறார்கள், உணர்கிறார்கள் என்பது அவருக்கு மர்மமாக இருக்கவில்லை. அவர் இவர்களோடு நேரிலோ, இவர்களுடன் அப்போதுதான் பேசிய நம்பகமான தோழருடனோ தாமே உரையாடி விஷயங்களைத் தெரிந்துகொண்டார்.

அவருக்குக் கொடுப்பதற்கு அவர்களிடம் ஏதேனும் விஷயம் இருந்தது. இந்தக் காரணத்தால்தான் அவர்களை எதிர்கொள்ள அவர் எப்போதும் தயாராயிருந்தார். இதற்கு

இன்னொரு காரணம், அவர்களுக்கு அளிப்பதற்கும் அவரிடம் விஷயங்கள் இருந்தன என்பதாகும்: சமூகச் சக்திகளையும் புரட்சியின் போர்த்தந்திரத்தையும் பற்றிய தம்முடைய அறிவு, சோஷலிஸத்தை நிறுவுவதற்கான தமது திட்டங்கள், ஏற்பாடுகள் ஆகியவற்றை அவர் அவர்களுக்குத் தர முடிந்தது. மேலும் ஒரு காரணம்—இது எல்லாவற்றிலும் வன்மையானது—அவர்களை அவர் விரும்பினார், உளமார விரும்பினார், நேசித்தார் என்பதே. முதலாளித்துவத்தின் ஒட்டுண்ணிகளும் கையாட்களுமான தரகர்கள், கள்ளவியாபாரிகள், செல்வத்தில் புரட்டும் தகிடுதத்தமும் செய்பவர்கள் ஆகியோர்பால் லெனின் தனிப்பட்ட அருவருப்பு கொண்டிருந்தார். மாருக, செல்வத்தை உற்பத்தி செய்பவர்கள் மீது, நிலக்கரியிலும் கல்லிலும் உலோகத்திலும் வேலை செய்பவர்கள், வயல்களிலும் காடுகளிலும் உழைப்பவர்கள் ஆகியோர் மீது அவர் தனிப்பட்ட அன்பு செலுத்தினார்.

பதினைன்கு ஆண்டுகளுக்கு முன்பு, தம்போவ் பிரதேசத்தைச் சேர்ந்த அந்த ஒரு ''முழிக்கை'' மட்டுமே அல்ல, கோடானுகோடி ''முழிக்குகள்'' அனைவரையும் எதிர்கொள்ள அவர் தயாராக இருந்திருப்பார். முடிந்திருந்தால் உலகனைத்தின் தொழிலாளிகளும் குடியானவர்களும் தமது அலுவலறைக்குள் வெள்ளமாய்ப் பெருகிவர அவர் மகிழ்வுடன் அனுமதித்திருப்பார்.

இன்று நான் லெனினது சமாதிக்குப் போயிருந்த சமயம், இப்போது லெனின் இதையே செய்துகொண்டிருக்கிருர் என்ற எண்ணம் சட்டென என் உள்ளத்தில் பளிச்சிட்டது. மாஸ்கோவின், சோவியத் யூனியனின், உலகம் அனைத்தின் மக்களுக்கு அவர் பேட்டி அளித்துக்கொண்டிருக்கிருர். இந்த பேட்டி பதினைன்கு ஆண்டுகளுக்கு முந்திய அந்த பேட்டியைப் பெரிதும் ஒத்திருக்கிறது. தற்போது லெனின் பேட்டி அளிக்கும் கருஞ்சாம்பல் நிற, கருஞ் சிவப்பு நிறக் கற்கட்டிடம் அதிகக் கம்பீரமானது, இன்னும் பெருத்த உளப்பதிவை ஏற்படுத்துவது என்பது உண்மையே. லெனினைக் காணச் செல்வதற்குத் தங்கள் முறைக்காக மக்கள் காத்திருக்கும் எதிர்பார்ப்பறை மிக அதிக விசாலமானது என்பதும் உண்மையே—பின்பக்கம் கிரெம்ளின் கொத்தளச்

சுவரும், மருங்கில் சர்வதேசத் தொழிலாளர் கீதத்தை இசைக்கும் ஸ்பாஸ்க்காயா கோபுரமும் புரட்சி வீரர்களின் கல்லறைகளும் அமைந்துள்ள செஞ்சதுக்கமே இப்போது அந்த எதிர்பார்ப்பறையாக விளங்குகிறது.

உலகிலேயே யாவற்றிலும் பெரிய எதிர்பார்ப்பறை இது. உள்ளே போய் லெனினைக் காண்பதற்குக் காத்திருக்கும் மக்களின் தொகை இப்போது முன்பைவிட நூறு மடங்கு, ஆயிரம் மடங்கு அதிகம். இந்த விஷயங்களில் பதினைன்கு ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த நிலைமைக்கும் தற்போதைய நிலைமைக்கும் வித்தியாசம் இருக்கிறது.

ஆனால் ஓர் அம்சத்தில்—மிக முக்கியமான, அடிப்படையான அம்சத்தில்—இது முந்தியதை அப்படியே ஒத்திருக்கிறது. அதாவது, எம்மாதிரி மக்கள் உள்ளே சென்று லெனினைப் பார்ப்பதற்காகக் காத்திருக்கிறார்கள் என்ற அம்சத்தில். நண்பகல் ஆனதுமே உருவாகத் தொடங்கும் பெரிய வரிசையில் இருப்பவர்கள் பெரும்பாலும் தொழிலாளர்களும் குடியானவர்களுமே. இம்மாதிரி மக்களையே லெனின் விரும்பினார். சோஷலிஸத்தை நிறுவுவதற்கு இந்த மக்களின் ஆற்றலையும் உழைப்பையும் ஈடுபாட்டையுமே அவர் நம்பியிருந்தார். வர வர விரைந்த வேகத்துடன் வளரும் பெரிய இரட்டை வரிசையில் நிற்பவர்கள் அநேகமாக விதிவிலக்கின்றி இத்தகைய மக்களே. அஞ்சலி செலுத்தல் தொடங்கும் நேரத்திற்குள் இந்த வரிசை சமாதியிலிருந்து ஒரு மைல் அல்லது இன்னும் அதிக தூரத்துக்கு நீண்டு சதுக்கத்தின் வெண்பனி போர்த்த தரை மீது வளைந்து வளைந்து செல்கிறது.

இந்த வரிசையில் உள்ளவர்களில் சிலரது நோக்கம் வீண்பெருமை பீற்றிக் கொள்வதுதான். தாங்கள் லெனினுடைய முகத்தை உண்மையாகவே பார்த்ததாகக் கூட்டாளிகளிடம் ஜம்பம் அடித்துக்கொள்ள அவர்கள் விரும்புகிறார்கள். ஒரு சிலர் நோட்டம் பார்க்கும் ஆவல் காரணமாக இங்கே வந்திருக்கிறார்கள். இவர்கள் பூர்ஷ்வாக்கள், இவர்களில் பல வெளிநாட்டினர் இருக்கிறார்கள். எவருடைய பெயர் பயங்கரக் கனவு போலத் தங்கள் தூக்கத்தில் விடாது தோன்றிக்கொண்டிருக்கிறதோ, உலகின் ஏகாதி

பத்தியவாதிகள், பிற்போக்காளர்களின் உறக்கத்தைக் கெடுத்துக்கொண்டிருக்கிறதோ அவரைப் பூதவுடலில் காண விரும்புகிருர்கள் இவர்கள். எனினும் இந்தப் பெரிய வரிசையில் இத்தகையவர்கள் ஒரு கணக்கிடவே தகுதியற்ற அளவு அற்பமானவர்கள். ஒரு சிலர் தவிர மற்றவர்கள் யாவரும் தங்கள் தலைவர்பால் உள்ள மரியாதை, பக்தி, அன்பு ஆகியவையால் தூண்டப்பட்டே இங்கே வந்திருக்கிருர்கள். இவ்வுணர்ச்சிகள் சந்தேகமின்றி மிக உண்மையானவையாகவும் உளமார்ந்தவையாகவும் இருக்க வேண்டும். எனவேதான் கடுங்குளிர்காலத்தில் இவர்கள் இங்கே நின்றுகொண்டிருக்கிருர்கள்.

நான் வரிசையோரமாக நடந்து, நடு நடுவே நின்று, ''நீங்கள் எங்கிருந்து வந்திருக்கிறீர்கள்?'' ''என்ன வேலை செய்கிறீர்கள்?'' ''எதற்காக வந்திருக்கிறீர்கள்?'' ''லெனினைப் பற்றி முதன்முதலாக எப்போது கேள்விப்பட்டீர்கள்?'' என்று கேட்டேன்.

விந்தையான ஒலியழுத்தத்துடன் பேசும் அயலான் ஒருவன் அவர்களுடைய வாழ்க்கை விவரங்களைத் துருவி ஆராய முற்படுவது ஓரளவு துடுக்கானதுதான். இதனல் மனத்தாங்கல் கொள்ள அவர்களுக்கு உரிமை உண்டு. ஆனல் கேள்வி கேட்பதற்கு முன், ''எனக்கு லெனினைத் தெரியும். நான் அவருடன் பேசியிருக்கிறேன். அவருடன் கைகுலுக்கியிருக்கிறேன்'' என்பேன். இது என்மீது அவர்களுக்கு மதிப்பு ஏற்படுத்திவிடும். அவர்கள் தாராளமாகப் பேசுவார்கள். மரவுரி சோடுகள் அணிந்த ஐந்து மார்த்வீனியர்களுடன் முதலில் பேசினேன். தங்களுக்குச் சொந்தக் குடியரசு இருக்கிறது என்பதிலும் தங்கள் தலைவன் (ஸ்தாரஸ்தா) 1905ம் ஆண்டிலேயே லெனினைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தான் என்பதிலும் அவர்களுக்கு ஒரே பெருமை.

இதனல் ஒரு புர்யாத்துக்கு முகம் விழுந்து போயிற்று. 1920ம் ஆண்டுவரை தான் லெனினது பெயரைக் கேள்விப்படவில்லை என்று அவன் ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது. எனினும் இப்போது ஒவ்வொரு புர்யாத்தின் வீட்டிலும் லெனினுடைய படம் இருக்கிறது என்றும், போன குளிர்காலத்தில் அவர்கள் பனிக் கட்டியில் அவருடைய பெரிய

உருவச்சிலை செதுக்கியதாகவும் அவன் சொன்னான். அவனுடைய சொந்த இடமான தூர வடக்குப் பகுதியில் குளிர் காலம் மிகக் கடுமையானது, நீண்டது. அதனுடன் ஒப்பிட்டால் மாஸ்கோ ஓரளவு வெப்ப மண்டலத்தைப் போன்றது.... இதைப் பற்றிக் குறைகூறக்கூட அவன் தயாராயிருந்தான்.

தவளைப் பச்சை நிறக் கச்சாப் பட்டு மேலங்கியை (ஹலாத்) உடலை இன்னும் ஒட்டினாற்போல இறுக்கிக்கொண்டிருந்த உஸ்பெக்கியனோ, நேர் மாறாகக் குளிரில் வெடவெடத்துக் கொண்டிருந்தான். வெளேரென்றிருந்த சதுக்கத்தில் அவனது மேலங்கி துலக்கமான வண்ணக் கற்றையாகத் திகழ்ந்தது. பழைய புஹாரா நகருக்கு வந்து தங்கள் கூட்டுப்பண்ணை மணற் பாழ்நிலத்தைப் பூங்காக்களும் பழத் தோட்டங்களும் வளர்த்துச் சீர்படுத்திக் கொண்டிருப்பதைக் காண்பதற்கு லெனின் உயிர் வாழ்ந்திருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று பொருமுகிறான் அவன்.

இதற்கு முற்றிலும் மாறாக விளாதீமிர் நகரத்திற்கு அருகிலுள்ள பகுதியிலிருந்து வந்திருக்கும் ஒரு குழுத்தலைவன் தனது கூட்டுப்பண்ணை தழைக்கவே இல்லை என்கிறான். அகழ்ந்தெடுக்கப்படாத உருளைக்கிழங்கு வயல்களில் அழுகிக் கொண்டிருக்கிறது, சூடடிக்கப்படாத ஓட் கதிர்கள் போர்களிலேயே முளை விட்டுக்கொண்டிருக்கின்றன என்று அவன் சொல்லுகிறான். ஆயினும் லெனினைப் பார்க்க முடிந்தால் தனக்கு உற்சாகம் பிறக்கும், மீண்டும் வேலையில் முனைந்து ஈடுபடலாம் என்று அவன் எண்ணுகிறான்.

இன்னொரு கூட்டுப் பண்ணைக்காரன் ஸ்மொலேன்ஸ்க் பகுதியைச் சேர்ந்த ஓர்லோவ் மிகயீல் இவானவிச் என்பவன். செஞ்சேனை வீரனாகக் கிரெம்ளின் வழியாகச் செல்கையில் அவன் பல முறை லெனினை அறைகுறையாகப் பார்த்திருந்தான். அது பதினான்கு ஆண்டுகளுக்கு முன்பு. இன்றுவரை மறுபடி மாஸ்கோ வருவதற்கு அவனுக்கு வாய்க்கவில்லை. முக்கியப் போர்முனைகள் எல்லாவற்றிலும் அவன் போரிட்டிருந்தான். வேகாத உருளைக் கிழங்கையே உணவாகக் கொண்டு நாட்கணக்காகக் கழித்திருந்தான். ஒரு முறை பீரங்கிக் குண்டு வெடித்ததால் பெயர்ந்த மண்ணுக்குள் முழுவதும் புதைந்துவிட்டான். போர் முடிந்ததும்

சோவியத் உறுப்பினன் ஆனான். எனினும் ஸ்தலக் கொள்ளைக் கூட்டத்தினர், அதிகார வர்க்கத்தினர், கள்ளச்சாராய விற்பனையாளர்கள் ஆகியோரை எதிர்த்து இன்னும் போராடிக் கொண்டிருந்தான். பின்னர் ''புது வாழ்க்கை'' என்ற கூட்டுப் பண்ணையை ஒழுங்கமைத்தான். புரட்சிக்கு முன்னர் நில மற்றவர்களாக இருந்த முப்பத்தைந்து குடும்பத்தினர் உயர் தர மென்சணலும் தீனிப்புல்லும் 340 தெஸ்யாத்தீனுக்கள்* நிலத்தில் பன்னிரண்டு குதிரைகளையும் ஐம்பத்தேழு மாடு களையும் கொண்டு பயிரிட்டுவந்தார்கள். ஆர்வம் பொங்கும் உற்சாகத்தோடு விரிந்த அனுபவமும் பெற்றிருந்தான் மிகயீல் இவானவிச். கூட்டுப்பண்ணைகள் எப்படி நடக்கின் றன என்பதை அவன் அறிந்திருந்தான். மோசமாக ஒழுங் கமைப்பட்டிருந்த சில மோசமாக நடந்தன. ஆனால் அவனது கூட்டுப்பண்ணை நல்லது, தலைசிறந்தவற்றில் ஒன்று. விளாதீமிர் இல்யீச்சே நேரில் வந்து அதைப் பார்த்தால் கூட அஞ்ச மாட்டேன் என்றான் மிகயீல் இவானவிச்.

சோவியத் யூனியனின் தொலைதூரப் பகுதிகளிலிருந் தும், உலகின் மறு கோடியிலிருந்தும் லெனினைக் காண்பதற் காக மக்கள் இங்கே வந்த வண்ணமாக இருக்கிறார்கள். இதோ ஓர் அமெரிக்கன்: மாலுமியாக எழு கடல்களிலும் கப்பலோட்டினான், பின்பு துறைமுகத் தொழிலாளியாக ஸான் பிரான்ஸிஸ்கோத் துறைமுகத்தில் தனது தொழிற் சங்கத்தின் பொருட்டு நீண்ட போராட்டம் நிகழ்த்தினான். பெர்லினிலிருந்து வந்துள்ள கம்யூனிஸ்ட் மாணவன் இங்கே இருந்தான். ஜெர்மானிய மொழியில் பெயர்க்கப்பட்டுள்ள லெனினது நூல்களை எல்லாம் படித்தவன் இவன். செங் கொரில்லா வீரர்களுடன் சேர்ந்து ஆழ்ந்த சைபீரியக் காடு களில் போரிட்ட சீன கொரில்லா வீரன் ஒருவனும் இங்கே இருந்தான்.

குளிர்கால உடைகளில் வெளிப் பார்வைக்கு மங்கிய சாம்பல்நிறமாக, கவர்ச்சி அற்றதாகத் தோன்றிய இந்த வரிசையில் உழைப்பையும் போராட்டத்தையும் உயர்தரத்

---

*தெஸ்யாத்தீனு'' என்பது 1.0925 ஹெக்டேருக்குச் சமம்.—(மொ-ர்)

துணிகரச் செயல்களையும் பற்றிய டஜன் கணக்கான, ஏன், நூற்றுக்கணக்கான கதைகள் இருந்தன. இந்தக் கதைகள் கவர்ச்சி மிக்கவை, உள்ளத்தை ஈர்ப்பவை ஆதலால் வரிசையில் நெடுந்தூரம் முன்னேறுவது எனக்குக் கடினமாக இருந்தது.

வோல்கா ஆற்றில் கப்பல் சுமையாளாக வேலை செய்பவன் ஒருவன் இங்கே இருந்தான். பழைய ஸிம்பீர்ஸ்க் நகரில் உலியானேவ் குடும்பத்தினரின் வீட்டிலிருந்து முப்பதே கிலோமீட்டர்கள் தூரத்தில் அவன் வசித்தான். உலியானேவ் குடும்பத்தாரைப் பற்றி அண்டை அயலார் பேசுவதை வாழ்நாள் முழுவதும் கேட்டுக்கொண்டிருந்தான் இவன். இந்தக் குடும்பத்தாரில் தலைசிறந்தவரான லெனினைக் காணும் நற்பேறு இன்று அவனுக்கு வாய்க்கப்போகிறது. உற்சாகம் பீறிடும் இளம் கம்யூனிஸ்ட் சங்க உறுப்பினன் ஒருவன் கூட்டுப்பண்ணை அமைப்பையும் அது போன்ற பிற விஷயங்களையும் பற்றிய லெனினது சொற்களை மேற்கோள் காட்டியவாறு நேரத்தைச் சீரிய முறையில் செலவிட்டுக் கொண்டிருந்தான். மரவுரி சோடுகளும் மயிரடர்ந்த ஆட்டுத்தோல் கோட்டும் அணிந்த ஒரு குடியானவன்—பதினான்கு ஆண்டுகளுக்கு முன் லெனினது அலுவலகத்துக்கு வந்த தம்போவ் பிரதேசக் குடியானவனே போன்றவன்—பணைத்த மார்புள்ள மனைவியுடன் ரியாஸான் பிரதேசத்திலிருந்து வந்திருந்தான். இந்தத் தம்பதிகள் லெனினை இப்போது இரண்டாவது தடவையாகப் பார்க்கப் போகிறார்கள். நீஷ்னிய் நோவ்கராதிலிருந்து வந்துள்ள முன்னணித் தொழிற்குழுவினர் இருவரோ இப்போதுதான் முதன் முறையாக லெனினைப் பார்க்கப் போகிறார்கள். துருக்கிஸ்தானிலிருந்து வந்திருக்கும் இரண்டு ரெயில்வே கார்டுகளின் விஷயமும் இதுவே. உண்மையில் வரிசையில் இருப்பவர்களில் மிகப் பெரும்பாலோர் முதல் தடவையாகவே இங்கு வந்திருக்கிறார்கள். இன்னும் அதிகமாகக் கவனத்தைக் கவரும் விஷயம் என்னவென்றால், இவர்கள் உலகின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் இங்கே திரண்டு வந்திருப்பது மட்டுமின்றி, இவர்களில் மிகப் பலர் மாஸ்கோ சேர்ந்ததுமே பார்க்க வேண்டிய முதல் இடமாக லெனின் சமாதியைத் தேர்ந்

தெடுத்திருப்பதுதான். எனினும், சமாதிக்குள் புகும் முதல் வாய்ப்பு இவர்களுக்குக் கிடையாது. அந்தச் சலுகை குழந்தைகளுக்கு உரியது. பள்ளிக்கூட விடுமுறை ஆதலால் இன்று ஆயிரக்கணக்கில் குழந்தைகள் வந்திருக்கிறார்கள். கடுங்குளிர் அவர்களது கன்னங்களுக்குச் செவ்வண்ணம் பூசி, அவர்கள் ஏந்திவரும் பதாகைகள் போன்றே சிவந்தன ஆக்கியிருக்கிறது. இவற்றில் ஒரு பதாகையில், ''எல்லாம் ஐந்தாண்டுத் திட்டத்துக்கே!'' ''நாங்கள் வலியவர்களாக வளர்வோம், வளர்ந்ததும், பெரியவர்களுடன் சேர்ந்து இயந்திரங்கள் நிறுவுவோம்'' என்ற சொற்கள் பொறிக்கப் பட்டிருக்கின்றன. மூன்றாண்டுக் குழந்தைகளின் ஒரு குழு வெண் இதழ்கள் கொண்ட பெரிய காகிதச் சூரியகாந்திப் பூவை உயர்த்திப் பிடித்துக் கொண்டிருக்கிறது. பூவின் நடுவில் திகழ்கிறது குழந்தை லெனினின் பிரசித்திபெற்ற உருவப்படம்.

''இவர்களுக்கு லெனினைப் பற்றி என்ன தெரியும்?'' என்று அவர்களுடைய ஆசிரியர்களிடம் கேட்டேன்.

''குழந்தைகளிடம் நீங்களே கேளுங்களேன்'' என்று கர்வம் பொங்கும் நம்பிக்கையுடன் பதில் அளிக்கிறார்கள் ஆசிரியர்கள். அவர்களுடைய நம்பிக்கை சரியானதே. வாரக்கணக்காகக் குழந்தைகள் லெனினைப் பற்றிக் கற்றுக் கொண்டு வந்திருக்கிறார்கள். இன்று, லெனினைப் பற்றிப் படித்தும் எழுதியும் வந்ததற்கு மகுடம் வைத்தது போல, அவர்கள் அவரைப் பார்க்கப் போகிறார்கள். சமாதி திறக்கப்படுவதற்கு வெகுநேரத்துக்குமுன்பே வெண்கல வாயிற் கதவுகள் விரியத் திறக்கின்றன. குழந்தைகள் வரிசையாக உள்ளே போவதை நாங்கள் ஒரு மணிநேரம் கவனித்துக் கொண்டிருக்கிறோம்.

இப்போது எங்கள் முறை வந்துவிட்டது. இருவர் வரிசையாகக் கூட்டம் இடைவிடாமல் சமாதிப் படிகள் மேல் ஏறுகிறது. தொப்பிகளைக் கழற்றிக் கொண்டு, பேச்சின்றி நாங்கள் உள்புறம் பிரவேசிக்கிறோம். அங்கே விளக்கு வெளிச்சம் மங்கலாக இருக்கிறது. இருபத்து நான்கு படிகள் இறங்கி, கல்லால் ஆன பெரிய ஹாலுக்குள் புகுகி

ேரும். அங்கு படுத்திருக்கும் மனிதர் போன்றே அணிகள் இன்றி, எளிமையாக விளங்குகிறது ஹால். வரிசை நிற்காமல் முன்னே செல்கிறது. அது வெறுமே பேழையைக் கடந்து மட்டும் செல்லவில்லை. ஐந்து படிகள் ஏறி, உயர்ந்த மேடை மீது பேழையை அனேகமாக ஒரு சுற்று வருகிறது ஆட்களின் வரிசை. இவ்வாறு தங்கள் தலைவரின் முகத்தைத் தடையின்றி நேரிட நீண்ட பார்வை பார்க்க எல்லோருக்கும் சமயம் வாய்க்கிறது. பின்னர் வலப்புறம் திரும்பி வடமேற்கு வெளி வாயில் செல்வதற்கான படிகள்மீது நாங்கள் ஏறுகிறேம். ஆயிற்று, மீண்டும் செஞ்சதுக்கத்தை அடைந்துவிடுகிறேம்.

நான் நின்று ஆட்கள் வெளிவருதைக் கவனிக்கிறேன். சமாதிக்குள்ளிருந்து அவர்கள் வெளிவருகிறுர்கள்—துக்கம் கொண்டாடுபவர்கள் போல, விசனமும் துயரமும் நிறைந்த மனநிலையில் அல்ல. சுமைகள் இறக்கி வைக்கப்பட்டுவிட்டன போன்ற பாவத்துடன், புதிய சங்கற்பத்துடன், களைதீர்ந்த, பாரமற்ற தோற்றம் முகங்களில் ஒளிர வருகிறுர்கள் அவர்கள். அவர்களுடைய சொற்களும் இதே மனப்பாங்கை வெளியிடுகின்றன.

''எப்படியோ, அவரைப் பார்த்த பிறகு நெஞ்சுக் கனம் குறைந்துவிட்டது போல் இருக்கிறது'' என்று அந்தரங்கமாகச் சொல்கிறுள் ரியாஸானைச் சேர்ந்த குடியானவமாது.

''பத்து வருஷங்களுக்கு முன் நான் பார்த்தபோது எப்படி இருந்தாரோ அநேகமாக அப்படியே இப்போதும் காணப்படுகிறுர். ஏதோ சிறு உறக்கம் கொள்பவர் போலவும் எந்த நேரத்திலும் விழித்து எழுந்து நம்முடன் பேசுவார் போலவும்'' என்கிறுன் ஸ்மொலேன்ஸ்க் கூட்டுப் பண்ணைக்காரன்.

''லெனின் எழுதிய நூல்களை எல்லாம் வாங்கி இந்தக் குளிர்காலத்தில் அவற்றைப் படிக்கத் தொடங்குவேன்'' என்று உறுதியான தீர்மானத்துடன் சொல்கிறுன் இளங் கம்யூனிஸ்ட்.

ஆம், நடு நடுவே வருத்தத் தொனியும் கேட்கிறது. உதாரணமாக நீஷ்னிய் நோவ்கராத் முன்னணித் தொழிற் குழுவைச் சேர்ந்த இருவர் பின்வருமாறு பேசிக்கொண்

டார்கள்: ''அவர் மட்டும் உயிரோடு இருந்து, நாம் என்ன செய்கிறோம் என்பதை—நாம் இடைவிடாமல் நிர்மாணம் செய்துகொண்டு போவதை—காண முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!'' இரண்டு முதியவர்களின் விழிகளில் கண்ணீர் மல்குகிறது. உள்நாட்டுப் போரில் லெனினது கருத்துக்களுக்காகப் போரிட்டு இவர்களில் ஒருவன் ஒரு கையையும் மற்றவன் ஒரு காலையும் இழந்திருந்தார்கள். எனினும் இத்தகையவர்கள், அங்கவீனர்களும் நரைத்தலையர்களும் மூப்புற்றவர்களும், வெகு சிலரே. மிகப் பெரும்பாலானவர்கள் வலிமையும் இளமையும் திடகாத்திரமும் உள்ளவர்கள், லெனினுடைய கருத்துக்களின் பொருட்டு இப்போது போரிட்டுக் கொண்டிருப்பவர்கள்.

சிலர் லெனினை ஒரு முறை பார்த்ததுடன் திருப்தி அடையாமல் விரைந்து சென்று வரிசையில் மீண்டும் சேர்ந்து கொள்கிறார்கள். முடிவற்றதாக, அட்சயமான சேமிப்புக்கள் கொண்டதாகக் காணப்படுகிறது இந்த வரிசை. மாஸ்கோ நகரின் அலுவலகங்கள், தொழிற்சாலைகள், ஆலைகள் ஆகியவற்றில் இருந்தும், சோவியத் நாட்டின் மலைகளிலும் சுரங்கங்களிலும் தொலைதூர ஸ்தெப்பிவெளிகளிலும் இருந்தும், உலகின் ஒவ்வொரு பகுதியிலும் இருந்தும் புதிதாக வந்து சேர்பவர்களால் இடையறாது புதுப்பிக்கப் பட்டுக்கொண்டிருக்கிறது இவ்வரிசை. தங்கள் காலஞ்சென்ற தலைவருக்குமுன் புதிய விசுவாசப் பிரமாணம் ஏற்றுக்கொள்ளவும், புதிய, சிறந்த போருக்குரிய உத்வேகத்தை அவரிடமிருந்து பெறவும் வருகிறார்கள் இவர்கள்.

தமது வாழ்நாளில் பெருமாண்பும் பெருவிறலும் பெற்றிருந்தார் இந்த மனிதர், இப்போதோ முன்னிலும் விறல் மிக்கவராகத் திகழ்கிறார். அவருடைய நினைவுச்சின்னத்தை நீங்கள் காண விரும்பினால் சுற்றிலும் பார்வையைச் செலுத்துங்கள். த்னீப்ரோஸ்த்ரோய்*, மக்னித்தோஸ்த்ரோய், த்ராக்தோர்ஸ்த்ரோய், ''கிகாந்த்'' அரசாங்கப் பண்ணை ஆகியவை கொண்ட இந்த ஐந்தாண்டுத்திட்டம் மனிதகுலத்

---

*தினீப்ரோஸ்த்ரோய் என்பது த்னீப்பர் ஆற்றின் மீது பெரிய நீர்மின்னுக்க நிலையத்தின் கட்டுமானம்.

தைப் பிரமிக்க வைக்கிறது. இது லெனினின் நினைவுச் சின்னமே ஆகும்.

இவை எல்லாம் உருவமும் உள்ளடக்கமும் பெற்றுள்ள லெனினது அறிவும் விஞ்ஞானமும் தவிர வேறு என்ன? எல்லா நாடுகளிலும் உள்ள லெனின் ஆராய்ச்சி நிலையங்களும் நூலகங்களும், எண்ணற்ற மொழிகளில் பெயர்க்கப்பட்டு, கோடிக்கணக்கான பிரதிகள் அச்சிடப்பட்டுள்ள லெனினின் நூல்கள்—இவை எல்லாம் முளைவிட்டுத் தழைத்து வளமுள்ள, செழிப்பான விளைச்சல் அளித்துவரும் லெனினுடைய எண்ண வித்துக்கள், கருத்துக்கள் அன்றி வேறு என்ன?

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியும் அறுபது நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகளுடைய கொடிகளின் கீழ் அணிதிரண்டுள்ள கோடானுகோடி மக்களும்: முதலாளித்துவ அமைப்பை அகற்றிவிட்டு அதன் இடத்தில் அமர்வதற்காக உலகம் எங்கிலும் அணிவகுத்து முன்னேறி வரும் லெனினது இயக்கப்போக்கு தவிர இவை வேறு யாவை?

பதினைந்து ஆண்டுகளுக்கு முன் கிரெம்ளினில் லெனின் அளித்த பேட்டி, சமாதியில் இன்று அவர் அளித்துவரும் பிரமாண்டமான பேட்டியாக வளர்ந்திருக்கும் அதே அளவில் லெனினுடைய சக்தியும் செல்வாக்கும் வளர்ந்துள்ளன. சோவியத் யூனியனிலும் உலகம் முழுவதிலும் சோஷலிஸம் வெற்றி வாகை சூடும்வரை இவை மேலும் மேலும் வளர்ந்துகொண்டு போகும்.

1932

ஆல்பர்ட் ரைஸ் வில்லியம்ஸ் (இடமிருந்து இரண்டாவது) சர்வதேசப் படைப்பிரிவின் மற்ற உறுப்பினருடன்

ருஷ்யப் புரட்சியின் ஊடே

PUBLIC LIBRARY
10 APR 1976

புரட்சியைக் காக்க உயிர் வழங்கிய
ருஷ்யாவின் தொழிலாளர்களுக்கும்
குடியானவர்களுக்கும்

‘‘செல்வமும் அதிகாரமும் அறிவும்
ஒரு சிலருக்கே உரித்தாயிருந்ததை எதிர்த்து
நீங்கள் போர் தொடுத்தீர்கள்;
செல்வமும் அதிகாரமும் அறிவும்
எல்லோருக்கும் உரித்தாகும் பொருட்டு
நீங்கள் புகழ்மிக்க வீர
மரணம்
எய்தினீர்கள்.’’*

10 APR 1976

*லெனின்கிராத் ‘‘செவ்வாய்க் களத்தில்’’ அமைந்துள்ள உயிர் துறந்த புரட்சி வீரர்களின் நினைவுச்சின்னத்தின் கருங்கற் பாளங்கள்மீது பொறிக்கப்பட்டிருக்கும் வாசகம். இதை எழுதியவர் முதலாவது கல்வித்துறை மக்கள் கமிஸார் அ. வ. லுனச்சார்ஸ்கிய் (1875-1933).

முன்னுரை

10 APR 1976
MADRAS

மாஸ்கோவில் பெட்டிக்கடை ஒன்றின்மீது ஒட்டப்பட்டுக்கொண்டிருந்த சுவரொட்டியை இரண்டு குடியானவப் படைவீரர்கள் உற்றுப் பார்த்ததை நான் கண்டேன்.

''இதன் ஒரு வார்த்தையைக்கூட எங்களால் படிக்க முடியாது. நாங்கள் உழவும் சண்டை போடவும் வரிகொடுக்கவும் வேண்டும் என்று மட்டுமே ஜார் விரும்பினான். நாங்கள் படிப்பதை அவன் விரும்பவில்லை. எங்கள் கண்களை அவித்து விட்டான் அவன்'' என்று விழிகளில் ஆத்திரக் கண்ணீர் பீரிட அவர்கள் கத்தினார்கள்.

பொதுமக்களின் ''கண்களை அவித்துவிடுவது'', அவர்களுடைய அறிவையும் மனச்சான்றையும்கூட அவித்துவிடுவது ருஷ்ய எதேச்சாதிகார ஆட்சியின் தீர்மானமான கொள்கையாக இருந்தது. பல நூற்றாண்டுகளாக மக்கள் அறியாமையில் மூழ்கியிருந்தார்கள். சர்ச்சினால் மயக்க மருந்து ஊட்டப்பெற்று, ''கறுப்பு நூற்றுவரால்''* அச்சுறுத்தப் பெற்று, கஸாக்கியர்களால் துன்புறுத்தப் பெற்றுவந்தார்கள். எதிர்த்தவர்கள் இருண்ட நிலவறைகளுக்குள் தள்ளப்பட்டார்கள், சைபீரியச் சுரங்கங்களில் இடுப்பொடிய உழைப்பதற்கு அனுப்பப்பட்டார்கள், அல்லது தூக்கில் இடப்பட்டார்கள்.

நாட்டின் சமுதாய, பொருளாதார அமைப்புச் சட்டகம் 1917ல் தகர்ந்து சிதறியது. உழுநிலங்களிலிருந்து கட்டாயப்படுத்தி இழுத்துச் செல்லப்பட்ட ஒரு கோடி உழவர்கள் காப்பகழ்களில் மடிந்துகொண்டிருந்தார்கள். மேலும்

---

*1905-07 புரட்சிக்குப் பிறகு புரட்சி எதிர்ப்புக் கொலைகாரக் கும்பல்கள் கறுப்பு நூற்றுவர்கள் என அழைக்கப்பட்டன.

லட்சோபலட்சம் மக்கள் நகரங்களில் பட்டினியாலும் குளிராலும் நசித்துக்கொண்டிருந்தார்கள். அதே சமயம், ஊழல் நிறைந்த மந்திரிகள் ஜெர்மானியர்களுடன் சதியாலோசனை செய்துகொண்டிருந்தார்கள். அரச குடும்பத்தினரோ அவப்பெயர் பெற்ற பாதிரி ரஸ்பூத்தினுடன்* களியாட்டயர்ந்து கொண்டிருந்தனர். காடெட்டு** மில்யூக்கோவ் கூடப் பின்வருமாறு சொல்லும் அளவுக்கு நிலைமை மோசமாயிருந்தது: ''இவ்வளவு அறிவு மந்தித்த, இவ்வளவு நேர்மையற்ற, இவ்வளவு பேடிமை கொண்ட, இவ்வளவு நம்பிக்கைத் துரோகம் உள்ள வேறு ஒரு அரசாங்கத்தை வரலாறு கண்டதில்லை.''

எல்லா அரசாங்கங்களும் ஏழைகளின் பொறுமையையே ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன. இந்தப் பொறுமை என்றும் நிலைத்திருப்பது போலத் தோன்றுகிறது, ஆனால் அதற்கும் ஒரு முடிவு வந்து தீர்கிறது. ருஷ்யாவில் இந்த முடிவு 1917, மார்ச் மாதம் வந்தது.

பெர்லினில் இருந்த கெய்ஸரைக் காட்டிலும் மிகக் கொடியவன் பெத்ரோகிராதில் இருந்த தங்கள் சொந்த ஜார் அரசனே என மக்கள் உணர்ந்தார்கள். அவர்களது மனக்கசப்பு தாங்கும் எல்லையைக் கடந்துவிட்டது. இதற்கெல்லாம் முடிவு கட்டிவிடும் நோக்கத்துடன் அவர்கள் அரண்மனைகளுக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்தார்கள். முதலில் உழைப்பாளி மாதர் ரொட்டி வேண்டும் என்று ஆரவாரித்தவாறு வீபர்க் வட்டாரத்திலிருந்து வெளியே வந்தார்கள். பின்னர் வந்தன தொழிலாளி ஆடவர்களின் நீண்ட வரிசைகள். ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆற்றைக் கடந்து நகருக்குள் வந்துவிடாமல் தடுக்கும் பொருட்டுப் போலீசார் பாலங்களின் இணைபகுதிகளை மேலே தூக்கிவிட்டார்கள். ஆனால் மக்கள் பனிக்கட்டியாக உறைந்திருந்த ஆற்றின்

---

*கிரிகோரிய் ரஸ்பூத்தின்—துணிந்த போக்கிரி; ஜார் இரண்டாம் நிக்கொலாய்க்கும் அவனது மனைவிக்கும் பிரியமானவன்.

**காடெட்டு என்றால் அரசியல் சட்டரீதியான ஜனநாயகக் கட்சி உறுப்பினன் எனப் பொருள். ஏகாதிபத்திய பூர்ஷ்வா வர்க்கத்தின் பிரதானக் கட்சி இது.

மீதே நடந்து நகருக்குள் வந்துவிட்டார்கள். செங்கொடி கள் ஏந்திய மக்கள் கூட்டங்களைத் தன் வீட்டு ஜன்னல் வழியே பார்த்த மில்யூக்கோவ், ''இதோ போகிறது ருஷ்யப் புரட்சி—பதினைந்தே நிமிடங்களில் அது நசுக்கப்பட்டு விடும்!'' என்று கூவினான்.

நெவ்ஸ்க்கிய் நெடுஞ்சாலையில் இருந்த கஸாக்கியக் காவல் படையினரையும் லட்சியம் செய்யாமல் தொழிலாளிகள் முன்னே வந்தார்கள். மெஷீன்கன்களின் வீழ்த்தும் குண்டுமாரியையும் பொருட்படுத்தாமல் அவர்கள் முன்னேறினார்கள். தெருக்களெல்லாம் தொழிலாளர் பிணங்களால் நிறைந்துவிட்டன. அப்போதும் அவர்கள் பாடிக்கொண்டும், மன்றுடிக் கொண்டும் மேலும் மேலும் வந்த வண்ணமாக இருந்தார்கள். முடிவில் படைவீரர்களும் கஸாக்கியர்களும் மக்கள் தரப்பில் சேர்ந்துவிட்டார்கள். முடிவில், மார்ச் மாதம் 12ந் தேதி, ருஷ்யாவை முன்னூறு வருடங்களாக மோசமாக ஆண்டுவந்த ரொமானவ் அரச குடும்பம் நிலைபெயர்ந்து தடாரென்று விழுந்து அழிந்தது. ருஷ்யா கண்தலை தெரியாத பேருவகையில் திளைத்தது. ஜாரின் வீழ்ச்சியை உலகம் அனைத்துமே மகிழ்ந்து பாராட்டியது.

முதன்மையாகத் தொழிலாளர்களும் படைவீரர்களுமே புரட்சி நிகழ்த்தினார்கள். அதற்காக இரத்தம் சிந்தினார்கள் அவர்கள். இப்போதோ, அவர்கள் தங்களுடைய மேலோரின் கைகளில் விவகாரங்களை ஒப்படைத்துவிட்டுச் சம்பிரதாயமான முறையில் பின்வாங்கிவிட வேண்டும் என்று கருதப்பட்டது. ஜாராட்சி ஆதரவாளர்களிடமிருந்து அதிகாரத்தை மக்கள் பிடுங்கிக்கொண்டுவிட்டார்கள். இப்பொழுது அரங்கில் பிரவேசித்தார்கள் பாங்கர்களும் வக்கீல்களும் பேராசிரியர்களும் அரசியல்வாதிகளும்—மக்களிடமிருந்து அதிகாரத்தைப் பறித்துக்கொள்வதற்காக. அவர்கள் சொன்னார்கள்:

''மக்களே, நீங்கள் பெருமைசான்ற வெற்றி அடைந்திருக்கிறீர்கள். அடுத்த கடமை புதிய அரசை அமைப்பது ஆகும். இது மிக மிகக் கடினமான வேலை. ஆனால் நல்ல வேளையாக, கற்றவர்களாகிய நாங்கள் ஆட்சி செலுத்தும் இந்தத் தொழிலை அறிவோம். நாங்கள் ஒரு தாற்காலிக

அரசாங்கத்தை நிறுவுவோம். எங்கள் பொறுப்பு மிகப் பெரியது, ஆனால் உண்மைத் தேசபக்தர்கள் என்ற முறையில் நாங்கள் அதை ஏற்போம். சால்பு மிக்க படைவீரர்களே, காப்பகழ்களுக்குத் திரும்பிச் செல்லுங்கள். துணிகரம் மிக்க தொழிலாளர்களே, இயந்திரங்களை இயக்கத் திரும்புங்கள். குடியானவர்களே, நிலத்தைப் பண்படுத்தத் திரும்பிப் போங்கள்.''

இப்பொழுது ருஷ்யப் பொதுமக்கள் வழிப்படுத்தக் கூடியவர்களாகவும் தர்க்கத்துக்கு இசைபவர்களாகவும் இருந்தார்கள். எனவே அவர்கள் இந்த பூர்ஷ்வாக் கனவான்களைத் ''தாற்காலிக அரசாங்கம்'' அமைக்க விட்டார்கள். ஆனால் ருஷ்யப் பொதுமக்கள் எழுத்தறிவு அற்றவர்கள் ஆயினும் புத்திக்கூர்மை வாய்ந்திருந்தார்கள். அவர்களில் பெரும்பாலோருக்குப் படிக்கவோ எழுதவோ தெரியாது. எனினும் சிந்திக்க அவர்களால் முடிந்தது. ஆகவே, காப்பகழ்களுக்கும் தொழிற்கூடங்களுக்கும் நிலத்துக்கும் திரும்புவதற்கு முன் அவர்கள் தங்களுக்கே உரிய சிறு ஸ்தாபனங்களை அமைத்தார்கள். ஒவ்வொரு போர்த்தளவாடத் தொழிற்சாலையிலும் தொழிலாளர்கள் தங்கள் நம்பிக்கைக்கு உரிய ஒரு தொழிலாளியைத் தெரிந்தெடுத்தார்கள். காலணித் தொழிற்சாலைகளிலும் பஞ்சாலைகளிலும் தொழிலாளர்கள் இவ்வாறே செய்தார்கள். செங்கற்சூளைகள், கண்ணாடித் தொழிற்சாலைகள், பிற தொழில் நிலையங்கள் ஆகியவற்றிலும் இதுவே நிகழ்ந்தது. தங்கள் தொழிலகங்களிலிருந்து நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தப் பிரதிநிதிகள் தொழிலாளிப் பிரதிநிதிகளின் சோவியத் (ஆலோசனை சபை) எனப்பட்டார்கள்.

இவ்வாறே சேனைகள் படைவீரப் பிரதிநிதிகளின் சோவியத்துக்களையும் கிராமங்கள் விவசாயிப் பிரதிநிதிகளின் சோவியத்துக்களையும் அமைத்தன.

இந்தப் பிரதிநிதிகள் வட்டார வாரியாக அன்றி, தொழில் துறைகள் வாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். விளைவாக சோவியத்துக்களில் தங்கு தடையின்றிப் பேசும் அரசியல்வாதிகள் அல்ல, தங்கள் தொழிலை அறிந்திருந்த மனிதர்கள் நிறைந்திருந்தார்கள். சுரங்கத் தொழிலை

அறிந்த சுரங்கத் தொழிலாளிகள், இயந்திரங்களை அறிந்த மெக்கானிக்குகள், நிலத்தை அறிந்த குடியானவர்கள், போரை அறிந்த படைவீரர்கள், குழந்தைகளை அறிந்த பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர் இவர்கள்.

ருஷ்யா முழுவதிலும் உள்ள ஒவ்வொரு நகரிலும், சிறு நகரிலும், கிராமத்திலும் ரெஜிமெண்டிலும் சோவியத்துக்கள் அமைக்கப்பட்டன. ஜாராட்சியின் பழைய அரசு இயந்திரம் துண்டுகளாகச் சிதறியதற்குச் சில வாரங்களுக்கெல்லாம் பூமியின் ஆறில் ஒரு பகுதி மேற்பரப்பு இந்தப் புதிய சமூக ஸ்தாபனங்களால் புள்ளிக்கோலம் இட்டது போன்று நிறைந்துவிட்டது. வரலாற்றில் இதைவிடக் கவனத்தைக் கவரும் நிகழ்ச்சி நடந்ததே இல்லை.

''பெரெஸ்வேத்'' என்னும் ருஷ்யப் போர்க் கப்பலின் கமாண்டர் இந்த விவரத்தை எனக்குத் தெரிவித்தார்: ''செய்தி கிடைத்தபோது எனது கப்பல் இத்தாலியக் கரைக்கு அருகே இருந்தது. ஜாரின் வீழ்ச்சியை நான் அறிவித்ததும் சில கடற்படைவீரர்கள் 'சோவியத் நீடூழி வாழ்க!' என்று கோஷித்தார்கள். அன்றே கப்பலில் ஒரு சோவியத் அமைக்கப்பட்டது. எல்லா அம்சங்களிலும் அது பெத்ரோகிராதில் உள்ளதையே ஒத்திருந்தது. சோவியத்தை ருஷ்ய மக்களின் இயற்கையான ஸ்தாபனமாக நான் மதிக்கிறேன். கிராம 'மீர்' (பஞ்சாயத்து), நகர 'ஆர்ட்டேல்' (கூட்டுறவு ஸ்தாபனம்) ஆகியவற்றில் வேரூன்றியிருப்பது இது.''

வேறு சிலர் பழைய நியூ இங்கிலாந்து சிறு நகரக் கூட்டங்களையும் தொன்மைக் கிரீஸின் நகரப் பொது மன்றங்களையும் சோவியத் கருத்துக்கு ஆதாரமாகக் கருதுகிறார்கள். ஆனால் சோவியத்துடன் ருஷ்யத் தொழிலாளியின் தொடர்பு அவற்றைவிட மிக அதிக நேர்முகமானது. 1905ல் நடந்த வெற்றி பெறாத புரட்சியில் அவன் சோவியத்தைச் சோதித்துப் பார்த்திருந்தான். அது நல்ல கருவி என அவன் அப்போது கண்டுகொண்டிருந்தான். இப்போது அவன் அதைப் பயன்படுத்த ஆரம்பித்திருந்தான்.

ஜார் ஆட்சியிலிருந்து அகற்றப்பெற்ற பின் எல்லா வர்க்கங்களுக்கு இடையிலும் நல்லெண்ணம் நிலவிய குறுகிய பருவம் வந்தது. ''புரட்சியின் தேனிலவு'' என்று

அழைக்கப்பட்டது இந்தப் பருவம். அப்புறம் தொடங்கியது பெரும் போர். ருஷ்யாவில் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றும் பொருட்டு பூர்ஷ்வா வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையே நிகழ்ந்த பெருஞ் சமர் இது. ஒரு புறம் முதலாளிகளும் நிலப்பிரபுக்களும் முடிவில் அறிவுஜீவிகளும் தாற்காலிக அரசாங்கத்திற்கு ஆதரவாக அணிவகுத்து நின்றார்கள். மறுபுறம் தொழிலாளர்களும் படைவீரர்களும் குடியானவர்களும் சோவியத்துக்களை ஆதரித்துத் திரண்டு நின்றார்கள்.

இந்தப் பெரும் பிணக்கின் நடுவே நான் விடப்பட்டிருந்தேன். கிராமங்களில் குடியானவர்களுடனும் காப்பகழ்களில் படைவீரர்களுடனும் தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுடனும் நான் பதினொன்கு மாதங்கள் வசித்தேன். புரட்சியை நான் அவர்களுடைய கண்களால் பார்த்தேன். நாடகத்தன்மை கொண்ட பெரும்பாலான சம்பவங்களில் நான் பங்கெடுத்துக் கொண்டேன்.

போல்ஷெவிக் கட்சி தனது பெயரைக் கம்யூனிஸ்ட் கட்சி என்று 1918 வரை அதிகாரபூர்வமாக மாற்றிக் கொள்ளவில்லை, எனினும், போல்ஷெவிக், கம்யூனிஸ்ட் என்ற பெயர்களை நான் ஒரே அர்த்தத்தில் பயன்படுத்தியிருக்கிறேன்.

பிரெஞ்சுப் புரட்சியில் பெரிய சொல்லாக விளங்கியது ''பிரஜை'' என்பது. ருஷ்யப் புரட்சியில் பெரிய சொல்லாக விளங்குவது ''தவாரிஷ்'' (தோழர்) என்பது.

எனது சில கட்டுரைகளை இங்கே உபயோகப்படுத்தும் உரிமையின் பொருட்டு ஏஷியா, யேல் ரிவியூ, டயல், நேஷன், நியூ ரிபப்ளிக், நியூயார்க் ஈவினிங் போஸ்ட் ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கு நான் கடப்பாடு உடையேன்.

சோவியத் ருஷ்யாவுக்கு வருபவர்களின் கவனத்தை ஈர்ப்பவை ஏராளமான சுவரொட்டிகள். தொழிற்சாலைகளிலும் பாளையங்களிலும் சுவர்கள் மீதும் ரெயில் பெட்டிகள் மீதும் டெலிபோன் கம்பங்கள் மேலும்—எங்கும் இவை காணப்படுகின்றன. சோவியத் என்ன செய்தாலும் அதன் காரணத்தை மக்கள் புரிந்துகொள்ளுமாறு செய்ய முயல்கிறது. படையில் சேர்வதற்கான புது அழைப்பு விடுக்கப்

பட்டாலும், ரேஷன்கள் குறைக்கப்பட நேர்ந்தாலும், புதிய பள்ளிகளோ போதனை வகுப்புக்களோ தொடங்கப்பட்டாலும் அது எதற்காக என்பதையும், மக்கள் எப்படி ஒத்துழைக்கலாம் என்பதையும் விளக்கும் சுவரொட்டி உடனே காட்சி அளிக்கிறது. இவற்றில் சில சுவரொட்டிகள் பாங்கற்றவை, அவசரத்தில் எழுதப்பட்டவை. மற்றவையோ கலைப் படைப்புக்கள். இவற்றில் சில மூலச் சுவரொட்டிகளின் அதே வண்ணங்களில் இந்தப் புத்தகத்தில் மீண்டும் வெளியிடப்படுகின்றன. இதற்காகும் செலவை ருஷ்யாவின் நண்பர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். திருமதி ஜெஸ்ஸி ஒய். கிம்பால், திரு. அரோன் பெர்க்மன், இருவருக்கும் வாசகர்கள் சிறப்பாக நன்றி செலுத்த வேண்டும்.

முதல் பாகம்

புரட்சியை நிகழ்த்தியவர்கள்

குடியானவர்கள், தொழிலாளர்கள், போர்வீரர்கள் ஆகியோருடன்

அத்தியாயம் ஒன்று

போல்ஷெவிக்குகளும் நகரமும்

பெத்ரோகிராத் நகரம் அனேகமாகத் துருவ வட்டத்துக்கு உள்ளே இருக்கிறது. 1917, ஜூன் மாதத் தொடக்கத்தில் ஒரு வெள்ளை இரவில் நான் முதன் முதலாக இந்த நகரில் புகுந்தேன். நடு நிசி ஆகிவிட்ட போதிலும் இந்த வடபுலத்து இரவின் மெல்லிய மாய ஒளியில் முழுக் காடிய அகன்ற சதுக்கங்களும் வீதிகளும் கண்கவர் வனப்புடன் திகழ்ந்தன.

நீலக் கும்மட்டங்கள் கொண்ட சர்ச்சுகளையும் வெள்ளிச் சிற்றலைகள் வீசிய யெக்காத்தெரீனென்ஸ்கிய் கால்வாயையும் கடந்து நெவா ஆற்றின் கரையோரமாக நாங்கள் காரில் சென்றோம். ஆற்றின் மறுகரையில் பெத்ரோப்பாவ்லவ்ஸ்காயா கோட்டையின் மெல்லிய கூம்பு கோபுரம் தங்க ஊசி போன்று வானை நோக்கி எழுந்தது. பிறகு பனிக்

கால அரண்மனையின் அருகாகவும், செயின்ட் ஐஸக் சர்ச்சின் தங்க முலாம் பூசிய கும்மட்டத்தையும் ஒழிந்து போன ஜார்களின் நினைவுச் சின்னங்களான கணக்கற்ற கம்பங்களையும் உருவச்சிலைகளையும் கடந்தும் சென்றது எங்கள் கார்.

ஆனால் இவை எல்லாம் சென்றகாலத்து ஆட்சியாளர்களின் நினைவுச்சின்னங்கள். இவை என்னை வசீகரிக்கவில்லை, ஏனெனில் நிகழ்கால ஆட்சியாளர்கள்பால் நான் அக்கறை கொண்டிருந்தேன். கேட்போரை மயக்கும் சொல்வன்மையின் உச்சத்தில் அப்போது இருந்த மாபெரும் கேரென்ஸ்கியின் சொற்பொழிவைக் கேட்க நான் விரும்பினேன். தாற்காலிக அரசாங்கத்தின் அமைச்சர்களைச் சந்திக்க விரும்பினேன். அவர்களில் பலரை நான் சந்தித்தேன், அவர்கள் பேச்சுக்களைக் கேட்டேன், அவர்களுடன் உரையாடினேன். அவர்கள் திறமைசாலிகள், இனியவர்கள், சொல்வன்மை வாய்ந்தவர்கள். எனினும் அவர்கள் மக்களின் உண்மையான பிரதிநிதிகள் அல்ல, ''அற்ப நேர அரசர்கள்'' என்று எனக்குப் பட்டது.

உள்ளுணர்வால் தூண்டப்பட்டு வருங்கால ஆட்சியாளர்களை, காப்பகழ்களிலும் தொழிற்சாலைகளிலும் பண்ணைகளிலும் இருந்து நேராக சோவியத்துக்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதர்களை நான் தேடிக்கண்டேன். இந்த சோவியத்துக்கள் ருஷ்யாவின் ஒவ்வொரு சேனையிலும் நகரிலும் கிராமத்திலும், உலகின் ஆறில் ஒரு பகுதி நிலப்பரப்பில் தோன்றியுள்ளன. பெத்ரோகிராதில் நடந்த சோவியத்துக்களின் முதலாவது அகில ருஷ்யக் காங்கிரஸுக்கு* இந்த வட்டார சோவியத்துக்கள் இப்போது தங்கள் பிரதிநிதிகளை அனுப்பின.

சோவியத்துக்களின் முதலாவது அகில ருஷ்யக் காங்கிரஸ்

இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் சோவியத்துக்களின் கூட்டம் நடந்துகொண்டிருக்கக் கண்டேன். ''மாட்கிமை

*இது 1917 ஜூன் 16லிருந்து ஜூலை 7 வரை நிகழ்ந்தது.

தங்கிய பேரரசர் இரண்டாம் நிக்கொலாய் 1916, ஜனவரி 28ல் தமது வருகையால் இந்த இடத்தை மகிழ்வுள் ளது ஆக்கினர்'' என்று அறிவித்த வாசகப் பலகை ஒன்று இன்னும் அதன் சுவர் மீது தொங்கியது. பகட்டுள்ள சென்ற காலத்தின் ஒரே சின்னமாக விளங்கியது இது மட்டுமே.

தங்க ஜரிகைப் பின்னல் உடுப்புக்கள் அணிந்த இரா ணுவ அதிகாரிகளும், புன்னகைக்கும் அரசவையினரும் குற் றேவலர்களும் ஹால்களிலிருந்து துடைத்து ஒழிக்கப்பட்டு விட்டார்கள். மாட்சிமை தங்கிய பேரரசன் ஜார் போய் ஒழிந்துவிட்டான். மாட்சிமை தங்கிய குடியரசர் புரட்சியார் இப்போது இங்கே ஆட்சி நடத்தினர். கறுப்புக் கோட்டு களும் காக்கி உடுப்புக்களும் அணிந்த நூற்றுக்கணக்கான பிரதிநிதிகள் இந்த ஆட்சிக்கு ஏற்பளித்தார்கள்.

உலகின் மறு கோடிகளிலிருந்து வந்த மனிதர்கள் இங் கே இருந்தார்கள். பனி உறைந்த வட துருவப் பிரதேசத் தினரும் வெயில் எறிக்கும் துர்க்கிஸ்தானத்தினரும், சாய் விழித் தாத்தாரியர்களும் பொன்முடிக் கஸாக்கியரும், ருஷ் யர்களும் உக்ரேனியர்களும் போலந்து நாட்டினரும் லாட் வியர்களும் லித்துவேனியர்களும்—எல்லா இனங்களும் மொ ழிகளும் ஆடையணிகளும் இங்கு இடம் பெற்றிருந்தன. சுரங் கங்களிலும் வார்ப்படச்சாலைகளிலும் பண்ணைகளிலும் இருந்து உழைப்பால் தழும்பேறிய பிரதிநிதிகளும் காப்பகழ் களில் இருந்து போர்த் தழும்பேறிய படைவீரர்களும் ருஷ் யாவின் ஐந்து கப்பற்படைகளிலிருந்து கடல் பயணத்தால் வெண்கல நிறம் பெற்ற கடற்படை வீரர்களும் வந்திருந் தார்கள். ''மார்ச்'' புரட்சிக்காரர்களும் இங்கே இருந்தார்கள். மார்ச் மாதப் புயல் ஜாரை அவனது அரியணையிலிருந்து அடித்துச் செல்வதற்கு முன்பு ஒரு நிறமும் இன்றிச் செயலற்று இருந்த இவர்கள் இப்போது சிவப்புப் புரட்சி வண்ணம் பூசிக்கொண்டு தங்களை சோஷலிஸ்டுகள் என அழைத் துக்கொண்டார்கள். அனுபவம் மிக்க புரட்சி வீரர்களும் இங்கே இருந்தார்கள். நீண்ட பல ஆண்டுகள் பட்டினியும் நாடுகடத்தலும் சைபீரியாவாசமும் அனுபவித்த போதிலும் லட்சியத்தின்பால் விசுவாசத்தைக் கடைப்பிடித்தவர்கள், துன்பத்தில் சோதிக்கப்பட்டுத் தேறியவர்கள் இவர்கள்.

சோவியத்துக்கள் காங்கிரஸின் தலைவர் ச்ஹெறயீத்ஸே நான் எதற்காக ருஷ்யாவுக்கு வந்திருக்கிறேன் என்று கேட்டார். ''வெளித் தோற்றத்துக்குப் பத்திரிகை நிருபன் என்ற வகையில். ஆனால் உண்மைக் காரணம் புரட்சி. இதன் கவர்ச்சியை என்னால் எதிர்த்து நிற்க முடியவில்லை. அது காந்தம்போல என்னை இங்கே கவர்ந்து இழுத்தது. என்னால் வெளியே இருக்க முடியவில்லை, எனவேதான் நான் இங்கே இருக்கிறேன்'' என்றேன்.

காங்கிரஸின் முன் பேசும்படி அவர் என்னைக் கேட்டுக் கொண்டார். ஜூலை, 8ந் தேதி ''சோவியத் செய்திகள்'' **(இஸ்வேஸ்த்தியா)** பத்திரிகையில் என்னுடைய சொற்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன:

''**தோழர்களே,** அமெரிக்க சோஷலிஸ்டுகளின் சார்பில் உங்களுக்கு வாழ்த்துக்கள் கொண்டு வந்திருக்கிறேன். புரட்சியை எப்படி நடத்த வேண்டும் என்று உங்களுக்கு இங்கே உபதேசம் செய்ய நாங்கள் துணியவில்லை. மாறாக, புரட்சியின் பாடங்களைக் கற்றுக்கொள்ளவும் உங்களுடைய பெருத்த நிறைவேற்றங்கள் குறித்து எங்கள் பாராட்டுக்களைத் தெரிவிப்பதற்குமே நாங்கள் இங்கே வந்திருக்கிறோம்.

''நிராசை, வன்முறை என்ற கருமுகில் மனிதகுலத்துக்கு மேலே சூழ்ந்து, நாகரிக ஒளிப்பந்தத்தைக் குருதி மழையால் அவிக்கப் பார்த்தது. ஆனால், தோழர்களே, நீங்கள் எழுந்தீர்கள், அந்த ஒளிப்பந்தம் மீண்டும் மூண்டெரிந்தது. எங்கும் எல்லா உள்ளங்களிலும் விடுதலையின்பால் புதிய நம்பிக்கையை நீங்கள் மீண்டும் தளிர்க்கச் செய்து விட்டீர்கள்.

''**சமத்துவம், சகோதரத்துவம், ஜனநாயகம்** என்பவை பெரிய, அழகிய சொற்கள். ஆனால் வேலையின்மையால் தவிக்கும் கோடிக்கணக்கான மக்களுக்கு அவை வெற்றுச் சொற்களே. நியூயார்க் நகரின் 1,60,000 பசித்த குழந்தைகளுக்கு அவை பொருளற்ற வார்த்தைகள். பிரான்சையும் இங்கிலாந்தையும் சேர்ந்த சுறண்டப்படும் வர்க்கத்தினருக்கு அவை கேலிச் சொற்கள். இந்தச் சொற்களைச் செயல் ஆக்குவது உங்கள் கடமை.

''நீங்கள் அரசியல் புரட்சியை நிறைவேற்றிவிட்டீர்கள். ஜெர்மானியச் சைனியவாதத்தின் அபாயத்திலிருந்து

விடுபட்டுவிட்ட உங்களுடைய அடுத்த கடமை சமூகப் புரட்சியாகும். அப்போது உலகத் தொழிலாளர்கள் மேற்கே நோக்க மாட்டார்கள், கிழக்கே—மாபெரும் ருஷ்யாவின் பால், இங்கே பெத்ரோகிராத் நகரில், உங்கள் புரட்சியின் முதல் உயிர்த்தியாகிகள் அடக்கமாகியுள்ள செவ்வாய்க் களத்தின் புறம்—பார்வை செலுத்துவார்கள்.

''சுதந்திர ருஷ்யா நீடூழி வாழ்க! புரட்சி நீடூழி வாழ்க! உலக சமாதானம் நீடூழி வாழ்க!''

''மனித குலத்துக்கு அவமானம் விளைப்பதும் ருஷ்ய விடுதலை உதயத்தின் மாபெரும் நாட்களைக் கருமுகில் போன்று சூழ்ந்திருப்பதுமான பயங்கர இரத்தக் களரியை'' நிறுத்தும்படி தங்கள் அரசாங்கங்களை வற்புறுத்துமாறு எல்லா நாடுகளுடையவும் தொழிலாளிகளைச் ச்ஹெயீத்ஸே தமது பதிலுரையில் கேட்டுக் கொண்டார்.

கரகோஷப் புயலுக்குப் பின் காங்கிரஸ் அன்றைய நிகழ்ச்சி நிரலில் உள்ள விஷயங்களை வரிசையாக யோசனைக்கு எடுத்துக்கொண்டது. உக்ரேய்னு, கல்வி, போர் விதவைகளும் அனுதைகளும், போர்முனைக்கு உணவுப்பொருள் அனுப்புதல், இருப்புப் பாதைகளைச் செப்பனிடுதல் முதலியன இவை. உண்மையில் இவை தாற்காலிக அரசாங்கம் கவனிக்க வேண்டிய செயல்கள். ஆனால் அந்த அரசாங்கம் நொய்ந்ததாகவும் திறனற்றதாகவும் இருந்தது. அதன் அமைச்சர்கள் சொற்பொழிவு ஆற்றுவதும் சச்சரவிடுவதும் ஒருவருக்கெதிராக ஒருவர் சூழ்ச்சிகள் செய்வதும் அரசாங்க தூதர்களுக்கு விருந்துகள் அளிப்பதுமாக இருந்தார்கள். ஆனால் கடினமான வேலையை யாரேனும் செய்யவேண்டுமே. அரசாங்கம் செய்யத் தவறியதால் அது மக்கள் சோவியத்துக்களின் கைகளுக்கு ஏற்கனவே மாறிக் கொண்டிருந்தது.

போல்ஷெவிக்குகளின் பிரவேசம்

சோவியத்துக்களின் இந்த முதல் காங்கிரஸில் டாக்டர்கள், எஞ்சினீயர்கள், பத்திரிகையாளர்கள் போன்ற அறிவுஜீவுகளே பிரதான ஆதிக்கம் வகித்தார்கள். மென்

ஷெவிக், சோஷலிஸ்ட் புரட்சிவாதி* எனப்பட்ட அரசியல் கட்சிகளைச் சேர்ந்திருந்தார்கள் இவர்கள். நிச்சயமான பாட்டாளி வர்க்க வார்ப்பில் எடுக்கப்பட்ட 105 பிரதிநிதிகள் இடதுகோடியில் உட்கார்ந்திருந்தார்கள். இவர்கள் சாதாரணப் படைவீரர்களும் தொழிலாளர்களும் ஆவர். அவர்கள் முன் பாய்ந்து தாக்கினுர்கள், ஒன்றிணைந்திருந்தார்கள், மிகுந்த உளப்பூர்வமாகப் பேசினுர்கள். அடிக்கடி அவர்கள் நகையாடிக் கூச்சலிட்டுப் பேசவிடாதபடி தடுக்கப்பட்டார்கள். அவர்களுடைய பிரேரணைகள் யாவும் வாக்கெடுப்பில் தோற்கடிக்கப்பட்டன. ''இவர்கள்தாம் போல்ஷெவிக்குகள்'' என்று நஞ்சு தோய்ந்த குரலில் எனக்கு அறிவித்தான் என் பூர்ஷ்வா வழிகாட்டி. ''பெரும்பாலும் முட்டாள்களும், வெறியர்களும், ஜெர்மன் உளவாளிகளும்'' என்ருன். அவ்வளவுதான். ஹோட்டல் இளைப்பாறறைகளிலும் விருந்தறைகளிலும் அரசாங்க தூதர்கள் வட்டாரங்களிலும் இதற்குமேல் ஒன்றும் தெரிந்துகொள்ள முடியவில்லை.

நல்ல வேளையாக நான் தகவல் அறிவதற்கு வேறு இடங்கள் சென்றேன். தொழிற்சாலை வட்டாரங்களுக்குள் நான் போனேன். நீஷ்னியில் ஸார்த்தோவ் என்ற மெக்கானிக்கைச் சந்தித்தேன். அவன் என்னைத் தன் வீட்டுக்கு அழைத்தான். பிரதான அறை மூலையில் நீண்ட துப்பாக்கி வைக்கப்பட்டிருந்தது.

''ஒவ்வொரு தொழிலாளியிடமும் இப்போது துப்பாக்கி இருக்கிறது. ஒரு காலத்தில் ஜாருக்காகப் போரிடும் பொருட்டு நாங்கள் அதைப் பயன்படுத்திஞேம். இப்போது எங்களுக்காகவே உபயோகிக்கிருேம்'' என்று விளக்கினுன் ஸார்த்தோவ்.

---

*சோஷலிஸ்ட் புரட்சிவாதிகள் 1901-02ல் அமைக்கப்பட்ட ஒரு கட்சியின் உறுப்பினர்கள். குடியானவர்கள் வர்க்கத்துக்குள் வர்க்க முரண்பாடுகள் இருப்பதையும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தையும் அவர்கள் மறுத்தார்கள். புரட்சி வளர்ச்சி அடைந்ததும் சோஷலிஸ்ட் புரட்சிவாதிகள் புரட்சி எதிர்ப்புக் கட்சியாக இழிநிலை அடைந்தார்கள்.

இன்னொரு மூலையில் செயின்ட் நிக்கொலாயின் உருவப் படம் தொங்கியது. அதன் முன்னே எரிந்தது சிறு எண்ணெய் விளக்கு.

''என் மனைவி இன்னும் மதப்பற்று உள்ளவள்'' என்று ஸார்த்தோவ் மன்னிப்புக் கேட்கும் பாவனையில் கூறினான். ''அவளுக்கு இந்த செயின்ட் மீது பக்தி. புரட்சியில் இவர் என்னை நலமே காப்பார் என்று எண்ணுகிறாள். ஏதோ செயின்ட் போல்ஷெவிக்குக்கு உதவுவார் போல!'' இவ்வாறு சொல்லி அவன் சிரித்தான். '' 'பெய் போகு!'* அதில் ஒன்றும் கெடுதல் இல்லை. செயின்டுகள் விசித்திரமான சைத்தான்கள். அவர்களில் ஒருவர் என்ன செய்வார் என்று யாராலும் சொல்ல முடியாது.''

நான் அமெரிக்கன் ஆனபடியால் கட்டிலில் படுத்துக் கொள்ளும்படி என்னை வற்புறுத்திவிட்டு, அந்தக் குடும்பத்தினர் தரையில் படுத்துக்கொண்டார்கள். இந்த அறையில் நான் இன்னொரு அமெரிக்கரைக் கண்டேன். தேவ உருவத்துக்கு முன் எரிந்த விளக்கின் மெல்லொளியில் அவருடைய முகம் சுவற்றிலிருந்து என்னைக் கீழ்நோக்காகப் பார்த்தது. ஆப்ரகாம் லிங்கனின் மாண்புள்ள, சகஜமான, கரடுமுரடான வதனம் அது. இல்லினுய்ஸ் காடுகளில் தமது முன்னோடிக் குடிசையிலிருந்து வோல்கா ஆற்றின் கரையில் உள்ள இந்தத் தொழிலாளியின் குடிசைக்கு அவர் நீண்ட பயணம் செய்து வந்திருந்தார். அரை நூற்றாண்டையும் உலகின் பாதியையும் கடந்து லிங்கனது உள்ளத்தில் இருந்த நெருப்பு ஒளியைத் தேடித் தடுமாறிக்கொண்டிருந்த ருஷ்யத் தொழிலாளியின் உள்ளத்தைத் தொட்டுவிட்டது.

பெருத்த அற்புதம் விளைப்பவரான செயின்ட் நிக்கொலாயை அவனுடைய மனைவி வழிபட்டது போலவே மாபெரும் விமோசனகர்த்தரான லிங்கனை ஸார்த்தோவ் வழிபட்டான். லிங்கனுடைய படத்துக்கு அவன் தன் வீட்டில் கௌரவ இடம் அளித்திருந்தான். அதோடு திடுக்கிடச் செய்யும் ஒரு காரியத்தை அவன் செய்திருந்தான். லிங்கனது

---

*கடவுளாணை என்று பொருள்படும் ருஷ்யச் சொற்கள்.— (மொ-ர்)

கோட்டுத் தலைப்பில், போல்ஷெவிக் என்ற சொல் பொறித்த பெரிய சிவப்புப் பொத்தானை அவன் பொருத்தியிருந்தான்.

லிங்கனுடைய வாழ்க்கை பற்றி ஸார்த்தோவ் சொற்பமே அறிந்திருந்தான். லிங்கன் அனியாயத்தை எதிர்த்து அகற்ற முயன்றார், அடிமைகளை விடுவித்தார், நிந்திக்கவும் துன்புறுத்தவும் பட்டார் என்ற விவரங்கள் மட்டுமே அவனுக்குத் தெரிந்திருந்தன. அவர் போல்ஷெவிக்குகளின் இனத்தைச் சேர்ந்தவர் என்பதற்குச் சான்றாக ஸார்த்தோவ் மதித்தவை இவைதாம். மிகப் பெரிய புகழ்ச்சிக்கு லிங்கனை உரியவர் ஆக்கும் நோக்குடன் இந்தச் சிவப்புச் சின்னத்தால் அவன் அவரை அணி செய்திருந்தான்.

தொழிற்சாலைகளும் தனிகர் வீதிகளும் இரு வேறு உலகங்கள் என்பதை நான் கண்டேன். ''போல்ஷெவிக்'' என்ற சொல்லை அவை உச்சரித்த மாதிரியிலும் மிகப் பெருத்த வேறுபாடு இருந்தது. தனிகர் வீதிகளில் இகழ்ச்சியுடனும் வசவுடனும் கூறப்பட்ட இந்தச் சொல், தொழிலாளர்களின் வாய்களில் புகழுக்கும் பெருமைக்கும் உரிய சொல்லாக விளங்கத் தொடங்கியிருந்தது.

போல்ஷெவிக்குகள் பூர்ஷ்வாக்களைப் பொருட்படுத்தவில்லை. தொழிலாளர்களுக்குத் தங்கள் செயல்திட்டத்தை விவரித்து விளக்குவதில் அவர்கள் முனைந்திருந்தார்கள்: பிரான்சில் இருந்த ருஷ்யச் சேனையின் சார்பாக சோவியத்துக்களின் காங்கிரஸுக்கு வந்த பிரதிநிதிகளிடமிருந்து இந்தச் செயல்திட்டம் எனக்கு நேரடியாகக் கிடைத்தது.

''எங்களுடைய கோரிக்கை என்ன வென்றால் போரைத் தொடரக் கூடாது, புரட்சியைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்பதே'' என்று இந்த போல்ஷெவிக்குகள் சொல்லி விட்டார்கள்.

''எதற்காக நீங்கள் புரட்சியைப் பற்றிப் பேசுகிறீர்கள்?'' என்று சைத்தானுக்கு வக்காலத்து வாங்கியவன் போல நான் கேட்டேன். ''புரட்சிதான் நீங்கள் நடத்தி ஆயிற்றே, அல்லவா? ஜாரும் அவனுடைய கும்பலும் ஒழிந்தாயிற்று. சென்ற நூறு ஆண்டுகளாக நீங்கள் இதைத்தானே நோக்கமாகக் கொண்டிருந்தீர்கள்?''

அவர்கள் ஆம் என்று பதிலளித்துவிட்டு மேலே தொடர்ந்தார்கள்: ''ஜார் ஒழிந்துவிட்டான். ஆனால் புரட்சி இப்போதுதான் தொடங்கியிருக்கிறது. ஜார் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டது ஒரு நிகழ்ச்சி மட்டுமே. ஒரு ஆளும் வர்க்கத்தினரான முடியரசுவாதிகளின் கைகளிலிருந்து தொழிலாளர்கள் ஆட்சி அதிகாரத்தைப் பறித்துக் கொண்டது இன்னொரு ஆளும் வர்க்கத்தினரான பூர்ஷ்வா வர்க்கத்தின் கைகளில் அதை ஒப்படைப்பதற்காக அல்ல. அடிமைத்தனம் ஒன்றேதான், அதற்கு நீங்கள் என்ன பெயர் கொடுத்தாலும் சரியே.''

இப்போது ருஷ்யாவின் கடமை பிரான்ஸ் அல்லது அமெரிக்கா போன்ற ஒரு குடியரசை நிறுவுவதுதான்; மேற்கு நாடுகளின் ஸ்தாபனங்களை ருஷ்யாவில் நிலைநாட்டுவது தான் என்று பொதுவாக உலக மக்கள் கருதுவதாக நான் கூறினேன்.

''ஆனால் அதைத்தான் நாங்கள் செய்ய விரும்பவில்லை'' என்றார்கள் அவர்கள். ''உங்கள் ஸ்தாபனங்களையோ அரசாங்கங்களையோ நாங்கள் வெகுவாகப் பாராட்டவில்லை. உங்கள் நாடுகளில் வறுமையும் வேலையின்மையும் அடக்குமுறையும் நிலவுகின்றன என்பதை நாங்கள் அறிவோம். அழுக்குச் சேரிகள் ஒரு புறம், அரண்மனைகள் மறு புறம். ஒரு புறம் முதலாளிகள் தொழிற்சாலை அடைப்புக்கள், கறுப்புப் பட்டியல்கள், பொய்கூறும் அச்சு வெளியீடுகள், முரட்டுப் போக்கிரிகள் ஆகிய சாதனங்களைக் கொண்டு தொழிலாளர்களைத் தாக்குகிறார்கள். மறு புறம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தங்களையும் பகிஷ்கரிப்புக்களையும் வெடிகுண்டுகளையும் கொண்டு எதிர்த்துத் தாக்குகிறார்கள். வர்க்கங்களின் இந்தப் போருக்கு முற்றுப்புள்ளி வைக்க நாங்கள் விரும்புகிறோம். வறுமையை ஒழித்துக்கட்ட நாங்கள் விரும்புகிறோம். இதைச் செய்வது தொழிலாளர்களால்தான் முடியும், கம்யூனிஸ அமைப்பால்தான் முடியும். நாங்கள் ருஷ்யாவில் ஏற்படுத்தப் போவது இதுதான்.''

''வேறு வார்த்தைகளில் சொன்னால் பரிணாம விதிகளை நீங்கள் தவிர்க்க விரும்புகிறீர்கள். ருஷ்யாவைப் பின்தங்கிய விவசாய நாட்டிலிருந்து சிறந்த ஒழுங்கமைப்புள்ள கூட்

டுறவுப் பொதுவள அரசாக ஏதோ மந்திரத்தால் திடீரென்று மாற்றிவிடலாம் என்று நீங்கள் நம்புகிறீர்கள். பதினெட்டாம் நூற்றுண்டிலிருந்து இருபத்து இரண்டாம் நூற்றுண்டுக்குள் தாவிக் குதிக்கப் போகிறீர்கள்'' என்று கூறினேன்.

''புதிய சமூக அமைப்பை நாங்கள் ஏற்படுத்தப் போகிறேம், ஆனுல் தாவிக் குதிப்பதையோ மந்திரத்தையோ நாங்கள் சார்ந்திருக்கவில்லை. தொழிலாளர்கள், குடியானவர்களின் ஒருங்கு திரண்ட ஆற்றலையே நாங்கள் சார்ந்திருக்கிறேம்'' என அவர்கள் பதில் அளித்தார்கள்.

''ஆனுல் இதைச் செய்வதற்குத் தேவையான மூளைகள் எங்கே? பொது ஜனங்களின் மிகப் பெருத்த அறியாமையை எண்ணிப் பாருங்கள்'' என்று நான் குறுக்கிட்டேன்.

''மூளைகளா!'' என்று ஆவேசத்துடன் கத்திஞர்கள் அவர்கள். ''எங்களைவிடச் 'சிறந்தவர்களின்' மூளைகளுக்கு முன் நாங்கள் பணிகிறேம் என்று நினைக்கிறீர்களோ? இந்த யுத்தத்தைக் காட்டிலும் மூளையற்றதும் மடத்தனமானதும் குற்றத்தன்மை உள்ளதுமாக வேறு எது இருக்க முடியும்? இதற்குக் குற்றவாளிகள் யார்? உழைக்கும் வர்க்கங்கள் அல்ல, ஒவ்வொரு நாட்டிலும் உள்ள ஆளும் வர்க்கங்களே. தங்களது பிரமாத மூளைகளையும் பண்பாட்டையும் கொண்டு ஜெனரல்களும் ராஜதந்திரிகளும் ஏற்படுத்தியிருப்பதைவிட மோசமான குழப்பத்தைத் தொழிலாளர்கள், குடியானவர்களின் அறியாமையும் அனுபவம் இன்மையும் நிச்சயமாக ஏற்படுத்தியிருக்க முடியாது. நாங்கள் பொதுமக்களை நம்புகிறேம். அவர்களுடைய படைப்பு ஆற்றலை நாங்கள் நம்புகிறேம். தவிர, சமூகப் புரட்சியை நாங்கள் எப்படியும் ஏற்படுத்தி ஆக வேண்டும்.''

''ஏன்?'' என்று கேட்டேன் நான்.

''ஏனென்றுல் மக்கள் இனத்தின் பரிணுமத்தில் அடுத்த அடி அதுவே. ஒரு காலத்தில் நம்மிடையே அடிமைமுறை நிலவியது. அதன் இடத்துக்கு நிலப்பிரபுத்துவ முறை வந்தது. பின்னது முதலாளித்துவ முறைக்கு இடம் கொடுத்து விலகிக்கொண்டது. இப்போது முதலாளித்துவம் அரங்

கிலிருந்து அகல வேண்டும். அது தன் நோக்கத்தை நிறைவேற்றிவிட்டது. பெருமளவு உற்பத்தியையும் உலகு பரவிய இயந்திரத் தொழில் பெருக்கத்தையும் அது சாத்தியம் ஆக்கியிருக்கிறது. ஆனல் இப்போது அது வெளியேறிவிட வேண்டும். ஏகாதிபத்திய முறையையும் யுத்தத்தையும் தோற்றுவிப்பது அதுவே, உழைப்பாளிகள் கழுத்தை நெரிப்பது அதுவே, நாகரிகத்தை அழிப்பது அதுவே. தன் முறைக்கு அது அடுத்த கட்டத்துக்கு—கம்யூனிஸ அமைப்புக்கு—இடம் கொடுத்து விலகிக் கொள்ள வேண்டும். இந்தப் புதிய சமூக அமைப்பைப் புகுத்துவது தொழிலாளி வர்க்கத்தின் வரலாற்று முக்கியத்துவம் உள்ள கடமை ஆகும். ருஷ்யா பண்படாத பின்தங்கிய நாடு ஆயினும் சமூகப் புரட்சியைத் தொடங்குவது எங்கள் கடமை. மற்ற நாடுகளின் தொழிலாளி வர்க்கத்தின் கடமை அதை மேற்கொண்டு நடத்திச் செல்வது ஆகும்.''

உலகைப் புதுக்கி அமைத்தல் என்ற துணிவுமிக்க செயல்திட்டம்.

ரூட் தூதுக் கோஷ்டியைச் சேர்ந்த ஜேம்ஸ் டன்கன் தொழிற் சங்கங்களேயும் தொழிலாளர் கௌரவத்தையும் எட்டுமணி வேலைநாளேயும் பற்றிய சலிப்பூட்டும் பேச்சில் முன்வைத்த கருத்துக்கள் அற்பமானவையாகத் தோன்றியதில் வியப்பில்லே. அவருடைய பேச்சைக் கேட்டவர்களுக்கு வேடிக்கையாகவோ சலிப்பாகவோ இருந்தது. மறு நாள் ஒரு செய்தித்தாளில் டன்கனின் இரண்டு மணி நேரப் பேச்சு பின்வருமாறு விவரிக்கப்பட்டது: ''நேற்று இரவு அமெரிக்கத் தொழிலாளர் சம்மேளனத்தின் உபதலேவர் சோவியத்துக்கள்முன் பேசினர். பசிபிக் மாகடலேக் கடந்துவருகையில் அவர் இரண்டு பேச்சுக்களேத் தயாரித்தார் போலும்—ஒன்று ருஷ்ய மக்களுக்காகவும் மற்றது விஷயஞானம் அற்ற எஸ்கிமோக்களுக்காகவும். நேற்று இரவு தாம் எஸ்கிமோக்கள் முன் பேசுவதாக அவர் நினேத்துவிட்டார் போலக் காண்கிறது.''

போல்ஷெவிக்குகள் ஒரு பெரிய புரட்சித் திட்டத்தை முன்வைப்பது என்பது ஒரு விஷயம். 16 கோடி மக்கள்

கொண்ட நாடு அதை ஏற்குமாறு செய்வது முற்றிலும் வேறு விஷயம் — அதிலும் அப்போது போல்ஷெவிக் கட்சியில் மொத்தம் 1,50,000 உறுப்பினர்களுக்கு மேல் இல்லை ஆதலால்.*

அமெரிக்காவில் பயிற்சி பெற்ற போல்ஷெவிக்குகள்

எனினும் போல்ஷெவிக் கருத்துக்களுக்கு மக்களிடையே செல்வாக்கு ஏற்படுத்துவதற்குப் பல காரணிகள் சூழ்ச்சி செய்துகொண்டிருந்தன. முதலாவதாக, போல்ஷெவிக்குகள் மக்களைப் புரிந்துகொண்டார்கள். கடற்படையினர் போன்ற ஓரளவு கல்வி அறிவுள்ள பகுதியினரிடையே போல்ஷெவிக்குகள் பலத்த நிலையில் இருந்தார்கள். நகரக் கம்மியர்களையும் தொழிலாளிகளையும் பெருமளவு உறுப்பினராகக் கொண்டிருந்தார்கள். நேரே மக்களிடையிலிருந்தே தோன்றிய அவர்கள் மக்களது மொழியைப் பேசினார்கள், அவர்களது துயரங்களைப் பகிர்ந்துகொண்டார்கள், அவர்களுடைய எண்ணங்களை எண்ணினார்கள்.

போல்ஷெவிக்குகள் மக்களைப் புரிந்துகொண்டார்கள் என்று சொல்வது முற்றிலும் சரி அல்ல. அவர்கள் தாமே மக்களாக விளங்கினார்கள். எனவே அவர்கள் நம்பப்பட்டார்கள். தனக்கு மேலுள்ள வர்க்கங்களால் வெகு நெடுங்காலமாகத் துரோகம் இழைக்கப்பட்ட ருஷ்யத் தொழிலாளி தனது சொந்த வர்க்கத்தை மட்டுமே நம்புகிறான்.

எனது நண்பர் ஒருவருக்கு இந்த உண்மை நகைக்கத் தக்க விசித்திர முறையில் புலப்படுத்தப்பட்டது. கிராஸ்னஷ்சோக்கவ் என்பது அவருடைய பெயர். தற்போது அவர்

---

*இந்த எண்ணிக்கை எந்தக் காலத்தைச் சேர்ந்தது என்பதை ஆசிரியர் குறிப்பிடவில்லை. உண்மையில் தனது ஆறுவது காங்கிரஸ் தொடங்குவதற்குள் ருஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் தொகை 2,40,000 ஆகியிருந்தது.

தூரகிழக்கு மக்கள் கமிஸாரவையின்* தலைவராக இருக்கிறார். சிக்காகோ நகரத் தொழிலாளர் கல்லூரியைச் சேர்ந்த அவர் தொழிலாளர்களின் சார்பில் போராடுபவர்களின் அணியில் சேர்ந்தார். திறமையும் சொல்வன்மையும் வாய்ந்த கிராஸ்னஷ்சோக்கவ் நிக்கொலாயேவ்ஸ்க் நகர சோவியத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பூர்ஷ்வாச் செய்தித்தாள் ''அயல்நாட்டிலிருந்து வந்த பணியாளன்'' என்று கூறி அவரைத் தாக்கி ஒரு கட்டுரையை உடனே வெளியிட்டது.

''மாபெரும் ருஷ்யாவின் குடி மக்களே, சிக்காகோவிலிருந்து வந்த ஒரு கூலிக்காரனால், ஜன்னல் துடைப்பவனால் ஆளப்படுவது உங்களுக்கு வெட்கமாக இல்லையா?'' என்று கேட்டது அது.

கிராஸ்னஷ்சோக்கவ் சூடான பதில் ஒன்று எழுதி, வழக்குரைஞராகவும் கல்வி நிபுணராகவும் அமெரிக்காவில் தாம் பெற்றிருந்த சிறப்பைக் குறிப்பிட்டார். இந்தக் கட்டுரையுடன் செய்தித்தாள் அலுவலகம் செல்லும் வழியில், இந்தப் பத்திரிகைத் தாக்குதல் தொழிலாளர்களின் கண்களில் தமது மதிப்பை எவ்வளவு தூரம் குறைத்திருக்கிறது என்று தெரிந்துகொள்வதற்காக சோவியத் காரியாலயம் சென்றார்.

அவர் கதவைத் திறந்ததுமே, ''தவாரிஷ் கிராஸ்னஷ்சோக்கவ்!'' என்று ஒருவன் கத்தினான். ''நாஷ்! நாஷ்!'' (நம்மவர்! நம்மவர்!) என்று ஆரவாரித்து எல்லோரும் அவர் கையைப் பற்றிக் குலுக்கினார்கள். ''இப்போதுதான் செய்தித்தாளைப் படித்தோம், தோழரே. எங்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சி அளித்தது அது. நீங்கள் பூர்ஷ்வா என்று எண்ணியிருந்தோம் ஆயினும் உங்கள்மேல் எங்களுக்கு எப்போதுமே பிரியம். இப்பொழுதோ, நீங்கள் எங்களில் ஒருவர், உண்மைத் தொழிலாளி என்று தெரிந்துகொண்டோம், உங்களை

---

*தூரகிழக்கு மக்கள் கமிஸாரவை அந்தக் காலத்தில் நிலவியது, ருஷ்ய சோவியத் சோஷலிஸக் கூட்டாட்சிக் குடியரசின் மக்கள் கமிஸாரவைக்குக் கீழ்ப்பட்டிருந்தது.

நேசிக்கிறோம். உங்களுக்காக நாங்கள் என்ன வேண்டுமானாலும் செய்வோம்.''

போல்ஷெவிக் கட்சியின் தொண்ணூற்றுறு சதவிகிதம் உறுப்பினர்கள் தொழிலாளிகள். சாதாரண மக்களிலிருந்து நேரே தோன்றாத அறிவுஜீவிகளும் கட்சியில் இருக்கத்தான் செய்தார்கள். ஆனால் லெனின், த்ரோத்ஸ்கிய் போலவே அவர்களில் பலர் பட்டினி நிலைக்கு வெகு அருகே வாழ்ந்ததமையால் ஏழைகளின் எண்ணங்களை அறிந்திருந்தார்கள்.

போல்ஷெவிக்குகள் பெரும்பாலும் இளைஞர்கள், பொறுப்பு ஏற்க அஞ்சாதவர்கள், சாவதற்கு அஞ்சாதவர்கள், மேல் வர்க்கங்களுக்கு நேர் மாறாக உழைக்கத் தயங்காதவர்கள். இவர்களில் பலர், சிறப்பாக இப்போது அமெரிக்காவிலிருந்து ருஷ்யாவுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தவர்களில் பலர், என் நண்பர்கள் ஆனார்கள்.

யானிஷேவ் இவர்களில் ஒருவன். உலகத் தொழிலாளி என்ற சொல்லுக்கு முழு இலக்கணமாக விளங்கினான் அவன். பத்து ஆண்டுகளுக்குமுன் சக குடியானவர்களை ஜாருக்கு எதிராகத் தூண்டிவிட்டதற்காக அவன் ருஷ்யாவிலிருந்து நாடு கடத்தப்பட்டான். ஹாம்பர்க் துறைமுகத்தில் நீரெலி போல வாழ்ந்தான், ஆஸ்திரியச் சுரங்கங்களில் நிலக்கரி தோண்டினான், பிரெஞ்சு உருக்காலைகளில் வேலை செய்தான். அமெரிக்காவில் தோல் பதனிடும் தொழிற்சாலையில் தோல் பழுக்க உழைத்தான், பஞ்சாலைகளில் சலவைப் பொடிகளால் வெளிறினான், வேலைநிறுத்த அணிகளில் தடியடிக்கு உள்ளானான். பயணங்களின் உதவியால் நான்கு மொழிகளை அவன் கற்றுக்கொண்டான், போல்ஷெவிஸத்தில் உளமார்ந்த பற்று அவனுக்கு உண்டாயிற்று. குடியானவன் இப்போது இயந்திரத் தொழில் பாட்டாளி ஆகிவிட்டான்.

ஒரு நையாண்டி எழுத்தாளர் பாட்டாளி என்பதற்குப் ''பேசும் தொழிலாளி'' என்று விளக்கம் தந்திருந்தார். யானிஷேவ் சுபாவத்தில் பேச்சாளி அல்ல. இப்போது அவன் பேச வேண்டியதாயிற்று. லட்சக்கணக்கான சக தொழிலாளர்கள் ஒளியை வேண்டி முறையிட்டது அவனைப் பேச வைத்தது. ஆலைகளிலும் சுரங்கங்களிலும் எந்த அறிவுஜீவியும் பேசியிருக்கமுடியாத வகையில் அவன் பேசினான்.

இரவும் பகலும் அவன் உழைத்தான். பின்னர் நடுவேனில் காலம் வந்ததும் என்னை அவன் கிராமத்துக்கு அழைத்துச் சென்றான். அது மறக்க முடியாத பயணம்.

இன்னொரு தோழன் வோஸ்கோவ். முன்னர் நியூயார்க் நகரத் தச்சர் சங்கத்தின் பிரதிநிதி. இப்போது ஸெஸ்த்ர ரேத்ஸ்க் என்னும் ஊரில் துப்பாக்கித் தொழிற்சாலையை நடத்திய தொழிலாளர் கமிட்டி உறுப்பினனாக இருந்தான். பின்னும் ஒரு தோழன் வொலதார்ஸ்க்கிய். சோவியத்திற்காக அடிமைபோல் உழைத்தான், அது பற்றிப் பேருவகையில் திளைத்தான். ''ஐம்பது மனிதர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதிலும் பெற்றிருக்க வேண்டியதைக் காட்டிலும் அதிக அளவில் உண்மை இன்பத்தை இந்தச் சில வாரங்களில் நான் அடைந்து விட்டேன்'' என்று ஒரு முறை அவன் என்னிடம் சொன்னான். நேய்பூத் என்பவன் இன்னொருவன். எப்போதும் கட்டுப் புத்தகங்களுடன் வளையவருவான். எலிக்கும் தங்கத்துக்கும் போர்! என்ற பிரெயில்ஸ்போர்டின் ஆங்கிலப் புத்தகத்தைக் கண்கள் ஒளி வீசப் படிப்பான். அயல் நாட்டு வாசத்திலிருந்து திரும்பிய இவர்கள் போல்ஷெவிக் பிரசாரத்துக்கு விரைவையும் புது வழியையும் கொண்டுவந்தார்கள். ''செயல்திறமை'' என்பதற்கு ருஷ்ய மொழியில் சொல் கிடையாது. இந்த இளம் உற்சாகிகளோ, அதிசயச் செயல் திறமையும் ஆற்றலும் வாய்ந்திருந்தார்கள்.

போல்ஷெவிக் நடவடிக்கைக்கு மையமாகத் திகழ்ந்தது பெத்ரோகிராத் நகரம். இதில் வரலாற்றின் நுட்பமான விடம்பனம் அடங்கியுள்ளது. பேரரசன் ஜார் பீட்டரின்* பெருமையும் புகழுமாக விளங்கியது இந்த நகரம். வெறும் சதுப்பு நிலமாக இருந்த இந்த இடத்தில் ஒளி திகழும் தலை நகரை அமைத்துச் சென்றான் ஜார் பீட்டர். அஸ்திவாரம் போடுவதற்காக இந்தச் சதுப்பு நிலத்தில் அவன் பல காடுகள் கொள்ளும் அளவு மரங்களையும் பல கற்சுரங்கங்கள்

---

* பீட்டர், முதலாவது மகா (1672-1725)—1682 முதல் 1725 வரை ருஷ்ய ஜார், ருஷ்யாவின் முதல் சக்கரவர்த்தி.

கொள்ளும் பாறைகளையும் அமிழ்த்தி நிறைத்தான். பீட்டரின் எஃகு உறுதிக்குப் பிரமாண்டமான நினைவுச் சின்னமாக இலங்குகிறது இது. அதே சமயம் இது பிரமாண்டமான குரூரத்துக்கும் நினைவுச் சின்னம் ஆகும், ஏனெனில் லட்சக்கணக்கான மரக் குவியல்கள்மீது மட்டுமே அல்ல, லட்சக்கணக்கான மனித எலும்புகள்மீதும் கட்டப்பட்டிருக்கிறது இந்த நகரம்.

கால்நடை மந்தைகள் போல இந்தச் சதுப்பு நிலங்களுக்கு ஓட்டிவரப்பட்ட தொழிலாளிகள் குளிராலும் பட்டினியாலும் ஈறு அரிப்பாலும் மடிந்தார்கள். எவ்வளவு விரைவாக அவர்கள் சதுப்பு நிலத்தால் விழுங்கப்பட்டார்களோ அவ்வளவே விரைவாகப் புதிய பண்ணையடிமைகள் ஓட்டிவரப்பட்டார்கள். வெறுங் கைகளாலும் கழிகளாலும் மண்ணைத் தோண்டி முன்தாங்கிகளிலும் தொப்பிகளிலும் அப்பால் எடுத்துச்சென்றூர்கள் அவர்கள். சம்மட்டிகளின் தடதடப்பு, சவுக்குகளின் சொடுக்கு, சாகிறவர்களின் முனகல்கள் ஆகியவற்றுடன் பிரமிட் போன்று அடிமைகளின் கண்ணீரிலும் துயரத்திலும் எழுந்தது பெத்ரோகிராத் நகரம்.

இந்த அடிமைகளின் வழிவந்தவர்கள் இப்போது கிளர்ச்சி செய்துகொண்டிருந்தார்கள். பெத்ரோகிராத் புரட்சியின் தலைமைக் கேந்திரம் ஆகிவிட்டது. ஒவ்வொரு நாளும் அது நீண்ட கொள்கைப் போர்ப் பயணங்களுக்குப் பிரசாரகர்களை அனுப்பி வைத்தது. ஒவ்வொரு நாளும் அது போல்ஷெவிக் திருமறையை அச்சிட்டு, கட்டுக் கட்டாக, வண்டி வண்டியாக வெளியேற்றியது. ஜூன் மாதத்தில் பெத்ரோகிராத் "பிராவ்தா" (உண்மை), "படைவீரன்," "கிராம ஏழை" ஆகியவற்றின் பத்துலட்சக்கணக்கான பிரதிகளை வெளியிட்டது. நேசநாட்டுப் பார்வையாளர்கள் தனிகர் வீதி உணவு விடுதிகளில் தலைகளைப் புதைத்துக்கொண்டு நெருப்புக்கோழிகள் போன்று குந்தியவாறு தாங்கள் நம்ப விரும்பியதை மட்டுமே நம்பியபடி, "எல்லாம் ஜெர்மன் பணத்தால் செய்யப்படும் வேலை" என்றூர்கள். மூலை திரும்பியிருந்தால் நீண்ட வரிசையாக ஆட்கள் ஒரு மேஜை அருகாகச் செல்வதையும் ஒவ்வொருவரும் அதன் மேல் தன்

நன்கொடையை, பத்து கோப்பெக்குகளோ, பத்து ரூபிள் களோ, ஒருவேளை நூறு ரூபிள்களோகூட, வைப்பதையும் பார்த்திருப்பார்கள். இவர்கள்தாம் போல்ஷெவிக் அச்சக வெளியீடுகளுக்காகத் தங்களால் இயன்றதைச் செய்யும் தொழிலாளர்களும் படைவீரர்களும் குடியானவர்களுங்கூட.

போல்ஷெவிக்குகளின் வெற்றி எவ்வளவுக் கெவ்வளவு பெரிதாக இருந்ததோ, அவர்களுக்கு எதிரான கூச்சல் அவ் வளவுக்கவ்வளவு உரக்கக் கிளம்பியது. பூர்ஷ்வாச் செய்தித் தாள்கள் மற்றக் கட்சிகளின் புத்தியையும் நிதானத்தையும் பாராட்டிய அதே சமயத்தில் போல்ஷெவிக்குகளை இரும்பு முட்டியால் தாக்கி ஒடுக்க வேண்டும் என்று கோரின. கேரென்ஸ்கிய்க்கும் பிறருக்கும் பனிக்கால அரண்மனையில் அரச வைபவங்கள் கொண்ட இருப்பிடங்கள் அளிக்கப்பட் டிருந்த அதே சமயத்தில் போல்ஷெவிக்குகள் சிறைகளில் தள்ளப்பட்டார்கள்.

சென்ற காலத்தில் எல்லாக் கட்சிகளும் தங்கள் கொள் கைகளுக்காகத் துன்பம் உழன்றன. இப்போதோ பிரதான மாக போல்ஷெவிக்குகள் மட்டுமே கஷ்டங்கள் அனுபவித் தார்கள். அவர்கள்தாம் இன்றையத் தியாகிகள். இது அவர் களது மதிப்பை உயர்த்தியது. துன்புறுத்தல் அவர்களைச் சிறப்பிடத்தில் தூக்கி வைத்தது. போல்ஷெவிக் சித்தாந்தங் களைச் செவியேற்கத் தொடங்கியிருந்த பொது மக்கள் அவை தங்களது விருப்பங்களை விந்தையாக ஒத்திருப்பதைக் கண் டார்கள்.

ஆனால் முடிவில் மக்களை போல்ஷெவிக்குகளின் கொடி யின் கீழ்க் கொண்டு வந்தவை அவர்களுடைய தியாகமும் உற்சாகமும் அல்ல. இன்னும் வலிமை வாய்ந்த கூட்டாளி கள் அவர்கள் சார்பில் வேலை செய்துவந்தார்கள். பசிதான் அவர்களது பிரதானக் கூட்டாளி. இது மூன்று வகையான பசி—ரொட்டிக்கும், சமாதானத்திற்கும், நிலத்திற்கும் திரளான மக்கள் கொண்டிருந்த பசி.

''நிலம் கடவுளுக்கும் மக்களுக்கும் சொந்தம்'' என்ற குடியானவர்களின் தொன்மைக் கோஷம் கிராம சோவியத் துக்களில் மீண்டும் எழுந்தது. நகரத் தொழிலாளிகள் கடவுளை விட்டுவிட்டு, ''தொழிற்சாலைகள் தொழிலாளர்

களுக்கே சொந்தம்'' என்று முழங்கினர்கள். போர்முனைகளில் படைவீரர்கள், ''யுத்தம் சைத்தானுக்கே சொந்தம். எங்களுக்கு அதன் தொடர்பே வேண்டாம். எங்களுக்குச் சமாதானம் வேண்டும்'' என்று பிரகடனம் செய்தார்கள்.

பொது மக்களிடையே பெருத்த கொந்தளிப்பு ஏற்பட்டிருந்தது. நிலக் கமிட்டிகளும் தொழிற்சாலைக் கமிட்டிகளும்போர்முனைக் கமிட்டிகளும் அமைப்பதற்கு அது அவர்களைத் தூண்டி ஊக்கியது. அது அவர்களைப் பேச வைத்தது. விளைவாக ருஷ்யா கோடானுகோடிப் பேச்சாளர்கள் கொண்ட நாடு ஆகிவிட்டது. பிரமாண்டமான வெகுஜன ஆர்ப்பாட்டங்கள் நிகழ்த்த அது அவர்களை வீதிகளுக்கு அனுப்பியது.

அத்தியாயம் இரண்டு

பெத்ரோகிராத் ஆர்ப்பாட்டம் செய்கிறது

1917ம் ஆண்டு இளவேனில் காலத்திலும் கோடை காலத்திலும் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்தன. இந்த விஷயத்தில் ருஷ்யா எப்போதுமே சிறந்து விளங்கியது. இப்போது ஊர்வலங்கள் முன்னிலும் நீண்டவையாக இருந்தன. இவற்றைத் தலைமை வகித்து நடத்தியவர்கள் பாதிரிகள் அல்ல, பொது மக்கள். தேவ உருவங்களுக்குப் பதிலாகச் செம்பதாகைகளை உயர்த்திப் பிடித்தவாறு, சர்ச் தோத்திரப் பாடல்களுக்குப் பதில் புரட்சி கீதங்களை முழக்கியவாறு நடந்தார்கள் அவர்கள்.

ஜூலை முதல் தேதிப் பெத்ரோகிராத் நகரை யார் தான் மறக்க முடியும்? இளம் பழுப்பும் பசுமையும் திகழ்ந்த தரைப்படை வீரர்களும், நீலமும் பொன்னிறமுமாக ஒளிர்ந்த குதிரைவீரர்களும், வெள்ளை உடுப்புக்கள் அணிந்த கடற்படைவீரர்களும், கரிய உடுப்புக்கள் அணிந்த ஆலைத் தொழிலாளர்களும், பல்வண்ண உடையினரான மகளிரும் நகரின் பிரதான வீதிகள் வழியே பெருகிவந்தார்கள். ஊர்வலம்

சென்ற ஒவ்வொருவர் மீதும் ரிப்பனும் மலரும் சிவப்புப் பட்டிகையும் இருந்தன. மாதர்கள் சிவப்புத் தலைக்குட்டைகள் அணிந்திருந்தார்கள். ஆடவர் சிவப்புச் சொக்காய்கள் போட்டிருந்தார்கள். மேலே ஆயிரமாயிரம் செம்பதாகைகள் செந்நுரை போன்று பளிச்சிட்டுப் படபடத்தன.

இந்த மனித ஆறு பெருகும்போதே பாடியது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் பாரிஸ் நகரை நோக்கி முன்னேறிய ஜெர்மானியப் போர் இயந்திரம் மியேஸ் பள்ளத்தாக்கில் உருண்டு சென்றதை நான் பார்த்திருந்தேன். பத்தாயிரம் உரத்த ஜெர்மன் குரல்கள் பாடிய "Deutschland über alles"* என்ற பாட்டை அப்போது பாறைகள் எதிரொலித்தன. அதே சமயம் பத்தாயிரம் பூட்சுகள் தரைமீது தாளத்துக்கு இசைய ஒன்றாக அடித்தன. அந்தக் காட்சி வலிமை மிக்கது, ஆனால் எந்திரத்தன்மை கொண்டது, அந்தப் பழுப்பு அணிவரிசைகளின் எல்லாச் செயல்களையும் போன்றே மேலிருந்து உத்தரவிடப்பட்டது.

ஆனால் இந்தச் செவ்வணிகளின் பாட்டோ மக்களின் ஆன்மாவிலிருந்து தானாகவே பொங்கிப் பெருகியது. ஒருவன் புரட்சி கீதம் ஒன்றைத் தொடங்குவான்; படைவீரர்களின் ஆழ்ந்த அனுநாதமுள்ள குரல்கள் அதன் பல்லவியை எடுப்பாக முழக்கும். தொழிலாளிப் பெண்களின் முறையிடுபவை போன்ற குரல்கள் அவற்றுடன் சேர்ந்து ஒலிக்கும். கீதம் எழும், தணியும், பின்பு அடங்கி ஓய்ந்துவிடும். அப்புறம் வரிசையின் மறு பக்கத்தில் அது மீண்டும் குபீரென்று கிளம்பும். வீதி முழுவதும் ஒத்திசைந்து பாடும்.

செயின்ட் ஐஸாக் சர்ச்சின் தங்கக் கும்மட்டத்தையும் மசூதியின் தூபிகளையும் அருகாகக் கடந்து அணியணியாக நடந்தன நாற்பது சமயக் கோட்பாடுகளும் மானிட இனங்களும். புரட்சி நெருப்பால் ஒன்றாகப் பொருத்தி இணைக்கப்பட்டிருந்தன அவை. சுரங்கங்களும் ஆலைகளும் அழுக்குச் சேரிகளும் காப்பகழ்களும் மக்களுடைய மனங்களிலிருந்து துடைத்து அகற்றப்பட்டுவிட்டன. மக்கள் தாமே உரு

---

*''ஜெர்மனி எல்லாவற்றுக்கும் முதன்மையானது.'' —(மொ-ர்)

வாக்கிய நாள் இது. அவர்கள் இதைக் கொண்டாடி இதிலேயே களிப்பு அடைய விரும்பினார்கள்.

ஆனால், இந்த நாளைக் கொண்டுவருவதற்காக, விலங்குகள் பூட்டப் பெற்று இரத்தம் பெருகச் சைபீரிய வெளிகளில் சிறை வாழ்வு நடத்தவும் மடியவும் சென்றவர்களை மக்கள் தங்கள் மகிழ்ச்சிப் பெருக்கில் மறந்துவிடவில்லை. அருகாமையிலும் இருந்தார்கள் மார்ச் மாதப் புரட்சியில் உயிர் வழங்கிய தியாகிகள்; ''செவ்வாய்க் களத்தில்'' சிவப்புச் சவப் பெட்டிகளில் கிடந்தார்கள் அவர்களில் ஆயிரவர். ''மார்ஸேல்'' கீதத்தின் போர் உற்சாகம் பொங்கும் இசை இங்கே நின்றுவிட்டது. அதன் இடத்தில் ஆழ்ந்து ஒலித்தது ஷோப்பினின் ''சவ ஊர்வல இசை.'' முரசுகள் அமுங்கி ஒலிக்க, பதாகைகள் தாழ, தலைகளைக் குனிந்தவாறு மௌனமாகவோ அழுது கொண்டோ நீண்ட கல்லறைத் திடலைக் கடந்து சென்றார்கள் மக்கள்.

அன்றைய அமைதியை ஒரு நிகழ்ச்சி குலைத்தது. அது அற்பமானதுதான் எனினும் பொருளாழம் உள்ளது. ருஷ்ய-அமெரிக்கனும் புரட்சி நாட்களில் எத்தனையோ அமெரிக்கர்களுக்கு நண்பனாகவும் வழிகாட்டியாகவும் உதவியவனுமான அலெக்ஸ் கம்பெர்க் என்பவனுடன் நான் ஸதோவயா வீதியில் நின்றுகொண்டிருந்தேன். ''தாற்காலிக அரசாங்கம் நீடு வாழ்க!'' என்ற வாசகம் பொறித்த ஒரு செம்பதாகை கடற்படை வீரர்கள், தொழிலாளர்கள் ஆகியோரின் ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டது. அதைக் கிழித்து எறிய அவர்கள் முற்பட்டார்கள். இந்த அமளியில் எவனோ ஒருவன், ''கஸாக்கியர்கள் வருகிறார்கள்'' என்று கத்தினான்.

மக்களின் இந்தப் பழம் பகைவர்களின் பெயர் கூட்டத்தினருக்குக் கிலி உண்டாக்கிவிட்டது. வெளிறிய முகங்களுடன் அவர்கள் கால்நடை மந்தைபோல நெருக்கியடித்துக்கொண்டு, விழுந்தவர்களை மிதித்துத் துவைத்தவாறு பைத்தியக்காரர்கள் போன்று கூச்சலிட்டபடி ஓடத் தலைப்பட்டார்கள். நல்ல வேளையாக அது பொய்யான அபாய அறிவிப்பு. அணிகள் மீண்டும் அமைந்தன. பாட்டுக்களும் மகிழ்ச்சி ஆரவாரமுமாக மக்கள் மறுபடி ஊர்வலத்தைத் தொடர்ந்தார்கள்.

எனினும் இந்த ஊர்வலம் உணர்ச்சியின் திடீர் வெளியீடு மட்டும் அல்ல. அது கண்டிப்பான தீர்க்கதரிசனம் வாய்ந்தது. ''தொழிற்சாலைகள் தொழிலாளர்களுக்கு! நிலம் குடியானவர்களுக்கு! சமாதானம் உலகம் அனைத்திற்கும்! போர் ஒழிக! இரகசிய உடன்படிக்கைகள் ஒழிக! முதலாளித்துவ அமைச்சர்கள் ஒழிக!'' என்று பிரகடனம் செய்தன அதன் பதாகைகள்.

பொது மக்களுக்காகக் கோஷங்களின் வடிவில் படிகங்களாகத் திரட்டித் தரப்பட்ட போல்ஷெவிக் செயல்திட்டம் இது. பதாகைகள் ஆயிரக்கணக்கில் இருந்தன. அவற்றின் பெருத்த எண்ணிக்கை போல்ஷெவிக்குகளுக்குக்கூட வியப்பளித்தது. பெரும் புயல் வீசப்போவதற்கு அறிகுறிகளாக விளங்கின இந்தப் பதாகைகள். எல்லோரும் இதைக் காண முடிந்தது. எல்லோரும் இதைக் காணவும் செய்தார்கள். தனிப்பட்ட முறையில் இதைக் காண்பதற்காகவே ருஷ்யாவுக்கு அனுப்பப்பட்டிருந்தவர்கள்—உதாரணமாக ரூட் தூதுக் கோஷ்டியினர்—மட்டுமே இதைக் காணத் தவறியவர்கள். புரட்சிகர ருஷ்யாவில் இருந்தபோது இந்தக் கனவான்கள் புரட்சியிலிருந்து முற்றிலும் தனித்து விலகியிருந்தார்கள். ருஷ்யப் பழமொழி ஒன்று கூறுவது போல, ''அவர்கள் சர்க்கஸுக்குப் போனார்கள், ஆனால் யானை அவர்கள் கண்களில் படவில்லை.''

இந்த ஜூலை முதல் தேதி அமெரிக்கர்கள் கஸான் சர்ச்சில் விசேஷப் பிரார்த்தனைக்கு அழைக்கப்பட்டார்கள். சர்ச்சில் பாதிரிகளின் முத்தங்களையும் ஆசிகளையும் பெறுவதற்காக அவர்கள் முழந்தாள் படியிட்டார்கள். அதே சமயம் வெளியே வீதிகள் எழுச்சி கொண்ட மக்களது விசாலமான ஊர்வலத்திலிருந்து கிளம்பிய பாட்டுக்களாலும் மகிழ்ச்சி ஆரவாரங்களாலும் எதிரொலித்தன. குருடர்கள்! அன்றைய தினம் நம்பிக்கை அந்தப் பூஞ்சணம் பிடித்த சுவர்களுக்கு உள்ளே நடந்த திரள் தொழுகையில் அல்ல, வெளியே நடந்த மக்கள் திரளிலேயே இருந்தது என்பதை அவர்கள் காணவில்லை.

எனினும் கிழக்குப் போர்முனையில் கேரென்ஸ்கிய் ஏற்பாடு செய்திருந்த தாக்குதல் பற்றிய நம்பிக்கையூட்டும்

ஆரம்பச் செய்திகளைக் கேட்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்த மற்ற அரசாங்கத் தூதர்களைக் காட்டிலும் இவர்கள் அதிகக் குருடர்கள் அல்ல. இந்தத் தாக்குதல் அதன் தலைவனைப் போலவே தகத்தகாயமான வெற்றியாகத் தொடங்கி, பரிதாபகரமான படு தோல்வியாக முடிந்தது. 30,000 ருஷ்யர்களை அது படுகொலை செய்தது, இராணுவத்தின் மனவுறுதியைத் தகர்த்தது, மக்களுக்கு ஆத்திரம் ஊட்டியது, அமைச்சரவை நெருக்கடியை உண்டாக்கிற்று, பெத்ரோகிராதில் அவலமான எதிர்விளைவை, ஜூலை பதினாறு தேதி நடந்த ஆயுதக் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

ஆயுதந்தாங்கிய ஆர்ப்பாட்டம்

ஜூலை முதல் தேதி, வரப்போகும் புயல் பற்றி முன் எச்சரிக்கை கொடுத்தது. ஜூலை பதினாறு தேதி, இந்தப் புயல் சீற்றத்துடன் அடித்து வீசியதைக் கண்டது. தொடக்கத்தில் வயதில் மூத்த குடியானவப் படைவீரர்கள் **"நாற்பது வயது ஆனவர்கள் வீடு திரும்பிப் பயிரை அறுவடை செய்ய விடுங்கள்"** என்ற வாசகம் பொறித்த விளம்பர அட்டைகளுடன் நீண்ட வரிசைகளாக வந்தார்கள். பிறகு பாளையங்களிலும் அழுக்குத் தெருக்களிலும் தொழிற்சாலைகளிலும் இருந்து ஆயுதங்களேந்திய மனிதர்கள் பெரு வெள்ளங்களாகப் பெருகி தவ்ரீதா அரண்மனையை நோக்கிப் பாய்ந்து இரண்டு இரவுகளும் ஒரு பகலும் அதன் வாயில்கள் வழியே ஆர்ப்பரித்துச் சென்ற வண்ணமாக இருந்தார்கள். சங்குகள் முழங்க, செங்கொடிகள் அரண்மேடைகள் மீது பறக்க, கவச மோட்டார்கள் தெருக்களில் விரைந்து போய் வந்தவாறு இருந்தன. படைவீரர்களால் செம்மச் செம்ம நிறைந்த மோட்டார் லாரிகள் துப்பாக்கிக் குத்தீட்டிகள் எல்லாப் புறங்களிலும் வெளித்துருத்திக் கொண்டிருக்க, சீறிப் பாயும் பிரமாண்டமான முள்ளம் பன்றிகள் போல விரைந்தன. மோட்டார் மட்காப்புக்கள் மீது நீட்டிப்படுத்திருந்தார்கள் குறி தவறாது சுடும் துப்பாக்கி வீரர்கள். அவர்களது துப்பாக்கிகள் கார் விளக்குக்களுக்குமுன்னே துருத்திக்கொண்டிருந்தன. அவர்களுடைய

விழிகள், தூண்டும் பகை உளவாளிகள் தென்படுகிறார்களா என்று உன்னிப்பாகக் கூர்ந்து நோக்கியவாறு இருந்தன.

இந்தப் பிரவாகம் ஜூலை முதல் தேதி இந்தத் தெருக்களில் பெருகிய ஆற்றைக் காட்டிலும் மிகப் பெரிது, அதிகக் கெடுகுறி உள்ளது, ஏனெனில் அது எஃகு ஆயுதங்களால் பளபளத்தது, வசவுகளும் திட்டுக்களுமாகச் சீறியது. ஆத்திரம் பொங்கும் நீண்ட பழுப்பு நிற வரிசையாக விளங்கியது இது. தங்களை ஆள்பவர்களுக்கு எதிராகத் தானாகவே வெடித்துக் கிளம்பிய மக்களின் சீற்றம் இது—கோரமானது, முரட்டுத் துணிச்சல் நிறைந்தது, அச்சுறுத்துவது.

அராஜகவாதிகளின் ஒரு கும்பல், தையல்காரன் யார்ச்சூக் என்பவனின் தலைமையில் நடந்தது. கடும் உழைப்பின் முத்திரை யார்ச்சூக் மீது பதிந்திருந்தது. தையல் வேலையில் நெடுங்காலம் குனிந்து ஈடுபட்டிருந்ததன் விளைவாக அவன் குறுகிய உருவினனாக இருந்தான். இப்போதோ, ஊசிக்குப் பதிலாகத் துப்பாக்கியைக் கையில் பிடித்திருந்தான் யார்ச்சூக். ஊசிக்கு அடிமைத்தனத்திலிருந்து அவனது விடுதலைக்கு அடையாளமாக விளங்கியது துப்பாக்கி.

''உங்களுடைய அரசியல் கோரிக்கைகள் என்ன?'' என்று கம்பெர்க் அவனிடம் கேட்டான்.

''எங்களுடைய அரசியல் கோரிக்கைகளா?'' என்று தயங்கினான் யார்ச்சூக்.

''முதலாளிகள் நாசமாய்ப் போக!'' என்று குறுக்கே முழங்கினான் பெருத்த உருவினனான ஒரு கடற்படை வீரன். ''எங்களுடைய மற்ற அரசியல் கோரிக்கைகள், யுத்தம் நாசமாய்ப் போக, கேடுகெட்ட இந்த அமைச்சரவை முழுவதுமே நாசமாய்ப் போக என்பதுதான்'' என அவன் மேலும் கூறினான்.

ஒரு சந்தில் நிறுத்தப்பட்டிருந்தது டாக்ஸி ஒன்று. இரண்டு மெஷீன்கன்களின் குழாய்முனைகள் அதன் ஜன்னல்கள் வழியே நீட்டிக்கொண்டிருந்தன. எங்கள் கேள்விக்கு விடையாக, ''முதலாளித்துவ அமைச்சர்கள் ஒழிக'' என்ற

வாசகம் பொறித்த பதாகையைச் சுட்டிக் காட்டினன் காரோட்டி.

''மக்களைப் பட்டினி போடாதீர்கள், கொல்லாதீர்கள் என்று இவர்களைக் கெஞ்சி எங்களுக்கு அலுத்துப் போய் விட்டது'' என்று விளக்கத் தொடங்கினன் காரோட்டி. ''நாங்கள் பேசுகையில் அவர்கள் கவனித்துக் கேட்பதே இல்லை. ஆனல் பொறுங்கள், இந்த இரண்டு நாய்களும் குலைக்கட்டும்'' என்று மெஷீன்கன்களை அன்புடன் தட்டிக் கொடுத்தான். ''அப்போது அவர்கள் கட்டாயமாகக் கவனித்துக் கேட்பார்கள்'' என்றான்.

விண்ணென்று தெறிக்கும் அளவுக்கு பிகுவேறியிருந்த நரம்புகளும், கைகளில் இத்தகைய ஆயுதங்களும், ஆன்மாவில் இத்தகைய சீற்றமும் கொண்ட பொது மக்கள் கூட்டத்துக்கு அதிகத் தூண்டுதல் தேவைப்படவில்லை. தூண்டிவிடுபவர்களோ எங்கும் இருந்தார்கள். ''கறுப்பு நூற்றுவர்களின்'' கையாட்கள் மக்கள் கூட்டங்களுக்கிடையே பிளவு உண்டாக்கும் தொழிலை நடத்தி அவர்களைக் கலகத்துக்கும் படுகொலை, கொள்ளைக்கும் தூண்டிவிட்டார்கள். ''கிரெஸ்தீ'' என்னும் சிறையிலிருந்து இருநூறு குற்றக் கைதிகளை அவர்கள் விடுவித்து, சூறையாடவும் கொள்ளையிடவும் விட்டார்கள். இவற்றின் விளைவாகத் தொடரும் அழிவில் புரட்சியை மாய்த்துவிடலாம், ஜாரை மீண்டும் அரியணை ஏற்றலாம் என அவர்கள் நம்பினார்கள். சில இடங்களில் உண்மையிலேயே பயங்கரப் படுகொலைகளை அவர்கள் நிகழ்வித்தார்கள்.

ஒரு இறுக்கம் நிறைந்த கணத்தில் ஆட்கள் செம்மச் செம்மக் குழுமியிருந்த தவ்ரீதா அரண்மனையில் கலகத்தைத் தூண்டிவிடுவதற்கான துப்பாக்கிக் குண்டு சுடப்பட்டது. அதைத் தொடர்ந்து நூறு குண்டுகள் வெடித்தன. ஒவ்வொரு மூலையிலிருந்தும் துப்பாக்கிகள் வெடி தீர்த்தன. தோழர்கள் அருகிலிருந்து தோழர்கள் மீது குண்டுகள் பாய்ச்சினார்கள். கூட்டம் வீரிட்டது, தூண்கள் மீது மோதிக் கொண்டது, அலைபோல மீண்டும் பின்னே நகர்ந்தது, பின்பு தரைமீது நெடுஞ்சாண்கிடையாக விழுந்தது. சுடுகை நின்றபோது பதினறு பெயர் எழுந்திருக்க

இயலாது கிடந்தார்கள். இந்தப் படு கொலையின் போது இரண்டு கட்டிடங்களுக்கு அப்பால் இராணுவ இசைக் குழு ''மார்ஸேல்'' என்ற புரட்சிப் பாட்டின் மெட்டை இசைத்துக் கொண்டிருந்தது.

தெருக்களில் போரிடுவது கலவரம் விளைக்கும் விவகாரம். இரவு வேளையில், மறைந்த புழைத்துளைகளிலும் மேலே கூரைகளிலும் கீழே நிலவறை வழிகளிலும் இருந்து துப்பாக்கிக் குண்டுகள் பொழிந்து கொண்டிருக்க, நண்பர்கள் நண்பர்கள்மீது குண்டுகள் சுடவே, கூட்டம் நெருக்கித் தள்ளிக்கொண்டு முன்னும் பின்னுமாகக் கலவரத்துடன் ஓடியது. ஒரு தெருவில் பொழிந்த குண்டுமாரியிலிருந்து தப்பி அது மறு தெருவுக்குள் பாயும், ஆனால் அங்கேயும் குண்டுகள் சீறிச் சிதறும்.

அன்று இரவு எங்கள் பாதங்கள் நடைபாதை மீது பெருகியிருந்த குருதியில் மூன்று முறை வழுக்கின. நெவ்ஸ்க்கிய் வீதியில் உடைந்த ஜன்னல்களும் சூறையாடப்பட்ட கடைகளும் வரிசையாகக் காட்சி அளித்தன. தூண்டிவிடுவோரின் சிறு சிறு கும்பல்களுடன் சாதாரணப் பூசல்களிலிருந்து லித்தேய்னிய் என்னும் வீதியில் நடந்த கடும்போர் வரை பல வகைகளில் நிகழ்ந்தது சண்டை. லித்தேய்னிய் போரில் கஸாக்கியரின் பன்னிரண்டு குதிரைகள் பாவுகற்கள் மீது உயிரற்றுக் கிடந்தன. [பெரிய ''இஸ்வோஸ்ச்சிக்'' (வண்டியோட்டி) ஒருவன் கண்களில் நீர் மல்க இந்தக் குதிரைகளின் அருகே நின்றிருந்தான். புரட்சிக் காலத்தில் 56 மனிதர்கள் கொல்லப்பட்டதும் 650 மனிதர்கள் காயம் அடைந்ததும் சகித்துக் கொள்ளப்படலாம். ஆனால் 12 நல்ல குதிரைகள் வீணே கொன்று வீழ்த்தப் பட்டதை ''இஸ்வோஸ்ச்சிக்கின்'' இதயத்தால் தாங்க முடியவில்லை.]

போல்ஷெவிக்குகள் எழுச்சியைக் கட்டுப்படுத்துகிறார்கள்

தடையரண்களிலும் வீதிகளிலும் போரிடுவதில் பெத்ரோகிராத் நகர வாசிகள் பெற்றிருந்த நீண்ட அனுபவமும் மக்களின் இயல்பான நல்லறிவுமே இந்தச் சில்லறைச்

சண்டைகள் இன்னும் பெரிய இரத்தக் களரி ஆகாமல் தடுத்தன. போல்ஷெவிக் கட்சியின் இயக்கும் அறிவின் பின் பலத்துடன் பதிஞயிரக் கணக்கான தொழிலாளர்களின் வடிவில் நிலைப்படுத்தும் சக்தி ஒன்று அராஜகக் கலகக் கிளர்ச்சி செய்த மக்கள் திரள்மீது செயல்பட்டது. இந்தக் கிளர்ச்சி தானே எழுந்த, இயற்கை ஆற்றல் வகைப்பட்ட விஷயம் என்பதை போல்ஷெவிக்குகள் தெளிவாய்க் கண்டார்கள். பொது மக்கள் வலிமையுடன் ஆனல் மிகவும் கண்மூடித் தனமாகத் தாக்குவதை அவர்கள் பார்த்தார்கள். மக்கள் குறித்த நோக்கத்துடன் தாக்க வேண்டும் என அவர்கள் தீர்மானித்தார்கள். இந்த ஆர்ப்பாட்டத்தின் முழு விசையும் சோவியத்துக்களின் மத்திய நிர்வாகக் கமிட்டியை எட்டச் செய்ய வேண்டும் என்று அவர்கள் நிச்சயித்தார்கள். சோவியத்துக்களின் முதலாவது அகில ருஷ்யக் காங்கிரஸால் அது ஒத்திவைக்கப்படுவதற்கு முன் தெரிந்தெடுக்கப்பட்ட 256 உறுப்பினர்கள் கொண்ட கமிட்டி இது. தவ்ரீதா அரண்மனையில் இதன் நிரந்தரக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. மக்கள் திரள் இந்த அரண்மனையையே நெருங்கிக் கொண்டிருந்தது.

இந்த மக்கள் மீது போல்ஷெவிக்குகளுக்கு மட்டுமே செல்வாக்கு இருந்தது. அதைப் பயன்படுத்துமாறு எல்லாக் கட்சிகளும் அவர்களை வேண்டின. தங்கள் பேச்சாளர்களை அரண்மனையின் மைய முன்வாயிலில் நிற்கச் செய்து ஒவ்வொரு ரெஜிமென்டையும் பிரதிநிதிக் குழுவையும் போல்ஷெவிக்குகள் சிறு உரையுடன் வரவேற்ருர்கள்.

வாய்ப்பான உயர்ந்த இடத்தில் இருந்த நாங்கள் முன் மண்டபம் மக்களால் பிதுங்கப் பிதுங்க நிறைந்திருந்ததைக் காண முடிந்தது. எங்கேனும் ஒருவன் பீரங்கிப் படைக் குதிரை மேல் ஏறிக் கொண்டிருந்தான். பல பதாகைகள், செறிந்த மக்கள் திரளின் ஊடே செந்நீரோட்டம் போலத் தென்பட்டன.

எங்களுக்குக் கீழே நிமிர்ந்த முகங்களின் கடல் ஒன்று இருந்தது. அந்த முகங்களில் வெளிப்பட்ட அச்சங்களும் நம்பிக்கைகளும் கோபங்களும் ருஷ்ய இரவின் கருக்கலில் அரைகுறையாகவே புலப்பட்டன. தெருக் கோடியில்

இருந்து கவச மோட்டார்களைக் களி முழக்கத்தால் உற்சாகப்படுத்தும் ஊர்வலக் கும்பல்களின் ஆரவாரம் செவிகளுக்கு எட்டியது. மோட்டார் விளக்குகள் பேச்சாளன் மீது ஒளி பாய்ச்சி அரண்மனைச் சுவர்கள் மீது அவனது நிழற்சித்திரத்தைப் பிரமாண்டமான கரிய உருவாகப் பதிய வைத்தன. அவனது ஒவ்வொரு அங்க அசைவும் பன்மடங்கு பெரிதாக்கப்பட்டு வெள்ளை முகப்பின் குறுக்காக நிழல் வீச்சாக நீண்டு சென்றது.

இந்த போல்ஷெவிக் மாவீரன் சொன்னான்: ''தோழர்களே, புரட்சிச் செயல் நீங்கள் விரும்புகிறீர்கள். புரட்சி அரசாங்கத்தின் வாயிலாக மட்டுமே அதை நடத்த முடியும். கேரென்ஸ்கிய் அரசாங்கம் பெயரளவில்தான் புரட்சிகரமானது. இந்த அரசாங்கத்தார் நிலம் தருவதாக வாக்களிக்கிறார்கள், ஆனால் நிலப்பிரபுக்கள் அதை இன்னும் தம் வசமே வைத்திருக்கிறார்கள். அவர்கள் ரொட்டி வழங்குவதாக வாக்களிக்கிறார்கள், ஆனால் கள்ளவியாபாரிகள் ரொட்டியை இன்னும் தம் வசமே வைத்திருக்கிறார்கள். நேச நாட்டினரிடமிருந்து யுத்தத்தின் நோக்கங்கள் பற்றிய பிரகடனத்தைப் பெறுவதாக அவர்கள் வாக்களிக்கிறார்கள், ஆனால் நேச நாட்டினரோ தொடர்ந்து போரிடுங்கள் என்று மட்டுமே நம்மிடம் சொல்கிறார்கள்.

''அமைச்சரவையில் சோஷலிஸ்ட் அமைச்சர்களுக்கும் பூர்ஷ்வா அமைச்சர்களுக்கும் இடையே ஒரு அடிப்படைப் பிணக்கு தீவிரமாக நடந்துகொண்டிருக்கிறது. விளைவாக முட்டுக்கட்டை நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒன்றுமே செய்யப்படவில்லை.

''பெத்ரோகிராத் வாசிகள் ஆகிய நீங்கள், இங்கே சோவியத் நிர்வாகக் கமிட்டியிடம் வந்து, 'அரசாங்கத்தைக் கையில் எடுத்துக் கொள்ளுங்கள், உங்களுக்குப் பின்பலமாக இதோ இருக்கின்றன துப்பாக்கிக் குத்தீட்டிகள்!' என்று சொல்கிறீர்கள். சோவியத்துக்கள் அரசாங்கம் ஆக வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள். போல்ஷெவிக்குகளான நாங்களும் அப்படியே சொல்லுகிறோம். ஆனாலும் பெத்ரோகிராத் ருஷ்யா முழுவதும் அல்ல என்பதை நாங்கள் நினைவு வைத்திருக்கிறோம். ஆகவே ருஷ்யா அனைத்திலு

மிருந்து பிரதிநிதிகளை அழைக்கும்படி நாங்கள் மத்திய நிர்வாகக் கமிட்டியிடம் கோருகிறோம். இவ்வாறு கூட்டப் படும் புதிய காங்கிரஸ்தான் சோவியத்துக்களை ருஷ்யா வின் அரசாங்கம் எனப் பிரகடனம் செய்ய முடியும்.''

இந்த அறிக்கையைக் கேட்டு ஒவ்வொரு கூட்டமும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து, **''கேரென்ஸ்கிய் ஒழிக!'' ''பூர்ஷ்வா அரசாங்கம் ஒழிக!'' ''எல்லா அதிகாரமும் சோவியத் துக்களுக்கே!''** என்று உரக்க கோஷித்தது.

''எல்லா வித வன்முறைச் செயல்களையும் இரத்தப் பெருக்கையும் தவிருங்கள். தூண்டிவிடுவோரின் பேச்சைக் கேட்காதீர்கள். ஒருவரை ஒருவர் கொல்வதன் மூலம் உங் கள் பகைவர்களுக்குக் களிப்பு ஊட்டாதீர்கள். உங்கள் ஆற்றலை நீங்கள் போதிய அளவு காட்டிவிட்டீர்கள். இப் போது அமைதியாக வீடுகளுக்குத் திரும்புங்கள். பலத் தைப் பிரயோகிக்க வேண்டிய வேளை வரும்போது நாங்கள் உங்களை அழைப்போம்'' என்பதே ஒவ்வொரு கூட்டத்துக் கும் திரும்புமுன் கூறப்பட்ட அறிவுரை.

சுழித்துப் பொங்கிய கூட்டத்தினரில் அராஜகவாதி கள், கறுப்பு நூற்றுவர், ஜெர்மானிய உளவாளிகள், முரட்டுப் போக்கிரிகள், அதிக மெஷின்கன்கள் வைத்திருக் கும் தரப்பில் எப்போதும் சேர்ந்துகொள்ளும் கொள்கைப் பிடிப்பற்ற ஆட்கள் ஆகியோர் கொண்ட குறுக்கு நீரோட் டங்கள் இருந்தன. ஒரு விஷயம் இப்போது போல்ஷெவிக்கு களுக்குத் தெளிவாகப் பட்டது: பெத்ரோகிராதில் உள்ள புரட்சிகரத் தொழிலாளர்களும் படைவீரர்களும் மிகப் பெரும்பான்மையாகத் தாற்காலிக அரசாங்கத்துக்கு எதிராகவும் சோவியத்துக்களுக்கு ஆதரவாகவும் இருந்தார் கள். சோவியத்துக்களே அரசாங்கம் ஆக வேண்டும் என அவர்கள் விரும்பினார்கள். ஆனால் இது தருணத்துக்கு முந் திய செயலாகும் என போல்ஷெவிக்குகள் அஞ்சினார்கள். அவர்கள் கூறியதுபோல, ''பெத்ரோகிராத் ருஷ்யா அல்ல. மற்ற நகரங்களும் முனைமுகப் படைவீரர்களும் இத்தகைய தீவிர நடவடிக்கைக்கு இன்னும் பக்குவப்படாமல் இருக்க லாம். ருஷ்யா அனைத்தின் சோவியத்துக்களுடைய பிரதி நிதிகள் மட்டுமே இதைத் தீர்மானிக்க முடியும்.''

தவ்ரீதா அரண்மனைக்கு உள்ளே, மற்றொரு அகில ருஷ்யக் காங்கிரஸைக் கூட்டும்படி சோவியத் நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்களை வற்புறுத்தி இணங்குவிப்பதற்கு போல்ஷெவிக்குகள் எல்லா வித வாதங்களையும் கையாண்டு கொண்டிருந்தார்கள். தவ்ரீதா அரண்மனைக்கு வெளியே, ஆர்ப்பரிக்கும் பொதுமக்களைச் சமாதானப்படுத்தி அமைதி கொள்ளச் செய்வதற்கு எல்லா வகை அறிவுரைகளையும் அவர்கள் பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள். இந்த வேலை அவர்களுடைய அறிவுத் திறனையும் சாமர்த்தியங்களையும் முழுமையாக வறட்டி எடுத்துவிட்டது.

"எல்லா அதிகாரமும் சோவியத்துக்களுக்கே!" என்று கோருகிறார்கள் கடற்படைவீரர்கள்

சில படைப்பிரிவுகள் தவ்ரீதா அரண்மனைக்குப் போரிடும் மனப்பான்மையுடன் வந்தன. கிரோன்ஷ்டாட் கடற்படை வீரர்கள் சிறப்பாகக் கடுங் கோபத்துடன் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் எண்ணாயிரம் பெயர் ஆற்று வழியே படகுகளில் வந்தார்கள். அவர்களில் இருவர் வழியில் கொல்லப்பட்டு விட்டார்கள். இது வெறும் விடுமுறை உல்லாசப் பயணம் அல்ல. அரண்மனைச் சுவர்களை அண்ணாந்து நோக்கவும் முகப்பில் வீண் கூச்சல் கிளப்பவும் பின்பு திரும்பி இருப்பிடங்களுக்குச் செல்லவும் அவர்கள் தயாராக இல்லை. சோவியத்துக்களின் நிர்வாகக் கமிட்டி ஒரு சோஷலிஸ்ட் அமைச்சரை அனுப்பும்படியும் உடனே அனுப்பும்படியும் அவர்கள் கோரிக்கை விடுத்தார்கள்.

விவசாய அமைச்சர் செர்னேவ் வெளியே வந்தார். ஒரு வண்டியின் முகட்டையே அவர் பிரசங்க மேடை ஆக்கிக் கொண்டார்.

"மூன்று பூர்ஷ்வா அமைச்சர்கள் ராஜிநாமா செய்து விட்டார்கள் என்பதை உங்களுக்குச் சொல்வதற்காகவே நான் வந்திருக்கிறேன். இப்போது நாங்கள் வருங்காலத்தைப் பெருத்த நம்பிக்கையுடன் நோக்குகிறோம். குடியான

வனுக்கு நிலத்தை வழங்கும் சட்டங்கள் இதோ இருக்கின்றன.''

''நல்லது. இந்தச் சட்டங்கள் உடனே செயல்படுத்தப்படுமா?'' என்று கேட்டார்கள் கூடியிருந்தவர்கள்.

'' கூடிய விரைவில்'' என்ருர் செர்னேவ்.

''கூடிய விரைவிலாம்!'' என்று அவரைப் பரிகசித்தார்கள் அவர்கள். ''இல்லே, இல்லே! இப்போதே, இப்போதே அவை செயல்படுத்தப்பட வேண்டும் என்று நாங்கள் கோருகிருேம். இத்தனே வாரங்களாக என்னதான் செய்து கொண்டிருந்தீர்கள் நீங்கள்?''

''என்னுடைய காரியங்களுக்கு உங்களுக்குப் பதில் சொல்ல நான் கடமைப்பட்டவன் அல்ல. என்னேப் பதவியில் அமர்த்தியவர்கள் நீங்கள் அல்ல. குடியானவர்கள் சோவியத் என்னேப் பதவியில் அமர்த்தியது. அவர்களுக்கு மட்டுமே நான் விளக்கம் கூறக் கடமைப்பட்டவன்'' என்று கோபத்தால் முகம் வெளிறப் பதில் சொன்னுர் செர்னேவ்.

இந்த எடுத்தெறிந்த பேச்சைக் கேட்டதும் கடற்படை வீரர்கள் இகழ்ச்சிக் கூச்சல் கிளப்பினுர்கள். அதோடு கூடவே, ''செர்னேவைக் கைது செய்யுங்கள்! கைது செய்யுங்கள் இவனே!'' என்ற ஆரவாரம் எழுந்தது. அமைச்சரைப் பிடித்து அப்பால் இழுத்து அகற்றுவதற்காக ஒரு டஜன் கைகள் நீண்டன. மற்றவர்கள் அவரைப் பின்னே இழுக்க முயன்ருர்கள். சண்டையிடும் நண்பர்கள், பகைவர்களின் சுழலில் அமைச்சர் அடித்துச் செல்லப்பட்டார். ஆனுல் த்ரோத்ஸ்கிய் முன்னே வந்து அவரை விடுவிக்கச் செய்தார்.

இதற்கிடையே ஸஆக்கியான் வண்டி முகட்டின் மேல் ஏறினுர். கண்டிப்பாக ஆணேயிடும் தோற்றத்தை அவர் மேற்கொண்டார்.

''கேளுங்கள்! உங்களுக்குமுன் இப்போது பேசுவது யார் என்று அறிவீர்களா?'' என்று உரக்க வினவினுர்.

''அறியோம். எங்களுக்கு அது ஒரு பொருட்டும் அல்ல'' என்று கத்தியது ஒரு குரல்.

ஸஆக்கியான் பேச்சைத் தொடர்ந்தார்: ''இப்போது உங்களுக்குமுன் பேசுபவன் படைவீரர்கள், தொழிலாளர்கள்

பிரதிநிதிகளது சோவியத்துக்களின் முதலாவது அகில ருஷ்யக் காங்கிரஸினுடைய மத்திய நிர்வாகக் கமிட்டியின் உபதலைவன்.''

இந்தப் பிரமாதமான பட்டம் கூட்டத்தினருக்கு மதிப்பு ஏற்படுத்தி அவர்களை அமைதி அடையச் செய்வதற்குப் பதிலாகச் சிரிப்புடனும் ''இவன் நாசமாய்ப் போக'' (''தலோய், தலோய்'') என்ற கூச்சல்களுடனும் வரவேற்கப் பட்டது. ஆனால் ஸஆக்கியான் இந்தக் கும்பலை அடக்கி வசப் படுத்துவதற்காக வெளியே வந்திருந்தார், எனவே பெருத்த ஆவேசத்துடன் சிறு சிறு வாக்கியக் குண்டுகளைக் கூட்டத் தினர் மீது பொழிந்தார்.

''என் பெயர் ஸஆக்கியான்!'' (கூட்டம்: ''இவன் நாசமாய்ப் போக!'')

''என் கட்சி சோஷலிஸப் புரட்சிவாதி!'' (''நாசமாய்ப் போக!'')

''என்னுடைய அதிகாரபூர்வமான மதம்—பாஸ்போர்ட் டில் உள்ளபடி—ஆர்மீனியன்-கிரிகோரியன்!'' (''நாசமாய்ப் போக!'')

''எனது உண்மையான மதம் சோஷலிஸம்!'' (''நாச மாய்ப் போக!'') ''யுத்தத்துடன் என்னுடைய உறவு—இரண்டு சகோதரர்கள் கொல்லப்பட்டது.'' ஒரு குரல்: ''மூன்றுமவனும் கொல்லப்பட்டிருக்க வேண்டும்.''

''உங்களுக்கு என்னுடைய அறிவுரை—உங்கள் தலை வர்களும் சிறந்த நண்பர்களுமான எங்களை நம்புங்கள். இந்த மடத்தனமான ஆர்ப்பாட்டத்தை நிறுத்துங்கள். நீங் கள் உங்களையே இழிவுபடுத்திக் கொள்கிறீர்கள், புரட்சியை இழிவுபடுத்துகிறீர்கள், ருஷ்யாவுக்கு அழிவு ஏற்படுத்து கிறீர்கள்.''

இந்தக் கடற்படை வீரர்கள் ஏற்கனவே ஆத்திரம் அடைந்திருந்தார்கள். அவர்களை இப்படி முகத்தில் அறைந் தது அறிவற்ற செயல். கூட்டத்தினரிடையே ஒரே அல் லோலகல்லோலம் ஏற்பட்டது. மறுபடியும் த்ரோத்ஸ்கிய் நிலைமையைச் சமாளித்தார்.

''புரட்சிகரக் கடற்படை வீரர்களே, ருஷ்யாவின் புரட்சிச் சக்திகளின் பெருமைக்குரிய நறு மலர்களே!''

என்று தொடங்கினுர் அவர். ''சமூகப் புரட்சிக்கான இந்தப் போரில் நாம் ஒன்றுசேர்ந்து சமர் புரிகிறேம். தோழர் களே, ஒன்றுசேர்ந்து நமது முட்டிகள் இந்த அரண்மனைக் கதவுகளை இடிக்கின்றன. எந்த ஆதர்சங்களின் பொருட்டு நமது இரத்தம் பெருகியதோ அவை இந்த நாட்டின் அர சியல் சட்டத்தில் முடிவாக வடிவம் பெறும் வரையில் நமது முட்டிகள் இந்தக் கதவுகளை இடித்துக்கொண்டிருக் கும். நம்முடைய வீரப் போராட்டம் நீண்டது, கடினமானது! ஆனுல் ஒரு பெரிய சுதந்திர நாட்டில் சுதந்திர மனிதர்களுக் குச் சுதந்திர வாழ்வு அதிலிருந்து உதயமாகும். நான் சொல்வது சரிதான், அல்லவா?''

''சரிதான், த்ரோத்ஸ்கிய்'' என்று ஆர்ப்பரித்தது கூட்டம்.

த்ரோத்ஸ்கிய் அப்பால் நகர்ந்தார்.

''ஆனுல் நீ எங்களுக்கு ஒன்றுமே சொல்லவில்லையே. அமைச்சரவை விஷயமாக என்ன செய்யப்போகிறீர்கள்?'' என்று கத்தினுர்கள் கூட்டத்தினர். அவர்கள் வெறும் மக்கள் கும்பலாக இருக்கலாம், முகஸ்துதியை விரும்பலாம். ஆனுல் வெற்றுச் சொற்களால் சமாதானம் அடைந்துவிடும் அளவுக் குச் சிந்தனைத்திறன் அற்றவர்கள் அல்ல அவர்கள்.

''என் தொண்டை ஒரேயடியாகக் கம்மிப் போயிருப்ப தால் மேலே பேச என்னுல் முடியாது. ரியாஸானேவ் உங்களுக்குச் சொல்லுவார்'' என்று த்ரோத்ஸ்கிய் மன் ருடினுர்.

''இல்லை, நீயே சொல்லு!''

த்ரோத்ஸ்கிய் மறுபடி வண்டி முகட்டின்மேல் ஏறிக் கொண்டார்.

''அகில ருஷ்யக் காங்கிரஸ் மட்டுமே முழு அரசாங்க அதிகாரத்தை மேற்கொள்ள முடியும். தொழிலாளர் பிரிவு இந்தக் காங்கிரஸைக் கூட்ட இசைந்துவிட்டது. இராணு வப் பிரிவு சந்தேகமின்றி இசையும். இன்னும் இரண்டு வாரங்களில் பிரதிநிதிகள் இங்கே இருக்கக் கூடும்.''

''இரண்டு வாரங்களா? இரண்டு வாரங்கள் மிக நீண்ட காலம். இப்போதே வேண்டும் என்று நாங்கள் கோருகிறேம்'' என்று கத்தினுர்கள் கூட்டத்தினர்.

ஆனால் த்ரோத்ஸ்கிய் தம் கூற்றை நிலைநாட்டிவிட்டார். கடற்படை வீரர்கள் இணங்கிவிட்டார்கள். சோவியத்துக்களையும் வரப்போகும் புரட்சியையும் வாழ்த்திக் கோஷமிட்டார்கள். இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரஸ் கூட்டப்படும் என்ற நம்பிக்கையுடன் அமைதியாக அகன்றார்கள்.

ஆர்ப்பாட்டமும், பின்பு போல்ஷெவிக்குகளும் அடக்கப்படுதல்

இதைத்தான் சோவியத் நிர்வாகக் கமிட்டியில் உள்ள தலைவர்கள் விரும்பவில்லை. சோவியத்துக்கள் அரசாங்கம் ஆவதை அவர்கள் மூர்த்தன்னியமாக எதிர்க்கிறார்கள். இதற்கு அவர்கள் எத்தனையோ காரணங்கள் சொல்லுகிறார்கள். ஆனால் எந்த மக்கள் திரளால் அவர்கள் தங்கள் மாண்புசால் பதவிகளுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறார்களோ அதன்பால் அவர்களுக்கு உள்ள அச்சமே உண்மைக் காரணம். தங்களுக்குக் கீழே இருக்கும் பொதுமக்கள் மீது அறிவுஜீவிகள் அவநம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். அதே சமயம், தங்களுக்குமேல் உள்ள சிறப்புமிக்க பூர்ஷ்வாக்களின் திறமைகளையும் நல் நோக்கங்களையும் அவர்கள் மிகைப்படுத்துகிறார்கள்.

சோவியத்துக்கள் 'ஆட்சி அதிகாரத்தை எடுத்துக் கொள்வதில் மத்தியக் கமிட்டியினருக்கு விருப்பில்லை. இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரஸை இரண்டு வாரங்களிலோ இரண்டு மாதங்களிலோ அல்லது எப்போதேனுமோ கூட்டும் உத்தேசம் அவர்களுக்குக் கிடையாது. ஆனால் முகப்பு வெளிக்குள் திடும் பிரவேசமாய்ப் புகுந்து கதவுகளைத் தடதடவென இடிக்கும் இந்தக் கொந்தளிப்புள்ள கூட்டங்களைக் கண்டு அவர்கள் வெருவுகிறார்கள். மக்கள் கூட்டத்தை நைச்சியமாகச் சாந்தப்படுத்துவதே அவர்களது செயல் தந்திரம். இதற்கு போல்ஷெவிக்குகளின் உதவியை அவர்கள் நாடுகிறார்கள். அதே சமயம் இந்த அறிவுஜீவிகள் வேறொரு சூழ்ச்சியும் செய்கிறார்கள். ''நகரத்தில் கலகத்தை அடக்கவும் ஒழுங்கை மீண்டும் நிலைநாட்டவும்'' போர்முனை

யிலிருந்து படைப்பிரிவுகளைத் தருவிப்பதில் தாற்காலிக அரசாங்கத்துடன் அவர்கள் சேர்ந்துகொள்கிறார்கள்.

மூன்றாவது நாள் துருப்புக்கள் வந்து சேர்கின்றன. சைக்கிள் பட்டாளங்களும் சேமிப்பு ரெஜிமென்டுகளும் அப்புறம் குதிரைவீரர்களின் கடுமையான வரிசைகளும். குதிரைவீரர்களின் ஈட்டி முனைகள் வெயிலில் சுடர்கின்றன. இவர்கள்தாம் கஸாக்கியர், புரட்சிக்காரர்களின் பழம் பகைவர்கள். தொழிலாளர்களுக்கு நடுக்கத்தையும் பூர்ஷ்வாக்களுக்குக் களிப்பையும் உண்டாக்குகிறார்கள் இவர்கள். நல்லுடையணிந்த கூட்டங்கள் இப்போது வீதிகளில் நிறைந்து கஸாக்கியர்களை வாழ்த்தி, ''கீழ்மக்களைச் சுட்டுத் தள்ளுங்கள்,'' ''போல்ஷெவிக்குகளைத் தூக்கிலிடுங்கள்!'' என்று கத்தின.

எதிர்ச் செயல் அலை நகரில் பரவுகிறது. கிளர்ச்சிக்கார ரெஜிமென்டுகள் ஆயுதங்கள் அற்றவை ஆக்கப்படுகின்றன. மரணதண்டனை மீண்டும் புகுத்தப்படுகிறது. போல்ஷெவிக் செய்தித்தாள்கள் ஒடுக்கப்படுகின்றன. போல்ஷெவிக்குகள் ஜெர்மன் உளவாளிகள் என்று சான்று காட்டும் கள்ளப் பத்திரங்கள் பத்திரிகைகளுக்கு வினியோகம் செய்யப் படுகின்றன. குற்றச் சட்டத் தொகுப்பின் 108வது பிரிவின் கீழ் ராஜத்துரோகக் குற்றம் சாட்டப்பட்ட போல்ஷெவிக்குகளை ஜார் அரசனின் அரசாங்க வழக்குரைஞன் அலெக்ஸாந்திரோவ் நீதிமன்றத்திற்கு வலிந்து இழுக்கிறான். த்ரோத்ஸ்கிய், கொலன்தாய் போன்ற தலைவர்கள் சிறையில் இடப்படுகிறார்கள். லெனினும் ஸினோவியேவும் தலைமறைவாகி விடுகிறார்கள். எல்லாப் பகுதிகளிலும் தொழிலாளர்கள் திடீரென்று பிடிக்கவும் தாக்கவும் கொல்லவும் படுகிறார்கள்.

ஜூலை 18ந் தேதி காலையில் நெவ்ஸ்க்கிய் நெடுஞ்சாலையிலிருந்து வந்த நெஞ்சைப் பிளக்கும் கூக்குரல்களால் நான் திடீரென்று தூக்கம் கலைந்து விழித்துக் கொண்டேன். குதிரைக் குளம்புகளின் சடபடப்புடன் கத்தல்களும் இரக்கம் காட்டும்படிப் புகலின்றிக் கெஞ்சுவதும் திட்டுக்களும் கலந்து வந்தன. இரத்தத்தை உறையச் செய்யும் ஒரு பயங்கர வீரிடல் பின்பு கேட்டது. அப்புறம் ஒரு உடல் பொத்தென்று விழுந்த ஓசையும், சாகும் மனிதனின் முனகல்களும்,

பிறகு நிசப்தமும். ஒரு இராணுவ அதிகாரி என் அறைக்குள் வந்து நெவ்ஸ்க்கிய் சாலையில் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்த போல்ஷெவிக் தொழிலாளிகள் சிலர் பிடிபட்டுவிட்டதாக விளக்கினன். கஸாக்கியர்களின் ஒரு பிரிவு குதிரைகளை அவர்கள் மீது ஒட்டிச் சாட்டைகளாலும் வாள்களாலும் விளாசித் தாக்கி, ஒரு மனிதனை வகிர்ந்து நடைபாதையில் பிணமாகக் கிடக்க விட்டுவிட்டதாக விவரித்தான் அதிகாரி.

நிகழ்ச்சிகளின் இந்தத் திருப்பத்தால் பூர்ஷ்வாக்களுக்கு ஒரே களிப்பு. தவறான அடிப்படை கொண்ட களிப்பு! கொலை செய்யப்பட்ட இந்தத் தொழிலாளியின் வீரிடல் ருஷ்யாவின் மறுகோடிகளில் உள்ள ஒவ்வொரு மூலைக்குள்ளும் புகுந்து அவனுடைய தோழர்கள் சீற்றம் பொங்க ஆயுதங்கள் ஏந்திக் கிளர்ந்தெழும்படிப் புரியும் என்பதை பூர்ஷ்வாக்கள் அறியவில்லை. ஆட்சி அதிகாரம் அனைத்தையும் சோவியத்துக்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்ட இந்த எழுச்சியை அடக்கும் பொருட்டு நகரத்துக்குள் புகும் வோலீன்ஸ்க்கிய் ரெஜிமென்டை இந்த ஜூலை நாளில் பூர்ஷ்வாக்கள் வாழ்த்தி ஆரவாரிக்கிறார்கள். கெடுவிதி கொண்ட வாழ்த்துக்கள்! வரப்போகும் நவம்பர் இரவு ஒன்றில், ஆட்சி அதிகாரம் அனைத்தையும் சோவியத்துக்களுக்கு வெற்றிகரமாக வழங்கும் எழுச்சியின் முன்னணியில் இந்த ரெஜிமென்டை அவர்கள் காண்பார்கள்.

இந்தத் துருப்புக்கள் பெத்ரோகிராதை வெல்வதற்காக வரவழைக்கப்பட்டிருக்கின்றன. ஆனல் முடிவில் பெத்ரோகிராத் நகரம் அவற்றை வெற்றி கொள்கிறது. இந்த போல்ஷெவிக் கோட்டையின் கவர்ச்சி தடுக்க முடியாத வன்மை உள்ளது. எல்லாக் கசடுகளையும் அலட்சியப் போக்கையும் பொசுக்கித் தீர்த்துவிடும் பெரிய புரட்சி ஊதுலை இந்நகரம். ஆட்கள் எவ்வளவுதான் உணர்ச்சி வேகம் இன்றி, ஆலசியத்துடன் நகருக்கு உள் புகுந்தாலும் சரியே, புரட்சி உணர்ச்சியால் மின்னேற்றப்பட்டே அவர்கள் இங்கிருந்து வெளியேறுகிறார்கள்.

கண்ணீரிலும் குருதியிலும், பசியிலும் குளிரிலும், பட்டினிபோடவும் அடித்துப் புடைக்கவும் பட்ட எண்ணற்ற

ஜூலை மாத ஆர்ப்பாட்டத்தினர் மீது
துப்பாக்கிப் பிரயோகம்

மனிதர்களின் கட்டாய உழைப்பிலும் எழுந்தது இந்நகரம். அவர்களுடைய சடலங்கள் மண்ணுக்குள் வெகு ஆழத்தில் புதைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அட்டூழியத்துக்கு உள்ளான அவர்களுடைய ஆன்மாக்கள் பெத்ரோகிராதின் இன்றைய தொழிலாளர்களுக்குள் மீண்டும் வாழ்கின்றன போலும். விறல்மிக்க, பழிவெறி கொண்ட ஆன்மாக்கள் அவை. பேரரசன் பீட்டரின் பண்ணையடிமைகள் இந்த நகரைக் கட்டினார்கள். இப்போதோ அவர்களுடைய வம்சத்தினர் தங்கள் சொந்த அரசை நிலைநாட்டுவார்கள்.

1917ம் ஆண்டு நடுவேனிலில் இப்படித் தோன்றவில்லை. எதிர்ச் செயலின் கரு நிழல்கள் தொழிலாளர்கள்மீது கவிந்திருக்கின்றன. ஆனால் போல்ஷெவிக்குகள் தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். வரலாறு தங்கள் சார்பில் இருக்கிறது என அவர்கள் உணர்கிறார்கள். கிராமங்களிலும் கப்பற்படையிலும் போர்முனையிலும் செயல் புரிந்து வருகின்றன அவர்களுடைய கருத்துக்கள்.

இந்த இடங்களுக்கு இப்போது நான் செல்கிறேன்.

அத்தியாயம் மூன்று

நாட்டுப்புறத்தில்

பக்கூனின்* சொன்னார்: ''காடுகளுக்கும் மக்களுக்கும் இடையே செல்லுங்கள்.''

''நகர்களில் பேச்சாளர்கள் முழங்கி
ஆர்ப்பார்,
கிராமங்களிலோ நூற்றாண்டுகளாக நிலவும்
மௌனம்''**

இந்த மௌனத்தின் சுவையை அறிய நாங்கள் ஆர்வம் கொண்டோம். புரட்சியின் கர்ஜனையை நாங்கள் மூன்று மாதங்கள் கேட்டுவிட்டோம். எனக்கு அது தெவிட்டிவிட்டது. யானிஷேவ் அதனால் களைத்துச் சோர்ந்து போனான். இடைவிடாத பேச்சின் விளைவாக அவன் குரல் கம்மிவிட்டது. பத்து நாட்கள் ஓய்வு எடுத்துக்கொள்ளும்படி அவன் போல்ஷெவிக் கட்சியால் உத்தரவிடப்பட்டான். எனவே நாங்கள் வோல்காப் பிரதேசத்தைச் சேர்ந்த ஸ்பாஸ்க்கோயே என்னும் சிறு கிராமத்துக்குப் புறப்பட்டோம். இந்த கிராமத்தில் இருந்துதான் 1907ல் யானிஷேவ் வெளியேற்றப்பட்டிருந்தான்.

ஆகஸ்டு மாதம் ஒரு நாள் நண்பகலில் நாங்கள் மாஸ்கோ ரெயிலில் இருந்து இறங்கி, வயல்களின் குறுக்கே சென்ற ரஸ்தாவில் நடக்கலானோம். கோடை காலத்தின் இந்தக் கடைசி வாரங்களில் வெயிலில் முழுக்காடிக் கொண்டிருந்த வயல்கள் அலை மோதும் விசாலமான பொன் தானியக் கடல்களாக மாறியிருந்தன. நடு நடுவே பச்சைத் தீவு

---

* பக்கூனின், மி. அ. (1814-1876)—ருஷ்யப் புரட்சிக்காரர், அராஜகவாதத்தின் சித்தாந்தப் பிரசாரகர்.

** நி. அ. நெக்ராஸவின் (35 பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைப் பார்க்கவும்) செய்யுள்கள்.

கள் புள்ளிகள் இட்டிருந்தன. இவைதாம் விளாதீமிர் மாநிலத்தைச் சேர்ந்த குடியானவர்களின் மர நிழல் அடர்ந்த கிராமங்கள். ரஸ்தாவில் இருந்த ஒரு ஏற்றத்தில் இருந்து நாங்கள் பதினாறு கிராமங்களை எண்ண முடிந்தது. ஒவ்வொன்றிலும் பளிச்சிடும் கும்மட்டம் கொண்ட ஒரு பெரிய வெள்ளைச் சர்ச் இருந்தது. அன்று திருநாள். வயல் களில் வெயிலொளி வண்ணங்களைப் பெருக்கியது போலவே தொலைதூர மணிக்கூண்டுகள் இசை வெள்ளத்தைப் பெருக் கிக் கொண்டிருந்தன.

நகரங்களுக்குப் பின்னர் இது அமைதியும் நிம்மதியும் நிறைந்த பூமியாக எனக்குத் தோன்றியது. யானிஷேவுக் கோ, கிளர்ச்சியூட்டும் நினைவுகளின் நிலமாக இருந்தது அது. பத்து ஆண்டுகள் வெளியே சுற்றி அலைந்த பிறகு சொந்த ஊருக்குத் திரும்பியிருந்தான் அவன்.

மேற்குப் புறம் சுட்டி, ''அதோ அந்த கிராமத்தில் என் தகப்பனார் பள்ளி ஆசிரியராக இருந்தார். அவர் கற் பித்தது மக்களுக்குப் பிடித்திருந்தது. ஆனால் ஒரு நாள் அரசியல் போலீசார் வந்து பள்ளிக்கூடத்தை மூடிவிட்டு அவரை அழைத்துச் சென்றார்கள். அதோ அந்த அடுத்த கிராமத்தில் வேரா வசித்துவந்தாள். அவள் மிக அழகி, மிக அன்புள்ளவள், என் காதலி. அப்போது அவளிடம் இதைச் சொல்ல எனக்கு ஒரே கூச்சமாக இருந்தது. இப் போதோ, நேரம் கடந்துவிட்டது. அவள் சைபீரியாவில் இருக்கிறாள். அதோ தெரியும் சோலையில் நாங்கள் சிலர் கூடிப் புரட்சியைப் பற்றிப் பேசுவோம். ஓர் இரவு கஸாக் கியர்கள் குதிரைகள்மேல் ஏறி எங்களை நோக்கிப் பாய்ந்து வந்தார்கள். எங்கள் எல்லோரிலும் துணிவுமிக்க தோழன் யெகோரை அதோ அந்தப் பாலத்தில்தான் அவர்கள் கொன்றார்கள்'' என்றான்.

அயல் நாடுகளிலிருந்து திரும்பியிருந்த யானிஷேவுக்கு அது இன்பமான ஊர் வருகையாக இல்லை. ரஸ்தாவின் ஒவ்வொரு திருப்பமும் ஏதேனும் நினைவைத் தூண்டிவிட் டது. கைக்குட்டையும் கையுமாக, முகத்திலிருந்து தான் துடைப்பது வியர்வையை மட்டுமே என்பது போல நடித்த வாறு நடந்தான் யானிஷேவ்.

ஸ்பாஸ்க்கோயே கிராமப் பசும்புல் வெளியை நாங்கள் கடந்ததும் பளிச்சிடும் நீல வண்ண மேலங்கி அணிந்த ஒரு முதிய குடியானவன் தன் குடிசையின் முன் பெஞ்சியில் உட்கார்ந்திருக்கக் கண்டோம். புழுதி படிந்த இரு வெளி நாட்டினர் வரக் கண்டதும் விவரம் புரியாமல் கண்களை வெயில் படாமல் மறைத்தவாறு உறுத்து நோக்கினுன். பின்பு அடையாளம் கண்டுகொண்டு உவகை பொங்க, ''மிகயீல் பெத்ரோவிச்!'' என்று கூவி, யானிஷேவைக் கட்டித் தழுவி இரு கன்னங்களிலும் முத்தமிட்டான். அப்புறம் என் புறம் திரும்பினுன். என் பெயர் ஆல்பர்ட் என்று கூறினேன்.

''தகப்பனுர் பெயர்?'' என்று ஆழ்ந்த குரலில் வினவினுன்.

''டேவிட்'' என்றேன்.

''ஆல்பர்ட் தவீதவிச் (டேவிட் மகன் ஆல்பர்ட்), இவான் இவானேவின் வீட்டுக்கு உங்கள் வரவு நல்வரவு ஆகுக. நாங்கள் ஏழைகள், ஆனுல் ஆண்டவன் வளம் மிக்க ஆசியை உங்களுக்கு நல்குவாராக.''

நீண்ட தாடியும் தெளிந்த விழிகளும் உறுதியான தசைகளுமாக அம்புபோல் நேராக நின்றுன் இவான் இவானேவ். ஆனுல் அவனுடைய உடல் வலிமையோ உளமார்ந்த உணர்ச்சியோ அல்லது விந்தையான சம்பிரதாயப் பேச்சோ அல்ல, அவனுடைய அமைதியான பெருமிதமே என் கருத்தை ஈர்த்தது. ஓர் இயற்கைப் பொருளின், மண்ணின் ஆழத்தில் வேர் ஊன்றியுள்ள மரத்தின் பெருமிதம் அது. தலைமுறை தலைமுறையாகத் தன் முன்னேர் செய்தது போல, இவான் இவானேவ் இந்த ''மீரின்'' (பஞ்சாயத்தின்) மண்ணிலிருந்தே அறுபது ஆண்டுகளாக ஊட்டம் பெற்று வந்திருக்கிறுன். அவனது சிறு ''இஸ்பா'' குடிசை மரக் கட்டைகளால் கட்டப்பட்டிருந்தது. அதன் கனமாக வேய்ந்த கூரை கனைகள் மண்டிப் பசுமை படர்ந்திருந்தது. தோட்டம் மலர் கொஞ்ச மகிழ் பொங்கியது.

இவானின் மனைவி தத்தியானுவும் மகள் அவ்தோத்தியாவும் எங்களுக்கு முகமன் தெரிவித்துவிட்டு வீட்டுக்கு உள்ளிருந்து ஒரு மேஜையைக் கொண்டுவந்தார்கள். அதன்

மேல் ஒரு ''சமோவாரை'' வைத்தார்கள். சமோவாரின் மூடியைத் திறந்து ஆவிவந்த நீருக்குள் முட்டைகளை வரிசையாக வைத்தார்கள். இவானும் அவன் குடும்பத்ினரும் சிலுவைக் குறி இட்டுக்கொண்டார்கள். நாங்கள் மேஜை அருகே அமர்ந்தோம்.

''எங்களிடம் உள்ளதை உங்களுக்கு மகிழ்வுடன் தருகிறோம்'' என்றான் இவான்.

மாதர்கள் முட்டைக்கோசு சூப் ('ஷ்சீ') நிறைந்த பெரிய பாத்திரத்தையும் ஆளுக்கு ஒரு சிறு கரண்டியையும் கொண்டுவந்தார்கள். இந்தப் பொதுப் பாத்திரத்தில் இருந்து அவரவர் தம் கரண்டியால் சூப் எடுத்துச் சாப்பிட வேண்டும் என்பது குறிக்கப்பட்டது. இதைக் கண்டதும் நான் என் முறை வருவதற்குக் காத்திராமல் உடனே கரண்டியை முக்கினேன். முதல் பாத்திரம் காலி ஆனதும் பெண்கள் பொங்கல் (''காஷா'') நிறைந்த இரண்டாவது பாத்திரத்தை எடுத்துவந்தார்கள். அப்புறம் வெந்த உலர் திராட்சை நிறைந்த பாத்திரம் கொண்டுவரப்பட்டது. இவான் தேநீரையும் கறுப்பு ரொட்டியையும் வெள்ளரிக்காய்களையும் வினியோகித்தான். அது விசேஷ விருந்து, ஏனெனில் அன்று ஸ்பாஸ்க்கோயே கிராமத்தில் விசேஷத் திருநாள்.

காக்கைகளுக்குக்கூட இந்தச் சேதி தெரிந்திருந்தது போலும். தலைக்குயரே பறந்த காகங்களின் பெருங்கூட்டங்கள் தரைமீது விரைந்த மேக நிழல்களை விழுத்தின, அல்லது சர்ச் முகத்தில் உட்கார்ந்து அதை முழுமையாக மூடிவிட்டன. பச்சை அல்லது மின்னும் பொன்னிறக் கும்மட்டங்கள் நிமிட நேரத்தில் கன்னங்கரேல் எனக் காட்சி அளித்தன.

காக்கைகள் தானியங்களைத் தின்பதால் அமெரிக்காவில் குடியானவர்கள் அவற்றைக் கொன்றுவிடுகிறார்கள் என்று நான் இவானிடம் சொன்னேன்.

''ஆம், எங்கள் காகங்கள் தானியங்களைத் தின்னத்தான் செய்கின்றன. ஆனால் வயலெலிகளையும் அவை தின்கின்றனவே. தவிர, காக்கைகள்தாம் என்றாலும் இவை நம்மைப் போன்றவையே, இவையும் வாழ விரும்புகின்றன'' என்றான் இவான்.

மேஜையைச் சுற்றித் திரளாக மொய்த்த ஈக்களைப் பற்றித் தத்தியானு இதே மாதிரிப் போக்கைக் கடைப் பிடித்தாள். சர்க்கரைக் கட்டி ஒன்றின்மேல் மொய்த்து, காக்கைகள் மொய்த்த சர்ச் போலவே அதைக் கறுப்பாக் கின ஈக்கள்.

''ஈக்களைப் பொருட்படுத்தாதீர்கள். பாவங்கள், ஓரிரு மாதங்களில் அவை தாமே இறந்து போய்விடும்'' என்றுள் தத்தியானு.

கிராமம் திருநாள் கொண்டாடுகிறது

அன்று இயேசுநாதரின் திருவுருமாற்ற நாள். அக்கம் பக்கத்து கிராமங்களிலிருந்து வறியவர்களும் அங்கவீனர் களும் முதியவர்களும் வந்தார்கள். கழியைத் தட்டும் டொக் டொக்கென்ற ஓசையும் ''ராதி ஹ்ரீஸ்தா'' (இயேசுவுக் காக) பிச்சை போடும்படி கெஞ்சும் குரலும் மறுபடி மறு படி கேட்டன. பிச்சைக்காரர்கள் நீட்டிய பைகளில் யானிஷேவும் நானும் சில கோப்பெக்குகளைப் போட்டோம். மாதர்கள் பெரிய கறுப்பு ரொட்டிகளிலிருந்து நறுக்கிய பருத்த துண்டுகளைப் போட்டார்கள். இவானே, ஒவ்வொரு பையிலும் பெரிய பச்சை வெள்ளரிக்காயைப் போட்டான். அந்த வருஷம் வெள்ளரிக்காய் விளைச்சல் போதிய அளவு இல்லை. எனவே இவான் வழங்கியது உண்மையிலேயே அன்புப் பரிசு. ஆனுல் நாங்கள் கொடுத்தவை வெள்ளரிக் காய்களோ, ரொட்டியோ, கோப்பெக்குகளோ, எவை ஆயி னும் பிச்சைக்காரனின் ஈனக் குரலில் நீட்டிய வாழ்த்துரை எங்களுக்குக் கைம்மாருகக் கிடைத்தது.

மனிதர்கள் துன்பப்படும் காட்சி மிக முரடான, மிக வறிய ருஷ்யனுக்குக்கூட ஆழ்ந்த இரக்கம் உண்டாக்கிவிடு கிறது. வேதனை, வறுமை ஆகியவற்றின் அர்த்தத்தை அவ னுடைய சொந்த வாழ்க்கையே அவனுக்குக் கற்பிக்கிறது. ஆனுல் அவனுடைய பரிவு இதனுல் மந்தித்துவிடுவதில்லை. பிறரது துன்பத்தால் அவன் இன்னும் எளிதில் உருகிவிடு மாறு அது செய்துவிடுகிறது.

இவானின் கருத்துப்படி வெக்கையும் புழுதியும் நிறைந்த வீதிகளில் அடைபட்டிருக்கும் நகரத் தொழிலாளர்கள் ''பாவம்,'' சிறைகளில் அடைபட்டிருக்கும் குற்றக் கைதிகள் ''துரதிர்ஷ்டசாலிகள்''; ஆஸ்திரிய இராணுவ உடுப்புக்கள் அணிந்த போர்க்கைதிகள் சிலரைக் கண்டோ அவனுக்கு மட்டுமீறிய இரக்கம் பொங்கிற்று. குதியும் கொம்மாளமுமாக வந்த அவர்கள் உல்லாசமாகவே இருக்கக் காணப்பட்டார்கள். நான் இவானிடம் அதைச் சொல்லவும் செய்தேன்.

''ஆனால் இவர்கள் தாய்நாட்டில் இருந்து இவ்வளவு தொலைவில் இருக்கிறார்களே. இவர்கள் எப்படி மகிழ்ச்சியாக இருக்க முடியும்?'' என்றான் இவான்.

''நல்லது, நான் இவர்களைக் காட்டிலும் தாய்நாட்டில் இருந்து அதிகத் தொலைவில் இருக்கிறேன். நான் சந்தோஷமாகத்தானே இருக்கிறேன்'' என்றேன்.

''ஆமாம், அது உண்மைதான்'' என மற்றவர்கள் ஆமோதித்தார்கள்.

''இல்லை. இது உண்மை அல்ல. ஆல்பர்ட் தவீதவிச் இங்கே இருப்பது தாமே வர விரும்பியதால். கைதிகளையோ நாம் கட்டாயப்படுத்திக் கொண்டு வந்திருக்கிறோம், அதனால் அவர்கள் இங்கே இருக்கிறார்கள்'' என்றான் இவானேவ்.

இவான் வீட்டில் இரண்டு அயல்நாட்டினர் விருந்துக்கு வந்திருக்கும் செய்தி ஸ்பாஸ்க்கோயே கிராமத்தினரிடையே இயல்பாகவே பரபரப்பு ஏற்படுத்தியது. ஆயினும் பெரியவர்கள் தங்கள் ஆவல் மரியாதை முறைகளை மீறும்படி விடவில்லை. சில சிறுவர்கள் மட்டுமே வந்து எங்களை நிலைக் குத்திட்டு நோக்கினார்கள். நான் அவர்களை நோக்கி முறுவலித்தேன். அவர்களோ, இடி விழுந்தவர்கள் போல மலைத்து நின்றார்கள். மறுபடி நான் புன்னகைத்தேன். மூன்று சிறுவர்கள் மல்லாக்காக விழத் தெரிந்தார்கள். மூன்றும் முறை நான் முறுவலித்ததும் அவர்கள் ''தங்கப் பற்கள்'' என்று கத்திவிட்டு, கைகளைத் தட்டியவாறு அப்பால் ஓடினார்கள். இந்த நடத்தையின் அர்த்தத்தை நான் புரிந்து கொள்வதற்குள் அவர்கள் ஒரு இருபது புதுச் சிறுவர்களைத் திரட்டிக்கொண்டு திரும்பப் பாய்ந்து வந்தார்கள். ஆவல்

ததும்பும் விழிகளை எல்லாம் என்பால் திருப்பியவாறு மேஜையைச் சுற்றி அரை வட்டமாக நின்றார்கள் அவர்கள். புன்னகை செய்வதைத் தவிர எனக்கு வேறு புகலில்லை. ''ஆமாம். தங்கப் பற்கள்! இவர் தங்கப் பல்லர்!'' என்று கத்தினார்கள் அவர்கள். இந்தக் காரணத்தால்தான் எனது புன்னகை அவர்களைத் திடுக்கிடச் செய்தது. தங்கப் பற்கள் முளைக்கும் வாயனான அயல்நாட்டான் ஒருவனின் வருகையை விட அற்புதமானது எது இருக்க முடியும்? நான் தலைமேல் தங்கக் கிரீடம் வைத்துக்கொண்டு வந்திருந்தால்கூட, தங்கப் பற்கள் கட்டிக்கொண்டு வந்திருந்ததால் ஏற்படுத்தியதைவிட ஆழ்ந்த கிளர்ச்சியை ஸ்பாஸ்க்கோயே கிராமத்தினரிடையே உண்டாக்கியிருக்க முடிந்திராது. ஆனால் இந்த விஷயம் எனக்கு மறுநாள்தான் தெரிய வந்தது.

இப்போது கிராமத்தின் மறுகோடியிலிருந்து இசையொலி கேட்டது. ''பலலாய்க்கா'' வாத்தியத்தின் தந்திகள் முரல, தாளங்கள் ஜணஜணக்க, ''பூபென்'' எனப்படும் ஒருவகைக் கஞ்சிரா ஒலிக்க இளங்குரல்கள் ஒருங்கே பாடின. இசையொலி மேலும் மேலும் அருகே நெருங்கியது. முடிவில் சர்ச் மூலையில் வாத்தியங்கள் இசைப்போரும் பாடுவோரும் கொண்ட ஊர்வலம் திடீரென வெளிப்பட்டது. பெண்கள் குடியானவர்களுக்கு இயல்பான களி பொங்கும் வண்ண உடைகள் அணிந்திருந்தார்கள். இளைஞர்கள் கண்ணைப் பறிக்கும் பச்சை, ஆரஞ்சு நிற அங்கிகள் அணிந்து, நுனிகளில் குஞ்சங்கள் வைத்த கயிறுகளை இடைவார்களாகக் கட்டிக் கொண்டிருந்தார்கள். இளைஞர்கள் வாத்தியங்களை இசைத்தார்கள். இசைக்குழுத் தலைவன் துப்புரவான தோற்றமும் பம்பைத் தலையும் கொண்ட பதினேழு வயதுப் பையன்—படையில் கடைசியாகச் சேர்க்கப்படுபவர்களில் ஒருவன். அவன் முதலில் பாட, நங்கையர் அவனை அடுத்துப் பாடினார்கள்.

கிராமப் புல்வெளியை அவர்கள் மும்முறை வலம் வந்தார்கள். பின்பு சர்ச்சுக்கு முன்னால் புல்தரையில் குழுமி, காலைவரை அவர்கள் பாடிக் கொண்டும் ஆடிக்கொண்டும் இருந்தார்கள். ஆடுவோரின் பாய்ச்சலும் உவகை பொங்கும் துள்ளலும், பைன் தீவத்திகளின் வெளிச்சத்தில் பளிச்

சிட்ட அவர்களுடைய உடைகளின் வண்ணங்களும், இருளில் குமிழியிட்டுக் கிளம்பிய சிரிப்பும் பாட்டின் பகுதிகளும், இளங் காதலர்களின் கூச்சமற்ற வெளிப்படையான கொஞ்சல்களும், சர்ச் மணி ஆலயச் சேகண்டி போன்று நடுநடுவே கணகணத்ததும், திடுக்கிட்ட புட்கள் தலைக்கு மேலே வட்டமிட்டுப் பறந்ததும்—இவை எல்லாம் சேர்ந்து இயற்கை ஆற்றலையும் வனப்பையும் உள்ளத்தில் பதித்தன. பல நூற்றாண்டுகளுக்கு முன், மனிதகுலம் இளமையில் இருந்த காலத்துக்கு, மனிதர்கள் நேரே மண்ணில் இருந்தே உயிரோட்டத்தையும் உத்வேகத்தையும் பெற்றுவந்த நாட்களுக்கு இந்தக் காட்சி என்னை இட்டுச் சென்றது.

யானிஷேவ் அமெரிக்காவைப் பற்றிச் சொல்கிறான்

அது ஒரு கனவு உலகம், வனப்புமிக்க நாட்டுப்புறச் சமுதாயம். உழைப்பிலும் விளையாட்டிலும் விருந்துக்களியிலும் தோழமையால் ஒன்றிணைந்தது. அதன் மயக்கில் ஆழ்ந்திருந்த நான் குடிலுக்குச் சென்று கதவைத் திறந்தவன், திடீரென மீண்டும் இருபதாம் நூற்றாண்டை எதிர்ப்பட்டேன். யானிஷேவின்—கம்மியன், சோஷலிஸ்ட், சர்வதேசீயவாதி யானிஷேவின்—வடிவிலும் சொற்களிலும் இருபதாம் நூற்றாண்டு அங்கே இருந்தது. சூழ்ந்திருந்த குடியானவர்களுக்கு இன்றைய அமெரிக்காவை வருணித்துக் கொண்டிருந்தான் அவன். அமெரிக்காவில் ருஷ்யர்களின் கசப்பான அனுபவங்கள் பற்றிய வழக்கமான கதை அல்ல, வெளிநாடுகளில் இருந்து திரும்பிய ஆயிரக் கணக்கான ருஷ்யர்கள் நாடு முழுவதிலும் பரப்பியிருந்த அழுக்குச் சேரிகளையும் வேலை நிறுத்தங்களையும் ஏழ்மையையும் பற்றிய கதை அல்ல யானிஷேவ் சொல்லிக்கொண்டிருந்தது. கம்மிய குரலில், முகம் ஒளி சுடர, அமெரிக்காவின் அற்புதங்களை விவரித்துக் கொண்டிருந்தான் யானிஷேவ். ஒரு மாடி கூட இல்லாத வீடுகள் கொண்ட குடியானவர்களுக்கு, நாற்பது, ஐம்பது, அறுபது மாடிகள் உள்ள நியூயார்க் நகரக் கட்டிடங்களை அவன் வருணித்துக் காட்டினான். கருமானின் உலைக்

கூடத்தைவிடப் பெரிய தொழிற்கூடம் எதையும் கண்டிராத மனிதர்களுக்கு, நூறு இயந்திரச் சம்மட்டிகள் அல்லும் பகலும் இடைவிடாது அடித்துக்கொண்டிருக்கும் பெரிய தொழிற்சாலைகள் பற்றி அவன் சொன்னான். ஆழ்ந்த அமைதி நிறைந்த மாஸ்கோ பிரதேசச் சமவெளியில் இருந்து தரையடி ரெயில்கள் இருளைக் கிழித்துச் செல்லும் மாநகர்களையும் உல்லாசப் பொழுதுபோக்குவோர் வெள்ளமாய் நிறைந்த பெரு வெண் வழிகளையும் லட்சோபலட்சம் பெயர் உள்ளே போவதும் வெளியே வருவதுமாக இருக்கும் ஆரவாரம் மிக்க தொழிற்சாலைகளையும் காண்பதற்கு அவர்களை இட்டுச் சென்றான்.

கிராமவாசிகள் காதுகொடுத்துக் கேட்டார்கள். அவர்கள் மட்டுமீறி மலைப்பு அடையவோ வியப்பால் திகைத்துவிடவோ இல்லை. எனினும் பாராட்டு இல்லை என்று நாங்கள் குறைகூற முடியவில்லை.

''அமெரிக்கர்கள் அற்புதமான காரியங்கள் செய்கிறார்கள்'' என்று எங்கள் கைகளைக் குலுக்கியவாறு கூறினான் ஒரு உழவன்.

''ஆமாம். வனதேவதையைவிட அற்புதச் செயல்களை அவர்கள் செய்கிறார்கள்'' என்று ஒப்புக்கொண்டான் அவனுடைய கூட்டாளி.

ஆனால் அவர்களுடைய பரிவுள்ள அபிப்பிராயங்களில் ஏதோ கூறுது விடப்பட்டிருந்தது போல, வேற்றாரிடம் மரியாதையாக இருக்க அவர்கள் முயல்வதுபோல எங்களுக்குப் பட்டது. மறுநாள் நாங்கள் தற்செயலாகக் கேட்ட ஒரு உரையாடல் அவர்களது உண்மையான கருத்தை எங்களுக்குத் தெரிவித்தது.

இவான் சொல்லிக்கொண்டிருந்தான்: ''ஆல்பர்ட்டும் மிகயீலும் வெளிறிய முகங்களும் சோர்வுமாக இருப்பதில் ஆச்சரியம் இல்லை. அந்த மாதிரி ஒரு நாட்டில் வளர்ந்தால் வேறு எப்படி இருக்கமுடியும்?'' தத்தியானா கூறினாள்: ''நமது வாழ்க்கை கடினமானதுதான், ஆனால் அங்கே வாழ்க்கை இன்னும் கடியதாகத் தோன்றுகிறது.''

அப்போதுதான் ஒரு உண்மையை நான் முதன் முறை சற்றே கண்டேன். மாதங்கள் செல்லச் செல்ல இந்த

உண்மை மேலும் மேலும் தெளிவாகிக்கொண்டு போயிற்று. குடியானவனுக்குச் சொந்த அறிவு உண்டு. விஷயங்களைப் பற்றிச் சொந்தமாக முடிவு கட்டுவதற்கு அவன் அதைப் பயன்படுத்துகிருன். ருஷ்யக் குடியானவன் தத்தக்க பித்தக்கவென இயங்கும் தரைப் பிராணி, இடைக்கால இருளில் மூழ்கி, மூடநம்பிக்கைகளால் பிணிப்புண்டு, ஏழ்மையில் ஆழ்ந்து கிடப்பவன் என்ற கருத்து கொண்ட வெளிநாட்டினனுக்கு இந்த உண்மை வியப்பளிக்கிறது. எழுதவோ படிக்கவோ அறியாத இந்தக் குடியானவனுக்குச் சிந்திக்க இயல்கிறது என்பதைக் காணும்போது அயல்நாட்டான் திடுக்கிடுகிருன்.

ருஷ்யக் குடியானவனின் சிந்தனை தொடக்க இயல்பு கொண்டது, மூலதத்துவ வகைப்பட்டது, மண்ணின் முத்திரை பதிந்திருப்பது. நெடுந்தொலை விரிந்து பரந்த சமவெளிகளிலும் ஸ்தெப்பிகளிலும் ருஷ்ய வானுக்கு அடியில், நீண்ட பனிக்காலம் முழுதும் நூற்றுண்டுக் கணக்காக வாழ்ந்து வருவதின் பிரதிபலிப்பு இந்தச் சிந்தனையில் காணப்படுகிறது. எல்லாப் பிரச்சினைகளையும் ருஷ்யக் குடியானவன் பயிற்சி அற்ற புதுமைவாய்ந்த மனத்தால் ஆராய்கிருன். அவன் ஆராயும் முறை ஆழ்ந்து உள்ளே புகுவதாகவும் அடிக்கடி கலக்கம் அளிப்பதாகவும் இருக்கிறது. நாம் நீண்ட காலமாக மேற்கொண்டுவந்த உறுதியான எண்ணங்களுக்கு அவன் சவால் விடுகிருன். மேற்கத்திய நாகரிகம் பற்றிய நமது மதிப்பீட்டை அவன் மறுபரிசீலனைக்கு உள்ளாக்குகிருன். அதற்காக நாம் செலுத்தும் விலைக்கு அது உரியதே என்று அவனுக்குத் தென்படவே இல்லை. இயந்திர சாதனங்களாலும் வேலைத்திறமையாலும் உற்பத்தியாலும் அவன் மயக்குறுவதே இல்லை. ''இது எதற்காக? இதனுல் மனிதர்கள் அதிக இன்பம் பெறுகிருர்களா? அவர்கள் அதிக நட்பு கொள்ளும்படி இது செய்கிறதா?'' என்று அவன் கேட்கிருன்.

அவனுடைய முடிவுகள் எப்போதும் ஆழ்ந்தவையாக இருப்பதில்லை. சில வேளைகளில் அவை வெகுளித்தனம் உள்ளவையாகவும் விசித்திரமாகவும் இருக்கின்றன. திங்கட்கிழமை காலை ''மீர்'' (கிராமப் பஞ்சாயத்து) கூடிய

போது, கிராமத் தலைவன் கிராமத்தின் நல்வாழ்த்துக்களை எனக்கு மரியாதையாகத் தெரிவித்தான். என்னுடைய தங்கப் பற்களைப் பற்றிக் குழந்தைகள் ஒரு செய்தி கொணர்ந்ததாகவும், அது யுக்திப் பொருத்தமாகப் படவில்லை என்றும் அதை நம்புவதா இல்லையா என்று கிராமத்தாருக்குத் தெரியவில்லை என்றும் மன்னிப்பு கோரும் பாவனையில் அவன் கூறினான். பற்களைக் காட்டுவது தவிர எனக்கு வேறு வழி இல்லாது போயிற்று. நான் வாயைத் திறந்தேன். தலைவன் நெடுநேரம் அதற்குள் உற்றுப் பார்த்துவிட்டு, செய்தியை உறுதிப்படுத்தினான். பிறகு எழுபது தாடிக் கிழவர்கள் வரிசையாக அணிவகுக்க, நான் அங்காந்த வாயுடன் நின்றேன். ஒவ்வொருவனும் என் வாய்க்குள் கண்ணுர நோக்கி விட்டு அடுத்தவனுக்கு இடம் கொடுத்து விலகிக்கொண்டான். இவ்வாறாக ''மீர்'' உறுப்பினர்கள் எல்லோரும் என் திறந்த வாயை வரிசையாகப் பார்வையிட்டுச் சென்றார்கள்.

நொறுங்கும் பற்களில் சிமென்டையும் தங்கத்தையும் வெள்ளியையும் வைத்துக் கட்டிக்கொள்வது அமெரிக்கர்களின் வழக்கம் என்று நான் விளக்க நேர்ந்தது. எண்பது வயதான ஒரு கிழவனின் அருமையான தூய பற்கள் எவ்விதப் பல் வைத்தியத்தின் தேவையும் அற்றவையாக இருந்தன. அமெரிக்கர்கள் மிக விந்தையான கடின உணவு உண்பதனால்தான் இத்தகைய கேடு நேர்கிறது போலும் என்றான் அவன். தங்கப் பற்கள் கட்டிக்கொள்வது அமெரிக்கர்களுக்குச் சரியாயிருக்கலாம், ஆனால் ருஷ்யர்களுக்கு அது சரிப்படாது, ஏனென்றால் அவர்கள் எப்போதும் மிகச் சூடான தேநீர் நிறையப் பருகுவதனால் தங்கம் நிச்சயமாக உருகி விடும் என்று பலர் கூறினார்கள். அசாதாரண விருந்தாளிகளைத் தன் வீட்டில் தங்க வைத்திருந்த பெருமையை அனுபவித்துக்கொண்டிருந்த இவான் இவானேவ் இந்தச் சமயத்தில் பேசினான். தன் வீட்டில் தேநீர் எல்லார் வீடுகளிலும் போலவே சூடாக இருப்பதாகவும், அந்தத் தேநீரை நான் ஒரு பத்து கோப்பைகளாவது குடித்தேன் என்றும், அப்படியும் ஒன்றும் உருகவில்லை என்றும் சாட்சியம் கூறினான் அவன்.

வெளிநாடுகளில் ''அமெரிக்கன்'' என்ற சொல் ''பணக் காரன்'' என்ற சொற்பொருளை அநேகமாகக் குறிக்கிறது. என் மூக்குக்கண்ணுடியிலும் ஊற்றுப்பேனுவிலும் தங்கத்தைக் கண்டதும் நான் பெரும் பணக்காரனுக இருக்க வேண் டும் என்று அவர்கள் உறுதியாக எண்ணினர்கள். எனினும் அவர்கள் என்னுடைய தங்கத்தைக் கண்டு வியந்தது போன் றே அவர்கள் ஏராளமாகக் காட்டிய தங்கத்தைக் கண்டு நான் வியந்தேன். இந்த விவசாயக் கிராமத்தில் தங்கம் ஏராளமாக இருந்தது, அது கிராமத்தாரின் உடல்கள் மீது இல்லை, அவர்களது சர்ச்சில் இருந்தது. சர்ச் வாயிலுக்குள் புகுந்ததுமே பலிபீடத்தின் முன்னே இருபது அல்லது முப் பது அடி உயர அலங்காரத் தடுப்பு காட்சி அளித்தது. அது முழுவதும் தங்க முலாம் பூசப்பட்டிருந்தது. இந்தச் சர்ச்சை அலங்கரிப்பதற்கு ஒரு தடவை கிராமத்தினர் பதினுயிரம் ரூபிள்கள் திரட்டினர்கள்.

இந்தச் சிறு கிராமம் ஐரோப்பிய, அமெரிக்க வாழ்க் கைப் போக்குகளிலிருந்து வெகு தூரம் விலகியிருந்தது. எனினும் மேற்கேயிருந்து முன்னேறி வந்த பண்பாடு, நாகரி கம், இவற்றின் அடையாளங்கள் இங்கே காணப்பட்டன. சிக ரெட்டுக்களும் ஸிங்கர் தையல் இயந்திரங்களும், மெஷீன்கன் குண்டுகளால் துளைத்துத் துணிக்கப்பட்ட அங்கங்கள் கொண்ட மனிதர்களும், தயாராகக் கடையில் வாங்கிய உடைகளும் செல்லுலாயிடு காலர்களும் அணிந்திருந்த, தொ ழிற்சாலை நகரங்களைச் சேர்ந்த இரு இளைஞர்களும் அங்கே இருந்தார்கள். கிராம அங்கிகளுக்கும் உள்சட்டைகளுக்கும் முன் இந்த உடைகள் அவலட்சணமாகக் காட்சி அளித்தன.

ஒரு இரவு பக்கத்து வீட்டுக்கு எதிரே நிற்கையில் மென்மையான ஒலிநயம் கொண்ட குரல் “Parlez vous Français?”* என்று வினவியதைக் கேட்டு நாங்கள் திடுக்கிட்டோம். வினவியவள் அழகிய குடியானவப் பெண். கிராமத்தில் வளர்ந்தவள் ஆயினும் அரசவையில் வளர்க்கப் பட்ட நங்கைக்கு உரிய பெருமிதமும் ஒயிலும் வாய்ந்த வள். பெத்ரோகிராத் நகரில் ஒரு பிரெஞ்சுக் குடும்பத்தில்

---

*''பிரெஞ்சு மொழி பேச வருமா?'' — (மொ-ர்)

பணிமகளாக வேலை செய்துவிட்டு, பிரசவத்துக்காக ஊருக்கு வந்திருந்தாள்.

இவ்வாறு பல வழிகளில் வெளி உலகம் கிராமத்துக்குள் கசிந்து வந்து நூற்றுண்டுக் கணக்கான உறக்கத்திலிருந்து அதைத் தட்டி எழுப்பிக் கொண்டிருந்தது. கைதிகள், படைவீரர்கள், வியாபாரிகள், ''ஜெம்ஸ்த்வோ'' ஆட்கள் முதலியோர் வாயிலாக, கடல்களுக்கு அப்பாலுள்ள பெரு நகரங்களையும் நாடுகளையும் பற்றிய கதைகள் வந்தன. இவற்றின் விளைவாக அயல் நாடுகள் பற்றிய விசித்திரமான கதம்பக் கருத்துக்கள், மெய்விவரங்களும் கற்பனைகளும் சேர்ந்த விந்தைக் கலவை கிராமத்தாருக்கு ஏற்பட்டிருந்தது. அமெரிக்கா பற்றிய நகையாடத்தக்க அரை உண்மை ஒன்று எனக்குக் கூச்சம் உண்டாகும் வகையில் எடுத்துரைக்கப்பட்டது.

இரவுச் சாப்பாட்டுக்காக நாங்கள் மேஜை அருகே அமர்ந்திருந்தோம். எனக்கு விந்தையாகவும் தனிப்பட்டவையாகவும் தோன்றும் ருஷ்யர்களின் வழக்க பழக்கங்கள் எல்லாவற்றையும் என் நோட்புத்தகத்தில் குறித்துக் கொள்கிறேன் என்று நான் சொன்னேன்.

''உதாரணமாக, தனித்தனித் தட்டுகள் வைத்துக் கொள்வதற்குப் பதில் நீங்கள் ஒரே பொதுப் பாத்திரத்திலிருந்து எடுத்துச் சாப்பிடுகிறீர்கள். இது விசித்திரமான வழக்கம்'' என்றேன். ''ஆமாம். நாங்கள் விசித்திரமான மக்கள் போலும்'' என்ருன் இவான்.

''அப்புறம் இந்தப் பெரிய அடுப்பை எடுத்துக்கொள்ளுங்கள். அறையில் மூன்றில் ஒரு பகுதியை அது நிறைத்துக் கொண்டிருக்கிறது. அதில் நீங்கள் ரொட்டி சுடுகிறீர்கள். அதன் பரண்மீது நீங்கள் படுத்துத் தூங்குகிறீர்கள். அதற்கு உள்ளே புகுந்து நீராவி ஸ்நானம் செய்கிறீர்கள். எல்லாக் காரியங்களும் இதில் செய்கிறீர்கள், அதுவும் தனிப்பட்ட முறையில்.'' ''ஆமாம், நாங்கள் தனிப்பட்டவர்கள் தாம் போலும்'' என்று மீண்டும் தலை அசைத்தான் இவான்.

ஏதோ என் காலை மிதித்ததை உணர்ந்தேன். அது நாய் என்று நினைத்தேன். உண்மையிலோ, அது பன்றி. ''பார்த்தீர்களா! இதுதான் எல்லாவற்றையும்விடத் தனி

யான வழக்கம். பன்றிகளையும் கோழிகளையும் நேரே சாப்பாட்டு அறைக்குள் நடமாட விடுகிறீர்கள்'' என்றேன்.

அந்தச் சமயத்தில் அவ்தோத்தியாவின் கையில் இருந்த குழந்தை மேஜைமீது குழந்தைகளுக்கு ஏற்ற முறையில் கால்களை உதைக்கத் தொடங்கிற்று. அவள் குழந்தையைப் பார்த்து, ''இந்தா கண்ணே! கால்களை மேஜைமேலிருந்து அகற்று. நீ அமெரிக்காவில் இல்லை என்பதை நினைவு வைத்துக்கொள்'' என்றாள். அப்புறம் என் பக்கம் திரும்பி, ''உங்கள் அமெரிக்காவில் தான் என்னென்ன விந்தையான வழக்கங்கள் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்!'' என்று அடக்கமாகக் கூறினாள்.

நாங்கள் பயிரை அறுவடை செய்கிறோம்

திருநாள் முடிந்த அடுத்த நாள். பக்கத்து ஊர்களைச் சேர்ந்த ஆட்கள் இன்னும் தங்கியிருந்தார்கள். கிராமப் புல்வெளியில் விளையாட்டுக்களும் நடனமும் நடந்துகொண்டிருந்தன. குழந்தைகள் கூட்டம் ஒன்றுக்கு ஒரு அக்கார்டியன் வாத்தியம் கிடைத்து விட்டது. அவர்கள் தலைக்கு நாளையப் பாட்டுக்களைப் பாடியவாறு தங்கள் அண்ணன்மார் அக்காள்மாரின் விந்தைச் சிற்றுருவங்கள் போன்று பெருமிதம் துலங்கப் பகட்டாக நடை போட்டார்கள். விழாவுக்குப் பிந்திய ஒரு வகை அயர்வு பெரும்பாலான கிராமத்தின்மீது கவிந்திருந்தது. இவான் இவானேவ் வீட்டார் இந்த விதிக்கு விலக்காக இருந்தார்கள். அங்கே எல்லோரும் வேலையில் முனைந்திருந்தார்கள். அவ்தோத்தியா அரிக்கட்டுகளைக் கட்டுவதற்காக வைக்கோலைப் புரிகளாக முறுக்கிக் கொண்டிருந்தாள். தத்தியானா மரவுரி நார்களைப் பின்னிச் செருப்புகள் ஆக்கிக் கொண்டிருந்தாள். அவ்தோத்தியாவின் மூத்த மகள் ஓல்கா பூனையைக் கட்டாயப்படுத்தித் தேநீர் பருகக் கற்பித்துக் கொண்டிருந்தாள். இவான் அரிவாட்களைத் தீட்டிக் கூராக்கினான். நாங்கள் எல்லோரும் வயலுக்குப் புறப்பட்டோம்.

இதைக் கண்டதும் இளைஞர்கள் தங்கள் குடில்களிலிருந்து வெளியே வந்தார்கள். ''வயலுக்குப் போகாதீர்கள். வீட்டிலேயே இருங்கள்'' என்று நையாண்டி செய்தார்கள்.

நாங்கள் மேலே நடக்கவே அவர்கள் ஆழ்ந்த முறையில் தடுக்கலானார்கள். நாங்கள் ஏன் போகக்கூடாது என்று கேட்டேன்.

''ஒரு குடும்பத்தார் வயலுக்குப் புறப்பட்டால் மற்ற எல்லாரும் அப்படியே செய்ய வேண்டும். அப்புறம் எங்கள் கொண்டாட்ட வேடிக்கை எல்லாம் தீர்ந்து போய் விடும். தயை செய்து போகாதீர்கள்!'' என்றார்கள்.

ஆனால் முதிர்ந்த பயிர் எங்களை அழைத்தது. வெயில் அடித்துக்கொண்டிருந்தது. மழை எப்போது தொடங்கும் என்று சொல்வதற்கில்லை. ஆகவே இவான் மேலே நடந்தான். பதினைந்து நிமிடங்களுக்குப் பின் மேட்டு நிலத்தை அடைந்ததும் நாங்கள் திரும்பிப் பார்த்தோம். வயலை நோக்கி வந்து கொண்டிருந்த கரிய உருவங்களால் பாதைகள் புள்ளியிடப்பட்டிருந்ததைக் கண்டோம். வரப்போகும் பனிக்காலத்திற்காக உணவுக் களஞ்சியங்களை நிறைப்பதற்குத் தனது பணியாட்களைக் கிராமம் தேன் கூடு போல அனுப்பிக்கொண்டிருந்தது. ரை வயலை நாங்கள் அடைந்ததும் யானிஷேவ், **ருஷ்யாவில் இன்பமாக வாழ்வோர் யார்?** என்ற மகுடமிட்ட நெக்ராஸவின் தேசீயக் காவியத்தின் செய்யுட்களை உரக்கப் பாட்டினான்:

''தானியம் கொழிக்கும் செழும்பொன் வயலே!
முதிர்ந்து கனத்த மணிக்கதிர் பூண்டு
பேரரசன்முன் படைஞர் போன்று
ஏருழவர் முன் நீ நிற்பதற்கு
எத்தனை எத்தனை ஆண்டவன் மக்கள்
உழைத்தனர் என்பதை இந்தப் பொழுதில்
எண்ணிப் பார்க்கவும் இயலாதன்றே!
இதந்தரும் பனித்துளிகளுக்கும் மேலே,
உழவரின் முகங்களிலிருந்து பெருகிய
வியர்வையே உன்னை நனைத்தது காணாய்!
ரையும் யவமும் தழைத்திடக் கண்டு
வையக மாந்தர் மகிழ்வார், ஆயின்,
ஒரு சில செல்வர்க்கே உணவாகும்
கோதுமை அவர்க்குக் களியூட்டாதே.
'கோதுமைப் பயிரே, நீ உழவர்க்குக்
குற்றம் இழைத்தாய், உனை யாம் விரும்போம்.
ரையோ, எமது அன்புக்கு உரியது,
எல்லோருக்கும் உணவாகிடுமே.' ''

ஒவ்வொருவரும் தம் தம் வேலையில் ஈடுபட்டதும் நானும் வேலையில் சேர்ந்துகொண்டேன். தண்ணீர் கொண்டு வந்தேன், அரிக்கட்டுகளைக் கட்டினேன், அரிவாளை வீசி இளம் பழுப்புக் கதிர்த்தாள்கள் சாய்ந்து விழுவதைக் கண்டேன். அரிவாளை வீசுவதற்குத் திறமையும் பழக்கமும் வேண்டும். எனவே நான் நின்ற பாங்கும் நான் அறுவடை செய்த பாங்கும் வீரம் ததும்புவனவாக இல்லை. அமெரிக்க அறுவடையாளர்களின் மதிப்பையும் நான் உயர்த்தவில்லை. இவான் மரியாதை காரணமாக எனது முறையை விமர்சிக்கவில்லை. ஆனால் அது அவனுக்கு நகைப்பு ஊட்டியதையும் அவன் சிரிப்பை அடக்கிக் கொண்டதையும் நான் காண முடிந்தது. அவ்தோத்தியாவிடம் அவன் கூறிய சொற்களில் ஒட்டகம் என்று பொருள்படும் ருஷ்யச் சொல் எனக்குப் புரிந்தது. உண்மையிலேயே நான் ஒட்டகம்போலக் கூனியிருந்தேன். இவானோ நேராக நிமிர்ந்து நின்று தேர்ந்த தொழிற்சிற்பி போன்று அரிவாளை வீசினான். நான் இவான் பக்கம் திரும்பி என்னை அவன் ஒட்டகத்துக்கு ஒப்பிட்டதாகக் குற்றம் சாட்டினேன். அவனுக்கு எக்கச்சக்கமாகப் போய்விட்டது. ஆனால் நான் நகைப்பதையும் அந்தத் திமில் முதுகுப் பிராணியை நான் ஒத்திருப்பதாக ஏற்றுக்கொள்வதையும் அறிந்தபின் அவன் விழுந்து விழுந்து சிரித்தான்.

''தத்தியானா! மிகயீல்!'' என்று கூவி அழைத்து, ''தானிய அறுவடை செய்யும்போது தாம் ஒட்டகத்தைப்போல் இருப்பதாக ஆல்பர்ட் தவீதவிச் சொல்லுகிறார். ஹோ! ஹோ! ஹோ!'' என்று கெக்கலித்தான். அதன் பிறகு இரண்டு மூன்று தடவை அவன் பக்கென்று சிரித்தான். நீண்ட பனிக் காலத்தில் இந்த ஒட்டகம் பல சலிப்பூட்டும் வீண் போதுகளைக் கழிக்க அவனுக்கு உதவியிருக்க வேண்டும்.

ருஷ்யக் குடியானவனின் சோம்பேறித் தனத்தைப் பற்றி எழுத்தாளர்கள் விவரிக்கிறார்கள். சந்தைகளையும் வோத்காக் கடைகளையும் சுற்றி ருஷ்யக் குடியானவன் சோம்பித் திரிவதைக் காணும்பொழுது இந்த எண்ணம் உண்டாகிறது. ஆனால் வயலில் அவனுக்கு ஈடாக வேலை செய்ய முயல்வது இந்த எண்ணத்தை விரைவிலேயே அகற்றி விடுகிறது.

தலைகள் மீது வெயில் பொசுக்க, கால்களுக்கு அடியிலிருந்து புழுதி கிளம்ப, கடைசி அரிதாள் வயலிலிருந்து அகற்றப் படும்வரை அவர்கள் கதிர்களை அறுத்துத் திரட்டிக் கட்டிப் போர் போட்ட வண்ணமாக இருந்தார்கள். அப்புறம் அவர்கள் கிராமத்துக்கு நடந்தார்கள்.

போல்ஷெவிஸத்தைப் பற்றிக் குடியானவர்கள் எச்சரிக்கையாய் இருக்கிறார்கள்

நாங்கள் வந்தது முதல் குடியானவர்கள் யானிஷேவைப் பொதுக்கூட்டத்தில் பேசும்படி கேட்டுக்கொண்டிருந்தார்கள். மாலையில் ஒரு பிரதிநிதிக் குழு அவனை வேண்டிக் கொள்வதற்காக வந்து சேர்ந்தது.

''நினைத்துப் பார். பத்து ஆண்டுகளுக்கு முன் நான் சோஷலிஸ்ட் என்று இந்தக் குடியானவர்களுக்கு ஐயம் ஏற்பட்டிருந்தால் இவர்கள் என்னைக் கொல்ல வந்திருப்பார்கள். இப்போதோ, நான் போல்ஷெவிக் என்று தெரிந்ததும் என்னைப் பேசும்படி வேண்டிக்கொள்ள வருகிறார்கள். இந்த இடைக்காலத்தில் நிலைமை மிக மிக மாறியிருக்கிறது'' என்றான் யானிஷேவ்.

யானிஷேவ் இயல்பான மேதை வாய்ந்தவன் அல்ல. உலகின் துயர்களை ஆழ்ந்து உணரும் பண்பு மேதை என்றால் மட்டுமே அவனை மேதாவி எனக் கூறலாம். பிறருடைய துயரங்களால் வேதனையுற்று, வறுமையை மேற்கொண்டிருந்தான் அவன். அமெரிக்காவில் கம்மியன் என்ற முறையில் ஒரு நாளுக்கு ஆறு டாலர்கள் அவன் சம்பாதித்தான். மலிவான அறைக்கும் சாப்பாட்டுக்கும் போதிய தொகையை இந்தப் பணத்திலிருந்து அவன் எடுத்துக்கொண்டான். எஞ்சிய தொகைக்கு ''இலக்கியம்'' வாங்கி அதை வீடு வீடாக எடுத்துச் சென்றான். போஸ்டன், டெட்ராய்ட், மாஸ்கோ, மார்ஸேல்ஸ் ஆகிய நகரங்களின் ஏழைகள் வீடுகளில் யானிஷேவை லட்சியத்துக்காக எல்லாவற்றையும் வழங்கிய தோழன் என்று மக்கள் இன்றும் புகழ்கிறார்கள்.

தோக்கியோ நகரில் கிளர்ச்சியுற்ற ரிக்ஷாக்காரன் ஒருவன் யானிஷேவை இழுத்து ரிக்ஷாவில் ஏற்ற முயன்றதை

நாடுகடந்த ருஷ்யத் தோழன் ஒருவன் கண்டான். ''நான் ரிக்ஷாவில் ஏறி அமர்ந்ததுமே ரிக்ஷாக்காரன் குதிரைபோல வியர்க்க விறுவிறுக்க இழுத்துப் போகலானுன். நான் முட்டாளாக இருக்கலாம், ஆனால் ஒரு மனிதன் எனக்காக விலங்குபோல் உழைப்பதை அனுமதிக்க என்னுல் முடியாது. எனவே நான் அவனுக்குக் கூலியைக் கொடுத்துவிட்டு வெளியேறினேன். இனிமேல் ரிக்ஷாவில் ஒருபோதும் ஏற மாட்டேன்'' என்று விளக்கினுன் யானிஷேவ்.

ருஷ்யா திரும்பியது முதல் யானிஷேவ் இரவும் பகலும் பயணம் செய்து பிரமாண்டமான கூட்டங்களுக்கு முன் பேசினுன். தொண்டை கட்டிப் போய் கிசுகிசுப்பதையும் சைகை காட்டுவதையும் தவிர வேறு ஒன்றும் செய்ய இயலாது போகும்வரை அவன் கூட்டங்களில் பேசிக்கொண்டிருந்தான். இளைப்பாறி உடம்பைத் தேற்றிக்கொள்வதற்காகவே அவன் சொந்த ஊருக்கு வந்திருந்தான். ஆனால் இங்கும் புரட்சி அவனை ஓய்வு கொள்ள விடவில்லை.

''மிகயீல் பெத்ரோவிச் எங்களுக்கு முன் சிறு உரை நிகழ்த்துவாரா? சிறு உரைதான்'' என்று கேட்டுக்கொண்டார்கள் குடியானவர்கள்.

யானிஷேவால் அவர்கள் பேச்சைத் தட்ட முடியவில்லை. குழுவினர் கிராமத் திடலில் வண்டி ஒன்றை இழுத்துக் கொண்டு நிறுத்திஞர்கள். அதைச் சுற்றிக் கூட்டம் நிறைந்ததும் யானிஷேவ் இந்த மேடைமேல் ஏறி, புரட்சியையும் போரையும் நிலத்தையும் பற்றிய போல்ஷெவிக் கருத்துக்களை விவரித்தான்.

அவன் பேசிக்கொண்டிருக்கையில் மாலை கருண்டு இரவு ஆகிவிட்டது. அப்போது குடியானவர்கள் தீப்பந்தங்களை எடுத்து வந்தார்கள். யானிஷேவ் மேலும் பேசிக்கொண்டு போனுன். அவன் குரல் கம்மியது. மக்கள் தண்ணீரும் தேநீரும் ''க்வாஸ்'' எனப்படும் ரை ரொட்டிச் சாறும் கொண்டு வந்தார்கள். அவன் தொண்டை கட்டிவிட்டது. மறுபடி அவனுக்குக் குரல் கிளம்பும் வரை அவர்கள் பொறுமையாகக் காத்திருந்தார்கள். பகல் முழுதும் வயல்களில் வேலை செய்த இந்தக் குடியானவர்கள் இரவு நெடுநேரம்வரை அங்கே நின்று அவன் பேச்சைக் கேட்டுக்

கொண்டிருந்தார்கள். தங்கள் உடல்களுக்காக உணவு சேகரிப்பதில் காட்டியதைவிட அதிக ஆர்வத்தை அறிவுக்கு உணவு சேகரிப்பதில் அவர்கள் காட்டினுர்கள். அறிவுச் சுடர் இந்த கிராமத்தின் இருளில் கொழுந்துவிட்டு எரிந்தது உருவகமான காட்சியாக விளங்கியது. உக்ரேனிய ஸ்தெப்பிகளிலும் மாஸ்கோப் பிரதேசச் சமவெளிகளிலும் சைபீரியாவின் நெடுந்தூரப் பரப்புகளிலும் சிதறிக் கிடந்த பதினுயிரக் கணக்கான கிராமங்களில் இது ஒன்று. இத்தகைய நூற்றுக்கணக்கான கிராமங்களில் அன்று இரவு பந்தங்கள் எரிந்து கொண்டிருந்தன, வேறு யானிஷேவ்கள் புரட்சியின் கதையை விவரித்துக் கொண்டிருந்தார்கள்.

பேச்சாளனைச் சுற்றி நெரிந்த அந்த ஆவல் ததும்பும் முகங்களில்தான் எவ்வளவு மரியாதை, யுகக் கணக்கான வேட்கைகள்! இருளிலிருந்து எழும் இந்தக் கேள்விகளில்தான் எவ்வளவு அறிவுப் பசி! ஒரேயடியாகக் களைத்துச் சோர்ந்து போகும்வரை யானிஷேவ் சிரமப்பட்டுப் பேசிக் கொண்டு போனுன். அவனுல் மேலே பேசவே முடியாது போன பொழுதுதான் மக்கள் போக மனமின்றிக் கலைந்து சென்றுர்கள். அவர்களுடைய கருத்துரைகளை நான் கூர்ந்து கேட்டேன். ''எழுத்தறிவற்ற அஞ்ஞானிகளான இந்த ருஷ்யக் குடியானவர்கள்'' இந்தப் புதிய போதனையை அப்படியே ஏற்றுக்கொள்ள, ஒரு பிரசாரகனின் ஆவேசத்தால் ஆட்கொள்ளப்படத் தயாராயிருக்கிறுர்களா?

அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள்: ''மிகயீல் பெத்ரோவிச் நல்ல மனிதர். அவர் வெகு தூர நாடுகளுக்குப் போயிருக்கிறுர், பல விஷயங்களைப் பார்த்திருக்கிறுர் என்பது நமக்குத் தெரியும். அவர் நம்புவது சில மனிதர்களுக்கு நல்லதாக இருக்கலாம். ஆனுல் அது நமக்கு நல்லதா என்பதை அறியோம்.''

யானிஷேவ் தன் ஆன்மாவையே கொட்டி போல்ஷெவிஸக் கொள்கையை விளக்கி விவரித்தான், ஆயினும் ஒருவனைக்கூட மனம் மாறச் செய்ய அவனுல் முடியவில்லை. இறுக்கம் நிறைந்த அறையிலிருந்து தப்புவதற்காகத் தீனிப்புல் பரண்மீது ஏறுகையில் யானிஷேவ் தானே இந்த விஷயத்தைக் குறிப்பிட்டான். தன் சிறந்த ஆற்றல்களைக் கொட்டி

யும் நிராகரிக்கப்பட்டுவிட்டவன் போன்று உணர்ந்த பிரசாரகனின் தனிமையையும் ஆன்மிக வெறுமையையும் பெதஸேயேவ் என்ற இளங் குடியானவன் ஒருவன் ஊகித்து அறிந்துகொண்டான் போலும்.

''இதெல்லாம் நிரம்பப் புதிது, மிகயீல் பெத்ரோவிச். நாங்கள் நிதானமான ஆட்கள். இதைப் பற்றி ஆலோசிக்கவும் கலந்து பேசவும் எங்களுக்கு நேரம் வேண்டும். எத்தனையோ மாதங்களுக்கு முன் நாங்கள் விதைப்பு நடத்தினோம். அறுவடையோ இன்றுதான் செய்தோம்'' என்றான் அவன்.

நானும் தேறுதல் சொல்ல முயன்றேன். ''பரவாயில்லை'' என்று தனது கொள்கையின் இறுதி வெற்றியில் உற்சாகிக்கு உள்ள நம்பிக்கையுடன் கிசுகிசுத்தான் யானிஷேவ். ''இவர்கள் கட்டாயமாக நம்புவார்கள்.'' தீனிப்புல் மீது தடாலென்று விழுந்து படுத்துக்கொண்டான். அவன் உடல் நடுங்கியது. இருமினான். ஆனால் அவனது முகத்தில் ஆழ்ந்த சாந்தம் ஒளி விட்டது.

நான் ஐயங் கொண்டேன். ஆனால் யானிஷேவ் நினைத்ததே சரி ஆயிற்று. எட்டு மாதங்களுக்குப் பின்னர் கிராமத் திடலில் அவன் இன்னொரு உரை நிகழ்த்தினான். ஸ்பாஸ்க் கோயே கிராமக் கம்யூனிஸ்ட் கட்சி அவனைப் பேச அழைத்திருந்தது. பெதஸேயேவ் கூட்டத்துக்குத் தலைமை வகித்தான்.

யானிஷேவ் நிலத்தைப் பற்றிப் பேசுகிறான்

காலையில் பல குடியானவர்கள் தங்கள் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்வதற்காக நாங்கள் தங்கியிருந்த வீட்டுக்கு வந்தார்கள். எல்லாவற்றிலும் முக்கியமாக இருந்தது நிலம் பற்றிய பிரச்சினை. இந்தப் பிரச்சினைக்கு அப்போது போல் ஷெவிக்குகளின் தீர்வு, ''ஸ்தல நிலக் கமிட்டிகளின் பொறுப்பில் இதை விட்டுவிடுவோம். பெரிய எஸ்டேட்டுக்களை அவை எடுத்துக் கொண்டு மக்களின் கைகளில் அவற்றை ஒப்படைக்கட்டும்'' என்பதாகும். ஸ்பாஸ்க்கோயே கிராமத்தில் அரச வம்சத்துக்கோ சர்ச்சுக்கோ தனியாருக்கோ

சொந்தமான எஸ்டேட்டுக்கள் இல்லை என்றும் ஆகவே மேற் கண்ட முடிவு இங்கே நிலப் பிரச்சினையைத் தீர்க்கவில்லை என்றும் குடியானவர்கள் சொன்னார்கள்.

''இங்கே உள்ள நிலம் எல்லாம் ஏற்கனவே எங்களுக்குச் சொந்தம். இது மிகக் கொஞ்சம், ஏனென்றால் ஆண்டவன் எங்களுக்கு நிறையக் குழந்தைகளைக் கொடுத்திருக்கிறான். போல்ஷெவிக்குகள் மிகயீல் பெத்ரோவிச் சொல்வது போல நல்லவர்களாக இருக்கலாம். ஆனால் அவர்கள் அரசாங்கத்தை எடுத்துக் கொண்டால் நிலத்தை அதிகமாக்க அவர்களால் முடியுமா? முடியாது. ஆண்டவன்தான் அப் படிச் செய்ய முடியும். எங்களைச் சைபீரியாவுக்கோ நிலம் ஏராளமாக உள்ள வேறு ஏதேனும் இடத்துக்கோ அனுப் புவதற்குப் போதுமான பணம் படைத்த அரசாங்கம் வேண் டும் என்று நாங்கள் விரும்புகிறோம். போல்ஷெவிக்குகள் அப்படிச் செய்வார்களா?'' என்றான் கிராமத் தலைவன்.

யானிஷேவ் குடியேற்றத் திட்டத்தை விளக்கினான். பின்பு போல்ஷெவிக்குகள் ருஷ்யாவுக்காகத் திட்டமிட்டு வந்த விவசாயக் கம்யூன்களைப் பற்றிப் பேசினான். ''மீர்'' எனப்படும் கிராமப் பஞ்சாயத்தைக் கூட்டுறவு முறையில் அமைந்த பெரிய அளவுப் பண்ணைத் தொழில் நிலையமாக முடிவில் மாற்றுவது இந்தத் திட்டம். ஸ்யாஸ்க்கோயே கிராமத்தில் நிலவும் தற்போதைய அமைப்பின் சேதாரத் தை யானிஷேவ் சுட்டினான். வழக்கம்போலவே இங்கே நிலம் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒரு பகுதி பொது மேய்ச்சல் நிலம். நல்ல, கெட்ட, நடுத்தர நிலம் நேர்மையாகப் பங்கிடப்படுவதை உறுதிப்படுத்துவ தற்காக ஒவ்வொரு குடியானவனுக்கும் மேற்கண்ட நான்கு பகுதிகளில் ஒவ்வொன்றிலும் ஒரு வயல் ஒதுக்கப்பட் டிருந்தது. வயலுக்கு வயல் போவதில் வீணாகும் நேரத்தை யானிஷேவ் குறிப்பிட்டான். வயல்கள் தாயக் கட்டங்கள் போலத் துண்டுகளாக்கப்படாமல் ஒரே அலகாகப் பெரு மளவில் சாகுபடி செய்யப்படுவதால் ஏற்படும் லாபத்தை அவன் காட்டினான். கூட்டுக் கலப்பையும் அறுவடை இயந் திரமும் வேலை செய்வதை வருணித்தான். இரண்டு குடியானவர்கள் வேறொரு மாநிலத்தில் இவை இயங்கக்

கண்டிருந்தார்கள். வேலை செய்வதில் அவை ''பேய்கள்தாம்'' என்று அவர்கள் சாட்சியம் கூறினார்கள்.

''அமெரிக்கா எங்களுக்கு அவற்றை அனுப்புமா?'' என்று கேட்டார்கள் குடியானவர்கள்.

''கொஞ்ச காலத்துக்கு. அப்புறம் நாம் பெரிய தொழிற்சாலைகளை நிறுவி, இங்கே, ருஷ்யாவிலேயே அவற்றைத் தயாரிப்போம்'' என்று யானிஷேவ் பதில் அளித்தான்.

மறுபடியும் அவன் கேட்டுக்கொண்டிருந்தவர்களை அவர்களுடைய சந்தடியற்ற கிராமப்புறங்களிலிருந்து பெரிய நவீனத் தொழிற்சாலையின் முழக்கத்துக்கும் ஆரவாரத்துக்கும் இட்டுச் சென்றான். அவனுடைய வர்ணனை குடியானவர்களுக்கு மீண்டும் ஒருவகைக் கலக்கத்தை உண்டாக்கிற்று. நவீன இயந்திரத் தொழில் முறை அவர்களுக்குக் கவர்ச்சியை விட அச்சத்தையே ஏற்படுத்தியது. நமது அற்புத இயந்திரங்களை அவர்கள் பெற விரும்பினார்கள். ஆனால் தங்களது பசுமையும் வெண்மையுமான நிலத்தின் மேலே புகைபோக்கிகள் கரும் புகைப் படலங்களை உமிழ்வதைக் காண்பதை விலையாகச் செலுத்த நேர்ந்தால் இவை நற்பேறுகளாக இருப்பது சந்தேகமே என அவர்கள் எண்ணினார்கள். ''தொழிற்சாலைக் கொதிகலத்தில் வேவது'' என்ற கருத்தே குடியானவர்களுக்குக் குலை நடுக்கம் ஏற்படுத்துகிறது. தேவையால் உந்தப்பட்டு அவர்களில் சிலர் சுரங்கங்களிலும் ஆலைகளிலும் வேலை செய்தார்கள். ஆனால் புரட்சிக்குப் பிறகு அவர்கள் மீண்டும் நிலத்துக்குக் கூட்டமாகத் திரும்பிவிட்டார்கள்.

அவர்களுடைய சமுதாயப் பிரச்சினைகள் தவிர, பல சொந்தப் பிரச்சினைகளும் யானிஷேவுக்கு எதிர்ப்பட்டன. தனது அரசியல் கொள்கையைப் பிறர் ஏற்குமாறு செய்யும் பொருட்டுச் சொந்தக் கோட்பாடுகளை அவன் தளர்த்திக் கொள்ள வேண்டுமா? உதாரணமாக, கிரீக் சர்ச்சைத் துறந்து விட்ட அவன் சாப்பாட்டுக்கு முன்பும் முடிவிலும் சிலுவைக் குறி இட்டுக்கொள்ள வேண்டுமா? வேண்டாம் என்று தீர்மானித்து இவான் இவானோவின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல ஆயத்தமானான் யானிஷேவ். ஆனால் அவன் சிலுவைக்குறி இட்டுக்கொள்ளாததனால் முதிய குடியானவன்

கலக்கமும் அவன் மனைவி வருத்தமும் அடைந்தவர்கள் போலக் காணப்பட்டாலும் அதற்கு விளக்கம் கூறும்படி அவர்கள் கேட்கவே இல்லை.

ருஷ்யாவில் வயல் வேலை செய்பவனுக்கு முகமன் தெரிவிப்பதற்குரிய வழக்கமான சொற்கள் ''ஆண்டவன் துணை நிற்க'' என்பவையாகும். சம்பிரதாயமான ''காலை வணக்கம்'' என்ற சொற்களுக்குப் பதில் இந்தச் சொற்களால் முகமன் கூறுவது என்று யானிஷேவ் நிச்சயித்தான். பெத ஸேயேவின் குழந்தையின் நீண்ட அந்திமச் சடங்கிலும் அவன் கடைசிவரை இருந்தான். ருஷ்யக் கிராமங்களில் குழந்தையின் மரணத்தை அறிவிப்பதற்காக ஆலய மணிகள் அடிக்கடி ஒலிப்பது உண்டு.

''கடவுள் நமக்கு நிறையக் குழந்தைகளைத் தருகிறுன். வாழும் குழந்தைகளின் வாய்களில் ரொட்டியை ஊட்டுவதற்காக நாம் வயல்களை அசட்டை செய்யாமல் உழைக்க வேண்டும்'' என்றுன் கிராமத் தலைவன். எனவே மற்றவர்கள் வேலைக்குச் சென்றுர்கள். பாதிரியும் பெற்றேரும் யானிஷேவும் நானும் மட்டுமே சர்ச்சுக்குப் போனேம். தாயின் பக்கத்தில் அவளுடைய ஒன்பது குழந்தைகள் நின்று கொண்டிருந்தார்கள். ஒவ்வோர் ஆண்டும் அவள் ஒரு குழந்தை பெற்றுள். வயதுக் கிரமப்படி அவர்கள் படி வரிசை போன்று இருந்தார்கள். நடுவே எங்கேனும் மட்டுமே இடைவெளி இருந்தது. அந்த ஆண்டுக் குழந்தை இறந்துவிட்டது. இப்போது இந்த ஆண்டுக் குழந்தை காலமாகிவிட்டது. அது சின்னஞ்சிறியது, பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த அல்லி மலரைவிடப் பெரியது அல்ல. சிறிய நீலச் சவப் பெட்டியில், சுற்றிலும் உயர்ந்து நின்ற திண்ணிய சர்ச் சுவர்களுக்கும் தூண்களுக்கும் நடுவே அது மிக அற்பமானதாக, நொய்ந்ததாகக் காணப்பட்டது.

ஸ்பாஸ்க்கோயே கிராமத்திற்கு நற்காலமாக நல்ல பாதிரி வாய்த்திருந்தான். அன்பும் பரிவும் உள்ளவன் அவன். கிராமத்தாரின் பிரியத்துக்கும் நம்பிக்கைக்கும் அவன் பாத்திரமாயிருந்தான். குழந்தைகளின் அந்திமக்கிரியைக்கு அடிக்கடி அழைக்கப்பட்ட போதிலும் அதை வெறும் வழக்கச் சடங்கு ஆக்காதிருக்க அவன் முயன்றுன். சவப்

பெட்டி மேலிருந்த மெழுகுவத்திகளை அவன் மென்மையாகப் பொருத்தினன், சிலுவையைக் குழந்தையின் மார்பு மீது வைத்தான், பின்பு தனது அதிர்ந்து முழங்கும் குரலால் சர்ச்சை நிறைத்தவாறு பிரார்த்தனை படிக்கலானன். பாதிரியும் உதவிப் பாதிரியும் பிரார்த்தனை படிக்கையில் தாயும் தகப்பனும் குழந்தைகளும் சிலுவைக் குறி இட்டுக் கொண்டு முழந்தாள் படியிட்டு நெற்றி தரையில் பட வணங்கினர்கள். யானிஷேவ் பாதிரிக்கு எதிரே பாதி குனிந்த தலையுடன் அசையாமல் நின்றன்.

வாழ்வும் சாவும் பற்றிய மர்மம் நடுவே கிடக்க அவர்கள் ஒருவருக்கு ஒருவர் எதிரே நின்றர்கள். ஒருவன் புனிதப் பண்டை மரபுச் சர்ச்சின் பாதிரி, மற்றவன் சமூகப் புரட்சியின் தீர்க்கதரிசி. ஒருவன் மறுவுலகச் சுவர்க்கத்தில் குழந்தைகளை இன்பமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருக்கும் பணிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருந்தான். மற்றவனே உயிருள்ள குழந்தைகளுக்கு இவ்வுலகைப் பாதுகாப்பும் இன்பமும் உள்ளது ஆக்கும் தொண்டில் வாழ்வை ஈடுபடுத்தியிருந்தான்.

. . . .

ருஷ்யச் சிற்றூர்களுக்கும் நகரங்களுக்கும் யானிஷேவ் செய்த பிரசாரப் பயணங்கள் பலவற்றில் நான் அவனுடன் இருந்தேன். இவானவோ என்ற பஞ்சாலைக் கேந்திரத்தைச் சேர்ந்த தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களிலிருந்து மாக்ஸீம் கோர்க்கியின் இரவுப் புகலிடம் என்னும் நாடகத்தில் இறவாமை பெற்றுவிட்ட மாஸ்கோத் திருடர்கள் குடியிருப்பு வரை நாங்கள் பல்வேறு தரங்களில் உள்ள பாட்டாளிகளைச் சந்தித்தோம். ஆனல் யானிஷேவின் சிந்தனை எப்போதும் கிராமங்களுக்கே திரும்பிய வண்ணமாக இருந்தது.

ஆறு மாதங்களுக்குப் பிறகு மாஸ்கோவில் நடந்த சோவியத்துக்களின் நான்காவது காங்கிரஸில் நான் யானிஷேவிடம் பிரிவு சொல்லிக் கொண்டேன். அவனுடைய கைமீது சாய்ந்தவாறு ஒண்டியிருந்தாள் வாடிக் கூனிய

எழுபது வயதுக் கிழவி ஒருத்தி. அவளைத் தன் ''ஆசிரியை'' என்று பணிவுடன் அறிமுகப்படுத்தினன் யானிஷேவ். ருஷ்யாவின் எல்லைகளுக்கு அப்பாலும் தொழிலாளி வர்க்கத்துக்கு வெளியிலும் அவளுடைய பெயர் ஒருவருக்கும் தெரியாது. ஆனல் தொழிலாளிகள், குடியானவர்களைச் சேர்ந்த இளம் புரட்சி வீரர்களுக்கோ, அவளுடைய பெயர் அருநிதி போன்றது. கஷ்டங்களையும் துன்பங்களையும் சிறைவாசத்தையும் அவர்களுடன் சேர்ந்து அவள் அனுபவித்திருந்தாள். நீண்ட பல ஆண்டுகள் துன்பமும் பட்டினியும் அனுபவித்ததால் அவள் நிறம் வெளிறி நொய்ந்து போயிருந்தாள். பார்க்கப் பரிதாபமாக இருந்தது—அவளது விழிகளைக் காணும்வரை. அவற்றிலோ, யானிஷேவ் போன்ற பதிற்றுக் கணக்கான இளைஞர்களின் உணர்ச்சிகளைத் தூண்டி, சமூகப் புரட்சியின் ஒளிசுடரும் திருத்தொண்டர்கள் ஆக்கிய உற்சாக நெருப்பு இன்னும் கனன்றுகொண்டிருந்தது. புரட்சிக்காகத் தன் வாழ்வையே வழங்கியிருந்தாள் அவள். ஆனல் புரட்சியைக் காண்போம் என்று கனவு காணத்தானும் அவள் துணிந்ததில்லை.

இப்போதோ, புரட்சி வந்துவிட்டது. தன்னவர்களின் நடுவே, தன் இளம் சீடனின் கையோடு கை கோத்தவாறு அவள் அமர்ந்திருந்தாள். இயந்திரத் தொழில் அழிவு நிலையில் இருந்தது, ஜெர்மானியர்கள் தலைவாயில் வரை வந்துவிட்டார்கள், பட்டினியும் குளிரும் நகரில் நடைபோட்டன என்பதெல்லாம் உண்மையே. ஆயினும் தொன்மையான ''பிரபுக்கள் மன்றத்தில்'' அவள் வீற்றிருந்தாள், லெனின் உரையாற்றுவதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். மக்கள் யாவருக்கும் அமைதியையும் தனக்கு நிலத்தை ஆதாரமாகக் கொண்டு வாழும் வாய்ப்பையும் அளிக்கும் புது நாள் வருவதை அவள் கண்முன்னே கண்டாள்.

''நாங்கள் இருவரும் நிலத்திலிருந்தே வந்தோம், நிலத்தை நேசிக்கிறேம். புரட்சி நிறைவுற்றதும் மிகயீலும் நானும் கிராமங்களில் வாழத் திரும்பிச் செல்வோம்'' என்று என் காதில் கிசுகிசுத்தாள் முதியவள்.

அத்தியாயம் நான்கு

வெற்றி வீரன்

1917ம் ஆண்டுக் கோடையில் நான் ருஷ்யாவில் விரிவாகப் பயணம் செய்தேன். துன்புற்ற மக்களின் முறையீடு எல்லாப் புறங்களிலுமிருந்து எழுந்து. இவானவோ பஞ்சாலைகளிலும் நீஷ்னியச் சந்தை வெளியிலும் கீவ் மார்க்கெட் சதுக்கங்களிலும் நான் இதைக் கேட்டேன். வோல்கா ஆற்றில் சென்ற நீராவிக் கப்பல்களின் சரக்குக் கிடங்குகளில் இருந்தும் இரவில் த்னீப்பர் ஆற்றில் மிதந்து சென்ற தெப்பங்களிலும் படகுகளிலும் இருந்தும் இந்த முறையீடு என் செவிகளுக்கு எட்டியது. மக்களின் துயரச் சுமையாக விளங்கியது போர், ''பாழாய்ப் போகிற போர்!''

போரினால் விளைந்த நாசத்தையும் அழிவுச் சின்னங்களையும் நான் எங்கும் கண்டேன். உக்ரேய்னாவின் எந்த ஸ்தெப்பிகளைக் கண்டு பரவசம் அடைந்து, ''ஓ ஸ்தெப்பிகளே! ஆகா, எவ்வளவு அழகாக இருக்கிறீர்கள் நீங்கள்!'' என்று கோகல்* வியந்து கூவினாரோ அந்த ஸ்தெப்பிகள் வழியாக நான் வண்டியில் சென்றேன். குன்றுகளின் மடியில் இருந்த ஒரு சிறு கிராமத்தில் நாங்கள் வண்டியை நிறுத்தினோம். சுமார் முன்னூறு மாதர்களும் நாற்பது முதியவர்களும் சிறுவர்களும் அங்கவீனர்களான ஒரு இருபது படைவீரர்களும் எங்கள் ''ஜெம்ஸ்த்வோ'' வண்டியைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்கள் முன் பேசுவதற்காக எழுந்ததும் நான், ''உங்களில் எத்தனை பெயர் வாஷிங்டனைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டேன். ஒரு பையன் கையை உயர்த்தினான். ''லிங்கனைப் பற்றி எத்தனை பேர் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்?'' மூன்று கைகள். ''கெரென்ஸ்கியைப் பற்றி?'' சுமார் தொண்ணூறு கைகள். ''லெனினைப் பற்றி?'' மீண்டும் தொண்ணூறு கைகள். ''தல்ஸ்த்தோயைப் பற்றி?'' நூற்று ஐம்பது கைகள்.

---

*கோகல், நி. வ. (1809-52)—மாபெரும் ருஷ்ய எழுத்தாளர்.

வெளிநாட்டானையும் அவனுடைய வேடிக்கைப் போக்கையும் பரிகசித்து நகைத்தவாறு மக்கள் இதை ரசித்தார்கள். பின்பு நான் ஒரு மடத்தனமான தவறு செய்தேன். ''போரில் யாரையேனும் இழந்தவர்கள் உங்களில் எவர்?'' என்று கேட்டேன். அனேகமாக எல்லாக் கைகளும் உயர்த்தப்பட்டன. மரங்களில் ஏக்கத்துடன் முனகும் பனிக்காலக் காற்று போன்ற ஓலம் சற்றுமுன் சிரித்துக்கொண்டிருந்த அந்தக் கூட்டத்தில் பரவியது. இரு முதிய குடியானவர்கள் அழுதுகொண்டே என் வண்டிச் சக்கரத்தின் மேல் சாய்ந்தார்கள். அதனுல் நான் நின்ற மேடை அசைந்தது. ''என் அண்ணன்! என் அண்ணனைக் கொன்றுவிட்டார்கள்! '' என்று கத்திக்கொண்டே கூட்டத்துக்கு வெளியே ஓடினுன் ஒரு சிறுவன். மாதர்களோ, தலைக்குட்டைகளால் கண்களை மறைத்துக் கொண்டோ ஒருவரை ஒருவர் தழுவிக்கொண்டோ ஆருய்க் கண்ணீர் பெருக்கிஞர்கள். இவ்வளவு கண்ணீர் எங்கிருந்து வர முடியும் என்று நான் வியந்தேன். சலனமற்ற அந்த முகங்களின்பின் இவ்வளவு துயரம் தேங்கியிருக்கும் என்று யார்தான் எண்ணியிருக்க முடியும்?

உடல் திடமுடைய எல்லா ஆண்களையும் போரில் பறிகொடுத்துவிட்ட ஆயிரக்கணக்கான ருஷ்யக் கிராமங்களில் இது ஒன்று. போரில் காயமடைந்தவர்கள் அங்கவீனர்களாக, கண்ணின்றி அல்லது கையின்றித் தள்ளாடித் தவழ்ந்து திரும்பி வந்த கணக்கில்லாத கிராமங்களில் இது ஒன்று. லட்சக்கணக்கானவர்கள் திரும்பவே இல்லை. கருங்கடலிலிருந்து பால்டிக் கடல்வரை 1,500 மைல் தொலை நீண்டு பரந்துள்ள மாபெரும் இடுகாட்டில்—ஜெர்மானியர்களுக்கு எதிரான ருஷ்யப் போர்முனையில்—கிடந்தார்கள் அவர்கள். ஜெர்மானியர்களின் மெஷீன்கன்களுக்கு எதிராகத் தடிகளை மட்டுமே ஆயுதங்களாகக் கொண்டு போரிட ஏவப்பட்ட இந்தக் குடியானவர்கள் ஒரு மொத்தமாகச் சுட்டு வீழ்த்தப்பட்டார்கள்.

அர்காங்கேல்ஸ்க்கில் துப்பாக்கிகள் ஏராளமாக இருந்தன. அவை வண்டிகளில் ஏற்றவும் பட்டுப் போர் முனைக்கு அனுப்பப்பட இருந்தன. ஆனுல் தங்கள் சரக்குக்களுக்காக அந்த வண்டிகளைப் பெற விரும்பிய வியாபாரிகள் சில ஆயிரம்

ரூபிள்களை அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்தார்கள். எனவே, அர்காங்கேல்ஸ்க்கிலிருந்து பத்து மைல் தூரத்தில் போர்த் தளவாடங்கள் ஓரிடத்தில் பதுக்கப்பட்டன, வண்டிகள் ஷாம்பேன் பாட்டில்களும் கார்களும் பாரிஸ் ஆடைகளும் ஏற்றப்படுவதற்காகத் திருப்பி அனுப்பப்பட்டன.

பெத்ரோகிராதிலும் பெரிய நகரங்களிலும் வாழ்க்கை உல்லாசமாகவும் பகட்டாகவும் இருந்தது—இந்த யுத்த வியாபாரத்தில் பெருத்த லாபம் கிடைத்துவந்தது. ஆனால் ஜாரின் உத்தரவுப்படி காப்பகழ்களுக்குள் விரட்டப்பட்ட ஒரு கோடிப் படைவீரர்களுக்கோ, அது குளிரும் இரத்தப் பெருக்கும் கொண்ட விவகாரமாக இருந்தது.

இப்போது கேரென்ஸ்கியின் கீழ் இன்னும் ஒரு கோடிப் பெயர் சேனையில் இருந்தார்கள். இவர்கள் கட்டாய இராணுவ சேவைக்காகக் கலப்பைகளையும் தொழிற்சாலைகளையும் விட்டுவிட்டுத் துப்பாக்கிகள் பிடிக்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்ட உழைப்பாளிகள். இந்த ஆயுதங்களைப் படைவீரர்கள் கைகளில் வைத்திருக்கத் தன்னால் ஆன எல்லா வழிகளையும் கடைப்பிடித்து வந்தது ஆளும் வர்க்கம். அது கொடிகளை ஆட்டி, ''வெற்றியும் புகழும்'' என்று கோஷித்தது. ''பெண்களின் மரணப் பட்டாளங்கள்'' அமைத்தது. ''உங்களுக்குப் பதில் பெண்களைப் போரிட விட்டிருப்பது ஆண்களாகிய உங்களுக்கு வெட்கக் கேடு!'' என்று கூச்சலிட்டது. ''பின்வாங்குபவர்கள் நிச்சயமாகக் கொல்லப்படுவார்கள்'' என்ற பிரகடனத்துடன், கிளர்ச்சி செய்த ரெஜிமென்டுகளின் பின்னணியில் அது மெஷீன்கன்களை வைத்தது. ஆனால் ஒன்றும் பயனில்லை.

படைவீரர்களின் கிளர்ச்சி

படைவீரர்கள் ஆயிரக் கணக்கில் துப்பாக்கிகளை எறிந்துவிட்டுப் போர்முனையிலிருந்து ஓடிக்கொண்டிருந்தார்கள். இருப்புப்பாதைகளையும் சாலைகளையும் நீர்வழிகளையும் செம்மி அடைத்தவாறு வெட்டுக்கிளிக் கூட்டங்கள் போன்று அவர்கள் வந்தார்கள். திரள்களாக ரெயில் வண்டிகள் மீது மொய்த்து, முகடுகளையும் திறந்த டிரக்குகளையும் நிறைத்து,

ரெயில் படிகளில் திராட்சைக் குலைகள் போன்று பற்றித் தொங்கினார்கள். சில வேளைகளில் மற்றப் பிரயாணிகளை அவர்களது இடங்களிலிருந்து அகற்றவும் செய்தார்கள். இளைஞர் கிறிஸ்தவ சங்கத்தைச் சேர்ந்த ஒருவன் பின்வரும் குறிப்பைத் தான் பார்த்ததாக ஆணையிட்டுக் கூறுகிறான்: ''படைவீரத் தோழர்களே: ரெயில் புறப்பட்ட பிறகு பிரயாணிகளை ஜன்னல் வழியே வெளியே தள்ளாதீர்கள்.'' அவன் சொல்வது மிகைக்கூற்றாக இருக்கலாம். ஆனால் எங்கள் பெட்டிகளை அவர்கள் ஜன்னலுக்கு வெளியே நிச்சயமாக எறிந்தார்கள்'.

அலெக்ஸ் கம்பெர்குடன் நான் மாஸ்கோவுக்குப் பயணம் செய்கையில் நேர்ந்தது இது. எங்கள் அறையில் ஒரே கூட்டமாக இருந்தது. இரவுக் காற்று உள்ளே வராதபடிக் கதவையும் ஜன்னலையும் செம்மி அடைத்துவிட்டு ருஷ்யர்கள் ஆனந்தமாக நித்திரையில் ஆழ்ந்தார்கள். விரைவில் துருக்கியக் குளியறைபோன்று ஆவி வந்த அறை சகிக்க முடியாதபடி புழுங்கத் தொடங்கியது. சிறிது காற்று உள்ளே வரவிடும் பொருட்டு நான் கதவை லேசாகத் திறந்து வைத்துவிட்டு மற்றவர்களுடன் சேர்ந்து உறங்கினேன். காலையில் கண்விழித்ததும் நெஞ்சை உறுத்தும் வியப்பு எனக்கு எதிர்ப்பட்டது. எங்கள் பெட்டிகளைக் காணோம்.

''இராணுவ உடுப்புக்கள் அணிந்திருந்த சில கொள்ளைக்காரத் தோழர்கள் அவற்றை வெளியில் எறிந்துவிட்டு தாங்களும் வெளியே குதித்து விட்டார்கள்'' என்று விளக்கம் தந்தான் முதிய கார்டு. எங்களுக்கு அவன் சொன்ன ஒரே ஆறுதல், கொள்ளைக்காரர்கள் அடுத்த அறையில் இருந்த ஒரு இராணுவ அதிகாரியின் சாமான்களையும் திருடிவிட்டார்கள் என்பதே. துணிமணிகள் போனதற்காக நாங்கள் அவ்வளவாக வருந்தவில்லை. எங்கள் பெட்டிகளில் இருந்த விலை மதிப்பற்ற பாஸ்போர்ட்டுகளும் நோட் புத்தகங்களும் அறிமுகக் கடிதங்களும் போனதில்தான் எங்களுக்கு அதிக வருத்தம் உண்டாயிற்று.

இரண்டு வாரங்களுக்குப் பின் எங்களுக்கு இன்னொரு ஆச்சரியம் நேர்ந்தது. மாஸ்கோ ரெயில்வே ஸ்டேஷன் மாஸ்டரிடமிருந்து எங்களுக்கு அழைப்பு வந்தது. கொள்ளைக்காரர்

களால் எங்களுக்கு அனுப்பப்பட்டிருந்த ஒரு பெட்டி அங்கே இருந்தது. அதில் எங்கள் உடை ஒன்றுகூட இல்லை, ஆனால் எங்கள் எல்லா தஸ்தாவேஜுகளும் இராணுவ அதிகாரியின் காகிதங்களும் ஒன்றுகூடப் பாக்கி இல்லாமல் அதில் இருந்தன.

போர்முனையிலிருந்து தப்பி ஓடி வந்து நாடு முழுவதிலும் சுற்றித்திரிந்து கொண்டிருந்த படைவீரர்களின் பெருங் கூட்டங்களது கடினமான நிலைமையைக் கருத்தில் கொள்ளும் போது அவர்கள் நடத்திய திருட்டுக்கள், அத்துமீறிய செயல்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை அல்ல, அவை அவ்வளவு குறைவாக இருந்ததே வியப்பு அளித்தது. அதே போல, காப்பகழ்களில் இருந்த நிலைமை பற்றிய கதைகள் உண்மையானால், இத்தனை படைவீரர்கள் தப்பி ஓடிவந்தது அல்ல, இத்தனை பெயர் போர்முனையில் இன்னும் நிலைத்திருந்ததே ஆச்சரியத்துக்கு உரியது.

இந்த நிலைமைகளை நேரில் காண நான் விரும்பினேன். போர்முனை செல்வதற்கு அனுமதிச் சீட்டு பெற நான் பல தடவை முயன்றேன். கடைசியில் செப்டம்பர் மாதம் என் முயற்சி பலித்தது. ஜான் ரீட், போரிஸ் ரெயின்ஷ்டெயின், இருவருடனும் நான் ரீகா பகுதிக்குச் சென்றேன்.

எங்களுடன் இருந்தான் ஒரு ருஷ்யப் பாதிரி, பெருந் தாடிக்காரன். அவன் மென்மையும் நயமுமாகப் பழகினான். ஆனால் தேநீர் பருகுவதிலும் பேசுவதிலும் அவனுக்கு அளவற்ற வேட்கை. ரெயிலில் எங்கள் அறைக் கதவின்மீது "**அமெரிக்கத் தூதுக் கோஷ்டி**" என்று எழுதப்பட்ட அடையாளப் பலகையை கார்டு பொருத்தி விட்டான். இதன் அரவணைப்பில் நாங்கள் இலையுதிர்காலத் தூறலுக்கிடையே ரெயில் செல்கையில் உறங்கினோம், உண்டோம்; பாதிரியோ, ருஷ்யப் படைவீரர்களைப் பற்றி முடிவின்றிப் பேசிக் கொண்டு போனான்.

அவன் சொன்னான்: "சர்ச் பிரார்த்தனைகளின் பழைய வாசகங்களில் கடவுள் **சுவர்க்கத்தின்** "**ஜார்**" என்றும் கன்னி மேரி, "**ஜாரினா**" என்றும் குறிக்கப்படுகிறார்கள். நாங்கள் இதை அகற்றிவிட வேண்டியதாயிற்று. கடவுளை

அவமதிப்பதை மக்கள் விரும்ப மாட்டார்களாம். எல்லா நாடுகளுக்கும் அமைதி வேண்டும் என்று பாதிரி பிரார்த்தனை செய்கிறான். 'பிரதேச இணைப்புக்களும் இழப்பீடுகளும் இல்லாமல் என்பதைச் சேர்த்துக் கொள்ளுங்கள்' என்கிறார்கள் படைவீரர்கள். அப்புறம் நாங்கள் பிரயாணிகளுக்காகவும் நோயுற்றவர்களுக்காகவும் துன்பப்படுபவர்களுக்காகவும் பிரார்த்தனை செய்கிறோம். 'தப்பி ஓடிய படைவீரர்களுக்காகவும் பிரார்த்தனை செய்யுங்கள்' என்கிறார்கள் படைவீரர்கள். புரட்சி மதநம்பிக்கையை அலங்கோலப்படுத்திவிட்டது, ஆயினும் பெரும்பாலான படைவீரர்கள் மதநம்பிக்கை உள்ளவர்கள். சிலுவையின் பெயரால் எவ்வளவோ செய்ய இப்போதும் முடியும்.''

ஆனால் ஏகாதிபத்தியவாதிகள் சிலுவையின் துணையால் மட்டுமீறிய செயல்கள் புரிய முயன்றார்கள். ''போரைத் தொடர்ந்து நடத்துங்கள், கான்ஸ்டான்டிநோப்பிளில் உள்ள செயின்ட் ஸோபியா சர்ச்சின் கும்மட்டத்தின்மேல் சிலுவையைப் பளிச்சிடும்படி நாம் நாட்டும்வரை!'' என்று அவர்கள் கத்தினார்கள். படைவீரர்கள் இதற்குப் பதில் அளித்தார்கள்: ''சரிதான்! ஆனால் செயின்ட் ஸோபியா சர்ச் மீது நாங்கள் சிலுவையை நாட்டுவதற்கு முன் எங்கள் கல்லறைகள் மேல் ஆயிரக்கணக்கான சிலுவைகள் நாட்டப்பட்டு விடுமே. எங்களுக்குக் கான்ஸ்டான்டிநோப்பிள் வேண்டாம். நாங்கள் வீடு செல்ல விரும்புகிறோம். மற்றவர்கள் எங்கள் நிலத்தை எங்களிடமிருந்து பறித்துக்கொள்வதை நாங்கள் விரும்பவில்லை. மற்றவர்களுடைய நிலத்தை அவர்களிடமிருந்து பறித்துக்கொள்வதற்காகப் போரிடவும் நாங்கள் மாட்டோம்.''

அப்படியே போரிடும் விருப்பம் இருந்தாலுங்கூட, எதைக் கொண்டு அவர்கள் போரிட முடியும்? டியூட்டன் வீரர்களின் பழைய நகரமான வெண்டனில் நிலைகுலைந்து போயிருந்த சைனியத்தின் நடுவே நாங்கள் தங்கவைக்கப் பட்டோம். கருண்ட வானிலிருந்து பெய்த சோனாமாரி பாதைகளை ஆறுகளாக்கி, படைவீரர்களின் இதயங்களை உணர்ச்சி அற்றவை ஆக்கி விட்டது. எலும்பும் தோலுமாக இருந்த சடலங்கள் காப்பகழ்களிலிருந்து எழுந்து எங்களை உறுத்து

நோக்கின. பஞ்சத்தில் அடிபட்ட வீரர்கள் டர்னிப் வயல்களில் புகுந்து டர்னிப் கிழங்குகளைப் பச்சையாகத் தின்றதை நாங்கள் கண்டோம். அரிதாட்கள் குச்சி குச்சியாக நீட்டிக் கொண்டிருந்த வயல்களில் படைவீரர்கள் வெறுங்கால்களுடன் நடந்ததையும், கோடைகால உடுப்புக்கள் பனிக்காலத் தொடக்கத்தில் வந்து சேர்ந்ததையும், குதிரைகள் வயிறு வரை சேற்றில் புதைந்து மடிந்து விழுந்ததையும் நாங்கள் பார்த்தோம். படையணிகளுக்கு மேலே பகைவர்களின் கவச விமானங்கள் ஒவ்வொரு நடவடிக்கையையும் துணிச்சலுடன் நோட்டமிட்டுக் கொண்டிருந்தன. விமானந்தாக்கிப் பீரங்கிகளோ, உணவோ, உடைகளோ இல்லை. எல்லாவற்றுக்கும் மகுடம் வைத்தது போல, தங்கள் மேலதிகாரிகள் மேல் படைவீரர்களுக்கு நம்பிக்கை இல்லை.

இராணுவ அதிகாரிகளோ அரசாங்கமோ தங்களுக்காக எதுவும் செய்ய விரும்பவோ செய்யும் திறன் கொண்டிருக்கவோ இல்லை என்பதனால் படைவீரர்கள் தங்கள் காரியங்களைத் தாங்களே செய்துகொண்டிருந்தார்கள். எங்கும், காப்பகழ்களிலும் பீரங்கி இடங்களிலுங்கூட, சோவியத்துக்கள் நிறுவப்பட்டுக் கொண்டிருந்தன. இங்கே, வெண்டன் நகரில் மூன்று சோவியத்துக்கள் இருந்தன (''இஸ்கோசோல்'', ''இஸ்கோலாத்'', ''இஸ்கோஸ்த்ரேல்'').*

கடைசியாகக் குறிக்கப்பட்ட லாட்வியத் துப்பாக்கி வீரர்கள் சோவியத்தின் விருந்தினராக இருந்தோம் நாங்கள். இந்த வீரர்கள் யாவரிலும் அதிகப் படிப்பாளிகள், வீரம் நிறைந்தவர்கள், புரட்சி ஆவேசம் மிக்கவர்கள். ஜெர்மன் விமானங்களிலிருந்து காப்புக்காக மரங்களின் மறைவு கொண்ட ஒரு பள்ளத்தாக்கில் அவர்கள் கூட்டம் நடத்தினார்கள். பத்தாயிரம் பழுப்பு இராணுவ உடைகள் கூதிர் காலப் பழுப்பு இலைகளுடன் ஒன்றிக் கலந்தன. மேலே அபாயம் இருந்ததையும் பொருட்படுத்தாமல் அவர்கள்

---

*''இஸ்கோசோல்''—12ம் சேனையின் லாட்வியப் பிரிவுகளின் படைவீரர்களது நிர்வாகக் கமிட்டி; ''இஸ்கோலாத்''—லாட்வியாவின் ஐக்கிய சோவியத்துக்களின் நிர்வாகக் கமிட்டி; ''இஸ்கோஸ்த்ரேல்''—லாட்வியத் துப்பாக்கி வீரர்கள் சோவியத்தின் நிர்வாகக் கமிட்டி.

கேரென்ஸ்கியின் பெயர் உச்சரிக்கப்பட்ட போதெல்லாம் பொங்கிச் சிரித்தார்கள், சமாதானம் என்ற சொல்லைக் கேட்ட போதெல்லாம் இடி முழக்கம் போலக் கைதட்டினுர்கள்.

''நாம் கோழைகளோ துரோகிகளோ அல்ல. ஆனுல் எதற்காகப் போரிடுகிறேம் என்பது தெரியும்வரை போரிட நாம் மறுக்கிறேம். இது ஜனநாயகத்திற்கான போர் என்று நம்மிடம் கூறப்படுகிறது. நாம் இதை நம்பவில்லை. நேச நாட்டினர் ஜெர்மானியர் போலவே பிறநாடுகளைக் கைப் பற்றுபவர்கள் என்று நாம் நம்புகிறேம். தாங்கள் அத்தகை யவர்கள் அல்ல என்பதை அவர்கள் காட்டட்டும். இரகசிய உடன்படிக்கைகளை அவர்கள் வெளியிடட்டும். தான் ஏகாதி பத்தியவாதிகளுடன் நெருங்கிய உறவு கொண்டிருக்கவில்லை என்பதைத் தாற்காலிக அரசாங்கம் நிரூபிக்கட்டும். அப்போது நாம் கடைசி வீரன் வரை போர்க்களத்தில் உயிர்களை வழங்குவோம்'' என்று பேசினுன் அவர்களுடைய பிரதிநிதி.

மாபெரும் ருஷ்யச் சேனைகளின் தோல்விக்கு இதுதான் மூலகாரணம். போரிடுவதற்கான சாதனங்கள் இல்லாதது அல்ல, போரிடுவதற்கான நோக்கம் இல்லாததே தோல் விக்கு முதன்மைக் காரணம்.

தொழிலாளர்களின் பக்கபலத்துடன் படைவீரர்கள் போரை நிறுத்திவிடத் தீர்மானித்துவிட்டார்கள்.

வெற்றி வீரனின் கதி

நேசநாட்டினரதும் இராணுவத் தலைமைக் காரியா லயத்தினதும் பின்பலத்துடன் பூர்ஷ்வாக்கள் போரைத் தொடர்ந்து நடத்துவது என்று உறுதி கொண்டிருந்தார்கள். போரைத் தொடர்ந்து நடத்துவதால் பூர்ஷ்வாக்களுக்கு மூன்று வகைகளில் லாபம் கிடைக்கும்: (1) இராணுவக் குத்தகை ஒப்பந்தங்களின் வாயிலாக அது அவர்களுக்கு ஏராளமான லாபங்களைத் தொடர்ந்து அளித்துவரும்; (2) வெற்றி ஏற்பட்டால் டார்டனல்ஸ் ஜலசந்தியும் கான்ஸ் டான்டிநோப்பிளும் கொள்ளையில் பங்காக அவர்களுக்குக் கிடைக்கும்; (3) நிலத்திற்காகவும் தொழிற்சாலைகளுக்காக

வும் பொது மக்களின் மேலும் மேலும் பிடிவாதமாகிக் கொண்டு வரும் கோரிக்கைகளைத் தள்ளிப் போடுவதற்கு அதனுல் அவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும்.

ருஷ்யப் பேரரசி யெக்காத்தெரீனுவின் அறிவுரையையே அவர்கள் கடைப்பிடித்தார்கள். யெக்காத்தெரீனு சொன்னுள்: ''மக்களின் அதிக்கிரமிப்பில் இருந்து நமது பேரரசைக் காப்பதற்கான வழி போரில் ஈடுபடுவதும் அதன் மூலம் சமுதாய விளைவுகளின் இடத்தில் தேசீய ஆவேச உணர்ச்சிகளை மேலெழச் செய்வதுமே.'' இப்போது ருஷ்யப் பொதுமக்களின் சமுதாய விளைவுகள் நில, மூலதன முதலாளித்துவப் பேரரசுகளை அபாயத்துக்கு உள்ளாக்கிக் கொண்டிருந்தன. ஆனுல் போர் தொடர்ந்து நடந்தால் பொதுமக்களுடன் கணக்கு தீர்ப்பதற்கான நாள் தள்ளிப்போடப்படும். போரைத் தொடர்ந்து நடத்துவதில் ஈடுபடுத்தப்படும் சக்தி புரட்சியை நடத்துவதற்குப் பயன்படுத்தப்பட முடியாது. ''வெற்றிகரமான முடிவுவரை போரைத் தொடர்ந்து நடத்துவோம்!'' என்பது பூர்ஷ்வாக்களின் புத்தணி திரட்டும் கோஷம் ஆகிவிட்டது.

ஆனுல் கேரென்ஸ்கிய் அரசாங்கத்தால் படைவீரர்களை இப்போது கட்டுப்படுத்த முடியவில்லை. உணர்ச்சி பொங்கும் இந்த வாய்வீச்சாளனின் சொல்வன்மை படைவீரர்களை இப்போது பாதிக்கவே இல்லை. எனவே பூர்ஷ்வாக்கள் ஒரு வாள்வீச்சாளனைத் தேடுவதில் முனைந்தார்கள்.... ''புரட்சிகர அபத்தம் எதையும் பொறுக்காதவனும் இரும்புக் கையால் ஆள்பவனுமான வலிய மனிதன் ருஷ்யாவுக்கு வேண்டும். ஒரு சர்வாதிகாரியைத் தேடிப்பிடிப்போம்'' என்றுர்கள் அவர்கள்.

. தமது ''வெற்றி வீரனுக அவர்கள் கஸாக்கிய ஜெனரல் கர்னீலவைப் பொறுக்கி எடுத்தார்கள். மாஸ்கோ மகாநாட்டில் குருதியும் இரும்பும் கொண்ட கொள்கை வேண்டும் என்று கோரியதன் மூலம் இவன் பூர்ஷ்வாக்களின் இதயங்களை ஆட்கொண்டு விட்டிருந்தான். இவன் தானுகவே இராணுவத்தில் மரண தண்டனையைப் புகுத்தியிருந்தான். கீழ்ப்படியாத படைவீரர்களின் பட்டாளங்களை மெஷீன் கன்களால் சுட்டு வீழ்த்தி, வீரர்களின் விறைத்த சடலங்களை

வேலிகளின் ஓரமாக வரிசையாய் நிறுத்தியிருந்தான் இவன். இம்மாதிரித் தீவிர மருந்துதான் ருஷ்யாவின் நோய்களைத் தீர்க்க முடியும் என்று இவன் பிரகடனம் செய்தான்.

செப்டம்பர் 9ந் தேதி கர்னீலவ் பின்வரும் பிரகடனத்தை வெளியிட்டான்:

''நமது மாபெரும் நாடு மடிந்துகொண்டிருக்கிறது. சோவியத்தில் போல்ஷெவிக் பெரும்பான்மையின் வற்புறுத்தல் காரணமாகக் கேரென்ஸ்கிய் அரசாங்கம் ஜெர்மன் இராணுவத் தலைமைக் காரியாலயத்தின் திட்டங்களுக்கு முற்றிலும் இணங்கச் செயல்பட்டு வருகிறது. கடவுளையும் கோயில்களையும் நம்பும் நாம் எல்லோரும் நமது தாய்நாட்டைக் காக்கும் அற்புதத்தை நிகழ்த்துமாறு ஆண்டவனைப் பிரார்த்திப்போமாக.''

போர்முனையிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட 70,000 படைவீரர்களை அவன் திரட்டினான். அவர்களில் பலர் முகம்மதியர்கள்—கர்னீலவின் துர்க்மேனிய மெய்க்காப்பாளர்களும் தாத்தாரியக் குதிரை வீரர்களும் செர்க்கேஸிய மலைவாசிகளும். பெத்ரோகிராத் கைப்பற்றப்பட்டதும், நாஸ்திக சோஷலிஸ்டுகள் பெரும் மசூதியைக் கட்டி முடிக்குமாறு நிர்ப்பந்திக்கப்படுவார்கள், அல்லது சுட்டுக் கொல்லப்படுவார்கள் என்று வாள் பிடிகள் மீது கைகளை வைத்து இராணுவ அதிகாரிகள் சபதம் ஏற்றார்கள். விமானங்கள், பிரிட்டிஷ் கவச மோட்டார்கள், இரத்த வெறி கொண்ட ''காட்டுமிராண்டிகளின் டிவிஷன்'' ஆகியவற்றுடன் கர்னீலவ் கடவுளின் பெயராலும் அல்லாவின் பெயராலும் பெத்ரோகிராத் மீது படையெடுத்து வந்தான்.

ஆனால் அவன் அதைக் கைப்பற்றவில்லை.

சோவியத்துக்களின் பெயராலும் புரட்சியின் பெயராலும் பொதுமக்கள் தலைநகரைத் தற்காப்பதற்கு ஏகமனதாகத் திரண்டு எழுந்தார்கள். கர்னீலவ் துரோகி, சட்ட விரோதி என அறிவிக்கப்பட்டான். ஆயுதசாலைகள் திறக்கப்பட்டன, துப்பாக்கிகள் தொழிலாளர்கள் கைகளில் ஒப்படைக்கப்பட்டன. செங்காவற் படையினர் தெருக்களில் பாரா கொடுத்தார்கள். காப்பகழ்கள் தோண்டப்பட்டன, தடையரண்கள் அவசரமாக நிறுவப்பட்டன. முஸ்லிம் சோஷ

லிஸ்டுகள் ''காட்டுமிராண்டிகளின்'' கர்னீலவ் டிவிஷனுக்குள் குதிரையேறிச் சென்று புரட்சிக்கு எதிராக முன்னேறு திருக்கும்படி மலைவாசிகளை மார்க்ஸின் பெயராலும் முகம் மதின் பெயராலும் வேண்டிக்கொண்டார்கள். அவர்க ளுடைய வேண்டுகோள்களும் வாதங்களும் பயன் விளைத்தன. கர்னீலவின் படைகள் கலைந்து மறைந்துவிட்டன. ஒரு குண்டு கூடச் சுடப்படாமலே ''சர்வாதிகாரி'' சிறை பிடிக்கப்பட் டான். புரட்சி எதிர்ப்பின் ''வெள்ளிய நம்பிக்கை'' புரட்சி யின் தாக்குதல்களுக்குமுன் அவ்வளவு சுளுவாக வீழ்ந்து விட்டதைக் கண்டு பூர்ஷ்வாக்கள் உளம் சோர்ந்தார்கள்.

பாட்டாளிகள் அதே அளவுக்குப் பூரிப்படைந்தார்கள். தங்கள் படைகளின் வலிமையையும் ஒற்றுமையையும் அவர் கள் கண்டார்கள்.

உழைப்பாளி மக்களின் எல்லாப் பகுதிகளையும் ஒன்றி ணைக்கும் ஒருமைப்பாட்டை அவர்கள் மீண்டும் உணர்ந்தார் கள். காப்பகழ்களும் தொழிற்சாலைகளும் ஒன்றையொன்று ஏற்றுப் பாராட்டின. படைவீரர்களும் தொழிலாளர்களும் இந்த விவகாரத்தில் கடற்படை வீரர்கள் ஆற்றிய பெரும் பங்கிற்காக அவர்களைச் சிறப்பாகப் புகழ்ந்து போற்றினர் கள்.

அத்தியாயம் ஐந்து

கடல் தோழர்கள்

பெத்ரோகிராத்மீது கர்னீலவின் படையெடுப்பு பற்றிய செய்தி க்ரோன்ஷ்டாட்டுக்கும் பால்டிக் கடற்படைக்கும் அறிவிக்கப்பட்டதும் அந்தச் செய்தி கடற்படை வீரர்களை இடித் தாக்கு போலத் தட்டி எழுப்பியது. தங்கள் கப்பல் களிலிருந்தும் தீவு அரணிலிருந்தும் அவர்கள் பல்லாயி ரக்கணக்கில் திரண்டு வந்து ''செவ்வாய்க் களத்தில்'' குழு மினார்கள். நகரின் எல்லா முக்கிய மையங்களிலும் ரெயில் பாதைகளிலும் பனிக்கால அரண்மனையிலும் அவர்கள் பாரா கொடுத்தார்கள். பெரிய கடற்படை வீரன் திபேன்கோ வின் தலைமையில் அவர்கள் கர்னீலவின் படைவீரர்கள்

நடுவே நேரடியாகப் புகுந்து, முன்னேறுதிருக்கும்படி அவர்களை வேண்டிக்கொண்டார்கள். புரட்சியைப் பற்றிய அச்சத்தை வெண்படையினரின் உள்ளங்களிலும் புரட்சி ஆவேசத்தையும் உற்சாகத்தையும் தங்கள் செம்படைத் தோழர்களின் இரத்தத்திலும் அவர்கள் புகுத்திஞர்கள்.

ஜூலை மாதம் த்ரோத்ஸ்கிய் அவர்களைப் "புரட்சிப் படைகளின் பெருமை, எழில்!" என்று புகழ்ந்தார். க்ரோன் ஷ்டாட்டில் நிகழ்ந்த சில கலகச் செயல்களுக்காக அவர்கள் நாற்புறமிருந்தும் பழிதூற்றப்பட்ட போது த்ரோத்ஸ்கிய் சொன்ஞர்: "ஆம், ஆஞல் புரட்சி எதிர்ப்பு ஜெனரல் ஒரு வன் புரட்சியின் கழுத்தில் சுருக்கை மாட்ட முயலும்போது, காடெட்டு அதிகாரிகள் சுருக்குக்கயிற்றில் சோப் தடவி அதை வழுவழுப்பாக்கும்போது, கடற்படை வீரர்களோ, நம்முடன் சேர்ந்து போரிடவும் உயிர் துறக்கவும் முன்வருவார்கள்."

கர்னீலவின் இந்தத் துர்ச்சாகசச் செயலின்போது இந்தக் கூற்று உண்மை ஆயிற்று. எப்போதுமே நிலைமை இவ்வாறே இருந்தது. அங்க அசைவுகளில் கடலின் அலையோட்டமும் குருதியில் உப்பங்காற்றின் காட்டமும் கொண்ட இந்த நீலச்சட்டைக்காரர்களை ருஷ்யாவின் எல்லாப் பகுதிகளிலும் நான் சந்தித்திருந்தேன். எங்கும் அவர் கள் சோஷலிஸப் போதனையை விளக்கிப் பரப்பிக்கொண் டிருந்தார்கள். பேச்சு மேடைகளிலும் கடைத்தெருக்களிலும் சோம்பர்களை அவர்கள் செயலுக்குத் தூண்டியதை நான் கேட்டிருந்தேன். தொலைதூரக் கிராமங்களிலிருந்து நகரங் களுக்கு உணவு அனுப்புவதை அவர்கள் தொடங்கிவைக்கக் கண்டிருந்தேன். பின்னர், இராணுவ மாணவர்கள் சோவியத் துக்களுக்கு எதிராகக் கிளர்ச்சி நடத்திய போது, டெலி போன் நிலையத்தைத் தாக்கி இம்மாணவர்களை அவர்க ளுடைய காப்பிடங்களிலிருந்து வெளிக்கிளப்பிய தாக்குப் படைக்குக் கடற்படைவீரர்கள் தலைமை தாங்கி நடத்தியதை நான் கண்டேன். புரட்சிக்கு வரும் ஆபத்தை எல்லாருக்கும் முன்னதாக உணர்ந்தவர்கள், புரட்சியைக் காப்பதற்கு முதன்முதலில் விரைந்தவர்கள் எப்போதும் அவர்களே.

கடற்படை வீரனுக்குப் புரட்சி விலைமதிப்பற்றதாக இருந்தது, ஏனெனில் சென்ற காலத்திலிருந்து அது

ஜார் மூன்றும் அலெக்ஸாந்தரின் சிலை
பெயர்த்து அகற்றப்படுதல்

அவனுக்கு விமோசனம் அளித்தது. அந்தச் சென்ற காலமோ பயங்கரக் கனவு போன்றது. பழைய ருஷ்யக் கடற்படை அதிகாரிகள் பிரத்தியேகமாகச் சலுகைபெற்ற வகுப்பிலிருந்தே வந்தார்கள். கண்டிப்பான ஒழுங்கை அல்ல, எதேச்சாதிகாரமான சொந்த ஒழுங்கை அவர்கள் சுமத்தினர்கள் என்பதே அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டு. சில்லறை அதிகாரிகளின் திடீர்ப் போக்குகள், பொருமைகள், வெறிக் கோபம் ஆகியவற்றின் தயவில் இருந்தது கடற்படை வீரனின் நலம். இந்த அதிகாரிகளேயோ அவன் மனமார வெறுத்தான். கடற்படைவீரன் நாய்போல நடத்தப்பட்டான். ''நாய்களுக்கும் கடற்படை வீரர்களுக்கும்'' என்ற அடையாளப் பலகைகளால் அவன் அவமதிக்கப்பட்டான்.

தரைப்படை வீரன் போலவே கடற்படை வீரனும் தன் மேலதிகாரியின் கட்டளைகளுக்கு மூன்றே சொற்றொடர்களில் விடைகள் அளித்தான்: ''அப்படியே ஆகட்டும்'', ''இல்லவே இல்லை'', ''முயல்வதற்கு மகிழ்கிறேன்.'' இவை ஒவ்வொன்றுடனும் ''மேன்மை தங்கிய பிரபுவே'' என்ற விளிச் சொற்களும் கூறப்பட்டன. அவன் மேற்கொண்டு ஏதேனும் சொன்னுல் முகத்தில் விழும் அடி. மிக மிக அற்பக் குற்றத்துக்கும் மிக மிகக் கடுமையான தண்டனை விதிக்கப்பட்டது. நான்கு ஆண்டுகளில் 2,527 பெயர் கொல்லப்பட்டார்கள், அல்லது திருத்தச் சிறைக்கோ கடுங்காவல் முகாம்களுக்கோ அனுப்பப்பட்டார்கள். இவை எல்லாம் ஜாரின் பெயரால் செய்யப்பட்டன.

இப்போது ஜார்கள் ஒழிந்துவிட்டார்கள்; அவர்களுடைய பெயர்களே அழிக்கப்பட்டு வந்தன. புதிய குடியரசு முறைக்கு ஏற்பக் கப்பல்களின் பெயர்கள் மாற்றப்பட்டன.

இதன்படி பேரரசன் முதலாவது பாவெல் என்ற கப்பல் குடியரசு ஆயிற்று. பேரரசன் இரண்டாவது அலெக்ஸாந்தர், விடுதலை வைகறை என்ற புதுப் பெயர் பெற்றது. பழைய எதேச்சாதிகாரிகள் தங்கள் கல்லறைகளில் துடித்துப் புரளும்படி செய்வதற்குப் போதிய புரட்சி இந்தச் செயலில் இருந்தது. இன்னும் உயிருடன் இருந்த ஜாருக்கும் அவனது மகனுக்குமோ இது மேலும் வேதனை அளித்தது. ஜாரேவிச் (இளவரசன்) என்ற கப்பல் குடிமகன் என்று பெயர் சூட்டப்பட்டது. இரண்டாவது நிக்கொலாய் என்ற

கப்பலோ, தோழன் என்ற நல்ல கப்பலாக மறு பெயர் புனைந்தது. தோழன்! தாபோல்ஸ்க்கில் சிறைவைக்கப்பட்டிருந்த இந்த முன்னாள் ஜார், மிக அற்பக் கரி தள்ளுபவன் கூட இப்போது தோழன் என்பதை அறிந்திருந்தான்.

இந்தப் புதுப் பெயர்கள் கடற்படை வீரர்களின் ரிப்பன்கள் சுற்றிய பகட்டான தொப்பிகள்மீது காட்சி தந்தன. கடற்படை வீரர்களோ, விடுதலை, தோழமை, குடியரசு இவற்றின் பிரசாரகர்களாக எங்கும் தோற்றம் அளித்தார்கள்.

கப்பல்களின் பெயர்களில் இந்த மாறுதல்களைச் செய்வது மிக எளிதாக இருந்தது. ஆயினும் இவை வெறும் மேற்பரப்பில் மட்டும் நிகழ்ந்த மாற்றங்கள் அல்ல. எதார்த்தத்தில் நேர்ந்த மாறுதல்களை இவை குறித்தன. உள்ளார்ந்த ஆன்மீக உண்மைக்கு—ஒரு பெரிய கடற்படை ஜனநாயக அமைப்புக்கு உள்ளாக்கப்பட்டதற்கு—வெளிப்படையான, தென்படும் சின்னங்களாக விளங்கின இவை.

கடற்படை வீரர்கள் கப்பற்படையை ஆள்கிறார்கள்

கடற்படை வீரனுடன் அவனது சொந்த இடத்தில் நான் முதன்முதல் தொடர்பு கொண்டது செப்டம்பர்

ஜாராட்சி வீழ்ந்துவிட்டது

மாதத்தில். பெத்ரோகிராதின் கடல் வழியில் பால்டிக் கப்பற்படை தடை அரண் போன்று நின்ற ஹெல்ஸிங்போர்ஸ் என்னும் இடத்தில் இந்தத் தொடர்பு ஏற்பட்டது. துறை முகத்தில் கட்டப்பட்டு நின்றது முன்னாள் ஜாரின் உல்லாசக் கப்பல் துருவ நட்சத்திரம். எங்கள் வழிகாட்டியான முதிய முன்னாள் அதிகாரி கப்பலைச் சுற்றி அமைந்திருந்த மஞ்சள் மரச் சட்டத்தைக் காட்டினான்.

''இந்தச் சட்டம் சிறந்த நூக்கு மரத்தால் ஆனது'' என்று எங்களிடம் கிசுகிசுத்தான் அவன். ''இருபத்தையாயிரம் ரூபிள் விலையுள்ளது அது. இந்தப் பாழும் போல்ஷெவிக்குகள் இப்போது அதை மெருகு அழியாமல் வைத்திருக்கச் சோம்புகிறார்கள். எனவே அதற்கு மஞ்சள் சாயம் பூசிவிட்டார்கள். என் காலத்தில் கடற்படை வீரன் கடற்படை வீரன்தான்; சுறண்டித் தேய்ப்பதும் மெருகிடுவதும் தன் வேலை என அவன் அறிந்திருந்தான், அந்த வேலையைக் கவனமாகச் செய்தான். அவன் செய்யாவிட்டால் நாங்கள் அவனை அடித்து வீழ்த்திவோம். இப்போதோ, சைத்தான் அவர்களை ஆட்டிவைக்கிறான். நீங்களே பாருங்களேன்! ஜாருக்கே சொந்தமான இதே உல்லாசக் கப்பலில் சாதாரணக் கடற்படையினர் கப்பல்களையும் கப்பற்படையையும் நாட்டையும் நிர்வகிப்பதற்கான சட்டங்கள் இயற்றிக் கொண்டிருக்கிறார்கள். அத்துடன் அவர்கள் நின்றுவிடவில்லை. உலகையே நிர்வகிப்பது பற்றி அவர்கள் பேசுகிறார்கள். சர்வதேசியவாதம், ஜனநாயகம் என்று அவர்கள் இதை அழைக்கிறார்கள், ஆனால் இது அப்பட்டமான தேசத்துரோகம், பைத்தியக்காரத்தனம் என்கிறேன் நான்.''

பழைய அரசாங்க முறைக்கும் புதிய முறைக்கும் நடந்து கொண்டிருந்த தகராறு சுருக்கமாக இதுதான். பழைய முறையில் ஒழுங்கும் கட்டுப்பாடும் மேலிருந்து சுமத்தப் பட்டன. புதிய முறையிலோ, சாதாரணப் படைவீரர்களிடம் இருந்தே அவை தோன்றின. பழையது அதிகாரிகளின் கப்பற்படை. புதியதோ கடற்படை வீரர்களின் கப்பற்படை. இந்த மாறுதலில் புதிய மதிப்புக்களின் தொகுதி உண்டாக்கப்பட்டிருந்தது. ஜனநாயகத்தையும் சர்வதேசிய வாதத்தையும் பற்றிய கடற்படை வீரனின் அறிவுக்கு மெரு

கேற்றுவது பித்தளைக்கும் நூக்குமரச் சட்டத்துக்கும் மெரு கேற்றுவதை விட இப்போது உயர்வாக மதிக்கப்பட்டது.

ரஸ்பூத்தினும் அவனுடைய கூட்டாளிகளும் ஒரு காலத்தில் கேளிக்கை நடத்திய துருவ நட்சத்திரம் என்ற கப்பலின் படிகளில் நாங்கள் ஏறியபோது புதிய கப்பற்படையின் உணர்ச்சிக்கு இரண்டாவது அறிகுறி எங்களுக்குத் தெரியவந்தது. அமெரிக்கப் பத்திரிகை நிருபரான பெஸ்ஸி பீட்டி என்ற பெண்மணியிடம், கப்பல்களில் மாதர்கள் அனுமதிக்கப்படுவதில்லை என ஆழ்ந்த முறையில் அறிவிக்கப் பட்டது. கடற்படை வீரர்களின் சோவியத்தினது புதிய விதிகளில் இது ஒன்று. காப்டன் மரியாதை உள்ளவன், தங்கச் சரிகையால் அவனது உடுப்பு பெரிதும் அணி செய்யப்பட்டிருந்தது, ஆனால் அவனால் ஒன்றும் செய்ய இயலவில்லை.

''நான் ஒன்றுமே செய்ய முடியாது. எல்லாம் 'கமிட்டி' யின் கைகளில் இருக்கிறது'' என்று ஏக்கத்துடன் விளக்கினான் அவன்.

''ஆனால் கப்பற்படையைப் பார்ப்பதற்காக இவள் பதினாயிரம் கிலோமீட்டர்கள் பயணம் செய்து வந்திருக்கிறாள்.''

''நல்லது, கமிட்டி என்ன சொல்கிறது என்று பார்க்கலாம்'' என்றான் காப்டன்.

நாங்கள் அனுப்பிய ஆள் கமிட்டியின் விசேஷ அனுமதி பெற்று வந்தான், நாங்கள் மீண்டும் மேலே சென்றோம். எல்லா இடங்களிலும் கடற்படையினர் எங்கள் கோஷ்டியில் ஒரு பெண் இருப்பதற்கு ஆட்சேபம் தெரிவித்தார்கள். ''கமிட்டியின் விசேஷ அனுமதியுடன்'' என்று காப்டன் விவரித்ததும் அவர்கள் கீழ்ப்படிந்தார்கள்.

''ஸெண்ட்ரோபால்ட்'' என்று அழைக்கப்பட்ட இந்த பால்டிக் கடல் மத்தியக் கமிட்டி பெரிய சிங்கார அறையில் அமர்ந்திருந்தது. அது கப்பல்களின் சோவியத் மட்டுமே. 1,000 கடற்படை வீரர்கள் கொண்ட ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு பிரதிநிதி கமிட்டியில் இருந்தான். கமிட்டியின் மொத்த உறுப்பினர்கள் 65 பெயர். இவர்களில் 45 பெயர் போல்ஷெவிக்குகள். நிர்வாக, அரசியல், போர், கப்பல் என்ற நான்கு பொதுப் பிரிவுகள் கப்பற்படை விவகாரங்கள் எல்லாவற்றையும் நிர்வகித்தன. காப்டனுக்கு முன்னாள்

சிற்றரசர்கள் அறைகளில் ஒன்று கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் பெரிய சிங்கார அறைக்குச் செல்ல அவன் அனுமதிக்கப்படவில்லை. நல்ல வேளையாக எனது நற்சான்றுகள் கமிட்டிக்கும் சிங்கார அறைக்கும் செல்வதற்கான மந்திரச் சொல்லாகப் பயன்பட்டன.

வரலாற்றின் முரண்நகை! இங்கே, இதே நாற்காலிகளில், சில மாதங்களுக்கு முன்பு, மத்தியகால எதேச்சாதிகாரி ஒருவன் தன் சீமாட்டிகளுடனும் ஏவலர்களுடனும் சாய்ந்து கிடந்தான். இப்போதோ, வெண்கல நிறப் பெரிய மேனியரான கடற்படையினர் இவற்றில் அமர்ந்து, மிக முன்னேறிய சோஷலிஸம் பற்றிய பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து தீர்த்துக்கொண்டிருந்தார்கள். சிங்கார அறை செயலுக்கு ஏற்றவாறு துப்புரவாக்கப்பட்டிருந்தது. பியானோவும் பல அலங்காரப் பொருள்களும் காட்சிச்சாலையில் வைக்கப்பட்டுவிட்டன. மேஜைகளும் சாய்விருக்கைகளும் பழுப்புக் கித்தான் துணிகளால் மூடப்பட்டிருந்தன. ஆடம்பர வரவேற்பறை இப்பொழுது தொழிற்கூடமாக விளங்கியது. சட்டம் இயற்றுவோராகவும் இயக்குநராகவும் குமாஸ்தாக்களாகவும் திடீரென மாறியிருந்த சாதாரணக் கடற்படை வீரர்கள் இங்கே கடும் உழைப்பில் முனைந்திருந்தார்கள். இந்தப் புதிய பாத்திரத்தில் அவர்கள் ஓரளவு தடுமாற்றம் அடைந்திருந்தார்கள், எனினும் விடாப்பிடியான தீவிரத்துடன், நாள்தோறும் பதினாறு மணிநேரம் வேலை செய்தவாறு மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள். ஏனெனில் ஒரு கருத்தினால் ஆட்கொள்ளப்பட்டிருந்த கனவுகாண்போர் அவர்கள். இந்தக் கருத்தின் முனைப்பும் வீச்சும் பின்காணும் வரவேற்புப் பத்திரத்தில் தென்படுகின்றன:

அமெரிக்கச் சமுதாய ஜனநாயகத்தின்
பிரதிநிதி ஆல்பர்ட் வில்லியம்ஸுக்கு,
அவரது வாழ்த்துரைக்குப் பதிலாக

பால்டிக் கப்பற்படைப் பிரதிநிதிகளின் வடிவில் ருஷ்ய ஜனநாயகம் எல்லா நாடுகளின் பாட்டாளிகளுக்கும் உளமார்ந்த வாழ்த்தும் எங்கள் அமெரிக்கச் சகோதரர்களின் வாழ்த்துக்கு மனப்பூர்வமான நன்றியும் தெரிவிக்கிறது.

கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக, கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனல் என்ற ஒரே குடும்பத்தின் புதல்வர்களது இரத்தத்தால் பால்டிக் கடல் செவ்வண்ணம் ஏற்றப்பட்டிருக்கிறது. இந்தக் கடலின் குளிர் அலைகள் மீது நிற்கும் எங்களிடம் பறந்து வந்திருக்கும் முதலாவது தகைவிலான் குருவி தோழர் வில்லியம்ஸ்தாம்.

கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலினது செம்பதாகையின் கீழ் எல்லோரையும் ஒன்று சேர்க்க ருஷ்யப் பாட்டாளிகள் தங்கள் இறுதி மூச்சுவரை முயல்வார்கள். புரட்சியைத் தொடங்குகையில் அரசியல் புரட்சியை மட்டுமே நாங்கள் கருத்தில் கொள்ளவில்லை. சமுதாயப் புரட்சியை நிகழ்த்துவது உண்மையான விடுதலைப் போர்வீரர்கள் அனைவரதும் கடமை ஆகும். ருஷ்யக் கப்பற்படையின் மாலுமி வீரர்கள், தொழிலாளிகளின் வடிவில் புரட்சியின் முன்னணிப் படை, இதன் பொருட்டு இறுதிவரை போரிடும்.

ருஷ்யப் புரட்சிச் சுவாலை உலகம் முழுவதும் பரவி எல்லா நாடுகளின் தொழிலாளர்களுடைய இதயங்களிலும் நெருப்பை மூட்டிவிடும் என்றும் விரைந்த உலகச் சமாதானத்திற்கான எங்கள் போராட்டத்தில் எங்களுக்கு ஆதரவு கிடைக்கும் என்றும் நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

அமெரிக்காவுக்குச் செல்லவும், ஜாரிஸத்தின் நுகத்தில் ருஷ்யா பட்ட துன்பங்களையும் மக்களது விடுதலைக்கான போராட்டத்தின் பதாகை பறக்கவிடப்பட்டுள்ள இந்தச் சமயத்தில் அது கொண்டுள்ள உணர்ச்சிகளையும் அமெரிக்கர்களுக்கு எடுத்துக் கூறவும் வாய்க்கும் நேரத்தைச் சுதந்திர பால்டிக் கப்பற்படை ஆவலுடன் எதிர்நோக்கியிருக்கிறது.

அமெரிக்கச் சமுதாய ஜனநாயகம் நீடூழி வாழ்க.
எல்லா நாடுகளின் பாட்டாளிகளும் நீடூழி வாழ்க.
கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனல் நீடூழி வாழ்க.
உலகச் சமாதானம் நீடூழி வாழ்க.

பால்டிக் கடற்படையின்
மத்தியக் கமிட்டி,
நான்காவது கூட்டம்

எனக்கு இந்த வரவேற்புப் பத்திரத்தை நல்லெண்ணத்துடனும் நட்புடனும் எழுதிய இதே மேஜைமேல் இந்தக் கடற்படை வீரர்கள் தங்கள் பேனாக்களைக் கந்தகத்

திராவகத்தில் முக்கி இன்னொரு கடிதம் எழுதினார்கள். இந்தக் கடிதம் அவர்களது தலைமைச் சேனாதிபதி கேரென்ஸ்கிய்க்கு விலாசமிடப்பட்டிருந்தது. கர்னீலவ் குழப்பத்தில் தன் பங்குக்குச் சமாதானம் கூறக் கேரென்ஸ்கியால் முடியவில்லை. அதோடு கடற்படை வீரர்களை அவமதிக்கும் வகையில் அப்போதுதான் அவன் சில வார்த்தைகள் சொல்லியிருந்தான். அவனுக்குப் பின்வருமாறு சூடான பதில் கொடுத்திருந்தார்கள் கடற்படையினர்:

' ''சோஷலிஸ்ட்' அரசியல் துர்ச்சாகசக்காரன் கேரென்ஸ்கிய் பூர்ஷ்வாக்கள் சார்பில் வெட்கமற்ற அரசியல் மிரட்டல் வாயிலாக மாபெரும் புரட்சியை உருக்குலைத்து வருகிறான். அவன் அரசாங்கத்திலிருந்து உடனே அகற்றப்பட வேண்டும் என்று நாங்கள் கோருகிறோம்.

''கேரென்ஸ்கிய், புரட்சியின் துரோகியான உனக்கு நாங்கள் எங்கள் சாபங்களை அனுப்புகிறோம். ரீகா வளைகுடாவில் எங்கள் தோழர்கள் மூழ்கி மடிந்துகொண்டிருக்கும் போது, சுதந்திரத்தின் பொருட்டு உயிர் வழங்குவதற்கு, கடலிலோ தடையரண்களிலோ நேர்முகமான போரில் இறப்பதற்கு நாங்கள் அனைவரும் ஒரு முகமாகத் தயாராயிருக்கையில், நீ கடற்படையின் அணிகளை நாசம் செய்ய முயல்கிறாய். நீ பாழாய்ப்போக என்று நாங்கள் சபிக்கிறோம்....''

எனினும் இன்று வீரர்கள் கொண்டாட்ட மனப்பான்மையில் இருந்தார்கள். ரீகா போர்முனையில் இருந்த தங்கள் தரைப்படைவீரத் தோழர்களுக்காகப் பெரு நிதி அப்போதுதான் திரட்டியிருந்ததால் மகிழ்ச்சி கொண்டிருந்தார்கள் அவர்கள். இப்போதோ, தங்கள் முதல் வெளிநாட்டுத் தோழனை உபசரிக்கும் வாய்ப்பு அவர்களுக்குக் கிட்டியிருந்தது. கமிட்டிச் செயலாளன் வழிகாட்டிப் படகில் என்னைக் குடியரசு என்ற தனது போர்க் கப்பலுக்கு அழைத்துச் சென்றான். போர்க் கப்பல் மாலுமிகள் எல்லோரும் மேல்தட்டில் குழுமி, கடலில் எங்கள் வருகையைக் குறித்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள். அதிகாரபூர்வமான வரவேற்புக்குப் பின்பு நான் பேச வேண்டும் என்ற உரத்த கோரிக்கைகள் விடப்பட்டன. அப்போது எனக்குத் தெரிந்த ருஷ்ய மொழி மிக அற்பமே. எனது மொழிபெயர்ப்பாளனுக்கோ ஆங்கிலம் சொற்பந்தான் தெரியும். எனவே நான் வழக்

கில் இருந்த புரட்சிச் சொற்ருெடர்களைக் கையாள நேர்ந் தது. ஆயினும் புதிய போர்க் கோஷங்களை நான் திரும்பக் கூறியதே சோஷலிஸத்தின் இந்தப் புதுச் சீடர்களைக் கவர் வதற்குப் போதுமானவையாக இருந்தது. அயல்நாட்டு ஒலி யழுத்தத்துடன் இந்தக் கோஷங்களை நான் உச்சரித்ததும் எழுந்த கைதட்டல் பேரொலி போர்க்கப்பலின் எல்லாப் பீரங்கிகளிலிருந்தும் எழுந்த வெடியோசை போல எதிரொ லித்தது.

இந்தக் கடலில்தான் கெய்ஸருக்கும் ஜாருக்கும் நிகழ்ந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. பின்லாந்தின் கரை அருகே, இந்தப் போர்க் கப்பலின் காப்டன் மேஜைமீது அமெரிக்கச் சர்வதேசியவாதி யாகிய நான் ருஷ்யச் சர்வதேசியவாதி அவெரீச்கினுடன் இப்பொழுது கைகுலுக்கிய போது எழுந்த கரகோஷத்தை விடக் கெய்ஸர்—ஜார் சந்திப்பின் போது ஏற்பட்ட கை தட்டல் அதிக இடியோசையுடன் முழங்கியிராது (நிச்சயமாக இவ்வளவு சுயமாக எழுந்திராது).

ஒரு கப்பலின் உணவுப் பட்டியலும் ஒரு கிளப்பும் கல்லூரியும்

மேல்தட்டின் மீது அன்புவிருந்துக்குப் பின் நாங்கள் கப் பல் கமிட்டியின் அறைக்குச் சென்ருேம். அமெரிக்கக் கடற் படையைப் பற்றி எண்ணற்ற கேள்விகள் என்னிடம் கேட்கப் பட்டன. ''அமெரிக்கக் கடற்படை அதிகாரிகள் மேல் வர்க்கங் களின் நோக்குநிலையை மட்டுமே பிரதிபலிக்கிருர்களா?'' என்பது முதல் ''அமெரிக்கப் போர்க்கப்பல்கள் எங்களுடைய இந்தக் கப்பல் போன்று இவ்வளவு துப்புரவாக வைக்கப் பட்டிருக்கின்றனவா?'' என்பதுவரை பல வகைக் கேள்விகள். நாங்கள் பேசிக்கொண்டிருக்கையில் முட்டைகளும் இறைச்சி வதக்கலும் எனக்குக் கொண்டுவரப்பட்டன. கமிட்டி உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் பெரிய தட்டில் உருளைக் கிழங்குகள் தரப்பட்டன. வெஞ்சனங்களின் இந்த வேறுபாட் டை நான் சுட்டிக் காட்டினேன்.

''உங்களுக்குத் தரப்பட்டிருப்பது அதிகாரிகளுக்கு

உரிய உணவு. எங்களது மாலுமிகளுக்கு உரியது'' என்று அவர்கள் விளக்கினார்கள்.

''அப்படியானால் நீங்கள் புரட்சி நடத்தியது எதற்காம்?'' என்று கிண்டல் செய்தேன்.

அவர்கள் சிரித்து, ''நாங்கள் எல்லாவற்றையும்விட அதிகமாக விரும்பியது விடுதலை. அதைப் புரட்சி எங்களுக்கு அளித்திருக்கிறது. எங்கள் கப்பல்களுக்கு நாங்களே எஜமானர்கள். எங்கள் சொந்த வாழ்க்கைகளுக்கு நாங்களே எஜமானர்கள். எங்களுக்குச் சொந்தமான நீதிமன்றங்கள் உள்ளன. ஒழிவு நேரத்தில் நாங்கள் கரை செல்ல விடுமுறை பெறலாம். வேலையில் இல்லாதபோது நாங்கள் சாதாரண உடை அணியலாம். புரட்சி எல்லாவற்றையும் தந்து விட வேண்டும் என்று நாங்கள் கோரவில்லை'' என்றார்கள்.

எனினும் தொழிலாளர்களின் உலகு பரவிய எழுச்சி வாழ்க்கையின் தொடக்கத் தேவைகளை மட்டுமே அல்ல, அதன் வசதிகளில் அதிகப் பங்கு பெறுவதற்கான அவர்களது விருப்பத்தையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. ஒரு நாள் ஹெல்ஸிங்போர்ஸ் நகரில் காரில் செல்கையில் வழக்கமாகத் தெருக்களில் உலாவித் திரியும் கடற்படை வீரர்கள் கூட்டங்களைக் காணவில்லை. திடீரென ஒரு கட்டிடத்தின் நேர் எதிரே எங்கள் கார் நிறுத்தப்பட்டது. ஒரு பெரிய நவீன ஹோட்டல் போன்ற அளவும் முகப்பும் கொண்டிருந்தது அது. நாங்கள் உள்ளே புகுந்து இசையினால் வழிகாட்டப்பட்டுச் சாப்பாட்டு ஹாலுக்குள் சென்றோம். அங்கே சிங்காரப் பனைகளால் அலங்கரிக்கப்பட்டு நிலைக்கண்ணாடிகளும் வெள்ளிக் கரண்டிகளும் முட்களும் பளிச்சிட்ட ஓர் அறையில் உணவு கொள்வோர் உட்கார்ந்திருந்தார்கள். அமெரிக்க இசை இயக்குநர் ஒருவரின் தலைமையில் இசைக் குழுவினர் ஷோப்பின், ச்சைக்கோவ்ஸ்க்கிய் ஆகியோரின் படைப்புக்களையும் இடையிடையே அமெரிக்க நீக்ரோப் பாட்டுக்களையும் இசைத்துக் கொண்டிருந்தார்கள். அது முதல் தர ஹோட்டல். ஆனால் பெரிய ஹோட்டலின் வழக்கமான வாடிக்கைக்காரர்கள் ஆகிய பாங்கர்கள், கள்ளவியாபாரிகள், அரசியல்வாதிகள், துணிச்சல் சூழ்ச்சியாளர்கள், சிங்காரச் சீமாட்டிகள் ஆகியோருக்குப் பதிலாக ருஷ்யக்

குடியரசின் போர்க் கப்பற்படையைச் சேர்ந்த வெண்கல நிற வீரர்கள் அதில் நெரிந்தார்கள். கட்டிடம் முழுவதையும் அவர்கள் தங்கள் உபயோகத்துக்காக எடுத்துக் கொண்டிருந்தார்கள். திரைச்சீலைகள் தொங்கிய அதன் ஹால்கள் வழியே சிரித்துக்கொண்டும் வேடிக்கை செய்துகொண்டும் விவாதித்துக்கொண்டும் இருந்த கடற்படை வீரர்கள் நீல உடுப்புக்கள் அணிந்து பெருகினுர்கள்.

வெளியே ''மாலுமிகள் கிளப்பு'' என்ற அடையாளப் பலகையும் ''உலக மாலுமிகள் அனைவருக்கும் நல்வரவு'' என்னும் குறிக்கோள் வாசகமும் பெரிய எழுத்துகளில் பொறிக்கப்பட்டிருந்தன. சந்தாச் செலுத்தும் பத்தாயிரம் உறுப்பினர்களுடன் இது தொடங்கப்பட்டது. இவர்களில் தொண்ணூறு சதவிகிதம் பெயர் எழுத்தறிவு உள்ளவர்கள். கிளப்பில் பெரிதும் பயன்படுத்தப்பட்ட சஞ்சிகைகள் அறை—கருவடிவில் இருந்த நூலகம்—இருந்தது. ''கடற்படை வீரன்'' (மர்யாக்) என்ற சிறந்த சித்திரச் சஞ்சிகையும் அதனுல் வெளியிடப்பட்டது.

மாலுமிகள் ஒரு ''பல்கலைக் கழகத்தையும்'' நிறுவியிருந்தார்கள். மிக மிக ஆரம்ப வகுப்புக்கள் முதல் மிக உயர் வகுப்புக்கள் வரையில் அதில் நடந்துவந்தன. பாடத் திட்டக் கமிட்டியின் தலைவனை அவன் எந்தப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவன் என்று நான் வாய் தவறிக் கேட்டு விட்டேன்.

''பல்கலைக் கழகமோ, பள்ளிக்கூடமோ எதையுமோ சேராதவன் நான்'' என்று அவன் வருத்தத்துடன் பதில் அளித்தான். ''நான் கல்வியறிவு அற்ற மக்களிடையே தோன்றியவன், ஆனுல் நான் புரட்சிக்காரன். நாங்கள் ஜாரை ஒழித்துக் கட்டி விட்டோம், எனினும் அறிவின்மை இன்னும் கொடிய பகைவன். அதையும் நாங்கள் ஒழித்து அகற்றிவிடுவோம். ஜனநாயகக் கப்பற்படையை அமைப்பதற்கு அது ஒன்றுதான் வழி. இப்போது எங்களிடம் ஜனநாயக இயந்திரம் இருக்கிறது. ஆனுல் பெரும்பாலான திகாரிகளுக்கு ஜனநாயக உணர்ச்சி இல்லை. சாதாரணக் டற்படைவீரர்களைப் பயிற்றி அதிகாரிகள் ஆக்குவது எங்களுக்கு அவசியம்'' என்முன். தன்னுடைய வகுப்புக்களை நடத்துவதற்குப் பல்

கலைக் கழகப் பேராசிரியர்களையும் விஞ்ஞானக் கழகங்களைச் சேர்ந்தவர்களையும் சில அதிகாரிகளையும் அவன் அமர்த்தியிருந்தான்.

இந்தப் புது ஒழுங்கும் வசதியும் கப்பற்படையை எவ்வாறு பாதித்திருந்தன? இவ்விஷயத்தில் கருத்துக்கள் வேறுபட்டன. பழைய ஒழுங்கு தகர்க்கப்பட்டதால் தொழில் நுட்பச் செயல்திறன் குறைக்கப்பட்டுவிட்டது என்று பல அதிகாரிகள் சொன்னார்கள். போரினாலும் புரட்சியினாலும் கப்பற்படைக்கு நேர்ந்த கடுஞ்சோதனையைப் பார்க்கும் போது அது சரியான பாங்கிலேயே இருக்கிறது என்று மற்றவர்கள் கூறினார்கள். கப்பற்படையின் உளத்திண்மை வாய்ந்த செயல்திறனுக்கு ஒரு சோதனையாக மோன்ஸூந் தீவுக் கூட்டத்தின் அருகே நடந்த சண்டையை இவர்கள் காட்டினார்கள். ஜெர்மானியர்களைவிடத் தொகையிலும் விரைவிலும் குண்டு வீச்சுத் தொலையிலும் குறைந்திருந்த போதிலும் புரட்சி ஆவேசம் கொண்ட இந்தக் கடற்படை வீரர்கள் பகைவர்களுடன் அற்புதச் சமர் புரிந்தார்கள். அவர்களுடைய போர் உற்சாகம் சிறந்திருந்தது என எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள்.

கப்பற்படை விஷயத்தில் கடற்படை வீரர்கள் கொண்டிருந்த உற்சாகத்தில் சந்தேகமே இல்லை. அது தங்களுக்குக் கூட்டாகச் சொந்தமானது என்ற உணர்ச்சி அவர்களுக்கு இருந்தது. வழிகாட்டிப் படகு என்னை ஏற்றிக்கொண்டு குடியரசில் இருந்து அப்பால் நகர்ந்ததும், அவெரீச்கின் விரிகுடாவில் நின்ற எல்லாச் சாம்பல்நிறக் கப்பல்களையும் ஒரு கைவீச்சால் குறித்து, ''எங்கள் கப்பற்படை! எங்கள் கப்பற்படை! இதை உலகிலேயே தலைசிறந்த கப்பற்படை ஆக்குவோம். இது எப்போதும் நியாயத்தின் பொருட்டுப் போரிடுவதாக!'' என்று ஆர்ப்பரித்தான். பின்பு நீருக்கு உயரே குமைந்த சாம்பல் மூடுபனியின் ஊடாக, உலகப் போரின் செம்மூட்டத்துக்கு அப்பால் பார்வை செலுத்தியவன் போல, ''நாங்கள் சமூகப் புரட்சி செய்து எல்லாப் போர்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்கும்வரை'' என்று மேலும் கூறினான்.

ருஷ்யாவில் இந்தச் சமூகப் புரட்சி விரைவாக வந்து கொண்டிருந்தது. இந்தக் கடற்படை வீரர்கள் வெகு சீக்கிரம் அதன் மையச்சுழலில் விளங்கவிருந்தார்கள்.

இரண்டாம் பாகம்

புரட்சியும் அதையடுத்த நாட்களும்

வெண்படையினருக்கும் செம்படையினருக்கும் இடையே

அத்தியாயம் ஆறு

"எல்லா அதிகாரமும் சோவியத்துக்களுக்கே"

பசித்து உளம் நைந்த ருஷ்யாமீது கவிந்து வந்து கொண்டிருந்தது இன்னொரு பனிக்காலம். அக்டோபரின் கடைசி இலைகள் மரங்களிலிருந்து உதிர்ந்துகொண்டிருந்தன. அரசாங்கத்தின் மீதிருந்த நம்பிக்கையின் கடைசித் துணுக்கும் அவற்றுடன் சேர்ந்து உதிர்ந்துகொண்டிருந்தது.

எங்கும் முரட்டுத் துணிச்சலும் கள்ளவியாபாரத்தின் கோர தாண்டவமும். உணவு ரெயில்கள் சூறையாடப்பட்டன. காகிதப் பணம் அச்சகங்களிலிருந்து வெள்ளங்களாகப் பெருகிக்கொண்டிருந்தது. வழிப்பறிகளையும் கொலைகளையும் தற்கொலைகளையும் பற்றிய செய்திகள் பத்திரிகைகளின் கணக்கற்ற பத்திகளை நிறைத்தன. இரவுக் கேளிக்கைகளும் சூதாட்ட அரங்குகளும் முழு வெறியுடன் இயங்கிக்கொண்டிருந்தன. பெரும் பெரும் பணயங்கள் வெல்லவும் இழக்கவும் பட்டுக்கொண்டிருந்தன.

பிற்போக்கு வெட்ட வெளிச்சமாகவும் இறுமாப்புடனும் ஆட்டம் போட்டது. கர்னீலவ் தேசத்துரோகத்துக்

காக நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுவதற்குப் பதிலாக, மா பெரும் தேசபக்தன் என்று பூர்ஷ்வாக்களால் கொண்டாடப் பட்டான். ஆனால் அவர்களைப் பொறுத்தவரை தேசபக்தி வெறும் ஒப்பனைப் பேச்சு, பாசாங்கு மட்டுமே. ஜெர்மானி யர்கள் வந்து புரட்சியின் சிரமான பெத்ரோகிராதைத் துணித்து வேரறுக்கிவிட வேண்டும் என்று பிரார்த்தித்தார் கள் அவர்கள்.

தூமாவின்* முன்னாள் தலைவன் ரோத்ஸியான்கோ வெட்க மின்றி எழுதினான்: ''ஜெர்மானியர்கள் நகரைக் கைப்பற்றட் டும். கப்பற்படையை அவர்கள் அழித்து விடுவார்கள் என்றாலும் சோவியத்துக்களின் மூச்சை நிறுத்திவிடுவார் கள்.'' ஜெர்மானியர் கைப்பற்றிய பின்பு கட்டண விகிதங்க ளில் மூன்றில் ஒரு பங்கு குறைப்பு செய்வதாகப் பெரிய இன்ஷூரென்ஸ் கம்பெனிகள் அறிவித்தன. ''பனிக்காலம் எப்போதுமே ருஷ்யாவின் சிறந்த நண்பன். இந்தப் பாழாய்ப் போகிற புரட்சியிலிருந்து அது நமக்கு விடுதலை அளிக் கலாம்'' என்றார்கள் பூர்ஷ்வாக்கள்.

மனமுறிவு கிளர்ச்சியைத் தூண்டிவிடுகிறது

சலுகையாளர்களால் போற்றி வரவேற்கப்பட்டு வடக் கேயிருந்து நாடெங்கும் பெருகி வந்த பனிக்காலம் துன்புற்ற பொதுமக்களுக்குப் பெருந்திகில் விளைத்தது. குளிர் நீருறை மட்டத்துக்கு வந்ததும் உணவுப் பொருள்கள், எரிபொருள் கள் ஆகியவற்றின் விலைகள் மளமளவென்று ஏறிவிட்டன. ரொட்டி ரேஷன் குறைந்தது. பனிக்கட்டியாகச் சில்லிட்ட தெருக்களில் இரவு முழுவதும் குளிரில் நடுங்கியவாறு நின்றுகொண்டிருந்த மாதர்களின் வரிசைகள் நீண்டுகொண்டு

---

*அரசாங்க தூமா (1906-17)—வரையறுத்த அதிகாரம் கொண்ட சட்ட சபை. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் உள்ளது. 1905-07ல் நடந்த புரட்சி இயக்கத்தின் வற்புறுத் தல் காரணமாக எதேச்சாதிகார அரசாங்கத்தால் இது ஏற்படுத்தப்பட்டது. உண்மையிலோ அரசாங்க தூமா எதேச் சாதிகாரத்துக்கு பூர்ஷ்வாக்களின் ஆதரவை உறுதிப்படுத் தியது, முழு அரசியல் அதிகாரத்தையும் தன்னிடம் வைத் திருக்க எதேச்சாதிகாரத்துக்கு உதவியது.

‘‘கஸாக்கியப் படைவீரனே, நீ யார் தரப்பில் இருக்கிறாய்? எங்கள் தரப்பிலா, அவர்கள் தரப்பிலா?’’ என்று கூறும் சுவரொட்டி

போயின. கதவடைப்புக்களும் வேலை நிறுத்தங்களும் ஏற்கனவே வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருந்த லட்சோபலட்சம் தொழிலாளிகளின் எண்ணிக்கையை மேலும் அதிகமாக்கின. மக்களது உள்ளங்களில் இருந்த கடுவெறுப்பு கசப்பான பேச்சுக்களில் தழல்வீசி வெளிப்பட்டது. உதாரணமாக வீபர்க் வட்டாரத் தொழிலாளி ஒருவன் பின்வருமாறு பேசினான்:

''பொறுமை, பொறுமை என்று அவர்கள் நமக்கு ஓயாமல் உபதேசம் செய்கிறார்கள். ஆனால் நாம் பொறுமையாக இருக்குமாறு புரிய அவர்கள் என்ன செய்திருக்கிறார்கள்? நாம் உண்பதற்கு ஜார் கொடுத்ததைவிட அதிகமாகக் கேரென்ஸ்கிய் கொடுத்திருக்கிறானா? அதிகச் சொற்களும் வாக்குறுதிகளும் நிச்சயமாகக் கொடுத்திருக்கிறான்! ஆனால் அதிக உணவு—கிடையாது. ஜோடுகளுக்காகவும் ரொட்டிக்காகவும் இறைச்சிக்காகவும் நாம் இரவு முழுவதும் வரிசைகளில் கால்கடுக்க நிற்கிறோம், அதே சமயம் நமது பதாகைகள் மீது 'விடுதலை' என்று மடையர்கள்போல எழுதுகிறோம். நமக்கு உள்ள ஒரே விடுதலை அடிமை வேலை செய்யவும் பட்டினி கிடக்கவும் முன்பு இருந்த அதே விடுதலைதான்.''

மனமுறிவினாலும் ஏமாற்றத்தாலும் உண்டான உள நிலையில் மக்கள் இப்போது முரட்டுத் துணிச்சலுடன், வன்முறையில், கட்டுதிட்டங்களை உடைத்துத் தகர்ப்பவர்களாகச் செயலாற்றினார்கள். முக்கியமானது அவர்கள் செயலாற்றினார்கள் என்பதே.

நகரங்களில் கிளர்ந்தெழுந்த உழைப்பாளிகள் ஆலைச் சொந்தக்காரர்களை அவர்களது அலுவலகங்களிலிருந்து வெளியே துரத்தினார்கள். நிர்வாகிகள் இந்தச் செயலைத் தடுக்க முயன்றார்கள். ஆனால் அவர்களும் தள்ளுவண்டிகளில் தூக்கிப் போடப்பட்டுத் தொழிற்சாலைக்கு வெளியே கொண்டு தள்ளப்பட்டார்கள். இயந்திரங்கள் இயங்காதவாறு செய்யப்பட்டன, கச்சாப்பொருள்கள் பாழாக்கப்பட்டன, இயந்திரத் தொழில் ஸ்தம்பித்துவிட்டது.

இராணுவத்தில் படைவீரர்கள் தங்கள் துப்பாக்கிகளைத் தரையில் எறிந்துவிட்டுப் போர் முனையிலிருந்து லட்சக் கணக்கில் தப்பி ஓடினார்கள். அரசாங்கத்தின் விசேஷ தூதர்கள்

வெறி கொண்டவர்கள் போல வேண்டுகோள்கள் விடுத்து அவர்களை நிறுத்த முயன்றார்கள். நிலச்சரிவை நிற்கும் படி வேண்டிக்கொள்வது போல் இருந்தது அவர்களது முயற்சி. ''சமாதானத்திற்காக நிர்ணயகரமான நடவடிக்கைகள் நவம்பர் முதல் தேதிக்குள் மேற்கொள்ளப்படாவிட்டால் எல்லாக் காப்பகழ்களும் காலியாகி விடும். சேனை முழுவதும் பின்னணிக்குப் பாய்ந்து ஓடிவிடும்'' என்றார்கள் இராணுவத்தினர். கடற்படையில் அதிகாரிகளின் உத்தரவுகள் வெளிப்படையாக மீறப்பட்டன.

நாட்டுப்புறத்தில் குடியானவர்கள் நிலப்பிரபுக்களின் பண்ணைகளை வலுக்கட்டாயமாகக் கைப்பற்றிக் கொண்டார்கள்.

''உங்கள் பண்ணையிலிருந்து குடியானவர்களுக்கு என்ன வேண்டுமாம்?'' என்று நோல்தே பிரபுவைக் கேட்டேன்.

''என் பண்ணையேதான்'' என்றான் அவன்.

''அவர்கள் அதை எப்படிக் கைப்பற்றுவார்கள்?''

''ஏற்கனவே கைப்பற்றிவிட்டார்கள்.''

சில இடங்களில் இந்தக் கைப்பற்றல்களோடு வேண்டுமென்றே அழிவும் விளைக்கப்பட்டது. தம்போவைச் சூழ்ந்துள்ள வானம் எரியும் தீனிப்புல் போர்கள், பண்ணைவீடுகள், இவற்றிலிருந்து எழுந்த சுவாலைகளால் செவ்வொளி திகழ்ந்தது. நிலப்பிரபுக்கள் பெற்றோம் பிழைத்தோம் என்று ஓடினார்கள். அமைதியூட்ட முயன்ற பேச்சாளர்களைச் சீற்றம் அடைந்த குடியானவர்கள் எள்ளி நகையாடினார்கள். ஆத்திரச்செயல்களை அடக்குவதற்காக அனுப்பப்பட்ட துருப்புக்கள் குடியானவர்கள் தரப்பில் சேர்ந்து கொண்டுவிட்டன.

ருஷ்யா அகாதத்தை நோக்கிக் கண்தலை தெரியாமல் விரைந்து கொண்டிருந்தது.

துன்பமும் அழிவும் நிறைந்த இந்தக் காட்சிக்குத் தாற்காலிக அரசாங்கம் எனப்பட்ட ஒரு சில பேச்சாளர்கள் தலைமை வகித்தார்கள். இந்தத் தாற்காலிக அரசாங்கம் அனேகமாகப் பிணம். நேசநாட்டினரின் அச்சுறுத்தல்கள், வாக்குறுதிகள் என்னும் தோலடி ஊசிசெலுத்தல்கள் மூலம் பதனிடப்பட்டுவந்தது. மாவீர வலிமை தேவைப்படும் செயல்களுக்கு முன் அது பச்சைக் குழந்தைபோல

வலிவற்றதாக இருந்தது. மக்களுடைய எல்லாக் கோரிக்கைகளுக்கும் ''பொறுங்கள்'' என்பேத அதனிடம் இருந்த பதில். ''போர் முடியும்வரை பொறுங்கள்'' என்று முதலில் அது கூறிவந்தது. இப்போதோ, ''அரசியல் நிர்ணய சபை கூடும்வரை பொறுத்திருங்கள்'' என்று கூறியது.

ஆனுல் மக்கள் இனியும் பொறுத்திருக்க மாட்டார்கள். அரசாங்கத்தின்மீது இருந்த கடைசித் துளி நம்பிக்கையும் அற்றுப் போய்விட்டது. மக்கள் தங்கள்மீதே நம்பிக்கை கொண்டிருந்தார்கள். செங்குத்துச் சரிவில் இருந்து அழிவிலும் இருளிலும் வீழ்ந்து விடாமல் ருஷ்யாவைக் காப்பாற்றுவது தங்களால் மட்டுமே முடியும் என்ற நம்பிக்கை அது. தாங்களே உருவாக்கிய ஸ்தாபனங்களில் மட்டுமே நம்பிக்கை அது. தங்கள் இடையில் இருந்து உண்டாக்கப்பட்ட புதிய அதிகார ஸ்தாபனத்தை அவர்கள் நம்பிக்கையுடன் நோக்கினுர்கள். சோவியத்துக்களாலேயே விடிவு ஏற்படும் என அவர்கள் நம்பினுர்கள்.

''சோவியத்துக்களே அரசாங்கம் ஆகட்டும்''

கோடையிலும் இலையுதிர்காலத்திலும் சோவியத்துக்கள் இடைவிடாது வளர்ச்சி அடைந்தன. ஒவ்வொரு சமுதாயக் குழுவிலும் இருந்த உயிராற்றல் கொண்ட சக்திகளே அவை தமக்குள் ஈர்த்துக்கொண்டன. மக்களேப் பயிற்றி அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டும் பள்ளிகளாக அவை விளங்கின. ஸ்தல சோவியத்துக்களின் வலேப்பின்னல் நிலேயாகக் கட்டப்பட்ட விரிவான ஸ்தாபனமாக, பழையதன் ஓட்டின் உள்ளே இருந்து வளர்ந்துவிட்ட புது அமைப்பாக நிறுவப்பட்டுவிட்டது. பழைய அரசாங்க இயந்திரம் தகர்ந்து சிதறிக்கொண்டிருந்த சமயத்தில் புதிய இயந்திரம் அதன் செயல்களேத் தானே மேற்கொண்டிருந்தது. சோவியத்துக்கள் பல வழிகளில் ஏற்கனவே அரசாங்கமாகச் செயலாற்றி வந்தன. அவற்றை அரசாங்கம் எனப் பிரகடனம் செய்வது மட்டுமே தேவையாக இருந்தது. அப்போது சோவியத்துக்கள் ஏற்கனவே எதார்த்தத்தில் இருந்தபடியே பெயரிலும் இருக்கும்.

மக்களின் ஆழத்திலிருந்து விறல் மிக்க கோஷம் ஒன்று இப்போது கிளம்பியது: "அரசு அதிகாரம் அனைத்தும் சோவியத்துக்களுக்கே" என்று. ஜூலை மாதம் தலைநகர் விடுத்த கோரிக்கை இப்போது நாடு முழுவதினதும் கோரிக்கை ஆகிவிட்டது. காட்டுத் தீ போன்று அது தேசம் எங்கும் பரவியது. பால்டிக் கப்பற்படை வீரர்கள் கருங்கடலிலும் வெண்கடலிலும் மஞ்சட் கடலிலும் இருந்த தங்கள் தோழர்களுக்கு இந்தக் கோரிக்கையை அறிவித்தார்கள். அவர்களிடமிருந்து இது எதிரொலித்து வந்தது. பண்ணைகளும் தொழிற்சாலைகளும் பாளையங்களும் போர்முனையும் இந்தக் கோஷத்தில் கலந்துகொண்டன. மணிக்கு மணி அதிக உரக்கவும் அதிக வன்மையுடனும் ஒலித்தது இது.

நவம்பர் 5ந் தேதி, ஞாயிறன்று நடந்த அறுபது பிரமாண்டமான கூட்டங்களில் பெத்ரோகிராத் நகரம் இந்தக் கூட்டிசையில் பெரு முழக்கத்துடன் கலந்துகொண்டது. என்னுடைய வாழ்த்துக்களுக்கு பால்டிக் கப்பற்படையினரின் பதிலைப் படித்தபின் த்ரோத்ஸ்கிய் மக்கள் மன்றத்தில் பேசும்படி என்னைக் கேட்டுக்கொண்டார்.

• இங்கே மக்களின் பேரலைகள் கதவுகள்மீது மோதின, உள்ளே குமிழியிட்டுப் பெருகின, நடைகள் வழியே பாய்ந்தன. மக்கள் வெள்ளம் ஹால்களுக்குள் பெருகி அவற்றை முழுவதும் நிறைத்து, தூலங்கள் மீது நூற்றுக்கணக்கில் மோதி அடித்து நுரை மாலைகள் போல அவற்றில் தொங்கிற்று. சுழியிட்டுப் பொங்கிய கூட்டத்திலிருந்து ஒரு இடிக் குரல் எழுந்து வீழலைபோலப் பெரு முழக்கத்துடன் விழுந்து சிதறிற்று. லட்சக்கணக்கான குரல்கள் "தாற்காலிக அரசாங்கம் ஒழிக", "அரசு அதிகாரம் அனைத்தும் சோவியத்துக்களுக்கே" என்று ஆர்த்தன. சோவியத்துக்களுக்காகப் போராடவும் உயிர் வழங்கவும் சபதமேற்று லட்சக்கணக்கான கைகள் உயர்த்தப்பட்டன.

ஏழைகளின் பொறுமை தீர்ந்துவிட்டது. சதுரங்கக் காய்களும் பீரங்கி இரைகளுமாக இருந்த பொதுமக்கள் கிளர்ந்து எழுந்தார்கள்! அறியாமை இருளில் ஆழ்ந்து நெடுங்காலமாகச் செயலற்றிருந்த சாதாரண மக்கள் கடைசியில் விழிப்பு அடைந்து விட்டார்கள். ராஜதந்திரிகளின்

உறுத்த பார்வைக்குப் பணியவோ சொற்செப்படி வித்தைக்கு மயங்கவோ அவர்கள் மறுத்தார்கள். ராஜதந்திரிகளின் அச்சுறுத்தல்களை அவர்கள் இகழ்ந்து ஒதுக்கினார்கள், அவர்களுடைய வாக்குறுதிகளை எள்ளி நகையாடினார்கள், தாங்களே முன்முயற்சியை மேற்கொண்டார்கள், முன்சென்று புரட்சியில் கலந்து கொள்ளுமாறும் இல்லாவிடில் ராஜிநாமா செய்யுமாறும் தங்கள் ''தலைவர்களுக்குக்'' கோரிக்கை விடுத்தார்கள். அடிமைகளும் சுறண்டப்பட்டோரும் முதன்முறையாகத் தங்கள் விமோசனத்தின் நேரத்தை உணர்வு பூர்வமாகத் தெரிந்தெடுத்து உலகின் ஆறில் ஒரு பகுதியுடைய அரசாங்க அதிகாரத்தைத் தாங்களே ஏற்று, கலகக் கிளர்ச்சிக்கு ஆதரவாக வோட்டளித்தார்கள். அரசு விவகாரங்களில் பயிற்சி பெறாத மனிதர்களுக்கு இது பெருத்த துணிகரச் செயல். இந்தப் பெறுப்புக்களை நிறைவேற்ற அவர்கள் போதிய வலிமை கொண்டிருந்தார்களா? நகரில் இப்போது மடை திறந்துவிடப்பட்டிருந்த நீரோட்டங்களைக் கட்டுப்படுத்த அவர்களால் முடியுமா? எவ்வாறாயினும் இந்த மக்கள் தங்களை முற்றிலும் கட்டுக்குள் வைத்திருப்பதைக் காட்டிக் கொண்டுவிட்டார்கள். இரத்தத்தைக் கொந்தளிக்கச் செய்யும் இந்தப் புரட்சிக் கூட்டங்களில் இருந்து அவர்கள் ஒழுங்கான முறையில் வெளியே பெருகினார்கள்.

பாவம், திகிலடித்துப் போயிருந்த பூர்ஷ்வாக்கள் ஒருவாறு நிம்மதி அடைந்தார்கள். எந்த வீடுகளும் சூறையாடப்படவில்லை, எந்தக் கடைகளும் உடைத்துத் தகர்க்கப்படவில்லை, எந்த நல்லுடை அணிந்த கனவான்களும் தெருக்களில் சுட்டு வீழ்த்தப்படவில்லை என்பதை அவர்கள் கண்டார்கள். எனவே எல்லாம் நலமாகவே உள்ளன, கலகக் கிளர்ச்சி நடக்காது என்று பூர்ஷ்வாக்கள் கருதினார்கள். இந்தத் தற்கட்டுப்பாட்டின் உண்மை முக்கியத்துவம் அவர்கள் அறிவுக்கு எட்டவே இல்லை. தனித்தனியான எந்த ஆவேச நிகழ்ச்சிகளிலும் மக்கள் ஈடுபடாதது, தங்கள் சக்திகளை மேலான நோக்கங்களுக்காகப் பயன்படுத்த அவர்களுக்கு வாய்ப்பு இருந்தமையால்தான். மக்கள் வெறும் கலகம் அல்ல, புரட்சி நடத்த ஆயத்தம் செய்துகொண்டிருந்தார்கள். புரட்சிக்கோ, ஒழுங்கும் திட்டமும் உழைப்பும்—மிகக் கடும் தீவிர உழைப்பும்—தேவையாயிருந்தன.

பொது மக்கள் தம் புரட்சியை நடத்துகிறுர்கள்

இந்தக் கிளர்ச்சிக்காரப் பொது மக்கள் வீடுகளுக்குத் திரும்பிக் கமிட்டிகளை நிறுவினுர்கள், பட்டியல்களைத் தயாரித்தார்கள், செஞ்சிலுவைப் பிரிவுகளை அமைத்தார்கள், துப்பாக்கிகளைச் சேகரித்தார்கள். புரட்சிக்கு ஆதரவாக வோட்டளிக்க உயர்த்தப்பட்ட கைகள் இப்போது துப்பாக்கிகளைப் பிடித்திருந்தன. தங்களுக்கு எதிராக இப்போது அணிதிரண்டு கொண்டிருந்த புரட்சி எதிர்ப்புச் சக்திகளை நொறுக்க மக்கள் ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். இராணுவ-புரட்சிக் கமிட்டியின் அலுவலகம் ஸ்மோல்னியில் தான் இருந்தது. அந்தக் கமிட்டியிடமிருந்தே உத்தரவுகள் பெற்றுக்கொண்டிருந்தார்கள் இந்தப் பொது மக்கள். வேறு ஒரு கமிட்டியும் இருந்தது, லட்சோப லட்சம் உறுப்பினர்கள் கொண்ட கமிட்டி, அதாவது பொது மக்கள் தாங்களே. இந்தக் கமிட்டி உட்புகாத சந்துகளோ, பாளையங்களோ கட்டிடங்களோ எவையுமே இல்லை. ''கறுப்பு நூற்றுவர்களின்'' குழுக்களிலும் கேரென்ஸ்கிய் அரசாங்கத்திலும் அறிவுஜீவிகளுக்கு உள்ளேயும் புகுந்துவிட்டது இந்தக் கமிட்டி. கூலிகள், வெயிட்டர்கள், வண்டியோட்டிகள், கண்டக்டர்கள், தரைப்படை வீரர்கள், கடற்படை வீரர்கள் ஆகியோர் வாயிலாக நகர் முழுவதையும் வலைபோன்று உட்படுத்திவிட்டது இது. இவர்கள் எல்லாவற்றையும் கண்டு, எல்லாவற்றையும் கேட்டு, எல்லாவற்றையும் தலைமை அலுவலகத்துக்குத் தெரிவித்தார்கள். இவ்வாறு முன்கூட்டி எச்சரிக்கை பெற்றுத் தலைமை அலுவலகத்தினர் பகைவர்களின் எந்தச் சூழ்ச்சியையும் தடுத்துவிட முடிந்தது. புரட்சியைக் கழுத்தை நெரித்துவிடவோ வேறு வழியில் திருப்பவோ செய்யப்பட்ட ஒவ்வொரு முயற்சியையும் அவர்கள் அக்கணமே முடங்கச் செய்துவிட்டார்கள்.

தலைவர்களைக் கடுஞ்சீற்றத்துடன் தாக்கி மக்களுக்கு அவர்கள்மேல் உள்ள நம்பிக்கையைத் தகர்க்க முயற்சி செய்யப்பட்டது. கேரென்ஸ்கிய் பிரசங்க மேடையிலிருந்து கூச்சலிட்டான்: ''அரசாங்கக் குற்றவாளி லெனின் கொள்ளை

யடிப்பதற்கும்... சுதந்திர ருஷ்யாவின் பெயருக்கு அழியாத வெட்கம் உண்டாக்கும் மிகக் கோரமான படுகொலைகள் செய்வதற்கும் மக்களைத் தூண்டிவிடுகிறான்''. பொது மக்கள் இதற்கு உடனே பதிலளித்துவிட்டார்கள். தலைமறைவாயிருந்த லெனினைப் பெருத்த மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வெளியே கொண்டு வந்து, ஸ்மோல்னியை அவரைப் பாது காக்கும் அரணாக மாற்றியதே அவர்கள் அளித்த பதில்.

இரத்தக் களரியிலும் ஒழுங்கின்மையிலும் புரட்சியை மூழ்கடிக்க முயற்சி செய்யப்பட்டது. கலகக் கிளர்ச்சி செய்யவும் யூதர்களையும் சோஷலிஸ்ட் தலைவர்களையும் கொன்று தீர்க்கவும் மக்களைத் தூண்டின தீய சக்திகள். உடனேயே தொழிலாளர்கள் பின்வரும் வாசகம் பொறித்த சுவரொட்டிகளை நகரின் எல்லாப் பகுதிகளிலும் ஒட்டினார்கள்: ''குடி மக்களே! முழு அமைதியையும் தற்கட்டுப்பாட்டையும் கடைப்பிடிக்குமாறு உங்களைக் கேட்டுக்கொள்கிறோம். ஒழுங்கை நிலைநாட்டும் பொறுப்பு வலிய கரங்களில் இருக்கிறது. கொள்ளையும் துப்பாக்கிப் பிரயோகமும் நிகழ்ந்தால் குற்றவாளிகள் உடனேயே துடைத்து ஒழிக்கப்பட்டுவிடுவார்கள்.''

புரட்சிக்காரர்களின் வெவ்வேறு பிரிவுகளைத் தனித்து ஒதுக்க முயற்சிகள் செய்யப்பட்டன. சோவியத்துக்களுக்கும் பாளையங்களுக்கும் இடையே டெலிபோன் தொடர்புகள் துணிக்கப்பட்டன. உடனேயே டெலிபோனோகிராப் இயந்திரத்தை அமைத்து மீண்டும் செய்திப் போக்குவரத்தை நிலைநாட்டிவிட்டார்கள் தொழிலாளர்கள். இராணுவ மாணவர்கள் பாலங்களின் இணைப்புப் பகுதிகளை மேலே தூக்கி, தொழிலாளி வர்க்க வட்டாரங்களைத் துண்டித்துத் தனிப்படுத்தினார்கள். க்ரோன்ஷ்டாட் கடற்படை வீரர்கள் இணைப்புக்களை மீண்டும் பொருத்திவிட்டார்கள். கம்யூனிஸ்ட் செய்தித்தாள்களின் அலுவலகங்கள் பூட்டி முத்திரையிடப்பட்டன, செய்திகள் வெளிச்செல்வது இவ்வாறு தடுக்கப்பட்டது. செங்காவற் படையினர் முத்திரைகளை உடைத்து அச்சகங்களை மீண்டும் இயங்கச் செய்தார்கள்.

ஆயுத பலத்தால் புரட்சியை நசுக்க முயற்சி செய்யப்பட்டது. ''நம்பத்தகுந்த'' துருப்புக்களை, அதாவது எழுச்சி

செய்யும் தொழிலாளர்களைச் சுட்டு வீழ்த்துவதற்கு நம்பத் தகுந்த துருப்புக்களை நகருக்குள் அழைக்கத் தொடங்கினான் கேரென்ஸ்கிய். விமானந்தாக்கிப் பீரங்கிப் படைப்பிரிவும் சைக்கிள் வீரர் பட்டாளமும் இவற்றில் இருந்தன. இந்தப் படைப்பிரிவுகள் நகருக்குள் முன்னேறி வந்த நெடுஞ்சாலைகள் நெடுகிலும் புரட்சிப் படைகள் நிறுத்தப்பட்டன. இவை பகைவர்களைத் தாக்கின—துப்பாக்கிகளால் அல்ல, கருத்துக்களால். வாதங்களையும் வேண்டுகோள்களையும் பகைத் துருப்புக்கள்மீது சரமாரியாகப் பொழிந்து அவற்றை நிலைகுலையச் செய்தனர் புரட்சிப் படையினர். விளைவாக, புரட்சியை நசுக்குவதற்காக நகருக்குள் விரைவாகக் கொண்டு வரப்பட்ட இந்தத் துருப்புக்கள் புரட்சிக்கு உதவவும் உற்சாகமூட்டவும் உள்ளே வந்தன.

கம்யூனிஸக் கோட்பாட்டின் இந்தத் தீவிர ஆதரவாளர்களுக்கு எல்லாப் படை வீரர்களும், கஸாக்கியர்கள்கூடப் படிந்துவிட்டார்கள். கஸாக்கியர்களுக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: ''சோதரக் கஸாக்கியர்களே! லஞ்சம் வாங்குபவர்கள், ஒட்டுண்ணிகள், நிலப்பிரபுக்கள் ஆகியோரும் எங்கள் புரட்சியை நசுக்க விரும்பும் உங்கள் சொந்தக் கஸாக்கிய ஜெனரல்களும் எங்களுக்கு எதிராக உங்களைத் தூண்டி வருகிறார்கள். கஸாக்கியத் தோழர்களே! சகோதரத் துரோகிகளின் இந்தச் சூழ்ச்சி வலையில் அகப்பட்டுக் கொள்ளாதீர்கள்.'' ஆக, கஸாக்கியர்களும் புரட்சிக் கொடியின் கீழ் அணி திரண்டு விட்டார்கள்.

அத்தியாயம் ஏழு

நவம்பர் 7ந் தேதி*—வரலாற்றில் புதிய நாள்

பூசலிடும் சுற்றுக்காவற்படைகள், வாதிடும் குரல்கள் ஆகியவற்றின் ஆரவாரம் பெத்ரோகிராதில் முழங்கிக்கொண்

*பழைய முறைப்படி 1917, அக்டோபர் 25ந் தேதி.

டிருக்கையில் ருஷ்யாவின் எல்லாப் பகுதிகளிலும் இருந்து மனிதர்கள் நகருக்குள் ஆறுகளாகப் பெருகி வந்தார்கள். சோவியத்துக்களின் இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரஸின் பிரதிநிதிகள் இவர்கள். இந்தக் காங்கிரஸ் ஸ்மோல்னியில் கூடியது. எல்லா விழிகளும் ஸ்மோல்னிய் பக்கம் திரும்பியிருந்தன.

முன்னர் பிரபுவம்ச மகளிருக்கான பள்ளியாக இருந்த ஸ்மோல்னிய் இப்போது சோவியத்துக்களின் கேந்திரமாக விளங்கியது. நெவா ஆற்றின் கரையில் இருந்தது அது. பிரமாண்டமான, கம்பீரத் தோற்றமுள்ள அந்தக் கட்டிடம் பகலில் உணர்வற்றதாக, சாம்பல் நிறத்துடன் காணப்பட்டது. ஆனால் இரவிலோ விளக்குகளின் வெளிச்சத்தால் நூற்றுக் கணக்கான ஜன்னல்கள் ஒளிவீச அது ஒரு பெரிய கோயில் போன்று—புரட்சிக் கோயில் போன்று — உயர்ந்து நின்றது. அதன் புகு மண்டபங்களின் முன் நெடுங்கோட்டுக்கள் அணிந்த படைவீரர்களால் மூட்டப்பட்டிருந்த இரு காவலர் நெகிடிகள் வேதிகை நெருப்புக்கள் போலத் தழல் வீசின. கோடானுகோடி ஏழைகள், ஏதுமற்றவர்களின் நம்பிக்கைகளும் பிரார்த்தனைகளும் இதையே மையமாகக் கொண்டிருந்தன. யுகக்கணக்கான துன்பத்திலும் கொடுங்கோன்மையிலும் இருந்து விடுதலையை அவர்கள் இங்கேயே தேடினார்கள். வாழ்வா சாவா என்பதை முடிவுசெய்யும் விவகாரங்கள் அவர்களுக்காக இங்குதான் தீர்க்கப்பட்டுக் கொண்டிருந்தன.

கந்தல் உடை அணிந்த ஒட்டி உலர்ந்த தொழிலாளி ஒருவன் இருண்ட வீதி வழியே சிரமத்துடன் நடந்து வந்ததை அன்று இரவு நான் கண்டேன். திடீரென அவன் தலையை நிமிர்த்தினான். பெய்து கொண்டிருந்த வெண்பனியில் தங்க ஒளி சுடர்ந்த ஸ்மோல்னியின் பிரமாண்டமான முகப்பு அவன் பார்வையில் பட்டது. தொப்பியைக் கழற்றிவிட்டு, கைகளை முன்னே பரத்தியவாறு வெறுந்தலையுடன் கணப்போது நின்றான். பின்பு "கம்யூன்! மக்கள்! புரட்சி!" என்று கத்திக் கொண்டு முன்னே ஓடி வாயில் வழியே உள்ளே பெருகிக் கொண்டிருந்த கூட்டத்தில் கலந்துவிட்டான்.

போரிலும் வெளிநாடுகளிலும் இருட்சிறைகளிலும் சைபீரியாவிலும் இருந்து ஸ்மோல்னிய்க்கு வந்தார்கள் இந்தப் பிரதிநிதிகள். வருடக் கணக்காகப் பழைய தோழர்கள் பற்றிய தகவல் எதுவுமே கிடையாது. திடீரென அடையாளம் கண்டுகொண்டதைக் காட்டும் கூச்சல்கள், ஒருவரை ஒருவர் பாய்ந்து தழுவிக்கொள்ளல், சில வார்த்தைகள், கணநேர அணைப்பு, பின்னர் மகாநாடுகளிலும் குழுக் கூட்டங்களிலும் முடிவற்ற பொதுக் கூட்டங்களிலும் கலந்துகொள்ள விரைந்த செலவு.

ஸ்மோல்னிய் இப்போது ஒரு பெரிய பேச்சு மன்றமாக விளங்கியது, பிரமாண்டமான கொல்லுலைக் கூடம் போன்று முழங்கிக் கொண்டிருந்தது. சொற்பொழிவாளர்கள் படையில் சேரும்படி மக்களைக் கூவி அழைத்தார்கள், கூட்டத்தினர் சீழ்க்கை அடித்தார்கள், அல்லது தரையைத் தொப்புத் தொப்பென மிதித்தார்கள், அவைத் தலைவர் ஒழுங்கை நிலை நாட்டுவதற்காக மேஜைமேல் கைச்சுத்தியால் அடித்தார், வாயில் காவலர்கள் துப்பாக்கிகளைத் தரையில் ஊன்றினார்கள், மெஷீன்கன்கள் சிமென்டுத் தரையில் தடதடவென்று அதிர்ந்து சென்றன, புரட்சிக் கீதங்கள் கூட்டாக உரக்க இசைக்கப்பட்டன, தலைமறைவு வாழ்க்கையிலிருந்து வெளிப்பட்ட லெனினையும் ஸினோவியேவையும் வரவேற்று இடி அதிர்வது போன்ற மகிழ்ச்சிக் கோஷங்களும் கைதட்டல்களும் முழங்கின.

எல்லாம் தலைதெறிக்கும் வேகத்தில் தீவிரமாக இயங்கின. நொடிக்கு நொடி அவற்றின் தீவிரம் அதிகரித்தது. தலைமை ஊழியர்கள் மின்னுக்கப் பொறிகள் போன்று ஆற்றலே வடிவாக விளங்கினார்கள். உறக்கமோ, களைப்போ, நரம்புச் சோர்வோ அற்ற இந்த அற்புத மனிதர்கள் புரட்சியின் அதி முக்கியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் முனைந்திருந்தார்கள்.

நவம்பர் 7ந் தேதியான இன்று இரவு பத்து நாற்பதுக்குத் தொடங்கவிருந்தது ருஷ்யாவினதும் உலகம் அனைத்தினதும் வருங்காலத்துக்கு அவ்வளவு பெருத்த விளைவுகள் நிறைந்த கூட்டம். கட்சிகளின் குழுக் கூட்டங்களில் இருந்து பிரதிநிதிகள் பெரிய கூட்ட மன்றத்துக்குள் வரிசையாகச்

சென்றார்கள். போல்ஷெவிக் விரோதியும் காங்கிரஸின் தலைவனுமான டான் மேடை மீது நின்று ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக மணி அடித்துவிட்டு, ''சோவியத்துக்களின் இரண்டாவது காங்கிரஸின் முதல்கூட்டம் இப்போது தொடங்குகிறது'' என்று அறிவித்தான்.

காங்கிரஸின் நிர்வாகக் குழு (தலைமைக் குழு)வின் தேர்தல் முதலில் நடந்தது. போல்ஷெவிக்குகளுக்குப் பதினான்கு இடங்கள் கிடைத்தன. மற்ற எல்லாக் கட்சிகளுக்கும் பதினொரு இடங்கள் கிடைத்தன. பழைய நிர்வாகக் குழுவினர் மேடையிலிருந்து அகன்றார்கள். அண்மைக்காலம் வரை ருஷ்யாவின் ஒதுக்கப்பட்டவர்களாகவும் சட்டப் புறம்பானவர்களாகவும் இருந்த போல்ஷெவிக் தலைவர்கள் அவர்களுடைய இடங்களில் அமர்ந்தார்கள். பெரும்பாலும் அறிவுஜீவிகளை உறுப்பினர்களாகக் கொண்ட வலதுசாரிக் கட்சியினர் ஆதாரச் சான்றுகளையும் நிகழ்ச்சி நிரல்களையும் எடுத்த எடுப்பிலேயே தாக்கினார்கள். விவாதமே அவர்களது வலிமை. செயல் தொடர்பற்ற வெற்று விவகாரங்களில் அவர்கள் இன்பம் கண்டார்கள். கோட்பாட்டையும் நிகழ்ச்சி முறையையும் பற்றிய நுட்பமான வாதங்களை அவர்கள் கிளப்பினார்கள்.

அந்தச் சமயத்தில் திடீரென ஓர் இடியதிர்ச்சி நள்ளிரவில் ஏற்பட்டது. பிரதிநிதிகள் அது என்ன என்று வியந்தவாறு திடுக்கிட்டு நின்றார்கள். போர்க் கப்பல் **அரோரா** பனிக்கால அரண்மனைக்கு மேலே சுட்ட பீரங்கி வெடியோசை அது. தொலைவிலிருந்து மந்தணமாக, அமுங்கி ஒலித்த அந்த ஓசை இடைவிடாது வரிசையான தாளக் கிரமத்துடன் வந்தது. பழைய அமைப்பின் சாவுமணி போன்றும் புது அமைப்பின் வாழ்த்து போன்றும் அது ஒலித்தது. ''**அரசு அதிகாரம் அனைத்தும் சோவியத்துக்களுக்கே**'' என்ற கோரிக்கையைப் பிரதிநிதிகளிடம் விடுத்த பொது மக்களின் குரல் முழக்கமே அது. ஆகவே இந்தக் கேள்வி காங்கிரஸிடம் கடுமையாகக் கேட்கப்பட்டது: ''சோவியத்துக்களை ருஷ்யாவின் அரசாங்கம் எனப் பிரகடனம் செய்து புதிய அதிகாரத்துக்குச் சட்ட அடிப்படையை நீங்கள் அளிப்பீர்களா?''

இந்தத் தருணத்தில் வந்தது வரலாற்றின் திடுக்கிடச் செய்யும் முரண்களில் ஒன்று, அதன் மாபெரும் துன்பியல் நிகழ்ச்சிகளில் ஒன்று—அறிவுஜீவிகளின் மறுப்பு. பிரதிநிதிகளிடையே இத்தகைய அறிவுஜீவிகள் பதிற்றுக்கணக்கில் இருந்தார்கள். ''இருண்ட மக்களைத்'' தங்கள் வழிபாட்டுக்கு உரியவர்கள் ஆக்கிக்கொண்டிருந்தார்கள் இவர்கள். ''மக்களிடம் செல்வது'' ஒரு மதமாக விளங்கிவந்தது. மக்களின் பொருட்டு இந்த அறிவுஜீவிகள் வறுமையையும் சிறைவாசத்தையும் சைபீரிய வாழ்வையும் அனுபவித்திருந்தார்கள். செயலற்றுக் கிடந்த பொதுமக்களைப் புரட்சிக் கருத்துக்களால் ஊக்கி, கிளர்ச்சி செய்யத் தூண்டினுர்கள் இவர்கள். பொதுமக்களின் மனவுறுதியும் சால்பும் இடையருது போற்றப்பட்டன. சுருங்கக் கூறின், அறிவுஜீவிகள் பொதுமக்களைத் தேவதை ஆக்கியிருந்தார்கள். இப்போது பொது மக்கள் வீருப்பும் தான்தோன்றிப் போக்கும் உள்ள ஒரு தேவதையின் சீற்றத்துடனும் இடி அதிர்ச்சியுடனும் கிளர்ந்து எழத் தொடங்கியிருந்தார்கள். அவர்கள் தேவதை போலவே செயல் புரிந்து கொண்டிருந்தார்கள்.

ஆனுல் அறிவுஜீவிகளோ, தங்கள் பேச்சுக்குச் செவி சாய்க்காத, தங்கள் கட்டுப்பாட்டை மீறிவிட்ட தேவதையை இப்போது நிராகரித்தார்கள். கணப்போதில் அறிவுஜீவிகள் நாஸ்திகர்கள் ஆகிவிட்டார்கள். தங்களது முன்னுள் தேவதையான பொதுமக்கள் மீது தங்களுக்கு நம்பிக்கையே இல்லை என்று அவர்கள் சாதித்தார்கள். கிளர்ச்சி செய்ய மக்களுக்கு உள்ள உரிமையை அவர்கள் மறுத்தார்கள்.

தாங்களே படைத்த இந்தப் பூதத்தின் முன்பு அறிவுஜீவிகள் விதிர்விதிர்த்தார்கள், அச்சத்தால் நடுங்கினுர்கள், சீற்றங்கொண்டு துடித்தார்கள். இது ஒரு கலப்பினப் பிறவி, பேய், ருஷ்யாவைப் பெருங்குழப்பத்தில் ஆழ்த்தும் பயங்கர உற்பாதம், ''அதிகாரத்துக்கு எதிரான குற்றத்தன்மையுள்ள கிளர்ச்சி'' என்ருர்கள் அவர்கள். இந்தப் பூதத்தை எதிர்த்து அவர்கள் பாய்ந்தார்கள், சீறி விழுந்தார்கள்,

சபித்தார்கள், வேண்டி மன்றாடினார்கள், பிதற்றினார்கள். பிரதிநிதிகள் என்ற முறையில் அவர்கள் இந்தப் புரட்சிக்கு ஏற்பு அளிக்க மறுத்தார்கள். சோவியத்துக்களை ருஷ்யாவின் அரசாங்கம் என்று பிரகடனம் செய்ய இந்தக் காங்கிரஸை அனுமதிக்க மாட்டோம் என்றார்கள் அவர்கள்.

முற்றிலும் வீண்! முற்றிலும் ஆற்றலற்ற செய்கை! இந்தப் புரட்சிக்கு அவர்கள் ஏற்பு அளிக்க மறுத்தது பொங்கும் கடல் அலைக்கோ வெடித்து நெருப்பு உமிழும் எரிமலைக்கோ ஏற்பு அளிக்க மறுப்பது போலத்தான். இந்தப் புரட்சி மூலதத்துவ வகைப்பட்டது, தவிர்க்க முடியாதது. பாளையங்களிலும் காப்பகழ்களிலும் தொழிற்சாலைகளிலும் வீதிகளிலும்—எங்குமே இருந்தது அது. இங்கே, இந்தக் காங்கிரஸில், நூற்றுக்கணக்கான தொழிலாளி, படைவீர, விவசாயிப் பிரதிநிதிகளில் அதிகாரபூர்வமாக இருந்தது புரட்சி. ஒவ்வொரு அங்குல இடத்திலும் மொய்த்து, தூண்கள்மேலும் ஜன்னல் குறடுகள் மீதும் ஏறி நின்றவாறு, கூட்டமன்றத்தைத் தங்கள் நெரியும் ஆவி கிளம்பும் உடல்களிலிருந்து வரும் மூட்டத்தால் வெண்மை ஆக்கிக் கொண்டும் தங்கள் உணர்ச்சிகளின் தீவிரத்தால் மின்னேற்றம் பெறச் செய்துகொண்டும் இருக்கும் பொதுமக்களில் அதிகாரச் சார்பு அற்ற வகையில் புரட்சி இங்கே நிலவிற்று.

தங்கள் புரட்சி விருப்பம் நிறைவேற்றப்பட வேண்டும், சோவியத்துக்களை ருஷ்யாவின் அரசாங்கம் எனக் காங்கிரஸ் பிரகடனம் செய்யவேண்டும் என்பதற்காக இங்கே வந்திருந்தார்கள் பொதுமக்கள். இந்த விஷயத்தில் அவர்கள் தளரா உறுதி கொண்டிருந்தார்கள். இந்த விவகாரத்தைக் குழப்புவதற்கான ஒவ்வொரு முயற்சியும், தங்கள் விருப்பத்தைத் தட்டிக் கழிக்கவோ முடக்கிவிடவோ செய்யப்படும் ஒவ்வொரு பிரயத்தனமும் அவர்களது சினம் பொங்கும் எதிர்ப்பு வெடித்தெழப் புரிந்தது.

வலதுசாரிக் கட்சியினர் நீண்ட தீர்மானங்களை முன் வைத்தார்கள். மக்களோ பொறுமை இழந்தார்கள். ''இனி எந்தத் தீர்மானங்களும் வேண்டாம்! இனிச் சொற்களே

தேவை இல்லை! எங்களுக்குச் செயல்கள் வேண்டும்! சோவியத் வேண்டும் எங்களுக்கு!''

எல்லாக் கட்சிகளதும் கூட்டணி மூலம் இந்த விவகாரத்துக்குச் சமரசமான தீர்வு காண அறிவுஜீவிகள் வழக்கம் போல முயன்றார்கள். ''ஒரே ஒரு கூட்டணிதான் சாத்தியம்! தொழிலாளர்கள், படைவீரர்கள், குடியானவர்கள் ஆகியோரின் கூட்டணி!'' என்று வந்தது எதிர்ப்பு.

''வரவிருக்கும் உள்நாட்டுப் போருக்குச் சமாதானபூர்வமான தீர்வு காணுமாறு'' மார்த்தவ் வேண்டுகோள் விடுத்தான். ''வெற்றி! வெற்றி! அதுதான் சாத்தியமான ஒரே தீர்வு'' என்று பதிலுக்கு முழங்கியது கூட்டம்.

சோவியத்துக்கள் தனியாகத் துணிக்கப்பட்டிருப்பதாகவும் சைனியம் முழுவதுமே அவற்றுக்கு எதிராயிருப்பதாகவும் கூறி மக்களைப் பயமுறுத்த முயன்றான் இராணுவ அதிகாரி கூச்சின். ''பொய்யன்! அதிகாரி! நீ அதிகாரிகள் சார்பில் பேசுகிறாய்—காப்பகழ்களில் உள்ள படைவீரர்கள் சார்பில் அல்ல. 'அரசு அதிகாரம் அனைத்தும் சோவியத்துக்களுக்கே!' என்று படைவீரர்களாகிய நாங்கள் கோருகிறோம்!'' என ஆர்ப்பரித்தார்கள் படைவீரர்கள்.

அவர்களது விருப்பாற்றல் எஃகுறுதி கொண்டிருந்தது. எந்த வேண்டுகோள்களும் அச்சுறுத்தல்களும் அதை முறிக்கவோ வளைக்கவோ முடியவில்லை. அவர்களது குறிக்கோளிலிருந்து அவர்களை வேறு புறம் திருப்ப எதனாலும் இயலவில்லை.

கடைசியில் கடுங்கோபம் பொங்க அப்ரமோவிச் கத்தினான்: ''இங்கே இருந்து இந்தக் குற்றங்களுக்குப் பொறுப்பு ஏற்க எங்களால் முடியாது. இந்தக் காங்கிரஸிலிருந்து வெளியேறுமாறு எல்லாப் பிரதிநிதிகளையும் நாங்கள் அழைக்கிறோம்.'' இவ்வாறு கூறிவிட்டு நாடக பாணியில் அவன் மேடையிலிருந்து இறங்கி வாயிலை நோக்கி வீறுப்புடன் நடந்தான். ஒரு எண்பது பிரதிநிதிகள் தங்கள் இடங்களிலிருந்து எழுந்து அவனைப் பின்பற்றினார்கள்.

''போகட்டும் அவர்கள்! போகட்டும்! வரலாற்றின் குப்பைக் குவியலில் பெருக்கித் தள்ளப்படப் போகிற

கூளங்கள்தாம் இவர்கள்!'' என்று முழங்கினுர் த்ரோத்ஸ்கிய்.

ஏளனச் சீழ்க்கைகளும் இகழ்ச்சிக் கூச்சல்களும் ''கொள்கை மாறிகள்! துரோகிகள்!'' என்ற இடித்துரைகளும் பாட்டாளிகளிடமிருந்து சூருவளி போன்று கிளம்பின. அதன் ஊடாக நடந்து ஹாலுக்கு வெளியே, புரட்சிக்கு வெளியே சென்றுவிட்டார்கள் அறிவுஜீவிகள். தாங்கள் உருவாக்க உதவிய புரட்சியை அறிவுஜீவிகள் நிராகரித்துவிட்டது, பொதுமக்களை அவர்களது போராட்டத்தின் நெருக்கடியில் கைவிட்டுவிட்டது மிகப் பெரும் துயர நிகழ்ச்சி! மிகப் பெரிய தவறுங்கூட. அவர்கள் சோவியத்துக்களைத் தனியாகத் துணித்துவிடவில்லை, தங்களையே தனிப்படுத்திக் கொண்டார்கள். சோவியத்துக்களின் பின்னே ஆதரவாகத் திரண்டு வந்தன திண்ணமான பட்டாளங்கள்.

சோவியத்துக்கள் அரசாங்கம் என
அறிவிக்கப்படுகின்றன

ஒவ்வொரு நிமிடமும் புரட்சியின் புதுப் புது வெற்றிகள் பற்றிய செய்திகளைக் கொணர்ந்தது. மந்திரிகள் கைது செய்யப்பட்டார்கள், அரசாங்க பாங்கும் தந்தி நிலையமும் டெலிபோன் நிலையமும் இராணுவத் தலைமைக் காரியாலயமும் கைப்பற்றப்பட்டன. ஆட்சி அதிகார மையங்கள் ஒன்றன்பின் ஒன்ருக மக்கள் கைகளுக்கு மாறிக்கொண்டிருந்தன. பழைய அரசாங்கத்தின் நிலையுருவற்ற அதிகாரம் கிளர்ச்சிக்காரர்களின் சம்மட்டி அடிகளைத் தாங்கமாட்டாமல் சிதறிக் கொண்டிருந்தது.

ஒரு கமிஸார் குதிரைச் சவாரி செய்ததால் மேலெல்லாம் சேறு தெளித்திருக்க, மூச்சு திணற மேடைமீது ஏறி, ''த்ஸார்ஸ்கோயே ஸேலோ காவற்படை சோவியத்துக்களை ஆதரிக்கிறது. பெத்ரோகிராத் நகர வாயில்களை அது காத்து நிற்கிறது'' என்று அறிவித்தான். ''சைக்கிள் பட்டாளம் சோவியத்துக்களை ஆதரிக்கிறது. தன் சோதரர்களின் குருதியைச் சிந்த ஒரு வீரன் கூடத் தயாராயில்லை'' என்று இன்னெருவன் அறிவித்தான். பின்பு க்ரிலேன்கோ மேடை

மீது தடுமாறி ஏறினன். அவன் கையில் ஒரு தந்தி இருந்தது. ''பன்னிரண்டாம் சைனியத்திடமிருந்து சோவியத்துக்கு வாழ்த்துக்கள்! படைவீரர்கள் கமிட்டி வடக்குப் போர்முனையின் தலைமையைத் தானே ஏற்கிறது.''

முடிவாக ஆரவாரம் நிறைந்த இந்த இரவின் இறுதியில், இந்தச் சொற்பூசலுக்கும் விருப்பாற்றல்களின் மோதலுக்கும் பின்னர் பின்வரும் எளிய பிரகடனம் செய்யப்பட்டது:

''தாற்காலிக அரசாங்கம் பதவியிலிருந்து அகற்றப்பட்டுவிட்டது. மிகப் பெரும்பான்மையான தொழிலாளர்கள், படைவீரர்கள், குடியானவர்கள் ஆகியோரின் விருப்பத்தை அடிப்படையாகக் கொண்டு சோவியத்துக்களின் காங்கிரஸ் ஆட்சி அதிகாரத்தை ஏற்கிறது. எல்லா நாடுகளுக்கும் உடனடியான ஜனநாயக சமாதானத்தையும் எல்லாப் போர்முனைகளிலும் உடனடியான போர் நிறுத்தத்தையும் சோவியத் அரசு இக்கணமே பிரேரிக்கும். நிலம்... முதலியன தடையின்றிக் கைமாறுவதற்கு அது வகை செய்யும்.''

ஒரே கோலாகலக் குழப்பம்! ஆடவர்கள் ஒருவரை ஒருவர் தழுவிக் கண்ணீர் பெருக்கினர்கள். அஞ்சல்காரர்கள் துள்ளிப் பாய்ந்தார்கள். தந்திகள் கடகடத்தன, டெலிபோன்கள் கிணுகிணுத்தன. மோட்டார்கள் போர்முனைக்குப் புறப்பட்டன. விமானங்கள் ஆறுகளையும் திடல்களையும் கடந்து விண்ணில் விரைந்தன. வானெலி கடல்களுக்கு அப்பால் தகவல் அனுப்பியது. எல்லாம் இந்த மாபெரும் செய்தியை அஞ்சல் செய்தன!

புரட்சிகரப் பொதுமக்களின் விருப்பாற்றல் வென்றுவிட்டது. சோவியத்துக்கள் அரசாங்கம் ஆகிவிட்டன.

வரலாற்றுச் சிறப்புள்ள இந்தக் கூட்டம் காலை ஆறு மணிக்கு நிறைவுற்றது. களைப்பு நஞ்சால் தலை கிறுகிறுக்க, உறக்கமின்மையால் கண்கள் குழி விழ, அதே சமயம் களி பொங்க, கற்படிக்கட்டில் தள்ளாடி இறங்கி, ஸ்மோல்னியின் வாயில்கள் வழியே வெளியே சென்றுர்கள் பிரதிநிதிகள். வெளியே இன்னும் இருட்டும் குளிருமாக இருந்தது. ஆனுல் கீழ் வானில் செவ்வைகறை புலரத் தொடங்கிவிட்டது.

அத்தியாயம் எட்டு

பனிக்கால அரண்மனை சூறையாடப்படுதல்

ருஷ்யக் கவி த்யூத்சேவ் எழுதுகிறார்:

''ஊழ்நிறை செயல்கள் உற்றிடுங் காலை
உலகினில் வந்தவன் பெற்றனன் பேறு:
உயர் பெருங் கடவுளர் அழைத்தனர் அவனை
விருந்தினனாகத் தம்முடன் அமர்ந்து
தம் விறல் நாடகம் தனைக் கண்டிடவே.''

இரு மடங்கு பேறு பெற்றவர்கள் ஐந்து அமெரிக்கர்கள். அவர்களாவர் லூயிஸ் பிரையன்ட், ஜான் ரீட், பெஸ்ஸி பீட்டி, கம்பெர்க், நான். ஸ்மோல்னிய் ஹாலில் நிகழ்ந்த மாபெரும் நாடகத்தை நாங்கள் கண்முன்பு கண்டோம். நவம்பர் 7 (அக்டோபர் 25)ந் தேதி இரவு நடந்த மற்றொரு பெரிய நிகழ்ச்சியையும்—பனிக்கால அரண்மனை கைப்பற்றப்பட்டதையும்—நாங்கள் நேரில் பார்த்தோம்.

பேச்சாளர்களின் வாதங்களால் வசீகரிக்கப்பட்டு நாங்கள் ஸ்மோல்னியில் உட்கார்ந்திருந்தோம். அப்போது வெளி இருட்டிலிருந்து விளக்கொளி நிறைந்த ஹாலுக்குள் அதிர்ந்தொலித்தது வேறு குரல்—போர்க்கப்பல் **அரோராவின்** பீரங்கி பனிக்கால அரண்மனைமீது குண்டு சுடும் முழக்கம். பீரங்கியின் கெடுகுறி நிறைந்த வெடியோசை ஒரு சீராக, வற்புறுத்தலுடன் கேட்ட வண்ணமாக இருந்தது. எங்கள் மீது பேச்சாளர்கள் ஏற்படுத்தியிருந்த வசீகரத்தை இந்தப் பீரங்கி முழக்கம் அகற்றிவிட்டது. அதன் அழைப்பை ஏற்காதிருக்க இயலாதவர்களாய் நாங்கள் வெளியே கடுகிச் சென்றோம்.

வெளியே ஒரு பெரிய மோட்டார் லாரி இயந்திரங்கள் கடகடக்க நகருக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தது. நாங்கள் அதில் ஏறிக்கொண்டோம். வெள்ளைத் துண்டுப்பிரசுரங்கள் வால் போல் பறக்க தூமகேது போன்று இருளைக் கிழித்துச் சென்றது எங்கள் லாரி. சந்துகளிலும் வாயில்க

ளிலும் இருந்து மங்கிய உருவங்கள் இந்தத் துண்டுப்பிரசுரங்களை எடுத்துக்கொள்ளத் தாவிப் பாய்ந்தன. அவற்றில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:

**தொழிலாளர்கள், படைவீரர்கள் பிரதிநிதிகளது
பெத்ரோகிராத் சோவியத்தின் இராணுவ-புரட்சிக்
கமிட்டியிடமிருந்து**

ருஷ்யாவின் குடிகளுக்கு

தாற்காலிக அரசாங்கம் பதவியிலிருந்து அகற்றப்பட்டு விட்டது. அரசு அதிகாரம் தொழிலாளர்கள், படைவீரர்கள் பிரதிநிதிகளது பெத்ரோகிராத் சோவியத்தின் உறுப்பாகிய இராணுவ-புரட்சிக் கமிட்டியின் கைகளுக்கு மாறிவிட்டது. இந்தக் கமிட்டியே பெத்ரோகிராத் பாட்டாளிகளுக்கும் நகர்க் காவற்படைக்கும் தலைமை தாங்குகிறது.

ஜனநாயக சமாதானப் பிரேரணை உடனே செய்யப் படுதல், நிலத்தின் மீது நிலப்பிரபுக்களின் சொத்துரிமை ரத்து செய்யப்படுதல், உற்பத்தியின் மீது தொழிலாளர் கண்காணிப்பு, சோவியத் அரசாங்கம் நிறுவப்படுதல் ஆகிய எந்த நோக்கங்களுக்காக மக்கள் போரிட்டார்களோ, அந்த நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டுவிட்டன.

தொழிலாளர்கள், படைவீரர்கள், குடியானவர்களின் புரட்சி நீடூழி வாழ்க!

**தொழிலாளர்கள், படைவீரர்கள் பிரதிநிதிகளது
பெத்ரோகிராத் சோவியத்தின்
இராணுவ-புரட்சிக் கமிட்டி**

*1917, அக்டோபர் 25,
காலை 10 மணி*

(மூலத்தின் போட்டோ பிரதி 227 பக்கத்தில் காண்க.)

இந்த அறிவிப்பு நேரத்துக்கு ஒரு சிறிது முந்தியது. கேரென்ஸ்கிய் நீங்கலாகத் தாற்காலிக அரசாங்கத்தின் அமைச்சர்கள் பனிக்கால அரண்மனையில் இன்னும் கூட்டம் நடத்திக்கொண்டிருந்தார்கள். அதனால்தான் போர்க்கப்பல்

От Военно-Революціоннаго Комитета при Петроградскомъ Совѣтѣ Рабочихъ и Солдатскихъ Депутатовъ.

Къ Гражданамъ Россіи.

Временное Правительство низложено. Государственная власть перешла въ руки органа Петроградскаго Совѣта Рабочихъ и Солдатскихъ Депутатовъ Военно-Революціоннаго Комитета, стоящаго во главѣ Петроградскаго пролетаріата и гарнизона.

Дѣло, за которое боролся народъ: немедленное предложеніе демократическаго мира, отмѣна помѣщичьей собственности на землю, рабочій контроль надъ производствомъ, созданіе Совѣтскаго Правительства — это дѣло обезпечено.

ДА ЗДРАВСТВУЕТЪ РЕВОЛЮЦІЯ РАБОЧИХЪ, СОЛДАТЪ И КРЕСТЬЯНЪ!

Военно-Революціонный Комитетъ
при Петроградскомъ Совѣтѣ
Рабочихъ и Солдатскихъ Депутатовъ.

25 октября 1917 г. 10 ч. утра.

அரோராவின் பீரங்கிகள் வெடி தீர்த்துகொண்டிருந்தன. சரணுகதி அடைந்துவிடும்படி அமைச்சர்களுக்கு அழைப்பை முழங்கிக் கொண்டிருந்தன அவை. தற்போது வெற்று வெடிகள்தாம் சுடப்பட்டுக்கொண்டிருந்தன என்பது உண்மையே. எனினும் காற்றை அவை அதிரச் செய்தன, கட்டிடத்தை உலுக்கின, உள்ளிருந்த அமைச்சர்களின் நரம்புகளைத் தளரச் செய்தன.

அரண்மனைச் சதுக்கத்தை நாங்கள் அடைந்த போது பீரங்கிகளின் முழக்கம் நின்றுவிட்டது. துப்பாக்கி வெடிகள் இருளில் சடசடக்கவில்லை. தங்கள் இறந்துவிட்ட, இறந்துகொண்டிருந்த தோழர்களை அப்பால் எடுத்துச் செல்வதற்காகச் செங்காவற் படையினர் வெளியே ஊர்ந்து வந்தனர். ''இராணுவ மாணவர்கள் சரணுகதி அடைகிறுர்கள்'' என்று இருளின் ஊடாக ஒலித்தது ஒரு குரல். ஆனுல் முற்றுகை இட்டிருந்த கடற்படையினரும் தரைப்படையினரும் காப்பு மறைவிலேயே பதுங்கியிருந்தார்கள்.

கூட்டம் அரண்மனைக்குள் நுழைகிறது

நெவ்ஸ்க்கிய் நெடுஞ்சாலையில் மேலும் புதிய கூட்டங்கள் திரண்டன. அவை அணி வகுத்து செங்கமான் வழியே பெருகி வந்து மௌனமாக முன்னே நகர்ந்தன. தடை அரணின் அருகே அரண்மனைக்கு உள்ளிருந்து வீசிய ஒளியில் அணிகள் வெளிப்பட்டன. அடுக்கிய கட்டைகளால் ஆன காப்புச் சுவற்றை ஏறிக்கடந்து இரும்பு வாயில் வழியே அரண்மனையின் கிழக்குப் பகுதியின் திறந்த கதவுகளுக்கு உள்ளே புகுந்தன அவை. கூட்டத்தினர் அவற்றின் பின்னே திரண்டு சென்றனர்.

குளிரிலும் இருளிலும் இருந்து இந்தப் பாட்டாளிக்கள் கதகதப்பும் வெளிச்சமும் நிறைந்த அறைகளுக்குள் திடீரெனப் புகுந்தார்கள். குடிசைகளிலும் பாளையங்களிலும் இருந்து அவர்கள் பளிச்சிடும் விருந்தறைகளுக்கும் பொன் முலாம் பூசிய மண்டபங்களுக்கும் வந்தார்கள். அரண்மனை நிறுவியவர்கள் தாமே அதற்குள் புகுவது உண்மையிலேயே புரட்சிதானே.

அதுவும் எத்தகைய கட்டிடம்! தங்க, வெண்கலச் சிலைகளால் அலங்கரிக்கப்பட்டு, கிழக்கு நாட்டு இரத்தினக் கம்பளங்கள் விரிக்கப்பட்டு, அறைச் சுவர்களில் அலங்காரத் தொங்குசீலைகளும் ஓவியங்களும் தொங்க, மினுமினுக்கும் படிகச் சரவிளக்குகளின் லட்சோபலட்சம் தீபங்களது ஒளியில் மூழ்கி, நெடுங்காலத்துக்கு முன் காய்ச்சிப் புட்டிகளில் இடப்பட்ட அருமையான வைன்களும் மதுவகைகளும் நிலவறைகளில் செம்மச் செம்ம நிறைந்து விளங்கியது அந்த அரண்மனை. மக்கள் கனவில்கூடக் கண்டிராத செல்வங்கள் அவர்கள் கைக்கெட்டும் நிலையில் இருந்தன. அவற்றை ஏன் கைப்பற்றலாகாது?

பயங்கர வேட்கை பொது மக்கள் கூட்டத்தை ஆட்கொண்டது. அறிவை மயக்கும் அழகு நெடுங்காலமாகப் பட்டினிக்கும் இன்மைக்கும் ஆளாகியிருந்தவர்களின் உள்ளங்களில் தூண்டிவிடும் வேட்கை—சூறையாடும் வேட்கை—அது. வெறும் பார்வையாளர்களான நாங்கள்கூட அதனால் பாதிக்கப்படாமல் இல்லை. இந்த வேட்கை தற்கட்டுப்பாட்டின் கடைசி மிச்சத்தை எரித்துப் பொசுக்கிவிட்டது. மக்களின் உதிர நாளங்களில் ஒரே ஒரு ஆவேசம்—சூறையாடவும் கொள்ளையடிக்கவும் வேண்டும் என்ற ஆவேசம்—மட்டுமே கனல் வீசியது. மக்களின் பார்வை இந்தப் பொக்கிஷத்தின் மீது பட்டது. அவர்களுடைய கைகள் பின்தொடர்ந்தன.

நாங்கள் புகுந்த வளைமுகட்டு மண்டபச் சுவர்களின் ஓரமாகச் சாமான்கள் வைத்த பெட்டிகள் வரிசையாக இருந்தன. துப்பாக்கி அடிக்கட்டைகளால் படைவீரர்கள் அவற்றை உடைத்துத் திறந்தார்கள். திரைச்சீலைகளும் லினன்களும் கெடியாரங்களும் பூக்கிண்ணங்களும் தட்டுக்களும் அவற்றின் உள்ளிருந்து வெளியே சிதறின.

இந்த அற்பக் கொள்ளைப் பொருள்களை மதியாமல் கூட்டத்தினர் அதிக வளமுள்ள வேட்டையிடங்களுக்குப் பாய்ந்து சென்றார்கள். முன்னணியினர் ஆடம்பரமான மண்டபங்கள் வழியாக இன்னும் பகட்டான மண்டபங்களுக்குள் புகுந்தார்கள். பீரோக்களும் உடை அலமாரிகளும் அவற்றில் வரிசையாக நின்றன. எதிர்பார்ப்பு மகிழ்ச்சிக்

கூச்சலுடன் அவற்றின்மீது பாய்ந்தார்கள் மக்கள். பின்பு சீற்றமும் பெருத்த ஏமாற்றமும் தொனிக்கும் கூச்சல் கிளம்பியது. நிலைக்கண்ணாடிகள் நொறுக்கப்பட்டிருந்ததையும் பலகைகள் உதைத்து உடைக்கப்பட்டிருந்ததையும் செருகறைகள் குடைந்து துருவப்பட்டிருந்ததையும் மக்கள் கண்டார்கள். முன்னே சென்றிருந்த அநாகரிகக் கொள்ளைக்காரர்களின் சுவடு எல்லாவற்றிலும் பதிந்திருந்தது. சிறந்த பொருள்களை எல்லாம் இராணுவ மாணவர்கள் கொள்ளையடித்துச் சென்றிருந்தார்கள்.

அவ்வளவு பறி போய்விட்டது! எனவே எஞ்சியிருந்ததற்காகப் போராட்டம் அவ்வளவே கடுமையாக நடந்தது. இந்த இடத்தின்மீதும் இதில் உள்ள பொருள்கள் மீதும் மக்களின் உரிமையை யார்தான் மறுக்க முடியும்? இவை எல்லாம் அவர்களது கடும் உழைப்பாலும் அவர்களுடைய தந்தையரின் கடும் உழைப்பாலும் படைக்கப்பட்டவை. படைப்பு உரிமை காரணமாக இவை அவர்களுக்கே சொந்தமானவை. வெற்றி உரிமை காரணமாகவும் இவை அவர்களுடையவையே. கைகளிலிருந்த புகையும் துப்பாக்கிகளாலும் உள்ளங்களிலிருந்த துணிவினாலும் அவர்கள் இந்த அரண்மனையைக் கைப்பற்றியிருந்தார்கள். ஆனால் எவ்வளவு காலம் இதைத் தம் வசம் வைத்திருக்க அவர்களுக்கு இயலும்? ஒரு நூற்றாண்டுக் காலம் அது ஜாரின் உடைமையாக இருந்தது. நேற்று அது கேரென்ஸ்கிய்க்குச் சொந்தமாக இருந்தது. இன்றோ, மக்கள் உடைமை ஆகிவிட்டது. நாளை அது யார் கைக்குப் போகும்? ஒருவரும் சொல்ல முடியாது. இன்று புரட்சி வழங்குகிறது, நாளை புரட்சி எதிர்ப்பு பிடுங்கிக்கொள்ளக் கூடும். பரிசுப் பொருள் தங்களுடையதாக இருக்கும் இந்த நேரத்தில் அவர்கள் அதை முடிந்த வரை முழுமையாக அனுபவிக்கக் கூடாதா? அரசவையினர் ஒரு நூற்றாண்டுக் காலம் கேளிக்கைகள் நடத்திய இந்த இடத்தில் அவர்கள் ஓர் இரவு இன்பமாகப் பொழுது போக்கக் கூடாதா? எல்லைமீறிய அவமதிப்பு நிறைந்த அவர்களது சென்ற காலம், கெடுபிடி நிறைந்த நிகழ்காலம், நிச்சயமில்லாத வருங்காலம்—எல்லாம் இப்போது கைப்பற்றக் கூடியவற்றை **வலிந்து** எடுத்துக்கொள்ளும்படி அவர்களைத் தூண்டி ஊக்கின.

அரண்மனையில் பெருங் குழப்பம் ஏற்பட்டது. அது எங்கும் பரவிப் பல்லாயிரம் குரல்களில் எதிரொலித்தது. துணி கிழிவதும், கட்டை பிளப்பதும், உடைந்து சிதறும் ஜன்னல் கண்ணாடிகளின் கணகணப்பும், மரச் சட்டங்கள் பதித்த தரையில் கனத்த பூட்சுகளின் தடதடப்பும் ஆயிர மாயிரம் குரல்கள் விட்டத்தில் மோதி ஒலிப்பதுமாக ஒரே ஆரவாரம் நிறைந்தது. களிபொங்கும் குரல்களைத் தொடர்ந்து கொள்ளைப் பொருள்களின் பங்கீடுபற்றிய சச்சரவு ஒலித்தது. கரகரத்த குரல்கள், உச்சஸ்தாயிக் குரல்கள், முணுமுணுப்புக்கள், வசவு திட்டுகள்.

இந்தப் பல்குரல் குழப்பத்தில் பின்னர் ஆர்த்தது இன்னொரு குரல்—புரட்சியின் தெளிவான, வற்புறுத்தும் குரல். தனது ஆர்வமுள்ள பக்தர்களான பெத்ரோகிராத் தொழிலாளர்களின் வாய்மொழியாகப் பேசியது புரட்சி. இவர்கள் விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய சிறு தொகையினரே. வாடி வதங்கிய சிறு மேனியர் இவர்கள். எனினும் பேருருவினரான குடியானவப் படைவீரர்களின் இந்த வரிசைகளுக்குள் அவர்கள் பாய்ந்து புகுந்து, ‘‘எதையும் எடுத்துக் கொள்ளாதீர்கள். புரட்சி அதைத் தடை செய்கிறது. கொள்ளை அடிக்கக் கூடாது. இது மக்களின் உடைமை’’ என்று கத்தினார்கள்.

சூறுவளிக்கு முன் கூவும் குழந்தைகள், அரக்கர் சேனையை எதிர்த்துத் தாக்கும் குள்ளர்கள். வெற்றிப் பெருமிதம் நிறைந்த, சூறையாடுவதில் நாட்டம் கொண்ட படைவீரர்களின் தாக்குதல்களைச் சொற்களால் தேக்கி நிறுத்த முயன்ற இந்த எதிர்ப்பாளர்கள் அவ்வாறே தோற்றம் அளித்தார்கள். கூட்டம் கொள்ளையைத் தொடர்ந்தது. ஒரு சில தொழிலாளர்களின் எதிர்ப்பை அது எதற்காகப் பொருட்படுத்த வேண்டும்?

புரட்சியின் கட்டுப்படுத்தும் கரம்

ஆனால் இந்தத் தொழிலாளர்களின் குரல்கள் பொருட்படுத்தப்பட்டன. தங்களுடைய சொற்களின் பின்னே புரட்சியின் விருப்பாற்றல் இருப்பதை அவர்கள் உணர்ந்தார்கள்.

இந்த உணர்ச்சி அவர்களை அச்சமற்றவர்கள் ஆக்கியது, முன்னேறித் தாக்கும் வலிமையை அவர்களுக்கு அளித்தது. பேருடலினரான படைவீரர்கள் மீது சீற்றத்துடன் பாய்ந்து, வசவுகளை அவர்கள் மீது பொழிந்து, கொள்ளைப் பொருள்களை அவர்கள் கைகளிலிருந்து பிடுங்கினார்கள் தொழிலாளர்கள். சற்று நேரத்திற்கெல்லாம் படைவீரர்கள் தற்காப்பை மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

கனத்த கம்பளிப் போர்வை ஒன்றை எடுத்துப் போய்க் கொண்டிருந்த பெரிய குடியானவன் ஒருவனைச் சிறு கூடான ஒரு தொழிலாளி வழி மறித்தான். கம்பளிப் போர்வை யைப் பற்றி அதன் ஒரு முனையைப் பிடித்து இழுத்தவாறு குழந்தையைக் கண்டிப்பது போல அந்தப் பெரிய குடியான வனைக் கடிந்துகொண்டான்.

கடுஞ் சினத்தால் முகம் கோண, ''கம்பளியை விடு. அது என்னுடையது'' என்று உறுமினான் குடியானவன்.

''இல்லை, இல்லை. இது உன்னுடையது அல்ல. இது எல்லா மக்களுக்கும் சொந்தமானது. இன்று இரவு அரண் மனையிலிருந்து எதுவும் வெளியே போகாது'' என்று கத்தி னான் தொழிலாளி.

''என்னவாயினும் இந்தக் கம்பளி வெளியே கட்டாய மாகப் போகும். பாளையத்தில் ஒரே குளிர்!''

''நீ குளிரில் துன்பப்படுவதற்கு வருந்துகிறேன், 'தவா ரிஷ்'. ஆனால் உன்னுடைய கொள்ளையால் புரட்சி அவமதிப் புக்கு உள்ளாவதைவிட நீ குளிரால் வருந்துவது மேல்''.

''உன்னைச் சைத்தான் வாரிக்கொண்டு போக. நாம் எதற்காகப் புரட்சி செய்தோம் பின்னே? மக்களுக்கு உடை களும் உணவும் அளிப்பதற்காகத்தானே, அல்லவா?'' என்றான் குடியானவப் படைவீரன்.

''ஆமாம், 'தவாரிஷ்', உனக்குத் தேவையானவை எல்லாவற்றையும் புரட்சி உரிய காலத்தில் உனக்கு அளிக் கும், ஆனால் இன்று இரவு அல்ல. இங்கிருந்து ஏதேனும் வெளியே போனால் நாம் காவாலிகள், கொள்ளைக்காரர்கள் என்று அழைக்கப்படுவோம்—உண்மை சோஷலிஸ்டுகள் என்று அல்ல. நாம் இங்கே வந்தது புரட்சிக்காக அல்ல, கொள்ளைப் பொருள்களுக்காகவே என்று நமது பகைவர்

கள் சொல்லுவார்கள். ஆகவே நாம் எதையும் எடுத்துக் கொள்ளக் கூடாது. ஏனென்றால் இது மக்களின் உடைமை. புரட்சியின் கௌரவத்திற்காக இதை நாம் பாதுகாப்போம்.''

''சோஷலிஸம்! புரட்சி! மக்களின் உடைமை!'' இந்தச் சூத்திரத்துடன் தன் கம்பளி தன்னிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டதைக் குடியானவன் கண்டான். இந்த அருவக் கருத்துக்கள் எப்போதுமே தன்னிடமிருந்த பொருள்களைக் கவர்ந்து செல்வதை அவன் உணர்ந்தான். ஒரு காலத்தில் ''ஜாராட்சி, ஆண்டவனின் பெருமை'' என்ற பெயரால் இவ்வாறு செய்யப்பட்டு வந்தது. இப்போது ''சோஷலிஸம், புரட்சி, மக்களின் உடைமை'' என்ற பெயரால் இவ்வாறு செய்யப்பட்டது.

எனினும் இந்தக் கடைசிக் கருதுகோளில் குடியானவனுக்குப் புரியக்கூடிய ஏதோ ஒன்று இருந்தது. அவனுடைய பஞ்சாயத்துப் பயிற்சிக்குப் பொருந்துவதாக இருந்தது அது. அது அவன் மூளையை ஆட்கொண்டதும் கம்பளிமீது அவன் பிடி தளர்ந்தது. விலைமிக்க இந்த அரும் பொருளைத் துயரம் தேங்கிய விழிகளால் கடைசி முறையாக நோக்கிவிட்டு அவன் அப்பால் நகர்ந்தான். அவன் மற்றொரு படைவீரனுக்கு விளக்கிக்கொண்டிருந்ததைப் பின்னர் நான் கண்டேன். ''மக்களின் உடைமை'' பற்றிப் பேசிக்கொண்டிருந்தான் அவன்.

தங்களது சாதக நிலையைப் பயன்படுத்திக்கொண்டு தொழிலாளர்கள் விடாப்பிடியாக முன்னேறினார்கள்; மன்றாடுவதும், விளக்குவதும், அச்சுறுத்துவதுமாக எல்லாச் செயல் தந்திரங்களையும் அவர் கையாண்டார்கள். ஒரு மாடப்பிறையில் நின்றான் போல்ஷெவிக் தொழிலாளி ஒருவன். அவன் ஒரு கையை மூன்று படைவீரர்களை நோக்கிக் கடுங்கோபத்துடன் ஆட்டிக்கொண்டிருந்தான். அவனுடைய மற்றக் கை ரிவால்வர் மேல் இருந்தது.

''அந்த மேஜையை நீங்கள் தொட்டால் உங்களைப் பொறுப்பாளிகள் ஆக்குவேன்'' என்று அவன் கத்தினான்.

''எங்களைப் பொறுப்பாளிகள் ஆக்கேன்!'' என்று நொடித்தார்கள் படைவீரர்கள். ''நீ யார்? எங்களைப்

போலவே நீயும் அரண்மனைக்குள் பலவந்தமாக நுழைந்தாய். எங்களைத் தவிர வேறு யாருக்கும் நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல'' என்றார்கள்.

''புரட்சிக்குப் பொறுப்பாளிகள் நீங்கள்'' என்று சூடாகக் கொடுத்தான் தொழிலாளி. அவனுடைய குரலில் உளமார்ந்த தீவிரம் தொனித்தது. எனவே புரட்சியின் அதிகாரத்தை இந்தப் படைவீரர்கள் அவனிடம் உணர்ந்தார்கள். அவன் குரலுக்குச் செவிசாய்த்து அதற்குப் பணிந்தார்கள் அவர்கள்.

இந்தப் பொதுமக்களின் துணிவையும் ஆர்வத்தையும் புரட்சி கட்டவிழ்த்துவிட்டது. அரண்மனையைத் தாக்கிக் கைப்பற்ற அவர்களை அது பயன்படுத்திக் கொண்டது. இப்போது அது அவர்களுக்குத் தளை பூட்டியது. தாறுமாறான குழப்பத்திலிருந்து அது கட்டுப்படுத்தும் ஆற்றலை வெளிக்கொணர்ந்தது. அமைதியூட்டி, ஒழுங்கை நிலை நாட்டி, பாராக்காரர்களை நியமித்தது அது.

''எல்லோரும் வெளியே! அரண்மனையைக் காலி செய்யுங்கள்!'' என்ற உத்தரவு நடைகள் வழியே ஒலித்தது. கூட்டம் வாயில்களை நோக்கிப் பெருகலாயிற்று. ஒவ்வொரு வெளி வாயிலிலும் தேடிச் சோதனை போடுவதற்கான தானாகவே அமைந்த கமிட்டி நின்றது. சோதனைக் குழுவினர் வெளிவந்த ஒவ்வொரு ஆளையும் சூழ்ந்து அவன் கோட்டுப் பைகளையும் சட்டையையும் பூட்சுகளையும்கூடத் துருவிப் பார்த்து நினைவுச்சின்னங்கள், சிறு சிலைகள், மெழுகுவத்திகள், உடைமாட்டல்கள், சித்திரப் பூவேலைத் துணிகள், பூக்கிண்ணங்கள் முதலிய பல்வகைப் பொருள்களை வெளியே எடுத்தார்கள். தங்கள் பரிசுப் பொருள்களுக்காகச் சொந்தக்காரர்கள் குழந்தைகள்போலக் கெஞ்சினார்கள். ஆனால் கமிட்டியினர், ''இன்றிரவு அரண்மனையிலிருந்து எதுவும் வெளியே போகாது'' என்று இடைவிடாது திரும்பக் கூறி அழுந்தச் சாதித்துவிட்டார்கள்.

உண்மையிலேயே செங்காவல் படையினர்களால் அன்று இரவு எதுவும் வெளியே எடுத்துச் செல்லப்படவில்லை. பதுங்கித் திரிந்தவர்களும் அநாகரிகக் கொள்ளைக்காரர்களும் அப்புறம் பல விலையுயர்ந்த பொருள்களுடன் கம்பிநீட்டிவிட்டார்கள் என்பது வேறு விஷயம்.

இப்போது கமிஸார்கள் தாற்காலிக அரசாங்கத்தின் மீதும் அதன் காப்பாளர்கள்மீதும் கவனத்தைத் திருப்பினார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டு வெளி வாயிலுக்குக் காவலுடன் நடத்திச் செல்லப்பட்டார்கள். தர்பார் ஹாலில் பச்சைக் கம்பளித் துணி விரித்த மேஜையைச் சுற்றிக் கூட்டம் நடத்திக்கொண்டிருந்த அமைச்சர்கள் முதலில் வந்தார்கள். அவர்கள் மௌனமாக வரிசையாய்ச் சென்றார்கள். அரண்மனை உள்ளே இருந்த கூட்டத்தினர் ஒரு ஏளனக் குரல்கூட எழுப்பவில்லை. ஆனால் ஒரு கடற்படை வீரன் மோட்டார் கொண்டுவரும்படி கூவியதும் வெளியிலிருந்த கூட்டத்தில் இகழ்ச்சி வெடித்து அதிர்ந்தது. ''அவர்கள் வேண்டிய மட்டும் கார் சவாரி செய்துவிட்டார்கள். நடக்க வையுங்கள் அவர்களை'' என்று கத்தி, திகிலடித்திருந்த அமைச்சர்களை நோக்கிப் பாய்ந்தது கூட்டம். செங்கடற்படை வீரர்கள் துப்பாக்கிக் குத்தீட்டிகளை முன்னே துருத்தியவாறு, சிறைப்பட்டவர்களைச் சூழ்ந்துகொண்டு அவர்களை நெவா ஆற்றுப் பாலங்களைக் கடந்து அழைத்துச் சென்றார்கள். காவற்கைதிகள் எல்லோரிலும் துலக்கமாக உயர்ந்து தென்பட்டான் உக்ரேனிய முதலாளி தெரேஷ்சேன்கோ. தாற்காலிக அரசாங்கத்தின் வெளிநாட்டு அமைச்சர் அலுவலகத்திலிருந்து பெத்ரோபாவ்லவ்ஸ்காயா கோட்டைச் சிறைக்குப் போய்க்கொண்டிருந்தான் அவன். பெத்ரோபாவ்லவ்ஸ்காயா கோட்டைச் சிறையிலிருந்து வெளிநாட்டு அமைச்சர் அலுவலகத்திற்கு வந்த போல்ஷெவிக் த்ரோத்ஸ்கியின் பயணத்துக்கு எதிர்த்திசையில் நடந்தது தெரேஷ்சேன்கோவின் பயணம்.

''தூண்டிவிடுபவர்கள்! துரோகிகள்! கொலைகாரர்கள்!'' என்ற கூச்சல்களுடன் ராணுவ மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டார்கள். பரிதாபகரமான, முகஞ்சோர்ந்த கும்பல் அது. ஒரு குண்டு மட்டும் மிச்சம் இருக்கும் வரை போரிடப் போவதாகவும், இந்தக் கடைசிக் குண்டைத் தன் மூளைக்குள் சுட்டுக்கொண்டு மடிந்துவிடப் போவதாகவும் போல்ஷெவிக்குகளிடம் சரணடையப் போவதில்லை என்றும் அன்று காலைதான் ஒவ்வொரு ராணுவ மாணவனும் எங்களிடம் சபதம் செய்திருந்தான். இப்போதோ அவன்

தனது ஆயுதங்களை இந்த போல்ஷெவிக்குகளுக்கு ஒப்புக் கொடுத்துவிட்டு, அவர்களுக்கு எதிராக இனி ஒருபோதும் ஆயுதம் ஏந்துவதில்லை என்று வாக்களித்தான். (துர்ப்பாக்கிய சாலிகள்! இந்த வாக்குறுதியை அவர்கள் பின்பு மீறி விட்டார்கள்.)

அரண்மனையிலிருந்து கடைசியாகச் சென்ற கைதிகள் ''மாதர் பட்டாளத்தின்'' உறுப்பினர். அவர்களில் பெரும் பாலோர் பாட்டாளிக் குடும்பங்களில் பிறந்தவர்கள். ''தொழிலாளிப் பெண்கள் தொழிலாளி ஆண்களுக்கு எதிராகப் போரிட்டது வெட்கக் கேடு! வெட்கக் கேடு!'' என்று கத்தினார்கள் செங்காவற்படையினர். தங்கள் ஆத்திரத்தைப் பதிய வைப்பதற்காகச் சிலர் அந்தப் பெண்களின் தோள்களைப் பற்றிக் குலுக்கினார்கள், அவர்களைத் திட்டினார்கள்.

படைவீரப் பெண்கள் அடைந்த மொத்தச் சேதங்கள் இவைதாம். பின்னர் அவர்களில் ஒருத்தி தற்கொலை செய்து கொண்டாள். மறுநாள் விரோதிச் செய்தித்தாள்கள் ''மாதர் பட்டாளத்''தினருக்குப் பயங்கரக் கொடுமைகள் இழைக்கப்பட்டதாகக் கதைகள் பரப்பின. செங்காவற்படையினர் பனிக்கால அரண்மனையை நாசம் செய்து சூறையாடியதாகவும் கட்டுக்கதைகள் வெளியிடப்பட்டன.

உண்மையிலோ, தொழிலாளி வர்க்கத்தின் உள்ளார்ந்த இயல்புக்கு அழிவுத்தன்மையைவிடப் புறம்பானது வேறு ஏதுவும் இல்லை. இல்லாவிடில் நவம்பர் எட்டாந் தேதி காலையைப் பற்றி வரலாறு முற்றிலும் வேறு கதை சொல்ல நேர்ந்திருக்கும். நெடுங்காலம் துன்பம் உழன்ற மக்களின் பழிவெறியின் விளைவாக ஜாரின் மாண்புமிக்க அரண்மனை நொறுங்கும் கற்களும் புகையும் கொள்ளிகளும் கொண்ட குவியல் ஆக்கப்பட்டுவிட்டது என அது குறிக்க நேர்ந்திருக்கும்.

நெவா ஆற்றின் கரையில் உணர்ச்சியற்ற, இதயமற்ற பொருளாக இந்த அரண்மனை ஒரு நூற்றாண்டுக் காலம் நின்றிருந்தது. மக்கள் அதனிடம் ஒளியை நாடினார்கள். அதுவோ இருளையே பரப்பியது. மக்கள் இரக்கம் காட்டும்படி அதனிடம் முறையிட்டார்கள், அதுவோ, சவுக்கடியாலும்

கசையடியாலும், கிராமங்களை எரிப்பதாலும், சைபீரியாவுக்கு அனுப்புவதாலும் இந்த முறையீட்டுக்குப் பதில் அளித்தது. 1905ம் ஆண்டுப் பனிக்காலத்தில் ஒரு நாள் காலை தற்காப்பற்ற ஆயிரக்கணக்கான மக்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்குப் பரிகாரம் வேண்டி மன்னனிடம் விண்ணப்பம் செய்துகொள்ள இங்கே வந்தார்கள். அரண்மனையோ துப்பாக்கிகளாலும் பீரங்கிகளாலும் அவர்களுக்குப் பதில் அளித்தது, அவர்களது குருதியால் வெண்பனியைச் செந்நிறம் ஆக்கிற்று. பொதுமக்களுக்கு இந்த அரண்மனை குரூரத்துக்கும் அடக்குமுறைக்கும் அடையாளமாக விளங்கிற்று. அவர்கள் இதைத் தகர்த்துத் தரைமட்டம் ஆக்கியிருந்தால், கொடுமைக்குள்ளான மக்கள், சீற்றம் பொங்க, தங்கள் துன்பத்தின் வெறுக்கத்தக்க சின்னத்தை என்றென்றைக்கும் தங்கள் பார்வையிலிருந்து அகற்றியதற்கு அது இன்னொரு உதாரணம் ஆகியிருக்கும், அவ்வளவு தான்.

மாறாக அவர்கள் இந்த வரலாற்றுச் சின்னம் சேதமடையும் எல்லா வாய்ப்புக்களையும் அகற்ற முற்பட்டார்கள்.

கேரென்ஸ்கிய் செய்தது இதற்கு நேர் எதிரானது. பனிக்கால அரண்மனையைத் தனது அமைச்சரவையின் மையமாகவும் தனது சொந்தப் படுக்கையிடமாகவும் செய்த தன் வாயிலாகப் போர்க்களம் ஆக்கியிருந்தான் அவன். ஆனால் அரண்மனையைக் கைப்பற்றிய இந்த வெறி பொங்கிய மக்களின் பிரதிநிதிகளோ, அது தங்களுக்கோ சோவியத்துக்களுக்கோ அல்ல, எல்லாருக்கும் உரிய மரபுச் சொத்து என்று அறிவித்து விட்டார்கள். சோவியத் அரசாணை மூலம் அது மக்கள் காட்சிச்சாலை ஆக்கப்பட்டுவிட்டது. ஓவியக் கலைஞர்களது ஒரு கமிட்டியின் கைகளில் அதைப் பாதுகாக்கும் பொறுப்பு முறைப்படி ஒப்படைக்கப்பட்டது.

சொத்தின் பால் புதிய நோக்கு

இவ்வாறு, இன்னொரு பயங்கரமான முன்மொழிவையும் நிகழ்ச்சிகள் பொய்ப்படுத்திவிட்டன. கேரென்ஸ்கியும் டானும் மற்ற அறிவுஜீவிகளும் புரட்சியை எதிர்த்துக்

கூச்சலிட்டார்கள், குற்றச் செயல்களும் கொள்ளையும் கோர தாண்டவம் ஆடும் என்றும் மக்களின் மிக இழிந்த ஆவேச உணர்ச்சிகள் கட்டவிழ்த்து விடப்படும் என்றும் எச்சரித்தார்கள். பசித்த, மனக்கசப்புள்ள பொதுமக்கள் ஒரு முறை செயலில் இயக்கப்பட்டுவிட்டால் வெறிகொண்ட மந்தை போன்று அவர்கள் எல்லாவற்றையும் மிதித்துத் துவைத்து அழித்து நாசக்காடு ஆக்கிவிடுவார்கள் என அவர்கள் சொன்னார்கள். ''உலகம் முடிவடைந்து விடும் என்று கோர்க்கிய் கூட முன்மொழிந்து கொண்டிருந்தார்'' (த்ரோத்ஸ்கிய்).

இப்போது புரட்சி வந்துவிட்டது. அநாகரிக அழிவுச் செயல்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாக நடந்தது உண்மையே; ஆடம்பர உடைகள் அணிந்த பூர்ஷ்வாக்கள் தங்கள் பிரமாண்டமான மேல்கோட்டைப் பறிகொடுத்துவிட்டு வீடு திரும்பினார்கள். புரட்சியால் கட்டுப்பாட்டுக்கு உள்ளாக்கப்படும் வரை மக்கள் கும்பல்கள் பெருஞ் சேதம் விளைத்தன.

ஆனால் ஒரு விஷயம் எல்லாவற்றிலும் துலக்கமாக இருந்தது. புரட்சியின் முதல் விளைவுகள் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட்டதே. மக்களது கைகளுக்கு வந்தபின் இருந்ததைவிடப் பாதுகாப்பாகப் பெத்ரோகிராத் நகரம் ஒருபோதும் இருந்ததில்லை. வீதிகளில் முன் ஒருபொழுதும் இல்லாத அமைதி நிலவியது. வழிப்பறிகளும் கொள்ளைகளும் அநேகமாக இல்லாது போய்விட்டன. கொள்ளைக்காரர்களும் போக்கிரிகளும் பாட்டாளி மக்களின் இரும்புக் கரங்களுக்கு முன் விலவிலத்தார்கள்.

இது வெறுமே எதிர்மறைக் கட்டுப்பாடு—அச்சங் காரணமாக ஏற்பட்ட ஒழுங்கு—அல்ல. சொத்து உரிமைக்குத் தனி வகைப்பட்ட மரியாதையைப் புரட்சி தோற்றுவித்தது. கடைகளின் உடைந்து நொறுங்கிய ஜன்னல்களுக்குள், அருகாகச் செல்லும் கடுந்தேவைக்குள்ளான மனிதர்களுடைய கைக்கு எட்டும் தொலைவில் இருந்தன உணவுப் பொருள்களும் உடைகளும். ஆனால் அவை தொடப்படாமல் இருந்தன. உணவு கைக்கு எட்டும் தூரத்தில் இருந்தும் அதை எடுத்துக்கொள்ளாத பசித்த மனிதர்களின் தோற்றத்தில் துயரம் தோய்ந்த ஒரு உணர்ச்சி இருந்தது. புரட்சியால்

ஏற்படுத்தப்பட்டிருந்த தன்னடக்கத்தில் ஏதோ அச்சம் தருவது ஒன்று இருந்தது. தன் நுட்பமான பாதிப்பைப் புரட்சி எங்கும் விளைத்தது. தொலைதூரக் கிராமங்களையும் அது எட்டியது. இப்போது குடியானவர்கள் பெரிய எஸ்டேட்டுகளுக்குத் தீவைக்கவில்லை.

எனினும் சொத்தின் புனிதத்தன்மைக்கு மரியாதை காட்டுபவர்கள் தாங்களே என்று மேல் வர்க்கத்தினர் வலிந்துரைத்தார்கள். ஆளும் வர்க்கத்தினர் எதற்குப் பொறுப்பானவர்களோ அந்த உலக யுத்தத்தின் முடிவில் இவ்வாறு உரிமை பாராட்டுவது விசித்திரம்தான். அவர்களுடைய உத்தரவுப்படி நகரங்கள் தீக்கிரையாக்கப்பட்டன, தரை சாம்பலால் மூடப்பட்டது, கடலின் அடித்தளத்தின்மீது கப்பல்கள் சிதறிக் கிடந்தன, நாகரிகக் கட்டிடம் தகர்த்து நொறுக்கப்பட்டது, இப்போதுங்கூட இன்னும் பயங்கரமான அழிவுக் கருவிகள் தயாரிக்கப்பட்டுவருகின்றன.

சொத்துக்கு உண்மையான மரியாதை அளிப்பதற்கு பூர்ஷ்வா வர்க்கத்தினிடம் என்ன அடிப்படை உள்ளது? உண்மையில் பூர்ஷ்வாக்கள் உற்பத்தி செய்வது மிகச் சொற்பம், அல்லது ஒன்றும் இல்லை. விசேஷச் சலுகை பெற்றவர்களுக்குச் சொத்து என்பது கெட்டிக்காரத்தனத்தினலோ, தற்செயலான மரபு முறைப்படியோ, அதிர்ஷ்டவசத்தாலோ கிடைப்பது. அவர்களுக்கு அது பெரும்பகுதி பட்டாக்கள், பத்திரங்கள், காகிதங்கள் ஆகியவை அடங்கிய விஷயம் தான்.

ஆனல் உழைப்பாளி வர்க்கத்தினருக்கோ சொத்து என்பது கண்ணீரும் இரத்தமும் அடங்கிய விஷயம். அது களைப்பூட்டும் படைப்புச் செயல். வலிக்கும் தசைநார்களிலும் தெறிக்கும் முதுகெலும்புகளிலும் அதன் மதிப்பை அவர்கள் அறிகிருர்கள்.

> ''தோட்களும் முதுகும் மார்பும் நெரிய,
> மாரிபோல் வீழ்ந்திடும் வியர்வையில்
> குளித்து,
> நண்பகல் வெயிலில் நாவிலே பாட்டுடன்
> பெருங்கலம் அதனை இழுக்கிருன் அவனே''

என்கிறது வோல்கா படகு இழுப்பவன் பாட்டு.

எப்படி ஒரு தாயால் தன் குழந்தையை அழிக்க முடியாதோ அப்படியே வேதனையிலும் உழைப்பிலும் தாங்கள் உண்டாக்கிய ஒன்றை மனிதர்களால் வேண்டுமென்றே நாசம் செய்ய முடியாது. எவர்களது தசைகளிலிருந்து ஒரு பொருள் உற்பத்தி ஆகியுள்ளதோ அவர்களே அதை யாவரிலும் நன்கு காப்பார்கள், பேணிப் போற்றுவார்கள். அதன் மதிப்பை அறிந்திருப்பதால் அதன் புனிதத்தன்மையை அவர்கள் உணர்வார்கள். கலைப் படைப்புக்களுக்கு முன்னே கூட, பண்படாத, பயிற்சி பெறாத பொதுமக்கள் மரியாதையுடன் நிற்கிறார்கள். அவற்றின் பொருளை அவர்கள் மங்கலாகவே சற்று புரிந்துகொள்கிறார்கள். ஆனால் முயற்சியின் பரு வடிவை அவர்கள் அதில் காண்கிறார்கள். எல்லாவகை உழைப்பும் அவர்களுக்குப் புனிதமானது.

சோஷலிஸப் புரட்சி உண்மையில் சொத்து உரிமைக்குக் கடவுள்தரம் அளிப்பது ஆகும். இந்த உரிமைக்கு அது புதிய புனிதத் தன்மையை ஏற்படுத்துகிறது. சொத்தை அதை உற்பத்தி செய்பவர்கள் கைகளுக்கு மாற்றியதன் வாயிலாக, செல்வத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை அதன் இயற்கையான, ஆழ்ந்த ஆர்வமுள்ள காப்பாளர்களின்—செல்வத்தைப் படைப்பவர்களின்—கைகளில் அது ஒப்படைக்கிறது. படைப்பவர்களே யாவரிலும் சிறந்த காப்பாளர்கள் ஆவர்.

அத்தியாயம் ஒன்பது

செங்காவற்படையினரும் வெண்படையினரும் காவாலிப் படையினரும்

நவம்பர் 7ந் தேதி சோவியத்துக்கள் தங்களை அரசாங்கம் என்று பிரகடனம் செய்துகொண்டன. ஆனால் ஆட்சி அதிகாரத்தை எடுத்துக்கொள்வது ஒரு விஷயம், அதை நிலையாக வைத்திருப்பதோ வேறு விஷயம். அரசாணைகளை

எழுதி வெளியிடுவது ஒரு விஷயம், ஆயுத பலத்தால் அவற்றுக்கு ஆதரவு அளிப்பதோ வேறு விஷயம்.

தாங்கள் பெரும் போர் நடத்த வேண்டியிருப்பதை சோவியத்துக்கள் விரைவில் அறிந்தன. முடமான இராணுவ இயந்திரத்தைக் கொண்டு தாங்கள் போரிட வேண்டியிருப்பதையும் அவை தெரிந்துகொண்டன. இராணுவ அதிகாரிகளின் மறைமுக அழிவு வேலை காரணமாக அது சிதிலமாகிக் கிடந்தது. புரட்சி இராணுவத் தலைமை அலுவலகம் இந்தச் சிக்கலை மேலிருந்து சீர்படுத்த இயலாதிருந்தது. அது நேரே தொழிலாளர்களுக்கு வேண்டுகோள் விடுத்தது.

தொழிலாளர்கள் பெட்ரோலும் மோட்டார்களும் சேமிக்கப்பட்டிருந்த இடங்களைக் கண்டுபிடித்தார்கள், போக்குவரத்தை விரைவில் ஒழுங்காக இயங்கச் செய்தார்கள், பீரங்கிகளையும் பீரங்கி வண்டிகளையும் குதிரைகளையும் சேகரித்து பீரங்கிப் படைப்பிரிவுகளை அமைத்தார்கள். உணவுப்பொருள்களும் தீனியும் செஞ்சிலுவை சப்ளைகளும் சேகரித்துப் போர்முனைக்கு உடனே அனுப்பினார்கள். கலேதினுக்கு* அனுப்பப்பட்ட 10,000 துப்பாக்கிகளை அவர்கள் கைப்பற்றித் தொழிற்சாலைகளுக்கு வினியோகம் செய்தார்கள்.

தொழிற்சாலைகளில் சம்மட்டிகளின் தடதடப்புக்குப் பதில் அணிநடை போடும் பாதங்களின் சடசடப்பு கேட்கலாயிற்று. மேஸ்திரிகளின் கட்டளைகளுக்குப் பதில் பாங்கற்ற படைப் பிரிவுகளுக்குப் பயிற்சி அளிக்கும் கடற்படை வீரர்களின் உத்தரவுகள் ஒலிக்கலாயின. மோட்டார் கார்கள் தெருக்களில் விரைந்து ஆயுதமேந்துவதற்கான பின்வரும் அறைகூவலை முழக்கின:

''கேரென்ஸ்கியின் கர்னீலவ் கும்பல்கள் நமது தலைநகரின் சுற்றுப்புறங்களுக்கு அபாயம் விளைத்துக்கொண்டிருக்கின்றன. மக்களுக்கும் அவர்களது வெற்றிகளுக்கும் எதிரான

---

*கலேதின், அ. மி.—ஜார் சேனையின் ஒரு ஜெனரல். 1917 முடிவிலும் 1918 தொடக்கத்திலும் தோன் ஆற்றுப் பிரதேசத்தில் புரட்சி எதிர்ப்புக் கிளர்ச்சிக்குத் தலைமை வகித்து நடத்தினான். இந்தக் கிளர்ச்சி சோவியத் துருப்புக்களால் ஒடுக்கப்பட்டபின் கலேதின் தன்னையே சுட்டுக்கொண்டு இறந்தான்.

எல்லாப் புரட்சி எதிர்ப்பு முயற்சிகளையும் இரக்கம் இன்றி நசுக்குவதற்குத் தேவையான எல்லா உத்தரவுகளும் பிறப்பிக்கப்பட்டுவிட்டன.

''சேனைக்கும் புரட்சியின் செங்காவற்படைக்கும் தொழிலாளர்களின் உடனடியான உதவி தேவைப்படுகிறது.

''வட்டார சோவியத்துக்களுக்கும் தொழிற்கூட-தொழிற்சாலைக் கமிட்டிகளுக்கும் பின்வருமாறு உத்தரவிடப்படுகிறது:

''1) காப்பகழ்கள் தோண்டவும் தடையரண்கள் அமைக்கவும் கம்பிக் காப்பு வேலிகள் நிறுவவும் முடிந்தவரை அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்களைத் திரட்டிக் கொண்டு வர வேண்டும்;

''2) இந்த நோக்கத்துக்காகத் தொழிற்கூடங்களிலும் தொழிற்சாலைகளிலும் வேலையைத் தாற்காலிகமாக நிறுத்தி வைப்பது எங்கெல்லாம் அவசியப்படுகிறதோ அங்கெல்லாம் உடனே அவ்வாறு செய்யப்பட வேண்டும்;

''3) கிடைக்கக்கூடிய எல்லா முள்கம்பிகளையும் வெறும் கம்பிகளையும் காப்பகழ்கள் தோண்டவும் தடையரண்கள் அமைக்கவும் உதவும் எல்லாக் கருவிகளையும் சேகரிக்க வேண்டும்;

''4) கிடைக்கக் கூடிய எல்லா ஆயுதங்களையும் தொழிலாளர்கள் தங்கள் மீது தரித்துக்கொள்ள வேண்டும்;

''5) மிகக் கண்டிப்பான ஒழுங்குமுறை கடைப்பிடிக்கப்பட வேண்டும், புரட்சிச் சேனைக்கு எல்லா வகையிலும் உதவ எல்லோரும் தயாராக இருக்க வேண்டும்.''

இந்த அறைகூவலை ஏற்று, மேல்கோட்டுகளுக்கு வெளியே தோட்டா வார்கள் மாட்டி, கம்பளிகளை முதுகுப்புறம் வார்களால் கட்டிக்கொண்டு, துடுப்பு மண்வெட்டிகளையும் தேநீர்க் கெண்டிகளையும் ரிவால்வர்களையும் கயிறுகளால் கட்டித் தொங்கவிட்டுக் கொண்டிருந்த தொழிலாளர்கள் எங்கும் காணப்படலாயினர். சாய்ந்த துப்பாக்கிச் சனியன்களின் நீண்ட ஒழுங்கற்ற வரிசைகள் இருளில் வளைந்து வளைந்து சென்றன.

தெற்கே இருந்து படையெடுத்துவந்த புரட்சி எதிர்ப்புப் படைகளை முறியடிப்பதற்கு போல்ஷெவிக் பெத்ரோகி

ராத் ஆயுதமேந்தி எழுந்தது. கட்டிட முகடுகளுக்கு மேலே ஒரு சமயம் கம்மலாகவும் மறு சமயம் கீச்சொலியுடனும் ஒலித்தன தொழிற்சாலை ஊதுசங்குகள். போருக்கு அபாய அறிவிப்பு செய்தன அவை.

நகருக்கு வெளியே சென்ற எல்லாச் சாலைகளிலும் ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் சாமான் பைகளையும் பிக்காசுகளையும் துப்பாக்கிகளையும் குண்டுகளையும் சுமந்த வாறு வெள்ளங்களாகப் பெருகினர். கவர்ச்சியற்ற பல் வகைக் கூட்டங்கள். அவற்றை உற்சாகப்படுத்துவதற்குப் பதாகைகளோ முரசுகளோ இல்லை. பாய்ந்து சென்ற லாரி கள் கூட்டத்தினர் மேல் சேற்றை வாரி அடித்தன. குளிரில் உறைந்து கொண்டிருந்த குழைசேறு அவர்களுடைய ஜோடு களுக்குள் கசிந்தது. பால்டிக் கடற்புறமிருந்து வீசிய காற்று அவர்களுடைய எலும்புகள்வரை குளிரால் விரைக்கச் செய்தது. எனினும் அவர்கள் ஓய்வு கொள்ளாமல் போர் முனையை நோக்கி முன்னேறிய வண்ணமாயிருந்தார்கள். சாம்பல் நிறப் பகல் கருண்ட இரவாக மாறியது. அவர்களுக் குப் பின்னே நகரம் தனது விளக்குகளின் வெளிச்சத்தால் வானை ஒளிர்வித்தது, அப்போதும் அவர்கள் இருளில் முன் னே சென்றுகொண்டே இருந்தார்கள். வயல்களிலும் காடு களிலும் இப்போது மங்கிய உருவங்கள் மொய்த்தன, கூடாரங் கள் அடித்தன, நெகிடிகள் மூட்டின, காப்பகழ்கள் தோண் டின, கம்பிகளை இழுத்து நீட்டின. சுருக்கமான ஒரே பகல், அதற்குள் ஆயிரமாயிரம் மக்கள் பெத்ரோகிராதில் இருந்து இருபது மைல் தூரம் வெளியேறி, புரட்சி எதிர்ப்புப் படை களுக்கு எதிராக உயிருள்ள மனித மதிற்சுவராக நின்றார்கள்.

இராணுவ நிபுணர்களின் பார்வையில் அது ஒரு கந்தல் சைனியம், வெறும் கும்பல். ஆனால் இந்தக் ''கும்பலில்'' போர்த் தந்திர நூல்களால் மதிப்பிடப்படாத ஒரு உந்தலும் ஆற்றலும் இருந்தன. இந்த இருண்ட மக்கள் ஒரு புது உல கின் கற்பனைக் காட்சிகளால் மேல்நிலைக்கு உயர்ந்திருந்தார் கள். கொள்கைப் போர் ஆவேசம் அவர்களது இரத்த நாளங்களில் பாய்ந்துகொண்டிருந்தது. முரட்டுத் துணிச்ச லுடன், ஆபத்தை மதியாமல், அடிக்கடி திறமையுடன் அவர்கள் போரிட்டார்கள். இருண்ட குறுங்காட்டுக்குள்

மறைந்த பகைவர்களை எதிர்த்து அவர்கள் பாய்ந்து புகுந்தார்கள். பாய்ச்சல் தாக்கு நடத்திய கஸாக்கியக் குதிரை வீரர்களை எதிர்த்து உறுதியுடன் நின்று அவர்களைக் குதிரைகள் மேலிருந்து இழுத்து வீழ்த்தினார்கள் இந்த மக்கள். மெஷீன்கன் குண்டுகளுக்கு முன் அவர்கள் நெடுஞ்சாண்கிடையாகத் தரையில் கிடந்தார்கள். வெடிக்கும் பீரங்கிக் குண்டுகள் அவர்களைச் சிதறி ஓடச் செய்தன, ஆனால் அவர்கள் மீண்டும் ஒருங்கு திரண்டார்கள். காயமடைந்தவர்களை அவர்கள் அப்பால் எடுத்துச் சென்று அவர்களுடைய காயங்களுக்குக் கட்டுப் போட்டார்கள். மடியும் தறுவாயிலிருந்த தங்கள் தோழர்களின் காதுகளில், ''புரட்சி! மக்கள்!'' என்று அவர்கள் கிசுகிசுத்தார்கள். ''சோவியத் நீடுழி வாழ்க! சமாதானம் வந்தே தீரும்!'' என்று மூச்சு திணற மொழிந்தவாறு உயிர் நீத்தார்கள் தோழர்கள்.

தொழிற்கூடங்களிலும் அழுக்குச் சேரிகளிலும் இருந்து வந்திருந்த இந்தப் பயிற்சியற்ற படைவீரர்களிடையே ஒழுங்கின்மையும் குழப்பமும் கலவரமும் இருக்கத்தான் செய்தன. எனினும் உழைப்பால் காய்ப்பேறிய இந்தப் பசித்த ஆண்கள், பெண்களின், தங்கள் நம்பிக்கைக்காகப் போரிட்ட இந்த மக்களின் உளமார்ந்த உற்சாகம் அவர்களது பகைவர்களின் ஒழுங்கமைந்த பட்டாளங்களைவிட அதிகச் செயல் வன்மை கொண்டிருந்தது. அது இந்தப் பட்டாளங்களை நொறுக்கி அழித்துவிட்டது. அவற்றின் உளத்திண்மையைத் தகர்த்துவிட்டது. அனுபவத்தால் உரமேறிய கஸாக்கியர்கள் வந்தார்கள், கண்டார்கள், அதனால் வெல்லப்பட்டு விட்டார்கள். போர்முனைக்கு அனுப்பப்பட்ட ''விசுவாசமுள்ள'' டிவிஷன்கள் இந்தத் தொழிலாளி வீரர்களைச் சுடுவதற்குக் கண்டிப்பாக மறுத்து விட்டன. எதிர்ப்பு அனைத்தும் தகர்ந்து சிதறியது அல்லது உருகிக் கரைந்துவிட்டது. கேரென்ஸ்கிய் மாறுவேடத்தில் போர்முனையிலிருந்து தப்பி ஓடினான். போல்ஷெவிக்குகளை நொறுக்கவிருந்த பிரம்மாண்டமான சேனைகளின் தலைவனுக்கு உடன் ஓடுவதற்குச் சிற்றதிகாரிகளின் காவற்படையணிகூடக் கிடைக்கவில்லை. போர்முனை நெடுகிலும் வெற்றியாளர்களாக விளங்கியவர்கள் பாட்டாளி மக்களே.

வெண்படையினர் டெலிபோன் நிலையத்தைக் கைப்பற்றுகிறார்கள்

சோவியத் பொதுமக்கள் பெத்ரோகிராதுக்கு வெளியே திடல்களில் போர் புரிந்துகொண்டிருந்தபோது புரட்சி எதிர்ப்பு திடீரெனப் பின்னணியில் தலை தூக்கியது. சோவியத் ஆட்சி அதிகாரத்தை நகரில் அதன் அடிப்படையில் செயலற்றதாக்கிவிட அது முற்பட்டது.

பனிக்கால அரண்மனையில் சிறை பிடிக்கப்பட்ட பின்பு உத்தரவாதத்தின்பேரில் விடுதலை செய்யப்பட்டிருந்த ராணுவ மாணவர்கள் தங்கள் உத்தரவாதத்தை முறித்து, வெண் படையினரின் இந்த எழுச்சியில் கலந்துகொண்டார்கள். டெலிபோன் நிலையத்தைக் கைப்பற்றும் பொறுப்பு அவர் களிடம் ஒப்படைக்கப்பட்டது.

டெலிபோன் நிலையம் நகரின் மிக முக்கியக் கேந்திரங் களில் ஒன்று. ஒரு பத்துலட்சம் கம்பிகள் பத்துலட்சம் நரம்பு கள் போன்று வெளிச்சென்று நகரை ஒரே அமைப்பு ஆக்க உதவின. பெத்ரோகிராதில் டெலிபோன் நிலையம் மார்ஸ்க் காயா வீதியில் இருந்த திண்ணிய கற்கோட்டையில் அமைந் திருந்தது. இங்கே சில சோவியத் பாராக்காரர்கள் நிறுத்தப் பட்டிருந்தார்கள். பகலின் சலிப்பூட்டும் வேலையின்போது அவர்கள் ஆர்வத்துடன் எதிர்பார்த்தது இரவில் பாராக் காரர்கள் மாற்றப்படுவதைத்தான்.

இரவு வந்தது. அதோடு இருபது ஆட்கள் தெருவில் அணிவகுத்து நடந்து வந்தார்கள். இரவு முறைக்காரர்கள் தங்களுக்கு விடுதலை அளிக்க வருகிறார்கள் என்று நினைத்தார் கள் பாராக்காரர்கள். உண்மையோ அதுவல்ல. செம்படை வீரர்கள் வேடத்தில் இருந்த வெண்படை அதிகாரிகள், இராணுவ மாணவர்களின் குழு அது. செங்காவற்படையின ருக்குரிய பாங்கில் துப்பாக்கிகளைச் சாய்வாகத் தொங்கவிட் டிருந்தார்கள் அவர்கள். செங்காவற்படை அடையாளச் சொல்லை அவர்கள் பாராக்காரர்களிடம் கூறினார்கள். அவர்களை நம்பிவிட்ட பாராக்காரர்கள் துப்பாக்கிகளை வைத்துவிட்டுப் போகத் திரும்பினார்கள். கணப்போதில் இருபது ரிவால்வர்கள் அவர்கள் தலைகளுக்குக் குறிவைக்கப்பட்டன.

''தவாரிஷ்ஷி!'' (தோழர்களே!) என்று கூவினர்கள் வியப்புற்ற செங்காவற்படையினர்.

''பாழாய்ப் போகிற பன்றிகளா! அதோ அந்த ஹாலுக்குள் போய் வாயை மூடிக்கொண்டிருங்கள். இல்லாவிட்டால் உங்கள் மண்டைகளைத் தகர்த்துவிடுவோம்'' என்று கத்திஞர்கள் வெண்படை அதிகாரிகள்.

திகைப்புற்ற பாராக்காரர்கள் அறையில் அடைக்கப்பட்டார்கள். ஓய்வும் விடுதலையும் அல்ல, வெண்படையினரின் கைகளில் சிறைப்படுதல்தான் தங்களுக்குக் கிட்டியது என்பதை அவர்கள் உணர்ந்தார்கள். டெலிபோன் நிலையம் புரட்சி எதிர்ப்பாளர்கள் கைகளுக்கு வந்துவிட்டது.

மறுநாள் காலை, டெலிபோன் நிலையத்தின் புதிய எஜமானர்கள் ஒரு பிரெஞ்சு இராணுவ அதிகாரியின் மேற்பார்வையில் அந்த இடத்தை அரண் செய்து முடித்தார்கள். திடீரென அந்த அதிகாரி என் புறம் திரும்பி, ''நீர் இங்கே என்ன செய்கிறீர்?'' எனக் கண்டிப்புடன் கேட்டான்.

''பத்திரிகை நிருபன், அமெரிக்கன், என்ன நடக்கிறது என்று பார்க்க வந்தேன்'' என நான் பதிலளித்தேன்.

''உங்கள் பாஸ்போர்ட்'' என்று கேட்டான். நான் அதை எடுத்துக் கொடுத்தேன். அவனுக்கு நம்பிக்கை ஏற்பட்டது. என்னிடம் மன்னிப்பு கோரினன். ''பார்க்கப்போனல் இது என் வேலை இல்லை. உங்களைப் போலவே நானும் என்ன நடக்கிறது என்று பார்க்க வந்தேன்'' என்றன். எனினும் அரண்செய்யும் வேலையை மேற்கொண்டும் இயக்கினன் அவன்.

வளைவு வாயிலின் இரு மருங்கிலும் பெட்டிகளையும் மோட்டார்களையும் கட்டைக் குவியல்களையும் கொண்டு தடையரண்கள் அமைத்தார்கள் இராணுவ அதிகாரிகள். வழியே சென்ற மோட்டார்களிலிருந்து உணவுப்பொருள்களையும் ஆயுதங்களையும் அவர்கள் பறித்துச் சேர்த்தார்கள். சோவியத் படைவீரர்களாகப் பணியாற்றக் கூடிய எல்லா வழிப்போக்கர்களையும் பிடித்து அடைத்தார்கள்.

சோவியத் போர்க் கமிஸார் அன்தோனவின் வடிவில் ஒரு பெரும் பரிசு அவர்களுக்குக் கிடைத்தது. தமது காரில் அவ்வழியே சென்ற அவர் திடீரென இருக்கையிலிருந்து

இழுத்து அகற்றப்பட்டார். இந்த அதிர்ச்சியிலிருந்து சுதாரித்துக்கொள்வதற்குள் அவர் அறைக்குள் தள்ளிப் பூட்டப்பட்டு விட்டார். புரட்சியின் தலைவிதி ஊசலாடிக் கொண்டிருந்த அந்த நேரத்தில் புரட்சி எதிர்ப்பாளர்களின் கைதி ஆகிவிட்டார் அவர். சிறைப்பட்டதால் அவர் அடைந்த வருத்தத்தையும் மீறிவிட்டது அவரைச் சிறைப்படுத்தியதால் அவர்கள் அடைந்த மகிழ்ச்சி. அவர்கள் களி துள்ளினார்கள். ஏனெனில் புரட்சி நகர் பெத்ரோகிராதின் ஒழுங்கமைக்கப்படாத பொதுமக்களிடையே தலைவர்கள் இன்னும் மிக மிகக் குறைவாகவே இருந்தார்கள். இராணுவ இயலின் எல்லா விதிகளுக்கும் இணங்க, தலைவர் அற்ற பொது மக்கள் தங்கள் கோட்டையை வன்மையாகத் தாக்கிக் கைப்பற்ற முடியாது என்று வெண்படையினர் அறிந்திருந்தார்கள். போல்ஷெவிக்குகளின் தலைமை இராணுவ விற்பன்னர் இப்போது அவர்கள் கைகளில் அகப்பட்டிருந்தார்.

புரட்சி தன் சக்திகளைத் திரட்டுகிறது

சில விஷயங்களை இந்த அதிகாரிகள் அறிந்திருக்கவில்லை. புரட்சி எந்த ஒரு நபரின் மூளையையோ, ஒரு சிலரது மூளைகளையோ சார்ந்திருக்கவில்லை, ருஷ்யப் பொது மக்களின் மொத்த மூளைகளையே சார்ந்திருந்தது என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. இந்தப் பொது மக்களின் அறிவையும் முன்முயற்சியையும் சந்தர்ப்பத்துக்கு ஏற்ற உபாயத்தைக் கடைப்பிடிக்கும் திறனையும் புரட்சி எவ்வளவு தூரம் தூண்டி ஊக்கி, உயிரோட்டமுள்ள ஒரே தொகுப்பு ஆக்கியிருந்தது என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. புரட்சி உயிருள்ள உடல், தன் ஆற்றலாலேயே வாழவும், தானே தன்னை இயக்கவும், அபாய அறிவிப்பு கிடைத்ததுமே மறைந்துள்ள தனது தற்காப்புச் சக்திகள் அனைத்தையும் அணிதிரட்டவும் வல்லது என்பதை அவர்கள் தெரிந்து கொள்ளவில்லை.

மனித உடலின் இரத்தத்தில் ஒரு கெட்ட கிருமி புகுந்ததும் சரீரம் முழுவதும் ஏதோ எச்சரிக்கை செய்யப்பட்டது போன்று அந்த அபாயத்தை உணர்கிறது. விசேஷ இரத்தவணுக்கள் அல்லது நிணநீரணுக்கள் ஒரு நூறு இரத்த

நாளங்கள் வழியே நச்சு மையத்தைத் தாக்க விரைகின்றன. உட்புகுந்த கிருமியை மொய்த்து அதை வெளியேற்ற அவை முயல்கின்றன. இது மூளையின் உணர்வு பூர்வமான செயல் அல்ல. மனித உடலுக்கு இயல்பான உணர்வற்ற அறிவு அது.

இப்போது சிவப்புப் பெத்ரோகிராதின் சரீரத்துக்குள், அதன் உயிருக்கே அபாயம் விளைக்கும் வகையில் புரட்சி எதிர்ப்பு என்ற கொடு நஞ்சு புகுந்திருந்தது. அதற்கு எதிர்ச் செயல் உடனே தொடங்கிவிட்டது. ஒரு நூறு வீதிகள், பாதைகள் வழியே தொற்றுநோய் மையமான டெலிபோன் நிலையத்துக்குத் தாமாகவே விரைந்தன இரத்தவணுக்கள் (இப்போது இவை செவ்வணுக்கள்).

டுமீல்! தடார்! கட்டையைத் தாக்கிச் சிம்பு பெயர்த்த ஒரு குண்டு துப்பாக்கியுடன் முதல் இரத்தச் செவ்வணுவின் வருகையை அறிவித்தது. டுமீல்! டுமீல்! தடார்! தடார்! சுவரிலிருந்து கல் துண்டுகளைப் பெயர்த்த குண்டுகளின் வீச்சு இன்னும் பல தாக்குப் படையினர் வந்துவிட்டதைத் தெரிவித்தது.

தடையரண்களின் ஊடாக நோக்கிய புரட்சி எதிர்ப்பாளர்கள் வீதி முனையில் செங்காவற்படையினரின் கூட்டங்களை ஏற்கனவே கண்டார்கள். அந்தக் காட்சி ஒரு பழைய ஜார் கால இராணுவ அதிகாரியை மிருகத்தனமான செயலுக்குத் தூண்டியது. ''குண்டுகள் சுடத் தொடங்குங்கள்! கொல்லுங்கள் இந்தக் கீழ்மக்கள் கும்பலை!'' என்று அவன் கத்தினன். தெருவின் ஒரு கோடியிலிருந்து மறு கோடிவரை வெண்படையினர் துப்பாக்கிக் குண்டுகளையும் மெஷீன்கன் குண்டுகளையும் புயல் வேகத்தில் பொழிந்தார்கள். குறுகிய பள்ளத்தாக்கு போல தெரு முழுவதும் ஓசையாலும் எதிரடித்து விழும் குண்டுகளாலும் நிறைந்தது. ஆனல் செம்படையினரின் பிணங்கள் எவற்றையும் காணேம். புரட்சிக்கார மக்கள் உயிர்த் தியாகிகள் ஆக ஆசைப்படவில்லை. ஆத்திர மூட்டும் வகையில் அவர்கள் கொல்லப்பட மறுத்தார்கள்.

இது முந்திய நாட்களிலிருந்து வேருயிருந்தது. அப்பொழுது மக்கள் துப்பாக்கிக் குண்டுகளின் பாதையில் கடமைப்பட்டவர்கள் போல நின்ருர்கள். பீரங்கிக் குண்டுகளால் துண்டுகளாகத் தகர்க்கப்பட்டும் கஸாக்கியர் குதிரைக் குளம்பு

களால் மிதித்துத் துவைக்கப்பட்டும் மெஷின்கன்களால் படுகொலை செய்யப்பட்டும் நூற்றுக் கணக்கான மக்கள் பனிக் கால அரண்மனைச் சதுக்கத்தில் சிதறிக் கிடந்தார்கள். அது மிக எளிதாக இருந்தது! இப்பொழுதும் அவர்கள் மட்டும் தடையரண்களை நேராகத் தாக்கினால் அவர்களைக் கொன்று ஒழிப்பது எவ்வளவு எளிதாக இருக்கும்!

ஆனால் புரட்சி தனது வளத்தைப் பத்திரமாகக் காத்தது. இந்த மக்களை அது எச்சரிக்கை உள்ளவர்கள் ஆக்கியிருந்தது. நீ என்ன செய்ய வேண்டும் என்று உன் பகைவன் விரும்புகிறான் என்பதைத் தெரிந்து கொண்டு, அதைச் செய்யாமல் இருந்துவிடு என்ற போர்த்தந்திரத்தின் முதல் பாடத்தைப் புரட்சி மக்களுக்குக் கற்பித்திருந்தது. தடையரண்கள் தங்களை அழிப்பதற்காக நிறுவப்பட்டுள்ளன என்பதைச் செம்படையினர் கண்டுகொண்டார்கள். எனவே தடையரண்களை அழிப்பதில் அவர்கள் முனைந்தார்கள்.

தடையரண்களைச் சோதனை செய்து தாக்குச் செயல் தந்திரத்தை அவர்கள் தீர்மானித்தார்கள். வாய்ப்பான இடம் ஒவ்வொன்றையும் அவர்கள் தெரிந்தெடுத்துக் கொண்டார்கள். கல் தூண்களின் பின் அவர்கள் மறைந்து கொண்டார்கள். சுவர்கள் மேல் தொற்றி ஏறினார்கள். மதில் முகடுகளின் ஓரமாக ஊர்ந்தார்கள். மேற் கூரைகள் மேல் நெடுஞ்சாண்கிடையாகப் படுத்துக்கொண்டார்கள். ஜன்னல்களிலும் புகைப்போக்கிகளின் பின்னேயும் அவர்கள் பதுங்கிக்கொண்டார்கள். ஒவ்வொரு கோணத்திலிருந்தும் தடையரண்களைக் குறிவைத்துத் துப்பாக்கிகளைத் திருப்பிக் கொண்டார்கள். பின்பு திடீரென அவர்கள் சுடத் தொடங்கி, தடையரண்களை ஆலங்கட்டி மழைபோன்ற குண்டுகளால் துளைத்தார்கள். எப்படித் தொடங்கினார்களோ அப்படியே திடுதிப்பென்று சுடுவதை நிறுத்திவிட்டு, புதிய இடங்களுக்குப் பதுங்கிச் சென்றார்கள். இன்னொரு குண்டுமாரி, மீண்டும் நிசப்தம். கண்ணுக்குத் தெரியாத வேட்டைக்காரர்கள் சுற்றிலும் வட்டவாகில் குண்டு சுட, கண்ணியில் அகப்பட்டுக் கொண்ட விலங்குகள் போல உணரத் தொடங்கினார்கள் வெண்படை அதிகாரிகள்.

புதிய படைப்பிரிவுகள் வந்த வண்ணமாய் இருந்தன. வட்டத்தில் இருந்த இடைவெளிகளை அவை நிரப்பின.

வளையம் மேலும் மேலும் இறுகி, புரட்சி எதிர்ப்பை நடுவில் அடைத்து மூடிவிட்டது. தனது நோய்ப் பகுதியை இவ்வாறு தனிப்படுத்திய பின்னர் அதை ஒழித்து அகற்றுவதற்குப் புரட்சி ஆயத்தம் செய்யலாயிற்று.

குண்டுகளின் புயல் வீச்சு வெண்படையினரைத் தடையரண்களை விட்டு விட்டு வளைவுவாயிலில் புகல் அடையும்படி கட்டாயப்படுத்தியது. இப்போது கல் மதில்களின் பின்னே நின்று அவர்கள் ஆலோசனை செய்யலானார்கள். திடீரென்று தாக்கி, செம்படையினரின் முற்றுகையைப் பிளந்து வெளியேறித் தப்புவது என்பது அவர்கள் போட்ட முதல் திட்டம். ஆனால் இது தற்கொலைக்கு ஒப்பாகும் என்பதை அவர்கள் கண்டார்கள். ஒருவன் வேவு பார்ப்பதற்காக முகட்டின்மேல் ஊர்ந்து வெளிவந்தவன் தோளில் பாய்ந்த குண்டுக் காயத்துடன் விரட்டியடிக்கப்பட்டான். வெண்படையினர் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்தலாம் என வேண்டுகோள் விடுத்து, நேரம் கடத்த முயன்றனர். ஆனால் முற்றுகையாளர்கள் பதில் சொன்னார்கள்:

''மூன்று நாட்களுக்கு முன் நாங்கள் உங்களைப் பனிக்கால அரண்மனையில் சிறை பிடித்தோம். அப்போது வாக்குறுதியின் பேரில் உங்களை விடுதலை செய்தோம். நீங்கள் உங்கள் வாக்குறுதியை மீறினீர்கள். எங்கள் தோழர்களை நீங்கள் சுட்டு வீழ்த்தினீர்கள். உங்களை நாங்கள் நம்பவில்லை.''

அன்தோனவை ஒப்புக்கொடுத்து விடுவதாகக் கூறிப் பொது மன்னிப்பு அளிக்குமாறு வேண்டினார்கள் வெண்படையினர்.

''அன்தோனவையா! அவரை நாங்களே விடுவித்துக் கொள்வோம். அவருக்குத் தீங்கு செய்தால் உங்களை ஒருவர் பாக்கியில்லாமல் கொன்று தீர்த்துவிடுவோம்'' என்று பதில் அளித்தார்கள் செம்படையினர்.

செஞ்சிலுவைக் காரினால் செம்படையினர் ஏமாற்றப்பட்டனர்

புகலற்ற நிலைமைகள் முரட்டுத்துணிச்சல் நிறைந்த செயல்களுக்குத் தூண்டுகின்றன.

''ஒரு செஞ்சிலுவைக் கார் இருந்தால் நன்றாயிருக்குமே'' என்று பெருமூச்செறிந்தான் ஒரு வெண்படை

அதிகாரி. ''சிவப்பர்கள் அதைத் தங்கள் அணிகளின் ஊடாகச் செல்ல அனுமதிக்கக் கூடும்'' என்றான்.

''செஞ்சிலுவைக் கார் இல்லாவிட்டாலும் செஞ்சிலு வைகள் நம்மிடம் இருக்கின்றன'' என்று கூறி நான்கு பெரிய செஞ்சிலுவைக் குறித்தாள்களை முன்னே வைத்தான் இன்னொரு அதிகாரி. ஒரு காரின் முகப்பிலும் பக்கங்களிலும் பின்னேயும் அவற்றை ஒட்டினான். உடனே அது செஞ்சிலுவைக் கார் போன்று காட்சி அளித்தது.

இரண்டு இராணுவ அதிகாரிகள் முன் சீட்டில் உட்கார்ந் தார்கள். ஒருவன் காரோட்டியின் இடத்திலும் மற்றவன் ரிவால்வர் பிடித்த கையை காரின் பக்கப் பைக்குள் மறைத் தவாறு அருகிலும். பயத்தினால் பாதி புத்திநிதானம் இழந்து விட்ட, அலங்கோலத் தோற்றம் கொண்ட ஒருவன் பின் சீட்டில் அமர்ந்தான். அவன் ஒரு ராணுவ மாணவனின் தகப்பன்.

''ஏறிக்கொண்டு எங்களுடன் வாருங்கள்'' என்று என் னிடம் சொன்னார்கள் அந்த அதிகாரிகள். பூர்ஷ்வா உடை அணிந்தவன் எவனும் பூர்ஷ்வாக்கள் தரப்பைச் சேர்ந்தவன் என்று வெண்படையினர் எப்போதும் தாங்களாகவே எண் ணிக்கொண்டார்கள். உதாரணமாக ஜான் ரீடினதும் என் னுடையவும் புரட்சி நடவடிக்கையை அறிந்த பலர் கூட, அது போல்ஷெவிக்குகளின் நம்பிக்கையைப் பெறுவதற்கான சூழ்ச்சியே என்று நினைத்தார்கள்.

நான் காரில் ஏறிக்கொண்டேன். காரின் முன் முகடு வளைவு வழியினூடாக வெளியே துருத்தப்பட்டது. செஞ் சிலுவை அடையாளத்தைக் கண்டதும் செம்படையினரின் சுடுகை நின்றுவிட்டது. மெதுவாகவும் கவலையுடனும் நாங் கள் செம்படை வரிசைகள்வரை காரை ஓட்டிச் சென்றோம். தரைப் படையினரும் கடற்படையினரும் தொழிலாளர்களும் துப்பாக்கிகளும் கைகளுமாக எங்களை எதிர்கொண்டார்கள்.

''உங்களுக்கு என்ன வேண்டும்?'' என்று விழிகளில் பொறி பறக்க வினவினார்கள்.

''எங்கள் ஆட்களில் பலர் படுகாயம் அடைந்திருக்கி றார்கள். பட்டித்துணிகளோ மருந்துகளோ இல்லை. செஞ் சிலுவைச் சங்கக் கட்டிடம் சென்று மருந்துகள் வாங்கிவர

விரும்புகிறோம். எங்கள் ஆட்கள் கொடுமையாக வேதனைப் படுகிறார்கள்'' என்று விளக்கினான் காரோட்டி இடத்தில் இருந்த அதிகாரி.

''வேதனைப்படட்டும் அவர்கள். எங்கள் ஆட்களை அவர்கள் துன்பத்துக்கு உள்ளாக்கவில்லையா? அதிலும் நாங்கள் இப்போதுதான் அவர்களை வாக்குறுதியின் பேரில் விடுவித்திருந்தோம்—பாழாய்ப் போகிற பொய்யர்கள்'' என்று ஒரு திட்டுடன் உறுமினான் ஒரு கடற்படை வீரன்.

இன்னொரு கடற்படை வீரன் அவனைப் பார்த்து, ''இல்லை, தவாரிஷ்'' என்று கூறிவிட்டு, ''நல்லது, போங்கள், சீக்கிரம்'' என்று காரில் இருந்த எங்களிடம் சொன்னான்.

நாங்கள் தெருவில் முன்னே பாய்ந்து சென்றதும் டெலிபோன் நிலையத்தின்மீது துப்பாக்கித் தொடர் வெடித்தாக்கு மீண்டும் தொடங்கியது.

''இந்தச் செங்காவற்படையினர் அப்படி மோசமானவர்கள் இல்லை'' என்றேன் நான்.

'''துராக்கி' (மடையர்கள்). நீங்கள் ஆங்கிலத்தில் சொல்வதுபோல 'டாம் பூல்ஸ்' (அடி மடையர்கள்), இல்லையா?'' என்று அவர்கள் வெறிச் சிரிப்பு சிரித்தார்கள்.

ஒரு வேளை யாரேனும் பின்தொடர்ந்து வந்தால் அவர்களைத் தடம் பிசகச் செய்யும் பொருட்டு மிகவும் சுற்று வழியாகக் காரை ஓட்டியவாறு பிரெஞ்சுக் கப்பல்துறை வழியே படு வேகமாக விரைந்தோம் நாங்கள். ஒரு திடீர்த் திருப்பத்துக்குப் பின் எங்கள் கார் எஞ்சினீயர்கள் கோட்டைக்கு எதிரே வந்து சேர்ந்தது. அதன் பெரிய வாயிற் கதவுகள் எங்களை உள்ளே விடுவதற்காகத் திறக்கப்பட்டன. நிமிட நேரத்திற்கெல்லாம் நாங்கள் ஒரு வரவேற்புக் கூடத்தை அடைந்தோம். ருஷ்ய, பிரெஞ்சு, பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகள் அதில் நிறைந்திருந்தார்கள். டெலிபோன் நிலைய நெருக்கடி பற்றிய அறிக்கையைக் கேட்டுவிட்டு, ஒரு கவச மோட்டாரையும் துணைப்படைகளையும் உடனே அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டது இராணுவக் காரியாலயம். வேறு சில சில்லறை வேலைகளை முடித்துக்கொண்டு, ஒரு ஜாராட்சி ஜெனரலுடன் சில வார்த்தைகள் பேசிவிட்டு நாங்கள் போவதற்காகத் திரும்பினோம்.

''ஒரு நிமிடம் பொறுங்கள், உடன் எடுத்துப் போவதற்கு உபயோகமான சில சாமான்களை உங்களுக்குத் தருகிறேன்'' என்று எங்களை நிறுத்தினான் ஜெனரல். ஒரு மேஜை அருகே உட்கார்ந்து சோவியத் சான்றுக் கடிதங்களை அளவிலும் வடிவிலும் ஒத்த சில காகிதங்களை வெளியில் எடுத்து வைத்தான். ஒரு முத்திரையை எடுத்து முதல் சான்றுக் கடிதத்தின்மீது டக்கென்று அடித்துப் பதித்தான். ''இராணுவ-புரட்சிக் கமிட்டி'' என்ற மந்திரச் சொற்கள் சோவியத் முத்திரையின் வடிவத்திலும் எழுத்து அமைப்பிலும் அதில் பொறிக்கப்பட்டிருந்தன. அது திருடப்பட்ட சோவியத் முத்திரை இல்லாவிட்டால், மிகச் சரியான நகல். அது போலி என்பதை யாரும் கண்டுபிடிக்க முடியாது.

சான்றுக் கடிதத்தைக் கொடுத்துவிட்டு, ''த்ரோத்ஸ்கியே கூட இதை விட மேலான நற்சான்றிதழ் உங்களுக்குத் தர முடிந்திராது. இது போன்ற நிச்சயம் அற்ற நேரத்தில் சரியான வகைக் காகிதங்களை உடன் கொண்டு செல்வது எப்போதும் அவசியம்'' என்று கிண்டலாகச் சொன்னான் ஜெனரல். பின்பு இன்னும் இரு சான்றுக் கடிதங்களுக்கு முத்திரை குத்திவிட்டு, ''இந்தாருங்கள்! எந்த நெருக்கடிக்கும் தயாராக உதவும். எழுத்துப் பிழைகளுடன் கோணல் வரிகளில் இதை நிரப்புங்கள், நீங்கள் விரும்பும் எந்த இடத்திற்கும் செல்ல முதல் தரமான போல்ஷெவிக் அனுமதிச் சீட்டு உங்களிடம் இருக்கும். ஆமாம், இன்னும் ஒன்று'' எனக் கூறியவாறு பேஸ்பால் அளவான சில கறுப்பு இரும்பு உருண்டைகளைக் கொடுத்து, ''கொஞ்சம் இவையும் கையோடு காவலாக இருக்கட்டும், சமயத்துக்கு உதவும்'' என்றான்.

''எறிகுண்டுகளா?'' என்று வினவினேன்.

''இல்லை. இவை மாத்திரைகள். மருந்துச் சிமிழ்கள். சிவப்பர்களுக்கு மருந்து. இந்த மாத்திரைகளில் ஒன்றைச் செம்படைக்காரன் ஒருவனுக்குச் சரியான இடத்தில் கொடுங்கள், போல்ஷெவிஸம், புரட்சி, சோஷலிஸம் ஆகியவற்றுக்கும் அவனைப் பீடித்திருக்கும் மற்ற எல்லா நோய்களுக்கும் இது கைகண்ட மருந்தாக இருக்கும். என்ன நான் சொல்கிறது?'' என்று தனது வேடிக்கைப் பேச்சால் தானே உச்சி குளிர்ந்துபோய், ''மாத்திரைகள் நிறைந்த செஞ்சிலுவைக் கார்!'' என்றான்.

எங்கள் கார் மீண்டும் டெலிபோன் நிலையத்தை நோக்கிச் செல்லலாயிற்று.* ஆனால் கடந்த அரை மணி நேரத்தில் வீதிகள் மாறிவிட்டன. சிவப்புக் காவலர்கள் அனேகமாக ஒவ்வொரு வீதி முனையிலும் நிறுத்தப்பட்டிருந்தார்கள். இவர்கள் பெரும்பாலும் குடியானவர்கள். அமைதியான கிராமச் சூழ்நிலையிலிருந்து விதி இவர்களை இந்த நகரத்துக்கு இழுத்துவந்திருந்தது. இந்நகரிலோ, புரட்சிக்காரர்களும் புரட்சி எதிர்ப்பாளர்களும் மொய்த்திருந்தார்கள், அவர்களைத் தனிப்பிரித்து அறிய எவ்வித அடையாளங்களும் இல்லை.

நாங்கள் எங்கள் காகிதங்களை வீசி ஆட்டிக்கொண்டு, எங்கள் காரின்மேல் இருந்த செஞ்சிலுவை அடையாளத்தைச் சுட்டிக்காட்டி, ''காயமடைந்த 'தவாரிஷ்களுக்கு' உதவி'' என்று கத்தியவாறு அருகே வந்ததும் அவர்களுக்குத் தலைகால் புரியவில்லை. விஷயம் என்ன என்று அவர்கள் நிதானிப்பதற்குள் நாங்கள் காரை ஓட்டிக்கொண்டு மேலே சென்றுவிட்டோம். ஒரு காவலனுக்குப் பின் மற்றொருவனாகத் திகைப்பில் ஆழ்த்தப்பட்டான். கடைசியாக மில்லியோன்னயா வீதியின் நடுவே காவல் புரிந்துகொண்டிருந்த வாட்டசாட்டமான ஒரு குடியானவனை அணுகினோம். அவன் உயர்த்திய துப்பாக்கியுடன் வழியை மறிக்கவே நாங்கள் சட்டெனக் காரை நிறுத்த வேண்டியதாயிற்று.

''மடையா! இது செஞ்சிலுவைக் கார் என்பது உன் கண்ணில் படவில்லையோ? 'தவாரிஷ்கள்' உயிர்விட்டுக் கொண்டிருக்கிறார்கள், எங்கள் நேரத்தை வீணாக்காதே'' என்று கத்தினார்கள் வெண்படை அதிகாரிகள்.

---

*எஞ்சினீயர்கள் கோட்டையிலிருந்து சரியான நேரத்தில் அகன்றதால்தான் நான் கைதியாகாமல் தப்பினேன். கேரென்ஸ்கிய் அமைச்சரவையில் உதவிப் போர் அமைச்சராயிருந்தவர் இருபது ஆண்டுகளுக்குப் பின் இந்த விஷயத்தை எனக்குத் தெரிவித்தார். வெண்படைகளின் இராணுவத் தலைமைக் காரியாலயத்தினருக்கு நான் எஞ்சினீயர்கள் கோட்டையில் இருப்பது தெரிந்ததும் என்னை உடனே கைது செய்யும்படி அவர்கள் போன் செய்தார்களாம். ஆனால் அதற்குள் எங்கள் செஞ்சிலுவைக் கார் போய் விட்டதாம்.— **ஆசிரியரின் குறிப்பு.**

''நீங்களும் 'தவாரிஷ்கள்' தானே?'' என்று அதிகாரிகளின் உடுப்புக்களைச் சந்தேகத்துடன் நோட்டமிட்டவாறு கேட்டான் குடியானவன்.

''சந்தேகமில்லாமல் நாங்களும் 'தவாரிஷ்கள்' தாம். பூர்ஷ்வாக்கள் மக்களின் உதிரத்தை நீண்ட காலமாகக் குடித்துவிட்டார்கள். புரட்சி எதிர்ப்புத் துரோகிகள் வீழ்க!'' என்று புரட்சிச் சொற்றொடர்களை அள்ளி வீசினுர்கள் வெண்படை அதிகாரிகள்.

''அதிகாரிகள் சாதாரண மக்களின் உதவிக்கு வரும் நாளை நான் காண வாய்த்துவிட்டதா?'' என்று தனக்குள்ளாகப் போல முணுமுணுத்தான் குடியானவன். இது மட்டுமீறிய சங்கதியாக இருந்தது. அதை முழுவதும் நம்ப அவனுல் முடியவில்லை. எங்கள் சான்றுக்கடிதங்களைக் கேட்டான் அவன்.

வரிகள்மீது விரலை ஓட்டியவாறு ஒவ்வொரு வார்த்தையையும் சிரமத்துடன் படித்தான் அவன். குடியானவன் அதிகாரியின் சான்றுக் கடிதத்தைப் படிக்கையில் அதிகாரி ரிவால்வர்மீது தயாராகக் கை வைத்தவாறு அவன் முகத்தைக் கூர்ந்து நோக்கினுன். தான் சாவுக்கு அவ்வளவு அருகில் இருந்ததை அந்தக் குடியானவன் தெரிந்துகொள்ளவே இல்லை. ''நீங்கள் மேலே போகக் கூடாது'' என்று மட்டும் அவன் சொல்லியிருந்தால் அதிகாரி அவன் மண்டையைச் சிதற அடித்திருப்பான். எங்களைப் போக அனுமதித்தது அவன் வாழ அனுமதித்துக்கொண்டதாகும். எங்கள் கடிதத்தின் மேல் இருந்தது கள்ள முத்திரை என அவன் அறியவில்லை. தன் கடிதத்தில் உள்ளவாறே அது இருந்ததைத்தான் அவன் கண்டான். எனவே, ''போகலாம்!'' என்றுன் அவன். நாங்கள் மேலே சென்ருேம்.

டெலிபோன் நிலையத்தைச் சூழ்ந்திருந்த செம்படை வளையத்துக்கு மீண்டும் வந்து சேர்ந்தோம். வெண்படை அதிகாரிகள் கணப்போது பதற்றம் அடைந்தார்கள். காயமடைந்த வெண்படையினருக்கு வாழ்வும் உதவியும் கொண்டுவரும் வியாஜத்தில் செம்படையினருக்குச் சாவும் காயங்களும் கொண்டுவந்திருந்தார்கள் அவர்கள். இந்தச் செம்படையினர் அந்த விஷயத்தை அறியவில்லை. புரட்சி எதிர்ப்

பின் நம்பிக்கைத் துரோகத்தை அவர்கள் ஒரு முறை மாதிரி பார்த்திருந்தார்கள் எனினும் அது எல்லா ஒழுக்க நெறி விதிகளையும் புறக்கணிக்கும், தனது சொந்த நியமங்களையே மீறும் என்று அவர்கள் எண்ணவே இல்லை. எனவே மனிதாபிமானத்தின் பெயரால் தங்கள் காரை விரைவாகச் செல்ல அனுமதிக்கும்படி இந்த அதிகாரிகள் வேண்டிக்கொண்டதும், ''நல்லது, செஞ்சிலுவை. வேகமாகப் போங்கள்'' என்றார்கள் செம்படையினர்.

அணி வரிசைகள் விலகி வழிவிட்டன. நிமிட நேரத்திற்கெல்லாம் எங்கள் கார் எறிகுண்டுச் சுமையுடன் டெலிபோன் நிலைய வளைவு வாயிலுக்கு உள்ளே நுழைந்தது. சிறைப்பட்டிருந்த வெண்படையினர் மகிழ்ச்சிக் கூச்சல்களுடன் அதை வரவேற்றார்கள். எறிகுண்டுகளையும் அண்மை நேர இராணுவத் தகவல்களையும் பெற்று அவர்கள் களிப்படைந்தார்கள். தங்கள் உதவிக்குக் கவச மோட்டார் வந்து கொண்டிருக்கிறது என்ற செய்தி அவர்களுக்கு எல்லாவற்றிலும் அதிக மகிழ்ச்சி அளித்தது.

அத்தியாயம் பத்து

வெண்படையினருக்குக் கருணை காட்டுவதா, மரண தண்டனை விதிப்பதா?

டெலிபோன் நிலையத்துக்குள் சிக்கிக்கொண்டிருந்த வெண்படையினரின் எதிர்காலம் இருளடைந்து இருந்தது. ஆனால் அவர்களைத் தப்புவிப்பதற்குக் கவச மோட்டார் ஒன்று விரைந்து வந்துகொண்டிருக்கும் சந்தோஷச் செய்தி இப்போது கிடைத்தது. அதைக் கண்டுவிடும் ஆவலுடன் தெருவில் உன்னிப்பாகப் பார்வை செலுத்தினார்கள் அவர்கள்.

கவச மோட்டார் நெவ்ஸ்க்கிய் நெடுஞ்சாலையிலிருந்து அசைந்தாடி வந்ததும் அவர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து அதை வரவேற்றார்கள். பெரிய இரும்புப் புரவி போன்று அது பேரிரைச்சலுடன் நகர்ந்து தடையரண்களின் முன்னே

நின்றது. வெண்படையினர் மீண்டும் மகிழ்ந்து ஆர்ப் பரித்தார்கள். கெடுவிதி கொண்ட ஆர்ப்பரிப்பு! தாங்கள் களி ஆரவாரம் செய்வது தங்கள் இறுதி குறித்தே என்பதை அவர்கள் அறியவில்லை. இது தங்கள் கவச மோட்டார் அல்ல, செம்படையினரால் அது கைப்பற்றப்பட்டுவிட்டது என்ப தை அவர்கள் உணரவில்லை. அது டிராய் நகரக் குதிரை போன்ற வஞ்சப் பொறி. அதன் கவச வயிற்றுக்குள் மறைந்திருந்தார்கள் புரட்சிப் படைவீரர்கள். அது இங்கும் அங்கும் திடீர்த் திருப்பங்கள் செய்தது. முடிவில் அதன் மெஷின்கள் வாய் வளைவு வழியின் ஊடாக நோக்கியது. திடீரென அது தோட்டக் குழாய் நீரைப் பீச்சி அடிப்பது போலக் குண்டுகளைத் தாரையாய்ப் பீச்சி அடித்தது. களி ஆரவாரத்துக்குப் பதில் இப்போது அவலக் கூக்குரல்கள் கிளம்பின! பெட்டிகள் மேலாகவும் ஒருவர்மீது ஒருவரும் இடறிவிழுந்தவாறு வெண்படை அதிகாரிகள் ஒரு மொத்த மாகத் திரண்டு பெருங்கூச்சலுடன் நடைக்கூடத்தின் குறுக்கே பாய்ந்து மாடிப் படிகள்மேல் ஏறி ஓடினார்கள்.

காவிய நீதி! சில மணி நேரம் முன்பு இங்கே புரட்சி எதிர்ப்பாளர்கள் புரட்சியின் பொருத்தில் தங்கள் ரிவால் வர்களை வைத்து அழுத்திக்கொண்டிருந்தார்கள். இப்போ தோ, புரட்சி அவர்களுடைய பொருத்துக்களில் மெஷின் கன்களை வைத்து அழுத்திற்று.

வெண்படையினர் கிலியடித்துப் போயினர்

மாடிப் படிவரிசையின் உச்சியில் வெண்படையினர் ஒரு வரிடமிருந்து ஒருவர் விடுபட்டு விலகிக் கொண்டார்கள்—நின்று எதிர்ப்பதற்காக அல்ல, இன்னும் நன்றாக ஓடுவதற் காக. மனத்திண்மையுள்ள பத்து பெயர் இந்தப் படிவரிசை யில் இருந்தபடி ஆயிரம் பெயருக்கு எதிராகப் போரிட் டிருக்கலாம். ஆனால் இங்கேயோ, அவ்வாறு செய்வதற்குப் பத்து ஆட்கள் இல்லை. ஒருவன்கூட இல்லை. இங்கே இருந்தது கிலியடித்த கும்பல் மட்டுமே. திகில் அவர்களை முழுமை யாக ஆட்கொண்டு அவர்களது முகங்களை வெளிறச் செய்து அவர்களுடைய மூளைகளிலிருந்து பகுத்தறிவை அறவே

போக்கிவிட்டது. அவர்களது துணிவெல்லாம் போய் விட்டது. அவர்களது செயலறிவு எல்லாம் போய்விட்டது. பொது ஆபத்துக்கு எதிராக ஒற்றுமை கடைப்பிடிக்க வேண்டும் என்ற விலங்கின இயல்பூக்கம்கூட அவர்களை விட்டு அகன்றுவிட்டது.

"Sauve qui peut" (எவனுக்கு முடிகிறதோ அவன் தன்னைக் காத்துக்கொள்ளட்டும்) என்பது வயதில் மூத்த அதிகாரிகளின் கோஷம் ஆகிவிட்டது.

தொப்பிகளையும் இடைவார்களையும் வாட்களையும் அவர்கள் கழற்றிக் கடாசினார்கள். கௌரவச் சின்னங்கள் இப் போது அவமானத்தையும் சாவையும் குறிக்கும் பட்டயங் கள் ஆகிவிட்டன. தோள்வார்களையும் சரிகை இழைக்கயிறு களையும் தங்கப் பொத்தான்களையும் அவர்கள் பிய்த்து எறிந்தார்கள். தங்கள் பதவியை மறைப்பதற்கேற்ற தொழி லாளி உடையோ, மேலங்கியோ, மேல்கோட்டோ, எது வாயினும் கிடைக்காதா என்று அவர்கள் வேண்டினார்கள். ஒரு மூலையில் மாட்டப்பட்டிருந்த சிக்குப்பிடித்த கோட் டைக் கண்ட அதிகாரி ஒருவன் களியால் வெறிகொண்டு துள்ளினான். சமையல்காரனின் முன்றானை ஒரு காப்டனுக்குக் கிடைத்தது. அவன் அதை மாட்டிக்கொண்டு, கைகளைக் கோதுமை மாவில் நுழைத்துக் கொண்டான். திகிலால் ஏற் கனவே வெளிறியிருந்த அவன் இப்போது ருஷ்யாவிலேயே மிக வெளிறடைந்த வெண்படையினன் ஆகிவிட்டான்.

ஆனால் பெரும்பாலானவர்களுக்கு அலமாரிகள், மூட்டறைகள், மாட அறை மூலைகள் ஆகியவற்றின் இருள் தவிர வேறு காப்பு எதுவும் இல்லை. வேட்டைக்காரர்களால் துரத்தப்பட்ட விலங்குகள்போல இவற்றுக்குள் ஊர்ந்து பதுங் கினார்கள். பகைவர்களுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்த இந்த வெண்படை அதிகாரிகள் இப்போது தங்கள் கூட்டாளி களுக்கே துரோகம் இழைத்தார்கள். இராணுவ மாணவர்களை இந்தக் கண்ணியில் சிக்க வைத்தவர்கள் அவர்கள்தாம். இப்பொழுது கண்ணி இறுகத் தொடங்கியதும் இந்த அதிகாரிகள் அவர்களைக் கைவிட்டுவிட்டார்கள்.

முதலில் சுய நிதானத்துக்கு வந்த ராணுவ மாணவர் கள், "நம் அதிகாரிகள்! எங்கே நம் அதிகாரிகள்?" என்று கூவி அழைக்கத் தொடங்கினார்கள். ஆனால் அவர்களுடைய

கூக்குரல்களுக்குப் பதில் எதுவும் கிடைக்கவில்லை. ''பாழாய்ப் போகிற பேடிகள்! நம்மை நட்டாற்றில் விட்டுப் போய் விட்டார்கள்!'' என்று கத்தினார்கள் இராணுவ மாணவர்கள்.

இந்தத் துரோகத்தின் பால் ஏற்பட்ட சீற்றம் மாண வர்களை ஒன்றுசேர்த்தது. மாடிப்படி வரிசையைக் காப்பது தான் அவர்கள் கடைப்பிடிக்கக்கூடிய சிறந்த செயல் தந் திரம். ஆனால் அவர்களோ அதிலிருந்து அஞ்சி விலகிச் சென் றார்கள். படிவரிசையின் தொடக்கத்தில் பதிபோட்டிருந்த செம்படையினரின் பழிவெறி மாணவர்களைத் திகில் கொள் ளச் செய்தது. அவர்களுக்கு முன்னே நகரத் துணிவு வர வில்லை. குறுகிய புகுவாயிலும் கனத்த சுவர்களும் கொண்ட ஓர் அறைக்கு உள் அவர்கள் பதுங்கிக் கொண்டார்கள். படிகள் வழியே பொங்கிப் பெருகி நடைக்கூடத்தில் பாய்ந்து தங்களை மூழ்கடிக்கக் கூடிய சிவப்பு வெள்ளப் பிரவாகத் தை எதிர்பார்த்தவாறு வளையில் திரளாகப் பதுங்கிய எலிகள் போல அவர்கள் அங்கே காத்திருந்தார்கள்.

இந்த இளைஞர்களில் சிலர் நடுத்தர வகுப்பைச் சேர்ந் தவர்கள். இவர்களுக்கு இந்த முடிவு இரு மடங்கு துயரம் கொண்டது. எந்தக் குடியானவர்களுடனும் தொழிலாளர்க ளுடனும் தங்களுக்கு எவ்விதச் சச்சரவும் கிடையாதோ அவர் கள் கைகளாலேயே இவர்கள் மடிய வேண்டும். ஆனால் புரட்சி எதிர்ப்பின் இந்த முகாமில் மாட்டிக்கொண்ட அவர்கள் அதன் அழிவிலும் பங்கு கொண்டாக வேண்டும். இதற்குத் தாங்கள் முற்றிலும் ஏற்றவர்களே என்பதை அவர்கள் அறிந் திருந்தார்கள். இந்தக் குற்ற உணர்ச்சி அவர்களுக்கு மனத் தளர்ச்சி ஏற்படுத்தியது. துப்பாக்கிகள் அவர்கள் கைகளி லிருந்து நழுவி விழுந்தன. நாற்காலிகளிலும் மேஜைகள் மேலும் தொய்ந்து உட்கார்ந்து முனகினார்கள் அவர்கள். சிவப்பு வெள்ளம் பிரசண்டமாக உள்ளே பாய்ந்து வரப் போகிற புகுவாயில் மீதே பதிந்திருந்தன அவர்களுடைய விழிகள். மாடிப்படிமீது மோதும் முதல் அலையின் ஓசை யையும் கதவு தடதடவென்று இடிக்கப்படுவதையும் கேட் பதற்காகக் கூர்ந்து கவனித்தவாறு இருந்தார்கள் அவர்கள். அவர்களுடைய நாடிகள் படபடப்பதைத் தவிர வேறு எவ்வித ஓசையும் இல்லை.

செம்படையினரும் வெண்படையினரும் பெண்களும் கதி கலங்குகிறார்கள்

இந்தக் கட்டிடத்தில் இன்னொரு ''சித்திரவதை அறை'' இருந்தது. அன்தோனவும் சிவப்புப் பாராக்காரர்களும் அன்று பகல் முழுதும் வெண்படையினரால் பிடிக்கப்பட்ட கைதிகள் அனைவரும் அங்கே இருந்தார்கள். தங்கள் புரட்சியின் தலைவிதியையும் தங்கள் சொந்தத் தலைவிதியையும் தீர்த்துக்கட்டும் போர் வெளியே உக்கிரமாக நடந்து கொண்டிருக்கையில் அவர்கள் சிறையில் அடைபட்டு நிர்க்கதியாக உட்கார்ந்திருந்தார்கள். போர் எப்படி நடக்கிறது என்று அவர்களிடம் சொல்வதற்கு ஒருவரும் வரவில்லை. துப்பாக்கிகளின் அமிழ்ந்த சடசடப்பும் விழும் கண்ணாடி நொறுங்கும் ஓசையும் மட்டும் கனத்த சுவர்கள் வழியே காதில் பட்டன.

இப்போது இந்த ஓசைகள் எல்லாம் திடுதிப்பென்று அடங்கிவிட்டன. இதன் அர்த்தம் என்ன? புரட்சி எதிர்ப்பின் வெற்றியா? வெண்படையினர் வென்றுவிட்டனரா? அடுத்தபடி என்ன? கதவு திறக்கப்படுமா? சுடுபடையணி அவர்களைச் சுவரோரமாக வரிசையாய் நிறுத்துமா? அவர்கள் கண்கள் துணிகளால் கட்டப்படுமா? துப்பாக்கிகள் குண்டுகளை வெடிக்குமா? அவர்களுக்குச் சாவு நேருமா? புரட்சி மடிந்து விடுமா? இவ்வாறு, தலைகளைக் கைகளில் புதைத்தவாறு அவர்கள் எண்ணமிட்டார்கள். கதவுக்கு உயரே சுவற்றில் மாட்டியிருந்த கடிகாரம் டிக்டிக்கென்று விநாடிகளை இரக்கமின்றி ஒலித்தவண்ணமாக இருந்தது. ஒவ்வொரு டிக் ஒலியும் கடைசியானதாக இருக்கலாம். அந்த இறுதி விநாடியை எதிர்பார்த்தவாறு, நடைக்கூடத்தில் சுடுபடையணி வரும் காலடிச் சத்தம் கேட்கிறதா என உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தார்கள் அவர்கள். ஆனால் கடிகாரத்தின் டிக் டிக் ஒலி தவிர வேறு சந்தடியே இல்லை.

இன்னும் ஒரு ''சித்திரவதை அறை''. அதிலே நிறைந்திருந்தார்கள் மாதர்கள். அது மேல் அறை. நூற்றுக்கணக்கான டெலிபோன் பெண்கள் ஸ்விச் போர்டுகளைச் சுற்றிக் கும்பல் கும்பலாக ஒண்டியிருந்தார்கள். எட்டு மணி

நேரக் குண்டுத்தாக்கும், வெண்படை அதிகாரிகளின் மிரண்ட ஓட்டமும், உதவி கோரி அவர்கள் போட்ட வெறிக்கூச்சலும் இந்தப் பெண்களைப் படு கலவரத்தில் ஆழ்த்திவிட்டன. இவர்களது மனங்களில் அலங்கோலக் கற்பனைகள் உண்டாயின. போல்ஷெவிக் கொடுமைகளையும், ''மாதர் பட்டாளத்'' தினர் கற்பழிக்கப்பட்டதையும், கீழே முகப்பு வெளியில் திரளாக மொய்த்திருந்த சிவப்புக் கும்பல்கள் செய்ததாகக் கூறப்பட்ட குற்றங்களையும் பற்றிய ஆதாரமற்ற கட்டுக்கதைகளை அவர்கள் நினைவுபடுத்திக் கொண்டார்கள்.

இதே போன்ற மிருகத்தனத்துக்குத் தாங்கள் ஏற்கனவே இரையாகிவிட்டது போலவும் இந்த விகிருதிகளின் கைகளில் அகப்பட்டுத் துடித்துக் கொண்டிருப்பது போலவும் அவர்களது கொதிப்பேறிய கற்பனைக்குத் தோன்றியது. அவர்கள் கண்ணீர் பெருக்கினார்கள். விடைபெறும் இறுதிக் கடிதங்கள் எழுதினார்கள். வெளிர்முகக் கும்பல்களாக ஒருவரோடொருவர் ஒண்டிக்கொண்டு, சிவப்பு முரடர்களின் முதல் கத்தல்களையும் ஹாலில் அவர்களது பூட்சுக்களின் தடதடப்பையும் கேட்பதற்காகக் காதுகளைக் கூராக்கிய வாறு கவனித்தார்கள். ஆனால் பூட்சுக்கள் தடதடக்கவில்லை. அவர்களுடைய இதயங்கள்தாம் அடித்துக்கொண்டன.

கட்டிடத்தில் கல்லறையில் போன்று அமைதி குடிகொண்டது. அது இறந்தவர்களின் அமைதி அல்ல, இறுக்கமும் அதிர்வும் கொண்ட அமைதி. அச்சத்தால் செயலற்றுப் போன நூற்றுக்கணக்கான ஜீவன்களின் மௌனம் அது. இந்த மௌனம் தொற்றும் இயல்புள்ளது. சுவர்களின் ஊடாகச் சென்று வெளியே குழுமியிருந்த செம்படையினரையும் அது பற்றிக்கொண்டது. அவர்களும் அதே அச்சத்தால் செயலிழந்து மௌனமாகிவிட்டார்கள். மாடிப்படி வரிசை எங்கே புகைப்படலங்களை உமிழ்ந்துவிடுமோ, குண்டுகளைப் பொழிந்துவிடுமோ என்ற பயத்தால் அதை அணுகவே தயங்கினார்கள் அவர்கள். வெளியே இருந்த நூற்றுக்கணக்கானவர்கள் உள்ளே இருந்த வெண்படையினரை அஞ்சினார்கள்! உள்ளே இருந்த நூற்றுக்கணக்கானவர்கள் வெளியே

இருந்த செம்படையினரை அஞ்சினார்கள்! ஆயிரக்கணக்கான மனிதர்கள் ஒருவரை ஒருவர் வதைத்துக் கொண்டிருந் தார்கள்.

கட்டிடத்துக்கு உள்ளே இந்த மௌனக் கடும் சோதனை தாங்க முடியாது போயிற்று. குறைந்த பட்சம் என்றால் அதை மேலும் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. மீட்சி பெறுவதற்காக எங்கே என்று தெரியாமலே முன்னே ஓடினேன். இந்த மௌனத்திலிருந்து விடுபடுவதற்கு எங்கு போனாலும் சரிதான் என எனக்குத் தோன்றியது. ஒரு பக்கத்துக் கதவைத் தற்செயலாகத் திறந்தவன், இராணுவ மாணவர்கள் நிறைந்த ஓர் அறைக்குள் திடுமெனப் போய் நின்றேன். யுக முடிவே வந்து விட்டது போல அவர்கள் துள்ளி எழுந்தார்கள்.

''அமெரிக்க நிருபரா! ஐயோ! எங்களுக்கு உதவுங்கள்! உதவுங்கள்!'' என்று பெருமூச்சுடன் வேண்டினார்கள் அவர் கள்.

''என்னால் எப்படி முடியும்? நான் என்ன செய்வது?'' என்று குழறினேன்.

''ஏதாவது, என்ன வேண்டுமானாலும்! எப்படியாவது எங்களைக் காப்பாற்றுங்கள்'' என்று அவர்கள் கெஞ்சினார்கள்.

அவர்களில் ஒருவன் ''அன்தோனவ்'' என்றான். மற்ற வர்கள் அந்தப் பெயரை மந்திரம் போல ஜெபிக்கத் தொ டங்கிவிட்டார்கள். ''அன்தோனவ். ஆமாம், அன்தோனவ். அன்தோனவிடம் போங்கள். கீழே இருக்கிறார் அன்தோனவ். சீக்கிரம், நேரம் கடந்துவிடுவதற்குள்—அன்தோனவ்!'' இப்படிக் கூறி எனக்கு வழியைக் காட்டினார்கள்.

நிமிட நேரத்துக்கெல்லாம் நான் சிறைப்பட்ட செம் படையினருக்கும் அன்தோனவுக்கும் முன்னே திடுமெனப் போய் நின்று அவர்களை வியப்பில் ஆழ்த்தினேன்.

''நீங்கள் எல்லோரும் விடுதலையாகிவிட்டீர்கள். வெண் படை அதிகாரிகள் தப்பி ஓடிவிட்டார்கள். இராணுவ மாண வர்கள் சரண் அடைகிறார்கள். தங்களைக் காப்பாற்றும்படி உங்களை வேண்டிக்கொள்கிறார்கள். எந்த நிபந்தனைக்கும் அவர்கள் தயார். அவர்கள் கேட்பதெல்லாம் உயிர்ப்பிச்சை மட்டுமே. துரிதப்படுத்துங்கள், சீக்கிரம்.''

சாவை எதிர் நோக்கிக் கொண்டிருந்த இந்தக் கைதி அன்தோனவ் சாவின் நடுவராகக் கணப்போதில் மாறிவிட்டார். தண்டிக்கப்பட்டவர் நீதிபதி ஆகும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார். திடுக்கிடச் செய்யும் மாற்றம்! ஆனால் மட்டுமீறிய உழைப்பு காரணமாகக் களைத்த சிறுகூடான இந்தப் புரட்சி வீரரின் முகம் மாறவில்லை. பழிவாங்கும் எண்ணம் அவர் மனதில் பளிச்சிட்டிருந்தாலுங்கூட அது கணப்போதில் அகன்றுவிட்டது. ''அப்படியானல் நான் பிணம் ஆக வேண்டாம், கமாண்டர் ஆக வேண்டும் போலும். அடுத்தபடி நான் இராணுவ மாணவர்களைக் காணவேண்டும், அல்லவா? மிக நல்லது''. இவ்வாறு கடுப்புடன் சொல்லி விட்டுத் தொப்பியை மாட்டிக்கொண்டு மாணவர்களைக் காண மாடிக்குப் போனார் அவர்.

''அன்தோனவ்! திருவாளர் அன்தோனவ்! கமாண்டர் அன்தோனவ்! எங்களுக்கு உயிர்ப்பிச்சை கொடுங்கள். நாங்கள் குற்றவாளிகள் என்பதை அறிவோம். ஆனால் புரட்சி எங்கள்மேல் கருணை காட்டும் என்று நம்புகிறோம்'' என்று முறையிட்டார்கள் அவர்கள்.

உல்லாசத் துணிகரச் செயலின் பரிதாபகரமான முடிவு! காலையில் போல்ஷெவிக்குகளைக் கொல்வதற்காகத் திடீர்த் தாக்கு நடத்தியவர்கள் மாலையில் தங்கள் உயிர்களுக்காக போல்ஷெவிக்குகளைக் கெஞ்சினார்கள். ''பன்றிப்பயல்'' என்று சொல்வது போன்ற தொனியில் ''தவாரிஷ்'' என்ற சொல்லை உரைத்தவர்கள், கௌரவப் பட்டம் போன்று மரியாதையுடன் அதே சொல்லை உச்சரித்தார்கள்.

'''தவாரிஷ்' அன்தோனவ். போல்ஷெவிக் என்ற முறையில், உண்மையான போல்ஷெவிக் என்ற முறையில் எங்களுக்கு வாக்களியுங்கள். எங்கள் பாதுகாப்புக்கு உத்தரவாதம் செய்வதாக வாக்களியுங்கள்'' என்று இறைஞ்சினார்கள்.

''வாக்களிக்கிறேன்'' என்றார் அன்தோனவ்.

''அவர்கள் உங்கள் சொல்லை ஏற்க மாட்டார்கள், 'தவாரிஷ்' அன்தோனவ். அவர்கள் எப்படியும் எங்களைக் கொன்று விடலாம்'' என்றான் ஒரு பேதை.

''உங்களைக் கொல்வது என்றால் அவர்கள் முதலில் என்னைக் கொல்ல வேண்டும்'' என்று உறுதி கூறினார் அன்தோனவ்.

''ஆனால் நாங்கள் கொல்லப்பட விரும்பவில்லை'' என்று சிணுங்கினான் அந்த அப்பாவி.

வெண்படையினர் சாக வேண்டும் என்று கூட்டம் தீர்ப்பு அளிக்கிறது

அன்தோனவால் தம் இகழ்ச்சியை மறைக்க முடியவில்லை. கூடத்துக்குத் திரும்பி அவர் படிகளில் இறங்கலானார். விரைத்த நரம்புகளுக்கு அவரது ஒவ்வொரு அடிவைப்பும் துப்பாக்கி வெடிபோலக் கேட்டது.

வெளியே இருந்த சிவப்புக் கூட்டத்தினர் இந்தக் காலடி ஓசையைக் கேட்டு, குண்டு மாரியை எதிர்பார்த்துத் துப்பாக்கிகளைத் தயாராக உயர்த்தினார்கள். அப்புறம் நிகழ்ந்தது இந்த விந்தை! வந்தார் அன்தோனவ், அவர்களுடைய சொந்தத் தலைவர்!

''நாஷ்! நாஷ்!'' (நம்மவர்! நம்மவர்!) என்று ஏற்பளித்தன ஒரு நூறு குரல்கள். ''அன்தோனவ்! நீடூழி வாழ்க அன்தோனவ்!'' என்ற முழக்கம் இன்னொரு நூறு குரல்களிலிருந்து எழுந்தது. முன் முகப்பில் எழும்பிய ஆரவாரம் தெருவில் மீண்டும் முழக்கப்பட்டது. ''அதிகாரிகள், அன்தோனவ்? அதிகாரிகளும் இராணுவ மாணவர்களும் எங்கே?'' என்று கத்திக்கொண்டு முன்னே பொங்கிவந்தது கூட்டம்.

''அவர்கள் தீர்ந்தார்கள். ஆயுதங்களைப் போட்டுவிட்டார்கள்'' என்று அறிவித்தார் அன்தோனவ்.

அணை உடைப்பெடுத்துவிட்டது போல ஆயிரம் குரல்களிலிருந்து வந்தது பெரு முழக்கம். வெற்றி ஆர்ப்பரிப்புக்களும் ''அதிகாரிகளுக்குச் சாவு! ராணுவ மாணவர்களுக்குச் சாவு!'' என்று பிரகடனம் செய்த கோப உறுமல்களும் எழுந்தன.

வெண்படையினர் குலை பதறுவதற்கு உரிய காரணம் இருந்தது! எவர்களது கருணையைப் பெறும் எல்லா உரிமைகளையும் அவர்கள் இழந்துவிட்டார்களோ, அவர்களது கருணை

யை எதிர்பார்க்கும் அவல நிலை. போரிட்டதனால் அல்ல, முறைகேடாகப் போரிட்டதனால் அவர்கள் இந்தச் சீற்ற எரிமலையைக் குமுறி எழப் புரிந்திருந்தார்கள். இந்தப் படை வீரர்கள், தொழிலாளர்களின் கண்களுக்கு வெண்படையினர் செம்படைத் தோழர்களின் கொலையாளிகள், புரட்சியின் கொலைகாரர்கள், கிருமிகள் போன்று ஒழிக்கப்பட வேண்டிய கயவர்கள். மாடிப்படிகள்மீது செம்படையினர் பாய்ந்தேறத் தடையாக இருந்தது அச்சம் ஒன்று மட்டுமே. இப்பொழுதோ, எச்சரிக்கையாக இருப்பதற்குரிய காரணம் முற்றும் அகன்றுவிட்டது. வெகுண்டெழுந்த ஆட்கள், ''துடைத்து ஒழியுங்கள் கொலைபாதகர்களை! கொல்லுங்கள் வெள்ளைப் பேய்களை! ஒருவன் பாக்கி இல்லாமல் எல்லோரையும் கொல்லுங்கள்!'' என்ற கூச்சல்களால் இரவை நிரப்பியவாறு முன்னே பாய்ந்தார்கள்.

இருளில் இங்கொன்றும் அங்கொன்றுமாக எரிந்த தீவத்திகள் குடியானவர்களின் தாடி அடர்ந்த முகங்களையும் படைவீரர் முகங்களையும் நகரக் கம்மியர்களின் கரிப்புகை படிந்த மெல்லிய முகங்களையும் முன் வரிசையில் பால்டிக் கப்பற்படையைச் சேர்ந்த பெரிய கடற்படை வீரர்களின் துடியான முகங்களையும் ஒளியுறுத்தின. அந்த முகங்கள் எல்லாவற்றின் மேலும், தழல் வீசிய கண்களிலும் இறுக்கிய மோவாய்களிலும் சுடர்ந்தது பழி வாங்கும் உணர்ச்சி, நெடுங்காலம் துன்பம் உழல்பவர்களுக்கு உரிய கொடிய வன்மம். பின்னாலிருந்து நெருக்கப்பட்ட மக்கள்திரள் திடீரென முன்னே நகர்ந்து மாடிப் படிக்கட்டை நெருங்கியது. அங்கே அமைதியாக, கிளர்ச்சியின்றி நின்றிருந்தார் அன்தோனவ். ஆனால் ஆட்களின் இந்தப் பாறைச் சரிவுக்கு முன் அவர் மிக நொய்ந்தவராக, கதியற்றவராகக் காணப்பட்டார்.

கையையும் குரலையும் உயர்த்தி அன்தோனவ் கத்தினார்: '' 'தவாரிஷ்ஷி!' அவர்களை நீங்கள் கொல்லக் கூடாது. இராணுவ மாணவர்கள் சரண் அடைந்துவிட்டார்கள். அவர்கள் நமது கைதிகள்.''

கூட்டம் அதிர்ச்சி அடைந்தது. பின்பு கரகரத்த சீற்றக் குரலில் அது தன் ஆத்திரத்தை வெளியிட்டது.

''இல்லை! இல்லை! அவர்கள் நமது கைதிகள் அல்ல. அவர்கள் சாக வேண்டியதுதான்!'' என்று எதிர்த்துரைத்தார்கள் ஆட்கள்.

''அவர்கள் ஆயுதங்களை ஒப்புக் கொடுத்துவிட்டார்கள். அவர்களுக்கு உயிர்ப்பிச்சை அளித்திருக்கிறேன் நான்'' என்று தொடர்ந்து வாதாடினார் அன்தோனவ்.

''நீங்கள் அவர்களுக்கு உயிர்ப்பிச்சை அளித்திருக்கலாம். ஆனால் நாங்கள் அளிக்க மாட்டோம். நாங்கள் அவர்களுக்குக் கொடுக்கப்போவது குத்தீட்டிதான்!'' என்று பெருங்குரலில் முழங்கி, ஆமோதிப்பை எதிர்பார்த்துக் கூட்டத்தினர் பக்கம் திரும்பினான் வாட்டசாட்டமான ஒரு குடியானவன்.

''குத்தீட்டி! ஆம், கொடுப்போம் குத்தீட்டி!'' என்று அவனுக்கு ஆதரவாக வீரிட்டார்கள் கூட்டத்தினர்.

அன்தோனவ் இந்தச் சூறுவளியை எதிர்த்து நின்றார். பெரிய ரிவால்வர் ஒன்றை எடுத்து, ''மாணவர்களின் பாதுகாப்புக்கு நான் உத்தரவாதம் செய்திருக்கிறேன், வாக்களித்திருக்கிறேன். புரிந்ததா? எனது வாக்கை இதைக் கொண்டு காப்பேன்'' என்று ரிவால்வரை உயர்த்திக் கத்தினார்.

கூட்டத்தினர் திகைத்துப் போனார்கள். அவர்களால் இதை நம்பவே முடியவில்லை.

''என்ன இது? நீங்கள் செய்வதன் அர்த்தம் என்ன?'' என்று கேட்டார்கள்.

ரிவால்வரை இறுகப் பிடித்து, விசைவில்லில் விரலை வைத்தவாறு தமது எச்சரிக்கையைத் திரும்ப அறிவித்தார் அன்தோனவ்: ''அவர்கள் உயிர்களைக் காப்பதாக நான் வாக்களித்திருக்கிறேன். அந்த வாக்கை இதைக் கொண்டு காப்பாற்றுவேன்.''

''துரோகி! கட்சிமாறி!'' என்று அவரை இடிக்குரலில் தாக்கினர் ஒரு நூறு பெயர். ஒரு பெரிய கடற்படை வீரன் அவரை நேரிட்டு நோக்கி, ''வெண்படையினரின் காவலா! நீ அந்தப் பதடிகளைக் காப்பாற்ற விரும்புகிறாய். ஆனால் உன்னால் முடியாது. நாங்கள் அவர்களைக் கொல்வோம்!'' என்று முகத்தில் அறைவது போலக் கத்தினான்.

''கைதிமேல் கையை வைக்கும் முதல் மனிதனை அந்த

இடத்திலேயே நான் கொன்றுவிடுவேன். புரிகிறதா? சுட்டுக் கொன்றுவிடுவேன் அவனை!'' அன்தோனவ் நிதானமாக, ஒவ்வொரு சொல்லையும் அழுத்தி உச்சரித்தவாறு பேசினார்.

''எங்களையா சுடுவாய்?'' என்று கேட்டார்கள் அவமதிக்கப்பட்ட கடற்படை வீரர்கள்.

''சுடு எங்களை! சுடு எங்களை!'' என்று எக்காளமிட்டது ஆத்திரமடைந்த ஜனக் கும்பல் முழுதும்.

உண்மையில் அது ஜனக் கும்பல் தான்—உணர்ச்சிபொங்கும் ஆவேசம் நிறைந்த ஜனக் கும்பல். அதன் முரட்டு இயல்பூக்கங்கள் அனைத்தும் தூண்டிவிடப்பட்டு வர வர மிகுந்து கொண்டு போயின. குரூரமான, மிருகவெறிகொண்ட, இரத்த வேட்கை மிகுந்த ஜனக்கும்பல் அது. ஓநாயின் கொடுமையும் வேங்கையின் இரக்கமின்மையும் தழல் வீசி எரிந்தன அதிலே. நகரக் காட்டிலிருந்து வெளியே ஈர்க்கப்பட்டு, இந்த வெண்படை வேட்டைக்காரர்களால் தூண்டி விடப்பட்டு, காயப்படுத்தப்பட்டு, காயங்களிலிருந்து குருதி பெருக, பகல் முழுவதும் எரிச்சலூட்டவும் சித்திர வதை செய்யவும் பட்ட பெரு விலங்கு அது. இப்போது களியும் சீற்றமும் கலந்த ஆவேசத்தில் தன்னைச் சித்திர வதை செய்தவர்கள்மீது பாய்ந்து அவர்களைத் துண்டு துண்டாகப் பிய்த்துப் போட ஆயத்தமாக இருந்தது அது. அந்தக் கணத்தில் இந்தச் சிறு மனிதர் அதற்கும் அதன் இரைக்கும் நடுவே வந்து நின்றார்! அந்தப் பெருங்கூட்டத்தை விழி பொருந்த, இன்னும் சரியாய்ச் சொன்னால் சீற்றம் சுடர்ந்த அதன் ஆயிரம் விழிகளுடன் விழிகள் பொருந்த, உணர்ச்சியே இன்றி நோக்கியவாறு அந்த மாடிப்படிக்கட்டில் நின்ற இந்தச் சிறு மனிதரே புரட்சி அனைத்திலும் மிக உணர்ச்சியூட்டும் விஷயமாக எனக்குத் தோன்றினார். அவர் முகம் வெளிறியிருந்தது, ஆனால் அங்கங்களில் நடுக்கம் இல்லை. ''ஒரு மாணவனைக் கொல்ல முயலும் முதல் மனிதனை நான் கொன்றுவிடுவேன்'' என்று நிதானமாக, ஆழ்ந்த முறையில் அவர் மறுபடி கூறியபொழுது அவரது குரலில் பதற்றமே இல்லை.

அந்தக் கூற்றில் இருந்த துடுக்கு, அதில் ததும்பிய திமிர் ஆட்களை மலைக்கச் செய்துவிட்டது.

''நீ சொல்வதன் அர்த்தம் என்ன? இந்த வெண்படை அதிகாரிகளை, புரட்சி எதிர்ப்பாளர்களைக் காப்பதற்காக, தொழிலாளர்களும் புரட்சிக்காரர்களும் ஆன எங்களைக் கொல்வாயா?'' என்று இரைந்தார்கள் அவர்கள்.

''புரட்சிக்காரர்களாம்!'' என்று இகழ்ச்சியுடன் பதிலுக்குத் தாக்கினர் அன்தோனவ். ''புரட்சிக்காரர்களாம்! இங்கே புரட்சிக்காரர்களை நான் காணவில்லையே. எங்கே அவர்கள்? உங்களைப் புரட்சிக்காரர்கள் என்று சொல்லிக் கொள்ளத் துணிகிறீர்களா நீங்கள்? நிர்க்கதியான மனிதர்களை, கைதிகளைக் கொல்ல எண்ணும் நீங்களா புரட்சிக்காரர்கள்?''

அவருடைய இந்தக் குத்தல் பேச்சு ஆட்கள் நெஞ்சுகளில் தைத்துவிட்டது. சவுக்கடி பட்டவர்கள் போலப் பதைத்தார்கள் கூட்டத்தினர்.

''கேளுங்கள்!'' என்று பேச்சைத் தொடர்ந்தார் அன்தோனவ். ''நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதை அறிவீர்களா? இந்த வெறி எதற்கு இட்டுச் செல்லும் என்பதை உணர்கிறீர்களா? சிறைப்பட்ட வெண்படையினன் ஒருவனைக் கொல்லும்போது நீங்கள் புரட்சி எதிர்ப்பைக் கொல்லவில்லை, புரட்சியையே கொல்கிறீர்கள். சைபீரியாவுக்குக் கடத்தப்பட்டும் சிறையில் இடப்பட்டும் என் வாழ்க்கையின் இருபது ஆண்டுகளை இந்தப் புரட்சிக்காக நான் அர்ப்பணித்திருக்கிறேன். புரட்சிக்காரனை நான், புரட்சிக்காரர்கள் புரட்சியைச் சிலுவையில் அறைவதை வெறுமே நின்று பார்த்துக்கொண்டிருப்பேன் என்று நினைக்கிறீர்களா?''

''ஆனல் அவர்கள் நம்மைச் சிறை பிடித்திருந்தால் இரக்கமே காட்டியிருக்க மாட்டார்கள். நம்மைக் கொன்றிருப்பார்கள்'' என்று முழங்கினன் ஒரு குடியானவன்.

அன்தோனவ் சொன்னர்: ''உண்மைதான், அவர்கள் நம்மைக் கொன்றிருப்பார்கள். அதனுல் என்ன? அவர்கள் புரட்சிக்காரர்கள் அல்ல. அவர்கள் பழைய அமைப்பைச் சேர்ந்தவர்கள். ஜாரும் சவுக்கும், கொலையும் மரணமும் நிலவிய காலத்தைச் சேர்ந்தவர்கள் அவர்கள். ஆனல் நாமோ புரட்சியைச் சேர்ந்தவர்கள். புரட்சி முந்திய அமைப்பைவிட மேலான ஒன்று. எல்லோருக்கும் விடுதலையும்

வாழ்வும் என்று அது பொருள்படும். எனவேதான் அதன் பொருட்டு நீங்கள் உயிரையும் இரத்தத்தையும் வழங்கு கிறீர்கள். ஆனல் நீங்கள் இன்னும் ஒன்றையும் அதில் ஈடு படுத்த வேண்டும். நீங்கள் உங்கள் அறிவை அதில் ஈடுபடுத்த வேண்டும். உங்களது ஆவேச உணர்ச்சிகளைத் திருப்திப்படுத் திக் கொள்வதைக் காட்டிலும் புரட்சிக்கு உங்கள் தொண் டை நீங்கள் மேலாக மதிக்க வேண்டும். புரட்சி வெற்றி பெறுவதற்கு நீங்கள் துணிவுடன் செயலாற்றினீர்கள். இப் போது புரட்சியின் கௌரவத்தைக் காக்கும் பொருட்டு இரக்கம் காட்டுங்கள். புரட்சிமீது நீங்கள் அன்பு கொண்டிருக் கிறீர்கள். உங்கள் அன்புக்கு உரிய ஒன்றைக் கொன்றுவிடா தீர்கள் என்றுதான் நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.''

அவர் அனல் வீசினர். அவரது முகம் சுடர்ந்தது. கை களும் குரலும் மன்றுடி வேண்டின. அவரது மனமும் மெய்யும் யாவும் அந்தக் கடைசி வேண்டுகோளில் ஒன்று குவிந்தன. அவர் களைத்துப் போனர்.

''இவர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள், தோழரே!'' என்று என்னைக் கேட்டுக்கொண்டார் அவர்.

நான்கு வாரங்களுக்கு முன், இந்தக் கடற்படை வீரர் களின் குடியரசு என்ற போர்க்கப்பலின் பீரங்கி மேடை மேலிருந்து இவர்கள் முன் நான் பேசியிருந்தேன். நான் முன்னே வந்ததும் அவர்கள் என்னை இனம் கண்டுகொண் டார்கள்.

''அமெரிக்கத் தவாரிஷ்'' என்று அவர்கள் கத்தினர் கள்.

புரட்சியைப் பற்றியும் நிலத்துக்காகவும் விடுதலைக் காகவும் ருஷ்யா எங்கும் நடைபெறும் போராட்டத்தைப் பற்றியும், வெண்படையினர் செங்காவற்படையினருக்குச் செய்த துரோகத்தைப் பற்றியும் அவர்கள் கோபப்படுவதில் உள்ள நியாயத்தைப் பற்றியும் உரக்கவும் ஆர்வத்துடனும் நான் பேசினேன். பின்பு சொன்னேன்: சமூகப் புரட்சியின் போராடும் முன்னணி என்ற வகையில் உலகம் உங்களை நோக்கிக்கொண்டிருக்கிறது. பழிக்குப் பழி என்ற குருதி தோய்ந்த பழைய பாதையையே நீங்கள் பின்பற்றுவீர்களா, அல்லது சால்பு மிக்க புதிய விதித் தொகுப்புக்கு வழி

அமைப்பீர்களா? புரட்சியைப் பாதுகாப்பதில் நீங்கள் துணிவை வெளிக்காட்டி விட்டீர்கள். அதன் பெருமையை நிலைநாட்டும் பொருட்டு நீங்கள் பெருந்தன்மை காட்ட மாட்டீர்களா?

எடுத்த எடுப்பிலேயே இந்தப் பேச்சு பயன் விளைத்து விட்டது. ஆனால் அதற்குக் காரணம் பேச்சின் உள்ளடக்கம் அல்ல. கர்த்தரின் துதியோ, வெப்ஸ்டரின் சொற்பொழிவோ ஒப்பிக்கப்பட்டிருந்தால் அதுவும் இவ்வளவே பயன் விளைத்திருக்கும். நூற்றில் ஒருவருக்குக்கூட நான் சொன்னது விளங்கவில்லை. ஏனெனில் நான் ஆங்கில மொழியில் பேசினேன்.

எனினும் இருளில் கட கட வென்று பெருகிவந்த இந்த விளங்காத அயல் மொழிச் சொற்கள் கூட்டத்தினரின் கருத்தைக் கவர்ந்து அவர்கள் தாமதிக்கப் புரிந்தன. அன்தோனவ் இந்த நோக்கத்தை அடையவே முயன்றுகொண்டிருந்தார். இந்த ஆவேசக் கிளர்ச்சிப் புயல் ஒரு சிறிது தணிந்து வேறொரு உந்துவிசை மேலோங்கத் தேவையான நேரத்தைப் பெறுவதே அவர் நோக்கம்.

ஜனக் கும்பல் புரட்சியால் ஒழுங்குபடுத்தப்பட்டது

ஏனெனில் இது ஜனக் கும்பல்தான் எனினும் புரட்சிகரமான ஜனக் கும்பல். தொழிலாளர்களும் படைவீரர்களும் கொண்ட இந்தக் கூட்டத்தில் இருந்தவர்களில் குறைந்தது பாதித் தொகையினரின் உள்ளங்களில் ஆழமாக வேரூன்றியிருந்தது ஒரு விறல்மிக்க நிலையான விசுவாசம்— புரட்சியின்பால் விசுவாசம். இந்தச் சொல் ஏதோ அற்புத மந்திரம் போல் இருந்தது. அவர்களுடைய எல்லாக் கனவுகளும் நம்பிக்கைகளும் விழைவுகளும் ''புரட்சி'' என்பதையே மையமாகக் கொண்டு பின்னப்பட்டிருந்தன. அவர்கள் அதன் ஊழியர்கள். அது அவர்களுடைய எஜமானன்.

இந்தக் கணத்தில் வேறொரு எஜமானன் அவர்கள்மீது ஆதிக்கம் செலுத்தி, புரட்சி பற்றிய கருத்தை அவர்கள் உள்ளங்களிலிருந்து அறவே அகற்றியிருந்தது என்பது

உண்மையே. பழிவாங்கும் எண்ணம் மேலோங்கி, ஜனக் கும் பலைக் கண்தலை தெரியாமல் செயல்படத் தூண்டிக்கொண் டிருந்தது. ஆனால் அது தாற்காலிகமானதுதான். அவர்கள் வாழ்க்கையில் நிலையாக விசுவாசம் பாராட்டியது புரட்சிக்கே. சந்தர்ப்பம் அளிக்கப்பட்டால் அது மேலெழும், தன் இடத்தை அபகரித்துக்கொண்ட உணர்ச்சியை விரட்டிவிட்டுத் தன் அதிகாரத்தை வலியுறுத்தும், தன்னைப் பின்பற்று வோரை மீண்டும் ஒழுங்குபடுத்தும். அன்தோனவ் மக்கள் திரளுக்கு எதிராகத் தனித்து நிற்கவில்லை. அந்தக் கூட்டத் தில் அன்தோனவ் போன்றே புரட்சியின்பால் உயர்ந்த பற்றுர்வம் கொண்டவர்கள் ஓர் ஆயிரம் பெயர் இருந்தார் கள். அன்தோனவ் அந்த ஜனத்திரளின் ஓர் அலகு மட்டுமே. அதன் தசையின் ஒரு துணுக்கு, அதன் உணர்வின் ஓர் அம்சம் அவர். ராணுவ மாணவர்கள்பாலும் வெண்படை அதிகாரிகள்பாலும் அந்த ஜனத்திரள் கொண்டிருந்ததே போன்ற பகைமையை அவரும் கொண்டிருந்தார். அது போன்றே ஆவேச உணர்ச்சிகளால் அவரும் தழல் வீசிக் கொண்டிருந்தார்.

இந்த ஜனத்திரளில் தமது ஆவேச உணர்ச்சிகளை முத லில் கட்டுப்படுத்திக்கொண்டவர் அன்தோனவ். முதன்முதலில் அவருடைய உணர்வில்தான் பழிவாங்கும் வெறிக்குப் பதில் புரட்சி இடம் பெற்றது. புரட்சி என்ற கருதுகோளி னால் அவரது உள்ளத்தில் ஏற்படுத்தப்பட்ட மாறுதல் அதே போலப் படைவீரர்கள், தொழிலாளர்களின் உள்ளங்களிலும் உண்டாக்கப்படும். இதை அன்தோனவ் அறிந்திருந்தார். ''புரட்சி'' என்னும் மந்திரச் சொல்லைத் திரும்பத் திரும்ப உச்சரித்ததன் மூலம் அவர்களை மீண்டும் இயல்பான புரட்சிக்காரர்கள் ஆக்க அவர் முயன்றார். குழப்பத்தி லிருந்து புரட்சிகர ஒழுங்கை வெளிக் கொணர அவர் முயற்சி செய்தார். அவரது முயற்சி வென்றது.

சொல்லின் தொன்மைவாய்ந்த அற்புதத்தை—புயல் அடக்கப்பட்டதை—நாங்கள் கண்முன்னே கண்டோம். ஏள னக் கூச்சல்களும் கோபக் குமுறல்களும் அடங்கிவிட்டன. இங்கொன்றும் அங்கொன்றுமாகத் தனித் தனிச் சினக் குரல் கள் மட்டுமே கேட்டன. ஆனால் வோஸ்கோவ் என் பேச்சை

மொழிபெயர்த்து, அன்தோனவ் மறுபடி பேசியதும் இந்த மறுப்பு மையங்கள் பணிந்துவிட்டன. படிமானத்துக்கு வந்து அறிவுரையை ஏற்றுக்கொள்ளும் மன நிலையை அடைந்திருந்த இந்தத் தரைப்படை வீரர்களும் கடற்படை வீரர்களும் பழிவாங்கும் தங்கள் சொந்தச் சித்தத்துக்குப் பதில் புரட்சியின் சித்தத்தை நிறைவேற்றத் தயாராகிவிட்டார்கள். இந்தச் சித்தத்தை அவர்கள் புரிந்துகொள்ளுமாறு செய்வது மட்டுமே தேவையாயிருந்தது.

''என்ன அது, அன்தோனவ்? நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?'' என வினவினார்கள்.

''இராணுவ மாணவர்களைப் போர்க் கைதிகளாக நடத்த வேண்டும். சரணாகதி நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும். இந்த மாணவர்களுக்கு அவர்கள் உயிர்களைக் காப்பாற்றுவதாக நான் வாக்கு கொடுத்திருக்கிறேன். எனது வாக்கை உங்கள் வாக்குகளால் உறுதிப்படுத்தும்படி கேட்கிறேன்'' என்றார் அன்தோனவ்.

ஜனத் திரள் சோவியத்தாக மாறிவிட்டது. ஒரு கடற்படைவீரன் பேசினான். அப்புறம் இரண்டு தரைப் படைவீரர்களும் ஒரு தொழிலாளியும் பேசினார்கள். கைகளை உயர்த்துவதன் மூலம் வாக்குகள் அளிக்கப்பட்டன. போர்க் கறை படிந்த ஒரு நூறு கரங்கள் உயர்த்தப்பட்டன. அப்புறம் இன்னொரு நூறு. இவ்வாறு முடிவில் சுமார் ஆயிரம் கைகள் உயர்த்தப்பட்டன. வெண்படை அதிகாரிகளைக் கொல்வதாக அச்சுறுத்த முட்டி பிடித்த ஆயிரம் கைகள் இப்பொழுது அவர்களுக்கு உயிர்ப்பிச்சை அளிப்பதற்காகத் திறந்த விரல்களுடன் உயர்த்தப்பட்டன.

இந்தச் சந்தர்ப்பத்தில் பெத்ரோகிரத் தூமாவிலிருந்து* ஒரு தூதுக் குழு வந்து சேர்ந்தது. ''உள்நாட்டுச்

---

*இங்கே குறிக்கப்படுவது, ஜாராட்சிக் காலத்திலும் தாற்காலிக அரசாங்கத்தின் காலத்திலும் பூர்ஷ்வா நிர்வாக உறுப்பாக விளங்கிய நகர தூமா. பெயரளவில் அது ஒருவகைச் சுயாட்சி நிறுவனம், ஆனால் உண்மையில் நகர விவகாரங்களை நிர்வகித்த துணை அரசாங்க அலுவலகமாக இருந்தது.

சச்சரவைக் கூடியவரை குறைவான இரத்தப் பெருக்குடன் தீர்க்கும்படி'' உத்தரவிடப்பட்டிருந்தது அது. ஆனால் புரட்சி இரத்தமே சிந்தாமல் தன் சொந்த விவகாரங்களைத் தீர்த்துக் கொண்டிருந்தது. இந்தக் கனவான்களை அது அசட்டை செய்துவிட்டு, கட்டிடத்துக்குள் புகுந்து வெண்படையினரை மாடியிலிருந்து கீழே இட்டு வருவதற்காக ஒரு படையணியை நியமித்தது. முதலில் வந்தார்கள் இராணுவ மாணவர்கள். மறைவிடங்களிலிருந்து வெளியில் இழுக்கப்பட்ட அதிகாரிகள் (அவர்களில் ஒருவன் கால்களைப் பற்றி வெளியில் இழுக்கப்பட்டான்) அப்புறம் வந்தார்கள். உயர்ந்த கற்படிகள்மேல் உந்தித் தள்ளப்பட்டு, தீவத்தி வெளிச்சத்தில் மலங்க மலங்க விழித்தவாறு நின்றார்கள் அவர்கள். ஓர் ஆயிரம் துப்பாக்கிக் குழாய் வாய்களும் ஆயிரம் உள்ளங்களின் இகழ்ச்சியும் ஆயிரம் ஜோடிக் கண்களின் உறுத்த பார்வையும் அவர்களுக்கு எதிர் நின்றன.

சில கேலிக் கூச்சல்களும் ''புரட்சியின் கொலைகாரர்கள்!'' என்ற கத்தல்களும் ஏற்பட்டன. அப்புறம் மௌனம் —நீதி மன்றத்தின் ஆழ்ந்த மௌனம்—குடிகொண்டது. ஏனெனில் இது நீதி மன்றம்—உடைமை அற்றவர்களின் தீர்ப்பு மன்றம். ஒடுக்கப்பட்டவர்கள் தங்களை ஒடுக்கியவர்களை விசாரித்துத் தீர்ப்பளிக்க அமர்ந்திருந்தார்கள். புது அமைப்பு பழைய அமைப்புக்குத் தண்டனை விதித்தது. புரட்சியின் பெரு நடுவர் குழு இது.

''குற்றவாளிகள்! எல்லோரும் குற்றவாளிகள்!'' என்ற தீர்ப்பு அளிக்கப்பட்டது. புரட்சியின் எதிரிகள் என்ற வகையில் குற்றவாளிகள். ஜாரையும் சுறண்டும் வர்க்கங்களையும் பாதுகாத்து வைத்திருந்தவர்கள் என்ற வகையில் குற்றவாளிகள். செஞ்சிலுவை விதிகளையும் போர்ச் சட்டங்களையும் மீறியவர்கள் என்ற வகையில் குற்றவாளிகள். ருஷ்யத் தொழிலாளர்களுக்கும் உலகத் தொழிலாளர்களுக்கும் துரோகிகள் என்ற வகையில் முற்றிலும் குற்றவாளிகள்.

கைதிக் கூண்டிலிருந்த அவலம்பிடித்த கைதிகள் இந்தத் தாக்குதலுக்குக் கூசிப் பின்வாங்கித் தலைகளைக் குனிந்து கொண்டார்கள். துப்பாக்கிகளிலிருந்து பொழியும் குண்டு மாரிக்கு எதிர்நிற்பது அவர்களில் சிலருக்கு இதைவிட

எளிதாக இருந்திருக்கும். ஆனால் துப்பாக்கிகளோ அவர்களைக் காப்பதற்காக இருந்தன.

ஐந்து கடற்படை வீரர்கள் துப்பாக்கிகளைத் தோள்கள் மீது சாய்த்தவாறு படிக்கட்டின் அடியில் நின்றுகொண்டார்கள். அன்தோனவ் ஒரு வெண்படை அதிகாரியின் கையைப் பற்றி ஒரு கடற்படை வீரனின் கையில் அதை வைத்தார்.

''எண் ஒன்று. நிர்க்கதியான, ஆயுதமற்ற கைதி இவன். இவனுடைய உயிர் உன் கைகளில் இருக்கிறது. புரட்சியின் கௌரவத்திற்காக அதைக் காப்பாற்று'' என்றார். படையணி கைதியைச் சூழ்ந்துகொண்டு வளைவு வாயில் வழியே நடந்தது.

இதே சூத்திரப்படி அடுத்த கைதியும் அதற்கு அடுத்தவனும் மற்றவர்களும் ஒவ்வொருவராக ஒப்படைக்கப்பட்டார்கள். ஒவ்வொருவனுக்கும் காவலாக நான்கு அல்லது ஐந்து பெயர் கொண்ட படையணி நியமிக்கப்பட்டது. கடைசி வெண்படை அதிகாரி காவலர் குழுவின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டு அந்த ஊர்வலம் மர்ஸ்க்காயா வீதியில் வெளியேறியதும், ''முடிந்தது கூளம்'' என்று முணுமுணுத்தான் ஒரு முதிய குடியானவன்.

பனிக்கால அரண்மனை அருகே ஆத்திரம் அடைந்த ஜனக்கூட்டத்தினர் ராணுவ மாணவர்கள் மேல் பாய்ந்து அவர்களைக் காவலர்களிடமிருந்து பறித்துச் சென்றார்கள். ஆனால் புரட்சிக் கடற்படை வீரர்கள் கூட்டத்தினரைத் தாக்கி, கைதிகளைத் தப்புவித்து அவர்களைப் பெத்ரோப்பாவ்லவ்ஸ்காயா கோட்டைச் சிறையில் பத்திரமாகக் கொண்டு சேர்த்தார்கள்.

ஜனக்கும்பல்களின் மூர்க்கமான ஆவேச உணர்ச்சிகளைத் தேக்கி நிறுத்தும் அளவுக்குப் புரட்சி எங்கும் போதிய ஆற்றல் உள்ளதாக இல்லை. அநாகரிக இரத்த வெறியைத் தணிப்பதற்கு உரிய தருணத்தில் அது எப்போதும் போய்ச் சேரவில்லை. குற்றமற்ற குடிமக்கள் சோதாக்களால் தாக்கப்பட்டார்கள். ஒதுக்குப் புற இடங்களில் தங்களைச் செங்காவற்படையினர் என்று கூறிக்கொண்ட அரைக் காட்டுமிராண்டிகள் கொடிய குற்றங்கள் புரிந்தார்கள். போர்முனை

யில் ஜெனரல் துஹோனின், வண்டியிலிருந்து வெளியே இழுக்கப்பட்டு, கமிஸார்கள் எதிர்த்துத் தடுத்ததையும் மதியாமல் துண்டுகளாகப் பிய்த்து எறியப்பட்டான். பெத்ரோகிராத் நகரில்கூட, சில ராணுவ மாணவர்கள் திடீரெனத் தாக்கிய ஜனத் திரள்களால் தடிகளால் அடித்துக் கொல்லப்பட்டார்கள். மற்றவர்கள் நெவா ஆற்றில் வீசி எறியப்பட்டார்கள்.

உயிருக்குத் தொழிலாளர்கள் அளித்த மதிப்பு

எனினும் மனித உயிரின்பால் புரட்சிகரத் தொழிலாளி வர்க்கம் கொண்டிருக்கும் போக்கு, உணர்ச்சி வசப்பட்ட, பொறுப்பற்ற மனிதர்களின் சிதறலான நடவடிக்கைகளில் அல்ல, ஆட்சி அதிகாரத்தை ஏற்றதுமே சோவியத் இயற்றிய ஒரு புதிய சட்டத்தில் பிரதிபலிக்கிறது.

ஆளும் வர்க்கம் என்ற முறையில் உழைப்பாளிகள் தங்களை முன்பு சுறண்டியவர்கள் மீதும் கொலை செய்தவர்கள் மீதும் பழிதீர்த்துக் கொள்ளும் நிலையில் இப்போது இருந்தார்கள். அவர்கள் கிளர்ந்து எழுந்து ஆட்சி அதிகாரத்தைத் தங்கள் கையில் எடுத்துக்கொண்டு, முன்னர் தங்களைச் சவுக்கால் அடித்தவர்கள், சிறையில் அடைத்தவர்கள், காட்டிக்கொடுத்தவர்கள் ஆகியோரையும் சிறைபிடித்திருந்தார்கள். இதைக் கண்டதும் கொடூரமான பழிவாங்கும் நடவடிக்கை வெடித்தெழும் என்று நான் அஞ்சினேன்.

தற்போது அதிகாரத்தில் இருந்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் சங்கிலித் தளைகள் பூட்டப்பட்டு சைபீரிய வெண்பனிப் பிரதேசத்திற்கு மறுபுறம் அனுப்பப்பட்டிருந்தார்கள் என்பதை நான் அறிந்திருந்தேன். உயிர் உள்ளவர்களின் சவப்பெட்டிகளான ஷ்லூஸ்ஸல்பர்க் சிறையின் கல்லறைகளில் நீண்ட பல ஆண்டுகள் கழித்ததனால் பலர் நிறம் வெளிறித் தள்ளாடி நடந்ததை நான் கண்டிருந்தேன். கஸாக்கியர்களின் பல்வார்ச் சவுக்குகளின் ஆழமான அடித்தழும்புகளைப் பலர் முதுகுகளில் நான் கண்டிருந்தேன். ஆப்ரகாம் லிங்கனின் பின்வரும் சொற்கள் என் நினைவுக்கு வந்தன:

''சவுக்கடியால் சிந்துவிக்கப்படும் ஒவ்வொரு துளி இரத்தத்துக்கும் பதிலாக இன்னொரு துளி வாளினால் சிந்துவிக்கப்பட்டால் ஆண்டவனின் தீர்ப்புக்கள் முற்றிலும் தூயவை, நேர்மையானவை ஆகும்.''

ஆனால் பயங்கர இரத்த ஸ்நானம் எதுவும் நடைபெறவில்லை. மாறாக, பழிவாங்கும் நடவடிக்கைகள் பற்றிய எண்ணம் தொழிலாளர்களின் மனத்தை ஈர்த்ததாகவே தெரியவில்லை. மரண தண்டனை ரத்து செய்யப்பட்டுவிட்டதை அறிவிக்கும் அரசாணை சோவியத்தால் நவம்பர் 10ந் தேதி அங்கீகரிக்கப்பட்டது. இது வெறுமே மனிதாபிமானக் குறிப்பு மட்டும் அல்ல. தொழிலாளர்கள் தங்கள் பகைவர்களின் உயிர்களை மாத்திரமே அல்ல, பல சந்தர்ப்பங்களில் அவர்களது விடுதலையைக்கூட உத்தரவாதம் செய்தார்கள்.

பழைய ஆட்சியின் பல கொடிய நபர்களைப் பெத்ரோப்பாவ்லவ்ஸ்க்காயா கோட்டைச் சிறையில் அடைத்திருந்தான் கேரென்ஸ்கிய். ஜாரின் இரகசியப் போலீஸ் தலைவன் பெலேத்ஸ்கிய் என்பவனை நாங்கள் அங்கே சந்தித்தோம். தன் பதவிக் காலத்தில் எண்ணத்தொலையாத மனிதர்களை இந்த இருட்சிறையில் தள்ளியவன் இவன். இப்போது இந்தப் பழம் பெருச்சாளி தன் கசப்பு மருந்தைத் தானே சுவைத்துக் கொண்டிருந்தான். முன்னாள் போர் அமைச்சன் ஸுஹோம்லீனோவும் இங்கே இருந்தான். ஜெர்மானியருடன் இவன் செய்த சதிச் சூழ்ச்சியின் விளைவாகப் பதினாயிரக்கணக்கான ருஷ்யப் படைவீரர்கள் காப்பகழ்களில் மடிந்தார்கள். இந்த இரண்டு படு கயவர்களும் மிகக் கவர்ச்சியான பழகு முறைகளுடன் எங்களை வரவேற்று, தாங்கள் குற்றம் அற்றவர்கள் என்று பிரகடனம் செய்தார்கள், தாங்கள் ''மனிதத் தன்மையற்ற துன்புறுத்தலுக்கு'' உள்ளாக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்தார்கள்.

''ஆனால் போல்ஷெவிக்குகள் கேரென்ஸ்கியை விட அதிக மனிதத்தன்மை உள்ளவர்கள். எங்களுக்கு அவர்கள் செய்தித்தாள்கள் தருகிறார்கள்'' என்றார்கள் இவர்கள்.

ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட தாற்காலிக அரசாங்க அமைச்சர்களையும் அவர்களது சிறை அறைகளில் நாங்கள் சந்தித்தோம். தங்கள் துரதிர்ஷ்டத்தை அவர்கள் கண்ணியத்

துடன் ஏற்றுக்கொண்டிருந்ததைக் கண்டோம். எப்போதும் போன்றே வனப்புடன் திகழ்ந்த தெரேஷ்சேன்கோ தமது கட்டிலில் கால்மேல் கால் போட்டு அமர்ந்து சிகரெட் புகைத்தவாறு எங்களை வரவேற்ருன்.

செம்மையான ஆங்கிலத்தில் அவன் சொன்ஞன்: ''இது சொகுசான வாழ்க்கை அல்லதான். எனினும் அது சிறைத் தலைவரின் குற்றம் அல்ல. நூற்றுக்கணக்கான அதிகப்படிக் கைதிகளுக்கு அதிகப்படி உணவுப் பண்டங்கள் இன்றி அவர் திடீரென வசதிகள் செய்ய வேண்டியதாயிற்று. ஆகவே நாங்கள் பட்டினி கிடக்கிருேம். ஆனுல் செங்காவற்படையினருக்குக் கிடைப்பது எங்களுக்கும் கிடைக்கிறது. எங்களை அவர்கள் முறைத்துப் பார்த்தாலும் தங்கள் ரொட்டியை எங்களுடன் பகிர்ந்துகொள்கிருர்கள்.''

இளம் ராணுவ மாணவர்களை நாங்கள் பார்த்த போது அவர்கள் தங்கள் டெலிபோன் நிலைய அனுபவங்களை மீண்டும் விவரித்துக் கொண்டும் நண்பர்களிடமிருந்து வந்த பார்சல்களைப் பிரித்துக்கொண்டும் மெத்தைகள் மீது கால்நீட்டி அமர்ந்து சீட்டாடிக்கொண்டும் இருந்தார்கள்.

சில நாட்களுக்குப் பின் இந்த ராணுவ மாணவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். இரண்டாவது தடவை அவர்கள் நன்னம்பிக்கை உறுதிமொழியின் பேரில் விடப்பட்டார்கள். தங்களை விடுவித்தவர்களுக்கு இரண்டாவது முறையும் அவர்கள் நம்பிக்கைத் துரோகம் செய்தார்கள். தெற்கே போய், போல்ஷெவிக்குகளுக்கு எதிராகத் திரண்டுகொண்டிருந்த வெண்படைச் சைனியங்களுடன் அவர்கள் சேர்ந்து கொண்டார்கள்.

ஆயிரக்கணக்கான வெண்படையினர் போல்ஷெவிக்குகள் காட்டிய தயவுக்குப் பிரதியாக இத்தகைய நம்பிக்கைத் துரோகச் செயல்கள் புரிந்தார்கள். போல்ஷெவிக்குகளுக்கு எதிராக விரல் அசைப்பதில்லை என்று கையெழுத்திட்டு ஆழ்ந்த உறுதிமொழி அளித்தான் ஜெனரல் க்ராஸ்னேவ். அதன் பின் அவன் விடுவிக்கப்பட்டான். உடனேயே அவன் உரால் பிரதேசம் சென்று சோவியத்துக்களை அழித்துக்கொண்டிருந்த கஸாக்கியச் சைனியம் ஒன்றின் தலைவனுகச் செயலாற்றத் தொடங்கிவிட்டான். பூர்த்ஸெவ் பெத்ரோப்பாவ்லவ்ஸ்

காயா கோட்டையின் சிறையிலிருந்து போல்ஷெவிக்குகளின் உத்தரவுப்படி விடுதலை செய்யப்பட்டான். உடனேயே அவன் பாரிஸில் இருந்த புரட்சி எதிர்ப்பாளர்களுடன் சேர்ந்து கொண்டு இழிதகைமை உள்ள போல்ஷெவிக் எதிர்ப்புப் பத்திரிகை ஒன்றின் ஆசிரியன் ஆகிவிட்டான். போல்ஷெவிக்கு களின் தயவால் இவ்வாறு விடுதலை அளிக்கப்பெற்ற ஆயிரக் கணக்கான மனிதர்கள் படையெடுக்கும் சேனைகளுடன் அப் புறம் திரும்பி வந்து தங்களை விடுவித்தவர்களை ஈவிரக்கம் இன்றிக் கொன்று குவித்தார்கள்.

போல்ஷெவிக்குகளால் விடுவிக்கப்பட்ட அதே ஆட் களால் படுகொலை செய்யப்பட்ட தோழர்களின் பட்டாளங் களைப் பார்வையிட்டுவிட்டு த்ரோத்ஸ்கிய் சொன்னார்: ''புரட்சி யின் அந்த ஆரம்ப நாட்களில் நாம் செய்த பெருங் குற்றம் மட்டுமீறிய பரிவு காட்டியதுதான்.''

கைப்பான சொற்கள்! ஆனால் 1789ல் பிரான்சில் நடந்த மாபெரும் எழுச்சியைக் காட்டிலும் மிக விரிவான அடிப்படைத் தன்மைகொண்ட ருஷ்யப் புரட்சி பழிவாங்கும் வெறிக்கூத்து அல்ல என்றே வரலாறு தீர்ப்பு அளிக்கும். நோக்கத்திலும் நடப்பிலும் அது ''இரத்தப்பெருக்கு அற்ற புரட்சியே'' ஆகும்.

பெத்ரோகிராத் துப்பாக்கிப் பிரயோகங்கள், மாஸ்கோ வில் நடந்த மூன்று நாள் போர், கீவ் நகரிலும் இர்க்கூத்ஸ்க் நகரிலும் நிகழ்ந்த வீதிச் சண்டைகள், நாட்டுப்புறங்களில் நடந்த குடியானவர் கிளர்ச்சிகள் ஆகியவை பற்றிய பெரி தும் மிகைக்கூற்றான கணக்கீடுகளை எடுத்துக்கொள்ளுங்கள். மொத்த ஆட்சேதத்தைக் கூட்டி ருஷ்யாவின் மக்கள் தொ கையால் வகுங்கள். அமெரிக்கப் புரட்சியில் பங்கு கொண்ட வர்கள் தொகையான 30 லட்சத்தாலோ, பிரெஞ்சுப் புரட்சி நடத்தியவர்களின் எண்ணிக்கையான 2 கோடி 30 லட்சத்தாலோ அல்ல, ருஷ்யப் புரட்சியை நிகழ்த்திய மக்க ளின் தொகையான 16 கோடியால் வகுங்கள். அட்லான்டிக் மாகடலிலிருந்து பசிபிக் மாகடல்வரை, வடக்கே வெண் கடலிலிருந்து தெற்கே கருங்கடல் வரை பரந்த நிலப்பரப் பில் சோவியத்துக்கள் தங்கள் ஆட்சி அதிகாரத்தை நிலை நாட்டி வலுப்படுத்துவதற்குப் பிடித்த நான்கு மாதங்

களில் 3,000க்கு ஒருவருக்கும் குறைவான விகிதத்திலேயே ருஷ்யாவின் மக்கள் கொல்லப்பட்டார்கள் என்பதை இந்தப் புள்ளி விவரங்கள் காட்டும்.

பெருத்த இரத்தக் களரிதான், சந்தேகம் இல்லை!

ஆனால் இதை வரலாற்றின் தொலைக் காட்சியில் நோக்குங்கள். சரியாகவோ தவறாகவோ, அமெரிக்காவின் தேசீய விதியின் நிறைவேற்றத்துக்கு அடிமைத்தனம் என்னும் புற்று நோயை நாம் ஒழிப்பது தேவையாகிவிட்ட போது விரிவான சொத்து உரிமைகள் ஜப்தி செய்யப்பட்டன. அவ்வாறு செய்கையில் மக்களில் 300க்கு ஒருவர் வீதம் கொன்று தீர்க்கும்வரை நாம் நிற்கவில்லை. சரியாகவோ தப்பாகவோ, ருஷ்யாவிலிருந்து ஜாராட்சி, நிலப் பிரபுத்துவம், முதலாளித்துவம் என்னும் புற்று நோயை ஒழிப்பது அவசியம் என்று குடியானவர்களும் தொழிலாளர்களும் உணர்ந்தார்கள். இவ்வளவு ஆழமாக வேரோடிய, தீங்கு விளைக்கும் நோயைத் தீர்ப்பதற்குப் பெரிய அறுவைச் சிகிச்சை தேவைப்பட்டது. எனினும் ஒப்புநோக்கில் சொற்ப இரத்தப் பெருக்குடன் இந்த அறுவை நடத்தப்பட்டது. ஏனெனில் குழந்தைகள் போலவே ஒரு பெரு மக்களின் இயல்பு மன்னிப்பதும் மறந்துவிடுவதுமே—பழி வாங்குவது அல்ல. வன்மம் பாராட்டுவது உழைப்பாளி மக்களின் உணர்ச்சிக்கு அயலானது. அந்த ஆரம்ப நாட்களில் உள்நாட்டுப் போரை நயப்பாங்குள்ள முறையிலேயே நடத்த அவர்கள் கடுமையாக முயன்றார்கள்.

பெரும் அளவிற்கு அவர்கள் வெற்றியும் பெற்றார்கள். வெண்படையினர், செம்படையினர் இரு சாராருடையவும் மொத்த உயிர்ச்சேதம் உலக யுத்தத்தின் ஒரு போரில் ஏற்பட்ட உயிர்ச்சேதத்துக்குக்கூட ஈடாகவில்லை.

''ஆனால் 'சிவப்புக் கொடுமை'!'' என்று ஒருவர் குறுக்கிடுகிறார். அது நிகழ்ந்தது பிற்பாடு, நேசநாட்டுச் சேனைகள் ருஷ்யாவுக்கு வந்து அவற்றின் அரவணைப்பில் ஜார் ஆதரவாளர்களும் கறுப்பு நூற்றுவரும் குடியானவர்கள், தொழிலாளர்கள்மீது புரட்சி எதிர்ப்பின் ''வெண் கொடுமையைக்'' கட்டவிழ்த்துவிட்ட பின்பே. படுகொலையும் காமவெறியும் சேர்ந்த கோரக் கூத்து இந்த ''வெண் கொடுமை''.

நிர்க்கதியான பெண்களும் குழந்தைகளும் கூட்டங் கூட்டமாகக் கொன்று குவிக்கப்பட்டார்கள் இதிலே.

அப்போதுதான், வெறிச் சீற்ற நிலைக்கு உந்தித்தள்ளப் பட்ட தொழிலாளர்கள் தற்காப்பின் பொருட்டுப் புரட்சி யின் ''சிவப்புக் கொடுமையால்'' எதிர்த்துத் தாக்கினூர் கள். மரண தண்டனை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவரப் பட்டது. புரட்சியின் விரைந்து தண்டிக்கும் கரத்தை வெண் படைச் சதிகாரர்கள் உணர்ந்தார்கள்.

''சிவப்புக் கொடுமையையும்'' ''வெண் கொடுமையை யும்'' பற்றிய சீற்றம் பொங்கும் குற்றச்சாட்டுகளும் எதிர்க் குற்றச்சாட்டுகளும் உள்ளன. இந்த விவாதத்திலிருந்து நான்கு மெய் விவரங்கள் வெளிப்படுகின்றன. அவற்றை இங்கே குறிப்பிடலாம்.

''சிவப்புக் கொடுமை'' திட்டவட்டமாகப் புரட்சியின் பிந்தையக் கட்டம். அது தற்காப்பு நடவடிக்கை, புரட்சி எதிர்ப்பின் ''வெண் கொடுமைக்கு'' நேரான பதில். எண்ணிக் கையிலும் பேய்த்தனத்திலும் செம்படையினரின் அட்டூழியங் கள் வெண்படையினரால் செய்யப்பட்ட கொடுமைகளுக்கு முன் மிக அற்பமானவை. நேசநாட்டினர் ருஷ்யாவில் தலை யிட்டு சோவியத்துக்களுக்கு எதிராக உள்நாட்டுப் போரை மறுபடி தூண்டிவிட்டிராவிட்டால் ''சிவப்புக் கொடுமை'' நிகழ்ந்திராது, புரட்சி தான் தொடங்கியது போலவே, எதார்த்தத்தில் ''இரத்தப் பெருக்கற்ற புரட்சியாகவே'' தொடர்ந்து நடந்திருக்கும்.

அத்தியாயம் பதினொன்று

வர்க்கங்களின் போர்

''திடீர்ப் பவிசு பெற்ற அற்பர்கள், துர்ச்சாகசக்காரர் கள், வஞ்சகர்கள்!''

இவ்வாறு பூர்ஷ்வாக்கள் போல்ஷெவிக்குகளைப் பழிதூற் றினூர்கள். அல்லது, ''இப்படிப்பட்ட நாய்கள், இத்தகைய சந்தைக்கூட்டம் எப்படி அரசாங்கத்தை நடத்த முடியும்?''

என்று ஷாத்ஸ்கிய் என்பவனுடன் சேர்ந்து ஏளனம் செய்தார்கள்.

போல்ஷெவிக் ஆட்சி சில மணிகள் அல்லது சில நாட்களுக்கு மேல் நீடிக்கும் என்ற கருத்து வேடிக்கையாக இருந்தது. ''தூக்கில் இடுவது நாளையே தொடங்கும்'' என்று மீண்டும் மீண்டும் நமக்குக் கூறப்பட்டது. ஆனால் பல நாளைகள் கழிந்துவிட்டன, எந்த போல்ஷெவிக்குகளும் விளக்குக் கம்பங்களிலிருந்து தொங்கக் காணும். சோவியத் வீழ்ச்சி அடைவதற்கான குறிகளையே காட்டாமையால் பூர்ஷ்வாக்கள் கலவரம் அடைந்தார்கள். ''போரிட்டு அதை வீழ்த்துவது அவசியம். மக்களுக்கும் புரட்சிக்கும் பகையானது அது'' என்று கூறியது குடியரசுக் கவுன்சிலின் வேண்டுகோள்.

சோவியத்துக்களுக்கு எதிராக அணிதிரண்டுகொண்டிருந்த எல்லாச் சக்திகளுக்கும்' மையம் ஆயிற்று நகர தூமா. ஜெனரல்களும், பாதிரிகளும், அறிவுஜீவிகளும், சினேவ்னிக்குகளும்,* கள்ள வியாபாரிகளும், நைட் ஆவ் செயின்ட் ஜார்ஜ் பட்டதாரிகளும், சாரணர்களும், பிரெஞ்சு, பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகளும், வெண்படையினரும், படைப் பயிற்சி மாணவர்களும் அங்கே திரளாக மொய்த்தார்கள். புரட்சி எதிர்ப்பின் இராணுவத் தலைமை அலுவலகமான ''விமோசனக் கமிட்டி'' இத்தகைய நபர்களைக் கொண்டே நிறுவப்பட்டது.

''ருஷ்யா முழுவதும் இங்கே பிரதிநிதித்துவப்பட்டிருக்கிறது'' என்று பெருமை பீற்றிக்கொண்டான் முதிய மேயர் ஷ்ரெய்தர். உண்மைதான். ''ருஷ்யா முழுவதும்''—அதன் குடியானவர்களையும் தொழிலாளர்களையும், தரைப் படை வீரர்களையும் கடற்படை வீரர்களையும் தவிர்த்த எல்லோரும். பாட்டாளிகள் நிறைந்த ஸ்மோல்னியிலிருந்து இங்கே வருவது இன்னொரு உலகத்தில்—நல்ல உணவு அருந்தி நல்லுடை அணிந்தவர்களின் உலகத்தில்—புகுவது போல் இருந்தது. விசேஷச் சலுகைகளும் அதிகாரமும் கொண்ட பழைய அமைப்பு தொழிலாளர்களால் நிறுவப்பட்ட புதிய அமைப்பை எதிர்த்து இங்கிருந்தே தாக்குதல் நடத்தியது.

---

*அரசாங்க அலுவலர்கள்.—(மொ-ர்)

சோவியத்தின் மதிப்பைக் கெடுக்கவும், அதை முடமாக்கவும் அழிக்கவும் தங்களுடைய போர் நடவடிக்கைகளை பூர்ஷ்வாக்கள் இங்கிருந்தே திட்டமிட்டு அமைத்தனர்.

பூர்ஷ்வாக்கள் வேலை நிறுத்தமும் மறைமுக நாசவேலையும் செய்கின்றனர்

சோவியத்தை ஒரே தாக்கில் பணிய வைக்க பூர்ஷ்வாக்கள் முயன்றனர். புது அரசாங்கத்தின் எல்லா இலாக்காக்களிலும் பொது வேலை நிறுத்தத்தை அது அறிவித்தது. சில அமைச்சரகங்களில் மேஜையடி அலுவலர்கள் ஒரு மொத்தமாக வெளியேறிவிட்டார்கள். வெளிநாட்டு அமைச்சரகத்தில் ''சமாதானம் பற்றிய அரசாணையை'' மொழிபெயர்ப்பவர்கள் தேவை என்று த்ரோத்ஸ்கிய் விடுத்த வேண்டுகோளைக் கேட்டுவிட்டு 600 அதிகாரிகள் ராஜிநாமா கொடுத்துவிட்டார்கள். பாங்குகளிலும் தொழில் நிலையங்களிலும் இருந்து வசூலிக்கப்பட்ட பெரிய வேலைநிறுத்த நிதி சிற்றதிகாரிகளையும் தொழிலாளிவர்க்கத்தின் ஒரு பகுதியைக்கூடக் கைக்கூலியால் ஊழல்படுத்தியது. சிறிது காலத்துக்குத் தபால்காரர்கள் சோவியத் தபால்களைப் பட்டுவாடா செய்ய மறுத்தார்கள், தந்தி நிலையங்கள் சோவியத் செய்திகளை அனுப்ப மாட்டோம் என்றன, ரெயில்வேக்கள் துருப்புக்களை ஏற்றிச் செல்ல மறுத்தன, டெலிபோன் பெண்கள் ஸ்விச்போர்டுகளை விட்டு அகன்றார்கள். பெரிய கட்டிடங்கள் வெறுமையாகி விட்டன. கணப்புக்களை மூட்டுவதற்கு ஒருவரும் இல்லை.

இந்தப் பொது வேலைநிறுத்தத்துக்கு போல்ஷெவிக்குகளின் பதில், வேலை நிறுத்தக்காரர்கள் எல்லோரும் உடனே வேலைக்குத் திரும்பாவிட்டால் தங்கள் பதவிகளையும் பென்ஷன் உரிமையையும் இழந்துவிடுவார்கள் என்று அறிவித்தது தான். அதே சமயம் தங்கள் அணிகளிலிருந்து புதிய அலுவலர்களைத் திரட்டிச் சேர்க்கவும் அவர்கள் உடனே தொடங்கினார்கள். தொழிலாளி மேலங்கிகளும் காற்சட்டைகளும் அணிந்தவர்கள் காலியான அலுவலகங்களில் வந்து அமர்ந்தார்கள். படைவீரர்கள் பழக்கமில்லாத மூளை வேலையின்

மிகை உழைப்பு காரணமாக நாக்குகளை வெளியே துருத்திய வாறு பேரேடுகளையும் எண்களையும் வைத்துக்கொண்டு கண்களைப் பிதுக்கிக் கொண்டிருந்தார்கள். பெரிய மேனி யரான கடற்படை வீரர்கள் தட்டெழுத்துப் பொறியில் எழுத் துக்களைச் சிரமத்துடன் தேடி ஒற்றை விரலால் அடித்துக் கொண்டிருந்தார்கள். எரிச்சலுள்ள வாடிக்கைக்காரர்கள் திட்டல்களும் மிரட்டல்களுமாகப் பொழிய, டெலிபோன் நிலைய ஸ்விச்போர்டுகளில் வேலைசெய்த உழைப்பாளிகள், பிளக்குகளைப் பாந்தமின்றிச் செருகுவதும் வெளியில் எடுப்பது மாக இருந்தார்கள். அவர்கள் முரட்டுத்தனமாகவும் மெது வாகவும் வேலை செய்தது கண்ணைராவியாக இருந்தது. ஆனால் அவர்கள் வேலையில் மனப்பூர்வமாக ஆழ்ந்து ஈடுபட் டார்கள். நாளுக்கு நாள் அவர்களுடைய வேகம் அதிகரித் தது. ஒவ்வொரு நாளும் பழைய அலுவலர்கள் திரும்ப வந் தார்கள். முடிவில் பூர்ஷ்வாக்களின் வேலை நிறுத்தம் முறிக் கப்பட்டது.

சோவியத்துக்களுக்கு எதிராகக் கையாளப்பட்ட இன் னொரு ஆயுதம் மறைமுக நாச வேலை. தொழிற்சாலைகளில் மானேஜர்கள் இயந்திரங்களின் முக்கியப் பகுதிகளை மறைத் தார்கள், பொய்க் கணக்கு எழுதினார்கள், திட்டங்களையும் சூத்திரங்களையும் அழித்தார்கள், இரவின் இருள்மறைவில் காரீயத்தையும் கோதுமை மாவையும் ஜெர்மனிக்கு அனுப் பினார்கள். அதிகாரிகள் சரக்குகளைத் தவறான திசைகளில் அனுப்புவித்தார்கள், நல்ல உணவைப் பயன்பாட்டுக்கு ஏற் காதது என்ற வியாஜத்தில் நாசம் செய்தார்கள், எல்லா வேலைகளையும் கட்டிப் போட்டு முடக்கிவிட்டார்கள், அல்லது அலுவலகச் சடங்குகளில் இழுத்தடித்தார்கள்.

''சோவியத் நிறுவனங்களுக்குள் தந்திரமாக நுழைந் துள்ள எல்லா மறைமுக நாசக்காரர்களுக்கும் தூண்டிவிடும் பகை ஒற்றர்களுக்கும் எச்சரிக்கை'' விடுப்பதன்மூலம் போல் ஷெவிக்குகள் பதில் அளித்தார்கள். அதே சமயம் எல்லா **நேர்மையுள்ள குடிகளுக்கும்** பின்வரும் வேண்டுகோள் கொண்ட சுவரொட்டிகள் நகரின் சுவர்களில் ஒட்டப்பட் டன:

நேர்மையுள்ள எல்லாக் குடிகளுக்கும்!

இராணுவ-புரட்சிக் கமிட்டி ஆணையிடுகிறது:

போக்கிரிகள், கொள்ளைலாபம் அடிப்பவர்கள், கள்ளவியாபாரிகள் ஆகியோர் மக்களின் பகைவர்கள் என அறிவிக்கப்படுகிருர்கள்.

இந்தக் கடுங்குற்றங்களைப் புரிந்த மனிதர்கள் இராணுவ-புரட்சிக் கமிட்டியின் உத்தரவுப்படி உடனே கைது செய்யப்பட்டுக் க்ரோன்ஷ்டாட் சிறைகளுக்கு அனுப்பப்படுவார்கள். இராணுவ-புரட்சி நீதி மன்றத்தின் முன் விசாரணைக்காகக் கொண்டுவரப் படும்வரை அவர்கள் அங்கே இருப்பார்கள்.

களவு, கொள்ளை, கள்ளவியாபாரம் ஆகிய எல்லா நிகழ்ச்சிகளையும் பற்றி இராணுவ-புரட்சிக் கமிட்டிக்கு உடனே தகவல் தெரிவிக்கும்படி இராணுவ-புரட்சிக் கமிட்டி எல்லா பொது நிறுவனங்களையும் நேர்மையுள்ள எல்லாக் குடிகளையும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இந்தக் கேடுகளை எதிர்த்துப் போராடுவது எல்லா நேர்மையுள்ள மக்களதும் கடமையாகும். மக்களின் நலன்களை விரும்பிப் பேணும் எல்லோரது ஆதரவையும் இராணுவ-புரட்சிக் கமிட்டி எதிர்பார்க்கிறது.

கள்ளவியாபாரிகளுக்கும் கொள்ளைலாபக்காரர்களுக்கும் எதிரான நடவடிக்கைகளில் இராணுவ-புரட்சிக் கமிட்டி தாட்சிண்ணியமே காட்டாது.

இராணுவ-புரட்சிக் கமிட்டி

பெத்ரோகிராத்
1917, நவம்பர் 10

(மூலத்தின் போட்டோ பிரதி 285ம் பக்கத்தில் காண்க.)

இந்த அச்சுறுத்தலின் விளைவாக, பொது மக்களின் பசியைப் பயன்படுத்திக் கள்ள வியாபாரம் செய்துவந்தவர்கள் பதுங்கிவிட்டார்கள். பின்னர் இந்தக் குற்றவாளிகளையும் புதிய சோவியத் அமைப்பின் மற்றப் பகைவர்களையும் சமாளிப்பதற்காக ''அசாதாரணக் கமிஷன்'' (ச்செக்கா) ஏற்படுத்தப்பட்டது.

சோவியத்து மீது எவ்விதப் பகைமையும் இல்லாத வர்க்கங்களில் பூர்ஷ்வாக்கள் பகைமை மூட்டிவிட்டார்கள். ''பொது நல இலாக்கா'' மூடப்பட்டதன் மூலம் லட்சோ

ВСѢМЪ ЧЕСТНЫМЪ ГРАЖДАНАМЪ!

ВОЕННО-РЕВОЛЮЦІОННЫЙ КОМИТЕТЪ ПОСТАНОВЛЯЕТЪ:

Хищники, мародеры, спекулянты объявляются врагами народа.

Лица, виновныя въ этихъ тягчайшихъ преступленіяхъ, будутъ немедленно арестовываться по спеціальнымъ ордерамъ Военно-Революц. Комитета и отправляться въ Кронштадтскія тюрьмы впредь до преданія ихъ Военно-Революціонному суду.

Всѣмъ общественнымъ организаціямъ, всѣмъ честнымъ гражданамъ Военно-Революц. Комитетъ предлагаетъ: обо всѣхъ извѣстныхъ случаяхъ хищенія, мародерства, спекуляціи немедленно доводить до свѣдѣнія Военно-Революц. Комитета.

Борьба съ этимъ зломъ—общее дѣло всѣхъ честныхъ людей. Военно-Революц. Комитетъ ждетъ поддержки отъ тѣхъ, кому дороги интересы народа.

Въ преслѣдованіи спекулянтовъ и мародеровъ Военно-Революціонный Комитетъ будетъ безпощаденъ.

Военно-Революціонный Комитетъ.

Петроградъ.
10 ноября 1917 г.

பலட்சம் அங்கவீனர்கள், அனுதைகள், காயமடைந்தவர்கள் ஆகியோரின் துன்பங்கள் மேலும் கடுமையாக்கப்பட்டன. மருத்துவ மனைகளும் அடைக்கல விடுதிகளும் உணவும் விறகும் அற்றவை ஆயின. கவைக்கோல்களை ஊன்றி நடப் போரும் குழந்தைகளைச் சுமந்து வரும் பட்டினி கிடக்கும் தாய்மாரும் கொண்ட பிரதிநிதிக் குழுக்கள் புதிய கமிஸார் திருமதி கொலன்தாயைச் சூழ்ந்து கொண்டன. ஆனுல் அவர் எதுவும் செய்ய இயலாதவராக இருந்தார். பணப் பெட்டி கள் பூட்டப்பட்டிருந்தன, அதிகாரிகள் சாவிகளுடன் கம்பி நீட்டி விட்டார்கள். முன்னுள் அமைச்சர் பானிஞ சீமாட்டி பணத்தை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டாள்.

இதற்கும் இதுபோன்ற செயல்களுக்கும் போல்ஷெவிக்கு களின் பதில் தலை வெட்டும் கில்லட்டின் அல்ல, புரட்சித் தீர்ப்பு மன்றமே. கிராண்ட் ட்யூக் நிக்கொலாயின் அரண்மனை யில் இசை மண்டபத்தில் இருந்த நீண்ட அரைவட்ட மேஜைக்குப் பின் அமர்ந்திருந்தார்கள் ஏழு நீதிபதிகள்—இரண்டு படைவீரர்கள், இரண்டு தொழிலாளர்கள், இரண்டு குடியானவர்கள், தலைவர் ஷுக்கவ் ஆகியோர்.

முதலாவது விசாரணைக் கைதி பானிஞ சீமாட்டி. அவ ளுடைய அருஞ்செயல்களையும் தான தர்மங்களையும் பிரதி வாதி தரப்பு வழக்குரைஞர் விரிவாக எடுத்துரைத்தார். சர்க்கார் தரப்பு வழக்குரைஞராகப் பணியாற்றிய இளம் தொழிலாளி நௌமொவ் பதில் சொன்னுர்:

''தோழர்களே! இது எல்லாம் உண்மையே. இந்த மாது நல்ல இதயம் உள்ளவள். ஆனுல் இவளது போக்கு முற்றிலும் தவறுனது. தனது செல்வத்தால் இவள் மக்க ளுக்கு உதவியிருக்கிறுள். ஆனுல் இவளது செல்வம் எங்கிருந்து வந்தது? சுறண்டப்பட்ட மக்களிடமிருந்து. தன் பள்ளிக் கூடங்களாலும் மருத்துவத் தாதிகளாலும் சாப்பாட்டுச் சத் திரங்களாலும் இவள் நன்மை செய்ய முயன்றுள். ஆனுல் மக் களது இரத்தத்தையும் வியர்வையையும் சிந்தி இவள் பெற்ற பணம் அவர்களிடம் இருந்தால் நாமே சொந்தப் பள்ளிக் கூடங்களும் மருத்துவத் தாதிகளும் சாப்பாட்டுச் சத்திரங்க ளும் உள்ளவர்களாக இருப்போம். இவற்றை நாம் எவ்வகை யில் பெற வேண்டும் என்று இவள் நினைக்கிறுளோ அவ்

வகையில் இன்றி நாம் விரும்பும் வகையில் பெற்றிருப்போம். இவளுடைய நற்செயல்கள் அமைச்சரகத்திலிருந்து பணத்தை இவள் எடுத்துச் சென்றதற்கு மன்னிப்பு ஆக மாட்டா.''

குற்றவாளி என்று தீர்ப்பு அளிக்கப்பட்டது. பணம் திரும்பத் தரப்படும் வரை அவள் சிறையில் இடப்பட்டாள், அப்புறம் பொதுமக்களின் பழிப்புக்கு உள்ளாகுமாறு விடுதலை செய்யப்பட்டாள்! இந்த மாதிரி லேசான தண்டனைகள் ஆரம்பத்தில் வழக்கமாக இருந்தன. ஆனால் வர்க்கப் பிணக்கு மேலும் மேலும் கைப்பு மிக்கது ஆக ஆக, புரட்சித் தீர்ப்பு மன்றம் விதித்த தண்டனைகள் மேலும் கடுமை ஆயின.

எல்லா அரசாங்கங்களினதும் உயிரோட்டத்துக்கு ஆதாரமான இரத்தமாக விளங்குவது பணமே. எல்லா நிதி நிறுவனங்களுமோ பூர்ஷ்வாக்கள் கைகளில் இருந்தன. நகரதூமாவுக்கும் ''விமோசனக் கமிட்டிக்கும்'' பாங்குகள் ஐந்து கோடி ரூபிள்களுக்கும் மேல் அந்தரங்கமாகக் கொடுத்தன. சோவியத்துக்களுக்கோ ஒரு ரூபிள்கூடத் தரவில்லை. சோவியத்துக்களின் வேண்டுகோள்களும் பத்திரங்களும் ஒரு பயனும் விளைக்கவில்லை. அனைத்து ருஷ்யாவின் அரசாங்கம் பணத்துக்காக பாங்குகளிடம் கையேந்தி நிற்பதும் பணம் எதுவும் பெறாமல் தவிப்பதும் பூர்ஷ்வாக்களுக்கு மிகுந்த வேடிக்கையாக இருந்தன.

அப்புறம் ஒரு நாள் போல்ஷெவிக்குகள் துப்பாக்கிகளும் கைகளுமாக பாங்குகளுக்கு வந்தார்கள். பணத்தை எடுத்துக்கொண்டார்கள். பிறகு பாங்குகளை எடுத்துக் கொண்டார்கள். பாங்குகளைத் தேசீய உடைமை ஆக்கும் அரசாணை மூலம் நிதி அதிகாரத்தின் இந்தக் கேந்திரங்கள் தொழிலாளி வர்க்கத்தின் கைகளுக்கு மாறிவிட்டன.

மது, பத்திரிகைகள், சர்ச் ஆகியவை சோவியத்துக்களுக்கு எதிராக

பொதுமக்களின் மூளைகளைக் குழப்பும் தங்கள் முயற்சிகளுக்கு மது நல்ல துணை என பூர்ஷ்வாக்கள் கண்டார்கள். வெடி மருந்துச் சாலைகளைக் காட்டிலும் அதிக அபாயகரமான

மதுப் புட்டி நிலவறைச் சேமிப்புக்கள் நகர்முழுவதி லும் நிறைக்கப்பட்டன. மக்களின் இரத்த நாளங்களில் மது, நகர வாழ்க்கையில் பெருங் குழப்பமாக அர்த்தப் பட்டது. இந்த நோக்கத்துடன் நிலவறைகள் திறந்துவிடப் பட்டன. விருப்பம் போல மதுப் புட்டிகளை எடுத்துச் செல்லுமாறு மக்கள் அழைக்கப்பட்டார்கள். புட்டியும் கையுமாகக் குடிகாரர்கள் நிலவறைகளிலிருந்து வெளி வந்து வெண்பனியில் கைகால்களைப் பரப்பியவாறு விழுந்தார்கள். அல்லது சுடுவதும் கொள்ளையடிப்பதுமாக நகரில் சுற்றித் திரிந்தார்கள்.

இந்தக் கலகக் குழப்பங்களுக்கு போல்ஷெவிக்குகள் மெஷீன்கன்களால் பதில் அளித்தார்கள். மதுப்புட்டிகளைக் குண்டுகளால் உடைத்துத் தகர்த்தார்கள் அவர்கள். எல்லாப் புட்டிகளையும் கைகளால் உடைக்க நேரம் இல்லை. பனிக்கால அரண்மனை நிலவறைக் கூடங்களில் முப்பது லட்சம் ரூபிள்கள் மதிப்புள்ள மது நாசம் செய்யப்பட்டது. இவற்றில் சில மது வகைகள் அங்கே ஒரு நூற்றுண்டுக் காலமாக இருந்துவந்தன. ஜாருடையவும் அவனது ஊழியக்காரர் களுடையவும் மிடறுகளுக்குள் போவதற்குப் பதிலாக, தீ யணைக்கும் எஞ்சினுடன் பொருத்திய நீண்ட கித்தான்குழாய் வழியாக வாய்க்கால்களில் இறைத்துக் கொட்டப்பட்டது எல்லா மதுவும். பெருத்த நஷ்டம். போல்ஷெவிக்குகளுக்கு இதனல் மிகுந்த வருத்தம் உண்டாயிற்று, ஏனெனில் அவர்களுக்குப் பணம் தேவையாக இருந்தது. ஆனல் ஒழுங்கு அவர்களுக்கு இன்னும் அதிகமாகத் தேவைப்பட்டது.

அவர்கள் பின்வருமாறு பிரகடனம் செய்தார்கள்: "குடி களே, புரட்சி ஒழுங்கு எவ்வகையிலும் மீறப்படலாகாது! திருட்டுக்களோ வழிப்பறிகளோ கூடாது! கொள்ளையடிப் பவன், ஒழுங்கீனத்துக்குத் தூண்டிவிடுபவன் ஒவ்வொருவனை யும் பாரிஸ் கம்யூனின் உதாரணத்தைப் பின்பற்றி நாங்கள் அழித்துவிடுவோம்." இந்த நெருக்கடியைச் சமாளிக்கும் பொருட்டுப் பின்வரும் விளம்பரம் ஒட்டப்பட்டது:

கட்டாய அவசரச் சட்டம்

1). பெத்ரோகிராத் நகரம் முற்றுகை நிலையில் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

2) வீதிகளிலும் சதுக்கங்களிலும் எல்லாவகை மகாநாடுகளும் பொதுக்கூட்டங்களும் கும்பல் சேருவதும் தடை செய்யப்படுகின்றன.

3) சாராயக் கிட்டங்கிகளையும் பண்டசாலைகளையும் தொழிற்சாலைகளையும் கடைகளையும் வியாபார ஸ்தலங்களையும் தனிப்பட்டோர் இருப்பிடங்களையும் கொள்ளையடிக்கும் முயற்சி எச்சரிக்கையின்றி மெஷின்கன் பிரயோகத்தினால் தடுத்து நிறுத்தப்படும்.

4) எல்லா வீடுகளிலும் முகப்பு வெளிகளிலும் வீதிகளிலும் கண்டிப்பான ஒழுங்கை நிலைநிறுத்தும் கடமை வீட்டுக் கமிட்டிகள், வாயிற்காப்போர், முகப்புப் பணியாளர்கள், மிலீஷியாக்காரர்கள் ஆகியோரின் பொறுப்பில் ஒப்படைக்கப்படுகிறது. வெளிவாயில் கதவுகளும் உள்வாயில் கதவுகளும் இரவு 9 மணிக்குப் பூட்டப்பட்டு, காலையில் 7 மணிக்குத் திறக்கப்பட வேண்டும். மாலை 9 மணிக்குப் பிறகு குடியிருப்போர் மட்டுமே வீட்டுக் கமிட்டிகளின் கண்டிப்பான மேற்பார்வையில் வெளியே போகலாம்.

5) எவ்வகையான மதுசாரப் பானத்தையும் வினியோகிக்கவோ, விற்கவோ, வாங்கவோ செய்யும் குற்றம் இழைப்பவர்களும் ஷரத்துகள் 2, 4 ஆகியவற்றை மீறுபவர்களும் உடனே கைது செய்யப்பட்டு மிகக் கடுமையான தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்கள்.

பெத்ரோகிராத், டிசெம்பர் 6,
அதிகாலை 3 மணி.

தொழிலாளர்கள், படைவீரர்கள் பிரதிநிதிகளது சோவியத்தின் நிர்வாகக் கமிட்டியுடன் இணைக்கப்பட்ட, கொலை கொள்ளை எதிர்ப்பு கமிட்டி.

(மூலத்தின் போட்டோ பிரதி 290ம் பக்கத்தில் காண்க.)

ОБЯЗАТЕЛЬНОЕ ПОСТАНОВЛЕНІЕ.

1) Городъ Петроградъ объявленъ на осадномъ положеніи.

2) Всякія собранія, митинги, сборища и т. п. на улицахъ и площадяхъ воспрещается.

3) Попытки разгромовъ винныхъ погребовъ, складовъ, заводовъ, лавокъ, магазиновъ, частныхъ квартиръ и проч. и т. п. будутъ прекращаемы пулеметнымъ огнемъ безъ всякаго предупрежденія.

4) Домовымъ комитетамъ, швейцарамъ, дворникамъ и милиціи вмѣняется въ безусловную обязанность поддерживать самый строжайшій порядокъ въ домахъ, дворахъ и на улицахъ, причемъ ворота и подъѣзды домовъ должны запираться въ 9 час. вечера и открываться въ 7 час. утра. Послѣ 9 час. вечера выпускать только жильцовъ подъ контролемъ домовыхъ комитетовъ.

5) Виновные въ раздачѣ, продажѣ или пріобрѣтеніи всякихъ спиртныхъ напитковъ, а также въ нарушеніи пунктовъ 2-го и 4-го будутъ немедленно арестованы и подвергнуты самому тяжкому наказанію.

Петроградъ 6-го декабря, 3 часа ночи.

Комитетъ по борьбѣ съ погромами при Исполнительномъ Комитетѣ Совѣта Рабочихъ и Солдатскихъ Депутатовъ.

மக்களின் மனங்களை மது நஞ்சுபடுத்த மாட்டாது என்றால் அச்சகங்கள் இருந்தன. இந்தப் பொய் உற்பத்திச் சாலைகள் பத்திரிகைகளும் சுவரொட்டி விளம்பரத்தாள்களுமாகப் போதைப் பொருள்களை நாள்தோறும் பரப்பிக்கொண்டிருந்தன. போல்ஷெவிக்குகளின் வீழ்ச்சி நெருங்கிவிட்டது என்றும், அரசாங்க பாங்கிலிருந்து களவாடிய மூன்று கோடி ரூபிள்கள் பெறுமானமுள்ள தங்கத்தையும் பிளாட்டினத்தையும் எடுத்துக்கொண்டு லெனின் பின்லாந்துக்குத் தப்பி ஓடிவிட்டார் என்றும், செம்படையினர் பெண்களையும் குழந்தைகளையும் படுகொலை செய்தனர் என்றும், ஸ்மோல்னியில் ஜெர்மன் படை அதிகாரிகள் தலைமை வகிக்கிறார்கள் என்றும் கயிறு திரித்தன இவை.

இதற்கு எதிர் நடவடிக்கையாக போல்ஷெவிக்குகள் ''வெளிப்படையான கிளர்ச்சிக்கு அறைகூவி அழைப்பவையும் குற்றம் செய்யத் தூண்டுபவையுமான'' பத்திரிகைகள் எல்லாவற்றையும் தாற்காலிகமாக நிறுத்தி விட்டார்கள்.

அவர்கள் பின்வருமாறு அறிவித்தார்கள்: ''பணம் படைத்த வர்க்கத்தினர் பொதுப் பத்திரிகைகளின் மிகப் பெரும் பகுதியைத் தங்கள் வசம் வைத்துக்கொண்டு அவதூறுகளையும் பொய்களையும் வெள்ளமாகப் பெருக்கி மக்களுடைய மூளைகளையும் மனச்சான்றையும் குழப்பிக் கலக்க முயல்கிறார்கள்... முடியரசை வீழ்த்திய முதல் புரட்சி முடியரசுப் பத்திரிகைகளை அடக்கி நிறுத்த உரிமை கொண்டிருந்தது என்றால், பூர்ஷ்வா வர்க்கத்தை வீழ்த்திவிட்ட இந்தப் புரட்சி பூர்ஷ்வாப் பத்திரிகைகளை அடக்கி நிறுத்த உரிமை கொண்டிருக்கிறது.''

ஆனால் எதிர்க்கட்சிப் பத்திரிகைகள் முழுமையாக அடக்கி நிறுத்தப்படவில்லை. ஒரு நாள் நிறுத்தப்பட்ட பத்திரிகைகள் மறுநாள் புதிய பெயருடன் வெளிவந்தன. **பேச்சு** என்ற பத்திரிகை, **கட்டற்ற பேச்சு** ஆயிற்று. **பகல், இரவு** என்ற பெயரிலும் பின்பு **கார் இரவில், நள்ளிரவு, காலை இரண்டு மணி** முதலிய வெவ்வேறு பெயர்களிலும் வெளி வந்தது. **அங்கதம்** என்ற பத்திரிகை படங்கள் வாயிலாகவும் செய்யுள்கள் வாயிலாகவும் போல்ஷெவிக்குகளைக் களி பொங்கவும் இரக்கமின்றியும் வசைகளால் தொடர்ந்து

தாக்கியது. பொதுத் தகவல் அமெரிக்கக் கமிட்டி* எவ்விதத் தடங்கலும் இன்றித் தனது பிரசாரத்தை நடத்தி வந்தது. ''சோஷலிஸ்டுகள் போரை ஆதரிக்கிருர்கள்'' என்ற தலைப்பில் ஸாமுவேல் கோம்பர்ஸின்** சொற்களை அது தொடர்ந்து பிரசுரித்தது. ஆனல் பொது மக்களிடையே முழுமொத்தமான பொய்கள் பரப்பப்படுவதைத் தடுக்கும் அளவுக்கு போல்ஷெவிக் நடவடிக்கைகள் பயனுள்ளவையாக இருந்தன.

''மதத்தை மக்களின் அபின்'' ஆக்கும் ஆன்மிகப் போலீஸாகப் பண்டைக் கிரேக்கச் சர்ச்சை ஜார் முன்னர் பயன்படுத்தினன். நரகத்தைப் பற்றிய அச்சுறுத்தல்களாலும் சுவர்க்கத்தைப் பற்றிய ஆசை காட்டல்களாலும் பொது மக்கள் எதேச்சாதிகாரத்துக்குக் கீழ்ப்படியுமாறு வலுக் கட்டாயமாக வற்புறுத்தப்பட்டிருந்தார்கள். இப்போது பூர்ஷ்வாக்களுக்காக இதே கைங்கரியம் செய்யும்படி சர்ச் கோரப்பட்டது. தனது எல்லாச் சடங்குகளிலும் வழிபாடுகளிலும் இருந்து போல்ஷெவிக்குகளை விலக்கிவிட்டதாகச் சர்ச் ஆழ்ந்த முறையில் பிரகடனம் செய்துவிட்டது.

போல்ஷெவிக்குகள் மதத்தை நேரடியாகத் தாக்கவில்லை, ஆனல் சர்ச்சை அரசிலிருந்து தனிப் பிரித்துவிட்டார்கள். அரசாங்க நிதிகள் சர்ச்சின் பணப்பெட்டிகளுக்குப் பாய்வது நிறுத்தப்பட்டு விட்டது. திருமணம் சமயச் சார்பற்ற ஏற்பாடு என்று அறிவிக்கப்பட்டது. மடங்களின்

---

*1917ம் ஆண்டு ஏப்ரல் மாதம், அமெரிக்க ஐக்கிய நாடுகள் உலக யுத்தத்தில் கலந்து கொண்டதற்குச் சிறிது காலத்திற்கெல்லாம் ஜனதிபதி வில்ஸனல் நிறுவப்பட்டது பொதுத் தகவல் அமெரிக்கக் கமிட்டி. போர்ப் பிரசாரமும் தணிக்கையும் உளவறிதலும் அதன் செயல்களில் அடங்கியிருந்தன. 1917ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் இந்தக் கமிட்டியின் ஒரு ருஷ்யக் கிளை ஸ்தாபிக்கப்பட்டது. ருஷ்யாவில் அது சோவியத் எதிர்ப்பு நடவடிக்கைகளை இயக்கியும் அமெரிக்கச் செய்திப் பிரசுரங்களை வெளியிட்டும் வந்தது.

**கோம்பர்ஸ்—பிற்போக்குள்ள அமெரிக்கத் தொழிற் சங்கத் தலைவன். சோவியத் ருஷ்யாவுக்கு எதிராகத் தலையீட்டை ஆதரித்தவன்.

நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. சில மடங்கள் மருத்துவ மனைகளாக மாற்றப்பட்டன.

புனிதக் கேடான இந்தச் செயல்களை எதிர்த்துத் தலைமைப் பாதிரி ஆட்சேபங்களை முழக்கினார். ஆனால் எதுவும் பயன் விளையவில்லை. புனிதச் சர்ச்சின்மீது பொதுமக்களின் பக்தி ஜார் மீது அவர்கள் கொண்டிருந்த பக்திபோன்றே வெறுங்கதை என்பது நிரூபணம் ஆகிவிட்டது. போல்ஷெவிக்குகளை ஆதரித்தால் நரகம் கிட்டும் என்று சாபம் அளித்த சர்ச் ஆணையை அவர்கள் பார்த்தார்கள். நிலத்தையும் தொழிற்சாலைகளையும் தங்களுக்கு அளித்த போல்ஷெவிக் அரசாணையையும் அவர்கள் நோக்கினார்கள்.

''இரு தரப்புக்களில் ஒன்றைத் தெரிந்தெடுக்க வேண்டும் என்றால் நாங்கள் போல்ஷெவிக்குகளையே தெரிந்தெடுக்கிறோம்'' என்றார்கள் சிலர். வேறு சிலர் சர்ச்சைத் தெரிந்தெடுத்தார்கள். பலர் வெறுமே ''நிச்சிவோ'' (ஒன்றும் பிரமாதம் இல்லை) என்று முணுமுணுத்துவிட்டு ஒரு நாள் சர்ச் ஊர்வலத்திலும் மறுநாள் போல்ஷெவிக் அணிவகுப்பிலும் கலந்துகொண்டார்கள்.

குடியானவர்களும் அராஜகவாதிகளும் ஜெர்மானியரும் சோவியத்துக்களுக்கு எதிராகத் தூண்டிவிடப்படுகிறார்கள்

நகரங்கள் போல்ஷெவிக்குகளின் அரண்களாக விளங்கின. கிராமங்களை அவர்களுக்கு எதிராகத் தூண்டிவிட பூர்ஷ்வாக்கள் முயன்றார்கள்.

''பாருங்கள்! நகரவாசிகள் நாள்தோறும் எட்டு மணி நேரம் மட்டுமே வேலை செய்கிறார்கள். நீங்கள் எதற்காகப் பதினறு மணி வேலை செய்ய வேண்டும்? பதிலுக்கு எதுவும் உங்களுக்குக் கிடைக்காதபோது உங்கள் தானியத்தை நகரங்களுக்கு எதற்காகக் கொடுக்க வேண்டும்?'' என்று குடியானவர்களிடம் அவர்கள் கூறினார்கள். குடியானவர்கள் சோவியத்தின் பழைய காரியக் கமிட்டியினர் ஸ்மோல்னியில் உள்ள புதிய அரசாங்கத்தை ஏற்கத் திட்டமாக மறுத்துவிட்டார்கள்.

ஆனால் இத்தகையவர்களை மதியாமல் போல்ஷெவிக்குகள் குடியானவர்களின் புதிய காங்கிரஸைக் கூட்டினார்கள். இங்கே செர்னேவும் பழைய புள்ளிகளும் போல்ஷெவிக்குகளை உக்கிரமாகத் தாக்கினார்கள். எனினும் இரண்டு பிடிவாதமான உண்மைகளை வீழ்த்த முடியவில்லை. முதலாவது: போல்ஷெவிக்குகள் குடியானவர்களுக்கு வெறும் வாக்குறுதிகள் அல்ல, நிலத்தைக் கொடுத்திருந்தார்கள். இரண்டாவது: புதிய அரசாங்கத்தில் பங்கு கொள்ளும்படிக் குடியானவர்களை போல்ஷெவிக்குகள் இப்பொழுது அழைத்தார்கள்.

பல நாட்கள் சூறாவளி போன்ற கடும் விவாதத்துக்குப் பின்னர் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. தீவத்திகளால் ஒளியூட்டப்பட்ட இரவில் குடியானவர்கள் வெளியே திரண்டு வந்தார்கள். பாவ்லொவ்ஸ்க்கிய் ரெஜிமென்டின் இசைக் குழு ''மார்ஸேல்'' கீதத்தை முழக்கியது. தொழிலாளர்கள் பாய்ந்து வந்து குடியானவர்களைத் தழுவி முத்தம் இட்டார்கள். **''உழைப்பாளிப் பொதுமக்களின் ஐக்கியம் நீடூழி வாழ்க''** என்ற வாசகம் பொறித்த குடியானவர்கள் சோவியத்தின் பிரமாண்டமான பதாகைக்குப் பின்னே ஊர்வலம் வெண்பனி மூடிய தெருக்கள் வழியே ஸ்மோல்னிய்க்குச் சென்றது. படைவீரர்களுடனும் தொழிலாளர்களுடனும் குடியானவர்களின் ''திருமணச்'' சடங்கு இங்கே நிறைவேற்றப்பட்டது. ''நான் இங்கே தரையில் கால் பாவாமல் காற்றில் பறந்துவந்தேன்'' என்று உவகைப் பெருக்குடன் ஆர்ப்பரித்தான் ஒரு முதிய குடியானவன். புதிய அரசாங்கம் எதார்த்தத்திலேயே தொழிலாளர்கள், படைவீரர்கள், குடியானவர்கள் பிரதிநிதிகளுடைய சோவியத் ஆகிவிட்டது.

சோவியத்துக்களைத் தகர்க்கும் முயற்சியில் பூர்ஷ்வாக்கள் இடமும் வலமுமாக—அராஜகவாதிகளின் அருகே வரும் அளவுக்கு இடமாக—சாரி பாய்ந்தார்கள். நூற்றுக் கணக்கான இராணுவ அதிகாரிகளும் முடியரசுவாதிகளும் அராஜகவாதிகளின் ஸ்தாபனங்களில் மெதுவாக நுழைந்து கொண்டு அவர்களது கறுப்புக் கொடியின்கீழ் செயலாற்றும் அராஜகவாதிகள் ஆகிவிட்டார்கள்.

அவர்கள் ஹோட்டல்களுக்குள் நுழைந்து அங்கிருந்தவர்களின் பணப்பைகளை ரிவால்வர் முனையில் ''ஜப்தி செய்

தார்கள்.'' மாஸ்கோவில் முப்பத்து நான்கு மாளிகைகளை அவற்றில் வசித்தவர்களைத் தெருக்களில் விரட்டிவிட்டுத் ''தேசீய உடைமை ஆக்கினுர்கள்'' அவர்கள். கர்னல் ராபின்ஸ் என்பவரின் செஞ்சிலுவைக் கார் நடைபாதை ஓரமாக நிற்கக் கண்டு அதில் ஏறி ஓட்டிச் சென்று அதை ''சோஷலிஸ உடைமை ஆக்கிவிட்டார்கள்.'' ''நாங்களே உண்மையான புரட்சிக்காரர்கள்—போல்ஷெவிக்குகளைக் காட்டிலும் தீவிரவாதிகள்'' என்று கூறித் தங்கள் செய்கைகள் யாவற்றையும் அவர்கள் நியாயப்படுத்த முயன்றுர்கள்.

போல்ஷெவிக்குகள் உண்மையான அராஜகவாதிகளுக்குப் போலிகளை நீக்கித் தங்கள் கட்சியைத் தூய்மைப்படுத்தும்படி இறுதி எச்சரிக்கை விடுத்தார்கள். அதே சமயம் ''அராஜகவாதிக்'' கேந்திரங்களைத் திடீரெனச் சோதனையிட்டு ஏராளமான உணவுப் பொருள் சேமிப்புக்களையும் நகைகளையும் ஜெர்மனியிலிருந்து அப்போதுதான் வந்திருந்த மெஷீன்கன்களையும் அவற்றில் கண்டுபிடித்தார்கள். திருட்டுப் பொருள்களை உடைமையாளர்களிடம் திருப்பிக் கொடுத்துவிட்டு, அதிதீவிரப் புரட்சிக்காரர்களாக வேஷம் போட்டுக்கொண்டு திரிந்த எல்லாப் பிற்போக்காளர்களையும் கைது செய்தார்கள்.

பூர்ஷ்வாக்கள் தங்கள் முன்னுள் பகைவர்களான ஜெர்மானியர்களின் உதவியை நாடினுர்கள். ஜெர்மன் படைகள் மாஸ்கோ நகருக்குள் அணிவகுத்து வருவதை அடுத்த வாரம் பார்ப்பீர்கள் என்று எங்களிடம் அவர்கள் மறுபடி மறுபடி சொன்னுர்கள்.

அப்போது போல்ஷெவிக்குகளிடம் ஜெர்மானியர்களை எதிர்ப்பதற்குச் செஞ்சேனைகளோ பீரங்கித் தொகுதிகளோ இல்லை. ஆனுல் லைனோடைப்களும் அச்சு இயந்திரங்களும் அவர்களிடம் தொகுதிகளாக இருந்தன. ஜெர்மானிய அணிகளில் தவருமல் இலக்கில் தாக்கும் பிரசாரத் தெறி குண்டுகளை இவை பொழிந்தன. தங்களுடைய ஆயுதங்களை ருஷ்யாவில் தொழிலாளர்கள் குடியரசை அழிப்பதற்காக அன்றி ஜெர்மனியில் தொழிலாளர்கள் குடியரசை நிறுவுவதற்காகப் பயன்படுத்துமாறு ஜெர்மானியர்களுக்கு வேண்டு

கோள் தீப்பந்தம், மக்கள் சமாதானம் என்னும் பத்திரிகை களில் எல்லா மொழிகளிலும் சுடர் வீசியது.

சோவியத் அலுவலகங்களில் ஜான் ரீடும் நானும் படங் கள் கொண்ட ஒரு பிரசுரத்தைத் தயாரித்தோம். முதலா வது படம் பெத்ரோகிராதில் இருந்த ஜெர்மன் தூதரகத் தையும் அதன் முகப்பில் ஒரு பெரிய பதாகையையும் காட்டியது. இந்தப் படத்தின் அடியில் பின்வரும் வாக்கியங்கள் இருந்தன:

''இந்தப் பெரிய பதாகையைப் பாருங்கள். அதில் உள்ள சொற்கள் புகழ்பெற்ற ஒரு ஜெர்மானியர் கூறிய வை. அவர் யார், பிஸ்மார்க்கா? ஹிண்டன்பர்கா? இல்லே. சர்வதேசச் சோதரர் குழுவுக்கு 'உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்' என்று அமரர் கார்ல் மார்க்ஸ் விடுத்த அழைப்பாகும் இது.

''இது ஜெர்மன் தூதரகத்தின் நேர்த்தியான அலங் கரிப்பு மட்டும் அல்ல. ருஷ்யர்கள் ஆழ்ந்த சிரத்தையுடன் இந்தப் பதாகையை உயர்த்தியிருக்கிறுர்கள். எழுபது ஆண்டு களுக்கு முன் உலகம் அனைத்துக்கும் உங்கள் கார்ல் மார்க்ஸ் அளித்த அதே சொற்களை ஜெர்மானியர்களாகிய உங் களிடம் திருப்பிச் சொல்லுகிறுர்கள் அவர்கள்.

''உண்மையான பாட்டாளி வர்க்கக் குடியரசு ஒன்று முடிவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ஆனுல் எல்லா நாடு களையும் சேர்ந்த தொழிலாளர்கள் ஆட்சி அதிகாரத்தை வென்று கைப்பற்றும்வரை இந்தக் குடியரசு உறுதியாக நிலே பெற முடியாது.

''ருஷ்யக் குடியானவர்களும் தொழிலாளர்களும் படை வீரர்களும் ஒரு சோஷலிஸ்டை அரசாங்க தூதராக விரை வில் பெர்லினுக்கு அனுப்புவார்கள். பெத்ரோகிராதில் உள்ள இந்தக் கட்டிடத்துக்கு ஒரு சர்வதேசீயவாதி சோஷலிஸ்டை ஜெர்மனி எப்போது அனுப்பும்?''

மூன்ருவது படம் ஒரு படைவீரன் ருஷ்ய சாம்ராஜ்யக் கழுகுச் சின்னங்களை ஒரு அரண்மனையிலிருந்து நெம்பி அகற்றுவதையும் தரையிலிருந்த ஜனங்கள் அவற்றை எரிப் பதையும் காட்டிற்று. படத்தின் அடியில் பின்வரும் சொற்கள் இருந்தன:

''அரண்மனை முகட்டில் ஒரு படைவீரன் எதேச்சாதி காரத்தின் வெறுக்கத்தக்க சின்னத்தை உடைத்துத் தள்ளு கிருன். கீழே ஜனக்கூட்டம் அந்தக் கழுகுகளை எரிக்கிறது. எதேச்சாதிகாரம் கவிழ்க்கப்பட்டது சமூகப் புரட்சியை

நோக்கிய முன்னேற்றத்தில் முதல் அடிவைப்பே என்று கூட்டத்திலுள்ள படைவீரன் விளக்குகிறான்.

''எதேச்சாதிகாரத்தை அகற்றுவது எளிது. படைவீரர்களின் குருட்டுத்தனமான கீழ்ப்படிவையே ஆதாரமாகக் கொண்டு நிற்கிறது எதேச்சாதிகாரம். ருஷ்யப் படைவீரர்கள் வெறுமே கண்களைத் திறந்தார்கள், எதேச்சாதிகாரம் உடனே மறைந்துவிட்டது.''

இந்தப் படங்களும் பத்திரிகைகளும் துண்டுப்பிரசுரங்களும் சாதகமான காற்றுல் ஜெர்மன் காப்பகழ்களுக்கு அடித்துச் செல்லப்படுமாறு உயரே வீசப்பட்டன. இவை விமானங்களிலிருந்து சிதறப்பட்டன, பூட்சுகளுக்குள்ளும் பெட்டிகளிலும் ஜெர்மனி திரும்பிய போர்க்கைதிகளின் உடைகளிலும் மறைமுகமாக அனுப்பப்பட்டன.

இவை எல்லாம் ஜெர்மன் சைனியங்களைக் கூறுபடுத்திப் புரட்சிக்கு முன்னேற்பாடுகள் செய்தன. ''எங்கள் உளத்திண்மையைத் தகர்த்து, எங்களுக்குத் தோல்வியையும் இப்போது எங்களைச் சீரழிக்கும் இந்தப் புரட்சியையும் அளித்தவர்கள் லெனினும் போல்ஷெவிக்குகளுமே'' என்று கூறினான் ஜெனரல் ஹோப்மன்.* ஒரு வேளை பிரசாரம் இந்த அளவுக்குச் செயல்வன்மை கொண்டிருக்கவில்லை போலும். எனினும் ஜெர்மன் துருப்புக்கள் சோவியத்துக்களைத் தாக்கித் திணற அடிக்காதவாறு அது தடுத்தது. எனவே ருஷ்ய பூர்ஷ்வாக்கள் நேசநாட்டினரின் தலையீட்டுக்குச் சூழ்ச்சி செய்யத் தொடங்கினர்.

அரசியல் நிர்ணய சபையின் படுவீழ்ச்சி

1918, ஜனவரி *18*ந் தேதி, வர்க்கங்களின் போராட்டம் உச்சத்தில் இருந்தபோது அரசியல் நிர்ணய சபை கூட்டப்பட்டது. புரட்சியின் முந்திய கட்டம் ஒன்றை—தற்போது

---

*ஹோப்மன்—ஜெர்மானிய ஜெனரல், மேற்குப் போர் முனையின் தலைமைத் தளகர்த்தன். *1917* நவம்பரில் சோவியத் அரசாங்கத்துடன் போர்நிறுத்தப் பேச்சுவார்த்தைகள் நடத்த நியமிக்கப்பட்டவன்.

நிராகரிக்கப்பட்டுவிட்ட ஒரு நோக்கை—அது பிரதிநிதித்து வப்படுத்தியது. பழசுபட்ட பட்டியல்களின்படி அது தேர்ந் தெடுக்கப்பட்டிருந்தது. ஒரு சோவியத் கட்சி—இடதுசாரி சோஷலிஸ்ட் புரட்சிவாதிகள்—அந்தப் பட்டியலில் ஒரு கட் சியாகக் குறிக்கவே படவில்லை. கடந்த காலத்திலிருந்து ஆவி போன்று இந்த ஸ்தாபனம் வருவதைப் பொதுமக்கள் சட்டைசெய்யவே இல்லை. பூர்ஷ்வாக்களோ அதற்கு ஆடம்பர மாக ஏற்பு அளித்தார்கள். உண்மையில் அரசியல் நிர்ணய சபை மீது பூர்ஷ்வாக்களுக்கு உற்சாகமான பற்று கிடையவே கிடையாது. அதை ஒத்திப் போடவோ அல்லது ஒழித்துக் கட்டவோ அவர்கள் மாதக் கணக்காகத் தங்களால் இயன் றதை எல்லாம் செய்து வந்தார்கள், ''அரசியல் நிர்ணய சபையாவது—நாங்கள் அதன்மேல் காறி உமிழ்கிறோம்'' என்று அவர்கள் கூறியதை நான் எத்தனையோ தடவைகள் கேட்டிருந்தேன். இப்பொழுதோ, அதுவே அவர்களுடைய கடைசி நம்பிக்கை, அவர்கள் சூழ்ச்சிகள் நடத்துவதற்கு மறைவு அளிக்கும் கடைசித் தட்டி ஆகிவிட்டது. அவர்கள் அதன் தீவிர ஆதரவாளர்கள் ஆகிவிட்டார்கள்.

சபைக் கூட்டத்தின் தொடக்க நாளன்று பெரிய ஆர்ப் பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. சுமார் 15,000 இரா ணுவ அதிகாரிகளும் அலுவலர்களும் அறிவுஜீவிகளும் வீதி களில் அணிவலம் வந்தார்கள். மென்மயிர்த்தோல் கோட் டுக்களும் செந்நிறச் சிங்கார ஆடைகளும் அணிந்த உல்லாச வாழ்க்கைச் சீமாட்டிகளும், செம்பதாகைகள் ஏந்தி வந்த முன்னாள் முடியரசுவாதிகளும் ''மக்களின் குறிக்கோளுக் காக நாங்கள் பட்டினி கிடந்தோம், குருதி பெருக்கினோம்'' என்று பெருங்குரலெடுத்துப் பாடிக்கொண்டு வந்த பானை வயிறர்களான பண்ணையார்களும் எல்லோரும் புரட்சி ஊர் வலம் போன்று காட்சியளிக்க இயன்றவரை முயன்றார்கள். ஆனால் அவர்களுடைய பாட்டுக்களும் பதாகைகளும் மாத்திரமே செம்மை கொண்டிருந்தன. ஊர்வலத்தினர் பெரும்பாலும் வெண்படையினரும் ''கறுப்பு நூற்றுவருமே.'' குடியானவனையோ தொழிலாளியையோ ஒருவனைக்கூடக் காண்பது அரிதாக இருந்தது. பொதுமக்கள் ஒரு புறம் விலகி நின்று அணிவலத்தினரைப் பரிகசித்து ஆரவாரித்

தார்கள், அல்லது வெறுப்புடன் மௌனமாயிருந்தார்கள்.

அரசியல் நிர்ணய சபை பெரிதும் காலம் தாழ்த்து வந்தது. அது செத்துப் பிறந்தது. புரட்சியின் விரைந்த போக்கில் புரட்சிகர மக்களின் விசுவாசம் சோவியத்துக்கே முழுமையாக மாறிவிட்டது. சோவியத்துக்காக அவர்கள் 5,00,000 பெயர் கொண்ட அணிவலம் நடத்தினார்கள். அதற்காக அணிவலம் நடத்துவதற்கு மட்டுமே அல்ல, போரிடவும் உயிர் வழங்கவும் மக்கள் ஆயத்தமாய் இருந்தார்கள். சோவியத் உழைப்பாளி மக்களின் சொந்த நிறுவனம், அவர்களது வர்க்கத்தில் உதித்தது, அவர்களது சொந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அற்புதமாக இசைந்தது, எனவே உழைப்பாளிகளுக்கு அது விலைமதிப்பற்றதாக இருந்தது.

ஆதிக்கம் வகிக்கும் ஒவ்வொரு வர்க்கமும் தனது ஆட்சி அதிகாரத்தை நிலையாக வைத்திருக்கும் வகையான அரசு இயந்திரத்தை, எதன் வாயிலாக அது தன் சொந்த நலன்களுக்கு இணங்க ஆட்சி செலுத்த முடியுமோ அத்தகைய அரசு இயந்திரத்தை உருவாக்குகிறது. அரசர்களும் பிரபுக்களும் ஆட்சி அதிகாரத்தில் இருந்தபோது அவர்கள் செயல் நடத்திய அரசு இயந்திரம் எதேச்சாதிகாரமும் அதிகாரவர்க்க ஆட்சியுமாக இருந்தது. பூர்ஷ்வா-முதலாளித்துவ வர்க்கங்கள் 18ம் நூற்றுண்டில் அதிகாரப் பீடத்தில் அமர்ந்ததும் இந்தப் பழைய அரசு இயந்திரத்தைக் குப்பையில் தள்ளிவிட்டுத் தங்கள் நோக்கங்களுக்குப் பொருத்தமான ஒன்றை—பார்லிமெண்டு, காங்கிரஸ் ஆகியவற்றை—சிருஷ்டித்துக்கொண்டன.

இவ்வாறே ருஷ்யாவில் ஆட்சி அதிகாரத்துக்கு வந்த உழைப்பாளி வர்க்கங்கள் தங்களுக்கே உரிய அரசு இயந்திரமான சோவியத்தை உடன் கொண்டு வந்தன. ஆயிரக் கணக்கான ஸ்தல சோவியத்துக்களில் இந்த இயந்திரத்தைப் பிரயோகித்துச் சோதித்து அறிந்திருந்தன அவை. இதன் செயல்பாட்டை அவை தெரிந்துகொண்டிருந்தன. சோவியத் இவ்வர்க்கங்களின் அன்றுட அனுபவத்தின் அம்சமாக விளங்கியது. தங்கள் உளமார்ந்த விருப்பங்களை—நிலம், தொழிற்சாலைகள், சமாதானப் பிரேரணை ஆகியவற்றை—இவ்வர்க்கத்தினர் நிறைவேற்றிக் கொண்டிருந்தார்கள்.

அதனுடன் அணி சேர்ந்து நடந்து வெற்றியை அடைந் திருந்தார்கள். அதை அவர்கள் ருஷ்யாவின் அரசாங்கம் ஆக்கியிருந்தார்கள்.

இப்போது, நேரந்தாழ்த்து வந்த இந்த அரசியல் நிர்ணய சபை சோவியத்தை ருஷ்யாவின் அரசாங்கமாக ஏற்றுக் கொள்ள மறுத்தது. சோவியத்துக்களால் பிரேரிக்கப்பட்ட ''உழைப்பாளி, சுரண்டப்பட்ட மக்களின் உரிமைகள் பற்றிய பிரகடனத்தை''—ருஷ்யப் புரட்சியின் பேருரிமைப் பத்திரத்தை—ஒப்புக்கொள்ள அது மறுத்தது. ''மனித உரிமைகள் பற்றிய பிரகடனத்தை'' பிரெஞ்சுப் புரட்சி ஏற்றுக்கொள்ள மறுத்தால் எப்படியிருக்குமோ அப்படியே இருந்தது இது.

எனவே இந்தச் சபை கலைக்கப்பட்டது. 1918, ஜன வரி 19ந் தேதி காலையில் சபை மன்றக் காவலர்களான கடற் படை வீரர்கள் தங்களுக்குத் தூக்கம் வருவதாகவும் எஞ்சி யிருக்கும் பிரதிநிதிகள் பேசுவதை நிறுத்திவிட்டு வீடுகளுக் குப் போக வேண்டும் என்றும் கூறினார்கள். இவ்வாறு ஒரு கூட்டத்திற்குப் பின் அரசியல் நிர்ணய சபை மடிந்தது. மேற்கு உலகில் அது பெரும் ஆர்வக் கொந்தளிப்பு உண் டாக்கியதாயினும் ருஷ்யாவின் வாழ்க்கையில் அற்பச் சலனத் தைக்கூட அரிதாகவே ஏற்படுத்தியது. மக்கள்மீது அதற்கு எவ்விதச் செல்வாக்கும் இல்லை. அது இறந்த விதமே அது உயிர் வாழ உரிமை அற்றது என்பதைக் காட்டிவிட்டது.

அரசியல் நிர்ணய சபைக்காக முதன்மையாகத் துக்கம் கொண்டாடியவர்கள் பூர்ஷ்வாக்களே. அதுவே அவர்களு டைய கடைசி நம்பிக்கையாக விளங்கியது. இப்பொழுது அது வும் போய்விட்டது. எனவே புரட்சி மீதும் அதன் எல்லாச் செய்கைகள் மீதும் அவர்களுடைய சீற்றம் அடங்காமல் பொங்கியது. இது இயல்பானதே, ஏனெனில் புரட்சி அவர் களது பேரழிவாக இருந்தது. ''உழைக்காதவனுக்கு உணவு கிடையாது'', ''எல்லோருக்கும் ரொட்டி கிடைக்கும் வரை எவனுக்கும் இனிப்புப் பணியாரம் கிடையாது'' என்று அறி வித்தது புரட்சி. பூர்ஷ்வாக்களது வாழ்க்கையின் அடிப்படை முழுவதையும் அது வெடிவைத்துத் தகர்த்துவிட்டது. நிலப் பிரபுக்களிடமிருந்து பெரிய எஸ்டேட்டுக்களையும் பத

...NNE... A PUBLIC LIBRA...
10 APR 1976

வியாளர்களிடமிருந்து வசதியான வேலைகளையும் முதலாளிகளிடமிருந்து பாங்கிகள், தொழிற்சாலைகளின் நிர்வாகத்தையும் அது எடுத்துக்கொண்டுவிட்டது. தன்னிடமிருந்து பொருள்கள் எடுத்துக் கொள்ளப்படுவதை எவனும் விரும்புவதில்லை. உல்லாச வாழ்க்கை நடத்தும் எந்த வர்க்கமும் மாடித் தோட்டத்திலிருந்து நயப்பாங்குடன் இறங்கி வேலைக்குப் போவதில்லை. விசேஷச் சலுகைகள் பெற்ற எந்த வர்க்கமும் தனது எந்தச் சலுகைகளையும் தானாக விரும்பி விட்டுக்கொடுப்பதில்லை. மரபில் மூழ்கிய எந்த வர்க்கமும் பழைய மரபை நிராகரித்து விட்டுப் புதிதை உவப்புடன் தழுவுவதில்லை.

இந்த விதிக்கு விலக்குகள்—ருஷ்யாவில் குறிப்பிடத்தக்க சில விலக்குகள்—சந்தேகமின்றி உள்ளன. ஜார்கால ஜெனரல் நிக்கலாயெவ் தாம் ஒரு போல்ஷெவிக் என்று பிரகடனம் செய்து செஞ்சேனையில் படைத் தலைமை ஏற்றார். பின்னர் யாம்பர்கில் வெண்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட போது போல்ஷெவிஸத்தின்பால் தமது விசுவாசத்தை மறுக்குமாறு அவரிடம் கோரப்பட்டது. அவர் அதற்கு இசையவில்லை. அவர் சித்திரவதை செய்யப்பட்டார். ஒரு செந்நட்சத்திரம் அவர் மார்பின் மீது சூட்டுக்கோலால் பொறிக்கப்பட்டது. அப்போதும் அவர் தமது கொள்கையை மாற்ற மறுதளித்து விட்டார். அவர் தூக்குமேடைக்கு இட்டுச் செல்லப்பட்டார். அவர் கழுத்தில் சுருக்கு மாட்டப்பட்டது.

''நான் போல்ஷெவிக்காக உயிர் துறக்கிறேன். சோவியத் நீடூழி வாழ்க'' என்று கத்திவிட்டுத் தூக்கில் மாண்டார் ஜெனரல் நிக்கலாயெவ்.

இவரைப் போன்ற பிறரும் இருந்தார்கள். தல்ஸ்தோய், வழிவழியாக வந்த மற்ற ருஷ்ய மனிதாபிமானிகள் ஆகியோரின் உபதேசங்களால் நெஞ்சு இளகியவர்கள் இவர்கள். பழைய அமைப்பின் நேர்மையின்மையையும் புதிய அமைப்பின் நியாயத்தையும் புரிந்து கொண்டவர்கள் இவர்கள்.

ஆனால் இத்தகையவர்கள் விதிவிலக்கானவர்கள். ஒரு வர்க்கம் என்ற முறையில் ருஷ்ய பூர்ஷ்வாக்கள் புரட்சியைத் திகிலுடனும் வெறுப்புடனும் நோக்கினார்கள். அதைக்

கொன்றழித்து விடுவது ஒன்றே அவர்களது எண்ணமாக இருந்தது. பழிவெறியால் கண்ணிழந்து தன்மானம் வீரப் பண்பு, தேசபக்தி ஆகியவற்றின் விதிமுறைகளை அவர்கள் புறத்தே எறிந்துவிட்டார்கள். புரட்சியை அடித்து வீழ்த்து வதற்கு வெளிநாட்டுப் போர்க் கருவிகள் வேண்டுமென்று அவர்கள் கூவி வேண்டினார்கள். எல்லா ஆயுதங்களும்—கொலைகூட—புனிதமாக மதிக்கப்பட்டன. நாகரிக மேல்மூடி கழன்று விழுந்து விட்டது. விலங்குக் கோரப்பற்களும் உகிர்களும் வெளித் தெரிந்தன. திறமையும் பண்பாடும் வாய்ந்த மனிதர்கள் காட்டுமிராண்டிகள் ஆகிவிட்டார்கள்.

அத்தியாயம் பன்னிரண்டு

புது அமைப்பு நிறுவப்படுதல்

அரசு அதிகாரத்தைத் திரும்பக் கைப்பற்றும் பொருட்டுச் செய்த முயற்சிகளில் ருஷ்ய மேல் வர்க்கத்தினர் நடந்துகொண்ட விதம் வரலாற்றில் புதியதோ வழக்கத்துக்கு மாறானதோ அல்ல. முன்காணாத விஷயம் அந்த அதிகாரத்தைத் தங்கள் கைகளில் வைத்திருக்க ருஷ்யத் தொழிலாளி வர்க்கம் கொண்டிருந்த மன உறுதிதான். ஈட்டிக் குத்தை எதிர்க்குத்தால் தடுப்பதும், அடிக்குப் பதில் அடிகொடுப்பதும், இரும்பை எஃகால் தாக்குவதுமாக விடாப்பிடியான உளத்திண்மையுடன் தங்கள் பாதையில் பிறழ்வின்றி முன்னேறினார்கள் ருஷ்ய உழைப்பாளிகள். ஈடற்ற ஒழுங்குக் கட்டுப்பாட்டையும் ஒருமைப்பாட்டையும் அவர்கள் வளர்த்துக்கொண்டார்கள்.

சாதாரண மக்கள் தங்கள் தலைவர்களின் எஃகு உளவுறுதியினாலேயே அணிகளில் விலகாது நிற்குமாறு செய்யப்பட்டார்கள் என்றும் அவர்களுடைய மனோதிடம் அவர்களுக்கு மேலிருந்த மனிதர்களின் மனோதிடத்தினது பிரதிபலிப்பே என்றும் கூறப்படுகிறது. உண்மையோ இதற்கு அனேகமாக நேர் எதிரானது.

மனவுறுதி இல்லாதிருந்தவர்கள் தலைவர்களே. மூன்று

போல்ஷெவிக் கமிஸார்கள் மிக நெருக்கடியான கணத்தில் தங்கள் பதவிகளை விட்டு அகன்றார்கள். வேறு ஐவர் (ஸினேவியேவ், காமினெவ், மிலியூத்தின், நாகின், ரீக்கொவ்) போல்ஷெவிக் கட்சி மத்தியக் கமிட்டிக்குத் தங்கள் ராஜிநாமாக்களைச் சமர்ப்பித்தார்கள். மாஸ்கோவின் அழிவு பற்றிய கதைகளை எல்லாம் நம்பிய லுனச்சார்ஸ்க்கிய், ''எனக்குப் போதும் போதும் என்று ஆகிவிட்டது. இந்தப் பயங்கரத்தைத் தாங்க எனக்கு வலிமை இல்லை. என்னைப் பைத்தியமாக அடிக்கும் எண்ணங்களின் நசுக்குதலுக்கு உள்ளாகியவாறு வேலை செய்வது இயலாது. என்றால் இனிப் பொறுக்க முடியாது. நான் ராஜிநாமா செய்கிறேன்'' என்று வீரிட்டார்.

''பூர்ஷ்வாக்களின் கூச்சல்களுக்கு முடி வணங்கியவாறு, தயக்கத்துக்கும் சந்தேகத்துக்கும் ஆளாகும் இந்த அற்ப நம்பிக்கைக்காரர்களின் நிலை வெட்கக்கேடானது. பொதுமக்களைப் பாருங்கள். அவர்களிடம் தயக்கத்தின் சாயல்கூட இல்லை'' என்று இரைந்தார் லெனின். பொறுப்பை விட்டு ஓடியவர்களின் பெயர்கள் ருஷ்யா முழுவதிலும் பழிக்கப்பட்டன. பாட்டாளிகளின் வெடித்துக் கிளம்பிய சீற்றத்துக்கு முன் நிற்கமாட்டாமல் கமிஸார்கள் விரைந்து திரும்பிப் பதவிகளில் அமர்ந்து கொண்டார்கள். அப்புறம் அவர்கள் தயக்கம் அடையவே இல்லை.

எனினும் தோல்வி பற்றிய இடையறு அச்சத்தை முற்றிலும் விட்டொழிக்க அவர்களால் முடியவே இல்லை. லெனின்கூட இதனால் பாதிக்கப்படாமல் இல்லை. அவ்வளவு காலம் அழிவடையாமல் தப்பியதில் ஆச்சரியம் அடைந்து, ''இன்னும் பத்து நாட்கள் சென்றதும் நாம் எழுபது நாட்கள்—பாரிஸ் கம்யூன் நிலைத்திருந்த அளவு காலம்—வாழ்ந்தவர்கள் ஆகிவிடுவோம்'' என்று ஆர்ப்பரித்தார் அவர். தங்கள் பெருமுயற்சி நிச்சயமான நாசத்தில் முடியும் எனச் சில வேளைகளில் தலைவர்கள் எண்ணினார்கள்.

''எங்களால் முடிந்தவரை நாங்கள் பாடுபட்டோம். ஆனால் விரைவில் எங்கள் ஆட்டம் எல்லாம் ஓய்ந்துவிடும்'' என்று ஒரு நாள் துயரத்துடன் சொன்னான் பீட்டர்ஸ்.

''ஒருவேளை நாளையே நாங்கள் மீளா உறக்கத்தில் ஆழ்ந்துவிடுவோம்'' என்றான் பாக்ரோவ்ஸ்க்கிய்.

இத்தகைய தீய முன்குறிகள் சாதாரண போல்ஷெவிக்கு களை ஒருபோதும் தீண்டவில்லை. முழு நம்பிக்கையுடனும் நிச்சயத்துடனும், மேலுள்ள தங்கள் தலைவர்களுக்குப் புதிய துணிவும் உறுதியும் ஊட்டியவாறும் கீழுள்ள பரந்த பொது மக்களின் உள்ளங்களில் வெற்றி பெறும் திடசித்தத்தைத் தூண்டி ஊக்கியவாறும் அவர்கள் விரைந்து முன்னேறினார் கள்.

ருஷ்யாவில் எத்தனை போல்ஷெவிக்குகள்?

போல்ஷெவிக்குகளால் நிறுவப்பட்ட புதிய அரசாங்கத் தை இந்தப் பொதுமக்கள் எந்த அளவுக்கு ஆதரித்தார் கள்? புரட்சியைப் பின்பற்றுவோர் தொகை மக்களிடையே எவ்வளவு பெரிதாக இருந்தது? **மக்கள் லட்சியம் (தேலோ நரோதா)** என்ற செய்தித்தாள் பின்வருமாறு கூறியது: ''புரட்சி என்பது மக்கள் அனைவரதும் எழுச்சி ஆகும். ஆனால் இங்கே நாம் காண்பது என்ன? லெனினாலும் த்ரோத்ஸ்கியா லும் ஏமாற்றப்பட்ட விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில அப்பாவி மூடர்கள்தாம்.''

ருஷ்யாவின் பெருத்த மக்கள் தொகையைப் பார்க்கும் போது போல்ஷெவிக் கட்சியின் உறுப்பினர் ''விரல்விட்டு எண்ணக்கூடிய''—ஒன்று அல்லது இரண்டு சதவிகிதத்துக்கு மேற்படாத—எண்ணிக்கையில்தான் இருந்தார்கள் என்பது உண்மையே. இவ்வளவோடு மாத்திரமே நின்றிருந்தால் புதிய அரசாங்கம் ''மிகப் பெரும்பாலோர் மீது மிக மிக அற்பத் தொகையினரான பிரிவினரின் கொடுங்கோலாட்சி'' என்று நியாயமாகவே பழிக்கப்படலாம். ஆனால் ஒரு விஷயம் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். அதாவது, போல் ஷெவிக் உணர்ச்சியை போல்ஷெவிக் கட்சியைக் கொண்டு அளவிடலாகாது. அதிகாரரீதியான போல்ஷெவிக் கட்சியின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் பின்னே பொதுமக்களிடையே 30 முதல் 50 வரை போல்ஷெவிக்குகள் இருந்தார்கள்.

போல்ஷெவிக் உறுப்பினராகச் சேர்க்கப்படுவதற்குத் தேவையாயிருந்த மிக உயர்ந்த தரமும் கடுமையான கடமை களும் கண்டிப்பான ஒழுங்குக் கட்டுப்பாடும் பொதுமக்

களை அதில் சேர விருப்பற்றவர்களாகச் செய்தன. ஆனால் அவர்கள் அதற்கு வாக்குகள் அளித்தார்கள்.*

அரசியல் நிர்ணய சபைத் தேர்தல்களில் வடக்கு, மத்திய ருஷ்யாவில் போல்ஷெவிக்குகளுக்கு 1 அல்லது 2 சதவிகிதம் அல்ல, 55 சதவிகிதம் வோட்டுக்கள் கிடைத்தன. பெத்ரோகிராதில் போல்ஷெவிக்குகளும் அவர்களது கூட்டாளிகளான இடதுசாரி சோஷலிஸ்ட் புரட்சிவாதிகளும் 5,76,000 வாக்குகள்—மற்றப் 17 கட்சிகளும் மொத்தமாகப் பெற்றதைவிட அதிகம்—பெற்றார்கள்.

பொய்களில் மூன்று தரங்கள் உண்டு என்று கூறப்படுகிறது. அவையாவன: ''பொய்கள், பச்சைப் பொய்கள், புள்ளி விவரங்கள்.'' புரட்சிக் காலப் புள்ளி விவரங்கள் சிறப்பாக நம்பகமற்றவை. ஏனெனில் புரட்சிக் காலத்தில் பொதுமக்களின் அபிப்பிராயம் ஏற்றவற்ற அலை போன்று இயங்குகிறது. மக்கள் இன்று ஒரு விதமாக வாக்களிக்கிறார்கள். சில வாரங்கள் கடந்தபின் அவர்கள் முற்றிலும் வேறு விதமாக வோட்டுக் கொடுப்பார்கள்.

---

*சோஷலிஸ்ட் வாக்காளர்கள் சோஷலிஸ்ட் கட்சி உறுப்பினர்களைப் போல 10 முதல் 50 மடங்குகள் வரை எப்போதுமே அதிக எண்ணிக்கையில் இருந்தார்கள். 1920ல் நியூயார்க் நகரில் 12,000 சோஷலிஸ்ட் கட்சி உறுப்பினர் இருந்தார்கள். ஆனால் சோஷலிஸ்ட் கட்சி வாக்காளர்கள் தொகை 1,76,000 என்று இந்தத் தேர்தல் காட்டியது. 1918ல் விளாதிவஸ்தோக் நகரில் போல்ஷெவிக் கட்சி உறுப்பினர்கள் 300 பெயர் இருந்தார்கள். ஜூன் மாதத் தேர்தலில் அங்கே 12,000 போல்ஷெவிக் கட்சி வாக்காளர்கள் இருந்தார்கள். இந்தத் தேர்தல் நேசநாட்டினரின் மேற்பார்வையில், போல்ஷெவிக் செய்தித்தாள்கள் ஒடுக்கப்பட்டும் போல்ஷெவிக் தலைவர்கள் சிறைப்படுத்தப்பட்டும் இருக்கையில் நடந்தது. எனினும் மற்ற 16 கட்சிகளை ஆதரித்த மொத்த வாக்காளர்களைவிட அதிக வாக்காளர்கள் போல்ஷெவிக்குகளை ஆதரித்து வாக்களித்தார்கள். இவ்வாறிருக்க, ஜார்வாதிகளான கோல்ச்சாக், தெனீக்கின் ஆகியோரின் பிரசாரகர்கள் — ஜான் ஸ்பார்கே போன்றோர் — உறுப்பினர் தொகைமீதே கவனத்தை எல்லாம் மையப்படுத்த முயன்றார்கள். இது முற்றிலும் தவறான வழியில் இட்டுச் செல்வதாகும்.—**ஆசிரியரின் குறிப்பு.**

1917, நவம்பரில் அரசியல் நிர்ணய சபை தேர்ந்தெடுக்கப் பட்டபோது சுமார் மூன்றில் ஒரு பகுதி இடங்கள் போல் ஷெவிக்குகளுக்கு (அவர்களுடைய கூட்டாளிகளான சோஷ லிஸ்ட்-புரட்சிவாதிகள் உட்பட) கிடைத்தன. 1918, ஜன வரியில் அரசியல் நிர்ணய சபை கூடிய பொழுதோ, மூன்றில் இரண்டு பங்கு மக்கள் போல்ஷெவிக் கருத்துக்களுக்கு ஆதர வாயிருந்தார்கள் எனலாம். இந்தக் கருத்துக்கள் நகரங்க ளிலிருந்து கிராமங்களுக்கும் அங்கிருந்து தூரப் பிராந்தியங் களுக்கும் விரைவாகப் பரவின. நிலம்பற்றிய சோவியத் அர சாணை தங்களுக்கு மெய்யாகவே நிலத்தைக் கொடுத்து விட்டது என்று கண்ட குடியானவர்கள் போல்ஷெவிக் பதா கைகளின்பின் லட்சோபலட்சமாக அணிதிரண்டார்கள்.

வயதுவந்த மக்களில் போல்ஷெவிக்குகளைப் பின்பற்று வோரின் வளர்ச்சி பற்றிய நியாயமான மதிப்பீடு பின்வரு மாறு இருக்கும்:

1917, மார்ச்—ஜாரின் வீழ்ச்சிக் காலத்தில்	10,00,000
1917, ஜூலை — ஆயுதந்தாங்கிய ஆர்ப்பாட்டத்துக்குப்பின் . . .	50,00,000
1917, நவம்பர் — அரசியல் நிர்ணய சபைத் தேர்தல் (அதிகார பூர்வமான கணக்கெடுப்பு)	90,00,000
1918, ஜனவரி — சோவியத்துக் களின் மூன்றுவது காங்கிரஸில் பிரதிநிதித்துவப் படுத்திய மக்கள் தொகை	1,30,00,000

போல்ஷெவிக்குகள் தொகைபலம் மட்டுமல்ல, எல்லா முக்கிய இடநிலைகளையும் பெற்றிருந்தார்கள். பெரிய நகரங் கள் போல்ஷெவிக் ஆதரவாளிகளாக இருந்தன. ரெயில்வேத் தொழிலாளர்கள், சுரங்கத் தொழிலாளர்கள், அடிப்ப டைத் தொழில் துறைகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஆகி யோரும் அவர்கள் தரப்பில் இருந்தார்கள். துப்பாக்கிக் குத் தீட்டிகளோ, அதாவது, படைவீரர்களோ மிகப் பெரும்பான் மையாக போல்ஷெவிக் ஆதரவாளர்களாக இருந்தார்கள்.

புரட்சியை போல்ஷெவிக் வழியில் நடத்திச் செல்வதற்கு ருஷ்யாவின் முக்கியச் சக்திகள் போல்ஷெவிக்குகளுக்கு அதிகாரம் அளித்திருந்தன.

பொது மக்களின் அக்கறையின்மை

பொதுமக்களிடையே போல்ஷெவிக்குகளுக்கு இருந்த ஆதரவைக் குறைத்து மதிப்பிடுவது ஆழ்ந்த தவறு ஆகும். இந்தப் பொதுமக்கள் எல்லோரும் புரட்சியின் தீவிர ஆதரவாளர்கள், உயர்ந்த, புனித உற்சாகத்தால் நிறைந்தவர்கள் என்று சொல்வதும் அவ்வளவே ஆழ்ந்த பிழை ஆகும். மாருக, மிகப் பெருந்தொகையான மக்கள் முற்றிலும் அசட்டையாக இருந்தார்கள். புரட்சி மேலார்ந்ததாக மட்டுமே இருந்தது.

நியூ ஜெர்ஸிப் பண்ணைக்காரரும் தத்துவவாதியுமான சார்ல்ஸ் குந்த்ஸ் புரட்சியை விஞ்ஞானரீதியாக ஆராயும் பொருட்டு ருஷ்யாவுக்கு வந்திருந்தார். பனிக்காலத்தில் ஒரு நாள் காலை நானும் அவரும் ஸ்லெட்ஜ் வண்டியில் வெளியே புறப்பட்டோம். ஸ்லெட்ஜ் ஓட்டி பதினைந்து வயதுச் சிறுவன். நாங்கள் அமெரிக்கர்கள் என்பதைக் கண்டதும் அவனுக்கு ஒரே உற்சாகம் பொங்கியது.

''ஓ, நீங்கள் அமெரிக்கர்களா! சொல்லுங்கள், பவ்வாலோ பில்லும் ஜெஸ்ஸி ஜேம்ஸும் உண்மையில் வாழ்ந்தார்களா?'' என்று வியப்புடன் வினவினன்.

நாங்கள் ''ஆம்'' என்ருேம். அக்கணமே ஸ்லெட்ஜ் ஓட்டியின் கண்களில் எங்கள் பெருமை வெகு உயர்ந்து விட்டது. இந்த மேற்கத்திய முரட்டுத் துணிச்சல்காரர்களின் பராக்கிரமச் செயல்களை அவன் மனப்பாடமாக அறிந்திருந்தான். தனது வீர நாயகர்களின் நாட்டைச் சேர்ந்த இருவரை வண்டியில் ஏற்றிச் செல்வதில் அவன் பேருவகை அடைந்தான். பாராட்டு ததும்பும் நீல விழிகளால் எங்களை நெடிது நோக்கினன். நாங்களோ, பவ்வாலோ பில்லும் ஜெஸ்ஸி ஜேம்ஸும் போலவே தோற்றமளிக்க முடிந்த வரை முயன்ருேம்.

''ஓ ஹோ! ஸ்லெட்ஜ் எப்படி ஓட்டுவது என்று உங்க

ளுக்குக் காட்டுகிறேன் பாருங்கள்'' என்று கூவினன். கடிவாளவார்களைத் தொய்யவிட்டான், ''ட்ரியோ'' என்று குதிரையை நோக்கிக் கத்தினன், பின்பு திடுமெனக் குதிரையை நாற்கால் பாய்ச்சலில் விரட்டினன். மலைப் பாறைப் பாதை மேல் செல்லும் அஞ்சல் வண்டி போன்று பனிக்கட்டி மேடுகள் மேல் எம்பி விழுந்தவாறு விரைந்தது எங்கள் ஸ்லெட்ஜ். களிபொங்க ஆர்ப்பரித்தவாறு தன் இடத்தில் எழுந்து நின்று சவுக்கைச் சொடேரெனச் சுடக்கினன் சிறுவன். ஸ்லெட்ஜ் இரு புறமும் பயங்கரமாக ஆடி அசைந்தது. நானும் குந்த்ஸும் எங்கள் இருக்கைகளைப் புகலின்றிப் பற்றித் தழுவிக் கொண்டு ஸ்லெட்ஜை நிறுத்தும்படி அவனைக் கெஞ்சினேம்.

பவ்வாலோ பில் மிக மிகச் சிறந்த நிலையில்கூட இதை விடப் பிரமாதமாக எதுவும் சாதித்திருக்க முடியாது என்று அவனிடம் சொல்லிவிட்டு, ஆனால் மீண்டும் அப்படிச் செய்யாதிருக்கும்படி கேட்டுக்கொண்டோம். மேற்கு அமெரிக்காவைப் பற்றி எங்களிடம் கேள்விகளைப் பொழிந்தான் அவன். நாங்களோ, ருஷ்யாவைப் பற்றி அவனைப் பேச வைக்க முயன்றேம். பயனில்லை. ருஷ்யப் புரட்சி அவன் மனக் கண்ணில் படவே இல்லை. பளபளப்பான காகித அட்டை போட்ட அவனுடைய புத்தகங்களில் நிகழ்ந்த செயல்கள் பெத்ரோகிராத் வீதிகளில் நடந்த நிகழ்ச்சிகளைவிட அதிகமாக மயிர்க் குச்செறியச் செய்பவையாகவும் முக்கியமானவையாகவும் அவனுக்குத் தோன்றின.

புரட்சியின்பால் இந்த அக்கறையின்மை எல்லோர் விஷயத்திலும் இப்படிக் கவர்ச்சித் தோற்றம் கொண்டிருக்கவில்லை. மக்கள் திரளின் ஆற்றல்கள் எல்லாம் அன்றட வேலையால், உணவும் உடையும் தேடிப் பெறுவதற்கான வெறும் விவரங்களால் உறிஞ்சிக்கொள்ளப்பட்டுவிட்டன. வேறு சிலரோ கொள்ளையடிப்பதற்கும் சோம்பித் திரிவதற்கும் புரட்சியில் தங்களுக்கு வாய்ப்பு இருப்பதாகக் கீழ்த்தரமாக எண்ணினர்கள். இதுவரை அடிமைகள்போல உழைத்தாயிற்று, இப்போது சீமான்கள்போல வெட்டியாய்ச் சுற்றித் திரியலாம் என்று இவர்கள் நினைத்தார்கள். இவர்கள் நோக்கில் புரட்சி வேலை செய்வதற்கு ஆன சுதந்திரம் அல்ல, வேலையில் இருந்து சுதந்திரம். நாள் முழுதும் தெருவில்

சோம்பி நின்று கொண்டிருந்தார்கள் இவர்கள். சூரியகாந்தி விதைகளைக் கொறித்துத் தோடுகளை நடைபாதைகள் மேல் துப்பியதுதான் புதிய அமைப்புக்கு இவர்கள் புரிந்த தொண்டு. படைவீரர்கள் ''அரசாங்க விடுதி விருந்தினர்'' ஆகிவிட்டார்கள். அரசாங்கத்திடமிருந்து இலவசமாகக் கிடைத்த உணவு, உடைகள், இருப்பிடம், இவற்றுக்குப் பிரதியாக அவர்கள் எதுவும் செய்யாதிருந்தார்கள். இரவுகளைச் சீட்டாட்டத்திலும் பகல்களை உறங்குவதிலும் கழித்துவந்தார்கள் இவர்கள். முறையான படைப் பயிற்சி பெறுவதற்குப் பதிலாக ரப்பர் ஜோடுகளையும் சிகரெட்டுக்களையும் சிங்காரப் பொருள்களையும் வீதிகளில் கூவி விற்கும் வியாபாரம் செய்தார்கள் இவர்கள்.

கைக்கூலி பெறும்பெருட்டுப் புரட்சியின் நலன்கள்பால் குற்றத்தன்மையுள்ள அக்கறையின்மை காட்டப்படுவதும் நிகழ்ந்தது. அறிவுஜீவிகளால் விட்டுச் செல்லப்பட்ட பதவிகளில் கொள்ளையடிக்கவும் புகழ் தேடிக்கொள்ளவும் தங்களுக்கு வாய்ப்பு இருப்பதைப் புரட்டர்களும் பதவி வேட்டைக்காரர்களும் கண்டார்கள். ஜான் ரீடும் நானும் பெத்ரோகிராத் நகரப் போலீஸ் தலைமை அதிகாரியைக் காணச் சென்றதும் அவன் எங்களை அணைத்துக்கொண்டு, ''நல்வரவு, அருமைத் தோழர்களே. நகரில் உள்ள சிறந்த இருப்பிடங்களை உங்களுக்காகக் கைப்பற்றச் செய்கிறேன். 'மார்ஸேல்' பாட்டை நாம் சேர்ந்து பாட வேண்டும். ஆகா! நமது மாட்சி மிக்க புரட்சி!'' என்று களிபொங்க ஆரவாரித்தான். அவனது உத்வேகத்தில் சந்தேகமே இல்லை. அந்த உத்வேகத்தின் தலையூற்றுக்கள் அரைடஜன் பாட்டில்களில் மேஜைமீது இருந்தன. அவற்றின் பாதிப்பினால் அவனது வாக்குவன்மை பெருக்கெடுத்தது:

''தாந்தனும் மாராத்தும் பிரெஞ்சுப் புரட்சியில் பாரிஸ் நகரை ஆண்டார்கள். அவர்களுடைய பெயர்கள் வரலாற்றில் நிலையான இடம் பெற்றுவிட்டன. இன்று நான் பெத்ரோகிராத் நகரை ஆள்கிறேன். என் பெயரும் வரலாற்றில் நிலைத்த இடம் பெறும்.'' அற்பகாலப் பெருமை! மறுநாளே லஞ்சம் வாங்கியதற்காக அவன் சிறையில் இடப்பட்டான்.

கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்த இன்னொரு

கொள்ளைக்காரனுக்கு ஏதோ ஒரு வகையில் ஒரு இராணுவப் பொறுப்பு கொடுக்கப்பட்டது. மாஸ்கோவிலிருந்து தொலைவில் செல்லச் செல்ல அவனது ஆணவ முனைப்பு மிகுந்து கொண்டு போயிற்று. தனது வருகை பீரங்கி வெடி மூலம் அறிவிக்கப்பட வேண்டும் என்றும் உறுப்பினர் எல்லோரும் உடனே குழும வேண்டும் என்றும் ஒரு ஸ்தல சோவியத்துக்குத் தகவல் அனுப்பினான் அவன். ரிவால்வரும் கையுமாக மேடைமீது ஏறி, வியப்புற்ற கூட்டத்தினர் முன் தனது பொறுப்பளிப்பு உத்தரவை, ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் ரிவால்வரிலிருந்து குண்டு சுட்டவாறு, பெருங் குரலில் படித்தான். இத்தகைய துர்ச்சாகசப் புரட்டர்கள் விரைவிலேயே களைந்து எறியப்பட்டனர்.

ஆனால் விரிவான பொதுமக்கள்பால் போல்ஷெவிக்குகள் அளவுகடந்த பொறுமை கடைப்பிடித்தார்கள். அரசு அவர்களுடைய மூளைகளை மந்திக்கச் செய்துவிட்டது, சர்ச் அவர்களுடைய மனச்சான்றை உருச்சிதைத்துவிட்டது, பஞ்சம் அவர்களுடைய உடல்களை நலிவித்துவிட்டது, மது அவர்களது உணர்ச்சிகளைச் சேருக்கிவிட்டது. வருஷக்கணக்கான யுத்தத்தால் களைத்துச் சோர்ந்து, நூற்றுண்டுக் கணக்கான கொடுமையாலும் வஞ்சனையாலும் அறிவு கோணி இருந்தார்கள் அவர்கள். இந்த விஷயங்களை போல்ஷெவிக்குகள் அறிந்திருந்தார்கள். எனவே இம்மக்கள்பால் பொறுமை கடைப்பிடித்தார்கள், இவர்களுக்குக் கல்வி புகட்டினார்கள்.

புதிய படைப்பு மனப்பாங்கு

''மற்ற எந்தச் செலவுகள் குறைக்கப்பட்டாலும் பொதுக் கல்விக்கான செலவுகள் அதிகமாகவே இருக்க வேண்டும். கல்வித் துறையில் தாராளமாகச் செலவு செய்யப்படுவது எந்த மக்களுக்கும் கௌரவமும் பெருமையும் அளிப்பது ஆகும். அறிவின்மைக்கு எதிராகப் போராடுவதே நமது முதல் குறிக்கோளாக இருக்க வேண்டும்'' என்று போல்ஷெவிக்குகள் பிரகடனம் செய்தார்கள்.

எங்கும்—அரண்மனைகளிலும் பாளையங்களிலும் தொழிற்சாலைகளிலும் கூட—பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டன.

24 (11) февраля 1918 г.

The first International Detachment of the Red Army.

The Section for the formation and drilling of troops at the All-Russian College for the Organization and Administration of the Red Army notifies herewith that authorization has been obtained by it for the formation of a First International Detachment of the Red Army to be attached to one of the military units of Petrograd. This detachmen will consist of foreigners, the general language to be English. The members are to be enrolled as volonteers. The conditions of life of the volunteers to be the same as those of the members of the Red Army. The persons wishing to enroll are to present themselves at the Mariinsky Palace 3 rd floor entrance Voznesensky prospect where a Bureau for the enrollment of foreigners of all nationalities has been organised. It is proposed to attach the detachment to the Grenadier Guard Regiment (Petrogradskaia Storona, Bolshoi Wulfova street)

The Section geves herewith a translation of the Call of the initiators of the formation of the detachment Comrades American Socialists Albert Williams and Samuel Agursky, who are at the head of the Bureau for the enrolling of volonteers.

Members of College of the Section for the Formation and Drilling.

CALL.

In this terrible world war democracy has been threatened; the international forces have been split asunder. and the working classes have been iden into the shambles by the imperialists of all countries. In the darkness there rose the Russian Revolution evoking the mighty hopes of all man-

Интернацiональный отрядъ красной армiи.

Отдѣлъ формированiя и обученiя при Всероссiйской Коллегiи организацiи и управленiя Красной Армiей объявляетъ, что мнѣ разрѣшено формированiе при одной изъ воинскихъ частей Петрограда перваго Революцiоннаго Интернацiональнаго отряда Красной Армiи изъ иностранцевъ (разговорный языкъ англiйскiй).

Запись производится на добровольческихъ началахъ. Условiя жизни волонтеровъ общiя съ условiями жизни красноармейцевъ. Организовано бюро по записи иностранцевъ различныхъ нацiональностей. Отряды предположено формировать при Гвардiи Гренадерскомъ полку (Петроградская стор., Б. Вульфова улица).

При семъ отдѣлъ прилагаетъ переводъ воззванiя инициаторовъ формированiя отряда, товарищей американскихъ соцiалистовъ—Альберта Вильямсъ и Самуила Агурскаго—стоящихъ во главѣ бюро по записи волонтеровъ.

Члены: Коллегiя Отдѣла Формированiя и Обученiя.

ВОЗЗВАНIЕ!

Въ эту страшную мiровую войну, всей демократiи угрожала опасность. Интернацiональные силы были разрознены и рабочiй классъ повсюду скованъ империалистами всѣхъ странъ. Изъ всеобщей тьмы внезапно запылалъ свѣтъ русской революцiи, пробуждая великiе надежды человечества. Со-

செஞ்சேனையில் சேர்க்கப்படுவதற்காக முதலாவது சர்வ தேசப் படைப்பிரிவு அமைக்கப்பட்டதுபற்றிப் ''பிராவ்தா'' பத்திரிகையில் ருஷ்ய, ஆங்கில மொழிகளில் வெளி யான அறிவிப்பு

''குழந்தைகளே உலகின் வருங்கால நம்பிக்கை'' என்ற வாசகம் அவற்றின் மீது மரபுக்குறியாகப் பொறிக்கப்பட்டது. அவற்றில் கற்கச் சென்றார்கள் லட்சக் கணக்கான குழந்தைகள். இவர்களில் சிலர் நாற்பது, அறுபது வயதுக்காரர்கள்—முதிய மாதர்களும் நரைத்தாடிக் குடியானவர்களும். ஒரு நாடு முழுதுமே எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டிருந்தது.

புரட்சிப் பிரகடனங்கள், இசைநாடக விளம்பரங்கள் ஆகியவற்றோடுகூடவே பெரிய மனிதர்களின் வாழ்க்கைச் சரிதங்களும் உடல்நலத்தையும் கலையையும் விஞ்ஞானத்தையும் பற்றிய விளக்க அறிக்கைகளும் சுவரொட்டிகளில் காணப்படலாயின. தொழிலாளர் நாடக மன்றங்களும் நூலகங்களும் விரிவுரை வகுப்புக்களும் எங்கும் தோன்றலுற்றன. இதுவரை பொது மக்களுக்கு இறுக மூடப்பட்டிருந்த பண்பாட்டுக் கதவுகள் திறக்கப்பட்டன. பொருட்காட்சிச் சாலைகளிலும் ஓவிய மண்டபங்களிலும் குடியானவர்களும் தொழிலாளர்களும் கூட்டமாக மொய்த்தார்கள்.

போல்ஷெவிக்குகள் மக்களின் அறிவுகளை மட்டும் அல்ல, உடல்களையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தார்கள். இதன் பொருட்டு, எட்டு மணி வேலை நாள் சட்டம் போன்ற பல அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டன. வசதியான சூழ்நிலையில் பிறப்பதற்கு ஒவ்வொரு குழந்தைக்கும் உரிமை உண்டு எனப் பிரகடனம் செய்யப்பட்டது. முறைகேடான பிறப்பு என்ற மாசு அகற்றப்பட்டது. இருநூறு தொழிலாளிப் பெண்களுக்கு ஒன்றுவீதம் பிரசவப் படுக்கைகள் தாய்மைப் பேற்று மனைகளில் ஏற்பாடு செய்வது ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் கடமையாக விதிக்கப்பட்டது. பேற்றுக்கு எட்டு வாரங்கள் முன்பும் எட்டு வாரங்கள் பின்பும் தாய்க்கு வேலையிலிருந்து விடுமுறை அளிக்கப்பட்டது. வெவ்வேறு பகுதிகளில் தாய்மை மாளிகைகள் நிறுவப்பட்டன. பால், பழம் போன்ற ''ஆடம்பரப் பொருள்கள்'' பெறுவதில் பணக்காரர்களுக்குப் பதில் குழந்தைகளுக்கு முதன்மை அளிக்கப்பட்டது. ஒரு பணக்காரன் ஒரு மாளிகையில் பத்து அல்லது இருபது அறைகளோ அல்லது இதே எண்ணிக்கை கொண்ட மாளிகைகளோ வைத்திருக்கும் உரிமை சட்டப்படி அகற்றப்பட்டது. மாறாக, எத்

தனையோர குடும்பங்கள் தூய காற்றும் வெளிச்சமும் பாங்கான இருப்பிடங்களும் பெறும் உரிமையை முதல் தடவையாக அடைந்தன. இந்தக் குடும்பத்தினரின் ஆரோக்கியம் மேம்பட்டதோடுகூட அவர்களுடைய சுயமரியாதையும் மதிப்பும் வளர்ந்தன. திரளான மக்களைச் சார்ந்திருந்த பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம், ஆரோக்கியமும் தூய்மையும் உள்ள உடல்களும் அறிவுகளும் மனச்சான்றும் வாய்ந்தவர்களாக மக்களுக்கு ஊட்டம் அளிப்பதில் முனைந்தது. போல்ஷெவிக்குகள் வருங்காலத்துக்காக முன்னேற்பாடுகள் செய்துகொண்டிருந்தார்கள்.

பழைய பூர்ஷ்வா அமைப்பின் பிரதான அஸ்திவாரங்களைத் தகர்த்துவிட்டபின் அதைவிட எல்லையின்றிக் கடுமையான வேலையை—ஒரு புதிய அமைப்பை நிறுவுவதை—அவர்கள் இப்போது மேற்கொண்டார்கள். இந்த அமைப்பை அவர்கள் ஒவ்வொரு இலாக்காவிலும் நிறுவ வேண்டியிருந்தது, அடிமுதல் நுனிவரை கட்ட வேண்டியிருந்தது, பழைமையின் இடிபாடுகளைக் கொண்டு கட்ட வேண்டியிருந்தது, எல்லாப் புறங்களிலும் சூழப்பட்டுக் குழப்பத்துக்கு உள்ளாகியிருக்கையிலேயே கட்ட வேண்டியிருந்தது.

ஒரு புதிய சமூகத்தை மாற்றி அமைக்கும் வேலையின் பரிமாணத்தை ஒருவராலும் மிகைப்படுத்த முடியாது. சில தடைகளை நான் ஒரு இலாக்காவில்—இராணுவத்தில்—லேசாகப் பார்த்தேன். ''உயிருள்ள நாட்டினங்களின் உடல்கள் மீது நீங்கள் வாளால் எழுதிக்கொண்டிருக்கிறீர்கள்'' என்ற தமது சொற்களை ஜெனரல் வான் ஹோப்மன் முகத்தில் அறைந்தாற்போலக் கூறிவிட்டு த்ரோத்ஸ்கிய் முதலாவது பிரெஸ்த்-லித்தோவ்ஸ்க் உடன்படிக்கையில் கையெழுத்திட மறுத்துவிட்டார். அப்போது ஜெர்மானியர்கள் பெத்ரோகிராத்மீது திடீரெனப் படையெடுத்தார்கள். நகரைத் தற்காப்பதற்காக நான் செங்காவற்படையினருடன் சேர்ந்துகொண்டேன். லெனின் இதைக் கேள்விப்பட்டதும் வெளிநாட்டினர் படைப்பிரிவு ஒன்று நிறுவும்படி எனக்கு யோசனை கூறினார். பிராவ்தா பத்திரிகை கைவசம் இருந்த ஆங்கில அச்செழுத்துக்களைக் கொண்டு எங்கள் ''அழைப்பை'' அச்சிட்டது.

சுமார் அறுபது ஆட்கள் இந்தப் படைப்பிரிவில் சேர்ந்தார்கள். இவர்களில் சார்ல்ஸ் குந்த்ஸ் ஒருவர். இவர் அதுவரை தல்ஸ்தோய்வாதியாக இருந்தவர். ஒரு கோழிக்குஞ்சைக்கூடக் கொல்வதற்கு இவருடைய மனச்சான்று இடந்தராது. இப்போது புரட்சி ஆபத்தில் இருந்தபடியால் தமது சாந்திவாதத்தை அப்பால் எறிந்துவிட்டுத் துப்பாக்கி எடுத்துக் கொண்டார் இவர். ஐம்பது வயதான தத்துவவாதியைப் படைவீரராக மாற்றியது மிகப் பெரிய மாறுதல். குறிப் பயிற்சியின் போது அவருடைய துப்பாக்கி அவருடைய தாடியில் சிக்கிக்கொள்ளும். ஆனால் ஒரு முறை அவருடைய குண்டு இலக்கில் பட்டுவிடவே அவரது கண்கள் ஆனந்தத்தால் சுடர்ந்தன.

நாங்கள் ஒரு கதம்பத் திரள். எங்கள் போர் வலிமை உண்மையில் பூஜ்யம் என்றே சொல்லிவிடலாம். ஆனால் அதன் உணர்ச்சி ருஷ்யர்கள் மீது நல்ல உளப் பாதிப்பு விளைத்தது. தாங்கள் முற்றிலும் தனிமையாக இல்லை என்ற எண்ணத்தை அது அவர்களுக்கு அளித்தது. போல்ஷெவிக்குகள் பிரமாண்டமான அளவில் போராட வேண்டியிருந்த சங்கடங்களை நாங்கள் ஒரு சிறிது உட்புகுந்து காண அது வாய்ப்பு அளித்தது. எந்த நிறுவனமும் இயங்குவதற்கு முன் அகற்றித் தீர வேண்டியிருந்த ஒரு ஆயிரம் தடங்கல்களை நாங்கள் கண்டோம்.

பிரிட்டிஷ், பிரெஞ்சு உளவாளிகள் ஒரு புறமும் ஜெர்மன் உளவாளிகள் மறு புறமுமாக எங்கள் படைப்பிரிவுக்குள் எப்படியாவது நுழைந்துகொள்ள முயன்றார்கள். புரட்சி எதிர்ப்பு நோக்கங்களுக்காக அதைக் கைப்பற்றிக்கொள்ள வெண் படையினர் முயற்சி செய்தார்கள். தூண்டிவிடும் வேவுகாரர்கள் பொறாமையையும் பிளவையும் மூட்டிவிட்டார்கள். ஆட்களைச் சேர்த்த பிறகு போர்த் தளவாடங்களைப் பெறுவது அனேகமாக இயலாததாக இருந்தது. இராணுவக் கிட்டங்கிகள் பிரிக்கவே முடியாதது போன்ற சிக்கலில் மாட்டிக் கொண்டிருந்தன. துப்பாக்கிகள் ஓரிடத்திலும் குண்டுகள் வேறிடத்திலும்; டெலிபோன்களும் முட்கம்பிகளும் ஸாப்பர்களின் கருவிகளும் ஒன்றாகக் கலந்து குழம்பிக் கிடந்தன; இராணுவ அதிகாரிகள் இந்தக் குழம்பலை இன்னும் அதிகமாக்கத் தங்களால் முடிந்தவரை பாடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

மறைமுக நாசவேலைக்காரர்கள் நீக்கப்பட்டதும் அனுபவமோ தகுதியோ அற்ற மனிதர்கள் அவர்களின் இடங்களில் அமர்ந்தார்கள். பெத்ரோகிராத் நகருக்கு இப்பால் இரண்டு மைல் தொலைவில் நாங்கள் ரெயில் ஏறினோம். வண்டிப் பெட்டியில் கோரமான கடுஞ்சோதனையை அனுபவித்த பின் நகரின் மறு புறம் நான்கு மைல் தொலைவில் வந்து சேர்ந்திருந்ததைக் கண்டோம். இரவில் ஆறு மைல் தூரத்தை இழந்து விட்டோம். திட்டும் துருப்புக்களும் ரெயில் வண்டிகளும் பழுதடைந்த எஞ்சின்களும் நிறைந்த ரெயில்வே நிலையத்தில் முடக்கப்பட்டிருந்தோம். எரிச்சல் மண்டிய கமிஸார்கள் ரெயில்வே அதிகாரிகளின் முகங்களுக்கு எதிரே காகிதங்களையும் முட்டிகளையும் ஆட்டிக்கொண்டிருந்தார்கள். அதிகாரிகளோ, தங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்று வெறிக் கத்தல் கத்திக்கொண்டிருந்தார்கள்.

ருஷ்யா எங்கும் நிலவிய குழப்பத்தின் பிரதிபலிப்பே இது. இதிலிருந்து ஒழுங்கை நிலைநாட்டுவது அறவே இயலாது என்று தோன்றியது. எனினும் இந்த இயலாத காரியம் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருந்தது. தலைகால் தெரியாத இந்த அமளியில் உதயமாகிக் கொண்டிருந்தது மாபெரும் செஞ்சேனை—தனது ஒழுங்கமைப்பு, கட்டுப்பாடு, செயல்வன்மை ஆகியவற்றால் உலகைப் பிரமிக்கச் செய்யவிருந்த செஞ்சேனை. போர்த் துறையில் மட்டுமே அல்ல, பண்பாட்டு, பொருளாதாரத் துறைகளிலும் புரட்சியில் உதித்த விறல்மிக்க இயக்கும் உணர்ச்சியின் விளைவுகள் தென்படத் தொடங்கியிருந்தன.

ருஷ்யப் பொதுமக்களுக்குள் பெருத்த ஆற்றல்கள் எப்போதுமே மறைவாக இருந்தன. ஆனால் அவை ஒருபோதும் வெளிப்பட்டதில்லை. எதேச்சாதிகாரம் என்ற கடுமையான சிறைக்காவலனால் அவை அடைக்கப்பட்டுக் கிடந்தன. புரட்சி அவற்றை விடுவித்தது. பல நூற்றாண்டுகளாக அமுக்கப்பட்டிருந்த சீற்றத்துடன் அவை வெடித்துக் கிளம்பிப் பழைய பூர்ஷ்வா அமைப்பைத் தகர்த்து நொறுக்கிவிட்டன.

மக்களின் மிகப் பெருத்த சக்திகளை அழிவு நோக்கங்களுக்காகப் புரட்சி கட்டவிழ்த்துவிட்டதை நாங்கள் கண்டோம். புரட்சி மக்களின் படைப்புச் சக்திகளைத் தூண்டி

ஊக்கி அவற்றை நிர்மாண நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் இயக்கிச் செலுத்தியதை இப்போது பார்த்தோம். "ஒழுங்கு, உழைப்பு, கட்டுப்பாடு" என்பவையே புரட்சியின் புதிய கோட்பாட்டுச் சொற்களாக விளங்கின.

ஆனால் இந்தப் புத்துணர்வு இந்தப் பெரிய மையங்களில் மட்டுந்தான் உதித்ததா? அல்லது தூரப் பிராந்தியங்களிலும் ருஷ்யாவின் பெருத்த மக்கள் இடையேயும் தொடர்ச்சியான நிகழ்முறையாகச் செயல்பட்டதா? விரைவிலேயே இதை நாங்கள் சொந்த அனுபவத்தால் கண்டறிய இருந்தோம். புரட்சியின் நடுவே ஏறக்குறைய ஓர் ஆண்டு இருந்த பின்பு குந்த்ஸும் நானும் தாய்நாடு செல்லத் தீர்மானித்தோம். எங்கள் கண்கள் கிழக்கு நோக்கி—அமெரிக்காவின் பக்கம்—திரும்பியிருந்தன. ருஷ்யா எவற்றின் மீது விரிந்து பரந்துள்ளதோ அந்த இரு கண்டங்களின் வழியாகவும், டிரான்ஸ் சைபீரிய ரெயில்வேயின் 6,000 மைல் தொலைவைக் கடந்து பசிபிக் மாகடற்கரைக்கு எங்கள் பயணம் எங்களை இட்டுச் செல்ல இருந்தது.

மூன்றும் பாகம்

புரட்சியின் வீச்சு எல்லை

சைபீரியாவின் குறுக்காக ரெயில் பயணம்

அத்தியாயம் பதின்மூன்று

ஸ்தெப்பிவெளிகள் கிளர்ந்து எழுகின்றன

1918ம் ஆண்டு ஏப்ரல் மாதக் கடைசி. குந்த்ஸ‍ும் நானும் பெத்ரோகிராத் நகரச் செங் கம்யூனிடம் பிரிவு சொல்லிக்கொண்டோம். வெண்பனிச் சிதல்கள் விழுந்து கொண்டிருந்தன. இரவு ஆகிக்கொண்டிருந்தது. கொந்தளிப் புள்ள, பசியால் வாடிய இப்பழைய நகரம், புரட்சியின் பல்லாயிரம் ஒளிவிளக்குகளும் நிழல்களும் படிந்த இந்நகரம் எங்கள் அன்புக்கு உகந்தது. ஏனெனில் அனேகமாக இதன் ஒவ்வொரு தெருவும் பெருவீதியும் பிரமாண்டமான புரட்சி நாடகத்தில் ஏதேனும் ஒரு காட்சியை நடத்தியிருந்தது.

நிக்கொலாய் ஸ்டேஷனுக்குமுன் உள்ள படிகளிலிருந்து நாங்கள் பார்வை செலுத்திக்கொண்டிருந்த சதுக்கம் புரட்சி யின் முதல் பலிகளால் இரத்தச் செவ்வண்ணம் தெளிக்கப் பட்டது. நள்ளிரவில் கடுகிச் சென்ற லாரி ஒன்றிலிருந்து

வீசப்பட்ட சோவியத் துண்டுப் பிரசுரங்களின் மழையால் இந்தச் சதுக்கத்தின்மீது வெண்ணிறம் தெளிக்க நாங்கள் உதவினோம். சோக கீதம் இசைத்தவாறு, இறந்த வீரர்களைச் சுமந்து சென்ற படைவீரர் வரிசைகளின் அணி நடையால் இது அதிர்ந்தது. இதே சதுக்கம் "ஆட்சி அதிகாரம் அனைத்தும் சோவியத்துக்களுக்கே" என்று பிரகடனம் செய்த வெற்றி முழக்கங்களால் எதிரொலித்ததையும் நாங்கள் கேட்டிருந்தோம். கஸாக்கியக் குதிரைகள் தொழிலாளர் வரிசைகள்மீது பாய்ந்து அவர்களைப் பாவுகற்கள் மேல் வீழ்த்தியதை இந்தச் சதுக்கம் கண்டிருந்தது. இதே தொழிலாளர்கள், பாட்டாளி வர்க்கத்தின் இரும்புப் பட்டாளங்களில் ஒருங்கிணைக்கப்பட்டு, ருஷ்யாவின் வெல்லரும் செஞ்சேனையாகத் திரும்பிவந்ததையும் இந்தச் சதுக்கம் பார்த்தது.

கணக்கற்ற நினைவுகள் எங்களை இந்த நகருடன் பிணித்திருந்தன. ஆனால் டிரான்ஸ் சைபீரிய எக்ஸ்பிரெஸ் ரெயிலின் எஞ்சின் புறப்படத் தயாராக ஆவி உமிழ்ந்து கொண்டிருந்தது. உளத் தழுதழுப்புக்காக அது தாமதிக்காது. ஒவ்வொரு வாரமும் அது பசிபிக் மாகடற்கரையை நோக்கி 6,000 மைல் பயணத்தைத் தொடங்கியது. அடையாள மணியின்—அது ஜாரின் உத்தரவுப்படி அடிக்கப்பட்டாலும் சரி, போல்ஷெவிக்குகளின் உத்தரவுப்படி அடிக்கப்பட்டாலும்சரி—கணகண ஒலியை மட்டுமே அது மதித்தது. மணியின் மூன்றுவது அடி கேட்டதும் நாங்கள் ரெயிலில் ஏறிக்கொண்டு, தொலைதூரக் கிழக்கை நோக்கிய நீண்ட பயணத்தைத் தொடங்கினோம்.

இந்தக் கிழக்கு எங்களுக்கு எதைக் காட்டும்? புரட்சி மையங்களின் உணர்வு வெளிவட்டத்தின் விளிம்புகளை நோக்கி நெடுந்தூரம் பரவியிருப்பதை நாங்கள் காண்போமா?

புரட்சி பற்றி நாடுவிட்டோடியவர்களின் கருத்து

எங்கள் சக பிரயாணிகள் அதற்குள் தங்கள் அறைகளில் கால்களை நீட்டி அமர்ந்து தேநீர் பருகிக்கொண்டும் சிகரெட்டுகள் புகைத்துக்கொண்டும் இருந்தார்கள். நிலப்பிரபுக்களும் கள்ள வியாபாரிகளும் போர்க்காலத்தில் கொள்ளை

லாபம் அடித்தவர்களும் சாதாரண உடைகள் அணிந்த முன்னுள் இராணுவ அதிகாரிகளும் பதவியிலிருந்து தள்ளப் பட்ட அலுவலர்களும் மட்டுமீறி வண்ணம் பூசியிருந்த மூன்று சீமாட்டிகளுமாகச் சுமார் இருபது பெயர் எங்கள் அறையில் இருந்தார்கள். எல்லோருமே பழைய விசேஷச் சலுகை பெற்ற வர்க்கத்தின் உறுப்பினர்கள் அல்லது ஊழி யர்கள்.

அவர்களுடைய நெடுங்காலத்திய விசேஷச் சலுகைகள் போய்விட்டன. எனினும் வாழ்க்கையில் பகட்டு இன்னும் எஞ்சியிருந்தது. ''போல்ஷெவிக்குகளின் இரத்தமயமான பிடிகளிலிருந்து தப்பி வெளியேறுவது'' என்று நாட்டை விட்டோடிய அவர்களது கூட்டாளிகள் குறிப்பிடும் மயிர்க் குச்செறியும் துணிகரச் செயலில் அவர்கள் இப்போதுகூட ஈடுபட்டிருக்கவில்லையா? சில வாரங்கள் கழிந்தபின், பாரிஸ், லண்டன், அல்லது வாஷிங்டன் நகர விருந்தறைகளில், தாங் கள் தப்பியபோது நிகழ்ந்த பயங்கரங்களையும் ஆபத்துக்களை யும் வருணிக்கும் மற்ளுெரு கிளர்ச்சியூட்டும் உற்சாகச் செயல் அவர்களுக்கு எதிர்நின்றது.

அருமையான படுக்கைகளும் சாப்பாட்டு அறையும் போர்ட்டரும் கொண்ட வசதியான சர்வதேச எக்ஸ்பிரெஸ் ரெயிலில் தாங்கள் சௌகரியமாகத் தப்பி ஓடியது பற்றிய விவரம் அவர்களுடைய கதைகளில் விட்டுவிடப்படும். ஆனுல் வேறு விவரங்கள்—போல்ஷெவிக் கொலைகளையும் கற்பழிப் புக்களையும் கொள்ளைகளையும் பற்றிய சிறு துணுக்குகள் இடை யிடையே புகுத்தப்படும். ருஷ்யாவைவிட்டு ஓடும் ஒவ்வொ ருவனும் தான் கொடுமைக்கு உள்ளானதாக நடிக்க வேண் டும். என்ன ஆனுலும் சரி, அவன் தப்பி வெளிவந்தது பெருந் துன்பங்கள் நிறைந்த, நாடகத்தன்மை கொண்ட நிகழ்ச்சி யாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் மேற்கத்திய ஜனநாயக நாட்டினரின் இலேத்த நாக்குக்களுக்குச் சுவைப்படாது.

போல்ஷெவிக் முத்திரை குத்திய போல்ஷெவிக் பாஸ் போர்ட்டுகள் அளிக்கப் பெற்று போல்ஷெவிக் வாடகை வண்டி களில் ரெயில் நிலையத்துக்கு இட்டுவரப்பட்டிருந்தார்கள் இந்த நாடுவிட்டோடிகள். போல்ஷெவிக் போர்ட்டர்களின்

உதவியால் அவர்கள் இந்த ரெயிலில் ஏறியிருந்தார்கள். ரெயிலின் கண்டக்டரும் கார்டும் எஞ்சின் ஓட்டியும் போல்ஷெவிக் கொள்கையில் விசுவாசம் கொண்டவர்கள். போல்ஷெவிக் தொழிலாளர்களால் சீர்படுத்திக் கண்காணிக்கப்பட்ட இருப்புப்பாதை வழியாக, போல்ஷெவிக் படைவீரர்களால் பாதுகாக்கப்பட்டு, போல்ஷெவிக் ஸ்விட்ச்மான்களால் இயக்கப்பட்டு, போல்ஷெவிக் வெயிட்டர்களால் உணவூட்டப் பெற்றுப் பயணம் செய்கையில், இதே போல்ஷெவிக்குகளைக் கொள்ளைக்கூட்டத்தினர் என்றும் தலைவெட்டிகள் என்றும் திட்டுவதில் தங்கள் பொழுதைக் கழித்தார்கள் இந்த ஓடுகாலிகள். விந்தையான காட்சி! சாப்பாட்டுக்கும் இருப்பிடத்துக்கும் பயணத்துக்கும்—தாங்கள் விடும் மூச்சுக்கேகூட—எவர்களை அண்டியிருந்தார்களோ அவர்களையே சபிப்பதும், இழித்துக்கூறுவதும் பழிப்பதும்! ஏனெனில் இந்த ரெயிலின் எல்லா ஊழியர்களும் போல்ஷெவிக்குகள்—கண்டக்டர் ஒருவன் தவிர.

இந்தக் கண்டக்டர் தொழும்பனின் ஆன்மாவும் முடியரசுவாதியின் கொள்கைப்போக்கும் கொண்டிருந்தான். குடியானவக் குடும்பத்தில் பிறந்தவன் ஆயினும் ஜாரையே காட்டிலும் அதிக ஜாரீயவாதியாக இருந்தான் அவன். நாடுவிட்டோடிகள் எல்லோரையும் அவன் இன்னமும் ''பிரபுக்களே!'' என்றே அழைத்தான்.

''பிரபுக்களே! கீழ் மக்களாகிய நாங்கள் சோம்பேறிகள், திறனற்றவர்கள். ஒரு புட்டி வோத்கா கிடைத்தால் எங்களுக்கு ஆனந்தம். அதற்குமேல் விடுதலை எங்களுக்குத் தேவையில்லை. எங்களை வேலையில் ஈடுபடுத்தி வைப்பதற்கு ஒரு குண்டாந்தடி தலைக்கு மேலே வேண்டும். ஒரு ஜார் எங்களுக்குத் தேவை'' என்றான் அவன்.

நாடுவிட்டோடிகள் அவனால் பெருமகிழ்வு அடைந்தார்கள். அவர்களுக்கு அவன் ஆறுதலின் நிலையான தலையூற்றாக—போல்ஷெவிக் இருளில் ஒளிவீசும் விளக்காக—திகழ்ந்தான்.

''இந்த நேர்மையான 'முழிக்கிடம்' கோடிக்கணக்கான ருஷ்யக் குடியானவர்களின் ஆன்மாவை நீங்கள் காண்கிறீர்கள். தங்கள் எஜமானருக்குப் பணிவிடை செய்வதிலும்

10 APR 1976

''எழுத்தறிவற்றவன் குருடன். எங்கும் தோல்விகளும் துன்பங்களும் அவனுக்கு எதிர்ப்படுகின்றன.'' கல்வி கற்கத் தூண்டி ஊக்கும் சோவியத் சுவரொட்டி

சர்ச்சுக்குக் கீழ்ப்படிவதிலும் ஜார் மீது அன்பு செலுத்துவதிலும் உளநிறைவுபெறுபவர்கள் அவர்கள். ஒரு சிலர் போல்ஷெவிக் வெறியர்களால் தவருன வழியில் இட்டுச் செல்லப்பட்டிருப்பது உண்மையே, ஆனல் வெகு சிலர் மட்டுமே. மாஸ்கோவிலும் பெத்ரோகிராதிலும் புரையோடிக் கொண்டிருக்கும் பைத்தியத்துடன் கோடிக் கணக்கான இந்தப் பொறுமைசாலிகளுக்கு, இந்தக் கடும் உழைப்பாளிகளுக்கு என்ன சம்பந்தம்?'' என்றூர்கள் அவர்கள்.

இது சரியாகவே பட்டது. ஏனெனில் புரட்சியில் எங்கள் அக்கறையைத் தீவிர நிலையில் வைத்திருப்பது எங்களுக்குக் கூட இங்கே கடினமாக இருந்தது. உலகிலேயே மிக நீண்ட இந்த ரெயில் பயணத்தின்போது எங்கள் கண்களுக்கு முன் தோற்றம் அளித்த சுற்றுக் காட்சியின் பரப்புக்கு எதிரே பெரிய கவலைகள், அரசியலாயினும் சரி, சொந்தமாயினும் சரி, அற்பமாகி விட்டன.

மத்திய ருஷ்யாவின் நீண்டு பரந்த தானிய வயல்களையும், வட மாகடலை நோக்கிப் பாயும் அகன்ற ஆறுகள் மேல் அமைந்த விசாலமான பாலங்களையும் கடந்தும், உரால் மலைத்தொடரின் வளைந்து செல்லும் கணவாய்களின் ஊடாக மனிதன் காலடிச் சுவடு அனேகமாகப் படாத மாபெரும் கன்னிக் காட்டின் நிழல்களுக்குள் புகுந்தும் பின்னர் அங்கிருந்து சைபீரிய ஸ்தெப்பி நிலத்தில் மீண்டும் வெளிப்பட்டும் நாங்கள் சென்ளும்.

ஓநாய்களிடமிருந்தும், உறைந்த 'துந்திர' வெளியிலிருந்து வீசும் கூதற் காற்றிலிருந்தும் பாதுகாப்பின் பொருட்டு ஒன்ருக நெருங்கியிருந்த குடியானவர் குடிசைகள் தொடுவானில் தென்படும். பகல் வேளைகளில் நாங்கள் இவற்றைப் பார்வையிடுவோம். அல்லது தேநீருக்காகக் கொதிகலங்களிலிருந்து சுடுநீர் பெறுவதற்காக நிற்கும் நீண்ட வரிசைகளில் இடம் பிடித்துக் கொள்வோம். அல்லது குடியானவமாதரிடமிருந்து ரொட்டியும் முட்டைகளும் மீனும் வாங்குவோம். மாலைகளில் விறகு எரிக்கும் எஞ்சின் தன் புகைபோக்கி வழியாக வால்நட்சத்திரம் போன்று நெருப்புப் பொறிகளைச் சிதறுவதை நோக்குவோம். அடியில் சக்கரங்கள் கிறீச்சிடும் ஓசையைக் கேட்டவாறே ரெயில் பெட்டியில்

இரவுக்குப் பின் இரவாக உறங்குவோம். காலை தோறும் கண் விழித்ததும் கிழக்கு நோக்கி விரைந்த எஞ்சினுக்கு முன்னே இருப்புப்பாதை பளபளக்கும் இரண்டு எஃகு நாடாக் களாக இன்னும் நீண்டுகொண்டே போகக் காண்போம்.

இந்தப் பேரளவுகள் வசிய சக்தி கொண்ட பாதிப் புடன் மெதுவாக எங்களை ஆட்கொண்டு, ருஷ்யர்கள் ''ப்ரஸ் தோர்'' என்று சொல்லும் உணர்ச்சியை, அதாவது, இட வெளியையும் அகல் பரப்பையும் பற்றிய உணர்வை, எங்கள் உள்ளங்களில் ஏற்படுத்திவிட்டன. ஒரு காலத்தில் மாட்சியும் உடனடி முக்கியத்துவமும் வாய்ந்தவையாக இருந்தவை இந்த உணர்வின் வசியத்தில் அற்பமும் முக்கியமற்ற வையும் ஆகிவிட்டன. எங்கள் மீது புரட்சியின் பிடிகூடத் தளர்ந்துவிட்டது. ஒரு வேளை அது ரெயில்வேத் தொழி லாளர்களையும் நகரத் தொழிற்சாலைத் தொழிலாளர்களை யும் மட்டுமே பொறுத்த கிளர்ச்சிதானே?

அங்கே புரட்சி விடாப்பிடியாக வற்புறுத்தும் உண் மையாக விளங்கியது. பதாகைகளாலும் போர் முழக்கங் களாலும் அணிநடைகளாலும் கூட்டங்களாலும் எங்கள் விழிகளையும் செவிகளையும் தாக்கிய வண்ணமாக இருந்தது அது. இங்கே, சைபீரிய ஸ்தெப்பிகளில் அதன் அடையாளம் எதையும் நாங்கள் காணவில்லை. கோடரிகள் ஏந்திச் சென்ற மரம் வெட்டிகளையும் குதிரைகளை ஓட்டிச் சென்ற வண்டிக் காரர்களையும் கூடைகளும் கைகளுமாக விளங்கிய மாதரை யும் துப்பாக்கிகள் பிடித்திருந்த சில படைவீரர்களையும் நாங்கள் பார்த்தோம். ஆனால் கம்பங்கள் மீது படபடத்துக் கொண்டிருந்த செங்கொடிகளின் சில கிழிந்த மிச்சங்கள் தவிர, புரட்சியின் வேறு எந்த அறிகுறியும் எங்களுக்குத் தென்படவில்லை.

புரட்சி ஆர்வ உணர்வும் இந்தச் சாயம் போன கொடி கள் போலவே தேய்ந்து மங்கிப் போய்விட்டதா? தன் எஜமானனையும் சர்ச்சையும் 'அன்புத் தந்தை' ஜாரையும் நேசிப்பதும் அவர்களுக்குப் பணிவிடை செய்வதுமே ருஷ்யக் குடியானவனின் விழைவுகள் என்று நாடுவிட்டோடிகள் தொ குத்து உரைத்தது சரிதானா? இது என்ன, 'புனித ருஷ்யா' தானா?

நாங்கள் இவ்வாறு எண்ணமிட்டுக் கொண்டிருக்கையில் —தடார்! டுமீல்! பிரேக்குகள் சக்கரங்களை இறுக்கின, கிறீச் சிட்டன, கரகரத்தன. எங்கள் அறை அதிர்ந்து குலுங் கியது, நாங்கள் இருக்கைகளிலிருந்து வெளியே எறியப் பட் டோம். ரெயில் வண்டி திடுமென நின்றுவிட்டது, எல்லோ ரும் ஜன்னல்களுக்கு வெளியே தலைகளை நீட்டி, ''தண்ட வாளங்கள் மழையில் அடித்துச் செல்லப்பட்டுவிட்டனவா? சரிந்து விட்டனவா? பாலம் தகர்ந்துவிட்டதா?'' என்று கிளர்ச்சி பொங்கக் கேட்டவாறு உற்றுப் பார்த்தார்கள். ஆனால் சமதரையான, உலர்ந்த ஸ்தெப்பியும் ஆங்காங்கு பனிக் காலத்தின் மிச்சங்களாகக் குவிந்திருந்த வெண்பனிக் குவைகளும் தவிர வேறு எதுவும் காணப்படவில்லை.

போல்ஷெவிக் வழிமறிப்பு

திடீரென ஒரு வெண்பனிக் குவியலின் பின்னிருந்து துள்ளி எழுந்தது ஓர் உருவம். அது பின்னே நோக்கிக் கையாட் டிச் சைகை செய்துவிட்டு ரெயிலின் பக்கம் பாய்ந்து வந்தது. ஒரு புதரின் பின்னிருந்து இன்னொரு உருவம் துள்ளிப் பாய்ந்து முந்திய உருவத்தைத் தொடர்ந்தது. மற்ற வெண் பனிக் குவியல்களுக்கும் புதர்களுக்கும் பின்னுலிருந்தும் தொலை தூரத் தொடுவானத்திலிருந்தும் மேலும் மேலும் உருவங்கள் வெளிவந்த வண்ணமாக இருந்தன. முடிவில் ரெயிலை நோக்கிக் கண்தலை தெரியாத வேகத்துடன் பாய்ந்து ஓடி வந்த மனிதர்கள் திடல் முழுவதிலும் புள்ளிக் கோலங்கள் போலக் காணப்படலாயினர். பறவைநாகப் பற்கள் விதைத்த நிலம் பற்றிப் புராணக் கதைகளில் வருணிக்கப்படுவது போல, உயிரற்ற இந்தப் பாழ் வெளி கணப்போதில் உயிர்த் தெழுந்து, ஆயுதங்கள் அணிந்த மனிதர்களால் நிறைந்து விட்டது.

''அட கடவுளே! பாருங்கள்! பாருங்கள்! துப்பாக்கிகள்! அவர்கள் துப்பாக்கிகள் பிடித்திருக்கிருர்கள்!'' என்று வீரிட் டாள் ஒரு வண்ணப் பூச்சுக்காரி. அவளது அதிசயக் கற்பனை கள் உண்மை ஆகிவிட்டன. அவள் கதைகளில் கேள்விப் பட்டிருந்த போல்ஷெவிக்குகள் இதோ பருவடிவில் அவள்

முன்னே இருந்தார்கள். கைகளில் துப்பாக்கிகளும் எறிகுண்டு களும் முகங்களில் மிகக் கடுத்தமான பார்வையும் கொண்டு அவர்கள் எதார்த்தம் ஆகியிருந்தார்கள். எல்லோருக்கும் முன்னல் ஓடிவந்தவன் தன் ஓட்டத்தை நிறுத்தி, கைகளை வாய்மீது குவித்துக் கொண்டு ''ஜன்னல் கதவுகளை இறக்குங்கள்'' என்று எங்களை நோக்கி எக்காள முழக்கம் செய்தான்.

இதை எதிர்த்து எவரும் வாதாடவில்லை. ரெயில் வண்டி நெடுகிலும் ஜன்னல் கதவுகள் தடார் தடாரென இறக்கப் பட்டன. மேலேறி வந்த இம்மனிதர்களின் முகங்களில் மகிழ் வூட்டும் குறி எதையும் காணுத நாடுவிட்டோடிகள் கும்பலின் உற்சாகமும் அதே போல இறங்கிவிட்டது. இந்த மனிதர்கள் கடுமையும் உறுதியும் நிறைந்தவர்கள். அவர்களில் பலர் அழுக்குப் படிந்து அநேகமாகக் கறுத்திருந்தார்கள். எல்லோருமே ரெயிலைக் கடும் பகைமையுடன் நோக்கினுர் கள். தங்கள் ஆயுதங்கள் எங்கள் விவகாரத்துடன் திட்டவட்டமான தொடர்பு கொண்டவை என்பதைத் தங்கள் முக பாவத்தாலும் சைகைகளாலும் தெளிவாக அறிவுறுத்தினுர் கள் அவர்கள்.

எங்களது குற்றம் என்ன என்பது ஜாடையாகக்கூட எங்களுக்குத் தெரியவில்லை. ஏதோ இடித்தாக்கு எங்கள் ரெயிலை நிறுத்திவிட்டது, பொறிபறக்கச் சினந்து பேசிக் கொண்டிருந்த ஆட்கள் எல்லாப் புறங்களிலும் எங்களை வளைத்துக் கொண்டிருந்தார்கள் என்பதை மட்டுமே நாங் கள் அறிந்தோம். ''கொலைகாரக் கொடுங்கோலனைக் கொன்று தீர்த்துவிடுவது'' பற்றிய ஆவேசச் சொற்கள் எங்களுக் குக் கேட்டன. பூவண்ணச் சீமாட்டி ஒருத்தியின் முகம் ஜன்ன லருகே காணப்பட்டதும் ''அடீ! ரஸ்பூத்தின் பெண்டாட்டீ!'' என்ற உரத்த ஏளனச் சொற்கள் கிளம்பின. எங்களை வெளியே இட்டுப்போய் ஒவ்வொருவராகக் கொலை செய்வதா, அல்லது ரெயிலை வெடி வைத்துத் தகர்த்தோ எரித்தோ எங்களை ஒரு மொத்தமாக அழிப்பதா என்று இந்த முரடர்கள் தர்க்கித்துக் கொண்டிருக்கிறுர்கள் என நிச்சய மாக எண்ணினுள் அந்த மாது.

தீர்மானமற்ற இந்தத் தொங்கல் நிலை சகிக்க முடியாத

தாக இருந்தது. விஷயம் என்ன என்று விசாரிக்க நான் முன்வந்து ஜன்னல் கதவை உயர்த்தத் தொடங்கினேன். பாதி திறந்ததும் என் முகத்தில் இடிப்பது போல நுழைக் கப்பட்ட துப்பாக்கிக் குழாய் வாயைக் கண்டேன். துப்பாக்கி யின் மறு புறம் இருந்த பெரிய குடியானவன், ''சட்டென்று ஜன்னல் கதவை இறக்கிவிடு. இல்லாவிட்டால் சுடுவேன்'' என்று உறுமினுன். பார்த்தால் சுட்டுவிடுவான் போலத்தான் இருந்தது. ஆனல் ருஷ்யாவில் எனது ஓர் ஆண்டு அனுபவம் அவன் சுட மாட்டான் என எனக்குக் கற்பித்திருந்தது. மனி தனைக் கொல்வதை அருவருக்கும் அளவுக்கு நாகரிகம் அற்ற வன் ருஷ்யக் குடியானவன் என்பதை நான் அறிந்திருந்தேன். எனவே ஜன்னலை மூடாமல் தலையை வெளியே துருத்தி அந்தப் பாரியான குடியானவனைத் ''தவாரிஷ்'' என விளித்தேன்.

''இந்தத் 'தவாரிஷ்' பேச்சை எல்லாம் கட்டிவை, புரட்சி-எதிரி! மக்களின் இரத்தத்தைக் குடிக்கும் பாதகா! முடியரசுவாதி! ஜாரின் பக்தா!'' என்று வெடுக்கெனப் பதில் சொன்னுன் அவன்.

புரட்சியின் பகைவர்களைத் தாக்கும் அடை மொழிகள் இவை. ஆனல் இவை எல்லாம் ஒன்ருகத் திரட்டப்பட்டு இவ்வளவு வன்மத்துடன் வெடிகுண்டுபோல வீசப்பட்டதை நான் முன்பு கேட்டதில்லை. சிச்சேரினல் கையெழுத்திடப் பட்டு எனக்கு நற்சான்று அளிக்கப்பட்டிருந்த சோவியத் சான்றிதழ் ஒன்றை அவசரமாக எடுத்துக் கொடுத்தேன். ஆனல் படிப்பது இந்தக் குடியானவனின் சிறப்புத் திறன் அல்ல. கட்டுக்குட்டான மேனியும் முறைத்த பார்வையும் கொண்ட அடுத்த ஆள் அதை வாங்கி விமர்சன நோக்குடன் ஆராய்ந்தான்.

''கள்ளப்பத்திரம்!'' என்பதே அவன் உடனடியாக அளித்த தீர்ப்பு.

த்ரோத்ஸ்கியால் கையெழுத்திடப்பட்ட சான்றிதழ் ஒன்றை நீட்டினேன். ''கள்ளப்பத்திரம்!'' என அவன் திரும்பச் சொன்னுன். போல்ஷெவிக் ரெயில்வே கமிஸார் அளித்திருந்த ஒரு தஸ்தாவேஜைக் காட்டினேன். ''கள்ளப்பத்திரம்!'' என்ற சுருக்கமான மதிப்புரையே அதற்கும் கிடைத்தது. இன்னமும் நெஞ்சழுத்தத்தைக் காட்டுகிருனு இவன்?

முத்தாய்ப்பாக என் துருப்புச் சீட்டை ஆடுவது எனத் தீர் மானித்தேன். நிக்கொலாய் லெனின் கையொப்பம் இட்டிருந்த ஒரு கடிதத்தை எடுத்து நீட்டினேன். கையொப்பம் மட்டும் அல்ல, கடிதம் முழுவதுமே லெனினுல் தம் கைப்பட எழுதப்பட்டிருந்தது. என் விசாரணையாளன் உன்னிப்பாக அதை நோட்டமிட்டான். லெனினது மந்திரப் பெயர் அவன் முகத்தில் படர்ந்திருந்த கரு முகிலை அகற்றிப் புன்னகை ஒளி தோன்றச் செய்வதைக் காண நான் ஆர்வத்துடன் காத்திருந்தேன். விஷயத்தை இது முடிவு செய்துவிடும் என உறுதியாக நம்பினேன். அது முடிவு செய்தது, ஆனுல் எனக்குச் சாதகமாக அல்ல, எதிராக. அந்த ஆளின் தாடை இறுகியதைக் கண்டு இதை நான் உய்த்துணர்ந்தேன். சான்றிதழ்கள் விஷயத்தில் நான் எல்லை மீறித் தாராளம் காட்டிவிட்டேன்.

அவன் மனத்தில் என் விவகாரம் தெளிவாக இருந்தது. ''புரட்சிக்கு எதிராக ஏதோ சைத்தான்வேலை செய்யத் திட்டமிட்டிருக்கும் சூழ்ச்சிக்காரன் இந்த ஆள். போல்ஷெவிக்குகளுக்கு உகந்தவன் ஆகும்பொருட்டு இவன் சோவியத் தஸ்தாவேஜுகளை ஆடம்பரமான வரிசையாகக் காட்டி மயக்குகிறுன். லெனின் தாமே தந்ததாகக்கூட ஒரு கடிதத்தைக் காட்டுகிறுன். இவன் சாதாரண உளவாளி அல்ல என்பதற்கு இதுவே சான்று. நாம் உடனே செயல்பட வேண்டும்!''—இவ்வாறு அவன் தீர்மானித்தான்.

தன் குதிரை மேலிருந்து இறங்கிக்கொண்டிருந்த ஒரு நெடிய மனிதனிடம் இந்தக் காகிதங்களை எடுத்துச் சென்றுன் அவன். ''அவர்தான் அந்த்ரேய் பெத்ரோவிச். அந்தப் பத்திரங்கள் எல்லாவற்றையும் பற்றி அவருக்குத் தெரியும். இப்போதுதான் மாஸ்கோவிலிருந்து திரும்பி வந்திருக்கிறுர் அவர். எல்லா போல்ஷெவிக்குகளையும் அவர்கள் தங்கள் பெயர்களை எப்படி எழுதுகிறுர்கள் என்பதையும் அவர் அறிவார். புரட்சி எதிர்ப்பாளர்களையும் அவர்களுடைய எல்லாத் தந்திரங்களையும் அவர் கரை கண்டவர். அந்தப் பேய்களால் அந்த்ரேய் பெத்ரோவிச்சுக்குத் தண்ணீர் காட்ட முடியாது'' என்று அறிவித்தான் துப்பாக்கிக்குழாய் நுனியை என் முகத்தெதிரே நீட்டிய பெரிய குடியானவன்.

அந்த்ரேய் பெத்ரோவிச் புகழுக்கு ஏற்பவே அறிவாளியாக இருக்க வேண்டும் என்று குந்த்ஸும் நானும் உளமாரப் பிரார்த்தித்தோம். எங்கள் நல்ல காலம் அவர் அறிவாளி என்பதைக் காட்டிவிட்டார். போல்ஷெவிக்குகளின் தலைவர்களை அவர் உண்மையிலேயே அறிந்திருந்தார். அவர்களுடைய கையெழுத்துக்களும் அவருக்குத் தெரிந்திருந்தன. சில கேள்விகள் கேட்டு எங்கள் ஞானத்தைச் சோதனை செய்தார் அவர். மன நிறைவு அடைந்து எங்கள் கைகளைப் பற்றி உளமாரக் குலுக்கினார், "தவாரிஷ்ஷி" (தோழர்களே) என்று எங்களை அழைத்து முகமன் கூறினார், வெளியே வரும்படியும் எங்களிடம் எத்தனையோ கேள்விகள் கேட்க விரும்புவதாகவும் சொன்னார்.

நாங்கள் வெளியே சென்றதுமே, "ஆனால் உங்களை நாங்கள் எத்தனையோ கேள்விகள் கேட்க விரும்புகிறோம்" என்று நாங்கள் பதிலுக்குக் கூறினோம். "இந்த ஆட்கள் எல்லோரும் திடீரென எங்கிருந்து வந்து குதித்தார்கள்? இந்த ரெயில் எதற்காக நிறுத்தப்பட்டிருக்கிறது? ஆயுத பலத்தை நீங்கள் இவ்வாறு காட்டுவதன் அர்த்தம் என்ன?" என்றோம்.

"ஒவ்வொரு கேள்வியாகக் கேளுங்கள்" என்று சிரித்துக் கொண்டே பதில் சொன்னார் அந்த்ரேய் பெத்ரோவிச். "முதலாவது: இந்த ஆட்கள் அரை மைல் தூரத்துக்கு உள் இருக்கும் பெரிய நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களும் கிராமங்களைச் சேர்ந்த குடியானவர்களும் ஆவார்கள். இன்னும் ஆயிரக் கணக்கில் ஆட்கள் இதோ வருவார்கள். இரண்டாவது: இந்தத் துப்பாக்கிகளையும் எறிகுண்டுகளையும் கால் மணி நேரத்துக்கு முன்புதான் நாங்கள் எடுத்துக்கொண்டோம்—வெறுமே காட்டுவதற்காக அல்ல, உடனடியாக உபயோகிப்பதற்காக. மூன்றாவது: இந்த டிரான்ஸ்-சைபீரிய எக்ஸ்பிரெஸ் ரெயிலை நாங்கள் நிறுத்தியது இதிலிருந்து ஜாரையும் அரசக் குடும்பத்தினரையும் இறக்கிவிடுவதற்காக."

"ஜாரையும் அரசக் குடும்பத்தினரையுமா? அவர்கள் இந்த ரெயிலில் இருக்கிறார்களா? இங்கேயா?" என்று நாங்கள் கத்தினோம்.

''எங்களுக்கு நிச்சயமாகத் தெரியாது. இருபது நிமிடங்களுக்கு முன்பு ஓம்ஸ்க் நகரிலிருந்து பின்வரும் தந்தி வந்தது என்பதையே நாங்கள் அறிவோம்: 'இராணுவ அதிகாரிகள் குழு ஒன்று நிக்கொலாயைச் சற்று முன்பு விடுவித்துவிட்டது. அவன் ஒருவேளை பரிஜனங்களுடன் எக்ஸ்பிரெஸில் தப்பி ஓடுகிறான் போலும். இர்க்கூத்ஸ்க்கில் ஜார் அரசு ஸ்தாபிக்கத் திட்டம். உயிருடனே இன்றியோ அவனை நிறுத்துக.' ''

(ஆகவே ''கொலைகாரக் கொடுங்கோலன்'' என்று கூட்டத்தினர் குறிப்பிட்டது ஜாரைத் தான். ஜாரிணுவையே அவர்கள் ''ரஸ்பூத்தின் பெண்டாட்டி'' என்று அழைத்தார்கள்!)

ஜாரை 'எதிர்கொள்ள' வந்தவர்களின் ஏமாற்றம்

அந்த்ரேய் பெத்ரோவிச் மேலே சொன்னார்: ''இந்தத் தந்திச் செய்தியைக் கூவிப் பரப்புவதற்காக இரண்டு ஆட்களைக் கிராமங்களுக்கும் இரண்டு பெயரைச் சுரங்கங்களுக்கும் நாங்கள் அனுப்பி வைத்தோம். எல்லோரும் தங்கள் கருவிகளைப் போட்டுவிட்டுத் துப்பாக்கிகளை எடுத்துக்கொண்டு இந்த ரெயிலைப் பிடிப்பதற்காகப் பாய்ந்து வந்தார்கள். இப்போது இங்கே ஆயிரம் பெயர் இருக்கிறார்கள். இரவு வரை மேலும் ஆட்கள் வந்து கொண்டே இருப்பார்கள். எங்கள் ஜாருக்காக நாங்கள் எவ்வளவு ஆழ்ந்த உணர்ச்சி கொண்டிருக்கிறோம், பார்த்தீர்களா? இருபதே நிமிட முன்னறிவிப்பில் இந்த அருமையான பெரிய வரவேற்புக் குழுவை ஜாருக்காக ஆயத்தம் செய்துவிட்டோம். ஜாருக்கு இராணுவ அணிவகுப்பு பிடிக்கும். நல்லது, இதோ அணிவகுப்பு. முறையான தோரணையில் இல்லைதான், ஆனால் போதிய அளவு கம்பீரமானது, இல்லையா?''

ஆம்! அப்படி ஆயுதமயமாக இலங்கிய மனிதர்களை நான் பார்த்ததே இல்லை. இயங்கும் ஆயுதசாலைகள் போன்று இருந்தார்கள் அவர்கள். ஒரு ஆயிரம் ஜார்களைத் தகர்த்து மறுவுலகிற்கு அனுப்புவதற்குப் போதுமான எறிகுண்டுகள் அவர்கள் கைகளில் இருந்தன. அவர்களது உள்ளங்களிலும்

விழிகளிலுமோ, பதினுயிரம் ஜார்களை அழித்து ஒழிப்பதற்கு வேண்டிய வன்மம் இருந்தது.

அழிப்பதற்கு ஜாரைத்தான் காணோம்.

''அப்படித்தான் நான் நினைத்தேன். புரட்சி எதிர்ப்பாளர்களின் இன்னொரு சூழ்ச்சி இது. சோவியத்துக்கு எதிராகக் குழப்பத்தைத் தூண்டிவிடுபவர்களின் கைவேலை அந்தத் தந்தி. சுரங்கங்களின் வேலைக்கு இதனுல் குந்தகம் செய்ய அவர்கள் விரும்புகிருர்கள். குந்தகம் ஏற்படத்தான் செய்யும். எங்கள் ஆட்கள் இப்போது வெகுவாகக் கிளர்ச்சி அடைந்திருப்பதால் இன்று வேறு எதுவும் செய்ய அவர்களுக்கு இயலாது. அடுத்து வரும் நாட்களில் இந்த மாதிரி வேறு தந்திகள் கிடைக்கும். ''ஜார் தப்பி ஓடுகிருன், ஜார் தப்பி ஓடுகிருன்'' என்று கத்துவதன் மூலம் ஆட்களைப் பொய் எச்சரிக்கைகள் பால் அருவருப்படையச் செய்துவிடலாம் என்று அவர்கள் நினைக்கிருர்கள். அப்புறம் நாங்கள் அஜாக்கிரதையாக இருக்கையில் ஜாரை மெதுவாகத் தப்ப வைத்துவிடலாம் என்பது அவர்களுடைய நினைப்பு. ஆனுல் இங்கே உள்ள எங்களுடைய ஆட்களை அவர்களுக்குத் தெரியாது. ஜாரை இலக்குத் தவருமல் சுடும் வாய்ப்புக்காக வருடத்தில் ஒவ்வொரு நாளும் உவப்புடன் இங்கே திரண்டு வருவார்கள் அவர்கள்'' என்ருர் அந்த்ரேய் பெத்ரோவிச்.

தேட்டக்குழுவினர் ஒவ்வொரு பெட்டியையும் துருவித் தேடிய ஆர்வத்தைப் பார்த்தபோது ''அன்புத் தந்தை'' ஜார் பால் அவர்களுக்கு உள்ள போக்கு என்ன என்பதில் சந்தேகத்துக்கே இடமில்லாது போய்விட்டது. டிரங்குகளைத் திறப்பதும் படுக்கைகளைக் குதறிக் கிளறுவதுமாக ரெயிலின் ஒரு கோடியிலிருந்து மறு கோடிவரை அரித்துத் தேடினுர்கள் அவர்கள். எஞ்சினின் எரிபொருள் அறையிலிருந்த விறகுக் குவியலுக்குள் மாட்சிமை தங்கிய பேரரசர் ஒருவேளை ஒளிந்து கொண்டிருக்கிருரா என்று பார்ப்பதற்காகக் கட்டைகளைக்கூட அவர்கள் புரட்டித் துழாவினுர்கள்.

இரண்டு வெண்தாடிக் குடியானவர்கள் தங்களுக்கே உரிய முறையில் தேட்டம் நடத்தினுர்கள். ரெயில் பெட்டிகளுக்கு அடியில் துப்பாக்கிகளை நுழைத்து, குத்தீட்டிகளைச் சுற்றிலும் பாய்ச்சுவார்கள், பின்பு வருத்தத்துடன் தலைகளை

ஆட்டியவாறு துப்பாக்கிகளை வெளியே உருவிக் கொள்வார்கள். ருஷ்யப் பேரரசின் மன்னர்மன்னர், வண்டியின் முட்டுத் தாங்கிகள் மீது சவாரி செய்யக் கூடும் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். ஒவ்வொரு முறையும் ஏமாற்றம் அடைந்து, அடுத்த பெட்டியிலாவது அதிர்ஷ்டம் கிடைக்கலாம் என்று நம்பி மீண்டும் குத்திக் குடைவார்கள். ஆனால் ஜார் இல்லாமையால் அவர்களது குத்தீட்டிகள் அவனைத் துளைக்கவில்லை.

ஆனால் வேறொன்றை அவை துளைத்துப் பொள்ளல் ஆக்கிவிட்டன. ''அன்புத் தந்தை'' ஜார் மீது ருஷ்யக் குடியானவர்கள் ஆழ்ந்த அன்பும் பக்தியும் கொண்டிருந்ததாகக் கதைத்த நெடுங்காலக் கர்ண பரம்பரையை அவை தூள் பரத்திவிட்டன. பக்தியும் பெருந்தன்மையும் ததும்பிய இந்த இரு முதிய குடியானவர்கள் இருண்ட மூலைகளுக்குள் துப்பாக்கிக் குத்தீட்டிகளைப் பாய்ச்சுவதும் அவற்றை வெளியில் எடுத்து, ''அன்புத் தந்தை'' காயமடைந்த குறிகள் அவற்றின் மேல் இல்லாததைக் கண்டு துயரடைவதுமான இந்தக் காட்சிக்கு முன்னே அந்த இன்பக் கதையால் உயிர்த்திருக்க முடியவில்லை.

ஜாருக்குப் பதிலாக நாங்கள்

அந்த்ரேய் பெத்ரோவிச் சமயோசித சாமர்த்தியம் உள்ளவர். தன்னுடைய ஆட்களுக்கு ஜார் கிடைக்காமல் போகவே, குந்த்ஸையும் என்னையும் பதிலிகளாகப் பயன்படுத்திக் கொண்டார்.

தமது தோழர்களைநோக்கி அவர் கூறினார்: ''தவாரிஷ்ஷி, இது விசித்திர உலகம், விசித்திர வியப்புக்கள் நிறைந்தது. வரலாற்றிலேயே மிகப் பெரிய பாதகனைப் பிடிப்பதற்காக நாம் இங்கே வந்தோம். ஜாரின் மூலம் வேதனையோ துன்பமோ அனுபவிக்காதவன் ஒருவன்கூட இங்கே இல்லை. ஆனால் நமது மிகக் கொடும் பகைவனைக் காண்பதற்குப் பதிலாக நமது மிகச் சிறந்த நண்பர்களை இங்கே காண்கிறோம். ருஷ்ய ஏதேச்சாதிகாரத்தின் கருத்துக்களை ஏற்றிச் செல்வதற்குப் பதில் இந்த வண்டி ருஷ்யப் புரட்சியின்

கருத்துக்களை ஏற்றிச் செல்கிறது—அதுவும் அமெரிக்காவுக்கு. புரட்சி நீடூழி வாழ்க! நமது அமெரிக்கத் தோழர்கள் நீடூழி வாழ்க!''

வாழ்த்து முழக்கங்களும் கைகுலுக்கல்களும் படப்பிடிப்புக்களும் கோலாகலமாக நடந்தேறிய பின் எங்கள் வண்டி மேலே சென்றது. ஆனால் நெடு நேரம் அல்ல. தாக்குக் கூட்டத்தினரால் எங்கள் ரெயில் மீண்டும் நிறுத்தப்பட்டது. ஜார் வண்டியில் இல்லை என்று எவ்வளவோ சொல்லியும் பயன் இல்லை. இதற்கான சான்றிதழ்களையும் புரட்சி எதிர்ப்பாளர்களின் கள்ளப் பத்திரங்கள் என்று அவர்கள் ஒதுக்கித் தள்ளிவிட்டார்கள். ஒவ்வொரு கூட்டமும் தானே சோதனையிட்டு இதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. இவ்வாறு டிரான்ஸ் சைபீரியப் பாதையில் செல்லும் யாவற்றிலும் விரைவான எக்ஸ்பிரெஸ் எல்லாவற்றிலும் மெதுவாகச் செல்வது ஆகிவிட்டது.

மரியீன்ஸ்க் என்னும் இடத்தில் போக்குவரத்துக் கமிஸார் பின்வரும் தந்தியை அனுப்பியதன் மூலம் நிகழ்ச்சிகளுக்குப் புதிய திருப்பம் அளித்தார்:

''எல்லா சோவியத்துக்களுக்கும்:

''செஞ்சேனையின் பொது ஒழுங்கமைப்பாளர்களான குந்த்ஸ், வில்லியம்ஸ், இருவரும் இரண்டாம் நம்பர் ரெயிலில் பயணம் செய்கிறார்கள். சோவியத்துக்களின் பிரதிநிதிகள் கலந்து ஆலோசிப்பதற்காக அவர்களைச் சந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஸதோவ்னிக்கவ்.''

எக்ஸ்பிரெஸை எதிர்கொள்வதற்காக ஒவ்வொரு ஸ்டேஷனிலும் கூடியிருந்த மக்களுக்கு இந்தத் தந்தி படித்துக் காட்டப்பட்டது. ஜாரைப் பிடிப்பதற்காக அவர்களது ஆர்வமும் ஆயுதங்களும் கூராக்கப்பட்டிருந்த சமயத்தில், எதிர்பாரா விதமாக இரண்டு தோழர்கள் அவர்களிடம் ஒப்படைக்கப் பட்டுவிட்டார்கள். தங்களது உணர்ச்சிகளைச் சட்டென மாற்றிக் கொள்வது அவர்களுக்கு அவசியம் ஆகிவிட்டது. எனினும் அவர்கள் பெருந்தன்மையுடன் அவ்வாறே செய்தார்கள். ஒவ்வொரு ஸ்டேஷனிலும் எங்கள் வண்டி வாழ்த்து

முழக்கங்களின் பேராரவாரத்துக்கிடையே புகுந்தது. செஞ் சேனையின் புதிய படைப்பிரிவுகள் எங்களுக்கு மரியாதை செய்தன, கமிஸார்கள் தங்கள் பிரச்சினைகளை ஆழ்ந்த முறையில் எங்களுக்கு அறிவித்தார்கள், கூட்டத்தினர் எங்களை இராணுவ மேதைகளாக மதித்து எங்களைக் காண்பதற்காக நெருக்கியடித்துக்கொண்டு முன்னே வந்தார்கள்.

எங்களுக்கு இது எக்கச்சக்கமாக இருந்தது, ஆனால் உண்மையை ஒளியுறுத்திற்று. உருவாகிக் கொண்டிருந்த புதிய நாகரிகத்தை, உதயமாகிக் கொண்டிருந்த வருங்காலத்தை நாங்கள் ஒரு சிறிது கண்டோம். ஒரு ஊரில் அஸ்திவாரம் அப்போதுதான் நாட்டப்பட்டிருந்தது—குடியானவர்கள் ஒரே மைய சோவியத்தில் தொழிலாளர்களுடன் சேர்ந்து கொண்டிருந்தார்கள். இன்னொன்றில் மக்கள் அஸ்திவாரம் கூடப் போட்டாகவில்லை—அறிவுஜீவிகள் எல்லோரும் வேலை நிறுத்தம் செய்திருந்தார்கள். பல இடங்களில் புதிய கட்டுமானம் வெகுவாக முன்னேறியிருந்தது, சோவியத் பள்ளிகள் நிறைந்திருந்தன, குடியானவர்கள் தானியங்களைச் சந்தைக்குக் கொண்டுவந்திருந்தார்கள், தொழிற்சாலைகள் பொருள்களையும் சொல்வன்மையையும் உற்பத்தி செய்து கொண்டிருந்தன. காட்சிப் பொருள்கள் பெரும்பாலும் பண்படாதவையாகவும் அரைகுறையாகவும் இருந்தன எனினும் பொதுமக்களிடையே உண்மையான படைப்புச் சக்திகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பதற்குச் சான்று பகர்ந்தன.

நாடுவிட்டோடிகளுக்கு நாங்கள் இதைச் சுட்டிக் காட்டினோம். மேற்கு ஜனநாயகங்களுக்காகக் கட்டுக்கதைகள் திரிப்பதில் முனைந்திருந்த அவர்களுக்கோ, இந்த மெய் விவரங்கள் எரிச்சல் ஊட்டின. சிலர் சந்தேகப் பார்வையுடன் கருங்கும்மென்று நோக்கினார்கள், எங்களைக் கொள்கை துறந்தவர்களாகவும் சொந்த வர்க்கத்தின் துரோகிகளாகவும் நடத்தினார்கள். மற்றவர்களோ, ஜார் ஆட்சி நடந்த பொற்காலம், ருஷ்யப் பொது மக்களின் ''அறியாமை இருள்,'' போல்ஷெவிக்குகளின் வெறும் பேதைமை முதலிய தங்கள் வழக்கமான விஷயங்களுக்கு மட்டித்தனமாகத் திரும்பினார்கள்.

அத்தியாயம் பதினான்கு

ச்செர்ம் நகரின் சிவப்பு தண்டனைக் கைதிகள்

எங்கள் ரெயிலில் இருந்த நாடுவிட்டோடிகள் பல விஷயங்களில் பிணக்கு கொண்டிருந்தார்கள். ஆனால் ஒரு விஷயத்தில் அவர்களிடையே கருத்து ஒற்றுமை காணப்பட்டது. சைபீரியாவின் பெரிய தண்டனைக் கைதிகள் குடியேற்ற இடமான ச்செர்ம் நகரில் பெருத்த ஆபத்து எங்களை எதிர்நோக்கி இருக்கிறது என்பதே அந்த விஷயம்.

''ச்செர்மில் பதினையாயிரம் தண்டனைக் கைதிகள் இருக்கிறார்கள். மிக மிக மோசமான குற்றவாளிகள்—முரட்டுப் போக்கிரிகள், திருடர்கள், கொலைகாரர்கள். அவர்களைக் கட்டி மேய்ப்பதற்கான ஒரே வழி அவர்களைச் சுரங்கங்களில் தள்ளி, துப்பாக்கி முனையில் வேலை வாங்குவதுதான். அப்படிச் செய்தாலுங்கூட அது அவர்களுக்கு மட்டுமீறிய சுதந்திரம் ஆகும். வாரந்தோறும் திருட்டுக்களும் கத்திக்குத்துகளும் டஜன் கணக்கில் நடக்கின்றன. இப்போதோ இந்தப் பேய்களில் பெரும்பாலானவர்கள் கட்டவிழ்த்து விடப்பட்டு விட்டார்கள், போல்ஷெவிக்குகளாக மாறிவிட்டார்கள். எப்போதுமே அது நரகக் குழி. இப்பொழுது அது எப்படி இருக்கிறதோ, ஆண்டவனுக்கே வெளிச்சம்'' என்றார்கள் அவர்கள்.

எங்கள் ரெயில் ச்செர்ம் (ச்செரெம்ஹோவோ) ஸ்டேஷனுக்குள் மே மாதம் முதல் தேதி அன்று, குளிர் நடுக்கிய இருண்ட காலையில் புகுந்தது. வாடைக் காற்றால் கிளப்பப்பட்ட புழுதிப் படலம் அங்கே திரையிட்டிருந்தது. எங்கள் அறையில் சுருண்டு படுத்து அரைத் தூக்கத்திலிருந்த நாங்கள், ''வருகிறார்கள்! வருகிறார்கள்!'' என்ற கூச்சலைக் கேட்டு விழித்துக்கொண்டோம். ஜன்னலுக்கு வெளியே எட்டிப் பார்த்தோம். கண்ணுக்கு எட்டிய தொலை வரையில் சுழலும் புழுதிப் படலம் தவிர வேறு எதுவுமே எங்களுக்குத் தென்படவில்லை. பிறகு புழுதியின் ஊடாகச் சிவப்பு மினுமினுப்பும்

பளிச்சிடும் எஃகின் சாம்பல் நிறமும் முன்னே நகர்ந்து கொண்டிருந்த இனந்தெரியாத கரும் திரள்களும் எங்களுக்குப் புலப்பட்டன.

நாடுவிட்டோடிகள் ஜன்னல் திரைகளைப் போட்டுவிட்டு நகை நட்டுக்களையும் பணத்தையும் பெரும் பதற்றத்துடன் மறைக்கத் தொடங்கினார்கள், அல்லது கிலியால் செயலற்றுப்போய் அசைவற்று உட்கார்ந்திருந்தார்கள். வெளியே, சரளைக் கற்கள் லாடங்கட்டிய பூட்சுகளுக்கு அடியே கறகற வென நொறுங்கலோசை செய்தன. ''அவர்கள்'' எந்த மன நிலையில், எத்தகைய ஆவேச வேட்கை குருதியில் பொங்க, எத்தகைய ஆயுதங்களைக் கைகளில் ஏந்திக்கொண்டு வருகிறார்கள் என்பது ஒருவருக்கும் தெரியவில்லை. இவர்கள் ச்செர்ம் நகரின் குலை பதறச் செய்யும் தண்டனைக் கைதிகள், ''கொலையாளிகள், முரட்டுப் போக்கிரிகள், திருடர்கள்'' என்பதையும் ரெயிலின் உயர்வகுப்புப் பெட்டிகளை நோக்கி அவர்கள் வருகிறார்கள் என்பதையும் மட்டுமே நாங்கள் அறிந்திருந்தோம்.

காற்று அவர்கள் விழிகளைப் புழுதியாலும் கரித்துகளாலும் நிறைத்து, அவர்கள் பிடித்திருந்த பெரிய செங்கொடியுடன் மல்லுக்கட்டியது. எனவே அவர்கள் மெதுவாக ஆடியசைந்து வந்தார்கள். பின்பு காற்று சட்டென நின்றது. புழுதித் திரை அகன்றது. ஒரு கதம்பக் கூட்டம் கண்களுக்குப் புலனாயிற்று.

நிலக்கரிச் சுரங்கங்களின் கரி படிந்து கறுத்திருந்த உடைகளைக் கயிறுகளால் இறுக்கியிருந்தார்கள் அந்த ஆட்கள். அவர்களுடைய முகங்கள் கரியேறிக் கடுகடுப்பாக இருந்தன. சிலர் எருதுகள் போன்ற பெருந்தடியர்கள். சிலர் முறுக்கேறி முடிச்சு விழுந்து கணக்கற்ற புயல்களில் அடிபட்டு வைரம் பாய்ந்திருந்த மேனியினர். தல்ஸ்தோயால் வருணிக்கப்பட்ட, கோணிய புருவங்களும் விலங்குத் தாடைகளும் கொண்ட, மனித ஊனுண்ணும் தண்டனைக் குற்றவாளிகள் இவர்கள். தஸ்தாயேவ்ஸ்க்கிய்* வருணித்துள்ள ''இறந்தோர் இல்லம்''

---

*தஸ்தாயேவ்ஸ்க்கிய், பி. மி. (1821-1881)—பிரசித்தி பெற்ற ருஷ்ய எழுத்தாளர்.

இது. வெட்டுண்ட கன்னங்களும் தோண்டப்பட்ட கண்களும் கொண்டவர்களாய், துப்பாக்கிக்குண்டு, கத்தி, சுரங்க விபத்து ஆகியவற்றின் வடுக்கள் மேனிகளில் இலக, நொண்டி நடந்து வந்தார்கள் அவர்கள். சிலர் கெட்ட பிறப்பினுல் சபிக்கப்பட்டவர்கள். ஆனுல் நொய்ந்தவர்கள் அநேகமாக ஒருவர்கூட இல்லே.

மிக நீடித்த, கொடிய செயல்முறை மூலம் பலவீனர்கள் கொன்று தீர்க்கப்பட்டுவிட்டார்கள். சாம்பல்நிற நெடுஞ்சாலேயில் ச்செர்முக்கு ஓட்டிவரப்பட்ட பதிஞயிரக் கணக்கானவர்களில் தப்பிப் பிழைத்தவர்கள் இந்த ஆயிரக்கணக்கானவர்கள். ஆலங்கட்டி மழையினூடாகவும் வெண்பனியினூடாகவும், பனிக்காலக் கடுங்கூதலிலும் கோடைகாலக் கொடும் வெயிலிலும் தள்ளாடி நடந்திருந்தார்கள் இவர்கள். சித்திரவதை அறைகளில் இவர்களுடைய அவயவங்களின் மூட்டுக்கள் கழற்றப்பட்டிருந்தன. போலீஸ்காரர்களின் வாட்கள் இவர்களுடைய மண்டையோடுகளேத் தாக்கிப் பிளந்திருந்தன. இரும்பு விலங்குகள் இவர்களுடைய சதையை அறுத்திருந்தன. கஸாக்கியப் படையினரின் சவுக்குகள் இவர்கள் முதுகுத் தோல்களேப் பிய்த்திருந்தன, கஸாக்கியர் குதிரைக் குளம்புகள் இவர்களேத் தரையில் வீழ்த்தித் துவைத்திருந்தன.

இவர்களுடைய உடல்கள்போன்றே இவர்களுடைய ஆன்மாக்களும் சவுக்கால் விளாறப்பட்டிருந்தன. சட்டம் வேட்டைநாய் போல இவர்களே விடாது தொடர்ந்து துரத்தி, இருட்டறைகளுக்குள் தள்ளியது, சைபீரியாவின் இந்த இருளடைந்த எல்லே இடத்துக்கு இழுத்து வந்தது, மேல்தரையிலிருந்து இதன் பிலக் குழிகளுக்குள் விரட்டியது, இருட்டில் நிலக்கரியைத் தோண்டி எடுத்து, ஒளியில் வாழ்ந்தவர்களுக்கு அதை அளித்தவாறு விலங்குகள் போன்று முதுகொடிய உழைக்க வைத்தது.

இப்போது சுரங்கங்களுக்கு வெளியே நடந்து ஒளியில் பிரவேசித்துக் கொண்டிருந்தார்கள் அவர்கள். துப்பாக்கிகளும் கைகளுமாக, புரட்சிச் செங்கொடிகளே உயர்த்திப் பிடித்தவாறு நெடுஞ்சாலேகளில் கட்டின்றி உலவினுர்கள், விலங்கு வலிமையின் பருவடிவமாகப் பெரிய மந்தை போல

முன்னே வந்தார்கள். அவர்களது வழியில் இருந்தன இத மான கதகதப்பும் ஆடம்பர வசதிகளும் கொண்ட உயர் வகுப்பு ரெயில் பெட்டிகள்—கோடிக் கணக்கான மைல்கள் தொலைவில் இருந்த வேறொரு பிரபஞ்சம். இப்பொழுது சில அங்குலங்களுக்குள், அவர்கள் கைகளுக்கு எட்டும் தூரத் தில் இருந்தது இந்தப் பிரபஞ்சம். மூன்றே நிமிடங் களில் அவர்கள் சுழல்காற்றுப் போல இந்த ரெயில் வண்டி யை ஒரு முனையிலிருந்து மறு முனைவரை சூறையாடிப் பாழ் படுத்தி விடலாம். ஒரு முறை தெவிட்டத் தெவிட்ட அனுபவிப்பது எவ்வளவு இன்பம்! தவிர எவ்வளவு சுலபம்! ஒரு விரைந்த முன்பாய்ச்சல். ஒரு சீற்றத் தாக்குதல்.

ஆனால் அவர்களது செய்கைகளில் அவசரமோ வெறி யோ காணப்படவில்லை. தங்கள் பதாகைகளைத் தரைமீது இழுத்துப் பரப்பியவாறு ரெயிலை நோக்கியபடி பிறை வடிவில் நடுவில் குழுமினார்கள் அவர்கள். அந்த முகங்களைக் கூர்ந்து பார்வையிட இப்பொழுது எங்களுக்கு முடிந்தது. கடுப்பும் முறைப்பும் வெறுப்பின் ஆழ்ந்த வரிகளும் கடும் உழைப்பினால் விலங்குத் தோற்றமும் கொண்டிருந்தன அவை. துர்வழக்கங்களாலும் பயங்கரச் செயல்களாலும் ஏற்பட்ட அழிவுகளின் குறிகள் எல்லா முகங்கள் மீதும் இருந்தன. எல்லையற்ற வேதனையும் சித்திரவதையும் உலகின் கொடுந் துயரமும் எல்லா முகங்களிலும் காணப்பட்டன.

எனினும் அவர்களுடைய விழிகளில் விந்தையான ஒளி —பேருவகைத் தோற்றம்—தென்பட்டது. அல்லது அது பழிவெறியின் சுடர்வுதானோ? அடிக்குப் பதில் அடி. சட்டம் அவர்களுக்கு ஆயிரமாயிரம் அடிகள் கொடுத்திருந்தது. இப்போது அவர்களுடைய முறையோ? நீண்ட பல ஆண்டுக் கசப்புக்கு இப்பொழுது பழி தீர்த்துக் கொள்வார்களோ அவர்கள்?

தண்டனைக் கைதித் தோழர்கள்

ஒரு கை எங்கள் தோள்களைத் தொட்டது. நாங்கள் திரும்பினோம். இரண்டு முரட்டுச் சுரங்கத் தொழிலாளர் களின் முகங்களை எதிர்ப்பட்டோம். தாங்கள் ச்செர்ம்

நகரின் கமிஸார்கள் என்றூர்கள் அவர்கள். அதே சமயம் பதாகை ஏந்தியவர்களுக்கு அவர்கள் ஜாடை காட்டவே, செம் பதாகைகள் எங்கள் கண்கள் முன்பு உயர்த்தப்பட்டன. ஒன்றின்மீது கொட்டை எழுத்துக்களில் நன்கு பழக்கமான கோஷம் பொறிக்கப்பட்டிருந்தது: ''பாட்டாளிகளே, எழுங்கள்! இழப்பதற்கு உங்கள் விலங்குகள் தவிர வேறு எதுவும் உங்களிடம் இல்லை.'' இன்னொரு பதாகை மேல் ''எல்லா நாடுகளின் சுரங்கத் தொழிலாளர்களுக்கும் நாங்கள் நட்புக் கரங்களை நீட்டுகிறோம். உலகம் முழுவதிலும் உள்ள எங்கள் தோழர்களுக்கு வாழ்த்துக்கள்'' என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது.

''தொப்பிகளை அகற்றுங்கள்!'' என்று கத்தினுன் கமிஸார். அசட்டுப் பிசட்டென்று தொப்பிகளைக் கழற்றிக் கைகளில் வைத்துக்கொண்டு நின்ருர்கள் ஆட்கள். அப்புறம் மெதுவாகத் தொடங்கியது ''சர்வதேசத் தொழிலாளர் கீதம்'':

''கடும்பட்டினியின் கைதிகாள், எழுவீர்!
கொடுந்துயர் உழலும் உலகீர், எழுவீர்!
ஆர்த்தது கண்டனத் தீர்ப்பினை நீதி,
சீர்மிகும் மேதினி பிறந்திடக் காணீர்.
மரபின் தளைகள் பிணியா இனி உமை,
விரைவிலே எழுவீர்! விடுதலை உற்றீர்.
புது அடிப்படையில் எழுந்திடும் உலகம்.
எதுவுமற்றிருந்தீர், எல்லாம் ஆவீர்!''

உலகின் பல நகரங்களின் வீதிகளில் அணிவலம் வரும் திரளான மக்களின் வரிசைகளால் முழக்கப்படும் ''சர்வதேசத் தொழிலாளர் கீதம்'' எதிரொலிக்க நான் கேட்டிருந்தேன். கிளர்ச்சிக்கார மாணவர்கள் கல்லூரிகளில் அதை முழக்கியதையும் நான் கேட்டிருந்தேன். நான்கு இராணுவ இசைக் குழுக்களின் பின்னணி சங்கீதத்துடன் கலந்து 2,000 சோவியத் பிரதிநிதிகளின் குரல்கள் இந்தக் கீதத்தைத் தவ்ரீதா அரண்மனை அதிரப் பாடியதை நான் செவிமடுத்திருந்தேன். ஆனுல் அவர்களில் ஒருவரும் ''கொடுந்துயர் உழலும் உலகினராகத்'' தோற்றம் அளிக்கவில்லை. கொடுந்

துயர் உழல்வோரின் அனுதாபிகள் அல்லது பிரதிநிதிகள் அவர்கள். ச்செர்ம் நகரின் இந்தத் தண்டனைக் கைதிச் சுரங்கத் தொழிலாளர்களோ, யாவரிலும் மோசமான கொடுந்துயர் உழல்பவர்கள். அவர்களது உடைகளிலும் தோற்றத்திலும் குரலிலும்கூடத் துயர் ததும்பியது.

உடைந்த தொண்டைகளுடன் சுருதியோடு சேராமல் அவர்கள் பாடினார்கள். ஆனால் அவர்களுடைய பாட்டில், எல்லா யுகங்களையும் சேர்ந்த ஒடுக்கப்பட்டோரின் வேதனையையும் எதிர்ப்பையும் உணர முடிந்தது: சிறைப்பட்டவனின் பெருமூச்சு, துடுப்புடன் பிணிக்கப்பட்டிருந்த படகோட்டும் அடிமையின் முனகல், தண்டனைச் சக்கரத்தில் நீட்டிக் கிடத்தப்பட்டிருந்த பண்ணையடிமையின் தேம்பல், சிலுவையிலும் எரிகம்பத்திலும் தூக்குமரத்திலும் இருந்து வரும் கதறல்கள், தண்டனைக்குள்ளான எண்ணிறந்த மக்களின் ஏக்கம்—எல்லாம் இறந்த காலத்தின் நெடுந் தொலைகளிலிருந்து பொங்கிப் பெருக்கெடுத்தன அவர்களுடைய பாட்டில்.

நூற்றாண்டுக் கணக்கான துன்ப துயரங்களுக்கு நேர் வாரிசுகள் இந்தத் தண்டனைக் கைதிகள். இவர்கள் சமூகத்தால் விலக்கி ஒதுக்கப்பட்டவர்கள், அதன் கொடுங்கரங்களால் உருத்தெரியாமல் நசுக்கிக் கசக்கப்பட்டு இந்தப் படுகுழியின் இருட்டுக்குள் வீசி எறியப்பட்டவர்கள்.

இப்போது படுகுழிக்கு உள்ளிருந்து வெல்லப்பட்டோரின் இந்த வெற்றிக் கீதம் முழங்கியது. நெடுங்காலமாக அடித்து மௌனத்தில் ஆழ்த்தப்பட்டிருந்த அவர்கள் பாட்டை முழக்கினார்கள்—முறையீட்டுப் பாட்டை அல்ல, வெற்றிப் பாட்டை. இனி அவர்கள் சமூகத்தால் விலக்கி ஒதுக்கப்பட்டவர்கள் அல்ல, குடிமக்கள். அவ்வளவு மட்டும் அல்ல—புதிய சமூகத்தை நிறுவுபவர்கள்!

அவர்களுடைய அவயவங்கள் குளிரால் மரத்துப்போயிருந்தன. ஆனால் இதயங்கள் தழல்வீசின. கடுமையும் கரடுமுரடுமான முகங்களில் உதயகால ஒளிர்வு சுடர்ந்தது. மங்கிய விழிகள் பளிச்சிட்டன. எதிர்ப்பைக் காட்டிய கண்கள் மென்மை அடைந்தன. 'இன்டர்நேஷனல்' என்ற ஒரு பெரிய சோதரக் குழுவில் ஒன்றிணைந்த எல்லா நாட்டு

உழைப்பாளிகளதும் உயர்நிலைப் படுத்தும் வருங்காலக் காட்சி அந்த விழிகளில் தெரிந்தது.

'' 'இன்டர்நேஷனல்' நீடூழி வாழ்க! அமெரிக்கத் தொழிலாளர்கள் நீடூழி வாழ்க!'' என்று ஆர்ப்பரித்தார்கள் அவர்கள். பிறகு வரிசைகளை விலக்கி ஒருவனை முன்னே தள்ளினார்கள். அவன் மாவீரன் போன்ற உடற்கட்டும் உடல் போன்றே பெரிய உள்ளமும் வாய்க்கப் பெற்றிருந்தான்.

அவன் சொன்னான்: ''ச்செர்ம் நகரச் சுரங்கத் தொழிலாளர்களின் சார்பில் நாங்கள் இந்த ரெயிலில் இருக்கும் தோழர்களை வரவேற்கிறோம்! பழைய நாட்களில் இது எவ்வளவு வேறாயிருந்தது! ஒவ்வொரு நாளும் ரெயில்கள் இந்த வழியாக உருண்டு ஓடின, ஆனால் அவற்றின் பக்கத்தில் வர எங்களால் துணிய முடியவில்லை. எங்களில் சிலர் தீங்கு செய்தோம், அதை நாங்கள் அறிவோம். ஆனால் எங்களில் பலருக்கு மிருகத்தனமான தீங்கு இழைக்கப்பட்டது. நியாயம் இருந்தால் எங்களில் சிலர் இந்த ரெயிலில் இருப்பார்கள், இந்த ரெயிலில் இருக்கும் சிலர் சுரங்கங்களில் இருப்பார்கள்.

''ஆனால் பெரும்பாலான பிரயாணிகளுக்கு நிறையச் சுரங்கங்கள் இருப்பதே தெரியாது. கதகதப்பான படுக்கைகளில் படுத்திருந்த அவர்கள், தரைக்கு அடியில் ஆயிரக் கணக்கான அகழெலிகள் இந்த ரெயில் பெட்டிகளுக்கு வெப்பம் ஊட்டவும் எஞ்சினுக்கு நீராவி தரவும் தேவையான நிலக்கரியைத் தோண்டிக் கொண்டிருப்பதை அறியவில்லை. எங்களில் நூற்றுக்கணக்கானவர்கள் பட்டினியால் மடிந்தோம், சவுக்கடியால் கொல்லப்பட்டோம், அல்லது விழும் பாறைகளால் தாக்குண்டு இறந்தோம் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்களுக்குத் தெரிந்திருந்தாலும் அவர்கள் சட்டை செய்யவில்லை. அவர்கள் கண்களுக்கு நாங்கள் கசடர்கள், விலக்கி ஒதுக்கத் தக்கவர்களாக இருந்தோம். அவர்களுக்கு நாங்கள் ஒரு பொருளாகவே படவில்லை.

''இப்போதோ, நாங்களே எல்லாம்! நாங்கள் இன்டர்நேஷனலைச் சேர்ந்துவிட்டோம். எல்லா நாடுகளிலும் உள்ள தொழிலாளர் சைனியங்களுடனும் இன்று நாங்கள் சேர்ந்து கொண்டோம். அவர்கள் எல்லோருக்கும்

முன்னணியில் இருக்கிறோம் நாங்கள். அடிமைகளாக இருந்த நாங்கள் எல்லோரிலும் விடுதலை மிக்கவர்கள் ஆக்கப்பட்டுவிட்டோம்.

''நாங்கள் விரும்புவது எங்களுடைய விடுதலை மட்டும் அல்ல. உலகம் முழுவதிலும் உள்ள தொழிலாளிகளின் விடுதலை. அவர்களும் விடுதலை அடையாவிட்டால் சுரங்கங் களுக்குச் சொந்தக்காரர்கள் ஆகவும் அவற்றை நாங்களே நடத்தவும் உள்ள சுதந்திரத்தை எங்களால் நிலைநிறுத்தி வைத்துக்கொள்ள முடியாது.

''உலக ஏகாதிபத்தியவாதிகளின் பேராசை பிடித்த கைகள் கடல்களுக்கு அப்பாலிருந்து ஏற்கனவே நம்மை நோக்கி நீட்டப்படுகின்றன. உலகத் தொழிலாளர்களின் கரங்கள்தாம் அந்தப் பிடிகளை நமது குரல்வளைகளிலிருந்து இழுத்து அகற்ற முடியும்.''

அந்த மனிதனது அறிவின் வீச்சும் உள்நோக்கும் வியப் பூட்டுபவையாக இருந்தன. வியப்பு மிகுதி காரணமாகக் குந்த்ஸ் மறுமொழி பேசுகையில் தடுமாறினார். எனக்கு ருஷ்ய மொழியில் இருந்த ஞானம் குலைந்து விட்டது. இந்த விவகாரத்தில் எங்கள் பங்கு இரத்தம் செத்தது, உயிரற் றது என நாங்கள உணர்ந்தோம். ஆனால் இந்தச் சுரங்கத் தொழிலாளர்கள் அப்படி நினைக்கவில்லை. இன்டர்நேஷன லுக்கு ஒரு வாழ்த்து முழக்கமும் சர்வதேச இசைக் குழுவுக்கு இன்னொரு வாழ்த்து முழக்கமும் இட்டு இந்தக் குறையை நிறைவுபடுத்தினார்கள் அவர்கள்.

இந்த ''இசைக்குழு'' நான்கு பிடில்கள் கொண்டது. நான்கு போர்க்கைதிகள் அவற்றை இசைத்தார்கள். அவர் களில் ஒருவன் செக், ஒருவன் ஹங்கேரியன், ஒருவன் ஜெர் மானியன், நான்காமவன் ஆஸ்திரியன். கிழக்குப் போர்முனை யில் பிடிபட்ட இவர்கள் சைபீரியாவில் இருந்த தண்டனைக் கைதிகளின் சுரங்கப் பிரதேசத்தில் ஒவ்வொரு முகாமாக அஞ்சல் செய்யப்பட்டுக் கொண்டிருந்தார்கள். தாய்நாட்டி லிருந்து பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால்! இம்மண்ணில் பிறந்த இந்த ருஷ்யப் பொதுமக்களிலிருந்து மானிட இனத் திலும் வளர்ப்பிலும் அதைவிடத் தொலைவில். ஆனால் சாதி, மதம், இனம் எல்லாம் புரட்சிக்கு முன்னே தகர்ந்து விழுந்து

விட்டன. இன்ப நாட்களில் பெர்லின் அல்லது புடாபெஸ்ட் நகரப் பூங்கா விளக்குகளுக்கு அடியே, ஏதேனும் இசை விழாவில் எப்படி வாசித்திருப்பார்களோ அப்படியே இங்கே, இந்த இருட்குழியில் தண்டனைக் கைதிச் சுரங்கத் தொழிலாளித் தோழர்களுக்கு அவர்கள் பிடில் வாசித்தார்கள். அவர்களுடைய இரத்த நாளங்களில் இருந்த தழல் வீசும் பேரார்வம் அவர்களது பிடில் தந்திகளுக்குப் பரவி, கேட்டுக்கொண்டிருந்தவர்களுடைய இதயத் தந்திகளுக்கும் தாவியது.

சுரங்கத் தொழிலாளர்கள், இசைஞர்கள், புதிதாக வந்தவர்கள், டியூட்டன்கள், ஸ்லாவ்கள், அமெரிக்கர்கள் —எல்லோரும் ஒன்றுகிவிட்டார்கள். கமிஸார்கள் எங்களை முகமன் கூறி வாழ்த்துவதற்காக நெருக்கிக் கொண்டு முன்னே வந்தபோது எல்லாத் தடைவேலிகளும் வீழ்ந்துவிட்டன. வலிய பெரிய உடலினனுன ஒருவன் பெருஞ்சம்மட்டி போன்ற தன் விறல்மிக்க பெருங்கைகளால் எங்கள் கைகளைப் பிடித்துக் கொண்டான். இரண்டு தடவை பேச முயன்றுன், ஆனுல் பேச்சு கிளம்பவில்லை. தன் சோதர உணர்ச்சிகளைச் சொற்களில் வெளியிட முடியாமையால் எங்கள் கைகளைத் திடீரெனப் பிடித்து இறுக்கியதன்மூலம் வெளியிட்டான். இந்தப் பிடியின் இறுக்கத்தை இப்போதுகூட என்னுல் உணர முடிகிறது.

ச்செர்ம் நகரின் கௌரவத்தின் பொருட்டு அதன் முதலாவது பொது வைபவம் தகுந்த முறையில் நடத்தப்பெற வேண்டும் என்று அவன் கவலைப்பட்டான். பேச்சுக்களோடு பரிசுகள் வழங்குவதும் சேர்ந்திருந்த இதே போன்ற ஏதேனும் ஒரு சந்தர்ப்பம் கடந்த காலத்திலிருந்து அவன் நினைவில் சட்டெனத் தோன்றியிருக்க வேண்டும். சற்று நேரம் மறைந்திருந்துவிட்டு இரண்டு சுரங்கவெடிகளை எடுத்துக் கொண்டு திரும்பி ஓடிவந்தான். அமெரிக்கர்களுக்குச் ச்செர்ம் நகரின் பரிசாக அவற்றை எங்களுக்குக் கொடுக்க விரும்பினுன். நாங்கள் பெற மறுத்தோம். அவன் வற்புறுத்தினுன். தற்செயலான மோதல் ஏற்பட்டால் பிரதிநிதிகள் சுரங்க வெடிகளோடு கூடவே மறைந்து விடலாம்—இன்டர்நேஷனலுக்கு முழு நஷ்டம்—என நாங்கள் சுட்டிக்காட்டி

ளும். கூட்டத்தினர் சிரித்தார்கள். அரக்கக் குழந்தை போல அவன் மனம் நொந்தான், புரியாமல் விழித்தான். அப்புறம் அவனும் சேர்ந்து சிரித்தான்.

இரண்டாவது பிடில்காரன் வியென்னு நகரைச் சேர்ந்த நீலக்கண் இளைஞன். அவன் ஓயாமல் சிரித்த வண்ணமாக இருந்தான். நாடு கடத்தப்பட்டதனுல் அவனது வேடிக்கைப் பற்று அடங்கிவிடவில்லை. அமெரிக்க விருந்தினரைக் கௌரவிப்பதற்காக ''அமெரிக்கன் ஜாஸ்'' இசைப்பதாக அவன் முன்வந்தான். அதை அந்தப் பெயரால் அவன் அழைத்தாலும் அவ்வளவு விசித்திரமான மெட்டை அதற்கு முன்போ பின்போ நான் கேட்டதே இல்லை. அவன் அதை வில்லால் மட்டும் அல்ல, கால்களாலும் கைகளாலும், சுற்றி நடனமாடுவதும் துள்ளிக் குதிப்பதுமாக வாசித்துக் கூட்டத்தினருக்குப் பெருங் களிப்பு ஊட்டினுன்.

வண்டி புறப்படுவதற்கான மணி அடித்து எங்கள் அன்புக் கொண்டாட்டத்தை இடை முறித்து விட்டது. இன்னெரு முறை எல்லோருடனும் கைகுலுக்கிவிட்டு நாங்கள் ரெயிலில் ஏறிக்கொண்டோம். இசைக்குழு பின்வரும் பல்லவியை இசைத்தது:

''இதுவே நமது இறுதிப் போர்,
யாவரும் நிற்பீர் இடங்களிலே;
பொதுவாம் சர்வதேசீயமாய்ப்
பொலிந்திடும் மனிதகுலம் அனைத்தும்.''

இந்தச் சந்திப்பில் நயப்பாங்கோ வெளிப் பகட்டோ இல்லை. அழகின்மையே உருவாக இருந்தது அது. ஒன்று மட்டுமே இதற்கு விலக்கு: மிகப் பெரும் உயிராற்றல் அதில் நிறைந்திருந்தது. புரட்சியின் இயக்கு சக்தியை அது வெளிக்காட்டியது. நாகரிகத்தின் இந்த நிலவறைக்குள்ளும் புரட்சி புகுந்திருந்தது—சபிக்கப்பட்டவர்களின் இந்தப் பிரதேசங்களுக்குள் அது எக்காள முழக்கம் போல வந்து அவர்களது எலும்பறைச் சுவர்களைத் தகர்த்து வீழ்த்திவிட்டது. அதற்கு வெளியே அவர்கள் பாய்ந்தோடினுர்கள்—குருதி கொப்பளிக்கும் கண்களும் சாளைநீர் ஒழுகும் வாய்களும் உருவிய கத்திகளுமாக அல்ல, உண்மையும்

நியாயமும் வெல்லும் என்று கோஷமிட்டுக்கொண்டும் ஒருமைப்பாடு பற்றிய பாட்டுக்களைப் பாடிக்கொண்டும் பதாகைகள்மீது புது உலகின் கோட்பாட்டுச் சொற்களைப் பொறித்துக் கொண்டும்.

நாடுவிட்டோடிகள் மனம் மாறவில்லை

இவை எல்லாம் நாடுவிட்டோடிகளைப் பாதிக்கவே இல்லை. தங்கள் வர்க்கநலன் என்ற கவசத்தை ஆச்சரியத்தின் ஒரு கிரணம்கூடத் துளைத்து உட்புக அவர்கள் விடவில்லை. அவர்களது முந்திய அச்சத்தின் இடத்தில் இப்பொழுது ஏளனச் சொற்கள் வெளிப்பட்டன:

''இதுதான் போல்ஷெவிஸம்! ஜெயில் புள்ளிகளை அது ராஜதந்திரிகள் ஆக்குகிறது. பெரிய காட்சி, இல்லையா? தண்டனைக் கைதிகள் சுரங்கங்களில் கரி தோண்டுவதற்குப் பதிலாக வீதிகளில் அணிவலம் வருகிறார்கள். புரட்சியினால் நமக்குக் கிடைத்த பலன் இதுதான்.''

புரட்சியினால் ஏற்பட்ட மற்ற விஷயங்களை—ஒழுங்கு, கட்டுப்பாடு, நல்லுணர்ச்சி ஆகியவற்றை—நாங்கள் சுட்டிக் காட்டினோம். ஆனால் நாடுவிட்டோடிகளுக்கு அவை பார்வையில் படவில்லை. அவர்கள் அவற்றைப் பார்க்க விரும்பவில்லை.

''இதெல்லாம் இப்போதைக்குத்தான். உற்சாகக் கிளர்ச்சி ஓய்ந்ததும் இவர்கள் மறுபடி திருடவும் குடிக்கவும் கொலை செய்யவும் தொடங்கிவிடுவார்கள்'' என்று நகையாடினார்கள் அவர்கள். இந்த நாடுவிட்டோடிகளின் கருத்துப்படி, அதிகமாய்ப் போனால் கணநேரப் பெருங்களிப்புதான் இது; எங்கள் ரெயில் கண்ணுக்கு மறைந்ததும் இதுவும் மறைந்துவிடும்.

ரெயில் படிகளிலிருந்து முன்னே சாய்ந்து, எங்களுக்கு விடை கொடுப்பதற்காக வீசி ஆட்டப்பட்ட, கரிபடிந்த நூற்றுக்கணக்கான பெரிய கரங்களை நோக்கிக் கையாட்டிப் பிரிவு பெற்றுக் கொண்டோம். அந்தக் காட்சி மீது எங்கள் பார்வை நெடுநேரம் பதிந்திருந்தது. கடுங்கூதலையும் பொருட்படுத்தாமல் இன்னும் வெறுந்தலைகளுடன்

நின்ற ச்செர்ம்காரர்களையும், மாவீரனுடைய கரங்களின் லயமொத்த மேல் கீழ் அசைவையும், "உலகம் முழுவதிலும் உள்ள நமது தோழர்களுக்கு வாழ்த்துக்கள்" என்ற வாசகம் பொறித்த செம் பதாகையையும், ரெயிலை நோக்கி இன்னும் நீட்டப்பட்டிருந்த டஜன்கணக்கான கரங்களையும் கடைசி முறை கண்டோம். அப்புறம் புழுதியிலும் தொலைவிலும் அந்தக் காட்சி மங்கிவிட்டது.

. . . .

ச்செர்ம் நகரில் வேலை செய்து அங்கே புரட்சியின் செயல்பாட்டை ஆழ்ந்து கவனித்துவிட்டு ஜோ ரெடிங் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு டெட்ராய்ட் நகர் திரும்பினார். புரட்சியின் நிலையான விளைவுகள் பற்றி அவர் அறிவித்தார். திருட்டுக்களும் கொலைகளும் அனேகமாக முற்றிலும் நின்றுவிட்டன. உறுமும் விலங்குகள் மனிதர்கள் ஆகிவிட்டன. அப்போதுதான் இரும்புத் தளைகளிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அவர்கள் சோவியத் சைனியங்களின் இரும்புக் கட்டுப்பாட்டுக்குத் தங்களை உட்படுத்திக் கொண்டார்கள். பழைய சட்டத்தின் படி சட்டப் புறம்பானவர்களாக இருந்த அவர்கள் ஒரு புதிய சட்டத்தை உருவாக்கியவர்களும் காப்பாளர்களும் ஆகி விட்டார்கள். தங்களுக்கு இழைக்கப்பட்ட எத்தனையோ அநீதிகளைப் பற்றி நினைந்து ஏங்கியவர்கள் இப்போது உலகில் உள்ள அநீதிகளை ஒழிக்கப் பொறுப்பு ஏற்றுர்கள். தங்கள் ஆற்றல்களைச் செலவழிக்க விரிவான செயல்திட்டங்கள் அவர்களுக்கு இருந்தன. விரிவான வருங்காலக் காட்சிகள் அவர்கள் மனங்களில் ஒளி வீசின.

பணக்காரர்களுக்கும் விசேஷச் சலுகைகள் பெற்றவர்களுக்கும், உல்லாசத் தோட்டங்களில் அமர்பவர்களுக்கும் உயர் வகுப்பு ரெயில் பெட்டிகளில் பயணம் செய்பவர்களுக்கும் புரட்சி என்பது பயங்கரமும் கோரமுமான விஷயம். அது பகை இயேசு. இழிவுபடுத்தவும் மரபு உரிமை மறுக்கவும் பட்டவர்களுக்கோ, "ஏழைகளுக்கு நற்செய்திகளை உபதேசிக்கவும் சிறைப்பட்டவர்களின் விடுதலையைப் பிரகடனம் செய்யவும் காயமடைந்தவர்களைக் குணப்

படுத்தவும்'' வரும் மீட்பாளரான இயேசு கிறிஸ்து போன்றது புரட்சி. ''நாங்கள் உயிரோடு இருக்கிறோம் என்றாலும் நாங்கள் வாழவில்லை. நாங்கள் இறந்தவர்கள் என்றாலும் கல்லறைகளில் இல்லை'' என்று தஸ்தாயேவ்ஸ்க்கியின் தண்டனைக் கைதி இனி முணுமுணுக்க முடியாது. ''இறந்தோர் இல்லத்தில்'' புரட்சி மறு உயிர்ப்பு ஆகும்.

அத்தியாயம் பதினைந்து

விளாதிவஸ்தோக் சோவியத்தும் அதன் தலைவர்களும்

புரட்சியின் எல்லைகள் யாவை?

நகரத் தொழிலாளர்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட இந்தப் புரட்சி மேலும் மேலும் ஆழமாகத் துளைத்துச் சென்று, இன்னும் கீழ்ப் படிவுகளிலிருந்த மக்களைத் தன் ஆதிக்கத்திற்குள் கொண்டுவந்ததை நாங்கள் கண்டிருந்தோம். ச்செர்ம் நகரத் தண்டனைக் கைதிகளை அது தன் வசப்படுத்தியபோது அடிமட்டத்தை எட்டிவிட்டது. செங்குத்தாக இன்னும் கீழே போக அதற்கு இடமில்லை. கிடைமட்டத்தில் எவ்வளவு தூரம் அதனால் எட்ட முடிந்தது? இங்கே, பசிபிக் மாகடற் கரையில் உள்ள தொலைதூர எல்லைப் பகுதிகளில், அங்கே, அட்லான்டிக் மாகடற்கரைப் பிரதேசங்களில் இருப்பதேபோன்ற சக்தியாக அது விளங்கியதா? ருஷ்யாவின் இதயப் பகுதியில் காட்டுவதே போன்ற வலிய நாடித்துடிப்பை இந்த நுனி நீட்சிகளிலும் புரட்சி காட்டுமா?

வடக்குமுகமாகப் பாயும் விரைவற்ற பேராறுகளையும் உரால் மலைத் தொடரையும் தைகாப் பெருங்காட்டையும் ஸ்தெப்பிவெளிகளையும் கடந்து வருகையில் சோவியத்துக்களின் உலகில் நாங்கள் இயங்கினோம். ரெயில்வேத் தொழிலாளர்களும் சுரங்கத் தொழிலாளர்களும் தங்கள் சோவியத்துக்களைப் பற்றிப் பேசினார்கள், குடியானவர்களும் மீனவர்களும் தங்கள் சோவியத்துக்களின் சார்பில் செம்

பதாகைகளுடன் எங்களை வரவேற்ருர்கள். மத்திய சைபீரிய சோவியத்துடனும் தூரக் கிழக்கு சோவியத்துடனும் நாங்கள் கலந்து உரையாடினேம். இந்த ஆமூர் மாவட்டம் முழுவதிலும் சோவியத்துக்கள் பரவிக்கிடந்தன. இப்போது, விளாதிவஸ்தோக்கில் ரெயிலை விட்டு இறங்கியதும், ஏழாயிரம் மைல்களுக்கு அப்பால் பெத்ரோகிராதில் நாங்கள் விட்டு வந்த சோவியத்தின் மறு பிரதியை நாங்கள் கண்டோம்.

ஆறே மாதங்களில் சோவியத் ருஷ்ய மண்ணில் ஆழமாக வேரூன்றி, எல்லா எதிரிகளையும் நெருக்கி அப்புறப்படுத்தி, எல்லாத் தாக்குதல்களின் அதிர்ச்சிக்கும் ஈடு கொடுத்து விட்டு, வடக்கே ஆர்க்டிக் மாகடல் முதல் தெற்கே கருங்கடல் வரையும், அட்லான்டிக் கரைமீதுள்ள நார்வா முதல், பசிபிக்குக்கு உள்ளே நீண்டிருக்கும் கூம்பு முனை மீது அமைந்துள்ள விளாதிவஸ்தோக் வரையும் நெடுகிலும் இப்போது தனியாணை செலுத்தி வந்தது.

விளாதிவஸ்தோக் மலைகள் மேல் கட்டப்பட்டுள்ள நகரம். அதன் தெருக்கள் ஆல்ப்ஸ் மலைப் பாதைகள்போல அவ்வளவு செங்குத்தானவை. ஆயினும் ஒரு அதிகப்படிக் குதிரை பூட்டப்பட்டதும் எங்கள் வண்டி சமமான பலகைகள் பாவிய பெத்ரோகிராத் வீதிகளில் போன்றே விரைவாகப் பாவுகற்கள் மீது கடகடத்துச் சென்றது. ஸ்வெத்லான்ஸ்காயா எனப்படும் பிரதான வீதி மலைகளின் குறுக்காக ஏற்றமும் இறக்கமுமாக மடங்கி மடங்கிச் சென்றிருந்தது. அதன் இரு மருங்குகளிலும் பிரெஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயர்களின் வர்த்தக நிலையங்களும் ''இன்டர்நேஷனல் ஹார்வெஸ்டர்'' நிலையமும் ருஷ்யாவின் புது ஆட்சியாளர்களின்—தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத், போல்ஷெவிக் கட்சியின் நகரக் கமிட்டி ஆகியவற்றின்—கட்டிடங்களும் இருந்தன.

சுற்றிலும் இருந்த எல்லா மலைகளின் மேலிருந்தும் முறைத்தன திண்ணிய கோட்டைகள். ஆனல் அவை புருமாடங்கள் போலத் தீங்கற்றவை. யுத்தத்தின் தொடக்க நாட்களிலேயே அவற்றின் அரண் காப்புக்கள் அகற்றப்பட்டு விட்டன. அவற்றில் இருந்த பெரிய பீரங்கிகள் கிழக்

குப் போர்முனைக்கு அனுப்பப்பட்டுவிட்டன. தற்காப்பு அற்ற இந்த நகருக்கு உள்ளே ''தங்கக் கொம்பு'' என அழைக்கப்படும் நீர் நாக்கு துருத்தியிருக்கிறது. அழைப்பு இல்லாமலே இங்கே வந்து நங்கூரம் பாய்ச்சி நின்றன நேச நாட்டுக் கப்பல்கள். நீண்ட சைபீரியப் பயணத்தின் முடிவில் இந்தக் கப்பல்களின் கொடிகள் நாடுவிட்டோடி களின் கண்களுக்கு விருந்தாக இருந்தன. அப்பாடா என்று பெருமூச்சு விட்டு இங்கே அமைதியாகத் தங்கினார்கள் அவர் கள். விரைவில் புரட்சி ஓய்ந்துவிடும், அப்போது திரும்பிப் போய் ருஷ்யாவில் தங்கள் பழைய வாழ்க்கையை மீண்டும் நடத்தலாம் என அவர்கள் எண்ணினார்கள்.

நாடுவிட்டோடிகளுக்கு அடைக்கல நகரம்

இந்த நகரிலே பல வகையான பழங்காலப் பிரதிநிதி கள் கூட்டமாக நிறைந்திருந்தார்கள்; உரிமை பறிக்கப் பட்ட நிலப்பிரபுக்கள் தங்கள் எஸ்டேட்டுக்களையும் பணி யாளர் கும்பலையும் சென்ற நாட்களின் உழைப்பற்ற விருந் துக் கொண்டாட்டங்களையும் பற்றிக் கனவு கண்டுகொண் டிருந்தார்கள்; இராணுவ அதிகாரிகள் பழங்கால ஒழுங்குக் கட்டுப்பாட்டை வருணித்துக் கொண்டிருந்தார்கள்—அதி காரிகளைக் கண்டதுமே சிப்பாய்கள் சாக்கடையில் குதித்து விடுவார்களாம், முகத்தில் அடிக்கப்படுகையில் விரைப் பாகச் சல்யூட் செய்தவாறு நிற்பார்களாம்; கள்ள வியாபாரி கள் முந்திய இன்ப நாட்களில் 50, 100 ,500 சதவிகிதம் வரை போர்க்காலக் கொள்ளைலாபம் அடித்ததையும் தேச பக்திப் பாசாங்கு செய்ததையும் எண்ணி, அந்த நாட்கள் திரும்பி வர வேண்டுமென்று ஏங்கினார்கள். பொன்மயமான அந்தப் பெரு நிதியங்கள் எல்லாம் போய்விட்டன. இரா ணுவ அதிகாரிகளின் தான்தோன்றி அதிகாரம், நிலப்பிரபுக் களின் கனவுகள் ஆகியவற்றோடு கூடவே இவற்றையும் தகர்த்து நொறுக்கி விட்டது புரட்சி.

வெளிச்செல் துறைமுகம் என்ற வகையில் விளாதிவஸ் தோக் வெளியேறும் ருஷ்ய நாடுவிட்டோடிகளால் நிறைந் திருந்தது. உள்புகும் துறைமுகம் என்ற வகையில் உள்ளே

வந்த நேச நாட்டு முதலாளிகளால் அது நிறைந்திருந்தது. அப்பாலிருந்த பொன்வள நாட்டுக்குப் புகுவாயிலாக விளங்கியது அது. பயன்படுத்தப்படாத அளவற்ற இயற்கைச் செல்வங்களும் உழைப்புச் சக்தியும் செறிந்த சைபீரியா உலகின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் மூலதனத்தின் பிரதிநிதிகளைக் காந்தம் போலக் கவர்ந்து இழுத்தது. லண்டனிலிருந்தும் தோக்கியோவிலிருந்தும், பாரிஸிலிருந்தும் நியூயார்க்கிலிருந்தும், தகத்தகாயமான வாய்ப்புக்களால் ஈர்க்கப்பட்டுத் திரளாக இங்கே வந்தார்கள் அவர்கள்.

ஆனால் மீன் துறைகள், தங்கச் சுரங்கங்கள், காடுகள் ஆகியவற்றுக்கும் தங்களுக்கும் நடுவே ஒரு பெருந் தடைச் சுவரை அவர்கள் கண்டார்கள். சோவியத்தே அவர்கள் கண்ட தடைச்சுவர். ருஷ்யத் தொழிலாளி ருஷ்ய முதலாளியால் சுரண்டப்பட மறுத்துவிட்டான். அதே சமயம் தனது குருதியும் வியர்வையும் வெளிநாட்டு நிதியதிபர்களின் நன்மைக்காகக் கொழுத்த லாபப் பங்குகளாக மாற்றப்படுவதை அனுமதிக்கவும் அவன் மறுத்துவிட்டான். எல்லாச் சுறண்டுவோருக்கும் காட்டப்பட்ட இந்த எதிர்ப்பின் கருவியாக விளங்கியது சோவியத்.

ருஷ்ய பூர்ஷ்வா வர்க்கத்துக்கு எதிர்ப்பட்ட அதே தடைகளைக் கண்டதும் நேசநாட்டுச் சுறண்டுவோரும் அதே போன்ற எதிர் விளைவைக் காட்டினார்கள். சோவியத்தும் அதன் உறுப்பினர்களும் நரகப் பிறவிகள் என்று கருதிய தங்கள் ருஷ்யச் சோதரர்களின் திட்டுக்களையும் பிதற்றல்களையும் அவர்கள் பரிவுடன் செவியேற்றார்கள்.

நேசநாட்டுக் கான்ஸல்களும் இராணுவ அதிகாரிகளும் கிறிஸ்தவ இளைஞர் சங்கத்தினரும் வேவுத்துறையினரும் இந்த வட்டாரத்திலேயே பெரும்பாலும் வசித்தார்கள், கலந்து பழகினார்கள், இதன் உறுப்புக்களாக விளங்கினார்கள். இந்த வட்டாரத்திலிருந்து அவர்கள் அரிதாகவே வெளியேறினார்கள். புரட்சிகர ருஷ்யாவில் இருந்த போதிலும் புரட்சியுடன் நேரான தொடர்பு கொள்ளாமலே இருந்தார்கள் அவர்கள். இது இயல்பானதே. குடியானவர்களும் தொழிலாளர்களும் பிரெஞ்சோ, ஆங்கிலமோ, நல்லுடை அணியும் பாங்கோ, உணவு தருவிக்கும் முறையோ அறியாதவர்கள் ஆயிற்றே.

நேசநாட்டுச் சமுதாயத்தினர் ''தகவல்'' இல்லாமல் இருந்தார்கள் என்று இதற்கு அர்த்தம் அல்ல. ருஷ்ய பூர்ஷ்வா நண்பர்களிடமிருந்தும் சொந்தத் தப்பெண்ணங்களி லிருந்தும் 'தகவல்' அவர்களுக்குக் கிடைத்து வந்தது. மிகவும் நேர்முகமான, வறட்டுச் சூத்திரத் தன்மை கொண்ட இந்தத் தகவல் பின்வருவன போன்ற வாக்கியங்களில் பரவிவந்தது:

''சோவியத் பிரதானமாக முன்னுள் குற்றவாளிகளால் ஆனது.''

''போல்ஷெவிக்குகளில் ஐந்தில் நான்கு பெயர் யூதர் கள்.''

''இந்தப் புரட்சிக்காரர்கள் சாதாரணக் கொள்ளைக் காரர்கள், அவ்வளவுதான்.''

''செஞ்சேனைகள் கூலிப் பட்டாளங்கள், முதல் துப் பாக்கி வெடித்ததுமே அவை ஓட்டமெடுக்கும்.''

''இருளடைந்த, அறிவற்ற பொதுமக்கள் தங்கள் தலைவர்களால் ஆட்டிவைக்கப்படுகிறுர்கள். தலைவர்களோ, ஊழல் நிறைந்தவர்கள்.''

''ஜாரிடம் குறைகள் இருந்திருக்கலாம், ஆனுல் ருஷ் யாவுக்கு இரும்புக் கரம் தேவை.''

''சோவியத் ஆட்டங்கண்டுவிட்டது. அதிகமாய்ப் போனுல் இரண்டு வாரங்களுக்கு மேல் அது நிலைக்காது.''

மிக மிக மேலெழுந்தவாரியான விசாரணைகூட இந்த வாக்கியங்களின் பொய்மையை அம்பலப்படுத்தியிருக்கும். எனினும், இவற்றைக் கிளிப்பிள்ளை போல ஒப்பிப்பவன் எவனும் ஆழ்ந்த உள்நோக்கு உடையவனுக மதித்துப் பாராட்டப்பட்டான்.

''லெனினையும் த்ரோத்ஸ்கியையும் பற்றி மற்றவர்கள் என்ன சொல்கிறுர்கள் என்பது எனக்கு ஒரு பொருட்டே அல்ல, அவர்கள் ஜெர்மன் உளவாளிகள் என்பதை நான் அறிவேன்'' என்று சேர்த்துச் சொல்லக் கூடியவன் உணர்ச்சித் துணைவன், ஜனநாயகத்தின் உண்மையான படைவீரன் எனப் பாராட்டப் பெற்றுன்.

ஒளியை நேர்மையாகத் தேடியவர்கள் சிலர் இருக்கத் தான் செய்தார்கள். ஆசியக் கடற்படையணியின் சமூக

மான கமாண்டர் விளைவைப் பற்றி அஞ்சாமல் என்னைத் தமது கொடிக்கப்பல் ப்ரூக்ளினில் மாலை உணவு கொள்ள அழைத் தார். பொய்களின் வளையத்தை உடைத்து வெளியேற அமெரிக்கக் கான்ஸலும் கடிதாக முயன்றார். எனினும் வாஷிங்டனிலிருந்து உத்தரவை எதிர்பார்த்தவாறு என் பாஸ்போர்ட்டுக்கு விஸா அளிப்பதில் அவர் தாமதம் செய்தார். ஆதலால் நான் ஏழு வாரங்கள் விளாதிவஸ்தோக்கிலேயே சுணங்க நேர்ந்தது.

தொழிலாளர்கள், குடியானவர்கள் பால் எனது பற்று தலை நான் மேலும் மேலும் வெளிப்படையாகத் தெரிவிக் கவே, பூர்ஷ்வாக்கள் என் மேல் வர வர அதிகப் பகைமை காட்டினார்கள். சோவியத்துடன் நெருங்கிய தொடர்பு கொள்வது எனக்குக் கட்டாயம் ஆகிவிட்டது. அதன் வேலை யை அவதானிக்கவும் அதில் பங்கு கொள்ளவும் அதன் உறுப்பினர்களில் பலரை நண்பர்களாகக் கருதவும் இதனால் எனக்கு வாய்ப்பு கிடைத்தது.

சில மாணவர்கள் சோவியத்துக்களுக்கு உதவுகிறார்கள்

இவர்களில் முதல்வர் கான்ஸ்தாந்தீன் ஸுஹானவ். மார்ச் புரட்சி தொடங்கிய போது அவர் பெத்ரோகிராத் பல்கலைக் கழகத்தில் இயற்கை வரலாற்று மாணவராக இருந்தார். மென்ஷெவிக்காக அவர் உடனே விளாதிவஸ் தோக் திரும்பினார். கர்னீலவ் துர்ச்சாகசத்துக்குப் பிறகு அவர் உளமார்ந்த போல்ஷெவிக் ஆனார். உருவத்தில் சிறி யவர் ஆயினும் ஆற்றலில் மிகப் பெரியவர் அவர். அல்லும் பகலும் கடுமையாக உழைத்தார். சோவியத் கூடு மிடத்தின் சிறு மாடி அறை ஒன்றில் எப்போதாவது சற்று நேரம் கண்ணயர்வார். நொடிப் போதில் குதிரையேற் றத்துக்கோ டைப் அடிப்பதற்கோ எப்போதும் தயாராயிருப் பார். வழக்கமாக அவருடைய முகம் எண்ணங்களில் ஆழ்ந்திருப்பதற்கு அடையாளமாக விரைப்பாக இருக்கும். ஆனால் அடிக்கடி அவர் மற்றவர்களுக்கும் தொற்றிக்கொள் ளும்படி அதிர்வெடிச் சிரிப்பு சிரிப்பார். அவருடைய பேச்சு

அழுத்தந்திருந்தமானது, சந்தர்ப்பம் நேர்ந்தால் அனல் வீசுவது. ஆனால் வெறுமே பொறி பறக்கும் ஆசாமி விளாதிவஸ்தோக் போன்ற வெடிமருந்துக் கிட்டங்கிக்குப் பொருந்தியிருக்கவே மாட்டான். பகைவர்களால் தந்திரமாக மாட்டிவிடப்பட்டிருந்த எத்தனையோ சங்கடமான நிலைமைகளிலிருந்து சோவியத்தை அவர் தமது சாமர்த்தியத்தாலும் நைச்சியத்தாலும் விடுவித்தார்.

தமது மிகக் கடும் அரசியல் எதிரிகள் உட்பட எல்லோராலும் மதிக்கப்பட்ட ஸுஹானவ் சோவியத்தின் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருந்தார். பஸிபிக் பிரதேசத்திற்குள்ளும் கிழக்கு உலகிலும் போல்ஷெவிக் இயக்கம் பாய்ச்சியிருந்த ஈட்டியின் கூர்முனையாக விளங்கினார் அவர். இருபத்து நான்கே வயதான ஸுஹானவ் முதிர்ந்த ராஜதந்திரியின் அனுபவ சாமர்த்தியங்களைக் கூடக் கசக்கிப் பிழிந்துவிடக்கூடிய அவ்வளவு சிக்கலான கடமைகளை நிறைவேற்றி வந்தார்.

ஆனால் ஆட்சிக்கலை கான்ஸ்தாந்தீன் ஸுஹானவின் இரத்தத்திலேயே ஊறியிருந்தது. அவருடைய தகப்பனார் பழைய அரசாங்கத்தில் ஓர் அதிகாரி. புரட்சிக்காரர்களைக் கைது செய்யும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஜாருக்கு எதிராகச் சூழ்ச்சி செய்தவர்களில் தமது சொந்த மகனும் மகன் கான்ஸ்தாந்தீனும் இருந்ததை அவர் கண்டார். கான்ஸ்தாந்தீன் கைது செய்யப்பட்டார். மனக் கசப்பும் சிடுசிடுப்பும் கொண்ட தந்தையார், தீர்ப்பு மன்ற மேஜையின் மறு புறம் தன் மகனை நிறுத்தி விசாரித்தார்.

மாட்சிமைதங்கிய பேரரசர் இரண்டாம் நிக்கொலாயின் அருளால் மாஜிஸ்டிரேட் ஆசனத்தில், தமது மேடைக்குப் பின் எதேச்சாதிகார அரசின் வெள்ளையும் நீலமும் சிவப்பும் கொண்ட கொடி இலக வீற்றிருந்தார் தந்தை ஸுஹானவ். நாங்கள் விளாதிவஸ்தோக் சேர்ந்தபோது புரட்சியின் செங்கொடி ஜாரின் கொடியை அகற்றி விட்டிருந்தது. எனினும் நீதித் தீர்ப்பு ஆசனத்தில் ஒரு ஸுஹானவ் அமர்ந்திருக்கக் கண்டோம். இம்முறை அவ்வாறு வீற்றிருந்தவர் மைந்தர் கான்ஸ்தாந்தீன் ஸுஹானவ், மாட்சிமை தங்கிய குடியரசர்கள் ஆகிய, ருஷ்ய சோவியத் குடியரசின் தொழி

லாளி, குடியானவ, கடற்படைவீரக் குடிக்களின் அருளால் விளாதிவஸ்தோக் சோவியத்தின் தலைவராக இப்போது பதவி வகித்தவர்.

புரட்சியின் விந்தையான தலைகீழ் மாற்றம்! இளம் ஸுஹானவ் ஜாரின் ஆட்சிக்கு எதிராகச் சதியாலோசனை செய்கையில் பிடிபட்டது போலவே இப்போது முதிய ஸுஹானவ் சோவியத் ஆட்சிக்கு எதிராகச் சூழ்ச்சி செய்கையில் கண்டுகொள்ளப்பட்டார். மீண்டும் தீர்ப்பு மன்றத்தில் இருவரும் எதிர்ப்பட்டார்கள். மகனுக்கு எதிராகத் தகப்பன், புரட்சிக்காரனுக்கு எதிராகப் புரட்சி எதிர்ப்பாளன், சோஷலிஸ்டுக்கு எதிராக முடியரசுவாதி. ஆனால் இம்முறை மகன் நீதிபதி, தகப்பன் குற்றவாளி. கான்ஸ்தாந்தீன் ஸுஹானவ் தமது புரட்சிக் கடமைகளில் ஒரு தடவை மட்டுமே பிறழ்ந்தார். தம் தந்தையைச் சிறையில் இட அவர் மறுத்துவிட்டார்!

ஸுஹானவின் இடையறாத துணைவனாக இருந்தான் மாணவன் ஸிபீர்த்ஸேவ். மூன்று மாணவிகளும் இருந்தார்கள். போல்ஷெவிக் கட்சி, நிதி இலாக்கா, குடியானவனும் தொழிலாளியும் என்ற சோவியத் பத்திரிகை ஆகியவற்றின் செக்ரெட்டரிகளாக இருந்த இம் மாணவிகளின் பெயர்கள் முறையே ஸோயா, தான்யா, ஸோயா என்பவை ஆகும். மூவரும் முறையே படையதிகாரி, பாதிரி, வர்த்தகன் ஆகியோரின் புதல்வியர். தங்கள் பூர்ஷ்வா வாழ்க்கையை அவர்கள் முற்றும் துறந்து விட்டார்கள். பாட்டாளிகளுடன் அவர்கள் ஒன்றிவிட்டார்கள். பாட்டாளிகளது போன்ற வருவாயுடன் பாட்டாளிகள் போன்றே சிந்தித்தார்கள். பாட்டாளிகள் போலவே அவர்கள் வாழ்ந்தார்கள். அவர்களது இருப்பிடம் இரண்டே சாதாரண அறைகள் கொண்டது. இதை அவர்கள் ''கம்யூன்'' என்று அழைத்தார்கள். அவர்கள் மஞ்சங்களாகப் பயன்படுத்தியவை சுருள் கம்பிகளுக்குப் பதில் பலகைகள் மேல் வைக்கோல் பற்றைகள் பரப்பிய படைவீரர் கட்டில்களையே.

பரம்பரை ருஷ்ய மாணவர்கள் பற்றிய வருணனைக்கு இந்த மாணவர்களும் பொருந்தினர்கள். ஒரு நாள் இரவு ருஷ்ய மொழியில் பேசும் கடும் பிரயாசையால் என் நாவும்

மூளையும் களைத்துச் சோர்ந்துவிட்ட போது ஸிபீர்த்ஸேவ் சொன்னான்: ''நாங்கள் எல்லோரும் பல்கலைக் கழக மாண வர்கள். எங்களால் லத்தீன் மொழியில் பேச முடியும்!'' எத்தனை அமெரிக்க மாணவர்களால் தங்கள் பட்டச் சான் றிதழ்கள் மீதுள்ள லத்தீன் சொற்களைக்கூடப் படிக்க முடியும்? இந்த ருஷ்ய மாணவர்களோ லத்தீன் மொ ழியில் பேசியது மட்டுமின்றி, லத்தீன் செய்யுட்கள் இயற்றி மதிப்புரைக்காக என்னிடம் காட்டினார்கள். நான் தந்திரமாகப் பின்வாங்கி ருஷ்ய மொழிக்கே வந்து விட் டேன்!

சாதாரண மக்களில் இருந்து தோன்றிய தலைவர்கள்

இந்த மாணவர்களைத் தவிர்த்து விளாதிவஸ்தோக் சோவியத்தின் உறுப்பினர்கள் தொழிலாளர்கள்—மெக்கா னிக்குகள், துறைமுகத் தொழிலாளர்கள், ரெயில்வேத் தொழிலாளர்கள் முதலியோர்தாம். ஆனால் அவர்கள் ருஷ்யத் தொழிலாளர்கள். சம்மட்டியையும் அரிவாளையும் கோடரியையும் கையாள்கையிலேயே மூளைகளையும் பயன் படுத்தியவர்கள். இதன் பொருட்டு ஜாரின் கொடுங் கரம் அவர்களைத் தாக்கியது. சிலர் சிறையில் இடப்பட்டார்கள், மற்றவர்கள் உலகெங்கும் சுற்றித்திரியும்படி விடப்பட்டார் கள்.

புரட்சியின் அழைப்பைக் கேட்டதும் வெளிநாடு களிலிருந்து அவர்கள் திரும்பி வந்திருந்தார்கள். ஊத்கின், இயோர்டான் இருவரும் ஆஸ்திரேலியாவிலிருந்து வந்தார் கள், ஆங்கிலம் பேசினார்கள். நேப்பிள்ஸ் நகரிலிருந்து திரும்பி வந்த அன்தோனவ் இத்தாலிய மொழி பேசினான்.

மேல்னிக்கவ், நிக்கீபரவ், ப்ரோமீன்ஸ்கிய், மூவரும் தங்கள் சிறை அறைகளிலிருந்து பிரெஞ்சு மொழி பேசியவாறு வெளி வந்தார்கள். இம்மூவரும் தங்கள் சிறைச்சாலையைப் பல்கலைக் கழகமாக மாற்றி விட்டார் கள். கணிதத்தில் இவர்கள் த்னித்தேர்ச்சி பெற்றிருந் தார்கள். இப்பொழுது கலனத்தில் நிபுணர்களாக விளங்கிய

இவர்கள், ஒரு காலத்தில் புரட்சிக்குத் திட்டம் இட்டது போலவே இப்போது கலன முறையில் திட்ட வரைப்படங்கள் வரைந்தார்கள்.

சிறையில் ஏழு ஆண்டுகள் அவர்கள் ஒன்ருகச் சேர்ந்து வாழ்ந்திருந்தார்கள். விடுதலை அடைந்ததும் தனித்தனி வழிகளில் பிரிந்து போக அவர்களுக்கு வாய்ப்பு கிடைத்தது. ஆனல் சிறையில் கழித்த கடினமான நீண்ட ஆண்டுகள் அவர்களது அவயவங்களை இரும்புச் சங்கிலிகள் இறுக்கியதைவிட வலிவாக அவர்களது இதயங்களைப் பிணித்து விட்டன. சாவில் அவர்கள் ஒன்ருக இருந்தார்கள். இப்போது வாழ்வில் அவர்களால் பிரிந்திருக்க முடியவில்லை. ஆனல் கருத்துக்களில் அவர்கள் பெரிதும் பிரிவுபட்டிருந்தார்கள், எதிரெதிரான தங்கள் கொள்கைகளை மற்றவர்களுக்குப் பயங்கர வன்மையுடன் விளக்கினுர்கள். ஆயினும் சித்தாந்தத்தில் எவ்வளவுதான் விலகிப் பிரிந்து சென்ருலும் செயலில் அவர்கள் ஒன்றித்து ஈடுபட்டார்கள். மேல்னிக்கவின் கட்சி அப்போது சோவியத்தை ஆதரிக்கவில்லை, ஆனல் அவனுடைய இரு தோழர்களும் ஆதரித்தார்கள். எனவே அவன் அவர்களைப் பின்பற்றி சோவியத்திற்குத் தபால்-தந்திக் கமிஸாராகத் தொண்டு செய்தான்.

மேல்னிக்கவின் ஆன்மாவில் பெரும் போராட்டம் ஒன்று நிகழ்ந்திருந்தது. விளைவாக அவன் முகத்தில் ஆழ்ந்த வரிகள் விழுந்திருந்தன, கண்களில் வேதனைக் குறிகள் ஆழமாகப் பதிந்திருந்தன. ஆனுள் அந்த முகம் வெற்றியையும் ஆழ்ந்த சாந்தத்தையும் பறை சாற்றியது. அவனது விழிகள் பளிச்சிட்டன, உதடுகளில் எப்போதும் புன்னகை தவழ்ந்தது. நிலைமை முன்னிலும் மோசமாகும்போது அவன் முன்னிலும் அதிகமாகப் புன்னகை செய்தான்.

அறிவுஜீவிகளிடமிருந்து சோவியத்துக்குக் கிடைத்த உதவி சொற்பமே. தொழிலாளர்கள் தங்கள் செயல்திட்டத்தை அடியோடு மாற்றிக் கொள்ளும் வரையில் சோவியத்தைப் பகிஷ்காரம் செய்வதாக அவர்கள் அறிவித்தார்கள். வெளிப்படையான பொதுக் கூட்டத்தில் மறைமுக நாசவேலைக் கொள்கையை அவர்கள் பிரகடனம் செய்தார்கள்.

ஒரு சுரங்கத் தொழிலாளி கசப்பும் ஏளனமும் பொங்கும் சொற்களில் சட்டெனப் பதிலுக்குத் தாக்கினுன்: ''உங்கள் அறிவையும் திறமையையும் பற்றிப் பெருமை கொள்கிறீர்கள் நீங்கள்! ஆனுல் இவை உங்களுக்கு எங்கிருந்து கிடைத்தன? எங்களிடமிருந்து. எங்கள் வியர்வையையும் குருதியையும் விலையாகச் செலுத்தி இவற்றை நீங்கள் பெற்றீர்கள். பள்ளிக்கூடத்திலும் பல்கலைக் கழகத்திலும் நீங்கள் கல்வி பயின்றுகொண்டிருக்கையில் நாங்கள் சுரங்கங்களின் இருட்டிலும் ஆலைகளின் புகையிலும் முதுகொடிய உழைத்துக் கொண்டிருந்தோம். இப்போது எங்களுக்கு உதவும்படி நாங்கள் உங்களைக் கேட்டுக்கொள்கிறோம். 'உங்கள் செயல்திட்டத்தை விட்டுவிட்டு எங்கள் செயல்திட்டத்தை மேற்கொள்ளுங்கள், அப்போதுதான் உங்களுக்கு உதவுவோம்' என்கிறீர்கள் நீங்கள். 'நாங்கள் எங்கள் செயல்திட்டத்தைக் கைவிட மாட்டோம். நீங்கள் இல்லாமலே சமாளித்துக்கொள்வோம்' என்பதே நாங்கள் உங்களுக்கு அளிக்கும் பதில்.''

இந்தத் தொழிலாளிகளுக்குத்தான் எவ்வளவு அபாரமான துடுக்கு! பிரான்சு போன்ற பரப்பும் இந்தியா போன்ற இயற்கை வளமும் கொண்ட ஒரு பிரதேசத்தின், சூழ்ச்சி செய்யும் கணக்கற்ற ஏகாதிபத்தியவாதிகளால் வளைத்துக் கொள்ளப்பட்டு, ஆயிரமாயிரம் கடமைகள் எதிர்நிற்கும் பிரதேசத்தின் ஆட்சி நிர்வாகத்தை, அரசாங்க அலுவல்களில் அனுபவம் அற்ற கற்றுக்குட்டிகளான இவர்கள் தம் கைகளில் எடுத்துக் கொண்டுவிட்டார்கள்!

அத்தியாயம் பதினுறு

ஸ்தல சோவியத்தின் வேலை முறை

விளாதிவஸ்தோக் சோவியத் ஒரு சொட்டு இரத்தம் கூடச் சிந்தாமல் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டிருந்தது. அது எளிதாக இருந்தது. ஆனுல் இப்பொழுது அதற்கு எதிர்ப்பட்டது மிகக் கடுமையும் சிக்கலுமான வேலை.

முதலாவது சமாளித்துத் தீரவேண்டியிருந்த பிரச்சினை பொருளாதாரப் பிரச்சினை. யுத்தத்தினுலும் புரட்சியின் காரணமாகவும் இயந்திரத்தொழில் சீர்குலைந்திருந்தது, படைவீரர்கள் வீடு திரும்பியது, தொழிலதிபர்களின் கதவடைப்புக்கள், எல்லாவற்றின் விளைவாகவும் தெருக்கள் வேலை இல்லாதவர்களால் நிறைந்தன. வெட்டியாகச் சுற்றும் இந்த ஆட்களால் நேரக்கூடிய ஆபத்தைக் கண்டுகொண்ட சோவியத், தொழிற்சாலைகளைத் திறக்கத் தொடங்கிற்று. நிர்வாகம் தொழிலாளர்களிடமே ஒப்படைக்கப்பட்டது. கடன் சோவியத்தால் வழங்கப்பட்டது.

தலைவர்கள் தாமாகவே விரும்பித் தம் சம்பளங்களை அளவுக்குள் வைத்துக் கொண்டார்கள். மத்திய ருஷ்ய சோவியத்தின் ஆணைப்படி எந்த சோவியத் அதிகாரியினதும் அதிகப்படிச் சம்பளம் மாதம் 500 ரூபிள்களாகத் தீர்மானிக்கப்பட்டது. எனினும் தூரக் கிழக்கில் வாழ்க்கைச் செலவு குறைவு என்பதைச்சுட்டிக்காட்டி விளாதிவஸ்தோக் கமிஸார்கள் தங்கள் சம்பளங்களை மாதம் 300 ரூபிள்களாகக் குறைத்துக்கொண்டார்கள். அதன் பிறகு அதிகச் சம்பளம் பெறும் அடங்கா விருப்பம் யாருக்காவது ஏற்பட்டால், ''நீ என்ன, லெனினையும் ஸூஹானவையும் விட அதிகச் சம்பளம் வேண்டும் என்கிருயா?'' என மற்றவர்கள் அவனிடம் கேட்பது வழக்கமாகி விட்டது. இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடிவதில்லை.

இயந்திரத் தொழிலை சோவியத் ஒழுங்கமைக்கிறது

தொழிற்சாலைகள் தங்கள் கைகளுக்கு வந்ததும் தொழிலாளர்களின் உளப்பாங்கில் மாறுதல் ஏற்பட்டது. கேரென்ஸ்கிய் ஆட்சிக் காலத்தில் கண்டிப்பு அற்ற மேஸ்திரியையே தேர்ந்தெடுப்பது தொழிலாளர்களின் போக்காக இருந்தது. தங்கள் சொந்த அரசாங்கமான சோவியத்தின் ஆளுகையில் தொழிற்கூடங்களில் ஒழுங்குக் கட்டுப்பாட்டை நிலைநாட்டி உற்பத்தியை அதிகரிக்கும் மேஸ்திரியை அவர்கள் தெரிந்தெடுத்தார்கள். தூரக்கிழக்கு சோவியத்

தலைவர் கிராஸ்னஷ்சோக்கவ் என்பவரை நான் முதல் முறை சந்தித்த பொழுது அவர் மனச்சோர்வு கொண்டிருந்தார்.

''பூர்ஷ்வாக்களின் மறைமுக நாச வேலைக்கு எதிராக நான் அவர்களிடம் ஒரு வார்த்தை சொன்னால் தொழிலாளர்களிடம் அவர்களது ஊக்கக் குறைவைக் கண்டித்துப் பத்து வார்த்தைகள் சொல்கிறேன். ஆயினும் மாறுதல் வந்துகொண்டிருக்கிறது என்று நம்புகிறேன்'' என்றார் அவர்.

1918, ஜூன் மாத முடிவில் நான் அவரைக் கண்ட போது அவர் சந்தோஷ மனநிலையில் இருந்தார். மாறுதல் வந்து விட்டது. ஆறு தொழிற்சாலைகள் முன் எப்போதையும் விட அதிகமாக உற்பத்தி செய்வதாக அவர் கூறினார்.

''அமெரிக்கன் வர்க்ஸ்'' என்ற தொழிற்சாலையில் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருந்து அனுப்புப்பட்ட ரெயில் பெட்டிச் சக்கரங்களும் அடிச்சட்டங்களும் பிரேக்குகளும் இணைத்துப் பொருத்தப்பட்டன, பின்பு ரெயில் பெட்டிகள் டிரான்ஸ் சைபீரிய ரெயில்வே மூலம் வெளியூர்களுக்கு அனுப்பப்பட்டன. இந்தத் தொழிற்கூடங்கள் தொல்லையின் விளைநிலங்களாக விளங்கின. ஒன்றன் பின் ஒன்றாகத் தொந்தரவுகள் அவற்றில் ஏற்பட்ட வண்ணமாக இருந்தன. சம்பளப் பட்டியலில் இருந்த 6,000 தொழிலாளர்கள் நாள் ஒன்றுக்குப் 18 ரெயில் பெட்டிகள் மட்டுமே தயாரித்துக்கொண்டிருந்தார்கள். சோவியத் கமிட்டி தொழிற்சாலையை மூடிவிட்டு, தொழிற்கூடங்களைச் சீரமைத்துத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை 1,800 ஆகக் குறைத்து விட்டது. அடிச்சட்ட இணைப்புத் தொழிற்கூடத்தில் முன்பு இருந்த 1,400 பெயருக்குப் பதிலாக இப்போது 350 பெயர் மட்டுமே இருந்தார்கள். எனினும் தொழிலாளர்களே புகுத்திய சுருக்கு வழிகளின் உதவியால் அந்தத் தொழிற்கூடத்தின் உற்பத்தி அதிகமாக்கப்பட்டது. புதிய சம்பளப் பட்டியலில் இருந்த 1,800 ஆட்கள் மொத்தமாக இப்போது நாள் ஒன்றுக்குப் 12 பெட்டிகள் தயாரித்தார்கள்—அதாவது ஒவ்வொரு தொழிலாளியினதும் உற்பத்தித் திறன் இரு மடங்குக்கு மேல் ஆகிவிட்டது.

தொழிற்கூடங்களை நோக்கியிருந்த குன்றுகள் மீது ஒரு

நாள் நான் ஸுஹானவுடன் நின்று கொண்டிருந்தேன். பள்ளத்தாக்கிலிருந்து வந்த, தூக்கி இயந்திரங்களின் கண கணப்பையும் சாய்வுச் சம்மட்டிகளின் தடால் ஓசையையும் உற்றுக்கேட்டுக் கொண்டிருந்தார் அவர்.

''உங்கள் காதுகளுக்கு இந்த ஓசை இன்னிசையாகப் படுகிறது போலும்'' என்றேன்.

''ஆமாம். பழைய புரட்சிக்காரர்கள் வெடிகுண்டு களைக் கொண்டு ஓசை கிளப்பினார்கள். இது, புதிய சமூக அமைப்பை நிறுவும் நவீனப் புரட்சிக்காரர்களின் ஓசை'' என்றார் அவர்.

சோவியத்தின் மிகப் பலத்த கூட்டாளியாக விளங்கி யது சுரங்கத் தொழிலாளர் யூனியன். வேலை இல்லாதவர் களை 50 பெயரும் 100 பெயரும் கொண்ட சிறு சோவியத்துக் களாக அது ஒழுங்கமைத்து ஆமூர் என்னும் பேராற்றின் கரைகளை அடுத்த சுரங்கங்களுக்கு அனுப்பியது. இந்தத் தொழில் முயற்சிகள் பெரிதும் வெற்றிகரமாக இருந்தன. ஒவ்வொரு தொழிலாளியும் 50 முதல் 100 ரூபிள்கள் வரை பெறுமானம் உள்ள தங்கத்தை நாள்தோறும் அரித்து எடுத்தான். சம்பளப் பிரச்சினை கிளம்பியது. ''ஒவ்வொ ருவனுக்கும் அவனது உழைப்பின் உற்பத்தி முழுவதும்'' என்ற கோஷத்தை ஒரு சுரங்கத் தொழிலாளி தேடிக்கண்டு எழுப்பினான். சுரங்கத் தொழிலாளிகளால் அது உடனே விருப்புடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அடிப்படையான இந்த சோஷலிஸக் கோட்பாட்டின்பால் தங்கள் பற்றை அவர்கள் பறை சாற்றினார்கள். இதைக் கைவிடுவதற்கு எந்தக் காரணத்தை முன்னிட்டும் ஒருப்பட மாட்டோம் என்றார்கள் அவர்கள்.

சோவியத்தோ வேறு கருத்து கொண்டிருந்தது. எனவே முட்டுக்கட்டை நிலை ஏற்பட்டது. தகராறைக் குண்டு களாலும் துருப்புக்களாலும் தீர்த்துக் கொள்ளும் வரலாற்று வழி வந்த முறையைக் கையாள்வதற்குப் பதிலாகத் தொழிலாளர்கள் சோவியத் மன்றத்தில் விவாதித்து அதைத் தீர்த்துக் கொண்டார்கள். சோவியத்தின் தர்க்கத் துக்குச் சுரங்கத் தொழிலாளர்கள் பணிந்தார்கள். அவர் களுடைய சம்பளம் நாளுக்குப் பதினைந்து ரூபிள்கள் எனத்

தீர்மானிக்கப்பட்டது. உபரி உற்பத்திக்கு போனஸ் வழங்குவதென்று முடிவு செய்யப்பட்டது. சற்று நேரத்தில் இருபத்தாறு பூட்கள் (ஒரு பூட் 36 பவுண்டுகள் கொண்டது) தங்கம் தலைமை அலுவலகத்தில் குவிந்துவிட்டது. இந்தச் சேமிப்பை ஈடாகக் கொண்டு சோவியத் காகித நாணயம் வெளியிட்டது. அரிவாளும் சம்மட்டியும் பொறித்த முத்திரையுடன் பின்னணி வரைவில் ஒரு தொழிலாளியும் குடியானவனும் கைகளைக் கோத்துக் கொள்வதும் தூரக் கிழக்கின் செல்வங்கள் உலகெங்கும் பெருகிப் பாய்வதும் தீட்டப் பட்டிருந்தன.

''இராணுவக் கப்பல் துறை'' என்ற வடிவில் ஒரு வெள்ளை யானையைக் கட்டித் தீனிபோடும் பொறுப்பு சோவியத்தின்மீது சார்ந்திருந்தது. இராணுவ, கடற்படை நோக்கங்களுக்காகக் கட்டப்பட்டிருந்த இந்தப் பெரிய தொழிற்சாலை பழைய ஆட்சியின் திறனின்மைக்கு நினைவுச் சின்னமாகத் திகழ்ந்தது. ஜாரின் எந்த நிறுவனத்தையும் எந்தக் காலத்திலும் அணிசெய்த வகையைச் சேர்ந்த நேர்த்தியான லஞ்ச அதிகாரிகளும் தனிச் சலுகை பெற்றவர்களும் இதன் சம்பளப் பட்டியலில் நிறைந்திருந்தார்கள். விருப்பத் தொண்டர் கடற்படைக் கப்பல்கள் மீது மேற்கண்ட சம்பளப் பட்டியலில் இருந்தவர்களின் காரணமாகவே ஒட்டுண்ணிகள் அப்பியிருந்தார்கள். இந்த உயர்குல ஒட்டுண்ணிகளை சோவியத் சுறண்டி அகற்றிவிட்டது. பழைய மானேஜரை மட்டும் பிரதானத் தொழில்நுட்ப நிபுணர் என்ற முறையில் பாட்டாளிகள் வைத்துக்கொண்டார்கள். நிபுணர்கள் தேவை என்பதைப் பாட்டாளிகள் அறிந்துகொண்டார்கள். தங்களிடையே நிபுணர்கள் இல்லாமையால் அவர்களுக்குப் பெருந்தொகை சம்பளமாகக் கொடுக்க அவர்கள் ஆயத்தமாயிருந்தார்கள். முதலாளிகள் எப்போதும் செய்து வந்திருப்பது போலவே தொழிலாளி வர்க்கம் மூளைகளை விலைக்கு வாங்க முற்பட்டிருந்தது.

''இராணுவக் கப்பல் துறையின்'' உற்பத்தியை சமாதானக் கருவிகளின் உற்பத்தியாக மாற்றியது சோவியத் கமிட்டி. கறாரான கணக்குப் பதிவு முறையையும் அது உட்புகுத்தியது. புதிய கலப்பைகளும் பரம்புகளும் வெளி

நாட்டிலிருந்து தருவிக்கப்பட்டால் ஆகும் விலையை விட அதிகச் செலவில் உற்பத்தியாகின்றன என்பதை இது காட்டியது. எனவே கமிட்டியினர் இயந்திர சாதனங்களை மாற்றவும் அவற்றின் வேலையை விரைவுபடுத்தவும் தலைப்பட்டார்கள். இயந்திரங்களும் கப்பல்களும் செப்பனிடுவதற்காகக் கொண்டுவரப்பட்டன. ஒரு ஒப்பந்த வேலை எட்டு மணி நேர வேலை நாள் முடிவில் நிறைவேற்றப்படாவிட்டால், வேலை எம்மட்டில் இருக்கிறது என்பதையும் இன்னும் எத்தனை மணி நேர வேலை தேவை என்பதையும் மேஸ்திரி அறிவிப்பான். விரைந்த வேலையில் புதிய பெருமை கொண்டிருந்த ஆட்கள் இரவு முழுவதும் பிடித்தாலும் தொடர்ந்து வேலை செய்வதை ஆதரிப்பார்கள். அதோடு கூட, மேஸ்திரியின் சம்பளம் உயர்த்தப்படுவதையும் ஆதரித்து வாக்களிக்கப்படும்.

பழைய நிர்வாகத்தின் கீழ் பெரும்பாலான தொழிலாளர்களின் இருப்பிடங்கள் தொழிற்சாலையிலிருந்து ஒன்று முதல் மூன்று மணி வரை பயணம் செய்ய வேண்டிய தொலைவில் இருந்தன. கமிட்டியினர் தொழிலாளர்களுக்குப் புதிய இருப்பிட வீடுகள் கட்டத் தொடங்கினார்கள். நேரத்தையும் சக்தியையும் மீதப்படுத்துவதற்குப் பல வழிமுறைகள் புகுத்தப்பட்டன. சம்பளம் வாங்குவதற்காக ஆட்கள் நீண்ட வரிசையில் நின்று தங்கள் முறைக்காகக் காத்திருப்பது அகற்றப்பட்டு, இருநூறு பெயருக்கு ஒருவன் வீதம் மொத்தமாகச் சம்பளத்தை வாங்கி வினியோகித்துக் கொள்ள வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது.

துர்ப்பாக்கியவசமாக, இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் ஒருவனால் பேராசையை மட்டும் அடக்கிக் கொள்ள முடியவில்லை. இருநூறு பெயருடைய சம்பளப் பணத்தைப் பெற்றுக் கொண்டதும் அவன் அதை வினியோகிக்கத் தொடங்கினான். அப்புறம் அவனுக்கு வேறு யோசனை உதயமாயிற்று. எப்படித்தான் இது நேர்ந்ததோ எவரும் அறியார். எவனாவது பூர்ஷ்வாச் சைத்தான் உளத்திண்மை அற்ற இந்தத் தோழன் காதில் கிசுகிசுத்து, தன் குடும்பம், தன் தொழிற்கூடம், புரட்சி ஆகியவை பற்றிய எண்ணத்தை அவன் மனத்திலிருந்து அறவே அகற்றியிருப்பான் என்று

சிலர் சொன்னார்கள். அது எப்படி ஆயினும் பிற்பாடு அவன் சில காலி வோத்காப் புட்டிகளின் அருகே காணப்பட்டான். அவனுடைய பைகளும் காலியாக இருந்தன. இந்த இன்ப நிலையிலிருந்து தெளிவடைந்ததும் அவன் தொழிற்கூடக் கமிட்டி முன்பு இட்டு வரப்பட்டு, புரட்சியின் கௌரவத்தைக் குலைத்ததாகவும் ''இராணுவக் கப்பல் துறைக்குத்'' துரோகம் இழைத்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டான்.

புரட்சித் தீர்ப்பு மன்றத்தின் பேரமர்வு பிரதானத் தொழிற்கூடத்தில் நடந்தது. 150 ஆட்கள் நடுவர்களாக இருந்தார்கள். ''குற்றவாளி'' என்பதே தீர்ப்பு! பின்வரும் மூன்று தண்டனைகளில் ஒன்றின் சார்பில் வோட்டளிக்குமாறு நடுவர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது: (1) உடனடியான வேலை நீக்கம், (2) ஆளை வேலையிலிருந்து நீக்கிவிட்டு, அவன் மனைவிக்கும் குழந்தைகளுக்கும் சம்பளத்தைத் தொடர்ந்து கொடுத்துவருவது, (3) மன்னிப்பு அளித்து மீண்டும் வேலையில் அமர்த்திக் கொள்வது.

இரண்டாவது யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ்வாறு குற்றவாளி கடமையில் தவறியதற்காக அவன் மீது திட்டமான களங்கம் சாட்டப்பட்டது, அதே சமயம் அவனுடைய குடும்பம் கஷ்டத்திலிருந்து காக்கப்பட்டது. அதிர்ஷ்டவீனர்களான இருநூறு பெயரின் பணம் இதனால் திரும்பக் கிடைத்துவிடவில்லை. எனவே ஆயிரத்து ஐந்நூறு தொழிலாளர்களும் மேற்கண்ட இருநூறு ஆட்களின் நஷ்டத்தைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்வதென்று தீர்மானித்தார்கள்.

தங்கள் புதிய அனுபவத்தில் தொழிலாளர்கள் பெருஞ் சேதம் விளைக்கும் பல தவறுகள் செய்தார்கள். எனினும் மொத்தத்தில் சோவியத்தின்மீது அவர்களுடைய தீர்ப்பு அது நல்ல முறையில் செயலாற்றியிருக்கிறது என்பதே. ஒருவன் தன் சொந்தத் தவறுகள்பால் கடைப்பிடிப்பது போன்ற கண்டிப்பற்ற போக்கை அவர்கள் சோவியத்தின் தவறுகள் பால் கடைப்பிடித்தார்கள்.

தங்கள் அனுபவத்திலிருந்து தொழிலாளர்கள் தன்னம்பிக்கை அடைந்தார்கள். இயந்திரத் தொழிலைத் தங்களால் ஒழுங்கமைக்க முடியும் என்பதை அவர்கள் கண்டார்கள்.

உற்பத்தியை அதிகரிக்கத் தங்களால் முடியும் என்பதை அவர்கள் அறிந்துகொண்டார்கள். பொருளாதாரத் துறையில் சோவியத் நாள்தோறும் வலிவாக வேரூன்றவே அவர்கள் பெருமையால் பூரிக்கலானார்கள். பகைவர்கள் சோவியத்தின்மீது இடைவிடாது புதிய தாக்குக்கள் நடத்திக்கொண்டு போயிராவிட்டால் அவர்கள் இன்னும் பெருங்களிப்பு அடைந்திருப்பார்கள்.

சோவியத் சைனியத்தை நிறுவுகிறது

தொழிற்கூடங்கள் சரிவர இயங்கத் தொடங்கியதுமே ஆட்கள் தங்கள் கருவிகளைப் போட்டுவிட்டுத் துப்பாக்கிகளை எடுத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. இருப்புப் பாதைகளில் உணவுப் பொருள்களும் கருவிகளும் அனுப்பப்படுவதற்குப் பதிலாகப் போர்த் தளவாடங்களும் துருப்புக்களும் அனுப்பப்படுவது அவசியமாயிற்று. தொழிலாளர்கள் புதிய நிறுவனங்களை வலுப்படுத்துவதற்குப் பதில் தாங்கள் நின்ற பூமியைத் தற்காக்கத் திரண்டு முனைய நேர்ந்தது.

தொழிலாளர் குடியரசின் எல்லைப்புறங்கள் மீது தொடர்ச்சியாகத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. பகைவர்கள் எல்லையைக் கடந்து உட்புகுந்ததுமே, ''சோஷலிஸத் தாய் நாட்டுக்கு ஆபத்து!'' என்ற கூக்குரல் எழுந்தது. ஆயுதமேந்திப் போர்க்களத்துக்கு வருமாறு ஒவ்வொரு கிராமத்துக்கும் தொழிற்சாலைக்கும் அவசர அழைப்பு விடுக்கப்பட்டது. ஒவ்வொன்றும் ஒரு சிறு படைப்பிரிவை அமைத்துக் கொண்டது. புரட்சிக் கீதங்களையும் கிராம நாடோடிப் பாட்டுக்களையும் முழக்கியவாறு சாலைகள் வழியாகவும் ஒற்றையடிப் பாதைகள் வழியாகவும் அணிவகுத்து நடந்து இந்தப் படைப்பிரிவினர் மஞ்சூரிய மலைத்தொடர் மேல் ஏறி மலை வரிசைகளினூடே சென்றார்கள். அற்பத் தளவாட சாதனங்கள்தாம் அவர்களிடம் இருந்தன. அவர்கள் அருந்திய உணவும் அரைகுறையானதே. இந்த நிலையில் நல்ல சாதன வசதிகள் கொண்ட இரக்கமற்ற பகைவர்களுடன் மோதுவதற்காக அவர்கள் முன்னேறிச் சென்றார்கள்.

போர்ஜ் பள்ளத்தாக்கின் வெண்பனி மீது இரத்தக் கறை படிந்த தங்கள் அடிச்சுவடுகளை விட்டுச் சென்ற ஜெனரல் வாஷிங்டனின் வீரர்களுடைய—கந்தைகள் அணிந்து வெறுங் காலர்களாக நடந்த வீரர்களுடைய—நினைவை அமெரிக் கர்கள் இன்று போற்றுவதுபோலவே, அபாய அழைப்பைக் கேட்டதுமே துப்பாக்கிகளை எடுத்துக்கொண்டு சோவியத் குடியரசைத் தற்காக்க முன்சென்ற செங்காவற் படையி னரின் கந்தைகள் அணிந்த அந்த முதல் குழுக்களின் வரலாற் றைக் கேட்டு மெய்சிலிர்ப்பார்கள் வருங்கால ருஷ்யர்கள்.

செங்காவற் படையினரின் பக்கத்தில் உதயமாகிக் கொண்டிருந்தன புதிய செஞ்சேனையின் படைத் தொகுதி கள். அது ஒரு சர்வதேசச் சேனை. செக்குகள், கொரியர் களின் பட்டாளங்கள் உள்பட எல்லா மக்கள் இனங்களும் அதில் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தன. நெகிடி நெருப்பைச் சுற்றி அமர்ந்திருக்கையில் கொரியர்கள் சொல்வார்கள்: ''நாங்கள் இப்போது உங்களுக்காக, உங்கள் விடுதலைக்காகப் போரிடுவோம். என்றேனும் ஒரு நாள் நீங்கள் எங்களுடன் எங்கள் விடுதலையின் பொருட்டு ஜப்பானை எதிர்த்துப் போராடுவீர்கள்.''

ஒழுங்குக் கட்டுப்பாட்டில் செந்துருப்புக்கள் முறை யான தேசீயச் சேனைகளுக்குக் கீழாகவே இருந்தன. ஆனால் மற்றவற்றினிடம் இல்லாத உற்சாகக் கிளர்ச்சி செந்துருப் பினரிடம் இருந்தது. மழையால் நனைந்து சொதசொத வென்று இருந்த மலைப்பக்கங்களில் வாரக் கணக்காகத் திறந்த வெளிகளில் பதிபோட்டிருந்த இந்தக் குடியான வர்கள், தொழிலாளர்களுடன் நான் நிறையப் பேசினேன்.

''உங்களை இங்கு வரச் செய்தது யார்? இங்கே நீங்கள் எதற்காக நிலைத்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''கல்வியறிவற்ற எங்களைப் போன்ற லட்சோபலட்சம் மக்கள் பழைய நாட்களில் போர்முனை சென்று ஜாரின் அரசாங்கத்துக்காக உயிர் விட நேர்ந்தது. எங்களுக்கே முழுதும் சொந்தமான ஒரு அரசாங்கத்துக்காகப் போர் முனை சென்று போரிடவில்லை என்றால் நாங்கள் நிச்சயமாகக் கோழைகளே ஆவோம், அல்லவா?''என்றார்கள் அவர்கள்.

சில கனவான்கள் இருந்தார்கள். சோவியத்தைப் பற்றிய இந்தக் கருத்தை அவர்கள் கொண்டிருக்கவில்லை. அவர்களுடைய கருத்து நேர் எதிரானது. ருஷ்யக் குடியானவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் மிகவும் வேறு வகையான ஒரு அரசாங்கம் இருக்க வேண்டும் என்று அவர்கள் நினைத்தார்கள். தாங்களே ருஷ்யாவின் ஒரே உண்மையான அரசாங்கம், ஒரே அரசாங்கம் என்று எதார்த்தத்தில் அவர்கள் உரிமை கொண்டாடினார்கள்.

தூரக்கிழக்கில் உள்ள ''தங்கக் கொம்பு'' எனப்படும் இடத்திலிருந்து மேற்கே பின்னிஷ் விரிகுடா வரையிலும் வடக்கே வெண்கடலிலிருந்து தெற்கே கருங்கடல் வரையிலும் விரிந்து பரந்துள்ள நிலப்பரப்பின் மீது அரசுரிமை தங்களுடையதே என்று படாடோபமான சொற்களில் அவர்கள் கோரினார்கள். இந்தக் கனவான்கள் மிகுந்த தன்னடக்கம் அற்றவர்கள் ஆயினும் மிக மிகச் சமயோசித புத்தி உள்ளவர்கள். தங்களுடையவை என்று பறைசாற்றிய பரந்த இடங்களில் எதற்குள்ளும் அவர்கள் அடி வைக்கவில்லை. அவர்கள் அடிவைத்திருந்தால் உண்மையில் ஆட்சி நடத்திக்கொண்டிருந்த அரசாங்கத்தால்—சோவியத்தால்—சாதாரணக் குற்றவாளிகளாகக் கருதப்பட்டுச் சிறையில் இடப்பட்டிருப்பார்கள்.

மஞ்சூரியாவின் பாதுகாப்பான எல்லைப்பகுதிக்கு உள்ளே இருந்துகொண்டு தங்கள் ஒளிவீசும் அறிக்கைகளை அவர்கள் விடுத்த வண்ணமாக இருந்தார்கள். சோவியத்துக்கு எதிரான சதியாலோசனைகள் யாவும் அங்கேயே உருவாக்கப்பட்டன. கலேதினின் தோல்விக்குப் பிறகு புரட்சி எதிர்ப்பாளர்கள் வெளிநாட்டு மூலதனத்தால் தூண்டிவிடப்பட்டு, கஸாக்கியன் ஸெம்யோனவ் மீது நம்பிக்கை வைத்தார்கள். ஹுண்-ஹுஸ் கொள்ளைக் கூட்டத்தினர், ஜப்பானியக் கூலிப் படையினர், சீனக் கடற்கரைத் துறைமுகங்களிலிருந்து பிடித்துவரப்பட்ட முடியரசுவாதிகள் ஆகியோரின் ரெஜிமென்டுகள் அவன் தலைமையில் ஒழுங்கமைக்கப்பட்டன.

இரும்பு முட்டியால் அடித்து போல்ஷெவிக்குகளின் மண்டைகளுக்குள் நற்பண்பையும் பகுத்தறிவையும் புகுத்

தப் போவதாக ஸெம்யோனவ் பிரகடனம் செய்தான். 4,000 மைல்களுக்கு அப்பால் இருந்த உரால் பிரதேசத்தை முதலில் தாக்கிக் கைப்பற்றப் போவதாகவும் அங்கிருந்து மாஸ்கோப் பிரதேசச் சமவெளியில் இறங்கப் போவதாகவும் பெத்ரோகிராத் தானுகவே வாயில்களைத் திறந்து தன்னைப் புகவிடும் என்றும் கிராமப்புற மக்கள் அனைவரும் திரண்டு எழுந்து தன்னை வரவேற்பார்கள் என்றும் அவன் அறிவித்தான்.

பூர்ஷ்வாக்களின் சார்பில் பெருத்த வாழ்த்து ஆரவாரங்களுக்கிடையே கொடிகளை உயர்த்தியவாறு அவன் சைபீரிய எல்லையைக் கடந்து இரு முறை உள்ளே புகுந்தான், இரண்டு தடவையும் தடதடவென்று திரும்பி ஓடி வந்துவிட்டான். அவனை எதிர்கொள்ள மக்கள் திரண்டு எழுந்தது உண்மையே. ஆனுல் மலர்ச் செண்டுகளுடன் அல்ல, துப்பாக்கிகளுடனும் கவர்க்கோல்களுடனும்.

ஸெம்யோனவ் இவ்வாறு தோற்கடிக்கப்படுவதற்கு விளாதிவஸ்தோக் தொழிலாளர்கள் உதவினுர்கள். ஐந்து வாரங்களுக்குப்பின் வெண்கலப் பழுப்பு நிறத்துடன், கிழிந்த உடைகளும் வழன்று புண்ணுன பாதங்களுமாக அவர்கள் திரும்பிவந்தார்கள். எனினும் வெற்றியாளர்களாகத் திரும்பினுர்கள் அவர்கள். தங்கள் பாட்டாளிப் படை வீரத் தோழர்களை வாழ்த்தி வரவேற்கத் திரண்டுவந்தனர் தொழிலாளி வர்க்கத்தினர். மலர்களும் சொற்பொழிவுகளும் நகரில் வெற்றி ஊர்வலமுமாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த வெற்றி தொழிலாளர்களின் உள்ளங்களில் மிகுந்த பெருமைப் பூரிப்பு உண்டாக்கியது. ஆனுல் வரவேற்பு வைபவத்தைப் பார்த்துக்கொண்டிருந்த பூர்ஷ்வாக்கள், நேச நாட்டினரின் உள்ளங்களோ சாம்பின. இராணுவத் துறையில் சோவியத் மேலும் மேலும் வலிமை மிக்கது ஆகிக் கொண்டு போவது வெளிப்படையாகத் தெரிந்தது.

சோவியத் மக்களைப் பயிற்றுகிறது

பண்பாட்டுத்துறையில் ஒரு மக்கள் பல்கலைக் கழகத்தையும் மூன்று தொழிலாளி மக்கள் நாடக மன்றங்களையும் இரண்டு தினச் செய்தித்தாள்களையும் ஸ்தாபிப்பதில்

புரட்சியின் படைப்பு ஆற்றல் வெற்றி பெற்றது. குடியானவனும் தொழிலாளியும் என்பது அதிகார பூர்வமான சோவியத் வெளியீடு. இளம் ருஷ்ய அமெரிக்கர் ஜெரோம் லிப்ஷித்ஸ் என்பவரை ஆசிரியராகக் கொண்ட ஒரு ஆங்கிலப் பகுதியை அது பதிப்பித்து வந்தது. கம்யூனிஸ்ட் கட்சி வெளியீடான செம் பதாகை அறிவார்ந்த நீண்ட கட்டுரைகளைத் தாங்கி வந்தது. இவ்விரண்டில் எதுவும் பத்திரிகைக் கலையின் தலைசிறந்த படைப்பு அல்லதான். எனினும் உள்ளத்தையும் உணர்வையும் சேர்ந்த விஷயங்களை எட்டிப் பெற முயன்றுகொண்டிருந்த, குரல் ஒலிப்பற்ற பொதுமக்களின் குரல்களாக இவை விளங்கின.

புரட்சி நிலத்தையும் உணவையும் சமாதானத்தையும் அடைவதற்கான தீவிர முயற்சியாகவே முதன்மையாக விளங்கியது எனினும் அது இன்னும் அதிக உட்பொருள் கொண்டிருந்தது. விளாதிவஸ்தோக் சோவியத்தின் ஒரு கூட்டம் எனக்கு நினைவு இருக்கிறது. உணவு ரேஷன்கள் குறைக்கப்பட்டதைக் கண்டித்தவாறு வலதுசாரியினர்களின் பிரதிநிதி சோவியத்தைச் சீற்றத்துடன் தாக்கினான்.

''உங்களுக்கு எத்தனை எத்தனையோ பொருள்களை வழங்குவதாக போல்ஷெவிக்குகள் வாக்களித்தார்களே, அவற்றை உங்களுக்கு அவர்கள் கொடுக்கவில்லை அல்லவா? ரொட்டி வழங்குவதாக வாக்களித்தார்களே, எங்கே அது? அந்த ரொட்டி எங்கே...?'' புயலாக எழுந்த சீழ்க்கைகள் சீறல்களில் பேச்சாளனின் சொற்கள் அமுங்கிப் போயின.

மனிதன் ரொட்டியால் மட்டுமே உயிர் வாழ்வதில்லை. சோவியத்தும் வயிற்றுப் பசியை மட்டுமே அல்ல, ஆன்மிகப் பசியையும் ஆற்றுவதன் மூலமே வாழ்கிறது.

எல்லா மனிதர்களும் தோழமையை ஆர்வத்துடன் நாடுகிறார்கள். ''ஏனெனில் தோழமை சுவர்க்கம், அது இல்லாதிருப்பது நரகம்'' என்று பதினான்காம் நூற்றாண்டில் ஆங்கிலக் குடியானவர்களிடம் கூறினார் ஜான் பால்.* மிகத் தாழ்ந்த மனிதன்கூடத் தனது மானிட மதிப்பை

---

*ஜான் பால்—ஆங்கில உபதேசியார். 1381ல் இங்கிலாந்தில் நடந்த குடியானவர் கிளர்ச்சிக்குத் தலைமைதாங்கி நடத்தியவர்.

உணருமாறு செய்த பெருங்குடும்பம் போன்று திகழ்ந்தது சோவியத்.

எல்லா மனிதர்களும் அதிகாரத்தை ஆர்வத்துடன் விழைகிறார்கள். தங்கள் விதியைத் தாங்களே நிர்ணயிப்பவர்களாக, விரிவான ஆட்சிப் பரப்பின் எஜமானர்களாக இருப்பதன் மகிழ்ச்சியைத் தொழிலாளர்கள் சோவியத்தில் உணர்ந்தார்கள். உழைப்பாளி மற்ற எந்த மனிதனையும் போன்றவனே. ஆட்சி அதிகாரத்தை ருசி பார்த்த பிறகு அதைக் கைவிட அவனுக்கு மனமில்லை.

எல்லா மனிதர்களும் சாகசச் செயல்களை ஆர்வத்துடன் அவாவுகிறார்கள். சோவியத்தில் உழைப்பாளி மக்கள் மிகச் சிறந்த துணிகரச் செயல் ஒன்றில் தலைப்பட்டிருந்தார்கள்—நியாயத்தை அடிப்படையாகக் கொண்ட புதுச் சமூகத்தின் தேட்டத்தில், உலகைப் புதுமையாகக் கட்டி அமைப்பதில் ஈடுபட்டிருந்தார்கள்.

எல்லா மனிதர்களும் ஆன்மிகப் பேரார்வம் கொண்டிருக்கிறார்கள். அதைத் தூண்டி எழுப்புவது மட்டுமே தேவையாக இருக்கிறது. மந்தமான, சுயதிருப்தி உள்ள குடியானவனைக்கூடத் தூண்டி ஊக்கியது புரட்சி. எழுதப் படிக்கத் தெரிந்துகொள்ளும் உந்தலை அது அவனுக்கு அளித்தது. ஒரு நாள் ஒரு குடியானவன் குழந்தைகள் பள்ளிக்கு வந்தான்.

''குழந்தைகளே, இந்தக் கைகளால் எழுத முடியாது. இவற்றால் ஏன் எழுத முடியாது என்றால், கலப்பை பிடிப்பதற்கு மட்டுமே இவை தேவை என்று ஜார் விரும்பியதால்தான்'' என்று உழைப்பால் சோர்ந்து காய்த்துப்போயிருந்த கைகளை உயர்த்திக் காட்டினான். கண்ணீர் அவன் கன்னங்கள் மீது வழிந்தோடியது. ''ஆனால் நீங்கள் புதிய ருஷ்யாவின் குழந்தைகள். எழுத நீங்கள் கற்றுக் கொள்ளலாம். ஐயோ, நானும் நமது புதிய ருஷ்யாவில் குழந்தையாக மறுபடி வாழ்க்கை தொடங்க முடிந்தால் எவ்வளவு அற்புதமாயிருக்கும்!'' என்றான்.

தொழிலாளர்கள் ராஜதந்திரிகளாக

தொழிலாளிகள் அரசுக் கப்பலைக் கைப்பற்றிவிட்டார்கள். கடும்புதிர் வழிகள் கொண்ட மார்க்கத்தில், விவர

வரைவு அற்ற கடலில், அதை அவர்கள் செலுத்த வேண்டி யிருந்தது. நேசநாட்டினரோ அதைப் பாறையில் மோதி மூழ்குமாறு செய்ய இடைவிடாது முயன்று கொண்டிருந் தார்கள்.

நேசநாட்டுக் கான்ஸல்கள் தனது வேண்டுகோள்களை மறுதலித்துவிடவே சோவியத் நட்பு வேண்டிச் சீனுவை அணுகியது. சீனர்கள் ஜாரினுல் மிகக் கொடுமையாக நடத் தப்பட்டு வந்தார்கள். எனவே தங்களிடம் அன்புடன் நடந்து கொள்ளும் எந்த ருஷ்ய அரசாங்கத்தையும் அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. இது ஏதோ புது வகையான சூழ்ச்சி என அவர்கள் நினைத்தார்கள். ஆனுல் சோவியத் தனது நேர்மையான சொற்களை நேர்மையான செயல்களால் உறுதிப்படுத்தியது. சீனக் குடிகள் மற்ற வெளிநாட்டின ருக்குச் சமமான நிலையில் வைக்கப்பட்டார்கள். சீனப் படகு கள் ஆறுகளில் செல்ல அனுமதிக்கப்பட்டன. திட்டவும் நசுக்கிப் பிழியவும் தக்க கீழ் இனமாகத் தங்களை ருஷ்ய அரசாங்கம் கருதவில்லை, மனிதர்களாக மதிக்கிறது என் பதைச் சீனர்கள் உணரத் தொடங்கினுர்கள். தங்கள் விசேஷத் தூதர்களை அவர்கள் செஞ்சேனையிடம் அனுப் பினுர்கள். இந்தத் தூதர்கள் பின்வரும் செய்தியைக் கொண்டு வந்தார்கள்:

''ஸெம்யோனவின் கொலைபாதகர்களையும் துர்ச்சாக சக்காரர்களையும் எங்கள் நிலப்பரப்பில் அணிதிரள அனு மதிக்க எங்களுக்கு உரிமை கிடையாது என்பதை நாங்கள் அறிவோம். உங்களுக்கு எதிராக வாணிகத் தடை விதிக்கு மாறு எங்களை நிர்ப்பந்திக்க நேசநாட்டினருக்கு உரிமை கிடையாது என்பதை நாங்கள் அறிவோம். எங்கள் உணவுப் பொருள்கள் ருஷ்யத் தொழிலாளர்களுக்கும் குடியான வர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதே எங்கள் விருப் பம்.''

க்ரொதேக்கோவோ என்ற எல்லைப்புற இடத்தில் ஒரு பொது மகாநாடு ஜூன் மாதம் நடந்தது. சீனர்களை அவர் களுடைய மொழியிலேயே வரவேற்முன் தோன்கநோகிய் என்னும் 21 வயது இளைஞன். இவன் துணிவு மிக்கவன், சிறந்த அறிவுக்கூர்மை உள்ளவன், இளம், புரட்சிகர ருஷ்யாவின்

உணர்வே உருவானவன். உலகின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினரான இவ்விரு இனங்களின் பிரதிநிதிகள் சமாதானமும் ஒத்துழைப்புமாகக் கூடி வாழும் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகக் கலந்து ஆலோசித்தார்கள்.

பழுத்த கிழவர்கள் தங்கமுலாம் பூசிய ஆடம்பர அறையில் உட்கார்ந்து சூழ்ச்சியும் சந்தேகமும் நிறைந்தவர்களாய், சொற்களையும் சொற்றொடர்களையும் ஆயுதங்களாகக் கொண்டு போராட்டம் நடத்திய வெர்ஸேய் மகாநாடு அல்ல இது. இங்கே இருந்தவர்கள் இளைஞர்கள், திறந்த மனமும் ஒளிவுமறைவு அற்ற உள்ளமும் படைத்தவர்கள். திறந்த வானின் கீழே சோதரப் பாங்கில் சந்தித்தார்கள். ஆயினும் எதார்த்தத்தை நழுவ விட்டுவிட்ட உணர்ச்சிக் குழப்பமாக இல்லை இம் மகாநாடு. ருஷ்யா மஞ்சள் வெள்ளப் பெருக்கில் மூழ்கடிக்கப்பட்டுவிடும் அபாயம், கூலி உழைப்பின் தாழ்ந்த தரம் முதலிய விஷயங்களை அவர்கள் உள்ளபடியே நேராகப் பரிசீலனை செய்தார்கள். ஆனால் இது ஒளிவுமறைவு இன்றி, பெருந்தன்மையுடனும் சோதரப் பான்மையுடனும் செய்யப்பட்டது. ருஷ்யப் பிரதிநிதிக் குழுத் தலைவர் கிராஸ்னஷ்சோக்கவ் சொன்னதுபோல: ''ருஷ்ய, சீன மக்கள் இயற்கையின் உண்மைக் குழந்தைகள், மேற்கத்திய நாகரிகத்தின் தீய பழக்கங்களால் கெடுக்கப்படாதவர்கள், ராஜதந்திர ஏமாற்றும் சூழ்ச்சியும் பயிலாதவர்கள்.''

எனினும், இவ்விரு மாபெரும் குழந்தை இனங்களின் பிரதிநிதிகள் பரஸ்பரப் புரிவு ஏற்படுத்திக்கொள்ளும் முயற்சியில் ஒருவரை ஒருவர் எதிர்கொண்டு அளவளாவிக் கொண்டிருந்த இதே நாளில், இவ்விரு மக்களையும் ஒருவரை ஒருவர் பயங்கரமாகத் தாக்கிப் போரிடுமாறு தூண்டி விடுவதற்கு இவர்கள் அறியாதபடி ஹார்பினிலும் விளாதிவஸ்தோக்கிலும் சூழ்ச்சிகள் செய்துகொண்டிருந்தார்கள் வெளிநாட்டு ராஜதந்திரிகள். சைபீரியா மீது தாக்கு நடத்தவும் சோவியத்துக்களைத் தகர்த்து நொறுக்கவும் சீனத் துருப்புக்களைப் பயன்படுத்த அவர்கள் திட்டம் வகுத்துக்கொண்டிருந்தார்கள்.

நான்காம் பாகம்

புரட்சியின் வெற்றி

முதலாளித்துவ உலகுக்கு எதிராக சோவியத்துக்கள்

அத்தியாயம் பதினேழு

நேசநாட்டினர் சோவியத்தைத் தாக்கி நொறுக்குகின்றனர்

''சோவியத்துக்கள் மேல் நேசநாட்டினருக்கு இவ்வளவு பகைமை ஏன்? ருஷ்யாவை ஒரு விசாலமான ஆய்வுக் கூடப் பரிசோதனை என ஏன் கருதலாகாது? இந்தக் கனவர்கள் தங்கள் சோஷலிஸத் திட்டங்களைப் பரீட்சித்துப் பார்க்க ஏன் விடக்கூடாது? அவர்களுடைய கனவு துர்ச்சொப்பனம் ஆகி விடும் போது, அவர்களுடைய கற்பனைச் சுவர்க்கம் தகர்ந்து சிதறிவிடும்போது, சோஷலிஸத்தின் கோரமான தோல்விக்கு ஓர் உதாரணமாக நீங்கள் எப்போதும் அதைச் சுட்டிக்காட்டலாமே'' என்று ஒருவர் ஓர் அமெரிக்க பாங்கு முதலாளியிடம் கேட்டார்.

''ரொம்ப நல்லது, ஆனால் அது தோல்வி அல்ல என்றுலோ? அப்போது நம் கதி என்ன?'' என்று வந்தது பதில்.

தோல்வி வேண்டியே ஆண்டவனைத் துதித்தார்கள் நேசநாட்டினர். சோவியத் தகர்ந்து சரியும் என்று ஆர் வந்ததும்பும் விழிகளுடன் கூர்ந்து கவனித்தார்கள். ஆனால் தோல்வி ஏற்படவில்லை. இதுதான் நேசநாட்டினருக்கு ஆத்திரமூட்டியது. சோவியத் வெற்றிக்கான அறிகுறிகளைத் தோற்றுவித்துக் கொண்டிருந்தது. ஒழுங்கீனத்தை அல்ல, ஒழுங்கை, குழப்பத்தை அல்ல, ஒழுங்கமைப்பை அது ஏற்படுத்திக் கொண்டிருந்தது. பொருளாதாரத் துறையிலும் இராணுவத் துறையிலும் அது நிலையாக வேரூன்றிக் கொண்டிருந்தது. பண்பாட்டு, ராஜதந்திரத் துறைகளில் அது நெருக்கி முன்னேறிக் கொண்டிருந்தது. எங்கும் அது தனது வெற்றிகளைக் கெட்டிப்படுத்திக் கொண்டிருந்தது.

ஏகாதிபத்தியவாதிகளின் செல்வழிக்கு நேர் குறுக்கே நின்று கொண்டிருந்தது சோவியத். அது தொடர்ந்து ஆற்றலில் வளர்ந்தால் அவர்களுடைய திட்டங்கள் ஓரேயடியாகத் தவிடுபொடி ஆகிவிடும். ருஷ்யாவின் பேரளவான வளங்களைச் சுறண்டுவதற்குக் கட்டற்ற சுதந்திரம் கிடைக்கும் என அப்புறம் அவர்களால் எதிர்பார்க்க முடியாது.*

எனவே சோவியத் நொறுக்கப் படவேண்டும், அது மட்டு மீறிய வலிமையும் செயலூக்கமும் பெறுவதற்கு முன்பு அது உடைத்துத் தகர்க்கப்பட வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

---

*''ருஷ்யாவில் நாம் இப்போது காண்பது அதன் அளவிடமுடியாத கச்சாப் பொருள்களுக்கான பெரும் போராட்டமே.''—ருஷ்யா ஆங்கிலோ-ருஷ்ய நிதித்துறைச் சஞ்சிகை, 1918 மே மாத இதழ்.

''எகிப்தில் பிரிட்டிஷ் திட்டத்தை மாதிரியாகக் கொண்டு ருஷ்யாமீது சர்வதேச மேலாதிக்கம் ஏற்படும் வகையில் நகரில் நிகழ்ச்சிகள் மேலும் மேலும் உருவாகிக் கொண்டு போகின்றன. இவ்வாறு ஏற்பட்டால் ருஷ்யப் பத்திரங்கள் சர்வதேசச் சந்தையின் சிறந்த பத்திரங்கள் ஆகிவிடும்.''—லண்டன் பைனான்ஷியல் நியூஸ் (நிதித் துறைச் செய்திகள்), 1918 நவம்பர்.—ஆசிரியர் குறிப்பு.

புரட்சி எதிர்ப்பு
செக் இனத்தாரைப் பயன்படுத்துகிறது

மரண அடி கொடுப்பதற்குக் கருவியாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்கள் செக்கோஸ்லோவாக்கியர்கள். அவர்களுடைய பிரெஞ்சு இராணுவ அதிகாரிகள் அவர்களுக்குத் தெரியாமலே இதன் பொருட்டு அவர்களைத் தயார் படுத்திக் கொண்டிருந்தார்கள். போர் அனுபவம் மிக்க இந்தப் படைவீரர்களின் ரெஜிமென்டுகள் டிரான்ஸ் சைபீரிய ரெயில் பாதையை ஒட்டினாற்போலப் போர்த்தந்திரப் பாங்கில் நிறுத்தப்பட்டிருந்தன. இவர்களில் 15,000 படைவீரர்கள் விளாதிவஸ்தோக்கில் இருந்தார்கள். சோவியத்துக்களின் கிருபையால் ஆயுதங்கள் அளிக்கவும் உணவூட்டவும் இங்கே ரெயிலில் கொண்டுவரவும் பட்டிருந்தார்கள் இவர்கள்.

இவர்களை மேற்குப் போர்முனைக்கு இட்டுப்போகப் போக்குவரத்துச் சாதனங்கள் வந்து கொண்டிருப்பதாகப் பிரெஞ்சுக்காரர்கள் சொன்னார்கள். கப்பல்கள் வந்து கொண்டிருக்கின்றன என்று வாரம் வாரமாக அறிவிக்கப் பட்டுவந்தது. ஆனால் கப்பல்கள் வரவில்லை. செக்கோஸ்லோவாக்கியர்களைக் கப்பல்களில் ஏற்றி வெளியே கொண்டு செல்லும் நோக்கம் பிரெஞ்சுக்காரர்களுக்கு இல்லவே இல்லை. சோவியத்தைத் தாக்கித் தகர்ப்பதற்கு இங்கே சைபீரியாவில் அவர்களைப் பயன்படுத்துவதே அவர்கள் கொண்டிருந்த நோக்கம்.

செயலின்மையால் பதற்றமடைந்து செக்கோஸ்லோவாக்கியர்கள் ஏற்கனவே அமைதி இழந்திருந்தார்கள். ஆஸ்டிரோ-ஜெர்மானியர்மீது மரபுவழி வந்த ஆழ்ந்த வெறுப்பு கொண்டிருந்தார்கள் அவர்கள். செஞ்சேனையில் பதினாயிரக்கணக்கில் ஆஸ்டிரோ-ஜெர்மானியர்கள் இருப்பதாகப் பிரெஞ்சுக்காரர்கள் அவர்களிடம் சொன்னார்கள். செக் இனத்தாரின் நாட்டுப்பற்றைச் சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொண்டு சோவியத்துக்களை ஆஸ்டிரோ-ஜெர்மானியர்களின் நண்பர்களாகவும் செக் இனத்தாரின் பகைவர்களாகவும் சித்திரித்தார்கள் பிரெஞ்சுக்காரர்கள். இந்த மாதிரிப் பிணக்கு ஏற்படுத்திச் செக் துருப்பினரை

சோவியத்துக்கள்மீது தாக்கு நடத்தப் பிரெஞ்சுக்காராகள் ஆயத்தப்படுத்தி விட்டார்கள். தாக்கு முறைகள் இடத்துக்குப் பொருந்துமாறு இசைவித்துக் கொள்ளப்பட்டன.

இங்கே, விளாதிவஸ்தோக்கில் அதிர்ச்சித் தாக்கு நடத்துவது அவசியம் எனக் கருதப்பட்டது. சோவியத் எச்சரிக்கையைக் கைவிடுமாறு செய்து, பின்னர் மின்னல் தாக்கு நடத்தி அதிகாரத்தைக் கைப்பற்றுவது எனத் திட்டம் இடப்பட்டது. இதற்கு சோவியத்துக்களுக்கு நட்பு காட்டிக் கண்ணை மறைப்பது அவசியமாக இருந்தது. இந்த வேலை பிரிட்டிஷ்காரர்களிடம் • ஒப்படைக்கப்பட்டது. பகைமை முறைப்பைக் கைவிட்டுவிட்டு போல்ஷெவிக்குகள்பால் சுமுகமான போக்கை மேற்கொண்டார்கள் பிரிட்டிஷ்காரர்கள்.

சோவியத்துக்கள்மீது முன்னர் பகைமை பாராட்டியதையும் ஸெம்யோனவை ஆதரித்ததையும் ஒளிவுமறைவு அற்ற, கருத்தைக் கவரும் இனிய பாவனையில் ஒப்புக்கொண்டார் பிரிட்டிஷ் கான்ஸல். தனது வாழும் தகுதியை சோவியத் இப்போது நிரூபித்துவிட்டபடியால் பிரிட்டிஷ்காரர்கள் அதற்கு உதவுவார்கள் என்றும் முதல் காரியமாக இயந்திர சாதனங்கள் தருவிப்பதில் அவர்கள் உதவுவார்கள் என்றும் தெரிவித்தார் அவர். இதைத் தொடர்ந்து, 1918, ஜூன் 28ந் தேதி இன்முகத்தினரான இரு அதிகாரிகள் வந்து ஸுஹானவை வணங்கினூர்கள். ஸபோக் என்னும் பிரிட்டிஷ் கப்பலுக்குக் கிடைக்கும் கம்பியில்லாத் தந்திச் செய்திகள் நாள்தோறும் சோவியத்துக்கு அதன் செய்தித் தாள்களில் பிரசுரிக்கும் பொருட்டு அளிக்கப்படும் என்ற தகவலை அவர்கள் தெரிவித்தார்கள்.

செய்தித்தாள் ஆசிரியர்கள், சிறப்பாக ஜெரோம், பெரு மகிழ்ச்சி அடைந்தார்கள். அவர்கள் ருஷ்யத் தீவுக்கு வந்து, நேசநாட்டினரின் சரணுகதியைக் கொண்டாட என்னை வற்புறுத்தி அழைத்தார்கள். அவர்களுடைய பேருவகைக்குச் சரியான காரணம் இருந்தது. கருக்கலிலும் இரவிலும் கடினமான ஏற்றத்தில் மலைமீது கால்கள் தள்ளாட நடந்து முன் செல்வது போன்று இருந்தது அதுவரை. இப்போது திடீரென மேகங்கள் விலகி வானம் நீல ஒளிர்வு காட்டியது.

மறு நாள் காலை எட்டரை மணிக்கு விழுந்தது பேரிடி, நீல வானிலிருந்து! தன் சோவியத் அலுவலகத்தில் உட்கார்ந்திருந்த ஸுஹானவை அது தாக்கியது. செக்கோஸ்லோவாக்கியர்களின் பெயரால் விடுக்கப்பட்ட இறுதி எச்சரிக்கை அது. சோவியத் நிபந்தனையின்றிச் சரணடைய வேண்டும்; எல்லா அலுவலகங்களும் காலி செய்யப்பட வேண்டும்; எல்லாப் படைவீரர்களும் உயர்நிலைப் பள்ளித் திடலுக்குப் போய், தங்கள் ஆயுதங்களைப் போட்டுவிட வேண்டும்—இவ்வாறு அதில் கோரப்பட்டிருந்தது. இதற்கு முப்பது நிமிட நேரக் கெடு கொடுக்கப்பட்டிருந்தது.

ஸுஹானவ் செக் தலைமைக் காரியாலயத்துக்கு விரைந்து சென்று சோவியத்தைக் கூட்டுவதற்கு அனுமதி வேண்டினார்.

''தாராளமாகக் கூட்டுங்கள், அரை மணி நேரத்துக்குள் முடியுமானால்'' என்று பதற்றமின்றிப் பதில் அளித்தான் செக் கமாண்டர்.

ஸுஹானவ் அங்கிருந்து புறப்பட எழுந்ததும் கைது செய்யப்பட்டார்.

இந்தச் செயல்கள் யாவும் திரை மறைவில் நடந்தன. நகரவாசிகளுக்கு எதுவுமே தெரியாது. அவ்வளவு விரைவில் நேரவிருந்த பெருந்துன்பத்தைப் பற்றி ஜாடைமாடையாக ஓரளவு அறிந்தவர்கள் ஓரிரு கமிஸார்கள் மட்டுமே. ஸ்வெத்லான்ஸ்காயா வீதியில் செங் கடற்படைக் கட்டிடத்தின் அருகே ப்ரோமீன்ஸ்கிய் தன் காலணிகளுக்குப் பாலிஷ் போட்டுக்கொண்டிருக்கக் கண்டேன்.

''என்ன, அதிகாலையிலேயே பிரமாதமாக மினுக்குகிறீர் போலிருக்கிறது'' என்றேன்.

ஒரு சிகரெட்டைப் பற்றவைத்தவாறே ''ஆமாம்'' என்று அலட்சியமாக விடையிறுத்தார் அவர். ''இன்னும் சில நிமிடங்களில் நான் சுருக்கு மாட்டப்பட்டு ஏதேனும் விளக்குக் கம்பத்திலிருந்து தொங்கக் கூடும். முடிந்த வரையில் பாங்கான தோற்றம் அளிக்கும் பிணமாக இருக்க விரும்புகிறேன்.''

நான் ஒன்றும் புரியாமல் அவரை வியப்புடன் நோக்கினேன்.

அவரோ, இன்னும் அசட்டையாகப் புன்முறுவல் செய்தவாறு, ''எங்கள் ஆட்டம் முடிந்துவிட்டது. செக் துருப்புக்கள் நகரைக் கைப்பற்றிக்கொள்ளப் போகின்றன'' என்ருர்.

அவர் பேசிக்கொண்டிருக்கையிலேயே வீதி முனையில் துருப்புக்கள் நிறைந்தன. பக்கத் தெருக்களிலும் துருப்புக்கள் குழுமலாயின. விரிகுடாவின் மறுபுறமிருந்து படகுகளிலும் போர்க்கப்பல்களிலிருந்து தோணிகளிலும் வந்த படைவீரர்கள் எல்லா நகர்ப்பகுதிகளிலும் முன்னேறினர்கள். மலை மேலிருந்து இறங்கியும் கப்பல்துறைகளிலிருந்து ஏறியும் அடர் பனி மூட்டம் போன்று நகரில் படர்ந்தது தலையீட்டாளர்களின் சைனியம். ஏராளமாக ஆயுதங்கள் தாங்கிய படைவீரர்கள் திறந்த இடங்களில் நெரிந்தார்கள். கெடுகுறி காட்டிய பெரிய எறிகுண்டுகள் அவர்களிடம் மிகுதியாக இருந்தன. நகர் முழுவதையும் தூளாக்கப் போதுமானவை அந்த வெடிகுண்டுகள்.

நகரைக் கைப்பற்றுதல் விரைவாகவும், கெடிகார இயக்கம் போன்று துல்லியமாகத் திட்டப்படியும் நடந்தது.

ஜப்பானியர்கள் வெடிமருந்துக் கிடங்கையும் பிரிட்டிஷ்காரர்கள் ரெயில்வே நிலையத்தையும் பிடித்துக்கொண்டார்கள். அமெரிக்கர்கள் கான்ஸல் அலுவலகத்தை வளைத்துக் கொண்டார்கள். சீனர்களும் மற்றவர்களும் முக்கியத்துவம் குறைந்த இடங்களை வசமாக்கிக் கொண்டார்கள். செக் படையினர் நாற்புறமிருந்தும் சோவியத் அலுவலகக் கட்டிடத்தை நெருங்கினர்கள். அதை எல்லாப் பக்கங்களிலும் அவர்கள் வளைத்துக் கொண்டார்கள். ''ஹுர்ரா'' என்ற உரத்த முழக்கத்துடன் முன்னே பாய்ந்து வாயில்கள் வழியே இடித்துப் புகுந்தார்கள். சோஷலிஸக் குடியரசின் செங்கொடி அகற்றப்பட்டது. எதேச்சாதிகார ஆட்சியின் சிவப்பும் வெள்ளையும் நீலமுமான கொடி உயர்த்தப்பட்டது. விளாதிவஸ்தோக் நகரம் ஏகாதிபத்தியவாதிகளின் கைகளுக்கு மாறிவிட்டது.

''சோவியத் வீழ்ந்துவிட்டது'' என்ற காதைத் துளைக்கும் கூச்சல் தெருவில் கிளம்பி, நகர் முழுதிலும் காட்டுத் தீ போலப் பரவியது. ''ஒலீம்பியா'' உணவுவிடுதியின்

வாடிக்கைக்காரர்கள் தெருவுக்குப் பாய்ந்துவந்து தொப்பிகளை உயரே வீசுவதும் செக் படையினரை வாழ்த்தி ஆர்ப்பரிப்பதுமாகப் பெரு முழக்கம் செய்தார்கள். சோவியத்தும் அதன் எல்லாச் செயல்களும் அவர்களுக்குச் சாபத்தீடானவையாக இருந்தன. இப்போது சோவியத் வீழ்ந்து விட்டது. எனினும் இது போதாது. அதன் ஒரு சுவட்டைக் கூட விட்டு வைக்காமல் அழித்துவிட வேண்டும்.

கற்களால் விளிம்புகட்டி **"தொழிலாளிப் பிரதிநிதிகளின் சோவியத்"** என்ற சொற்களாக வடிவாக்கப்பட்டிருந்த அலங்காரப் பூப்பாத்தி அவர்கள் முன்னே இருந்தது. இரும்பு வேலியைத் தாண்டிக்குதித்து, கற்களை உதைத்துத் தள்ளிவிட்டு, பூச்செடிகளை மிதித்துத் துவைத்து, வெறுக்கத்தக்க அந்தச் சின்னத்தின் வேர்களை அடியோடு கல்லி எறிவதற்காக மண்ணுக்குள் ஆழத்தில் கைகளைப் புதைத்தார்கள்.

அவர்களது வெறி இப்போது ஏறிக்கொண்டு போயிற்று. அவர்களுடைய வேட்கை மேலும் தீவிரமாயிற்று. தங்கள் ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்வதற்கு உயிர்த்தியங்கும் இரை ஒன்று அவர்களுக்கு வேண்டியிருந்தது.

பழிவாங்க வேண்டும் என்று கத்துகிறார்கள் பூர்ஷ்வாக்கள்

கூட்டத்தில் என்னைக் கண்டு கொண்டு அவர்கள் பெருத்த கூக்குரல் எழுப்பினார்கள்: ''வெளி நாட்டான்! அமெரிக்கப் பன்றி! கொல்லுங்கள் இவனை, கழுத்தை நெரியுங்கள்! தூக்கிலிடுங்கள்!'' என்று கூப்பாடு போட்டார்கள். கள்ளவியாபாரிகளின் கூட்டம் முட்டிகளை வீசியாட்டிக் கொண்டும் வைது கொண்டும் நாற்புறமிருந்தும் என்னை நெருங்கியது.

ஆனால் எனக்கு அடுத்தாற்போல் இருந்த ஆட்களின் வளையம் என்மேல் கைவைக்க முயலவே இல்லை. ஏன் என்று வியப்புடன் எண்ணினேன் நான். அவர்கள் சோவியத் ஆதரவாளர்கள். எனது ஆபத்தைக் கண்டதும் நெருக்கிப் புகுந்து கொண்டு எனக்கும் என்னை அடித்துக் கொல்ல வந்தவர்

களுக்கும் இடையே காப்பு வளையமாக நின்றுகொண்டார்கள் இவர்கள்.

''செங்கடற் படைக் கட்டிடத்துக்குப் போம். நடவும், ஓடாதேயும்'' என்று ஒரு தணிந்த குரல் கிசுகிசுத்தது. பின்னுலிருந்த கூட்டத்தால் நெருக்கித் தள்ளப்பட்டு நான் செங்கடற்படைக் கட்டிடத்தை நோக்கி நகர்ந்தேன். அதன் வெளிவாயிலின் எதிரே ''ஓடும்!'' என்ற சொல்லைக் கேட்டேன். வாயில் வழியே நுழைந்து கட்டிடத்தின் பல அடுக்கு அறைகளுக்குள் பதுங்கித் தப்பித்துக்கொண்டேன். துரத்தி வந்தவர்கள் கீழே செக் படையினருடன் வாதிட்டுக் கொண்டிருந்தார்கள்.

கட்டிடத்தின் முகப்பில் மூன்ருவது மாடிச் சாளரம் ஒன்றிலிருந்து நகரம் புலப்படுவதைக் கண்டேன். வெளியில் உள்ளவர்களின் பார்வையில் படாமல் இந்த உயர இடத்திலிருந்து பார்க்க எனக்கு முடிந்தது. எனக்கு எதிரேயும் கீழேயும் நீண்டு சென்றிருந்த ஸ்வெத்லான்ஸ்காயா வீதி இப்போது கொதிநீர்க் கொப்பரை போன்று தளபளத்துக் கொண்டிருந்தது. இருபது நிமிடங்களுக்கு முன் காலை இளவெயிலின் ஒளியில் அமைதியாகக் காட்சி அளித்த இந்த வீதியில் இப்பொழுது மக்கள்கூட்டமும் வண்ணங்களும் ஒலிகளும் குமிழியிட்டுக் கொந்தளித்தன. நீலக் கோட்டுகளும் வெள்ளைக் காற்பட்டிகளும் அணிந்த ஜப்பானியர், யூனியன் ஜாக் கொடி ஏந்திய பிரிட்டிஷ் கடற்படைத் துருப்புக்கள், காக்கி உடுப்புக்களில் விளங்கிய, வெண்மையும் பச்சையுமான கொடிகள் ஏந்திய செக் படையினர் ஆகியோர், கணத்துக்குக் கணம் தொகையில் மிகுந்து கொண்டு போன சுழியிடும் மக்கள் கூட்டத்தின் ஊடாக நீரோட்டங்கள் போன்று விலக்கிச் சென்றவாறு இப்புறமிருந்து எதிர்ப்புறத்துக்கும் எதிரிலிருந்து இப்புறம் நோக்கியும் அணிவகுத்து நடை போட்ட வண்ணமாக இருந்தார்கள்.

''சோவியத் வீழ்ந்து விட்டது'' என்ற சந்தோஷச் செய்தி பூர்ஷ்வா வட்டாரங்களில் மாய விரைவுடன் பரவியது. சீமாட்டிகளின் தனி அறைகளிலிருந்தும் உணவு விடுதிகளிலிருந்தும் மாளிகை முகப்பறைகளிலிருந்தும் பட்டுடைகள் பகட்ட, புன்னகைகள் அணி செய்யத் தெருக்

களில் ஓடிவந்தார்கள் அவர்கள்—களி கொண்டாடுவதற்காக. உல்லாச இறகு அணிகளும் ஆடைகளும் அலங்காரக் குடைகளும் பல்வண்ண எழில் காட்ட ஸ்வெத்லான்ஸ்காயா வீதி ஆடம்பர மிக்க உலாச்சாலை ஆகிவிட்டது.

சிலர் மிக விரிவாக ஒப்பனை செய்து கொண்டிருந்தார்கள். அதிர்ஷ்டசாலிச் சீமாட்டிகள்! முன்கூட்டித் தகவல் அறிவிக்கப்பட்டபடியால் தங்களைச் சிங்காரித்துக்கொள்ள அவர்களுக்கு நேரம் இருந்தது. இராணுவ அதிகாரிகளும், பதவிக் குறிகள் எல்லாம்—சரிகைப் பின்னல் கயிறுகளும் தோட்சின்னங்களும்—இலங்க, குதி முட்கள் கிணுகிணுக்க நிறையச் சலாம் செய்தவாறு தகத்தகாயமாக ஒளிர்ந்தார்கள். சீமாட்டிகளுக்குத் துணைவர்களாகவோ அல்லது அணி நடைக் குழுக்களாகவோ அவர்கள் அமைந்து கொண்டார்கள். அவர்களுடைய எண்ணிக்கை நூற்றுக் கணக்கில் இருந்தது. விளாதிவஸ்தோக்கில் இத்தனை இராணுவ அதிகாரிகள் இருந்தார்களா என்று வியந்தேன் நான்.

அப்புறம் பூர்ஷ்வாக்கள்தாம் எத்தனை பெயர்! சொகுசாக வாழ்ந்து தடித்துக் கொழுத்திருந்த இந்தக் கனவான்கள் தாமே தமது கேலிச் சித்திரங்களாக விளங்கத் தக்கவாறு எடையில் மிகுந்திருந்தார்கள். அவர்கள் முகங்களில் மகிழ்வு ஒளிர, ஒருவருக்கொருவர் முகமன் கூறினார்கள், கை குலுக்கினார்கள், ஒருவரையொருவர் தழுவி முத்தமிட்டார்கள், ''சோவியத் விழுந்துவிட்டது'' என்று ஆரவாரித்தார்கள்—ஏதோ அது இயேசுவின் மறுவுயிர்ப்புத் திருநாள் வாழ்த்து போல. பருத்துக் கொழுத்த இரு ஜார்கால உத்தியோகஸ்தர்கள் பேருவகையால் வலிப்பு வந்தவர்கள் போன்ற தோற்றத்துடன் ஒருவரையொருவர் மார்புறத் தழுவிக் கொள்ள முயன்றார்கள், ஆனால் அவர்களுடைய விசாலமான தொப்பைகள் அதற்குத் தடையாக இருந்தன. ஒருவரையொருவர் இறுகப் பற்றியவாறு ஆலிங்கனம் செய்துகொள்ளும் முயற்சியில் அவர்கள் வெடித்துவிடுவார்கள் போலிருந்தது.

பாட்டாளிகளின் இந்த நகரில் ஒரு முழு மாறுதல் நம்பமுடியாத விரைவுடன் பரவியது. நன்றாக உண்டு உடுத்துச் சிங்காரம் செய்துகொண்டு, பளிச்சிடும் முகங்களில்

களி ததும்ப ஒருவரை ஒருவர் வாழ்த்துவதும் ஆண்டவனை யும் நேசநாட்டினரையும் போற்றுவதும் செக் படையின ருக்கு வெற்றிகூறுவதுமாக வளையவருவோரின் நகரம் ஆகி விட்டது அது.

பாவம், செக் படையினர்! இந்த வெற்றி முழக்கங் கள் அவர்களுக்குக் கூச்சம் உண்டாக்கின, அவர்களுடைய உள்ளங்களைப் புண்படுத்தின. ருஷ்யத் தொழிலாளி ஒரு வனைக் கண்டதும் அவர்கள் வெட்கத்தால் தலை கவிழ்ந்தார் கள். தொழிலாளர் அரசாங்கத்தின் குரல்வளையை நெரிக் கும் இந்தச் செயலில் ஈடுபடச் சிலர் திட்டமாக மறுத்து விட்டார்கள். பூர்ஷ்வாக்கள் இன்பக் கேளிக்கை கொண் டாட வாய்ப்பாக மற்றத் தொழிலாளர்களைச் சிலுவையில் அறையும் வேலை அவர்களில் ஒருவனுக்கும் உவப்பாயில்லை. பூர்ஷ்வாக்களுக்கோ, பாண்டுவாத்தியங்களும் பாவட்டாக் களுமாக விழா கொண்டாடுவது மட்டும் போதவில்லை. பண் டை ரோமாபுரி விழாக்களில் போல இரத்தமும் பலிகளும் வேண்டும் என்று வேட்கை கொண்டார்கள் அவர்கள். வாழ்க்கையில் தங்கள் அந்தஸ்தை மறந்துவிட்ட இந்தத் தொழிலாளர்களைப் பழிவாங்கவும் தண்டிக்கவும் அவர்கள் விரும்பினார்கள்.

''இப்போது நாம் அவர்களை உரிய இடங்களில் வைப் போம். விளக்குக் கம்பங்களில் தொங்கவிடுவோம். இந்தப் பயல்களுக்குப் பிடித்தமானது சிவப்பு நிறம், அல்லவா? ரொம்ப நல்லது. அவர்களுக்கு விருப்பமான நிறத்தை வேண்டிய அளவு கொடுப்போம். அவர்களுடைய நாளங் களிலிருந்தே அதைப் பெருக்குவோம்!'' என்று ஆர்ப்பரித் தார்கள் பூர்ஷ்வாக்கள்.

செக் படையினரை அவர்கள் வன்முறைச் செயல்களுக் குத் தூண்டினார்கள். அவற்றில் தாங்களும் பங்கு பெற விரும்பினார்கள். முன்னணித் தொழிலாளர்களைச் சுட்டிக் காட்டிப் பழித்துரைத்தார்கள். கமிஸார்களை எங்கே காண லாம் என்பதை அவர்கள் அறிந்திருந்தமையால் அலுவல கங்களுக்கும் தொழிற்கூடங்களுக்கும் உள்ளே வழி காட்டிச் சென்றார்கள்.

கயமை சொட்டும் எலிமுகத்தினர் கும்பல் ஒன்றும்

வேலையில் மிக முனைந்திருந்தது. பழைய ஆட்சியின் ஒற்றர் களும் தூண்டிவிடுவோரும் கலகம் மூட்டுபவர்களுமே இந்த ஆட்கள். தங்கள் வளைகளுக்கு உள்ளே இருந்து திர ளாக வெளி வந்து தங்களுக்கு உவப்பான சூழ்நிலையைக் கண்டதும் இவர்கள் போல்ஷெவிக்குகளுக்கு எதிராக அட்டூழியங்கள் செய்வதன் மூலம் பூர்ஷ்வாக்களின் தய வைச் சம்பாதிக்க முயன்றார்கள். மரநாய்கள் போல அவர் கள் எங்கும், நான் இருந்த கட்டிடத்திற்கு உள்ளேகூட, நுழைந்தார்கள்.

திடீரென்று வீரிடல்களும் திட்டல்களும் தடதடக் கும் காலடிகளின் ஓசையும் எனக்கு மேலிருந்த மாடியிலிருந்து வந்தன. மேல் மாடியில் இருந்த கட்சி அலுவலகத்தில் தாக்கிப் புகுந்த நான்கு ஆட்கள் ஸோயாவைப் பிடித்து விட்டார்கள். தன்னந்தனியாக அவர்களை எதிர்த்து வழி யில் ஒவ்வொரு அங்குலமும் போராடியவாறு சென்றாள் அவள். அவளுடைய கைகளை முறுக்கி, அவளைக் குத்தித் தள்ளித் தெருவுக்கு இழுத்துச் சென்று சிறைச்சாலைக்கு நடத்திப் போனார்கள் ஒற்றர்கள். இத்தகைய காட்சிகள் நகர் முழுவதிலும் நிகழ்ந்தன. கமிஸார்களும் தொழிலா ளர்களும் அலுவலகங்களிலும் தொழிற்கூடங்களிலும் பாங் குகளிலும் தங்கள் வேலைகளில் முனைந்திருந்தார்கள். திடீ ரெனக் கதவுகள் விரியத் திறக்கப்பட்டன. ஆட்கள் அவர் கள் மேல் பாய்ந்து அவர்களைச் சாலைக்கு இழுத்துச் சென் றார்கள்.

நெடுஞ்சாலையின் நடுவே கூட்டம் விலகி, குறுகிய நடை வழி விட்டது. சிறைப்பட்டவர்கள் விலங்கிடப்பட் டோ கைது செய்தவர்களால் இறுகப் பிடித்துக்கொள்ளப் பட்டோ ரிவால்வர் அடிப்பகுதியாலும் துப்பாக்கிக் குத் தீட்டி முனையாலும் உந்தப்பட்டு இந்தப் பாதை வழியே ஓட்டிச் செல்லப்பட்டார்கள். கூவொலிகளும் ஏளனக் குரல் களும் பூனைக் கத்தல்களும் அவர்கள் காதுகளைத் துளைத்தன. இறுக்கிய முட்டிகள் அவர்கள் முகங்களை இடிப்பதுபோல ஆட்டப்பட்டன. கூட்டம் சிலர் மீது துப்பியது, அவர்களைப் புடைத்தது. நடை வழிக்குள் பொங்கிவந்து அவர்கள் மேலே போக விடாது தடுத்தது.

பாங்குகளின் கமிஸார் கூட்டத்தினரின் அதிகப்படிச் சீற்ற வெடிப்புக்கு ஆளானுர். அவர்களுடைய ஜீவ நாடியை, பண நரம்பை அவர் நேரடியாகத் தாக்கியிருந்தார் அல்லவா, அதனுல். பூர்ஷ்வாக் கூட்டத்தினர் உரக்கக் கத்திஞர்கள், கூவிஞர்கள், அவரைக் கைவேறு கால்வேறு ஆகப் பிய்த்துப் போட்டுவிடத் துடித்தார்கள். வெள்ளை பிளானல் உடை அணிந்த ஒரு கனவான், சீற்ற வெறியால் முகம் சிவக்க ரிவால்வரை ஓங்கி ஆட்டியவாறு செக் காவல் படையினர் வரிசையைப் பிளந்து ஊடுருவி, கமிஸாரின் தோள்களைப் பற்றி, செவ்விந்தியன் போல உறுமிக்கொண்டே அவர் பக்கத்தில் மிடுக்காக நடந்தான்.

இகழ்ச்சி ததும்பிய, வெறுப்பால் கோணிய சுளித்த முகங்களின் இந்த இடைவழியாகக் கமிஸார்கள் ஒருவர் பின் ஒருவராகத் தள்ளிச் செல்லப்பட்டார்கள். இந்த முகங்களுக்கு மாருக அவர்களுடைய முகங்களில் விசித்திரமான கம்பீரமும் அமைதியும் திகழ்ந்தன. சில முகங்கள் வெளிறியிருந்தன, ஆனுல் மொத்தத்தில் அவை அஞ்சாமையும் அநேகமாக நயப்பாங்கும்கூடக் கொண்டிருந்தன. இந்த மனிதர்கள் விழிப்புடன் இருந்தார்கள், எல்லாவற்றிலும் மிகுந்த ஆர்வம் காட்டிஞர்கள். இவர்கள் வாழ்க்கையை அனுபவித்திருந்தார்கள். சிறைச்சாலை இருட்டறைகள் முதல் உயர்ந்த அரசாங்கப் பதவிகள் வரை வாழ்க்கையின் பல ஏற்ற இறக்கங்களைக் கண்டு தெளிந்திருந்தார்கள். எத்தனையோ துணிகரச் செயல்கள் நிகழ்த்தியிருந்தார்கள் அவர்கள். திருப்பத்திற்கு அப்பால் என்ன புது ஆச்சரியம் அவர்களுக்காகக் காத்திருக்கிறது? மிகக் கிளர்ச்சி யூட்டும், ஒருவேளை கடைசியான ஆச்சரியம் போலும். அப்படியானுல் அது வரட்டும். சாவு இவர்களுக்கு அச்சமே உண்டாக்கவில்லை. வெகு காலத்துக்கு முன், இவர்கள் புரட்சிக்குத் தங்களை அர்ப்பணித்தபோதே இந்த விஷயம் தீர்க்கப்பட்டு விட்டிருந்தது. தங்கள் உயிர்கள் உட்படத் தங்களிடமிருந்த எல்லாவற்றையும் புரட்சிக்கு வழங்கிவிட்டார்கள் இவர்கள்.

இவர்கள் புரட்சிப் படைவீரர்கள். அது அழைத்த போது இவர்கள் வந்தார்கள். அது அனுப்பிய இடத்

துக்குப் போனார்கள். அது இட்ட பணியை, மறு பேச்சின்றி, கீழ்ப்படிவுடன் நிறைவேற்றினார்கள். ஜார் ஆட்சிக் காலத்தில் கிளர்ச்சிப் பிரசாரகர்களாகப் பணியாற்றும்படி புரட்சி இவர்களை அழைத்தது. சோவியத் ஆட்சிக்காலத்தில் கமிஸார்களின் பதவிக்கு இவர்களை அது தெரிந்தெடுத்தது. புரட்சியின் அழைப்பு கிடைத்ததும் ஒழிவு நேரத்தையும் சௌகரியங்களையும் உடல் நலத்தையும் இவர்கள் அர்ப்பணித்துவிட்டார்கள், அவ்வாறு செய்வதிலேயே இன்பம் கண்டார்கள். இப்போது உயிர்களை வழங்குமாறு இவர்கள் கட்டளை இடப்பட்டிருந்தார்கள். இந்தப் பரம தியாகத்தில் பரம ஆனந்தம் இவர்கள் பெற முடியாதா!

இந்த எண்ணங்கள் யாவும் மேல்னிக்கவின் முகத்தில் துலக்கமாகத் தெரிந்தன. சீறுவதும் கர்ஜிப்பதும் உறுமுவதுமாக இருந்த பகைவர்களின் இந்த இடிப்புயலின் ஊடாக வெயிலொளிக் கீற்று போன்று புன்னகை மிளிர நடந்தான் அவன். ஸ்வெத்லான்ஸ்காயா என்றால் ''ஒளிவீசும் வழி'' என்று அர்த்தம். என் நினைவில் அது இந்தத் தொழிலாளியின் முகத்தோற்றத்தால் எப்போதும் ஒளி பெற்றுத் திகழும். தெய்விகமான, அறிவெல்லைக்கு அப்பாற்பட்ட ஒரு பாவம் அவன் தோற்றத்தில் காணப்பட்டது. கைகளால் புடைக்கவும் ஏளனம் செய்யவும் துப்பவும் பட்டவாறு குன்றின் மேல் ஏறிச் சென்ற அவன், பகைமை நிறைந்த வேறொரு கூட்டத்திற்கு இடையே சிரமப்பட்டு வழிசெய்து கொண்டு வேறொரு மலை மீது—நெடுங்காலத்துக்கு முன்—ஏறிச் சென்ற இன்னொரு உழைப்பாளரின் உருவத்தை விந்தையான முறையில் ஒத்திருந்தான்.

ஒரே வித்தியாசம், இது இயேசு கிறிஸ்து நடந்த ''துன்ப வழி'' அல்ல என்பதே. இது ''வெற்றி வழி'' யாக விளங்கியது, மேல்னிக்கவ் வெற்றிவீரனாகப் பவனி வந்தான். அவன் முகம் புன்னகைப் பூஞ்சோலையாகத் திகழ்ந்தது. எப்போதுமே பளிச்சிடும் அவன் விழிகள் முன்னிலும் அதிகமாகப் பளிச்சிட்டன. அவனது முகத்தில் முன்னிலும் அதிகக் காந்தி ஒளிர்ந்தது. ''கயவாளிப் பயல்! தூக்கில் இடுங்கள் இவனை!'' என்று கரகரத்த குரல் ஒன்று கத்தியது. மேல்னிக்கவ் வெறுமே புன்னகை செய்தான்.

கனத்த முட்டி ஒன்று அவன் கன்னத்தைத் தாக்கியது. அவ ஞே மீண்டும் முறுவலித்தான். இழிசினர் கூட்டத்தின் கீழ்த் தர ஆவேசங்களுக்கு மேலே, அதன் அடிகளும் ஏளனங் களும் எட்டாத தூரத்துக்கு உயர்ந்துவிட்ட ஒருவனின் புன்னகை அது. வெறுப்போர் மீது இரக்கத்தால் தோன் றிய புன் சிரிப்பு அது. அந்த முறுவலில் இருந்த ஆற்றலை மேல்னிக்கவ் உணர்ந்திருக்க முடியுமா? வியந்து நோக்கிக் கொண்டிருந்தவர்களின் உள்ளங்களில் அது பெற்ற மௌன வெற்றிகளை அவன் அறிந்திருக்க முடியுமா? தயக்கமும் ஊசலாட்டமும் கொண்டவர்களைப் புரட்சிப் பாசறைக் குள் ஈர்த்த காந்தம் அது. அதே சமயம் புரட்சி எதிர்ப் பாளர்களின் பாசறையில் பேரழிவு விளைத்த கூர்வாள் அது.

மேல்னிக்கவின் இந்தப் புன்னகையையும் ஸுஹான வின் சிரிப்பையும் அவர்களால் சகிக்க முடியவில்லை. இவை அவர்களுக்கு எரிச்சல் ஊட்டின, அவர்களைத் தொடர்ந்து சூழ்ந்தன. இந்த இளைஞர்களைத் தெருக்களிலேயே அடித் துக் கொன்று விட பூர்ஷ்வாக்களுக்கு விருப்பந்தான். ஆனால் அதற்கு அவர்கள் துணியவில்லை—இன்னும். கமிஸார்கள் கொல்லப்படவில்லை, சிறையில் இடப்பட்டார்கள்.

சோவியத் மூழ்கடிக்கப்படுகிறது

தொழிலாளர்களை மொத்தமாகப் படுகொலை செய் வதற்கு நேசநாட்டினர் தற்போதைக்கு எதிராயிருந்தார் கள். தங்கள் தலையீடு ஜனநாயகத்திற்கான அறப்போர் போலவும் எல்லா மக்களாலும் வரவேற்கப்படுவது போல வும் தோன்றச் செய்ய அவர்கள் ஆர்வம் கொண்டிருந் தார்கள். தான் முற்ற முழுக்க ஜார்வாதப் பிற்போக்கே என்பதைத் தலையீடு இன்னும் வெளிப்படையாகக் காட் டிக்கொள்ளவில்லை. நேசநாட்டினரின் திட்டப்படி விளாதி வஸ்தோக் சைபீரியாமீது பாய்வதற்கு வாய்ப்பான கால் வைக்கும் இடமாக விளங்க வேண்டியிருந்தது. கால்வைக் கும் இடம் இரத்தத்தால் மட்டுமீறி வழுக்கலாவதை அவர்கள் விரும்பவில்லை. உள் பகுதியில், சைபீரியாவின்

பின் பிரதேசங்களில் குடியானவர்கள், தொழிலாளர்களின் குருதி ஆறுகளாகப் பெருகலாம். ஆனால் உலகின் பார்வைக்குத் துலக்கமாகத் தென்பட்ட இந்தத் துறைமுக நகரத்தில் அவ்வாறு நடப்பது கூடாது. சில செங்காவற்படையினரும் தொழிலாளர்களும் வழியிலேயே சுட்டுக் கொல்லப் பட்டார்கள். ஆனால் பொது இரத்தப் பெருக்கு நிகழவில்லை. தாக்குதலின் திடீர்த்தன்மை, துருப்புக்களின் மிகப் பெருந்தொகையான திரள்கள் சோவியத்தைத் திக்குமுக்காடச் செய்துவிட்டன.

ஒரே ஒரு இடத்தில் மட்டுமே அணிதிரள்வதற்கு சோவியத் வீரர்கள் வாய்ப்பு பெற்றனர்கள். கப்பல் துறை அருகே, அதாவது கப்பல்களில் சரக்கேற்றுபவர்கள், சுமையாட்கள், கரி தள்ளுபவர்கள் ஆகியோர் குழுமும் இடம் அது. அவர்கள் குடியானவர்களின் மக்கள். மயிரடர்ந்த பெரிய உடலினர். பார வேலைக்கு ஏற்ற கனத்த தசைக்கட்டு அமைந்தவர்கள். அரசையும் அரசியலையும் பற்றிய சிக்கலான பிரச்சினைகளை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை, ஆனால் ஒரு எளிய விஷயம் அவர்களுக்கு விளங்கிவிட்டது. ஒரு காலத்தில் அடிமைகளாக இருந்த அவர்கள் இப்போது விடுதலை பெற்றிருந்தார்கள்! விலங்குகளின் தரத்திலிருந்து மனிதர்களின் தரத்துக்கு அவர்கள் உயர்த்தப் பெற்றிருந்தார்கள். இவ்வாறு செய்தது சோவியத்தே என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள்.

இப்போது சோவியத் ஆபத்தில் இருந்ததை அவர்கள் கண்டார்கள். பக்கத்திலிருந்த செவ்வலுவலகக் கட்டிடத்துக்குள் விரைந்தோடி, கதவுகளை உட்புறம் தாழிட்டு நாதாங்கிகளை மாட்டிவிட்டு, ஜன்னல்களை அரண் செய்து, துப்பாக்கிகளைக் கைகளில் பிடித்துத் தாக்குதலை எதிர்க்க ஆயத்தமாகத் தங்கள் இடங்களில் பதுங்கினார்கள் அவர்கள். சோவியத்துக்காக இந்த இடத்தை என்ன விலை செலுத்தியும் தம்வசம் வைத்திருக்க அவர்கள் தீர்மானித்து விட்டார்கள்.

அவர்கள் ஒவ்வொருவருக்கும் எதிரே நூறுநூறு பெயர் விகிதம் இருந்தார்கள் பகைவர்கள். சரக்கு ஏற்றும் பணியினரான இருநூறு பெயர் போர்த் தேர்ச்சி பெற்ற

இருபதினுயிரம் துருப்புக்களை எதிர்த்து நின்றூர்கள். மெஷீன்கன்களுக்கு எதிரே ரிவால்வர்கள். பீரங்கிகளுக்கு எதிரே துப்பாக்கிகள். எனினும் சுமையாட்களின் இந்தக் காவல் படையின் தரப்பில் இருந்தது புரட்சிச் சுவாலை. வெளிப் பார்வைக்கு அவ்வளவு மொத்தையாகவும் மந்த மாகவும் காணப்பட்ட இந்தக் கரி தள்ளுவோரின் உணர்ச்சி களை அந்தச் சுவாலை சுடர்ந்து எரியச் செய்திருந்தது. அவர்கள் அச்சமின்மையும் விரைவும் துணிவும் நிறைந்த வர்கள் ஆகிவிட்டார்கள். அவர்களைச் சூழ்ந்திருந்த எஃகும் அழலும் கொண்ட வளையம் பிற்பகல் முழுவதும் மேலும் அடர்ந்து இறுகியது. அவர்கள் கலக்கமின்றி அதைக் கவ னித்துக் கொண்டிருந்தார்கள், சரணடைவதற்கான எல்லா அழைப்புக்களையும் மறுத்துவிட்டார்கள். இருட்டத் தொடங்குகையில் அவர்களுடைய துப்பாக்கிகள் ஜன்னல்கள் வழியாக இன்னும் நெருப்பைக் கக்கிய வண்ணமாக இருந்தன.

இருள் நிழலில் ஒரு செக் படையினன் ஊர்ந்து அருகே போய், கட்டிடத்தின் ஒரு ஜன்னல் வழியாக எறிகுண்டு ஒன்றை உள்ளே வீசினுன். கட்டிடத்தில் தீ மூண்டுவிட்டது. கப்பற் சரக்காட்களின் அரண் சிதை நெருப்பாக மாறி விடும் அபாயம் இப்போது எதிர்ப்பட்டது. தழலாலும் புகையாலும் சூழப்பட்டு, தட்டித்தடவி வெளியே வந்து, சரண் அடைவதற்கு அறிகுறியாகக் கைகளை உயர்த்திய வாறு தெருவில் தடுமாறி நடந்தார்கள் அவர்கள். சிலர் படுகொலை செய்யப்பட்டார்கள், வேறு சிலர் மூர்ச்சை யாகும் படி குந்தாக்களால் அடிக்கப்பட்டார்கள். மற்றவர் கள் சிறைச்சாலைக்கு நடத்திச் செல்லப்பட்டார்கள்.

எதிர்ப்பு தகர்த்து நொறுக்கப்பட்டு விட்டது. சோவியத் அழிக்கப்பட்டுவிட்டது. ஆட்சியைக் கைப்பற்று வதில் கிடைத்த வெற்றி குறித்து நேசநாட்டினர் தங்களை வாழ்த்திக் கொண்டார்கள். பூர்ஷ்வாக்களோ, மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்தார்கள். பெரிய மாளிகைகள், உணவு விடுதிகளின் ஜன்னல்களிலிருந்து விளக்குகள் பிரகாசமாக ஒளிவீசின. சிறு உணவு விடுதிகளிலிருந்து பாட்டொலி யும் இசைக் குழுவின் வாத்திய சங்கீதமும் துணுக்குகளாக

அவ்வப்போது காதில் விழுந்தன. கேளிக்கைக்காரர்கள் சிரித்தார்கள், நடனம் ஆடினர்கள், நேசநாட்டினரின் சீருடைகளுக்கு வெற்றி முழக்கினர்கள். சர்ச்சுகளிலிருந்து மணிகளின் டணர் ஒசையும் கணகணப்பும், கிணுகிணுப்பும் அதிர் இசையும் கேட்டன. உள்ளே பாதிரிகள் ஜார் அரசனுக்காகத் தோத்திரம் செய்தார்கள். போர்க்கப்பல்களின் மேல் தட்டுகளிலிருந்து விரிகுடா நீரைக் கடந்து ஒலித்தன எக்காளங்கள். நகரம் களியாட்டயர்ந்தது, ஆனந்தம் கொண்டாடிற்று.

ஆனல் தொழிலாளர் இருப்பிடங்களில் மகிழ்வு இல்லை. அங்கே குடிகொண்டிருந்த நிசப்தத்தை மாதரின் தேம்பல்கள் மட்டுமே கலேத்தன. திரையிட்டு மூடிய ஜன்னல்களின் பின்னே தங்கள் கொலேயுண்ட ஆடவர்களேக் கிடத்திக் கொண்டிருந்தார்கள் அவர்கள். பக்கத்திலிருந்த சவுக்கையிலிருந்து சம்மட்டி ஒலி கேட்டது. சுரசுரப்பான பல கைகளேப் பொருத்தித் தங்கள் உயிர்துறந்த தோழர்களுக்காகச் சவப் பெட்டிகள் தயாரித்துக் கொண்டிருந்தார்கள் ஆடவர்கள்.

அத்தியாயம் பதினெட்டு

செஞ் சவ ஊர்வலம்

ஜூலே மாதம் நாலாம் தேதி. நான் கித்தாய்ஸ்க்காயா வீதியில் நின்று கொண்டு, விளாதிவஸ்தோக் விரிகுடாவில் இருந்த **ப்ரூக்ளின்** என்ற அமெரிக்கப் போர்க்கப்பல் மீது அமெரிக்கச் சுதந்திர தின விழாவைக் கொண்டாடுவதற்காகப் பறக்க விடப்பட்டிருந்த கொடிகளேப் பார்த்துக் கொண்டிருந்தேன். திடீரென்று வெகு தொலேவிலிருந்து வந்த ஒலி என் செவிக்கு எட்டியது. உற்றுக் கேட்டேன். புரட்சி கீதத்தின் வரிகள் என் காதுகளில் விழுந்தன:

''விடுதலேக்காய்ச் சமர் புரிந்து
குருதி சிந்தினேர்
உடல்களேச் சுமந்து வந்தோம்
கனக்கும் நெஞ்சுடன்.''

நிமிர்ந்து நோக்கியவன், ஏதோ பெரிய ஊர்வலத்தின் முன் வரிசைகளைக் குன்றின் உச்சியில் கண்டேன். செவ்வலு வலகக் கட்டிட முற்றுகையில் நான்கு நாட்களுக்கு முன் கொல்லப்பட்ட துறைமுகச் சரக்கேற்றும் ஆட்களின் சவ ஊர்வலம் அது.

வீழ்ந்த சோவியத்தைக் காக்கப் போரிட்ட இந்த வீரர்களை அடக்கம் செய்யும் பொருட்டு, தங்கள் துயரத்தையும் அச்சத்தையும் உதறி எறிந்துவிட்டு இன்று வெளியே வந்திருந்தார்கள் மக்கள். தொழிலாளர் வட்டாரங்களிலிருந்து அவர்கள் பெருகி, தெருவையும் நடைபாதைகளையும் முழுதும் நிறைத்தவாறு நெருக்கமாக நடந்தார்கள். எழும் அலை போல மலையுச்சிமீது ஆயிரக்கணக்கில் பொங்கி வந்துகொண்டேயிருந்த மக்கள், நீண்ட மலைச் சரிவு முழுவதிலும் செம்மச் செம்ம அடர்த்தியாக நிறைந்து புரட்சிக்காரர்களின் இறுதிச் சடங்கு அணிநடைக்கு ஒத்தவாறு அடி வைத்து மெதுவாக இயங்கினார்கள்.

ஆடவர்கள், மாதர்களின் சாம்பலும் கருமையுமான அடர் திரளின் ஊடாக மேலே சென்றிருந்தன வெண் சட்டைகள் அணிந்த போல்ஷெவிக் கடற்படை வீரர்களின் இரண்டு வரிசைகள். வெள்ளிச் சரிகை முறுக்குக் கயிறுகளும் தொங்கற்குஞ்சங்களும் கொண்ட செங்கொடிப் படலங்கள் அவர்களுடைய தலைகளுக்குமேலே அலைமோதின. முன்னணியில் நான்கு ஆட்கள் ஒரு பெரிய செம் பதாகையை உயர்த்திப் பிடித்துக்கொண்டு வந்தார்கள். அதில் பின்வரும் சொற்கள் பொறிக்கப்பட்டிருந்தன: **''தொழிலாளர்கள்,குடியானவர்கள் பிரதிநிதிகளின் சோவியத் நீடூழி வாழ்க! உழைப்பாளிகளின் சர்வதேசச் சோதரத்துவம் வெல்க!''**

வெண் உடைகள் அணிந்த ஒரு நூறு பெண்கள் நகரின் நாற்பத்து நான்கு தொழிற்சங்கங்களின் சார்பில் பச்சைப் பூவளையங்களை ஏந்தியவாறு, இறந்த புரட்சிக்காரர்களுக்கு கௌரவக் காவலர்களாக அணிவகுந்து நடந்தார்கள். சிவப்புப் பூச்சு இன்னும் உலராதிருந்த சவப் பெட்டிகளை இறந்தோரின் தோழர்கள் தங்கள் தோள்கள் மீது தாங்கிவந்தார்கள். செங்கடற்படை வாத்தியக் குழு முழக்கிய இசை முப்பதினாயிரம் பாடகர்களின் குரல்களி

லிருந்து எழுந்த பாட்டின் பேரொலியில் அமுங்கிப் போயிற்று.

வண்ணமும் ஒலியும் இயக்கமும் இருந்தன இங்கே. அவற்றோடு வேறு ஒன்றும், அச்சமும் பணிவும் விளக்கும் ஒன்றும் இருந்தது. பெத்ரோகிராதிலும் மாஸ்கோவிலும் நடந்த மாபெரும் ஊர்வலங்களில் ஒரு இருபதுவரை நான் கண்ணாரக் கண்டிருந்தேன். சமாதான, வெற்றி, எதிர்ப்பு, நினைவு அணிவலங்களை, இராணுவ அணிநடைகளையும் நகரமக்கள் ஊர்வலங்களையும் நான் பார்த்திருந்தேன். அவை மாண்பு திகழ்ந்தன. ருஷ்யர்களால் மட்டுமே அவற்றை அவ்வளவு கம்பீரமானவை ஆக்க முடியும்.

ஆனால் இந்த ஊர்வலம் வேறு வகையானது.

ஆயுதங்கள் பறிக்கப்பட்டு, துயரப் பாட்டுக்களுடன் தங்கள் இறந்த தோழர்களைத் தாங்கிச் சென்ற, தற்காப்பு அற்ற, இந்த ஏழை மக்களிடமிருந்து வந்தது ஓர் அபாயம் —கீழே துறைமுகத்தில் நங்கூரம் பாய்ச்சியிருந்த நேச நாட்டுக் கடற்படையின் ஆறங்குல வாய்விட்டப் பீரங்கிகளிலிருந்து வந்ததைவிட அதிக அச்சம் ஊட்டும் அபாயம். இந்த அபாயத்தை உணராமல் இருக்க முடியவில்லை. அத்துணை எளியதாகவும் அவ்வளவு இயல்பானதாகவும் அவ்வளவு மூலதத்துவத் தன்மை உள்ளதாகவும் இருந்தது அது. மக்களின் இதயத்திலிருந்து நேரே வந்தது அது. தலைவர்கள் இன்றி, தனிப்படுத்தப்பட்டு, அடித்துத் தரையில் வீழ்த்தப்பட்டு, தம் கைகளையே நம்புமாறு நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தாலும் தங்கள் துயரத்தை அகற்றி விடுபட்டு, தங்கள் தலைமையைத் தாங்களே ஏற்க வீறுடன் எழுந்து வந்திருந்த மக்கள் அவர்கள்.

சோவியத் கலைக்கப்பட்டது மக்களைச் செயலற்ற துயரில் ஆழ்த்தி அவர்களுடைய ஆற்றல்களைச் சிதற அடிப்பதற்குப் பதிலாக, விந்தையான ஒற்றுமைப்படுத்தும் உணர்வைத் தோற்றுவித்திருந்தது. முப்பதாயிரம் தனித்தனி ஆன்மாக்கள் ஒன்றாக இணைத்துப் பொருத்தப்பட்டிருந்தன. முப்பதாயிரம் மனிதர்கள் ஒன்று சேர்ந்து பாடுகையில், தாங்கள் ஒன்றிசைந்து சிந்திப்பதை உணர்ந்தார்கள். பொதுவான வெகுஜனச் சித்தமும் வெகுஜன உணர்



விளாதிவஸ்தோக்கில் புரட்சி எதிர்ப்பு அதிகாரத்தை வலியப் பற்றிய போது கொலையுண்டவர்களது சவ ஊர்வலம்

வும் கொண்டு, தங்கள் வர்க்க நோக்கு நிலையிலிருந்து—புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் உறுதிவாய்ந்த நோக்கு நிலையிலிருந்து—தங்கள் தீர்மானங்களை அவர்கள் உருவாக்கினார்கள்.

கௌரவக் காவலர்களாக அணிவகுக்க முன்வந்தார்கள் செக் படையினர். ''வேண்டாம்'' என்று சொல்லி விட்டார்கள் மக்கள். ''நீங்கள் எங்கள் தோழர்களைக் கொன்றீர்கள். ஒருவருக்கு எதிரே நாற்பது பெயர் வீதம் அவர்களை எதிர்த்துப் போரிட்டீர்கள் நீங்கள். அவர்கள் சோவியத்தின் பொருட்டு உயிர் வழங்கினார்கள். நாங்கள் அவர்கள்மேல் பெருமை கொள்கிறோம். உங்களுக்கு நன்றி, ஆனால் அவர்களைச் சுட்டு வீழ்த்திய துப்பாக்கிகள் இறந்த பின் அவர்களுக்குக் காவல் செய்ய நாங்கள் விடமாட்டோம்.''

''ஆனால் இந்த நகரத்தில் உங்களுக்கு அபாயம் ஏற்படலாம்'' என்றார்கள் அதிகாரிகள்.

''பரவாயில்லை. நாங்களும் சாவுக்கு அஞ்சவில்லை. எங்கள் தோழர்களின் உடல்களுக்கு அருகே இறப்பதைத்

காட்டிலும் மேலான சாவு வேறு எது?'' என்று பதில் அளித்தார்கள் மக்கள்.

சில பூர்ஷ்வாச் சங்கங்கள் பூவளையங்கள் சாத்துவதற்காக வந்தன.

''வேண்டாம். எங்கள் தோழர்கள் பூர்ஷ்வாக்களை எதிர்த்துப் போராடி உயிர் நீத்தார்கள். நேரிய முறையில் போராடித் தூய மரணம் எய்தினார்கள் அவர்கள். அவர்களுடைய நினைவைத் தூய்மையாக வைத்திருப்பது எங்கள் கடமை. உங்களுக்கு நன்றி, ஆனால் உங்கள் பூவளையங்களை அவர்களுடைய சவப்பெட்டிகள்மேல் சாத்த எங்களுக்குத் துணிவில்லை'' என்று சொல்லிவிட்டார்கள் மக்கள்.

ஊர்வலம் அலியூத்ஸ்கிய் குன்றிலிருந்து கீழே பெருகி அடிவாரத்தில் இருந்த விசாலமான திறந்த வெளியை நிறைத்து, பிரிட்டிஷ் கான்ஸல் நிலையத்துக்கு எதிரே குழுமியது. பக்கத்தில், இடப்புறம் மின்சாரக் கம்பிகளைச் செப்பனிடுவதற்காக அமைந்த மேடையுடன் நின்றது ஒரு லாரி. அது அங்கே வேண்டுமென்றே நிறுத்தப்பட்டிருந்ததா அல்லது தற்செயலாகவா என்பது எனக்குத் தெரியாது. சற்று நேரத்தில் அது பேச்சாளர் மேடையாகப் பயன் பட்டது.

வாத்தியக்குழு ஆழ்ந்த சோக இசை பரப்பியது. ஆடவர்கள் மரியாதையாகத் தொப்பிகளை அகற்றினார்கள், பெண்கள் தலை வணங்கினார்கள். இசை நின்றதும் நிசப்தம் நிலவியது. வாத்தியக் குழு இரண்டாவது தடவை இசைத்தது. மறுபடியும் தொப்பிகள் அகற்றப்பட்டன, சிரங்கள் வணங்கின. பின்பு மீண்டும் நீண்ட மௌனம் குடிகொண்டது. அப்படியும் ஒருவரும் பேச முன்வரவில்லை. திறந்த வெளியில் நடக்கும் பெரிய குவேக்கர் கழகக் கூட்டம் போல் இருந்தது அது. ருஷ்யப் பொதுத் தொழுகையில் உபதேசவுரைக்கு எப்படி இடம் கிடையாதோ அப்படியே பொதுப் பற்றைக் காட்டிய இந்தச் செயலுக்குப் பேச்சு தேவைப்படவில்லை. எனினும் மக்களில் யாருக்கேனும் பேச ஆர்வம் உண்டானால் அவருக்காகத் தயாராயிருந்தது பேச்சு மேடை. இந்த இடைநிறுத்தத்தில் மக்கள் குரலை உற்பத்தி செய்துகொண்டிருந்தது போலத் தோன்றியது.

முடிவில் ஒருவன் கூட்டத்திலிருந்து வந்து உயர்ந்த மேடை மேல் ஏறினன். அவனுக்கு வாக்குவன்மை இல்லை தான், எனினும் ''அவர்கள் நமக்காக உயிர் துறந்தார்கள்,'' ''அவர்கள் நமக்காக உயிர் துறந்தார்கள்'' என்ற பல்லவியை மீண்டும் மீண்டும் அவன் அழுத்திச் சொன்னது மற்றவர்களைத் தூண்டிப் பேச வைத்தது.

முதலில் வந்தான் ஒரு குடியானவன், வெண்கல நிறமும் தாடியும் குடியானவர் உடையுமாக. அவன் சொன்ஞன்: ''என் வாழ்நாள் முழுதும் கடும் உழைப்பும் அச்சமும் நிறைந்ததாக இருந்தது.... ஜார் ஆட்சியின் இருண்ட நாட்களில் வேதனையும் சித்திரவதையும் கொலையும் முடிவில்லாமல் நாம் அனுபவித்தோம். பின்பு புரட்சிக் காலை புலர்ந்தது, இந்தப் பயங்கரங்கள் அகன்றன. தொழிலாளர்களும் குடியானவர்களும் மிக மகிழ்ச்சி அடைந்தார்கள், நானும் சந்தோஷப்பட்டேன். ஆனல் நமது களிப்பின் நடுவே திடீரென்று வந்தது இந்த அதிர்ச்சி. மறுபடியும் நம்மை இருள் சூழ்ந்துவிட்டது. நம்மால் இதை நம்ப முடியவில்லை. ஆனல் இதோ நம் கண்ணெதிரே உயிரற்றுக் குளிர்ந்து கிடக்கிருர்கள் சோவியத்துக்காகப் போரிட்ட நம் சோதரர்களும் தோழர்களும். வடக்கே வேறு தோழர்கள் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகி வீழ்ந்து கொண்டிருக்கிருர்கள். மற்ற நாடுகளின் குடியானவர்களும் தொழிலாளர்களும் நம்மை மீட்க வரும் ஒலியைக் கேட்பதற்காக நாம் காதுகளைக் கூராக்கிக் கொண்டு உற்றுக் கவனிக்கிறோம். ஆனல் வீண். நமக்குக் கேட்பதெல்லாம் வடக்கே முழங்கும் பீரங்கிகளின் ஓசை மட்டுமே.''

அவன் பேசி முடித்ததும் நீல வானின் பகைப்புலத்தில் வெண்ணுடை அணிந்த ஒரு உருவம் தென்பட்டது. ஒரு பெண் மேடைமேல் ஏறியிருந்தாள். கூட்டத்தின் வேண்டுகோளுக்கு இணங்க அவள் பேசலுற்ருள்:

''கடந்த காலம் எல்லாம் எங்கள் ஆடவர்கள் போர் முனைகளுக்கு இட்டுச் செல்லப்படுவதும் நாங்கள் வீட்டில் இருந்து அழுது புலம்புவதுமே எங்கள் விதியாக இருந்து வந்தது. அதுதான் நீதி என்றும் எங்கள் புகழுக்காகவே அவ்வாறு செய்யப்படுவதாகவும் எங்களை ஆண்டவர்கள்

சொன்னார்கள். அந்தப் போர்கள் தொலைவில் நடந்தன, எங்களுக்கு அவை புரியவில்லை. ஆனால் இங்கேயோ, எங்கள் புருஷர்கள் எங்கள் கண்ணெதிரிலேயே கொல்லப்பட்டார்கள். இதை எங்களால் புரிந்துகொள்ள முடிகிறது. இதில் நீதியும் இல்லை, புகழும் இல்லை என்பது எங்களுக்கு விளங்குகிறது. இது குரூரமான, ஈவிரக்கம் அற்ற அநீதி. தொழிலாளி வர்க்கத் தாய்மாருக்குப் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் இந்த அநீதி பற்றிய கதையைக் கேட்கும்.''

இளம் சோஷலிஸ்டுகள் கழகச் செயலாளனை பதினேழு வயது இளைஞன் எல்லோரையும் விடச் சிறந்த சொல்வன்மையுடன் பேசினான். அவன் சொன்னான்: ''நாங்கள் மாணவர்களும் கலைஞர்களும் இம்மாதிரிப் பிறரும். நாங்கள் சோவியத்திலிருந்து தனித்து ஒதுங்கி இருந்தோம். அறிவுசான்றவர்களின் மூதறிவு இல்லாமல் தொழிலாளர்கள் ஆட்சி நடத்துவது எங்களுக்கு முட்டாள்தனமாகப் பட்டது. ஆனால் நீங்கள் செய்தது சரி, நாங்கள் எண்ணியது தவறு என்பதை இப்போது நாங்கள் அறிந்துகொண்டோம். இனி நாங்கள் உங்களுடன் சேர்ந்து நிற்போம். நீங்கள் செய்வதைச் செய்வோம். நீங்கள் அனுபவித்த அநீதிகளை ருஷ்யா முழுவதும் உலகு அனைத்தும் அறியுமாறு செய்வதற்கு வாய்ச்சொற்களாலும் எழுத்தினாலும் பாடுபடுவோம் என்று சபதம் செய்கிறோம்.''

கான்ஸ்தாந்தீன் ஸுஹானவ் மாலை ஐந்து மணிவரை நிபந்தனையின்பேரில் விடுதலை செய்யப்பட்டிருப்பதாகவும் சமாதானமும் நிதானமும் கடைப்பிடிக்குமாறு யோசனை கூற அவர் வந்து கொண்டிருப்பதாகவும் திடீரென வதந்தி பரவியது.

அவர் வருவார் என்று சிலரும் வரமாட்டார் என்று வேறு சிலரும் சொல்லிக்கொண்டிருக்கையில் அவர் தாமே தென்பட்டார். கடற்படை வீரர்கள் அவரைத் தூக்கி அஞ்சல் முறையில் மேடைப் புறம் விரைவாக அனுப்பினார்கள். புயல்போன்ற மகிழ்ச்சி ஆரவாரத்திற்கிடையே அவர் ஏணிப்படிகளில் ஏறி மேடையின் உச்சியை அடைந்தார். அவர் முகத்தில் புன்னகை தவழ்ந்தது....

தங்கள் இளம் தலைவரின் சொற்களை எதிர்பார்த்து

நிமிர்ந்திருந்த, நம்பிக்கையும் அன்பும் நிறைந்த முகங்கள் மீது இரண்டு முறை அவர் பார்வையை ஓட்டினூர்.

எல்லாப் புறங்களிலுமிருந்து தம்மை நோக்கிப் பெருகி வந்த துன்பமும் ஏக்கமும் கொண்ட வெள்ளத்திலிருந்து தப்புவதற்காகப் போலும், அவர் தமது தலையை மறுபுறம் திருப்பிக் கொண்டார். தமது சோவியத்தைக் காப்பதற்காகப் போரிட்டு மடிந்த மனிதர்களின் சிவப்புச் சவப்பெட்டிகள் முதன் முறையாக அவர் கண்களில் பட்டன. இந்தக் காட்சியை அவரால் தாங்க முடியவில்லை. அவரது உடலில் நடுக்கம் ஏற்பட்டது. கைகளை உயரே வீசினூர், தள்ளாடினூர், கூட்டத்தில் தலைகுப்புற விழத் தெரிந்தார். ஒரு நண்பர் பிடித்துக்கொண்டதால் தப்பினூர். முகத்தை இரு கைகளிலும் புதைத்துக் கொண்டு தோழர்களின் அணைப்பில் சாய்ந்து, குழந்தை போலத் தேம்பி அழுதார் ஸுஹானவ். அவர் மார்பு எழுந்து தணிவதையும் கண்ணீர் அவர் கன்னங்கள் வழியே பெருகியதையும் நாங்கள் காண முடிந்தது. ருஷ்யர்கள் கண்ணீர் விடுவது அரிதே. ஆனூல் அன்று முப்பதாயிரம் ருஷ்யர்கள் விளாதிவஸ்தோக் நகரப் பொதுச் சதுக்கத்தில் தங்கள் இளம் தலைவருடன் சேர்ந்து விம்மி அழுதார்கள்.

இறந்தவர்களுக்குப் பிரதிக்கினை

நிறையக் கண்ணீர் விடுவது வீண் இன்பம் அனுபவிப்பது ஆகும் என்றும் தாம் ஒரு பெரிய, முக்கியமான கடமையை நிறைவேற்றவேண்டியிருக்கிறது என்றும் ஸுஹானவ் அறிந்திருந்தார். அவருக்கு ஐம்பது அடிகள் பின்னூல் இருந்தது பிரிட்டிஷ் கான்ஸல் நிலையம். முன்னே தங்கக் கொம்பு விரிகுடாவில் இருந்தன நேசநாட்டுக் கடற்படையின் முறைக்கும் பீரங்கிகள். துயரத்திலிருந்து தம்மை வலிந்து இழுத்து விடுவித்துக்கொண்டு நிதானத்துக்கு வந்து பேசத் தொடங்கினூர். வர வர அதிகரிக்கும் உள்ளார்வ ஆவேசத்துடன் அவர் பேசினூர். முடிவில் அவர் கூறிய பின் வரும் சொற்கள் விளாதிவஸ்தோக்கிலும் சோவியத் தூரக் கிழக்கிலும் உள்ள தொழிலாளர்களை அணிதிரட்டும் கோஷமாகப் பின்னர் பணியாற்றின:

''இங்கே, நமது துறைமுகச் சரக்கேற்றும் ஆட்களான தோழர்கள் கொல்லப்பட்ட செவ்வலுவலகக் கட்டிடத்தின் முன்னே, அவர்கள் வைக்கப் பட்டிருக்கும் சவப்பெட்டிகளின் ஆணையாக, அவர்களுக்காக அழும் மனைவிமக்களின் ஆணையாக, அவர்களுக்கு மேலே காற்றில் அசைந்தாடும் செம்பதாகைகளின் ஆணையாக நாம் பின்வருமாறு பிரதிக்கினை செய்கிறோம்: எந்த சோவியத்துக்காக அவர்கள் உயிர் துறந்தார்களோ அதற்காகவே நாம் வாழ்வோம், அல்லது, தேவைப்பட்டால் அவர்களைப் போலவே உயிர் வழங்குவோம். இன்று முதல் சோவியத்தை மீட்டும் நிலை நாட்டுவதே நமது எல்லாத் தியாகங்களுடையவும் ஆழ்ந்த ஈடுபாட்டினுடையவும் குறிக்கோளாக இருக்கும். இந்தக் குறிக்கோளின் பொருட்டு நாம் எல்லாச் சாதனங்களையும் கொண்டு போரிடுவோம். துப்பாக்கிகள் நம்மிடமிருந்து பறிக்கப்பட்டுவிட்டன. ஆயினும் உரிய தருணம் வரும் போது நம்மிடம் துப்பாக்கிகள் இல்லாவிட்டால் கழிகளையும் குண்டாந் தடிகளையும் கொண்டு நாம் போர் புரிவோம். அவையும் இல்லாது போய்விட்டால் வெறும் முட்டிகளாலும் உடல்களாலும் சண்டை செய்வோம். இப்போது நமது மனங்களாலும் உணர்வுகளாலும் மட்டுமே நாம் போரிட வேண்டியிருக்கிறது. அவற்றை நாம் கடுமையும் வலிமையும் வளையாமையும் உள்ளவை ஆக்குவோம். சோவியத் இறந்துவிட்டது. சோவியத் நீடூழி வாழ்க!''

கடைசிச் சொற்களைக் கூட்டத்தினர் பெருத்த ஆர்ப்பாட்டத்துடன் திரும்பி முழக்கினர். அதனுடன் ''இன்டர்நேஷனல்'' கீதமும் பாடப் பெற்றது. அப்புறம் ''புரட்சியின் இறுதிச் சடங்குக் கீதம்'' பாடப்பட்டது. முறையீடும் வெற்றி உற்சாகமும் ஒருங்கே கொண்டது இப்பாட்டு.

''விதியை முடிக்கும் போரில் வீழ்ந்தீர் நீர்
மக்கள் விடுதலைக்காக, மக்கள் மானத்திற்காக.
உயிர்களையும் அன்புக்குரியவை அனைத்தையும்
வழங்கினீர்.
நீங்கள் துறந்த உயிர்கள் மதிக்கப் பெறும் காலம்வரும்.
அந்தக் காலம் நெருங்கி விட்டது:
கொடுங்கோன்மை வீழும், மக்கள் எழுவர்

மாண்பும் விடுதலையும் பெற்று.
செல்க, சோதரரே, சான்ற வழியைத் தேர்ந்தீர் நீர்.
உங்கள் கல்லறையில் சபதம் ஏற்கிறோம்,
விடுதலைக்காகவும் மக்களின் இன்பத்துக்காகவும்
போர் புரிவோம் என்று.''

தூரக் கிழக்கில் உள்ள புரட்சிகரப் பாட்டாளிகள், குடியானவர்களின் வருங்காலப் போராட்டங்கள் எல்லாவற்றினதும் குறிக்கோள் சோவியத்தை மீண்டும் நிலைநாட்டுவதே என்று பிரகடனம் செய்த ஒரு தீர்மானம் படிக்கப் பட்டது. வாக்களிக்க வேண்டுகோள் விடப்பட்டதும் முப்பதாயிரம் கரங்கள் மேலெழுந்தன. அந்தக் கரங்கள் ரெயில் பெட்டிகளை நிறுவியவை, சாலைகளை அமைத்தவை, இரும்பை உருக்கி வார்த்தவை, கலப்பை பிடித்தவை, சம்மட்டியை ஓங்கி அடித்தவை. பல வகையான கைகள் அவற்றில் இருந்தன: முதிய துறைமுகத் தொழிலாளர்களின் பெரிய, முரட்டுக் கைகள், லாகவமும் தசைப் பிடிப்பும் கொண்ட கம்மியர் கரங்கள், காய்ப்புக்கள் ஏறித் தடித்து முடிச்சுக்கள் விழுந்த குடியானவர் கைகள், உழைக்கும் பெண்டிரின் அதிக நொய்மையும் வெண்மையுமான ஆயிரமாயிரம் கைகள். தூரக்கிழக்கின் செல்வ வளங்களைப் பண்படுத்தியவை இந்தக் கரங்களே. உலகின் எந்தப் பகுதியையும் சேர்ந்த உழைப்பாளிகளின் தழும்பேறிக் கறை படிந்த கைகளிலிருந்து வேறானவை அல்ல இந்தக் கைகள். வித்தியாசம் ஒன்றுதான்: சிறிது காலத்துக்கு இந்தக் கரங்கள் ஆட்சி அதிகாரத்தை வைத்திருந்தன. அரசாங்கம் இவற்றின் பிடிக்குள் இருந்தது. நான்கு நாட்களுக்கு முன் அது இவற்றின் பிடியிலிருந்து வலியப் பறித்துக் கொள்ளப்பட்டது. எனினும் அதன் உணர்ச்சி இன்னும் இருந்தது இந்தக் கைகளில்—அந்த அதிகாரத்தை மீண்டும் எடுத்துக்கொள்ள ஆழ்ந்த சபதம் ஏற்கும் வகையில் உயர்த்தப்பட்ட இந்தக் கைகளில்.

''அமெரிக்கர்கள் புரிந்துகொள்கிறார்கள்''

குன்றின் உச்சியில் இருந்து விரை நடையாக வந்த ஒரு கடற்படை வீரன் கூட்டத்தை விலக்கிப் புகுந்து முன் சென்று மேடைமேல் ஏறினான்.

''தோழர்களே! நாம் தனியாக இல்லை. அமெரிக்கப் போர்க்கப்பல் மேல் பறக்கும் கொடிகள்மீது பார்வை செலுத்தும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் நிற்கும் இடத்திலிருந்து உங்களால் அவற்றைப் பார்க்க முடியாது. ஆனால் அவை பறக்கின்றன. இல்லை, தோழர்களே, இன்று நமது துயரத்தில் நாம் தனியர்கள் அல்ல. அமெரிக்கர்கள் புரிந்து கொள்கிறார்கள், அவர்கள் நம் தரப்பில் இருக்கிறார்கள்!''

இது தவறான எண்ணம் என்று சொல்லவே வேண்டாம். அன்று ஜூலை நான்காம் தேதி. அமெரிக்காவின் சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்காகத் தொங்கவிடப் பட்டிருந்தன கொடித் தோரணங்கள். ஆனால் கூட்டத்தினருக்கு அந்த விஷயம் தெரியாது. வெளிநாட்டில் தனியனாய் இருக்கும் பிரயாணியின் தோள்மேல் நண்பனின் கரம் திடீரெனப் பட்டதுபோன்று இருந்தது அது அவர்களுக்கு.

''அமெரிக்கர்கள் நம் தரப்பில் இருக்கிறார்கள்!'' என்று கடற்படை வீரனின் சொற்களை உற்சாகமாக எதிரொலித்தார்கள் அவர்கள். பின்பு சவப்பெட்டிகளையும் பூவளையங்களையும் பதாகைகளையும் தூக்கிக்கொண்டு தொழிலாளர்களின் அந்தப் பெருங் கூட்டத்தினர் மீண்டும் நடக்கலுற்றார்கள். அவர்கள் இடுகாட்டுக்குப் போனார்கள், ஆனால் நேராக அல்ல. வெயிலில் நீண்ட நேரம் நின்றதால் களைத்திருப்பினும் நேர் வழியை விட்டு வெகு தூரம் விலகி, அமெரிக்கக் கான்ஸல் நிலையம் இருந்த செங்குத்தான மலை வீதியை அடைந்தார்கள் அவர்கள். பின்பு பாடிக்கொண்டே நடந்து புழுதிப் படலத்தைக் கிளப்பியவாறு செங்குத்தான ஏற்றத்தின்மேல் சிரமப்பட்டு ஏறி நட்சத்திரங்களும் கோடுகளும் பொறித்த கொடி பறந்து கொண்டிருந்த கம்பத்தின் எதிரே வந்து சேர்ந்தார்கள். அங்கே நின்று, அமெரிக்கக் கொடியின் அடியில் தங்கள் உயிர்த்தியாகிகளின் சவப்பெட்டிகளை வைத்தார்கள்.

கைகளை முன்னே பரத்தி, ''எங்களுக்கு ஒரு வார்த்தை சொல்லுங்கள்!'' என்று கத்தினார்கள். பேசும்படி வேண்டிக் கொள்வதற்காக ஒரு பிரதிநிதிக் குழுவை உள்ளே அனுப்பினார்கள். மாபெரும் மேற்கத்தியக் குடியரசு தனது சுதந்

திரத்தைக் கொண்டாடிய நாள் அன்று ருஷ்யாவின் ஏழைகளும் மரபுரிமை அற்றவர்களும் தங்கள் சுதந்திரப் போராட்டத்தில் பரிவையும் புரிவையும் வேண்டியவாறு வந்தார்கள்.

''புரட்சிக் கௌரவத்தையும் நாணயத்தையும் மாசுபடுத்திய'' இந்தச் செயல் குறித்து ஒரு போல்ஷெவிக் தலைவர் கடுமையான ஆத்திரம் கொண்டதைப் பின்னர் நான் கேட்டேன்.

''மக்கள் செய்தது எத்தகைய மடமை! எத்தகைய பைத்தியக்காரத் தனம்! எல்லா நாடுகளும் ஒரே மாதிரியானவை—எல்லாம் ஏகாதிபத்தியவாதிகள்—என்று நாங்கள் இவர்களுக்குச் சொல்லியிருக்கவில்லையா? தலைவர்களால் இந்த உண்மை மறுபடி மறுபடி இவர்களுக்குக் கூறப்படவில்லையா?'' என்றார் அவர்.

கூறப்பட்டது என்பது உண்மைதான். ஆனால் ஜூலை நாலாந்தேதி நடந்த இந்த ஆர்ப்பாட்டத்துக்கும் தலைவர்களுக்கும் அனேகமாக எவ்விதச் சம்பந்தமும் கிடையாது. தலைவர்கள் சிறையில் இருந்தார்கள். விவகாரம் மக்களின் கரங்களிலேயே இருந்தது. அமெரிக்காவின் வெளிப்படையான கூற்றுக்கள்பால் பல தலைவர்கள் எவ்வளவுதான் ஆழ்ந்த அவநம்பிக்கை கொண்டிருந்த போதிலும் சாதாரண மக்கள் அவநம்பிக்கை கொண்டிருக்கவில்லை. கிழக்கின் புதிய சோஷலிஸ ஜனநாயகத்தை உருவாக்கியவர்களான இந்த எளிய, எதையும் நம்பும் மக்கள், தங்கள் துயர் வேளையில் மேற்கின் பழைய அரசியல் ஜனநாயகத்திடம் பரிவு வேண்டிக் கைகளை நீட்டியவாறு வந்தார்கள்.

''ருஷ்யாவின் மக்களுக்கு'' உதவியும் விசுவாசமும் தருவதாக ஜனாதிபதி வில்ஸன் வாக்குறுதி அளித்ததை அவர்கள் அறிந்திருந்தார்கள். அவர்கள் பின்வருமாறு தர்க்கித்தார்கள்: ''தொழிலாளர்களும் குடியானவர்களுமான நாங்கள், இங்கே விளாதிவஸ்தோக் நகரின் மிகப் பெரும்பான்மையினராகிய நாங்கள், மக்கள் அல்லவா? வாக்குறுதி அளிக்கப்பட்ட உதவியைக் கோரி இன்று எங்கள் துன்ப வேளையில் நாங்கள் வந்திருக்கிறோம். எங்கள் பகைவர்கள் எங்களுடைய சோவியத்தைப் பறித்துக் கொண்டுவிட்டார்

கள். எங்கள் தோழர்களை அவர்கள் கொன்றுவிட்டார்கள். நாங்கள் தனியர்களாக, துயரில் ஆழ்ந்திருக்கிறோம். உலகின் எல்லா நாடுகளிலும் நீங்கள் மட்டுமே எங்களைப் புரிந்து கொள்ள முடியும்.'' தங்கள் இறந்த தோழர்களுடன், அமெரிக்காவிலிருந்து, தங்கள் ஒரே நண்பனும் புகலிடமுமான அமெரிக்காவிலிருந்து, அனுதாபமும் புரிவும் வரும் என்ற நம்பிக்கையுடன் இவ்வாறு வந்ததைக் காட்டிலும் நேர்த்தியான புகழை அவர்கள் அந்நாட்டுக்குச் சூட்டியிருக்க முடியாது.

ஆனால் அமெரிக்கா புரிந்துகொள்ளவில்லை. அமெரிக்க மக்கள் இந்த நிகழ்ச்சி பற்றி ஒரு வார்த்தைகூடக் கேள்விப்படவில்லை. அமெரிக்க மக்கள் இதைப்பற்றிக் கேள்விப்படவே இல்லை என்பது ருஷ்ய மக்களுக்குத் தெரியாது. தங்கள் வேண்டுகோளுக்குச் சில வாரங்களின் பின் அமெரிக்கத் துருப்புக்கள் இறக்கப்பட்டன என்பதுதான் ருஷ்யர்களுக்குத் தெரியும். அமெரிக்கப் படைவீரர்கள் ஜப்பானியத் துருப்புக்களுடன் சேர்ந்துகொண்டு, குடியானவர்களையும் தொழிலாளர்களையும் சுட்டுத் தள்ளியவாறு சைபீரியாவுக்குள் முன்னேறினார்கள்.

இப்போது இந்த ருஷ்ய மக்கள் ஒருவருக்கொருவர் பின்வருமாறு சொல்லிக் கொண்டார்கள்: ''வெயிலிலும் புழுதியிலும் நின்று பிச்சைக்காரர்கள் போலக் கைகளை நீட்டினோமே, நாம்தாம் எப்பேர்ப்பட்ட முட்டாள்கள்!''

அத்தியாயம் பத்தொன்பது

வெளியேற்றம்

நேசநாட்டுப் படைகள் சைபீரியாவுக்குள் முன்னேறத் தொடங்கியதும், ''போல்ஷெவிக்குகள் முட்டை ஓடுகள் போல நொறுக்கப்படுவார்கள்'' என்று கூறினார்கள் மூதறிஞர்கள். சோவியத் மக்கள் தீவிரமாக எதிர்ப்பார்கள் என்ற கருத்து எள்ளி நகையாடப்பட்டது. ஜாரின் அரசாங்க

மும் பின்பு கேரென்ஸ்கியின் அரசாங்கமும் மணல் வீடு போலத் தகர்ந்து நொறுங்கிவிட்டன. சோவியத் அரசாங்கமும் அதே கதிக்கு ஏன் ஆளாகக் கூடாது?

ஏன் என்பதைச் சுட்டிக்காட்டினார் அமெரிக்க மேஜர் தாச்சர்: ஜாரின் அதிகாரம் அவனது சைனியங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இந்தச் சைனியங்களைக் கலைத்ததுமே ஜார் வீழ்ந்துவிட்டான். கேரென்ஸ்கிய் அரசாங்கம் மந்திரி சபையைச் சார்ந்திருந்தது. பனிக்கால அரண்மனையில் அவனுடைய மந்திரிகள் சூழ்ந்துகொள்ளப்பட்டதுமே கேரென்ஸ்கிய் சரிந்துவிட்டான். ஆனால் சோவியத் அரசாங்கமோ ஆயிரக்கணக்கான வட்டார சோவியத்துக்களில் வேரூன்றியிருக்கிறது. எண்ணற்ற உயிரணுக்களால் ஆன உறுப்புயிர் அது. சோவியத் அரசாங்கத்தை அழிப்பதற்குத் தனித்தனியான இந்த உறுப்பமைப்புக்கள் ஒவ்வொன்றும் அழிக்கப்பட வேண்டும். இவையோ அழிவை விரும்பவில்லை.

அபாய அறிவிப்பு தூரக் கிழக்கு நெடுகிலும் பரப்பப்பட்டதும் தொழிலாளர்களும் குடியானவர்களும் படையெடுப்பாளர்களுக்கு எதிராகத் திரண்டு எழுந்தார்கள். அவர்கள் உக்கிரமாகப் போரிட்டார்கள், அங்குலம் அங்குலமாகவே பின்னே நகர்ந்தார்கள். விளாதிவஸ்தோக்குக்கு வடக்கே இருந்த இரண்டு நகரங்களில் ஒரு ஆளைக்கூடக் கொல்லாமல் சோவியத்துக்கள் நிலைநாட்டப்பட்டிருந்தன. இந்த சோவியத்துக்களை வீழ்த்தும் முயற்சியிலோ, ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டார்கள். ஆஸ்பத்திரிகள் மட்டுமே அல்ல, சவுக்கைகளும் பண்டசாலைகளும் கூடக் காயமடைந்தவர்களால் நிறைந்துவிட்டன. ''சைபீரியாவின் ஊடே சுளுவான உலாவுக்குப்'' பதில் தலையீட்டாளர்களுக்குக் கடினமான இரத்தக் களரி எதிர்ப்பட்டது.

பிடிவாதமான இந்த எதிர்ப்பைக் கண்டு விளாதிவஸ்தோக் பூர்ஷ்வாக்கள் மலைத்துவிட்டார்கள். பிறகு கடுஞ்சீற்றம் கொண்டு சோவியத்தின் எல்லா ஆதரவாளர்களையும் வெறியுடன் தாக்கினார்கள் அவர்கள்.

நான் சற்று நேரம் கைது செய்யப்படுகிறேன்

எனக்குத் தியாகி ஆவதில் ஆர்வம் இல்லை. எனவே பிரதான வீதியை விட்டு விலகியிருந்தேன். மாறுவேடம் அணிந்து கொண்டோ அல்லது இரவின் மறைவிலோதான் வெளியே சென்றேன். நான் சமூகத்திலிருந்து விலக்கி ஒதுக்கப்பட்டவனாக இருந்தேன். ஆனால் அதனால் எனக்கு வருத்தம் உண்டாகவில்லை. ருஷ்யா பற்றிய எனது நூலின் கையெழுத்துப் பிரதியைக் குறித்தே நான் கவலை கொண்டேன். அது சோவியத் கட்டிடத்தில் இருந்தது. அந்தக் கட்டிடம் இப்போது புதிய வெண்படை அரசாங்கத்தின் தலைமை அலுவலகமாக இருந்தது.

கையெழுத்துப் பிரதியைப் பெறுவதற்கான ஒரே வழி பகைவர் முகாமுக்குள் துடுக்காகச் சென்று அதைத் தரும்படி கேட்பதுதான் என்று தீர்மானித்தேன். அவ்வாறே செய்தவன் புதிய இரகசியப் போலீஸ் தலைவன் கைகளில் அகப்பட்டுக் கொண்டேன்.

''நான் உங்களைத் தேடிக்கொண்டிருக்கிறேன். நீங்கள் வந்ததற்கு நன்றி. நீங்கள் எங்களுடன் தங்கியிருப்பீர்கள்'' என்று நையாண்டி மரியாதையுடன் சொன்னான் அவன். புரட்சி எதிர்ப்பின் கைதி ஆகிவிட்டேன் நான்.

நல்ல காலமாக அமெரிக்கர்களிடையே எனது பழைய சகபாடி ஒருவன் இருந்தான். பிரெட் குட்ஸெல் என்பது அவன் பெயர். என் சார்பில் பேச்சுவார்த்தை நடத்தி என்னை விடுதலை பெறச் செய்தான் அவன். ஆனால் என் கையெழுத்துப் பிரதியை வாங்கித்தர அவனால் முடியவில்லை.

இப்போது நான் என் இருப்பிடம் செல்லத் துணிவு கொண்டேன். யாரேனும் ஒற்றன் நான் வந்ததைக் கண்டு வெண்படையினருக்குப் போன் செய்திருக்க வேண்டும். நான் என் காகிதங்களை ஒழுங்குபடுத்துவதில் முனைந்திருந்த போது ஒரு கார் விரைந்து வந்து நின்றது. ஆறு வெண்படையினர் அதிலிருந்து குதித்து என் அறைக்குள் பாய்ந்து வந்து தங்கள் ரிவால்வர்களை என் முகத்தில் இடித்து, ''பிடித்துவிட்டோம் உன்னை, பிடித்துவிட்டோம் உன்னை இப்போது'' என்று கத்தத் தொடங்கினார்கள்.

...NEMARA PUBLIC L...

''ஆனுல் நான்தான் ஏற்கனவே கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டு விட்டேனே'' என்று மறுத்துரைத்தேன் நான்.

''உன்னை நாங்கள் கைது செய்யப் போவதில்லை, பாழாய்ப் போகிற பன்றிப்பயலே. உன்னைக் கொல்லப்போகிறோம்'' என்று கூச்சலிட்டார்கள் அவர்கள்.

மீண்டும் வெளியே திடீரென ஆரவாரம் உண்டாயிற்று. இன்னொரு மோட்டார் விரைந்து வந்து நின்றது. தடார்! மீண்டும் கதவு அனுமதியின்றி இடித்துத் திறக்கப் பட்டது! ஒரு காப்டனும் துப்பாக்கிகள் தாங்கிய நான்கு படைவீரர்களும் திடுமென அறைக்குள் புகுந்தார்கள். அவர்கள் செக்கோஸ்லோவாக்கியர்கள். என்னைக் கைது செய்ய உத்தரவு பெற்றிருப்பதாகச் சொன்னுர்கள்.

''ஆனுல் நாங்கள்தாம் ஏற்கனவே இவனைக் கைது செய்தாயிற்றே'' என்ருர்கள் வெண்படையினர்.

''இல்லை, நாங்கள்தாம் இவரைக் கைது செய்யப் போகிறேம்'' என்று சாதித்தார்கள் செக் இராணுவத்தினர்.

''நாங்கள் தாம் இவனைப் பிடித்தோம்'' என்று பிடிவாதம் செய்தார்கள் வெண்படையினர்.

நான் இத்தகைய அவல முக்கியத்துவம் வாய்ந்தவன் என்பதைக் கண்டு புளகாங்கிதம் அடைந்தேன். இதனுல் எனக்கு ஏற்பட்ட மனநிறைவு துப்பாக்கிக் குத்தீட்டிகளைக் கண்டதும் சற்று மட்டுப்பட்டது. அவை மிக நிறைய இருந்தன. அவற்றைப் பாய்ச்சுவதற்கு ஆர்வமும் அளவுகடந்து இருந்தது. கைதி ஆவதற்குப் பதில் நான் பிணம் ஆகிவிடக் கூடும். நல்ல வேளையாக செக் காப்டன் நகைச்சுவை உள்ளவனுக இருந்தான்.

என் பக்கம் திரும்பிச் சிரம் தாழ்த்து வணங்கி, ''இந்த விஷயத்தில் உங்கள் விருப்பம் என்ன? யாருடைய கைதி ஆவதை மேலாக மதிக்கிறீர்கள்?'' என்று கேட்டான் அவன்.

''உங்களுடைய —செக் படைவீரர்களுடைய— கைதி ஆக விரும்புகிறேன்'' என்று பதில் அளித்தேன்.

நேர்த்தியான பெருந்தன்மையுடன் வெண்படையினர் புறம் திரும்பினுன் அவன். ''கனவான்களே, இவர் உங்களுடையவர்'' என்று பெரிய மனதுடன் அறிவித்தான்.

தன் படைவீரர்களை என் காகிதங்களைச் சூறையாட அனுமதித்ததன் மூலம் அவன் சமாதானப்படுத்தினன் (இந்தக் காகிதங்கள் பின்னர் அமெரிக்கக் கான்ஸலிடம் கொடுக்கப்பட்டன).

வெண்படையினர் என்னைத் தங்கள் மோட்டாருக்குள் தள்ளி அடைத்தார்கள். சில நாட்களுக்கு முன் சோவியத்தின் விருந்தாளியாக நான் சவாரி செய்த நகரத்தின் ஊடாக இப்போது துப்பாக்கிக் குத்தீட்டிகளால் சூழப்பட்டு, இரண்டு ரிவால்வர்கள் பழுவெலும்புகளை அழுத்த, வெண்படையினரின் கைதியாகக் காரில் சவாரி செய்தேன்.

வெண்படைத் தலைமை அலுவலகத்தைச் சூழ்ந்து கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள் ஆத்திரம் கொண்ட பூர்ஷ்வாக்கள். போல்ஷெவிக்குகள் கைது செய்யப்படுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள் அவர்கள். ஒவ்வொரு புதிய கைதியையும் பூனைக் கத்தல்களாலும் ''சுருக்கு மாட்டுங்கள் இவன் கழுத்தில்'' என்ற கூச்சல்களாலும் வரவேற்றுக் கொண்டிருந்தார்கள். கேலிக் கூச்சல் இட்டுக் கொண்டிருந்த கூட்டத்தின் ஊடாக நான் கட்டிடத்துக்குள் நெட்டித் தள்ளப்பட்டவன் பெருத்த அதிர்ஷ்டவசத்தால் முன்பு அறிமுகமான ஸ்குவீர்ஸ்க்கிய் என்பவர் மேல் இடித்துக் கொண்டேன். தம்மைத் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ள வேண்டாம் என்று ஜாடை செய்து விட்டு அவர் சற்று நேரத்தில் எனக்கு விடுதலை பெற்றுத் தந்து விட்டார். இம்முறை எனக்கு ஒரு சான்றுக் கடிதம் தரப்பட்டது. ''குடிகளே, அமெரிக்கர் வில்லியம்ஸைக் கைது செய்யாதிருக்கும்படி நீங்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்'' என்று அதில் எழுதியிருந்தது.

தாய்நாட்டுக்குப் பயணம்

ஆனால் இந்தக் கடிதத்தில் பாதுகாப்பு அநேகமாக இல்லை. ஏனெனில் சோவியத்துக்கு எதிராகக் கொடும் வெறுப்பு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டுபோயிற்று. வேட்டையாடப்படும் விலங்கு போன்ற உணர்ச்சி எனக்கு

ஏற்பட்டது. பத்து நாட்களில் என் எடையில் பத்து பவுண்டு குறைந்துவிட்டது. ''எந்தக் கணத்திலும் நீங்கள் உயிரை இழக்கலாம். உங்களைக் கண்டதுமே சுட்டு வீழ்த்துவதாக இரண்டு குழுவினர் சபதம் செய்திருக்கிறார்கள்'' என்றார் அமெரிக்க உதவிக் கான்ஸல்.

''நான் போக ஆவலாயிருக்கிறேன் ஆனால் வெளியேறுவதற்குத் தேவையான பணம் என்னிடம் இல்லை'' என்றேன். எனது சங்கடத்தை அவர் கண்டுகொண்டார், ஆனால் அது தமது பொறுப்பு என்று அவர் எண்ணவில்லை.

என்னுடைய நெருக்கடி நிலை பற்றிக் கேள்விப்பட்ட தொழிலாளர்கள் எனக்கு மீட்சி அளிக்க முன்வந்தார்கள். அவர்கள் கஷ்ட தசையில் இருந்தார்கள் எனினும் ஆயிரம் ரூபிள்கள் திரட்டினார்கள். சிறையில் இருந்தவர்கள் இன்னோர் ஆயிரம் ரூபிள்கள் சேகரித்தார்கள். இப்போது நான் புறப்பட ஆயத்தமானேன். ஆனால் ஜப்பானியக் கான்ஸல் எனக்கு விஸா அளிக்க மறுத்துவிட்டார். என்மீது அவர் குற்றப்பத்திரிகை படித்தார். தலையீட்டுக்கு எதிராக நான் சோவியத் பத்திரிகைகளில் எழுதிய கட்டுரைகளே எனது குற்றங்களில் அவர் கருத்துப்படி முதன்மையானவை. ஜப்பானிய வெளிநாட்டு அமைச்சரகம் இந்தக் கட்டுரைகளை விரும்பவில்லையாம். என் வருகையால் ஜப்பானின் புனித மண் மாசுபடுத்தப்படுமாறு எக்காரணத்தை முன்னிட்டும் அனுமதிக்கலாகாது என்று அது தந்தி மூலம் உத்தரவிட்டிருந்தது. எனினும் சீனர்கள் எனக்கு விஸா வழங்கினார்கள். ஷாங்காய் செல்லவிருந்த நீராவிக் கப்பல் ஒன்றில் டிக்கெட் வாங்கிக் கொண்டேன்.

கடைசி இரவை மலையில் ஒளிவிடம் ஒன்றில் ''தவாரிஷ்களுடன்'' கழித்தேன். சோவியத் அழிக்கப்பட்டுவிடவில்லை. அது ''தரைக்கடியில்'' மறைந்து நிலவிற்று. இன்னும் சிறைப்படாமல் தப்பியிருந்த தலைவர்கள் மறைவிடத்தில் குழுமி, திட்டம் வகுத்தார்கள், ஒழுங்கமைத்தார்கள். பிரிவு அளிக்கையில் அவர்கள் பிரிட்டிஷ் போக்குவரத்துத் தொழிலாளர்களின் கீதத்தை எனக்காகப் பாடினார்கள். இந்தப் பாட்டை ஜெரோமிடமிருந்து அவர்கள் கற்றுக்கொண்டிருந்தார்கள்:

''கோட்டையைக் காப்பீர்,
வருகிறோம் நாங்கள்!
சங்கத்தீர், உறுதியாய் நிற்பீர்;
அக்கம்பக்கமாய்ப்
பொருது முன் செல்வோம்,
வெற்றி நமக்கே கிட்டும்.''

இந்தச் சொற்கள் என் காதுகளில் ஒலிக்க, ஜுலை 11ந் தேதியன்று நான் நேச நாட்டுப் போர்க்கப்பல்களின் அருகாகக் கடந்து பசிபிக் மாகடலில் பயணம் செய்யலானேன். அமெரிக்கா செல்லக் கப்பலில் இடம் கிடைக்கும் வரை ஷாங்காய் நகரில் ஒரு மாதம் வெட்டியாய்க் கழித்தேன். கடைசியில் கப்பலில் இடம் பிடித்தேன். தூரக்கிழக்கின் தங்கக் கொம்பு விரிகுடாவிலிருந்து புறப்பட்டதற்கு எட்டு வாரங்கள் பின்னர் காலிபோர்னியா நகரின் தங்க வாயிலைக் கண்ணுற்றேன்.

ஸான் பிரான்ஸிஸ்கோ துறைமுகத்தில் எங்கள் கப்பல் நங்கூரம் பாய்ச்சியதுமே ஒரு படகு அதன் அருகே வந்து நின்றது. கடற்படைச் சீருடை அணிந்த அதிகாரிகள் கப்பலில் ஏறினர்கள். அமெரிக்கக் கடற்படை வேவு இலாக்காவைச் சேர்ந்த இவர்கள் தாய்நாட்டில் என்னை வரவேற்பதற்காக அனுப்பப்பட்டிருந்தார்கள். தொலை தூர நாட்டில் நீண்டகாலம் கொம்மாளம் அடித்துவிட்டுத் திரும்பிய எந்த ஊதாரிப் புதல்வனும் இதைவிட இதயபூர்வமான வரவேற்பு பெற்றிருக்க மாட்டான். எனது நலத்தில் அவர்கள் காட்டிய பரிவு மிகக் கூச்சமளிப்பதாக இருந்தது. தங்கள் கவனிப்பினுல் என்னைத் திணற அடித்தார்கள் அவர்கள். தங்கள் இருப்பிடத்துக்கு என்னை அழைத்துச் செல்வதாகவும் என் சாமான்கள் பற்றிய விவரங்கள் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்வதாகவும் அவர்கள் விடாப்பிடியாக வற்புறுத்தினர்கள். சோவியத் விவகாரங்கள் எல்லாவற்றிலும் தங்களுக்கு ஆழ்ந்த அக்கறை உண்டு என அவர்கள் எனக்கு உறுதிகூறினர்கள். இதை நிரூபிப்பதற்காக என்னிடமிருந்த எல்லாப் பிரசுரங்களையும் பத்திரங்களையும் குறிப்புப் புத்தகத்தையும் எடுத்துக்கொண்டு விட்டார்கள். ருஷ்ய இலக்கியத்தின்பால் அவர்களுக்கு இருந்தது அடங்காப் பசி. அதில் ஒரு துணுக்குகூடத் தங்கள் பார்வைக்குத்

தப்பிவிடக்கூடாது என்பதற்காக என்னுடைய பணப்பைக்குள்ளும், காலணிகளுக்குள்ளும், தொப்பிப் பட்டைக்குள்ளும், என் கோட்டின் உள்துணிக்கு உள்ளேயும்கூடக் கூர்ந்து பார்த்தார்கள் அவர்கள். அதே போல என் வம்சாவளி, கடந்தகாலம், வருங்காலம், எல்லாவற்றையும் துருவி ஆராய்ந்தார்கள். பிறகு என்னை வேறு சில அதிகாரிகளிடம் ஒப்படைத்தார்கள். பின்னவர்கள் என் கருத்துக்களைத் துருவி ஆராய்ந்தார்கள்.

''நல்லது, மிஸ்டர் வில்லியம்ஸ், நீங்கள் சோஷலிஸ்ட். அதோடு நீங்கள் அனார்க்கிஸ்டும்*கூட, இல்லையா?'' என்று கேட்டான் என்னை விசாரித்தவர்களில் ஒருவன்.

இந்தக் குற்றச் சாட்டை நான் மறுத்தேன்.

''நல்லது, வேறு என்ன நம்பிக்கைகள் உங்களுக்கு உண்டு?''

''அல்ட்ருயிஸம், ஆப்டிமிஸம், பிராக்மாட்டிஸம்''** என்றேன்.

இவற்றை அவன் தன் நோட்டில் முறைப்படி குறித்துக்கொண்டான். இன்னும் விந்தையானவையும் அபாயம் உள்ளவையுமான ருஷ்யக் கோட்பாடுகள் அமெரிக்காவுக்குள் கொண்டு வரப்படுகின்றன என்று அவன் நினைத்தான் போலும்!

மூன்று நாட்கள் இன்பமான அளவளாவலுக்குப் பிறகு நான் வாஷிங்டனுக்கு அனுப்பப்பட்டேன்.

அத்தியாயம் இருபது

பின் நோக்கு

ருஷ்யப் புரட்சியை நிகழ்த்தியவர்கள் புரட்சிக்காரர்கள் அல்ல. ஏராளமான புரட்சிக்காரர்கள் புரட்சியை நிகழ்த்த முடிந்தவரை பாடுபட்டார்கள் எனினும் உண்மை

---

*அராஜகவாதி— (மொ-ர்)

**பிறர்நலவாதம், நம்பிக்கைவாதம், பயன்வழிவாதம். —(மொ-ர்)

இதுவே. மக்கள் குரூரமாக ஒடுக்கப்படுவது பற்றி ருஷ்யாவின் மேதை வாய்ந்த ஆடவரும் பெண்டிரும் ஒரு நூற்றுண்டுக் காலமாக உள்ளக் கொந்தளிப்பு அடைந்து வந்திருந்தார்கள். எனவே அவர்கள் கிளர்ச்சிக்காரர்கள் ஆனுர்கள். கிராமங்களுக்குள்ளும் தொழிற்கூடங்களுக்குள்ளும் அழுக்குச் சேரிகளுக்குள்ளும் பின்வருமாறு முழங்கிக் கொண்டு சென்றுர்கள்:

> ''தூக்கத்தில் உம்மைப் பிணித்திடு தளைகளைப்
> போக்குவீர் அசைத்தே பனித்துளி போலே.
> நீவிரோ பலரே, அவர்களோ சிலரே.''

ஆனுல் மக்கள் விழித்து எழவில்லை. அவர்கள் இச் சொற்களைக் காதில் வாங்கிக்கொண்டதாகவே தெரியவில்லை. பின்பு வந்தது தலைசிறந்த கிளர்ச்சியாளி—பட்டினி. பொருளாதாரச் சீர்குலைவிலும் போரிலும் இருந்து உற்பத்தியான பட்டினி மந்தர்களான வெகுஜனங்களைச் செயலுக்குத் தூண்டி ஊக்கியது. செல்லரித்த பழைய அமைப்புக்கு எதிராகத் தாக்கு நடத்தி அதைத் தகர்த்து வீழ்த்திவிட்டார்கள் அவர்கள். மனித ஆற்றல்களால் முடியாததை மூலதத்துவ வகைப்பட்ட பண்பு ஆற்றல்கள் சாதித்து விட்டன.

ஆயினும் புரட்சிக்காரர்களும் தங்களுக்கு உரிய பங்கு ஆற்றினுர்கள். புரட்சியை அவர்கள் நிகழ்த்தவில்லைதான். ஆனுல் புரட்சியை வெற்றி ஆக்கியவர்கள் அவர்களே. மெய் விவரங்களை உள்ளபடி காண்பதற்குப் பயிற்சி பெற்ற மனங்களும், மெய்விவரங்களுக்குப் பொருத்தமான செயல்திட்டமும் அதை முயன்று நிறைவேற்றத் தேவையான போராட்ட ஆற்றலும் வாய்ந்த ஆண்களும் பெண்களும் கொண்ட ஒரு ஸ்தாபனத்தை அவர்கள் தங்கள் முயற்சிகளால் உருவாக்கினுர்கள். இத்தகைய ஆண்பெண்கள் பத்து லட்சம் பெயர்—ஒரு வேளை இன்னும் அதிகம், ஒருக்கால் இன்னும் குறைவு—இருந்தார்கள். முக்கிய விஷயம் அவர்களுடைய எண்ணிக்கை அல்ல. திவாலாகிவிட்ட பழைய அமைப்பின் ஏற்பாளர்களாக, புரட்சியின் மீட்புப் படையணியாகச் செயலாற்ற அவர்கள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தார்கள் என்பதே முக்கிய விஷயம்.

இந்த ஒழுங்கமைப்பின் உயிர்நாடியாக விளங்கினார்கள் கம்யூனிஸ்டுகள். எச். ஜி. வெல்ஸ் சொல்லுகிறார்: ''விரிவான ஒழுங்குக்குலைவில், சுமார் 1,50,000 உறுப்பினர் கொண்ட ஒழுங்குக் கட்டுப்பாடு உள்ள ஒரு கட்சியின்—கம்யூனிஸ்ட் கட்சியின்—ஆதரவு பெற்ற நெருக்கடிக்கால அரசாங்கம் நிர்வாகத்தை ஏற்றது.... வழிப்பறிக் கொள்ளையை அது ஒடுக்கியது, களைத்துச் சோர்ந்த நகரங்களில் ஒரு வகை ஒழுங்கையும் பாதுகாப்பையும் நிலைநாட்டியது, முரட்டுத்தனமான உணவுப் பங்கீட்டு முறையை ஏற்படுத்தியது. சாத்தியமான ஒரே அரசாங்கம் ...ஒரே கருத்து, ஒரே ஒருமைப்பாடு.''

நான்கு ஆண்டுகளாகக் கம்யூனிஸ்டுகள் ருஷ்யாவை நிர்வகித்து வருகிறார்கள். அவர்களது தலைமையின் விளைவுகள் யாவை?

''அடக்குமுறைகள், கொடுங்கோன்மை, வன்முறை'' என்று கத்துகிறார்கள் பகைவர்கள். ''சுதந்திரப் பேச்சையும் சுதந்திர அச்சக வெளியீடுகளையும் சுதந்திரக் கூட்டங்கூடுதலையும் அவர்கள் ரத்து செய்துவிட்டார்கள். கடுமையான கட்டாய இராணுவ சேவையையும் கட்டாய உழைப்பையும் அவர்கள் வலியப் புகுத்தியிருக்கிறார்கள். அரசாங்கத்தில் அவர்கள் தகுதியற்றவர்களாகவும் இயந்திரத் தொழிலில் திறமையற்றவர்களாகவும் இருந்து வருகிறார்கள். சோவியத்துக்களை அவர்கள் கம்யூனிஸ்டுக் கட்சிக்குக் கீழ்ப்படுத்திவிட்டார்கள். தங்கள் கம்யூனிஸ்ட் ஆதர்சங்களை அவர்கள் தாழ்த்திக்கொண்டுவிட்டார்கள், தங்கள் செயல்திட்டத்தை மாற்றியும் தடம் பிறழச் செய்தும் விட்டார்கள், முதலாளித்துவவாதிகளுடன் சமரசம் செய்துகொண்டுவிட்டார்கள்.''

இவற்றில் சில குற்றச்சாட்டுகள் மிகைக் கூற்றுனவை. பல குற்றச்சாட்டுகளுக்கு விளக்கம் தரமுடியும். ஆனால் இவை எல்லாவற்றையும் மழுப்பித் தட்டிக் கழித்துவிட முடியாது. சோவியத்தின் நண்பர்கள் இவற்றைக் குறித்து வருந்துகிறார்கள். சோவியத்தின் பகைவர்களோ, இவற்றைக் குறித்து அருவருப்பு கொண்டு எதிர்ப்பு தெரிவிக்குமாறு உலகத்தினரைக் கூவி அழைக்கிறார்கள்.

ஒப்பாரி வைப்பவர்களுடனும் பழிதூற்றுபவர்களுடனும் சேர்ந்துகொள்ள எனக்கு ஆசை ஏற்படும் போது, 1918, ஜூன் மாதம் விளாதிவஸ்தோக் கப்பல் துறையில் நடந்த ஒரு உரையாடல் எனக்கு நினைவு வருகிறது. அமெரிக்கச் செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த கர்னல் ராபின்ஸ் சோவியத் தலைவர் ஸுஹானவுடன் பேசிக் கொண்டிருந்தார்.

''நேசநாட்டினரிடமிருந்து உதவி வராவிட்டால் சோவியத் எவ்வளவு காலத்துக்கு நீடிக்க முடியும்?''

ஸுஹானவ் சிந்தனையுடன் தலையை அசைத்தார்.

''ஆறு வாரங்களா?'' என்று கேட்டார் ராபின்ஸ்.

''அதைவிட அதிகக் காலத்துக்குத் தாக்கு பிடிப்பது கஷ்டமாயிருக்கும்'' என்றார் ஸுஹானவ்.

ராபின்ஸ் இதே கேள்வியை என்னிடம் கேட்டார். வருங்காலம் பற்றி நானும் சந்தேகம் கொண்டிருந்தேன்.

நாங்கள் ஆதரவாளர்கள். சோவியத்தின் விறலையும் உயிராற்றலையும் நாங்கள் அறிந்திருந்தோம். அதே சமயம் அதற்கு எதிர்ப்பட்டிருந்த பெருத்த இடைஞ்சல்களையும் நாங்கள் கண்டோம். பாதக நிலைமைகள் அதற்கு எதிராக இருப்பதாக எங்களுக்குப் பட்டது.

போல்ஷெவிக்குகளுக்கு எதிராக அணிவகுத்திருந்த சக்திகள்

முதலாவதாக, ஜார் அரசாங்கத்தையும் கேரென்ஸ்கிய் அரசாங்கத்தையும் திக்குமுக்காடச் செய்த அதே நிலைமைகள் சோவியத்துக்கும் எதிர்ப்பட்டிருந்தன. அவையாவன: இயந்திரத் தொழிலின் சீர்குலைவு, போக்குவரத்து முடக்கம், வெகுஜனங்களின் பட்டினியும் துன்பதுயரங்களும்.

இரண்டாவதாக சோவியத் கணக்கற்ற புது இடையூறுகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது. அறிவுஜீவிகள் பொறுப்பைக் கைவிட்டு ஓடியது, பழைய அதிகாரிகள் வேலை நிறுத்தம் செய்தது, தொழில்நுட்ப அறிஞர்கள் மறைமுக நாசம் விளைத்தது, சர்ச் மத விலக்கு விதித்தது, நேசநாட்டி

னர் முற்றுகையிட்டது ஆகியவை இவற்றில் சில. உக்ரேய்னு வின் தானிய வயல்கள், பாக்கூவின் எண்ணெய் வயல்கள், தோன் பிரதேச நிலக்கரிச் சுரங்கங்கள், துர்க்கிஸ்தானத்தின் பருத்தி ஆகியவற்றிலிருந்து அது தனித்துத் துணிக்கப்பட் டிருந்தது. எரிபொருள், உணவுச் சேமிப்புக்கள் தீர்ந்து போயின. ''பட்டினியின் எலும்புக் கரம் இப்போது மக்க ளின் குரல் வளையை இறுகப் பற்றி அவர்கள் அறிவு நிதானம் அடையும்படி செய்யும்'' என்று சோவியத்தின் பகைவர்கள் சொன்னார்கள். சப்ளை ரெயில்கள் நகர்களை அடையாதவாறு தடுக்கும் பொருட்டு ஏகாதிபத்தியவாதி களின் கையாட்கள் ரெயில்வே பாலங்களை வெடிவைத்துத் தகர்த்தார்கள், எஞ்சின்களின் உராய்வுதாங்கி உறுப்புக் களில் குருந்தக்கல்லைப் பொருத்தினார்கள்.

வலிமை மிக்க உள்ளங்கள் கூட உறுதி குலையச் செய் வதற்கு இந்தத்தொல்லைகளே போதுமானவை. ஆனால் மேற் கொண்டும் தொல்லைகள் வந்த வண்ணமாக இருந்தன. உலக முதலாளித்துவப் பத்திரிகைகள் போல்ஷெவிக்குகளுக்கு எதிராக அணிதிரட்டப்பட்டன. அவர்கள் ''கெய்ஸரின் கைக்கூலிகள்'' என்றும் ''செங்கண் கொள்கைவெறியர்கள்'' என்றும் ''ஈவிரக்கமற்ற கொலைபாதகர்கள்'' என்றும் ''பகல் வேளையில் இரத்த வெறி பிடித்து அலைவதும் இரவு நேரத்தில் கிரெம்ளினில் குடிவெறியில் திளைப்பதுமாக இருக்கும் நீள்தாடி முரட்டுப் போக்கிரிகள்'' என்றும் ''கலை யையும் பண்பாட்டையும் அசுத்தப்படுத்துபவர்கள்'' என் றும் ''பெண்களைக் கெடுப்பவர்கள்'' என்றும் பலவாறாகச் சித்திரிக்கப்பட்டார்கள். இந்த அவதூறுகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல ''மாதரைத் தேசீய உடைமையாக் கும் அரசாணை'' கள்ளத்தனமாகத் தயாரிக்கப்பட்டு உலகம் முழுவதிலும் வினியோகிக்கப்பட்டது. ஜெர்மானியருக்குப் பதில் போல்ஷெவிக்குகளை வெறுக்குமாறு பொது மக்கள் வேண்டிக்கொள்ளப்பட்டார்கள்.

''நாகரிகத்தின் புதிய பகைவர்கள்'' என்று போல் ஷெவிக்குகள் மேல் பழிசாட்டி அவர்கள்பால் வெறுப்பு வெளிநாடுகளில் நாளுக்கு நாள் அதிகமாக்கப்பட்டு வரு கையில் இதே போல்ஷெவிக்குகள் ருஷ்யாவில் நாகரிகம்

முற்றுகச் சீரழிந்துவிடாமல் காத்து மீட்கும் பொருட்டு மூளைகளையும் தசைகளையும் கசக்கிப் பிழிந்து பாடுபட்டுக் கொண்டிருந்தார்கள். நெஞ்சைப் பிளக்கும், முதுகை முறிக்கும் கடும் வேலைகளில் அவர்கள் முனைந்திருப்பதைக் கண்டு ரான்ஸம் எழுதினுர்:

''போல்ஷெவிக்குகள் தெய்வப் பிறவிகள் என்று ஒருவரும் வாதிடவில்லை. அவர்களைச் சூழ்ந்திருக்கும் அவதூறு என்ற பனிமூட்டத்தை ஊடுருவிப் பார்வையைச் செலுத்தி, இந்த இளைஞர்கள் தங்களால் முடிந்த ஒரே வழியில் எதற்காகப் போராடிக் கொண்டிருக்கிறுர்களோ அந்த ஆதர்சத்தை மனிதர்கள் காண வேண்டும் என்றே நான் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் தோல்வி அடைந்தால் மாசற்ற கேடயங்களுடனும் தூய உள்ளங்களுடனும் அவர்கள் தோல்வி அடைவார்கள். அவர்கள் எந்த ஆதர்சத்தை அடைய முயன்றுர்களோ அது அவர்களுக்குப் பின்னும் வாழ்ந்திருக்கும். அவர்கள் தோல்வி அடைந்துவிட்டாலுங் கூட, மனிதகுல வரலாற்றில் எனக்கு நினைவிருக்கும் வேறு எதையும்விட அதிகத் துணிவு நிறைந்த பக்கத்தை எழுதிவிட்டே செல்வார்கள்.... அப்புறம் வரும் ஆண்டுகளில் மனிதர்கள் அந்தப் பக்கத்தைப் படிக்கும்போது அதை எழுதுவதற்கு அளிக்கப்பட்ட உதவியையோ இடையூறையோ அளவு கோளாகக் கொண்டே உங்கள் நாட்டையும் எனது நாட்டையும் அவர்கள் மதிப்பிடுவார்கள்.''

இந்த வேண்டுகோள் வீணுயிற்று.

பிரெஞ்சுப் புரட்சியால் உலகில் கட்டவிழ்த்து விடப்பட்ட கருத்தை நசுக்குவதற்காக ஐரோப்பாவின் முடியரசுவாதிகள் ஒன்று சேர்ந்தது போலவே ருஷ்யப் புரட்சியால் உலகில் கட்டவிழ்த்து விடப்பட்ட கருத்தை நசுக்கும் பொருட்டு ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உள்ள முதலாளித்துவவாதிகள் ஒன்று சேர்ந்தார்கள். பட்டினியாலும் கடுங்குளிராலும் டைபஸ் நோயாலும் அவதிப்பட்டு வாடிய ருஷ்யர்களிடம் புத்தகங்களும் கருவிகளும் ஆசிரியர்களும் பொறி இயலாரும் நிறைந்த நல்லெண்ணக் கப்பல்கள் வரவில்லை. மாருகத் துருப்புக்களும் இராணுவ அதிகாரிகளும் பீரங்கிகளும் விஷவாயுவும் ஏற்றிக்கொண்டு வந்தன

கொடிய போர்க்கப்பல்களும் துருப்புக்கப்பல்களும். ருஷ்யக் கடற்கரையின் போர்த்தந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் படைகள் இறக்கப்பட்டன. முடியரசு வாதிகளும் நிலப்பிரபுக்களும் ''கறுப்பு நூற்றுவரும்'' இந்தப் படைதிரட்டு மையங்களுக்குக் கூட்டங்கூட்டமாகச் சென்றார்கள். புதிய வெண் படைகள் கட்டாயமாகத் திரட்டிச் சேர்க்கப்பட்டு, பயிற்சி அளிக்கப்பட்டன. பல கோடிக் கணக்கான டாலர்கள் மதிப்புள்ள தளவாடங்களால் அவற்றுக்குச் சாதன வசதிகள் செய்துதரப்பட்டன. புரட்சியின் இதயத்தில் வாளைப் பாய்ச்சும் நோக்கத்துடன் தலைமீட்டாளர்கள் மாஸ்கோ மீது படையெடுத்துச் சென்றார்கள்.

கோல்ச்சாக் படைக்கும்பல்கள் சைபீரியாவுக்குக் குறுக்கே செக் படையினரின் அடிச்சுவட்டைப் பின்பற்றிக் கிழக்கேயிருந்து விரைந்து வந்தன, மேற்கேயிருந்து தாக்கின பின்லாந்து, லாட்வியா, லித்துவேனியா ஆகிய நாடுகளின் சைனியங்கள். வடக்குக் காடுகளிலும் வெண்பனித் திடல்களிலும் இருந்து முன்னேறினார்கள் பிரிட்டிஷ்காரர்களும் பிரெஞ்சுக்காரர்களும் அமெரிக்கர்களும். தெற்குத் துறை முகங்களிலிருந்து பாய்ந்து வந்தன தெனீக்கினின் டாங்கிகளும் விமானங்களும் மரணப் பட்டாளங்களும். எஸ்தோனியச் சதுப்பு நிலங்களிலிருந்து யூதேனிச். போலந்திலிருந்து பில்ஸுத்ஸ்கியின் தேர்ந்த படைப்பிரிவுகள். கிரீமியாவிலிருந்து வந்தது வ்ராங்கேல் பிரபுவின் குதிரைப் படை.

பத்துலட்சம் குத்தீட்டிகள் கொண்ட எஃகு வளையம் புரட்சியைச் சூழ்ந்து நெருக்கியது. தன்மேல் சரமாரியாகப் பொழிந்த அடிகளால் புரட்சி தடுமாறியது, ஆனால் அதன் நெஞ்சில் அச்சம் இல்லை. சாகத்தான் வேண்டும் என்றால் போரிட்டு மடிய அது தீர்மானித்தது.

புரட்சி உயிருக்காகப் போரிடுகிறது

போரினால் களைத்துச் சோர்ந்த கிராமங்களிலும் வறுமையில் வாடிய நகரங்களிலும் படையில் சேரும்படி அழைக்கும் போர் முரசுகள் மீண்டும் அதிர்ந்தன. தேய்ந்து

போன தொழிற்சாலை இயந்திரங்களும் தறிகளும் மீண்டும் துப்பாக்கிகளும் சீருடைகளும் தயாரிக்குமாறு உத்தரவிடப் பட்டன. பழுதுபட்ட இருப்புப் பாதைகளில் மீண்டும் படைவீரர்களையும் பீரங்கிகளையும் ஏற்றிச்சென்றன ரெயில் வண்டிகள். ருஷ்யாவின் அனேகமாகத் தீர்ந்துபோன சாதன வளங்களைக் கொண்டு ஐம்பது லட்சம் படைவீரர் களுக்கு ஆயுதங்களும் சீருடைகளும் இராணுவ அதிகாரி களும் தயாரித்து அளித்தது புரட்சி. செஞ் சைனியங்கள் போர்க்களத்தில் புகுந்தன.

மாஸ்கோவிலிருந்து நானூறே மைல் தொலைவில் அவை கோல்ச்சாக்கின் படைகளை மோதித் தாக்கி, கிலி யடித்த அந்தப் படைப்பிரிவுகளை அவை சைபீரியாவைக் கடந்து வந்திருந்த நாலாயிரம் மைல் தூரத்துக்குப் பின னே தள்ளிவிட்டன. வடக்கிலுள்ள பைன் மரக் காடுகளில் வெள்ளைச் சீருடைகள் அணிந்து ஸ்கீகள் மீது வெண்பனியில் வழுக்கிச் சென்று நேசநாட்டுப் படைகளை எதிர்த்து அவற் றை அர்காங்கேல்ஸ்க்குக்கு விரட்டி, வெண்கடல் வழியே கப்பல்களில் நாடுதிரும்பும்படி அவற்றைக் கட்டாயப்படுத் திவிட்டனர் செஞ்சேனை வீரர்கள். ''எந்த நகரின் செந் தழல்களில் செவ்வெஃகு பதப்படுத்தப்பட்டு வெல்லரும் செஞ்சேனையின் துப்பாக்கிக் குத்தீட்டிகளாக வார்க்கப்படு கிறதோ'' அந்தத் தூலா நகருக்கருகே, ருஷ்யாவின் அந்த உலைக்கூடத்துக்கருகே அவர்கள் தெனீக்கினின் நெடும் பாய்ச்சலைத் தேக்கி நிறுத்தினார்கள். கருங்கடற்கரைக்குத் திருப்பி விரட்டப்பட்டு அவன் ஒரு பிரிட்டிஷ் விரை போர்க் கப்பலில் ஏறி உயிர் தப்பினான்.

புத்யோன்னியின் குதிரைப் படை உக்ரேனிய ஸ்தெப்பி வெளியில் இரவும் பகலும் நாற்கால் பாய்ச்சலில் சென்று போலந்துப் படைகளின் பக்க அணிவரிசைகள் மீது திடு மெனப் பாய்ந்து தாக்கி, பில்ஸூத்ஸ்கியின் படைப்பிரிவு களுடைய வெற்றிகரமான முன்னேற்றத்தை நாசகரமான பின்வாங்கலாக மாற்றியதோடு நில்லாமல் வார்ஸா நகரின் வாயில் வரை அவற்றை இடைவிடாது தொல்லைப்படுத்தி வதைத்து விரட்டிற்று. வ்ராங்கேல் பிரபு தோற்கடிக்கப் பட்டுக் கிரீமியாவில் சூழ்ந்து நெருக்கப் பட்டான்.

சோவியத் அதிர்ச்சித் துருப்புக்கள் வ்ராங்கேலின் கன்கி ரீட்டுக் கோட்டைகளைத் தாக்கின. அதே சமயம் பிரதானச் செஞ் சேனை உறைந்த அஸோவ் கடலின் குறுக்காக விரைந்து முன்னேறவே வ்ராங்கேல் பிரபு துருக்கிக்குத் தப்பியோடிவிட்டான். பெத்ரோகிராத் நகரின் வெளிப்புறத் தில், அதன் கும்மட்டங்களுக்கு அடியில், யூதேனிச்சின் படை கள் துணுக்குகளாகச் சிதறடித்து நொறுக்கப்பட்டன. பால்டிக் ராஜ்யங்களின் படைகள் அவற்றின் எல்லைகளுக்குள் விரட்டியடிக்கப்பட்டன. வெண்படைகள் சைபீரியாவில் நிர்மூலமாக்கப்பட்டன. புரட்சி முழு வட்டத்திலும் வெற்றி வாகை சூடியது.

புரட்சி எதிர்ப்பாளர்கள் சோவியத்தின் திரளான பட்டாளங்களால் மட்டுமே அல்ல, இந்தப் புரட்சிச் சை னியங்களில் உருப்பெற்றிருந்த கருத்தினாலும் நொறுக்கித் தகர்க்கப்பட்டனர்.

இவை பதாகைகள் ஏந்திய சைனியங்கள். அந்தச் செம்பதாகைகளில் பொறிக்கப்பட்டுச் சுடர்ந்தன ஒரு புதிய உலகின் ஆதர்ச வாக்கியங்கள். இந்தச் சைனியங் கள் நியாயத்தையும் சோதரத்துவத்தையும் பற்றிய பாடல் களைப் பாடிக் கொண்டே போர்க்களத்தில் முன்னேறின. சிறைபிடிக்கப்பட்ட பகைவர்களைச் செஞ்சேனை வீரர்கள் வழிதவறிய சகோதரர்களாக நடத்தினார்கள். அவர்களுக்கு உணவு அளித்தார்கள், அவர்களுடைய காயங்களுக்குக்கட்டு போட்டார்கள், அவர்களைத் திருப்பி அனுப்பினார்கள்— போல்ஷெவிக் விருந்தோம்பல் பற்றிய கதைகளைத் தங்கள் சொந்தச் சகவீரர்களுக்கு அவர்கள் சொல்லும் பொருட்டு. நேசநாட்டுப் படை முகாமைச் செஞ்சேனையினர் கேள்விக் குண்டுகளால் தாக்கினார்கள்:

''நேசநாட்டுப் படைவீரர்களே, நீங்கள் ருஷ்யாவுக்கு ஏன் வந்தீர்கள்?'' ''பிரான்ஸையும் இங்கிலாந்தையும் சேர்ந்த தொழிலாளர்கள் ருஷ்யாவைச் சேர்ந்த தங்கள் சக தொழிலாளர்களை ஏன் கொல்ல வேண்டும்?'' ''எங்களு டைய தொழிலாளர் குடியரசை நீங்கள் அழிக்க விரும்புகிறீர் களா?'' ''ஜாரை மீண்டும் சிங்காதனத்தில் அமர்த்த நீங்கள் விரும்புகிறீர்களா?'' ''பிரான்சின் லேவாதேவிக்கார

முதலாளிகளுக்காகவும், இங்கிலாந்தின் நிலக் கொள்ளைக் காரர்களுக்காகவும் அமெரிக்காவின் ஏகாதிபத்தியவாதிகளுக்காகவும் நீங்கள் போரிடுகிறீர்கள். அவர்களுக்காக நீங்கள் ஏன் இரத்தம் சிந்த வேண்டும்?'' ''நீங்கள் தாய் நாடு திரும்பாதது ஏன்?''

காப்பகழ்களின் மறுபுறத்தை நோக்கி எழுந்து நின்று இந்தக் கேள்விகளை உரக்க முழக்கினார்கள் செஞ்சேனை வீரர்கள். செஞ்சேனைப் பாராக்காரர்கள் கைகளை உயர்த்தியவாறு முன்னே பாய்ந்து இந்தக் கேள்விகளைப் பெருங்குரலில் கத்திக் கேட்டார்கள். செஞ்சேனை விமானங்கள் வானத்தில் வட்டமிட்டுப் பறந்து இந்தக் கேள்விகள் அச்சிட்ட பிரசுரங்களைப் பொழிந்தன.

நேசநாட்டுப் படைவீரர்கள் இந்தக் கேள்விகளைப் பற்றி எண்ணமிட்டார்கள். அவர்களுடைய உறுதி குலைந்து விட்டது. அவர்களது உற்சாகம் மாய்ந்துவிட்டது. அவர்கள் அரை மனதோடு சண்டை செய்தார்கள். அவர்கள் கலகம் செய்தார்கள். வெண்படையினர் பதினாயிரக் கணக்கில்—முழு முழுப் பட்டாளங்களும் மருத்துவப் படைப்பிரிவுகளுமாக—புரட்சியின் தரப்புக்கு வந்துவிட்டார்கள். புரட்சி எதிர்ப்பாளர்களின் சேனைகள் ஒன்றன் பின் ஒன்றாகச் சுருண்டு மடங்கிவிட்டன அல்லது ருஷ்ய இளவேனில் காலத்தில் வெண்பனி போல உருகிக் கரைந்து மறைந்து விட்டன. புரட்சியை இறுக்கிய பெரிய எஃகு வளையம் துண்டு துண்டாக உடைத்து நொறுக்கப்பட்டு விட்டது.

புரட்சி வெற்றி அடைந்தது. சோவியத்துக்கள் காப்பாற்றப்பட்டன. ஆனால் எத்தகைய மலைப்பூட்டும் தியாகங்களுக்குப் பின்!

தலையீடு விளைத்த பேரழிவு

''மூன்று ஆண்டுகளுக்கு எங்கள் ஆற்றல்கள் அனைத்தும் போர்க் கடமைகளுக்கே ஈடுபடுத்தப்பட்டன'' என்கிறார் லெனின். நாட்டின் செல்வம் இராணுவத்துக்குள் கொட்டப்பட்டது. வயல்கள் உழப்படாது கிடந்தன, இயந்திரங்

கள் கவனியாது விடப்பட்டன. எரிபொருள் பற்றுக்குறை காரணமாகத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுவிட்டன. கொதிகலங்களுக்கு அடியே எரிந்த ஈர விறகு ரெயில்வே எஞ்சின்களைப் பாழ்படுத்தியது. பின்வாங்கிய பகைப் படைகள் இருப்புப்பாதைகளைப் பெயர்த்து அகற்றின, பாலங்களையும் டெப்போக்களையும் வெடிவைத்துத் தகர்த்தன, தானிய வயல்களையும் கிராமங்களையும் தீக்கிரை ஆக்கின. போலந்து நாட்டுப் படைகள் கீவ் நகரின் குடிநீர் நிலையத்தையும் மின்னுக்க நிலையத்தையும் அழித்ததோடு நிற்காமல் வெறும் துவேஷம் காரணமாக செயின்ட் விளாதிமிர் கதீட்ரலையும் வெடிவைத்துத் தகர்த்துவிட்டன.

புரட்சி எதிர்ப்பாளர்கள் தங்கள் பின்வாங்கலை அழிவு வெறித் தாண்டவம் ஆக்கிவிட்டார்கள். தீப்பந்தங்களையும் வெடிமருந்தையும் கொண்டு நாட்டைப் பாழ்நிலம் ஆக்கி விட்டார்கள் அவர்கள். அவர்கள் சென்ற வழி நெடுக இடிபாடுகளும் சாம்பலும் கரிக் கோடிட்டிருந்தன.

போரினுல் இன்னும் மிகப் பல தீமைகள் விளைந்தன. கடுமையான தணிக்கை முறை, தான்தோன்றித்தனமான கைதுகள், போர்க்களக் குற்றவிசாரணை மன்றங்கள் ஆகியன இவற்றில் சில. எந்த அடாபிடி நடவடிக்கைகளை மேற்கொள்வதாகக் கம்யூனிஸ்டுகள்மீது குற்றம் சாட்டப்படுகிறதோ அவை பெருமளவுக்குப் போர்க்கால நடவடிக்கைகள்—எனினும் புரட்சியின் ஆதர்சங்களுக்கு அவை சேதங்களே.

அப்புறம் மனித உயிர்ச் சேதங்கள்! போர் முனையில் சாவுகளின் தொகை மிகப் பெரிது. மருத்துவ மனைகளில் நிகழ்ந்த சாவுகளோ அதிர்ச்சி தருபவை. வழியடைப்பு காரணமாக மருந்துகளும் பட்டித் துணியும் அறுவைக் கருவிகளும் வர முடியவில்லை. எனவே அங்கங்கள் மயக்க மருந்து இன்றியே சேதிக்கப்பட்டன. காயங்களுக்குச் செய்தித் தாள்களால் கட்டுக்கள் போடப்பட்டன. தசையழுகலும் இரத்தம் நஞ்சேறலும் டைபஸ் நோயும் காலராவும் தடையின்றிச் சேனைகளில் விரிவாகப் பரவின.

ருஷ்யா அகன்று பரந்த நாடு, எனவே ஆள்பலத்தில் இன்னும் அதிக நஷ்டத்தைப் புரட்சி தாங்கியிருக்க முடியும்.

ஆனால் அறிவாற்றலிலும் ஆன்மசக்தியிலும் ஏற்பட்ட நஷ்டத்தை, புரட்சியை இயக்கி நடத்தி அதற்கு ஆற்றல் ஊட்டிய ஆன்மசக்திகள் — கம்யூனிஸ்டுகள் — முழுமொத்தமாகப் படுகொலை செய்யப்பட்டதை அதனால் தாங்க முடியவில்லை. போரின் தாக்கு முனையைத் தாங்கியவர்கள் இந்தக் கம்யூனிஸ்டுகளே. அதிர்ச்சித் தாக்குப் பட்டாளங்களாக அவர்கள் அமைக்கப்பட்டார்கள். உறுதியின்றி ஊசலாடிய அணி வரிசைகளுக்கு உரப்பு ஏற்றுவதற்காக இடைவெளிகளை இட்டு நிரப்ப அவர்களே விரைவாக அனுப்பப் பட்டார்கள். சிறைப்பட்டால் அவர்கள் எப்போதும் பகைவரால் கொல்லப் பட்டார்கள். மூன்று ஆண்டுப் போரில் ருஷ்யாவின் இளம் கம்யூனிஸ்டுகளில் பாதிப் பெயர் படுகொலை செய்யப்பட்டார்கள்.

உயிர்ச்சேத எண்ணிக்கைகளை வெறுமே ஒப்பிப்பதில் அர்த்தம் எதுவும் இல்லை, ஏனெனில் புள்ளி விவரங்கள் உணர்ச்சியற்ற குறியீடுகளே. இந்த நூலின் பக்கங்களில் சந்தித்த இளைஞர்களை வாசகர்கள் நினைவுபடுத்திக் கொள்வார்களாக. அந்த இளைஞர்கள் கனவு காண்பவர்கள், அதே சமயம் கடும் உழைப்பாளிகள், ஆதர்சவாதிகள், அதே சமயம் கண்டிப்பான எதார்த்தவாதிகள். புரட்சியின் நறு மலர்கள் அவர்கள், அதன் இயக்கவிரைவுள்ள உணர்வின் பரு வடிவங்கள் அவர்கள். அவர்கள் இல்லாமல் புரட்சி தொடர்ந்து நடப்பது நம்பமுடியாததாகத் தோன்றுகிறது. ஆனால் அது தொடர்ந்து நடக்கத்தான் செய்கிறது. ஏனெனில் அவர்கள் இறந்துவிட்டார்கள். இந்தப் புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ளவர்களில் அனேகமாக எல்லோருமே இப்போது மீளா உறக்கத்தில் இருக்கிறார்கள். அவர்களில் சிலர் இறந்த விதம் பின்வருமாறு:

வொலதார்ஸ்க்கிய்—எல்லா சோவியத் தலைவர்களையும் கொல்வதற்கான பொதுச் சதித் திட்டத்தில் கொலை செய்யப்பட்டார்.

நேய்பூத்—கோல்ச்சாக் போர்முனையில் மரணதண்டனை விதிக்கப் பெற்றார்.

யானிஷேவ் — வ்ராங்கேல் போர்முனையில் வெண் படையினன் ஒருவனால் குத்தீட்டியால் கொல்லப்பட்டார்.

வோஸ்கோவ்—தெனீக்கின் போர்முனையில் டைபஸ் நோயில் இறந்தார்.

தோன்கநோகிய்—வெண்படையினரால் அலுவலகத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஊத்கின்—மோட்டார் காரிலிருந்து வெளியே இழுக்கப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஸுஹானவ்—அதிகாலையில் காட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டுத் துப்பாக்கி அடிக்கட்டைகளால் அடித்துக் கொல்லப்பட்டார்.

மேல்னிக்கவ் — சிறையிலிருந்து வெளியே கொண்டு செல்லப்பட்டுச் சுடவும் குண்டாந்தடியால் அடிக்கவும் பட்டு இறந்தார்.

''அவர்கள் சித்திரவதை செய்யப்பட்டார்கள், கல்லெறிந்து தாக்கப்பட்டார்கள், ரம்பத்தால் இரு கூறுக வகிரப்பட்டார்கள், பாலைவனங்களிலும் மலைகளிலும் குகைகளிலும் புவியின் பிலங்களிலும் திரிந்து அலையுமாறு விடப்பட்டார்கள்.''

புரட்சியின் முக்கிய நபர்களை உணர்ச்சியின்றி நிதானமாகத் தெரிந்தெடுத்து நடத்தப் பெற்ற கொலை இது. புரட்சியின் வருங்காலச் சிற்பிகளின் படுகொலை இது. ருஷ்யாவுக்கு மதிப்பிட முடியாத பெரு நஷ்டம்—ஏனென்றால் இந்த மனிதர்கள் பதவியின் ஊழல்படுத்தும் பாதிப்பையும் அதிகாரத்தின் நஞ்சையும் எதிர்த்து நிற்க வல்லவர்கள். எவ்வளவு வீரத்துடன் இறந்தார்களோ அவ்வளவே வீரத்துடன் வாழ வல்லவர்கள் இவர்கள்.

புரட்சி வாழ வேண்டும் என்பதற்காகச் சாவைத் தழுவினர்கள் இவர்கள். புரட்சி வாழ்கிறது. பழுதடைந்து, சமரசம் செய்து கொண்டுவிட்ட போதிலும், பஞ்சமும் கொள்ளைநோயும் முற்றுகையும் போரும் நிறைந்த நீண்ட கடும் தேர்விலிருந்து வெற்றிவாகை சூடி வெளிவந்திருக்கிறது ருஷ்யப் புரட்சி.

இந்தத் தியாகங்களுக்குத் தகுதி உள்ளதுதானு புரட்சி? அதன் நிச்சயமான விளைவுகள் இவை:

ஒன்று. ஜாராட்சியின் அரசு இயந்திரத்தை அது வேரும் வேரடி மண்ணும் இல்லாமல் அழித்து ஒழித்துவிட்டது.

இரண்டு. அரசவம்சம், நிலப்பிரபுக்கள், மத நிலையங்கள் ஆகியவற்றின் பெருத்த எஸ்டேட்டுக்களை மக்களின் சொத்து ஆக்கிவிட்டது அது.

மூன்று. அடிப்படை இயந்திரத் தொழில்களை அது தேசியமயமாக்கிவிட்டது, ருஷ்யாவை மின்சாரமயமாக்கத் தொடங்கியுள்ளது. கொள்ளைக்கார முதலாளிகளின் எல்லையற்ற சுறண்டலிலிருந்து ருஷ்யாவை அது வேலிபோட்டுக் காத்துவிட்டது.

நான்கு. சோவியத்துக்களுக்குள் பத்து லட்சம் தொழிலாளர்களையும் குடியானவர்களையும் கொண்டுவந்து ஆட்சியில் நேரடியான அனுபவத்தை அது அவர்களுக்கு அளித்திருக்கிறது. தொழிற்சங்கங்களில் 80 லட்சம் தொழிலாளர்களை அது ஸ்தாபனரீதியாக ஒழுங்கமைத்திருக்கிறது. நான்கு கோடிக் குடியானவர்களுக்குப் படிக்கவும் எழுதவும் அது கற்பித்திருக்கிறது. பதினாயிரக் கணக்கான புதிய பள்ளிகள், நூலகங்கள், நாடக மன்றங்களின் கதவுகளை அது மக்களுக்குத் திறந்திருக்கிறது. விஞ்ஞானம், கலை, இவற்றின் அற்புதங்களின்பால் பொதுமக்களின் ஆர்வத்தை அது தூண்டி எழுப்பியிருக்கிறது.

ஐந்து. ஒரு மாபெரும் மக்கள் மீது சென்ற காலத்திற்கு இருந்த மந்திர சக்தியை அது உடைத்துத் தகர்த்துவிட்டது. அவர்களது நிலைச் சக்திகள் இயங்கு சக்திகள் ஆகி விட்டன. ''அது அப்படித்தான் இருந்தது, இனியும் அப்படித்தான் இருக்கும்'' என்ற அவர்களுடைய விதிவாதக் கூற்று ''அது அப்படித்தான் இருந்தது ஆனால் இனி அப்படி இருக்காது'' என்பதாக மாறியிருக்கிறது.

ஆறு. முன்னர் ருஷ்ய சாம்ராஜ்யத்தின் மானியக் குடிகளாக வைக்கப்பட்டிருந்த ஒரு இருபது பிரஜை மக்களினங்களுக்குச் சுயநிர்ணய உரிமையை அது உறுதிப்படுத்தியிருக்கிறது. தங்கள் மொழிகளையும் இலக்கியங்களையும், நன்மரபுகளையும் வளர்வுறுத்துவதற்கு அவர்களுக்கு அது முழுச் சுதந்திரம் அளித்திருக்கிறது. பாரசீகம், சீனம், ஆப்கனிஸ்தான் ஆகியவற்றையும் பின்தங்கிய பிற நாடுகளையும் —அதாவது ''பெருத்த இயற்கை வளங்களும் சிறு கடற்

படைகளும் கொண்ட நாடுகளை''—அது சமமாக மதித்து நடத்தியிருக்கிறது.

ஏழு. ''வெளிப்படையான ராஜதந்திரம்'' என்பதற்குச் சொல்லளவில் மட்டுமே ஆதரவு அளிக்காமல் அதைச் செயல்படுத்தியிருக்கிறது. ''இரகசிய உடன்படிக்கைகளை அது வரலாற்றின் சாம்பற் கிடங்குக்குள் எறிந்துவிட்டது.''

எட்டு. ஒரு புதிய சமூகத்துக்கு அது வழி அமைத்து முன் சென்றிருக்கிறது. மிகப் பெரிய அளவில் சோஷலிஸத்தில் விலைமதிப்பற்ற ஆய்வுக்கூடச் சோதனைகளை அது நிகழ்த்தியிருக்கிறது. புதிய சமூக அமைப்பின் பொருட்டு உலகின் உழைப்பாளி மக்களின் போராட்டத்தில் அவர்களுடைய நம்பிக்கையை அது தீவிரமாக்கி அவர்களது உளத்திண்மையை அதிகப்படுத்தியிருக்கிறது.

இந்த விளைவுகள் இன்னும் மேலான வழியில் பெறப்பட்டிருக்கலாம் என்று மூதறிஞர்கள் எழுந்து சுட்டிக்காட்டுகிறார்கள். இவ்வாறே கிறிஸ்தவ மதச் சீர்திருத்தம், அமெரிக்காவின் சுதந்திரம், அடிமைமுறை ஒழிப்பு ஆகியவை இன்னும் நயப்பண்பார்ந்த, வன்முறை குறைந்த விதத்தில் பெறப்பட்டிருக்கலாம்தான். ஆனால் வரலாறு அந்த வழியில் இயங்கவில்லை. மூடர்கள்தாம் வரலாற்றுடன் சச்சரவு செய்வார்கள்.

வாசக நேயர்களுக்கு

இந்த மொழிபெயர்ப்பைப் பற்றியும் இந்தப் புத்தகத்தின் தயாரிப்பைப் பற்றியும் வாசக நேயர்களின் கருத்தை ''முன்னேற்றப் பதிப்பகம்'' மகிழ்வுடன் வரவேற்கும்.

கடிதங்களைத் தயை செய்து "Progress Publishers, 21, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.